# தேர்தல் நடத்தை விதிமுறைகள் குறித்த உத்தரவுகளின் சுருக்கம்

இந்திய தேர்தல் ஆணையம்

நிர்வாச்சன் சதன், அசோகா சாலை,
புது தில்லி - 110 001

# அரசியல் கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்குமான நடத்தை விதிமுறைகள்

## I. பொதுவான நடத்தை விதிமுறைகள்

(1) பல்வேறு சாதி, இனம், மதம், மொழியைச் சார்ந்த மக்களிடையே வேறுபாடுகளைத் தீவிரமாக்கும் வகையிலான செயலிலோ ஒருவருக்கு ஒருவர் இடையில் வெறுப்பை உருவாக்கும் வண்ணம் அல்லது பதற்றத்துக்கு வழி செய்யும் எந்த செயலிலும் எந்தவொரு கட்சியோ வேட்பாளரோ ஈடுபடக்கூடாது.

(2) பிற கட்சிகள் மீது விமர்சனம் மேற்கொள்ளும்போது, அக்கட்சிகளின் கொள்கைகள், செயல்திட்டங்கள், கடந்த காலச் செயல்பாடுகள், நடவடிக்கைகள் ஆகியவை தொடர்பான விமர்சனமாக இருக்க வேண்டும். பிற கட்சிகளைச் சார்ந்த தலைவர்கள் மற்றும் தொண்டர்களின் பொதுவாழ்க்கையோடு தொடர்பற்ற சொந்த வாழ்க்கையைப் பற்றிய விமர்சனங்களைத் தவிர்க்க வேண்டும். பிற கட்சியினர் மீதான நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுகள் மற்றும் முறைகேடுகள் குறித்த விமர்சனங்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

(3) வாக்குகளைப் பெறுவதற்காக, இன மற்றும் மத உணர்வுகளைத் தூண்டும் வகையில் வேண்டுகோள்கள் விடுக்கப்படக் கூடாது. தேர்தல் பிரசாரக் களமாக, மசூதி, சர்ச் மற்றும் கோயில் போன்ற வழிபாட்டுத் தலங்கள் பயன்படுத்தப்படக் கூடாது.

(4) தேர்தல் விதிமுறைகளின்படி, வாக்காளர்களுக்கு லஞ்சம் கொடுத்தல், வாக்காளர்களை அச்சுறுத்தல், வாக்காளர் ஆள்மாறாட்டம் செய்தல், வாக்குச் சாவடிகளிலிருந்து 100 மீட்டர் சுற்றெல்லைக்குள் தங்களுக்கு வாக்களிக்குமாறு கோருதல், தேர்தல் பரப்புரைக்கான நிறைவு நேரத்திலிருந்து வாக்குப் பதிவு முடிவடைவது வரையிலான 48 மணி நேரத்திற்குள் பொதுக் கூட்டங்கள் நடத்துதல் மற்றும் வாக்காளர்களை வாக்குச் சாவடிக்கு அழைத்து வரவும், திரும்ப அழைத்துச் செல்லவும் வாகன வசதிகளை ஏற்படுத்தித் தருதல் போன்ற “முறைகேடான” நடவடிக்கைகளை அனைத்துக் கட்சிகளும் வேட்பாளர்களும் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும்.

(5) ஒரு தனி நபரின் அரசியல் கருத்துகள் அல்லது அரசியல் செயல்பாடுகள் ஆத்திரமூட்டும் வகையில் அமைய நேர்ந்தாலும், அமைதியான, இடர் இல்லாத குடும்ப வாழ்க்கை நடத்துவதற்கான அவரது உரிமை மதிக்கப்பட வேண்டும். எந்தவொரு சூழ்நிலையிலும், தனிநபரின் கருத்துகளையும் நடவடிக்கைகளையும் எதிர்த்துப் போராடும் விதமாக, அவர்களின் வீடுகளுக்கு முன்பாக போராட்டங்களிலும் மறியல்களிலும் ஈடுபடக் கூடாது.

(6) தனி நபருக்குச் சொந்தமான இடங்களில், கட்டடங்களில், சுற்றுச்சுவர்களில் அவர்களின் அனுமதியின்றி கொடிக்கம்பங்கள் நடுதல், பதாகை வைத்தல், சுவரொட்டிகளை ஒட்டுதல், பரப்புரை வாசகங்களை எழுதுதல் போன்ற செயல்களை செய்ய அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளர்கள் தங்களது தொண்டர்களை அனுமதிக்கக் கூடாது.

(7) அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் தங்களது தொண்டர்களால் பிற கட்சியினர் ஏற்பாடு செய்யும் கூட்டங்களுக்கும், ஊர்வலங்களுக்கும் எவ்வித இடையூறும் தடங்கலும் ஏற்படாது என்பதை உறுதிசெய்ய வேண்டும். ஒரு கட்சியைச் சேர்ந்த தொண்டர்களோ ஆர்வலர்களோ பிற கட்சியினரின் பொதுக் கூட்டங்களில் நேரடியாகவோ, எழுத்து மூலமாகவோ கேள்வி கேட்டோ தங்கள் கட்சியின் அச்சிட்ட துண்டு பிரசுரங்களை விநியோகம் செய்தோ இடையூறு செய்யக்கூடாது. ஒரு கட்சியினர் ஓரிடத்தில் பொதுக்கூட்டத்தினை நடத்திக் கொண்டிருக்கும்போது அவ்வழியாக பிற கட்சியினரின் ஊர்வலங்கள் நடத்தப்படக் கூடாது. ஒரு கட்சியினர் ஒட்டிய சுவரொட்டிகளை மற்றொரு கட்சியின் தொண்டர்கள் அகற்றக்கூடாது.

## II. கூட்டங்கள்

(1) போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதற்கும், அமைதி ஒழுங்கினை நிலைநாட்டுவதற்கும் வசதியாக கூட்டங்கள் நடைபெறும் இடம் மற்றும் நேரம் குறித்த தகவல்களைக் கட்சியோ, வேட்பாளரோ உள்ளூர் காவல்துறை அதிகாரிகளுக்கு முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும்.

(2) கூட்டம் நடத்தப்படும் இடம் குறித்து முடிவு செய்யும் முன்னர், குறிப்பிட்ட அந்த இடத்தில் தடை உத்தரவோ கட்டுப்பாட்டு உத்தரவோ நடைமுறையில் உள்ளதா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு தடை ஆணைகள் ஏதேனும்

நடைமுறையில் இருப்பின் அவை தவறாது கடைப்பிடிக்கப்பட வேண்டும். அத்தகைய தடை ஆணைகளின் மீது விலக்கு பெற விரும்பினால், தொடர்புடைய அதிகாரிகளுக்கு கட்சியோ அல்லது வேட்பாளரோ முன்கூட்டியே விண்ணப்பித்து விலக்குப் பெற்றிருக்க வேண்டும்.

(3) கூட்டம் நடத்துவதற்குத் தேவையான ஒலிபெருக்கி முதலிய கருவிகளைப் பயன்படுத்துவதற்கு அனுமதியோ, உரிமமோ பெற வேண்டியிருப்பின், அதற்காக உரிய அதிகாரிகளிடம், கட்சியோ அல்லது வேட்பாளரோ முன்கூட்டியே விண்ணப்பித்து, உரிமம் அல்லது அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும்.

(4) கூட்டத்தின்போது இடையூறு செய்வோரையும், சட்ட - ஒழுங்கைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவோரையும் சமாளிப்பதற்கு, பணியிலிருக்கும் காவல் துறையினரின் உதவியை கூட்டத்திற்கு ஏற்பாடு செய்பவர்கள் நாடிப் பெறலாம். அமைப்பாளர்கள் தாங்களாகவே மேற்படி நபர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது.

**III. ஊர்வலம்**

(1) ஊர்வலம் தொடங்கும் நேரம் மற்றும் இடம், ஊர்வலம் செல்லும் வழி மற்றும் ஊர்வலம் முடிவடையும் நேரம் மற்றும் இடம் போன்ற விவரங்களை ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்யும் கட்சியோ அல்லது வேட்பாளரோ முன்கூட்டியே முடிவுசெய்துகொள்ள வேண்டும். மேற்படி நிகழ்ச்சியில் இயல்பான மாற்றம் வேண்டுமானால் செய்யப்படலாம்.

(2) நிகழ்ச்சிக்கு அமைப்பாளர்கள் போதுமான ஏற்பாடுகள் செய்துதர வசதியாக உள்ளூர் காவல்துறை அதிகாரிகளுக்கு முன்கூட்டியே கடிதம் அளிக்க வேண்டும்.

(3) ஊர்வலம் நடத்துவோர், ஊர்வலம் செல்லவிருக்கும் பகுதிகளில், பிறப்பிக்கப்பட்டிருக்கும் தடை உத்தரவுகள் குறித்து முன்கூட்டியே அறிந்து வைத்திருக்க வேண்டும். தகுதி வாய்ந்த உயர் அதிகாரிகளால் சிறப்பு விலக்கு அளிக்கப்பட்டாலொழிய, அந்த உத்தரவுகள் தவறாது கடைப்பிடிக்கப்பட வேண்டும். அனைத்துப் போக்குவரத்து விதிகளும், கட்டுப்பாடுகளும் கவனமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

(4) ஊர்வலம் செல்வதால், போக்குவரத்துக்கு எவ்விதத் தடையோ இடையூறோ ஏற்படாதவண்ணம், ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்பவர்கள் முன்கூட்டியே தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். ஊர்வலம் மிக நீண்டதாக இருந்தால், பெரும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் வகையில், குறிப்பாக, சாலைச் சந்திப்புகள் போன்ற இடங்களில், ஊர்வலத்தை வசதியான இடைவெளி விட்டு நடத்தலாம். நிறுத்தப்பட்ட போக்குவரத்து ஒவ்வொரு கட்டமாகச் செல்ல வகை செய்வதற்காக இடைவெளி விட்டு ஊர்வலம் நடத்தலாம்.

(5) ஊர்வலம் செல்லும் போது ஊர்வலத்திற்கு வலதுபுறம் போதுமான இடம் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும், பணியில் இருக்கும் காவலர்கள் வழிகாட்டுதல்கள் மற்றும் ஆலோசனைகளின்படி தவறாது நடந்து கொள்ளவேண்டும்.

(6) ஒரே நேரத்தில், ஒரே பாதையிலோ அல்லது அதே பாதையில் பகுதியளவு வருமாறோ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அரசியல் கட்சிகள் வேட்பாளர்கள் ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்ய விரும்பினால், ஊர்வலத்தில் எவ்வித மோதல்களும் இடம்பெறா வண்ணமும், போக்குவரத்திற்கு எவ்வித இடையூறும் ஏற்படுத்தாத வகையிலும் பார்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் குறித்து முன்கூட்டியே முடிவு செய்து கொள்ள வேண்டும். இரு தரப்பினரும் திருப்திகரமாக ஏற்பாடு செய்வதற்காக உள்ளூர் காவல்துறையினரின் உதவியையும் கோரிப் பெறலாம். இதற்காக, அரசியல் கட்சியினர் கூடுமான வரையில் விரைவாக காவல் துறையினரைத் தொடர்பு கொள்ளலாம்.

(7) ஊர்வலத்தில் கலந்து கொள்பவர்கள், உணர்ச்சிப் பெருக்கினால், தங்கள் கையில் கொண்டு செல்லும் பொருட்களைத் தவறாகப் பயன்படுத்த இயலாத வண்ணம், இயன்றவரை, உரிய கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை அரசியல் கட்சியினரோ, வேட்பாளர்களோ மேற்கொள்ள வேண்டும்.

(8) எந்தவொரு அரசியல் கட்சியோ வேட்பாளரோ, பிற அரசியல் கட்சிகளையோ அல்லது பிற தலைவர்களையோ உருவகப்படுத்தும் உருவப் பொம்மைகளை எடுத்துச் செல்வதோ, பொது இடங்களில் அவ்வுருவ பொம்மைகளை

எரிப்பதோ, அவற்றை வைத்து பிற வகையான போராட்டங்கள் நடத்துவதோ கூடாது.

## IV. வாக்குப் பதிவு நாள்

அனைத்து அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும்,

(i) வாக்குப்பதிவு அமைதியாகவும், நேர்மையாகவும் நடந்திடவும், வாக்காளர்கள் எவ்வித தொந்தரவும் இடையூறும் இல்லாது முழுச் சுதந்திரத்துடன் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்திடவும் தேர்தல் பணியில் ஈடுபட்டிருக்கும் அலுவலர்களுக்கு முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

(ii) அங்கீகரிக்கப்பட்ட கட்சித் தொண்டர்களுக்கு தகுந்த பேட்ஜுகளும் அடையாள அட்டைகளும் வழங்கவேண்டும்.

(iii) வாக்குப்பதிவு நடைபெறும் அறைகளில் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் அடையாள அட்டைகள் சுத்தமான (வெள்ளை) காகிதத்தில் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதையும் மேலும் அவற்றில் யாதொருசின்னமோ, வேட்பாளரின் பெயரோ கட்சியின் பெயரோ இடம் பெற்றிருக்கக்கூடாது என்பதையும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

(iv) வாக்குப் பதிவு நடைபெறும் நாளன்றும் அதற்கு 48 மணி நேரங்களுக்கு முன்பாகவும் மதுபான விநியோகம் செய்யக்கூடாது.

(v) கட்சித் தொண்டர்களிடையேயும் வேட்பாளர்களின் ஆதரவாளர்களிடையேயும் மோதல்கள்/கைகலப்பு மற்றும் அமளி போன்றவை ஏற்படாத வண்ணம் வாக்குச் சாவடிகளுக்கு அருகில் அரசியல் கட்சிகளாலோ அல்லது வேட்பாளர்களாலோ அமைக்கப்பட்டிருக்கும் முகாம்களுக்கு அருகில் தேவையில்லாமல் கூட்டம் கூடுவதை அனுமதிக்கக் கூடாது.

(vi) வேட்பாளர்களின் முகாம் எளிமையாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும். அங்கே சுவரொட்டிகள், கொடிகள், சின்னங்கள் மற்றும் பிற தேர்தல் பிரசார கருவிகள் இடம்பெற்றிருக்கக் கூடாது. முகாம்களில் உணவு விநியோகம் செய்யப்படுவதும் கூட்டம் கூடுவதும் அறவே கூடாது.

(vii) வாக்குப் பதிவு அன்று வாகனங்களை வாடகைக்கு விடுவதற்கான கட்டுப்பாட்டு நெறிமுறைகளைத் தவறாது கடைப்பிடித்து அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு நல்க

வேண்டும். அத்தகைய வாகனங்கள் அதற்கான அனுமதிச் சீட்டினைப் பெற்று, அவற்றினைத் தெளிவாகத் தெரியுமாறு அந்தந்த வாகனங்களில் தெரியும்படி ஒட்ட வேண்டும்.

**V. வாக்குச் சாவடி**

வாக்காளர்களைத் தவிர, தேர்தல் ஆணையத்திடமிருந்து பெறப்பட்ட தகுந்த அனுமதிச் சீட்டு இல்லாமல் வேறு எவரும் வாக்குச் சாவடிக்குள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

**VI. பார்வையாளர்கள்**

பார்வையாளர்களைத் தேர்தல் ஆணையம் நியமனம் செய்கிறது. தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பாக வேட்பாளர்களோ, அவர்களின் முகவர்களோ தங்களது குற்றச்சாட்டுக்களையும், பிரச்சனைகளையும், பார்வையாளர்களின் கவனத்திற்குக் கொண்டுவரலாம்.

**VII. ஆட்சி அதிகாரத்திலுள்ள கட்சி**

மத்தியிலோ, மாநிலத்திலோ அல்லது அந்தந்த மாநிலங்களிலோ, ஆட்சியிலுள்ள கட்சியினர், தங்கள் அலுவலக அதிகாரத்தை, தங்கள் தேர்தல் களப்பணிகளுக்காகப் பயன்படுத்துவது தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு எவ்வகையிலும் இடமளிக்கக் கூடாது. குறிப்பாக,

(i) (a) அமைச்சர்கள், தங்கள் அலுவலகப் பார்வையிடலையும், தேர்தல் பணிகளையும் இணைத்து ஒரே நேரத்தில் மேற்கொள்ளக்கூடாது. மேலும், அரசு இயந்திரத்தையும் பணியாளர்களையும் தங்கள் தேர்தல் பணிக்காகப் பயன்படுத்தக்கூடாது.

(b) அரசுக்குச் சொந்தமான வானூர்திகள், வாகனங்கள், எந்திரப் பொறிகள் மற்றும் பணியாளர்கள் ஆட்சியில் உள்ள கட்சியின் விருப்பத்திற்குப் பயன்படுத்தப்படக்கூடாது.

(ii) தேர்தல் பொதுக்கூட்டங்களை நடத்துவதற்கு திடல்கள் போன்ற பொது இடங்களையும், தேர்தல் தொடர்பான வானூர்திகள் போன்றவற்றைத்

தரையிறக்கும் தளங்களையும் தாம் மட்டுமே பயன்படுத்தக் கூடாது. ஆளுங்கட்சியினருக்கு வழங்கப்பட்ட நிபந்தனைகளின்படியே மற்றகட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் மேற்படி இடங்களும், வசதிகளும் வழங்கப்பட வேண்டும்.

(iii) ஓய்வில்லங்களும், மாளிகைகளும், அரசுக்குச் சொந்தமான பிற தங்குமிடங்களும், ஆளும் கட்சியினர், அதன் வேட்பாளர்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுவது கூடாது. பிற கட்சிகளும், வேட்பாளர்களும் முறையாக அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும். ஆனால், எந்தவொரு கட்சியோ, வேட்பாளரோ தேர்தல் அலுவலகமாகவோ, தேர்தல் பிரச்சாரத்திற்கான பொதுக்கூட்டங்கள் நடத்துவதற்கோ மேற்சொன்ன தங்குமிடங்களைப் (அவற்றோடு தொடர்புடைய வளாகங்களுடன்) பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டார்கள்.

(iv) அரசு நிதியைப் பயன்படுத்தி செய்தித்தாள்களிலும் பிற ஊடகங்களிலும் விளம்பரப்படுத்துதல் தேர்தல் நேரங்களில், அரசு ஊடகத் துறையின் வாயிலாக ஒருதலைப்பட்சமான அரசியல் செய்திகளை மட்டும் சேகரிக்கச் செய்வதும், அரசின் வாய்ப்பு வளங்களைப் பெருக்கிக் கொள்வதற்காக அரசின் சாதனைகளை விளம்பரப்படுத்துவதும் முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும்.

(v) தேர்தல் ஆணையத்தால் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், அமைச்சர்களும் மற்ற அதிகாரிகளும் தங்கள் விருப்புரிமை நிதியிலிருந்து யாதொரு நல்கையையும் வழங்கக்கூடாது. மேலும்,

(vi) தேர்தல் ஆணையம் தேர்தலை அறிவித்த பின்னர், அமைச்சர்களும், பிற அதிகாரிகளும்,

(a) யாதொரு வடிவத்திலும் நிதிநல்கைகளையோ வாக்குறுதிகளையோ வழங்கக்கூடாது.

(b) (குடிமைப் பணி அலுவலர்கள் நீங்கலாக) எந்தவொரு திட்டப்பணிக்காகவோ அல்லது திட்டங்களுக்காகவோ அடிக்கல் நாட்டக் கூடாது.

(c) சாலை அமைத்தல், குடிநீர் வசதிகளை ஏற்படுத்தித் தருவது குறித்த வாக்குறுதிகளை அளிக்கக் கூடாது.

(d) அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் தற்காலிகமாகப் பணிநியமனங்கள் செய்யக் கூடாது. அது ஆளுங்கட்சியினருக்கு ஆதரவாக வாக்காளர்களைத் தூண்டச் செய்யக் கூடும்.

குறிப்பு: தேர்தல் ஆணையம் எந்தத் தேர்தலுக்கான நாள் குறித்தும் அத்தேர்தல் குறித்த அறிவிக்கை வெளியிடப்படுவதற்கு மூன்று வாரங்களுக்கு முன்பாக அறிவிப்பு செய்யலாம்.

(vii) வேட்பாளராகவோ, வாக்காளராகவோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவராகவோ இல்லாத நேர்வுகளில், எந்தவொரு மத்திய அமைச்சரோ அல்லது மாநில அமைச்சரோ வாக்குச் சாவடிகளுக்கோ அல்லது வாக்குச் சீட்டு எண்ணும் இடத்திற்கோ செல்லக்கூடாது.

## VIII. தேர்தல் அறிக்கைகள் தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகள்

1. உச்ச நீதிமன்றம் 21455/2008 ஆம் எண்ணிட்ட சிறப்பு அனுமதி மனு (கு) மீதான தனது 5.07.2013 ஆம் நாளிட்ட தீர்ப்பில் (தமிழ்நாடு அரசு மற்றும் பிறருக்கு எதிராக எஸ். சுப்பிரமணியன் பாலாஜி என்பவரால் தாக்கல் செய்யப்பட்டது) அங்கீகாரம் பெற்ற அனைத்து அரசியல் கட்சிகளையும் கலந்தாலோசித்து தேர்தல் அறிக்கையில் இடம்பெற வேண்டியன குறித்த வழிகாட்டு நெறிமுறைகளைத் தேர்தல் ஆணையம் உருவாக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது. அவ்வாறு தேர்தல் அறிக்கையில் இடம்பெற வேண்டியன குறித்து தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகள் பின்வருமாறு:

(i) "தேர்தல் அறிக்கையில் வெளியிடப்படும் வாக்குறுதிகள் மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் 123 ஆம் பிரிவின்படி 'ஊழல் நடவடிக்கைகள்' எனக் கருதப்படமுடியாது என்றாலும், உண்மை நிலையில் யாதொரு வகையிலும் விலையில்லாப் பொருட்களை வழங்குவது அனைத்து மக்களிடமும் சந்தேகமின்றி தாக்கத்தை ஏற்படுத்தும். இது சுதந்திரமான, நேர்மையான தேர்தலை மிகவும் பாதிக்கும்"

(ii) "தேர்தலில் போட்டியிடும் கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் இடையே தனது நடுநிலைத் தன்மையை உறுதிப்படுத்தவும், தேர்தல் பணிகள் எவ்விதத்திலும் சீர்கெடாமல், சிறப்பாக நடைபெறவும், முன்பு போலவே, இப்போதும் தேர்தல்

ஆணையம் தனது அறிவுரைகளை, தேர்தல் நடத்தை விதிமுறைகளின் வாயிலாக வழங்குகிறது. தேர்தலை சுதந்திரமாகவும் நேர்மையாகவும் நடத்திட, அரசமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 324-ன் கீழ் தேர்தல் ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் இந்த ஆணைகள் வழங்கப்படுகின்றன."

(iii) "பொதுவாகவே அரசியல் கட்சிகள் தேர்தல் தேதிகள் அறிவிக்கப்படுவதற்கு முன்பாகவே தங்கள் தேர்தல் அறிக்கையை வெளியிடுகின்றன. இவ்வாறு தேர்தல் நடைபெறும் தேதி அறிவிக்கப்படுவதற்கு முன்பாகவே தேர்தல் அறிக்கையை அரசியல் கட்சிகள் வெளியிடுவதை ஒழுங்குபடுத்த தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரம் இல்லை. அதே சமயம், தேர்தல் அறிக்கை வெளிடப்படுவதன் நோக்கம் தேர்தல் நடைமுறையுடன் நேரடியாகத் தொடர்புள்ளது என்ற நிலையில் தேர்தல் ஆணையம் அதனை ஒழுங்குபடுத்தலாம்"

1. உச்ச நீதிமன்றத்தின் மேற்சொன்ன வழிகாட்டுதல்கள் கிடைத்ததை அடுத்து, தேர்தல் ஆணையம், அங்கீகாரம் பெற்ற தேசிய மற்றும் மாநிலக் கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டி இது குறித்து ஆலோசித்து, அக்கட்சிகள் தெரிவித்த மாறுபட்ட கருத்துகள் பதிவு செய்து கொள்ளப்பட்டன.

   ஆலோசனையின்போது, சில அரசியல் கட்சிகள் வழிகாட்டு நெறிகள் பிறப்பிக்கப்படுவதற்கு ஆதரவளித்தன. அதே சமயம், ஆரோக்கியமான மக்களாட்சி முறையில், தேர்தல் வாக்குறுதியில், வாக்காளர்களுக்குச் சலுகைகளையும் வாக்குறுதிகளையும் வழங்குவது தங்கள் உரிமை மற்றும் கடமையாகும் என்பது பிற கட்சிகளின் கருத்தாக இருந்தது. தேர்தல் வாக்குறுதிகளை உருவாக்குவது அரசியல் கட்சிகளின் உரிமை என்பதைத் தேர்தல் ஆணையம் ஒப்புக்கொண்ட போதிலும், தேர்தலை சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடத்துவதிலும், அரசியல் கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் இடையே நடுநிலைத்தன்மையை நிலைபெறச் செய்வதிலும், இவ்வாறு வாக்குறுதிகள், சலுகைகள் குறித்த அறிவிப்பால் ஏற்படும் தேவையற்ற பாதிப்புகளைத் தேர்தல் ஆணையம் கவனத்தில் கொள்ளாமல் இருக்க இயலாது.

2. தேர்தல் ஆணையம் தனது மற்ற பணிகளுக்கு இடையில் நாடாளுமன்றத்திற்கும், சட்டமன்றங்களுக்கும் தேர்தலை நடத்திட வேண்டும் என்று அரசமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 324 கட்டாயமாக்கியுள்ளது. உச்ச நீதிமன்றத்தின் மேற்சொன்ன

வழிகாட்டு நெறிமுறைகளின்படியும், அரசியல் கட்சிகளைக் கலந்தாலோசித்ததன் அடிப்படையிலும், தேர்தலைச் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடத்திட, அரசியல் கட்சிகளும், வேட்பாளர்களும் நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றத் தேர்தலுக்கான தேர்தல் அறிக்கைகளைத் தயாரிக்கும் போது பின்வரும் வழிமுறைகளைத் தவறாமல் கடைப்பிடிக்கவேண்டும் எனத் தேர்தல் ஆணையம் அறிவுறுத்துகிறது. அவையாவன:

(i) தேர்தல் அறிக்கைகளில் அரசமைப்புச் சட்டத்தின் நோக்கங்களுக்கும் கொள்கைகளுக்கும் எதிராக எதுவும் இடம்பெறக் கூடாது. மேலும், தேர்தல் நடத்தை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பிற விதிகளுக்கு உட்பட்டும் இருக்க வேண்டும்.

(ii) அரசமைப்புச் சட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகள், மாநிலங்கள் மக்களுக்காகப் பல்வேறு நலத்திட்டங்களை வகுக்க வேண்டுமெனக் குறிப்பிடுகிறது. ஆகவே, இது போன்ற நலத்திட்டங்கள் குறித்த வாக்குறுதிகள் தேர்தல் அறிக்கைகளில் இடம்பெறுவதற்கு யாதொரு தடையுமில்லை. இருப்பினும், தேர்தல் நடவடிக்கைகளின் தூய்மையைக் கெடுக்கும் வகையிலோ, வாக்காளர்களைக் கவரும் வகையிலோ, (வாக்களிக்கும் உரிமையினைப் பயன்படுத்துவதில் தேவையற்ற தாக்கத்தை ஏற்படுத்தும் வகையிலோ), வாக்குறுதிகள் அளிக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.

(iii) வழங்கப்படும் வாக்குறுதிகள் நியாயமானவையாக இருப்பதுடன், வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதி ஆதாரங்களைப் பெறுவதற்கான அனைத்து வழிமுறைகளும் விரிவாக விளக்கப்பட்டு ஒளிவுமறைவற்ற தன்மை, நடுநிலைத் தன்மை மற்றும் வாக்குறுதிகளின் நம்பகத்தன்மை ஆகியவை உறுதிசெய்யப்பட வேண்டும். நிறைவேற்றப்படக் கூடிய வாக்குறுதிகளை மட்டுமே அளித்து வாக்காளர்களின் நம்பிக்கையைக் கோர வேண்டும்.

## A. தேர்தல் நடத்தை விதிமுறைகளைச் செயல்படுத்துதல்

### உத்தரவு தொடர் எண். 1.

தேர்தல் ஆணையம், 1. மத்தியப் பிரதேசம் (போபால்), 2. ராஜஸ்தான் (ஜெய்ப்பூர்), 3. மிசோரம் (ஐஸ்வால்), 4. தேசிய தலைநகர் பகுதி (தில்லி) ஆகியவற்றின் தலைமைச் செயலாளர்களுக்கு எழுதிய 15.09.1998 ஆம் நாளிட்ட 437/6/98-பி.எல்.என்-II ஆம் எண்ணிட்ட கடிதம்.

பொருள் : மாநில சட்டமன்றங்களின் புதிய தேர்தலுக்கான ஆயத்தப் பணிகள்.

மாநில சட்டமன்றத்தின் ஆட்சிக்காலம் 1998 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களுடன் முடிவடைகிறது. விரைவில் தேர்தல் நடைபெறவுள்ளது. தேர்தல் ஆணையமும், மாநிலத் தலைமைத் தேர்தல் அலுவலர்களும் தேர்தல் ஏற்பாடுகள் குறித்து முனைப்புடன் செயலாற்றி வருவதும், தில்லியிலும் தங்கள் மாநிலத் தலைமையகங்களிலும் அனைத்து ஏற்பாடுகளையும் முடிவு செய்வது தொடர்பான கூட்டங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருவதும் தாங்கள் அறிந்ததே. இந்தியத் தேர்தல் ஆணையமும், மாநிலத்தின் முழுத் தேர்தல் இயந்திரமும் முழுமூச்சுடன் தேர்தல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

தேர்தல் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடைபெறுவதை உறுதி செய்வதற்காக, இந்தியத் தேர்தல் ஆணையமும், அனைத்து அரசியல் கட்சிகளும் வெற்றிக்கான சமவாய்ப்பு கிடைக்கப்பெற விழைகின்றன. தேர்தல்கள் குறித்த விரிவான அட்டவணையைத் தேர்தல் ஆணையம் விரைவில் வெளியிடவுள்ளது. ஆகவே, தேர்தல் நடவடிக்கைகளைத் தொடங்க இன்னும் மிகக் குறைந்த கால அளவே இருப்பதால், அனைத்துக் கட்சிகளுக்கும் குறிப்பாக எதிர்க்கட்சிகளின் வெற்றிக்கான சமவாய்ப்பு கிடைப்பதைச் சீர்குலைக்கும் வண்ணம், மாநில அரசுகள், புதிதாகப் பெரும் நிதி சார்ந்த திட்டப் பணிகளைத் தொடங்க வேண்டாம் என தேர்தல் ஆணையம் எதிர்பார்ப்பதுடன், வலியுறுத்துகிறது. மாநில அரசு தனது 4 வருடம் 9 மாத ஆட்சிக் காலத்தில், தான் செயல்படுத்த விரும்பிய அனைத்து நலத்திட்டப் பணிகளையும் நிறைவேற்றி இருக்கும் என்பதில் தேர்தல் ஆணையம் மிகுந்த நம்பிக்கையுடன் உள்ளது. வெறும் இரண்டே மாதங்கள் மீதமுள்ள இச்சூழ்நிலையில், 50 ஆண்டுகால இந்தியக் குடியாட்சியில்,

எக்கட்சியிலும் எதிர்பார்க்க முடியாதவகையில் பெரிய அளவில் வெளியிடப்படும் அறிவிப்புகள் தவறாகவே கருதப்படும்.

பெரிய அளவிலான கல்வி நிறுவனங்களையோ வேறு நிர்வாக அமைப்புகளை உருவாக்க வேண்டாம் எனத் தேர்தல் ஆணையம் அறிவுறுத்துகிறது. தவறான வகையில் வாக்காளர்களைக் கவரும் நன்கொடைகள் எனக்கருதப்படும் யாதொரு செயல்களிலும் ஆளுங்கட்சியினர் ஈடுபடக்கூடாது என தேர்தல் ஆணையம் எதிர்பார்க்கிறது.

மாநிலத்தின் துறைகளின் தலைவர் என்கிற வகையில், தாங்கள் மாநிலத்தின் அனைத்து நிருவாக அமைப்புகளும் நடுநிலை வகிப்பதையும், பொதுமக்களும் அனைத்துக் கட்சியினரும் அதை அறிந்துகொள்ளும் வகையிலும் கவனமாகவும் விழிப்புடனும் இருக்க வேண்டும்.

## உத்தரவு தொடர் எண். 2

தேர்தல் ஆணையம், கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகம் மற்றும் கிராமப்புற மேம்பாட்டுத் துறையின் இந்திய அரசுச் செயலாளருக்கு எழுதிய 09.03.2004 ஆம் நாளிட்ட 437/6/16/2004 ஆம் எண் கடிதம்.

**பொருள்: தேர்தல் நடத்தை விதிமுறைகள்**

தங்களின் 24-2-2004 ஆம் நாளிட்ட பி.எஸ்/ஜேஎஸ் (ஆர்எல்) /04-216 ஆம் எண்ணிட்ட கடிதத்தைப் படிக்குமாறும், தொடர்புள்ள அனைத்துக் காரணிகளையும் கருதிப் பார்த்த பின்னர்,

(1) ஏற்கனவே தொடங்கப்பட்ட பணிகள் தொடர்ந்து நடைபெறலாம் என்றும்,

(2) தேர்தல்கள் முடிவடையும் வரையில் புதிதாக யாதொரு பணிகளும் தொடங்கக் கூடாதென்றும்,

(3) தேர்தல் நடைபெறும் காலங்களில், எந்த ஒப்பந்தப் புள்ளிகளும் இறுதி செய்யப்படக்கூடாது என்றும்

தேர்தல் ஆணையம் முடிவெடுத்திருப்பதைக் குறிப்பிடுமாறு நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

**நகல்**

எஸ். விஜயகுமார்,
இணைச்செயலாளர்,
கிராமப்புற மேம்பாட்டுத் துறை,
இந்திய அரசு,
கிராமப்புற மேம்பாட்டுத் துறை,
கிருஷி பவன், புதுதில்லி – 110001.

நே.மு.க.எண். பிஎஸ் /ஜேஎஸ் (ஆர்சி) /04-216, பிப்ரவரி 24, 2004

**பொருள்: - தேர்தல் நடத்தை விதிமுறைகள் மற்றும் பிரதமரின் கிராமப்புறச் சாலைத் திட்டத்தின் கீழ் பணிகளைத் தொடர்தல்**

அமைச்சகத்தின், 13.02.2004 ஆம் நாளிட்ட 17015/1/2004-ஜிசி என்ற எண்ணிட்ட நேர்முகக் கடிதத்தினைப் படிக்க. கிராமப்புறங்களை இணைப்பதற்காக மத்திய அரசால்

நிதியுதவி அளிக்கப்பட்டு செயல்படுத்தப்படும் திட்டம்தான் பிரதமரின் கிராமப்புறச் சாலைத் திட்டம் என்பதைத் தாங்கள் நன்கு அறிவீர்கள். அத்திட்டம் (PMGSY) குறித்த வழிகாட்டு நெறிமுறைகளின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அதன் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

- தலைமைச் செயலரின் தலைமையிலான மாநில நிலைக்குழு சாலைப் பணிகள் தொடர்பான கருத்துருக்களுக்கு / முன்மொழிவுகளுக்கு தனது இசைவினை நல்கியுள்ளது. விரிவான திட்டப்பணி அறிக்கைகள் IITs மற்றும் RECs போன்ற தனித்த / சுதந்திரமான மாநிலத் தொழில்நுட்ப முகமைகள் வாயிலாகப் பரிசோதிக்கப்பட்டுவிட்டன.
- கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் செயலாளரைத் தலைவராகவும், திட்டக் குழுவின் ஆலோசகரையும் (போக்குவரத்து), சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் பிரதிநிதியையும், மத்திய சாலை ஆராய்ச்சி நிறுவனத்தின் (CRRI) இயக்குநரையும் உறுப்பினர்களாகக் கொண்ட அமைச்சகங்களுக்கிடையேயான அதிகாரங்களை வழங்கும் குழுவினால் (IMEC) மாநிலங்களின் கருத்துருகள் கருதிப் பார்க்கப்பட்டன.
- இசைவினைப் பெற்ற பின்னர், பிரதம மந்திரி கிராமப் புறச் சாலைத் திட்டப் பணிகளுக்கான தர ஏல ஆவணங்களின்படி மாநில அரசால் திறந்த ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இன்னும் 9 மாதங்களில் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன.

2. அமைச்சகத்தினால் வருடாந்தர தீர்மானங்கள் / முன்மொழிவுகள் மீது இசைவு வழங்குதல் முதற்கொண்டு அவற்றினைச் செயல்படுத்துவதில் உள்ள பல்வேறு படிநிலைகள் பின்வரும் கூறுகளைக் கொண்டுள்ளன. அவையாவன:

- ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்புகளை வழங்குதல், ஒப்பந்த/ஏல ஆவணங்களைப் பெறுவதற்கான இறுதி நாள் மற்றும் நேரம் போன்றவற்றைக் குறிப்பிடுதல், தரமான ஏல ஆவண விதிமுறைகளுக்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளிகளைத் திறத்தல்,
- மிகக்குறைவான ஒப்பந்தப்புள்ளியினை இறுதி செய்து பணி வழங்குதல்,
- ஒப்பந்தத்திற்குப் பிறகு பணிஆணைகளை வழங்குதல்,
- போதுமான அளவில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படாதபோது, மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரும் நடவடிக்கையை மேற்கொள்ளுதல் போன்றவை.

மாநில விதிமுறைகளின்படி, திட்ட செயலாக்க அலகு (PIU) அல்லது செயலாக்க முகமையோ/துறை மட்டத்தில், இறுதி முடிவு எடுக்கப்படும்.

3. சில மாநில அரசுகள், “இந்தியத் தேர்தல் ஆணையத்தால் நடைமுறைப்படுத்தப்படும், தேர்தல் நடத்தை விதிமுறைகளால், பிரதமரின் கிராம சாலைத் திட்டப் பணிகள் (PMGSY) பாதிக்கப்படுமா?” என வினா எழுப்பியுள்ளன. சாலைப்பணிகள், பிரதமரின் கிராம சாலைத் திட்டத்தின் (PMGSY) நிபந்தனைகளுக்குட்பட்டே தேர்ந்தெடுக்கப் படுவதும், விரிவான திட்டப்பணி அறிக்கைகளை (DPRs) உருவாக்குவது நன்கு முறைப்படுத்தப்பட்ட அதிக காலம் எடுத்துக்கொள்ளும் செயல் என்பதும், முன்மொழிவுகள் / தீர்மானங்கள் பல மாதங்களுக்கு முன்பாகவே தொடங்கப்பட்டு அதிகாரம் பெற்ற குழுவினால் (Empowered Committee) முறைப்படி முழுமையாக இறுதி செய்யப்பட்டவை என்பதும் குறிப்பிடத் தக்கது. அதிகாரம் பெற்ற குழு என்பது, அமைச்சகங்களுக்கு இடையேயான அலுவலகம் சார்ந்த குழுவாகும். பிரதமரின் கிராம சாலைத் திட்டம் என்பது ஓர் ஒழுங்கான/ வழக்கமான மத்திய அரசின் உதவி பெற்ற திட்டம் ஆகும். தரைப்பணிகளும், சாதாரண மணற்சாலைகள் அமைக்கும் பணிகளும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் வழங்கப்பட்டு பருவமழை முடிவதற்குள் பணிகள் நிறைவுற்றால்தான் தகுந்த பலன்களைப் பெற இயலும். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறையில் இருக்கும்போது, ஒப்பந்தப்புள்ளி கோருதல் மற்றும் பணி வழங்குதல் குறித்த யாதொரு செய்திகளையும் மாநில அரசியல் செயற்குழுவிடமோ, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிடமோ (அது வழக்கமான நிகழ்வெனில்) தெரிவிக்க வேண்டாம்.

எனவே, பருவமழை முடிவதற்கு முன்பாக தரைப் பணிகளும், சாதாரண மணற்சாலைகள் அமைக்கும் பணிகள் முடிவடையும் வண்ணம், தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்பாகவே ஒப்புதல் அளிக்கப்பட்ட பிரதமரின் கிராம சாலைத் திட்டத்திற்கான மாநிலங்களின் வருடாந்தர முன்மொழிவுகள்/திட்டப்பணிகள், பிரதமரின் கிராமப்புறச் சாலைத் திட்டப் பணிகளுக்கான (PMGSY) வழிகாட்டு நெறிமுறைகளின்படி (தேர்தல் ஆணையத்தின் பிறப்பிக்கும் விதிமுறைகளுக்குட்பட்டு) தொடர்ந்து நடைபெற அனுமதிக்கப்படலாமா? என்பதை தேர்தல் ஆணையம் உறுதி செய்யலாம். தேர்தல் நடத்தை விதிமுறைகள்

நடைமுறையில் இருக்கும்போது, முக்கியப் பிரமுகர்களோ, தனி நபர்களோ எதையும் திறந்து வைப்பது, அறிவிப்புகள் வெளியிடுதல், அடிக்கல் நாட்டுதல் போன்ற செயல்களில் ஈடுபடக்கூடாது என்பதைக் குறிப்பிடத் தேவையில்லை.

நன்றி.

தங்கள் உண்மையுள்ள,
ஒம்/-
(எஸ். விஜயகுமார்)

திரு.ஏ.என். ஜா,
துணைத் தேர்தல் ஆணையர்,
இந்தியத் தேர்தல் ஆணையம்,
புது தில்லி.

## உத்தரவு தொடர் எண். 3

திருமதி ஆஷா ஸ்வரூப், துணைச் செயலாளர் (SGSY), கிருஷி பவன், புது தில்லி – 110 001 என்பவருக்கு தேர்தல் ஆணையம் எழுதிய, 01.04.2004 ஆம் நாளிட்ட 437/6/13/2003/PLN-III, என்ற எண்ணிட்ட கடிதம்.

**பொருள்: கிராமப்புற மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துதல் தொடர்பான விளக்கமளித்தல்**

தேர்தல் ஆணையத்தில் 27.03.2004 அன்று நடைபெற்ற, பல்வேறு கிராமப்புற மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவது தொடர்பான தங்களுடன் நடைபெற்ற கூட்டத்தை நினைவுபடுத்துமாறு நான் பணிக்கப்பட்டுள்ளேன். தேர்தல் முடியும் வரையில் நடைமுறைப்படுத்தப்படும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் குறித்துத் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்கள் பின்வருமாறு:

(i) <u>ஒருங்கிணைந்த கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் (SGRY):-</u> ஒருங்கிணைந்த கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெறலாம். மேலும் அதற்கென ஒதுக்கப்பட்ட நிதியினைப் பயன்படுத்த அனுமதிக்கலாம். நடைபெற்றுக் கொண்டிருந்த அனைத்துப் பணிகளும் நிறைவுற்ற பின்னர், கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகத்தால் நேரடியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி கிடைக்கக்கூடியதாக இருக்கும் நேர்வில், புதிதாக தினக்கூலி அடிப்படையில் வேலைவாய்ப்பு அளிக்கும் பணிகள் மேற்கொள்ள வேண்டியிருப்பின், 2003-04 ஆம் நிதியாண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட வருடாந்தர செயல்திட்டத்திலிருந்து, மாவட்ட ஆட்சியர்/ மாவட்ட தேர்தல் அதிகாரியின் முன் அனுமதி பெற்றபின்னர், தொடங்கலாம். ஆனால், இதர நிதிகளிலிருந்து புதிதாக எந்தப் பணியையும் தொடங்கக் கூடாது.

(ii) இந்திரா குடியிருப்புத் திட்டம் (IAC):- இந்திரா குடியிருப்புத் திட்டத்தின்கீழ் குடியிருப்புகள் ஒதுக்கப்பட்டு, பணி தொடங்கப்பட்ட பயனாளிகளுக்கு மட்டுமே, விதிகளுக்கு உட்பட்டு உதவி வழங்கப்படும். தேர்தல்கள் முடிவடையும் வரையில், புதிதாக கட்டுமானப் பணிகளைத் தொடங்குவதோ, புதிய பயனாளிகளுக்கு உதவி வழங்குவதோ கூடாது.

(iii) சுவர்ண ஜெயந்தி கிராமப்புற சுயவேலைவாய்ப்புத் திட்டம் (SGSY):- சுவர்ண ஜெயந்தி கிராமப்புற சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், பகுதியளவு மானியம்/ சலுகைகள் வழங்கப்பட்ட சுய உதவிக் குழுக்களுக்கு மட்டுமே

மீதமுள்ள தவணைகளும் வழங்கப்படும். தேர்தல்கள் முடிவடையும் வரையில் புதிய பயனாளிகளுக்கோ, சுயஉதவிக் குழுக்களுக்கோ நிதி உதவி வழங்கப்பட மாட்டாது.

## உத்தரவு தொடர் எண்.4

**திருமதி நஜ்மா ஹெப்துல்லா, மாநிலங்களவை துணைத் தலைவர், எண். 4 அக்பர் சாலை, புதுதில்லி-110001 அவர்களுக்கு தேர்தல் ஆணையர் எழுதிய 25.03.2004-ம் நாளிட்ட 437/6/6/2004 என்ற எண்ணிட்ட கடிதம்.**

பொருள் : அவைத் தலைவர் மற்றும் அவைத் துணைத் தலைவர் ஆகியோருக்குப் பொருந்தும் தேர்தல் நடத்தை விதிமுறை.

நாடாளுமன்ற பொதுத் தேர்தலின்போது அரசு வாகனங்களை பயன்படுத்துவதற்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள், மக்களவைத் தலைவர், மக்களவை துணைத் தலைவர் மற்றும் மாநிலங்களவை துணைத் தலைவர் போன்றோருக்கும் பொருந்தும் என்பதைக் குறித்த தங்களின் 18 மார்ச் 2004 ஆம் நாளிட்ட கடிதத்தை பார்வையிடுமாறு நான் பணிக்கப்பட்டுள்ளேன். பாதுகாப்பு குறித்த ஏற்பாடுகளைப் பொறுத்தமட்டில், பாதுகாப்பு குறித்த அச்சுறுத்தல் ஒருவருக்கு இருந்தால், அவருக்கு பாதுகாப்பு வழங்கிட மாநில அரசுக்கு ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## உத்தரவு தொடர் எண்.5

**அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமை தேர்தல் அலுவலர்கள் ஆகியோருக்கு தேர்தல் ஆணையர் எழுதிய 07.01.2007ம் தேதிய 464/INST/2007-PLN-I என்ற எண்ணிட்ட கடிதம்.**

பொருள் : நடத்தை விதிகள் – செய்ய வேண்டியவையும் செய்யக் கூடாதவையும்.

நடத்தை விதிகளைப் பின்பற்ற பல்வேறு அறிவுரைகளைத் தேர்தல் ஆணையம் அவ்வப்போது வழங்கியுள்ளது. நடத்தை விதிமுறைகள் பற்றிய முக்கிய தன்மைகள் மீண்டும் கீழ்கண்டவாறு வலியுறுத்தப்படுகிறது.

<u>நலத்திட்டங்கள் மற்றும் அரசுப் பணிகள்:</u>

1. புதிய திட்டங்கள், செயல் திட்டங்கள் அல்லது சலுகைகள், ஏதாவது வகையிலான நிதி மானிய உதவிகள் அல்லது அது குறித்த வாக்குறுதிகள், அடிக்கல் நாட்டுதல் ஆகிய ஆளும் கட்சிகளின் நடவடிக்கைகள் அக்கட்சிகளுக்கு ஆதரவாக இருக்கும் வகையில் வாக்காளர்களிடம் செல்வாக்கை ஏற்படுத்தும் என்பதால், அத்தகைய நடவடிக்கைகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
2. இந்தக் கட்டுப்பாடுகள், புதிய மற்றும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள திட்டங்கள் ஆகியவற்றிற்கும் பொருந்தும். நிறைவடையும் நிலையில் உள்ள தேசிய, மாநில மற்றும் அரசுப் பயன்பாட்டுத் திட்டங்களுக்கு இக்கட்டுப்பாடுகள் பொருந்தாது. அத்தகைய திட்டங்களைத் தொடங்குவதையும், செயல்படுத்துவதையும் நிறுத்தி வைக்க தேர்தல் நடத்தை விதிமுறை நடைமுறைக்கு வருவதைக் காரணமாகக் காட்டக் கூடாது. அதே வேளையில், இந்த திட்டங்கள், அரசியல் நடைமுறைகள் சாராமலும், ஆடம்பரம் இல்லாமலும், நிகழ்ச்சிகள் இல்லாமலும் மற்றும் ஆளுங்கட்சி வாக்காளர்களின் மீது செல்வாக்கு செலுத்தாத விதத்திலும் அரசியல் கட்சியினர் இல்லாமல் அரசு அதிகாரிகளால் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட வேண்டும். இது குறித்த சந்தேகம் ஏதேனும் இருந்தால், தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும் இந்திய தேர்தல் ஆணையத்தை அணுகி விளக்கம் பெறலாம்.

3. ஏதாவது திட்டம் குறித்து அரசின் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதாலோ அல்லது ஆளுநரின் உரையில் அறிவிக்கப்பட்டதாலோ அல்லது அமைச்சரின் நிதிநிலை அறிக்கைக்கான உரையில் அறிவிக்கப்பட்டதாலோ அத்திட்டம் தன்னிச்சையாக செயல்பாட்டிற்கு வந்ததாகக் கருத்தில் கொள்ள இயலாது. மேலும், இத்திட்டங்கள் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் உள்ளபோது செயல்படுத்தப்படுமேயானால், இத்தகைய செயல்கள் வாக்காளர்களின் மீது செல்வாக்கைச் செலுத்துவதற்காகவே மேற்கொள்ளப்பட்டதாகக் கருத நேரிடும். இது போன்ற செயல்கள் மேற்கொள்ளப்பட்டால், அது தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறிய செயலாகக் கருதப்படும்.

4. அரசின் திட்டங்களுக்காக புதிய நிதி ஒப்பளிப்புகள் மேற்கொள்ளப்படக்கூடாது. அமைச்சர்கள் உள்ளிட்டோரால் ஆய்வு செய்யப்பட்ட பயனாளிகள் சார்ந்த திட்டங்கள் நடைமுறையில் இருப்பினும் தேர்தல் முடியும் வரை நிறுத்தி வைக்கப்பட வேண்டும். எந்த மாநிலத்தில் தேர்தல் நடைபெறுகிறதோ அந்த மாநிலத்தில் தேர்தல் ஆணையத்தின் முன் அனுமதியின்றி நலத்திட்டங்களுக்காகப் புதியதாக நிதி அளிப்பதோ, பணி நடைபெறுவதோ அல்லது பணிக்கான ஒப்பந்தம் வழங்குவதோ கூடாது. மாநிலத்தில் உள்ள மாநிலங்களவை உறுப்பினர்கள் உள்பட நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதி அல்லது சட்ட மன்ற உறுப்பினர்கள் / மாநில சட்ட மேலவை உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதி மூலமாக தொடங்கி, நடைபெறும் பணிகளுக்கும் இந்தக் கட்டுப்பாடு பொருந்தும்.

5. தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறைக்கு வரும் முன்னரே பணிக்கான ஆணை வழங்கப்பட்டிருந்தாலும், தற்போது பணி தொடங்கப்படாமல் இருப்பினும் அந்த பணிகளை தொடங்கக்கூடாது. இப்பணிகள் தேர்தல் முடிவடைந்த பின்னரே தொடங்கப்பட வேண்டும். இருப்பினும், ஏற்கனவே தொடங்கப் பெற்ற பணிகள் தொடர்ந்து நடைபெறலாம்.

6. முழுமையாக நிறைவடைந்த பணிகளுக்கு, சம்பந்தப்பட்ட அலுவலர்களின் முழு திருப்தியுடன் நிதி அளிப்பதற்கு எவ்வித தடையுமில்லை.

7. நெருக்கடி நேரத்தை எதிர்கொள்ளும் திட்டங்கள் அல்லது எதிர்பாராத பேரிடர் உதவிகளான வறட்சி, வெள்ளம், கொள்ளை நோய்கள், பிற இயற்கை பேரிடர் ஆகியவற்றை எதிர்கொள்ளும் திட்டங்கள் அல்லது இவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நலத்திட்ட உதவி செய்வதற்கு அனுமதி அளிக்க தேர்தல் ஆணையம் மறுப்பு தெரிவிக்காது. எனினும், தேர்தல் ஆணையத்திடம் முன் அனுமதி பெற்றிருப்பினும், மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவதில் ஆடம்பர விழாக்களை கண்டிப்பாக நடத்தக்கூடாது. ஏனெனில், இவை வாக்காளர்களைக் கவர்ந்து ஆளுங்கட்சிக்கு சாதகமாகவும், மற்ற கட்சிகளுக்கு பாதகமாகவும் அமைய நேரிடலாம்.

**<u>அலுவலர்களை இடமாற்றம் செய்வது மற்றும் பணியமவர்த்துவது :</u>**

தேர்தல் பணிகள் முடியும் வரை தேர்தலுடன் தொடர்புடைய அதிகாரிகளை இடமாற்றம் செய்வது மொத்தமாக ஆணையத்தால் தடை செய்யப்பட்டுள்ளது. இதிலிருந்து விலக்களிக்கப் பட்ட அதிகாரிகள்

(i) தலைமை தேர்தல் அதிகாரி மற்றும் கூடுதல் / இணை / துணை தலைமை தேர்தல் அதிகாரிகள்.

(ii) மண்டல ஆணையர்கள்;

(iii) மாவட்ட தேர்தல் அலுவலர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் அலுவலர்கள் மற்றும் தேர்தல் நடத்தை விதிகளுள் தொடர்புடைய பிற வருவாய் அலுவலர்கள்.

(iv) 1951 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 28-அ பிரிவின் கீழ் தேர்தல் ஆணையத்தால் மாற்றுப் பணியமர்த்தப்பட்ட தேர்தல் நிர்வாகத்தில் காவல்துறை தொடர்புடைய அதிகாரிகளான மண்டல காவல்துறை தலைவர் மற்றும் காவல்துறை துணை தலைவர், முதுநிலை காவல்துறை கண்காணிப்பாளர்கள்,

(v) பகுதி மற்றும் மண்டல அலுவலர்கள், போக்குவரத்து பிரிவு, மின்னணு வாக்குப் பதிவு இயந்திரப் பிரிவு (இவிஎம்), வாக்குச்சாவடிக்குத் தேவையான பொருட்களைக் கொள்முதல் செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் பிரிவு, பயிற்சிப் பிரிவு, அச்சுப் பிரிவு ஆகியவற்றின் அலுவலர்கள் மற்றும் மாநில தேர்தல் நிர்வாகத்தின் முதுநிலை அலுவலர்கள் ஆகியோரும் இவற்றில் அடங்குவர்.

(vi) மேற்சொன்ன பிரிவுகளில் உள்ள அலுவலர்களுக்கு வழங்கப்படும் பணி மாறுதல் ஆணை தேர்தல் அறிவிப்பிற்கு முன்னரே வழங்கப்பட்டிருந்தாலும், தேர்தல் நடத்தை விதிமுறை நடைமுறைக்கு வந்த பின்னர், தேர்தல் ஆணையத்தின் சிறப்பு அனுமதியைப் பெறாமல் செயல்படுத்த இயலாது.

(vii) இந்தத் தடை தேர்தல் நடைமுறைகள் முடியும் வரை நீடிக்கும்.

(viii) யாரேனும் ஓர் அலுவலரின் பணி மாறுதல் நிர்வாகத்தின் உடனடித் தேவை எனில், தகுந்த காரணங்களுடன் தேர்தல் ஆணையத்தை மாநில அரசு அணுகலாம் .

(ix) தேர்தல் ஆணையத்தின் முன் அனுமதியைப் பெறாமல் அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணி நியமனங்கள் அல்லது பதவி உயர்வுகள் ஆகியவற்றை வழங்கக் கூடாது.

**அரசு இயந்திரத்தை முறைகேடாகப் பயன்படுத்துதல்.**

1. தேர்தல் பணிகளுக்காக அலுவலக வாகனங்களைப் பயன்படுத்தக்கூடாது." அலுவலக வாகனங்கள் " என்பவை கீழ்க்கண்ட அலுவலக வாகனங்களை உள்ளடக்கியுள்ளன.

- மத்திய மற்றும் மாநில அரசு
- மத்திய மற்றும் மாநில அரசின் பொதுத்துறை நிறுவனங்கள்
- மத்திய மற்றும் மாநில அரசின் கூட்டு நிறுவனங்கள்
- ஊராட்சிகள், மாநகராட்சிகள், நகராட்சிகள்
- சந்தைப் பொருள் விற்பனை நிறுவனங்கள்
- கூட்டுறவுச் சங்கங்கள்
- மாவட்ட தன்னாட்சி அமைப்புகள், அல்லது
- மொத்த நிதியில் குறைந்த அளவே பொது நிதியைக் கொண்டு, பொது நிதியில் இயங்கும் நிறுவனங்கள்
- பாதுகாப்புத் துறைக்குச் சொந்தமான வாகனங்கள் மற்றம் மத்திய உள்துறை மற்றும் மாநில அரசின் கீழ் வரும் மத்திய காவல்துறைக்கு சொந்தமான வாகனங்கள்.

2. மத்திய மற்றும் மாநில அமைச்சர்கள் தங்களின் தனிப்பட்ட சுற்றுப் பயணத்திற்கு சொந்த வாகனங்களைப் பயன்படுத்தலாம். இது போன்ற தனிப்பட்ட சுற்றுப் பயணத்தின்போது அமைச்சர்களின் அலுவல் ரீதியான பணியாளர்கள் உடன் செல்லக் கூடாது. ஏதாகிலும் ஒரு அத்தியாவசிய நேரத்தில் அமைச்சர் பொதுமக்களின் நலன் கருதி தவிர்க்க இயலாத

நிலையில், தன் தலைமையகத்தை விட்டு செல்ல நேரிடுகையில், அதற்கான சான்றளிக்கப்பட்ட கடிதம் துறைச் செயலாளர் மூலம் தலைமைச் செயலாளருக்கு அனுப்பப்பட்டு, அதன் நகல் தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பப்பட வேண்டும். இது போன்ற அலுவல் ரீதியான பயணத்தில் அமைச்சருக்கு அவரது அலுவல் வாகனத்தைத் தலைமைச் செயலாளர் வழங்கி, தங்குதல் மற்றும் வழக்கமான பிற நடைமுறை வசதிகளை செய்துக் கொடுக்கலாம். இருப்பினும், இந்த அலுவல் சார்ந்த சுற்றுப்பயணம் உடனடியாக நிறைவுறுவதாக இருப்பினும் அல்லது தொடர்ந்தாலும் இந்த சுற்றுப் பயணத்தை மேற்கொண்ட எந்த அமைச்சரும் தான் அலுவல் முறையிலான சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கும் பகுதியில் தேர்தல் பிரசாரம் செய்யக் கூடாது. அத்தகைய ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம், தலைமை தேர்தல் அதிகாரி மூலமாகக் கண்காணிக்கும்.

3. தேர்தல் அறிவிக்கப்பட்டு தேர்தல் பணிகள் நடைபெறும் சமயத்தில் தேர்தல் பணியில் ஈடுபட்டிருக்கும் ஒரு குறிப்பிட்ட தொகுதியைச் சேர்ந்த அல்லது மாநில அளவில் உள்ள எந்த அதிகாரியையும் அலுவல் தொடர்பான ஆலோசனைக்கு எந்த ஓர் அமைச்சரும் அழைக்கக் கூடாது. சட்டம் ஒழுங்கு பிரச்சினை அல்லது இயற்கைப் பேரிடர் அல்லது அது போன்ற நெருக்கடியான நிலையில் தன் துறையைச் சார்ந்ததாக இருந்தாலோ அல்லது அது தொடர்பாக முதலமைச்சர் அந்த தொகுதியில் மேற்பார்வையிடவோ, நிவாரண உதவிகள் மேற்கொள்ளவோ வருகை புரிந்தால் அந்த அமைச்சர், முதலமைச்சரும் செல்ல வேண்டிய அவசியம் நேர்ந்தால் இதற்கு விதிவிலக்கு உண்டு.

4. அமைச்சர்கள் தங்களுடைய அலுவலகப் பணி நிமித்தம் அவர்களது அரசு இல்லத்திலிருந்து தங்களுடைய அலுவலகத்திற்கோ அலுவல் பணிகளை மேற்கொள்ளவோ சென்று வருவதற்கு மட்டுமே அலுவலக வாகனத்தைப் பயன்படுத்த வேண்டும். தேர்தல் பணிகளுக்கோ அல்லது அரசியல் நிகழ்வுகளுக்கோ இந்த வாகனத்தை பயன்படுத்தக்கூடாது.

5. எந்த ஒரு மத்திய அல்லது மாநில அமைச்சரோ தன்னுடைய அலுவல் சார்ந்த சுற்றுப் பயணத்துடன் தேர்தல் பணியையும் இணைத்து மேற்கொள்ளக் கூடாது.

6. மாநில அரசு ஆயுதமேந்திய காவலர்கள் பாதுகாப்பிற்கு அனுமதி அளித்திருந்தாலும், எந்த ஒரு தனிப்பட்ட அல்லது அலுவல் சார்ந்த பயணத்திற்கும் எந்த நிறத்திலும் சுழல் விளக்கு பொருந்தப்பட்ட பாதுகாப்பு வாகனம் அல்லது வாகனங்களை உடன் அழைத்துச் செல்லக் கூடாது. அரசு அல்லது தனியார் வாகனங்களை இந்த பயணங்களுக்குப் பயன் படுத்தினாலும் சுழல் விளக்கைப் பொருத்தக்கூடாது.

7. தேர்தல் பணியின் போது, எந்த ஒரு அமைச்சரும் தன் தொகுதிக்கு தனிப்பட்ட சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளும்போது, அவரை யாரேனும் ஒரு அரசு அலுவலர் சந்தித்தால், பணி விதிகளின்படி அந்த அரசு அலுவலர் நடத்தை தவறிய குற்றவாளியாகக் கருதப்படுவார். 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் பகுதி 129(1)-ன் படி, இந்த அரசு அலுவலர் மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**தேர்தல் தேதி அறிவித்ததில் இருந்து தேர்தல் நடைமுறை முடிவுக்கு வரும் வரையில் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் செய்யக் கூடிய மற்றும் செய்யக் கூடாதவை போன்றவற்றிற்கான பிற வழிகாட்டு நெறிமுறைகள்**

தேர்தல் தேதி அறிவித்ததிலிருந்து தேர்தல் நடைமுறை முடிவுக்கு வரும் வரையில் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் செய்யக்கூடிய மற்றும் செய்யக்கூடாதவை போன்றவற்றிற்கான வழிகாட்டு நெறிமுறைகள் குறித்த பட்டியல் தேர்தல் ஆணையத்தால் வரையறுக்கப்பட்டுள்ளது. இது குறித்த தகவல்கள் பரந்த அளவில் விளம்பரம் மூலம் அனைத்து வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கு அந்தந்த மாநில ஆட்சி மொழியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செய்யக் கூடிய மற்றும் செய்யக் கூடாதவை போன்வற்றிற்கான வழிகாட்டு நெறிமுறைகள் குறித்த பட்டியல் விளக்கம் தருவதற்காக மட்டுமே, இது விரிவானதல்ல மற்றும் தேர்தல் குறித்த பிற அறிவுறுத்தலுக்கான மாற்றும் அல்ல என்றும் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கு தெரிவிக்கப்படுகிறது. இவை கண்டிப்பாக பின்பற்ற வேண்டியவை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### செய்யக் கூடியவை

1. தேர்தல் தேதி அறிவிக்கப்படுவதற்கு முன்னரே தொடங்கப்பட்ட திட்டங்களைத் தொடர்ந்து மேற்கொள்ளலாம்.

2. வெள்ளம், வறட்சி, கொள்ளை நோய்கள், மற்றும் பிற இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படும் பகுதிகளில் மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளைத் தொடங்கி மேற்கொள்ளலாம்.

3. தீராத மற்றும் மிக மோசமான நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் நபர்களுக்குத் தகுந்த முன் அனுமதி பெற்று, மருத்துவ உதவிகள் மற்றும் நிதி உதவி வழங்கலாம்.

4. திடல் போன்ற பொது இடங்கள் அனைத்து அரசியல் கட்சிகள் / வேட்பாளர்கள் தேர்தல் கூட்டங்கள் நடத்துவதற்கு எவ்வித சார்புமின்றி வழங்கப்பட வேண்டும். சிறுவிமானங்கள் இறங்கும் தளங்களும் (ஹெலிபேட்) இந்த திடல்களில் அரசியல் கட்சிகள் / வேட்பாளர்கள்களுக்கு எவ்வித சார்புமின்றி வழங்கப்பட வேண்டும்.

5. பிற அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் கொள்கைகள், திட்டங்கள், கடந்த கால சாதனைகள் மற்றும் பணி தொடர்பாக மட்டுமே விமர்சனங்கள் இருக்க வேண்டும்.

6. தேர்தலின்போது தனிமனித உரிமை மற்றும் அவர்களின் அமைதியான வாழ்வுக்கு குந்தகம் விளைவிக்காமலும் இருத்தல் உறுதி செய்யப்பட வேண்டும்.

7. தேர்தல் கூட்டங்கள் நடைபெறும் இடம் நேரம் குறித்து உள்ளூர் காவல் துறை அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டு முன் அனுமதியும் பெறப்பட வேண்டும்.

8. தேர்தல் கூட்டங்கள் நடைபெறும் இடத்தில் கூட்டங்கள் நடத்த ஏதேனும் கட்டுப்பாடு அல்லது தடை விதிக்கப்பட்டிருந்தால் அனைவரும் அதனை மதித்து நடக்க வேண்டும். இதிலிருந்து விலக்கு தேவைப்படின், குறித்த நேரத்தில் விண்ணப்பித்து அனுமதி பெறலாம்.

9. தேர்தல் கூட்டங்களில் ஒலிப்பெருக்கிகள் மற்றும் இதுபோன்ற பிற வசதிகளைப் பயன்படுத்த அனுமதி பெற வேண்டும்.

10. தேர்தல் கூட்டங்களில் அமைதிக்கு ஊறு விளைவிக்கும் அல்லது இடையூறு செய்யும் நபர்களைக் கட்டுப்படுத்த காவல் துறையின் உதவியை நாடலாம்.

11. ஊர்வலம் தொடங்கும், செல்லும் மற்றும் முடியும் நேரம் மற்றும் இடம் குறித்து காவல்துறை அதிகாரிகளுக்கு முன்னரே தெரிவிக்கப்பட்டு முன் அனுமதியும் பெற வேண்டும்.

12. ஊர்வலம் செல்லும் பாதையில் ஏதேனும் தடை உத்தரவு இருப்பின் அந்த உத்தரவிற்கு இணக்கமாக நடந்துகொள்வதோடு, போக்குவரத்துக் கட்டுப்பாடுகளையும் முழுமையாக கடைப்பிடிக்க வேண்டும்.

13. ஊர்வலம் நடைபெறும் பாதையில் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தக்கூடாது.

14. தேர்தல் அமைதியாகவும் நேர்மையாகவும் நடைபெற தேர்தல் அதிகாரிகள் அனைவருக்கும் ஒத்துழைப்பை நல்க வேண்டும்.

15. கட்சித் தொண்டர்கள், பணியாளர்கள் அனைவரும் கட்சியின் சின்னம் அல்லது அடையாள அட்டையை அணிய வேண்டும்.

16. வாக்காளர்களுக்கு வழங்கப்படும் அலுவல் முறையில் அல்லாத அடையாளச் சீட்டுக்களில், அரசியல் கட்சியின் சின்னமோ அல்லது வேட்பாளரின் பெயரோ இருக்கக் கூடாது.

17. தேர்தல் பிரச்சாரம் மற்றும் வாக்குப் பதிவு நடைபெறும் நாளில் பயன்படுத்தப்படும் அனைத்து வாடகை வாகனங்களையும் தேர்தல் நடத்தை விதிகளுக்குக் கீழ்ப்படிந்து பயன்படுத்த வேண்டும்.

18. வாக்காளர்கள், வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் முகவர்களைத் தவிர்த்து, தேர்தல் ஆணையத்திடம் உரிய அனுமதி பெற்ற நபர்கள் மட்டுமே வாக்குச் சாவடிக்குள் நுழையலாம். எந்த முக்கிய அரசியல் பிரமுகர்களுக்கும் (முதலமைச்சர், அமைச்சர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்பட) இந்த நிபந்தனையிலிருந்து விலக்கு கிடையாது.

19. தேர்தல் நடத்தை தொடர்பான யாதொரு புகார் அல்லது பிரச்சனையையும், தேர்தல் ஆணையத்தால் / தேர்தல் அலுவலரால்/ மண்டல/ பகுதி குற்றவியல் நீதிபதியால் அல்லது இந்திய தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட தேர்தல் பார்வையாளரிடம் தெரியப்படுத்தலாம்.

20. தேர்தல் ஆணையம், தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் ஆகியோர் அளிக்கும் வழிகாட்டுதல்கள்/ ஆணைகள்/ அறிவுறுத்தல்கள் ஆகியவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்.

21. குறிப்பிட்ட தொகுதியைச் சேர்ந்த வாக்காளராகவோ, வேட்பாளராகவோ அல்லது வேட்பாளரின் முகவராகவோ இல்லாதவர்கள் தேர்தல் பிரச்சாரம் முடிந்தவுடன் அந்தத் தொகுதியை விட்டு வெளியேற வேண்டும்.

## செய்யக் கூடாதவை

1. அரசு செலவில் மேற்கொள்ளப்படும் கட்சி மற்றும் ஆளுங்கட்சியின் சாதனைகள் தொடர்பான அனைத்து விளம்பரங்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

2. வாக்காளராகவோ அல்லது வேட்பாளராகவோ இல்லாத பட்சத்தில் யாதொரு அமைச்சரும் வாக்குச் சாவடிக்குள்ளோ அல்லது வாக்கு எண்ணிக்கை நிலையத்திற்குள்ளோ நுழையக்கூடாது.

3. தேர்தல் பிரச்சாரம் மற்றும் தேர்தல் பணியுடன் சேர்த்து அலுவலகப் பணியினை மேற்கொள்ளக் கூடாது.

4. பணம் கொடுத்தோ வேறு வகையிலோ வாக்காளர்களைத் தூண்டிவிடக் கூடாது.

5. சாதி/ இன ரீதியான உணர்வுகள் தேர்தலில் எதிரொலிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

6. பல்வேறு சாதிகள், சமூகங்கள் அல்லது மத அல்லது மொழி குழுக்கள் இடையே வேறுபாடுகளை அதிகரிக்கும் வகையிலோ அல்லது வெவ்வேறு தரப்பினரிடையில் வெறுப்பை ஏற்படுத்தும் விதத்திலோ, பதற்றம் ஏற்படுத்தும் வகையிலோ யாதொரு செயலையும் மேற்கொள்ளக் கூடாது.

7. தலைவர்கள் மற்றும் தொண்டர்களின் தனிப்பட்ட வாழ்க்கை அல்லது பொதுவாழ்வில் தொடர்பில்லாத அவர்களின் செயல்களைப் பற்றிய விமர்சனங்கள் மேற்கொள்வது அனுமதிக்கப்பட மாட்டாது.

8. யாதொரு கட்சியினரோ தொண்டரோ உறுதிப்படுத்தப்படாத குற்றச்சாட்டுகள் குறித்தோ, அவற்றைத் திரித்தோ யாரையும் விமர்சனம் செய்யக்கூடாது.

9. கோயில்கள், மசூதிகள், தேவாலயங்கள், குருத்துவாராக்கள் அல்லது பிற வழிபாட்டுத் தலங்களில் தேர்தல் பிரச்சாரம் செய்வது, தேர்தலைப் பற்றி பேசுவது, சுவரொட்டிகள் ஒட்டுவது, பிரச்சாரப் பாடல்களை இசைப்பது போன்ற எந்த செயல்களிலும் ஈடுபடக்கூடாது.

10. ஊழல் செயல்களில் ஈடுபடுதல், கையூட்டு அளித்தல், தேவையற்ற செல்வாக்கைப் பயன்படுத்துதல், வாக்காளர்களை அச்சுறுத்துதல், ஆள்மாறாட்டம் செய்தல், வாக்குச் சாடியிலிருந்து 100 மீட்டர் தொலைவுக்குள் வாக்கு சேகரித்தல், தேர்தல் பிரச்சாரம் முடிந்து, வாக்குப் பதிவு நடைபெறுவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்னர் பிரசாரம் மேற்கொள்ளுதல், வாக்குச் சாவடிக்கு வந்து செல்ல வாகன ஏற்பாடு செய்தல் ஆகிய தேர்தல் குறித்த குற்றச் செயல்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

11. தனிநபர்களின் கருத்தை எதிர்க்கும் வகையில், அவர்களது வீடுகளின் முன்பு போராட்டம் அல்லது மறியல் செய்தல், ஆர்ப்பாட்டம் செய்தல் போன்றவை தடை செய்யப்பட்டுள்ளன.

12. எந்த தனிநபரின் நிலம், கட்டடம், சுற்றுச்சுவர், வாகனம் போன்றவற்றில் சுவரொட்டிகள் ஒட்டவோ, பதாகைகளை வைக்கவோ, தேர்தல் முழக்கங்களை எழுதவோ அல்லது கொடிகளைக் கட்டவோ உள்ளூர் சட்டப்படி, உரிமையாளர்களின் முன் அனுமதியைப் பெற வேண்டும். பெறப்பட்ட முன் அனுமதியை மாவட்ட தேர்தல் அதிகாரியிடம் காண்பித்து, அதை அவரிடம் பதிவு செய்து வைக்க வேண்டும்.

13. பிற அரசியல் கட்சிகளின் பொதுக் கூட்டங்களிலோ அல்லது ஊர்வலங்களிலோ எந்த ஒரு இடையூறும் ஏற்படுத்தக்கூடாது.

14. வேறு ஒரு கட்சி, கூட்டம் நடத்தும் இடத்தில் ஊர்வலம் நடத்த அனுமதி கிடையாது.

15. ஊர்வலம் செல்பவர்கள் தங்களுடன் கொண்டு செல்லும் பொருட்கள் ஆயுதமாக பயன்படுத்தப்படும் வகையில் இருந்தால், அவற்றை எடுத்துச் செல்லக்கூடாது.

16. பிற அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் சுவரொட்டிகளை நீக்குவதோ சேதப்படுத்துவதோ கூடாது.

17. வாக்குப்பதிவு நடைபெறும் நாளில், வாக்குச் சாடிக்கு அருகிலோ அல்லது வாக்காளர்களுக்கு அடையாளச் சீட்டுகள் வழங்கும் இடத்திலோ சுவரொட்டிகள், கொடிகள், சின்னங்கள் அல்லது பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தும் வேறு எந்த ஒரு பொருளையும் வைக்கக்கூடாது.

18. ஒலிபெருக்கியை காலை 6.00 மணிக்கு முன்னரும் இரவு 10.00 மணிக்கு பின்னரும் ஓர் இடத்தில் வைத்து பயன்படுத்ததவோ அல்லது நகரும் வாகனங்களில் வைத்து பயன்படுத்துவதோ தடை செய்யப்பட்டுள்ளது. மேலும், ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் எழுத்துமூலமாக முன்அனுமதி பெற வேண்டும்.

19. சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் எழுத்துமூலமாக முன்அனுமதி பெறாமல் பொதுகூட்டங்கள் மற்றும் ஊர்வலங்களில் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தக் கூடாது. இரவு 10.00 மணிக்கு மேல் பொதுக்கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள் நடத்த பொதுவான தடை உள்ளது. மேலும், ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்த உள்ளூர் சட்டங்கள், பாதுகாப்பு ஏற்பாடுகள், வானிலை நிலவரம், திருவிழா காலங்கள், தேர்வுகள் போன்றவையும் கருத்தில் கொள்ளப்படும்.

20. தேர்தல் நேரத்தில் மது வகைகளை வழங்குதல் கூடாது.

21. பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ள நபர், வாக்குப் பதிவு நாளன்று தன்னுடைய பாதுகாப்பு காவலருடன் வாக்குச் சாவடிக்கு 100 மீட்டருக்குள்தான் செல்லக் கூடாது. மேலும், இந்த நபர் தன்னுடைய பாதுகாப்பு காவலருடன் தொகுதிக்குள் வலம் வருதல் கூடாது. பாதுகாப்பு பெறப்பட்டவர் வாக்கு செலுத்துவதற்கு மட்டுமே பாதுகாவலருடன் வரலாம்.

22. பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ள, அரசால் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கும் நபர் அல்லது தனியார் மெய்க்காவலர் வைத்திருப்போரை தேர்தல் முகவராகவோ, வாக்குச் சாவடி முகவராவோ அல்லது வாக்கு எண்ணிக்கை முகவராகவோ நியமிக்கப்படக் கூடாது.

**குறிப்பு :**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள செய்யக் கூடிய மற்றும் செய்யக் கூடாதவை போன்றவற்றிற்கான வழிகாட்டு நெறிமுறைகள் குறித்த பட்டியல் விளக்கம் தருவதற்காக மட்டுமே, இது விரிவானதல்ல, மற்றும் தேர்தல் குறித்த பிற அறிவுறுத்தலுக்கான மாற்று அல்ல என்றும் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கு தெரிவித்து, இதை கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் ஏதேனும் சந்தேகங்கள் இருப்பின், இந்திய தேர்தல் ஆணையம்/மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி ஆகியோரை அணுகி விளக்கம் பெறலாம். தயவு கூர்ந்து இக்கடிதத்திற்கு ஒப்புகையை அனுப்பவும்.

உத்தரவு தொடர் எண்.**6**

**மத்திய அரசின் அமைச்சரவை செயலாளர், அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமை தேர்தல் அலுவலர்கள் ஆகியோருக்குத் தேர்தல் ஆணையம் எழுதிய 05.03.2009-ம் நாளிட்ட, 437/6/2009-CC&BE என்ற எண்ணிட்ட கடிதம்.**

பொருள் : பொதுத் தேர்தல்கள் – தேர்தல் நடத்தை விதிகளைச் செயல்படுத்துதல்.

அய்யா,

பொதுத் தேர்தல் நேரத்தில், தேர்தல் நடத்தை விதிகளைச் செயல்படுத்துவதற்குத் தேர்தல் ஆணையம் பல்வேறு சூழ்நிலைகளை ஆராய்ந்தும், மத்திய மற்றும் மாநில அரசின் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துதல், ஊரக வளர்ச்சி திட்டங்கள் போன்றவற்றைச் செயல்படுத்துவது குறித்த கீழ்க்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளைத் தெரிவிக்குமாறு நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

1. தேர்தல் நடத்தை விதிமுறைகள் அனைத்தும் தேர்தல் ஆணையத்தால் மட்டுமே வழங்கப்பட வேண்டும். மத்திய அமைச்சக செயலகம் அல்லது வேறு அரசு நிறுவனங்கள் அனைத்தும், தேர்தல் ஆணையத்தின் நடத்தை விதிகளை வலியுறுத்தவேண்டும் என்றும், சம்பந்தப்பட்டவர்களுக்கு அந்த விதிகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகிறது.

2. நிதிக் கொள்கைகள் தொடர்பான முடிவுகளை இந்திய ரிசர்வ் வங்கி மேற்கொள்ள எவ்வித தடையுமில்லை.

3. தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறைக்கு வந்த பின்னர், கொள்கை முடிவுகளை அறிவித்தல், நிதி குறித்த செயல்பாடுகள், வரி விதிப்பு பற்றியவை மற்றும் நிவாரண நிதி வழங்குதல் போன்றவை தொடர்பாக ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ள மத்திய நிதி அமைச்சகம் தேர்தல் ஆணையத்திடம் முன் அனுமதி பெற வேண்டும். இதைப் போன்றே

பிற அமைச்சகங்கள் மற்றும் துறைகள் நிவாரணம் மற்றும் சலுகைகள் வழங்குவது தொடர்பாக தேர்தல் ஆணையத்திடம் முன்அனுமதி பெற வேண்டும்.

4. தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறைக்கு வந்த பின்னர், ஏற்கனவே தொடங்கப்பட்ட கீழ்க் கண்ட பணிகளை அரசு, தேர்தல் ஆணையத்தின் அனுமதி பெறாமல் தொடரலாம்.

அ. நிதி ஒப்பளிப்பு முழுவதும் வழங்கப்பட்டு ஏற்கனவே தொடங்கப்பட்ட திட்டங்கள்.

ஆ. தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறைக்கு வரும் முன்னரே பயனாளிகள் கண்டறியப்பட்ட பயனாளிகள் சார்ந்த திட்டங்கள்.

இ. மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டத்தின் வரம்புக்குள் வரும் பதிவு செய்யப்பட்ட பயனாளிகளை அத்திட்டச் செயல்பாடுகளின் கீழ் கொண்டுவரலாம். ஏற்கனவே ஆணை பிறப்பிக்கப்பட்ட, சட்ட வரம்பிற்குட்பட்ட, ஏற்கனவே ஏற்பளிக்கப்பட்டு, ஒப்புதளிக்கப்பட்ட புதிய திட்டங்கள் மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் தொடங்கப்படலாம்.

5. ஒரு திட்டத்தில் ஒரு பகுதி நிறைவுற்று, நடைமுறை செயல்பாடுகளைக் கடைப்பிடித்து, நிதித்துறையின் இசைவினையும் பெற்றிருந்தால், அப்பணிக்கான நிதியை வழங்குவதற்கு எவ்வித தடையுமில்லை.

6. தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு, நிபந்தனைகள் பின்பற்றப்படும் கீழ்க்கண்ட பணிகள் (பயனாளிகள் அல்லது பணி தொடர்பானவை) தேர்தல் ஆணையத்திற்குத் தெரிவித்த பின் மேற்கொள்ளப்படலாம்.

அ. முழுமையாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டங்கள்.

ஆ. நிர்வாக, தொழில்நுட்ப மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்ட திட்டங்கள்.

இ. ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட்டு மற்றும் அனுமதி அளிக்கப்பட்ட திட்டங்கள்.

ஈ. குறித்த நேரத்தில் தொடங்கி நிறைவு செய்யப்படாமல், ஒப்பந்ததாரருக்கு தண்டத்தொகை விதிக்கப்பட்ட திட்டங்கள்.

உ. மேற்கண்ட நிபந்தனைகளை நிறைவு செய்யாத நேர்வுகளில் தேர்தல் ஆணையத்தின் ஒப்புதலை முன்கூட்டியே பெற வேண்டும்.

7. உலகளாவிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் அனுதிக்கப்பட்ட திட்டங்கள்.

8. உலகளாவிய ஒப்பந்தப் புள்ளிகளைக் தவிர்த்த பிற ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டும், மதிப்பீடு செய்யப்பட்டும் ஆனால் நிறைவு செய்யப்படாமல் இருப்பின் அவை தேர்தல் ஆணையத்தின் முன் அனுமதி பெற்றே நிறைவு செய்யப்பட வேண்டும். ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி கோரப்படாமல் இருப்பின், அவை தேர்தல் ஆணையத்தின் முன் அனுமதி பெற்றே கோரப்பட வேண்டும்.

9. மனிதனால் அல்லது இயற்கையால் ஏற்படும் சீற்றங்களுக்கு உண்டான பணிகளில் தேர்தல் ஆணையம் மனிதாபிமான அணுகுமுறையைக் கடைப்பிடிக்கும்.

அ. பேரிடர்களால் பாதிக்கப்பட்டோருக்கு கருணைத் தொகை, நிவாரணத் தொகை ஆகியவற்றை தேர்தல் ஆணையத்திடம் தெரிவித்துவிட்டு, நேரடியாக வழங்கலாம். ஆனால், அளிக்கப்படும் தொகை தேர்தல் ஆணையத்தின் முன் அனுமதியில்லாமல் நிர்ணயிக்கப்பட்டதை விட வேறுபட்டதாக இருக்கக் கூடாது.

ஆ. நோயாளிகளுக்கு (பயனாளிகள்) மருத்துவச் செலவுகளுக்கான பணம் அவர்களிடம் வழங்குவதற்கு மாற்றாக, முதலமைச்சர் / பிரதமர் நிவாரண நிதியிலிருந்து மருத்துவமனைக்கு நேரடியாகச் செலுத்தப்பட வேண்டும். இதைத் தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டிய அவசியம் இல்லை.

இ. பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்களின் துன்பங்களை நேரடியாகவும் முற்றிலும் போக்கிட அவசர கால நிவாரணப் பணிகளைத் தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின் கீழும் மேற்கொள்ளலாம்.

ஈ. பேரிடரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை விரைந்து மேற்கொள்ள ஏரிகள் மற்றும் கால்வாய்களைச் சரி செய்தல் போன்றவை தேவை என்றால், தேர்தல் ஆணையத்தின் அனுமதி பெற்று அப்பணிகளை மேற்கொள்ளலாம்.

உ. தேர்தல் ஆணையத்தின் முன் அனுமதியைப் பெறாமல் எந்த ஒரு பகுதியையும் வறட்சி அல்லது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கக் கூடாது. ஏற்கனவே பேரிடரால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பகுதியை விரிவுபடுத்த வேண்டுமானால் தேர்தல் ஆணையத்தின் முன் அனுமதியைப் பெற வேண்டும்.

ஊ. பிரதம மந்திரி மற்றும் முதலமைச்சர் ஆகியோரின் நிவாரண உதவிகளை ஒரு குறிப்பிட்ட குழுக்களுக்கு வழங்க தேர்தல் ஆணையத்தின் முன் அனுமதியைப் வேண்டும்.

10. கீழ்க்கண்ட நடவடிக்கைகளுக்கு தேர்தல் ஆணையத்தின் முன் அனுமதியைப் பெற வேண்டும்.

அ. விருப்புரிமை நிதியில் மேற்கொள்ளப்பட்டும் எந்தப் புதிய திட்டங்களும் எத்தகைய தன்மையாயினும் தொடங்கப்படக் கூடாது. தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறைக்கு வரும் முன்னர் நிதிநிலை அறிக்கையில் நிதி ஒதுக்கப்பட்டும், கண்டறியப்படாத திட்டங்களும் விருப்புரிமை நிதியில் அடங்கும்.

ஆ. நலிந்த அரசு நிறுவனங்களை மீட்க கருத்துரு அனுப்புவதோ, பிற நிறுவனங்களை அரசு கையகப்படுத்துவதோ (அல்லது இது போன்ற பொருண்மைகளில் கொள்கை முடிவுகள்) மேற்கொள்வதோ கூடாது.

இ. தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் உள்ள காலத்தில் மது விற்பனைக்கான ஆண்டு ஏல தேதி அமைந்தாலும் அதற்கான புதிய ஏலங்களை விடக் கூடாது. தேவைப்பட்டால் சட்ட விதிகளுக்குட்பட்டு இடைக்கால ஏற்பாடுகளைச் அரசு மேற்கொள்ளலாம்.

ஈ. ஏற்கனவே நடைமுறையில் உள்ள திட்டங்கள் செயல்படும் இடத்தினை விரிவுபடுத்தக்கூடாது.

உ. தனிநபருக்கு சொந்தமான அல்லது வேறு ஒரு குழுமத்துக்குச் சொந்தமான எந்த ஒரு நிறுவனத்திற்கும் நிலத்தினை அரசு ஒதுக்கீடு செய்யக் கூடாது.

ஊ. அரசு ஒரு தரப்பினராக இருக்கிறவிடத்து, புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் அல்லது ஒப்பந்தத்தில் கையொப்பமிடுதல் போன்றவற்றிற்கு, தேர்தல் ஆணையத்தின் முன் அனுமதி அவசியமாகும்.

11. மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம், மாநில அரசுப் பணியாளர் தேர்வாணயம் அல்லது பணியாளர் தேர்வாணையம் அல்லது சட்டப்படியான பணியமர்த்தும் அமைப்புகளின் மூலம் வழக்கமாக மேற்கொள்ளப்படும் நியமனம் பணியமர்வுகள் அல்லது பதவி உயர்வுகள் ஆகியவற்றைத் தொடரலாம். சட்டப்படியான அமைப்பில்லாத அமைப்புகளால் மேற்கொள்ளப்படும் பணியமர்வுகளுக்குத் தேர்தல் ஆணையத்தின் முன் அனுமதி வேண்டும்.

**12.** எவ்விதப் பணியை (எந்தவிதமான மீட்புப் பணி உட்பட)அல்லது வளர்ச்சிப் பணியைத் தொடங்கும்போது ஏதேனும் அரசியல் சார்ந்த நிருவாகியை ஈடுபடுத்தி வழக்கமான விழா எதுவும் நடத்தப்படக் கூடாது. அலுவல் சார்ந்த நிருவாகிகள் முன்னிலையில் நடைபெறுகிற வழக்கமான விழாக்கள் மற்றும் விளம்பரங்களைக் கூட குறைந்த அளவிலேயே வைத்துக் கொள்வது ஒரு நல்ல தேர்தல் நடைமுறையாக அமையும்.

**13.** பணிகளை மேற்கொள்ளும் போது அல்லது பன்னாட்டு அளவில் பொறுப்புகளை நிநிறவேற்றுகிற வகையில் அல்லது நிகழ்சிசிகளை நடத்துகிற போது ஆணையத்தின் முன் இசைவு பெறப்பட வேண்டும்.

**14.** இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு இந்திய அரசின் அனைத்து கடிதப் போக்குவரத்துகளும் அமைச்சரவை செயலகத்தின் வழியாகவே அனுப்பப்பட வேண்டும். மாநில அரசுகளைப் பொறுத்தவரையில், மேலே சொன்னவை அனைத்தும் தொடர்புடைய மாநிலத்தின் தலைமைத் தேர்தல் அதிகாரி முலமாகவே இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

தொடர்புடைய அனைத்துஅதிகாரிகளின் கவனத்திற்கு இவை கொண்டு வரப்படலாம்.

## உத்தரவு தொடர் எண்.7

புது டெல்லி, அமைச்சரவைக் குழுக் செயலகத்தின் இணைச் செயலர் திரு. எஸ். பி. அக்னிஹோத்ரிக்கு அனுப்பப்பட்ட **09.03.2009** ம் நாளிட்ட**437/6**/INST /**2009–**CC&BE ஆம் எண்ணிட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் கடிதம்.

**பொருள்:** அரசின் பல்வேறு திட்டங்ககள்/திட்டப்பணிகள் முதலிய வற்றிற்கு மாதிரித் தேர்தல் விதிகளின் பயன்பாடு.

துணைதேர்தல் ஆணையர் திரு. ஜெ.பி. பிரகாஷ் அவர்களுக்கு அனுப்பப்பட்ட **04.03.2009–**ம் நாளிட்ட JS(SBA)/ **2009/04**ஆம் எண்ணிட்ட உங்களுடைய நேர்முகக் கடிதத்தைக் குறிப்பிடும்படியம் உங்களுடைய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் திட்டங்களின் கீழ் ஏதேனும் கூடுதல் பணியைச் செய்வதற்கு ஆணையத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும் என்று ஆணையம் தீர்மானித்தள்ளது என்பதைத் தெரிவிக்கும் படியும் எனக்கு உத்திரவிடப்பட்டுள்ளது:–

1. விரைவுபடுத்தப் பட்ட பாசன பயன்கள் திட்டம்(AIBP) நீர் ஆதாரங்கள் அமைச்சகம்.
2. தேசிய சமூக உதவித் திட்டம் (NSAP) ஊரக வளர்ச்சி அமைச்சகம்.
3. ஜவகர்லால் தேசிய நகரப் பகுதிபுனரமைப்புத் திட்டம்(JNNURM) – (நகர்ப் பகுதி போக்குவரத்து

   ஏற்பாட்டிற்காக பேருந்துகள் கொள்முதல் செய்வதற்கான திட்டம் உட்பட– நகர்ப்பகுதி வளர்ச்சி அமைச்சகம்)
4. விரைவுபடுத்தப்பட்ட மின்சக்தி வளர்சி சீர்திருத்தத் திட்டம் (APDRP) – மின்சக்தி அமைச்சகம்.
5. இந்திரா வீட்டுவசதித்திட்டம் யோஜனா(IAY) –. ஊரக வளர்ச்சி அமைச்சகம்
6. பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டம் (SGSY) – ஊரக வளர்ச்சி அமைச்சகம்.
7. முழுமையான கிராம வேலைவாய்ப்புத்திட்டம் ஊரக வளர்ச்சி அமைச்சகம்
8. மந்திரி ஊரகச் சாலைத்திட்டம் சதக் யோஜனா(PMGSY) – ஊரக வளர்ச்சி அமைச்சகம்.
9. தொழில்நுட்ப மேம்பாடு நிதித் திட்டம்(TUFS) – துணிநூல் அமைச்சகம் (ஜவுளித்துறை)
10. தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டம் (NREGA) – ஊரக வளர்ச்சி அமைச்சம்.
11. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வறுமை தணிப்பு கட்டுப்படியாகிற செலவில் அமைச்சகம் செயல்படுத்தவுள்ள வீட்டுவசதி இக்கடிதம் பெற்றமைக்கு ஒப்புதல் தெரிவிக்கவும்.

இதைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை அனுப்பவும்

## உத்தரவு தொடர் எண். 8

இந்திய அரசின் அமைச்சரவைச் செயலகர், அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் அலுவலர்களுக்கு அனுப்பப்பட்ட **19.03.2009** ஆம் நாளிட்ட **437/6**/INST/**2008**/CC BE – ஆம் எண்ணிட்ட இந்தியத் தேர்தல் ஆணைத்தின் கடிதம் .

பொருள் : அதிகார மன்றங்கள், கழகங்கள், மற்றும் குழுக்கள் முதலியவற்றுக்கு மாதிரி தேர்தல் நடத்தை விதிகளின் பயன்பாடு.

காமன்வெல்த் நாடுகளின் விளையாட்டு ஏற்பாட்டு குழு டெல்லி பெருநகர மேம்பாட்டு ஆணையம், மின்சக்தி ஒழுங்கு முறை ஆணையங்கள் நீர் வாரியங்கள், போக்குவரத்துக் கழகங்கள், ஏனைய பிற வளர்ச்சி அதிகார மன்றங்கள் போன்ற மத்திய அரசு அல்லது ஏதேனும் மாநில அரசுகளால் முழுவதுமாகவோ பகுதியாகவோ நிதியளிக்கப்படும் அனைத்து அமைப்புகள்/ குழுக்கள், கழகங்கள்/ ஆணையங்கள் முதலியவற்றுக்கு மாதிரி தேர்தல் நடத்தை விதிகளின் விதித்துறைகள் பயன்படுத்தப்படும் என விளக்குவதற்கு தேர்தல் ஆணையம் தீர்மானித்துள்ளது என்பதைக் குறிப்பிடுமாறு நான் உத்தரவிடப்பட்டுள்ளேன். அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களால் அவர்களுடைய சாதனைகளைசிறப்புற எடுத்துக்காட்டி குறிப்பிடும் அல்லது புதிய மானியங்கள், கட்டணங்கள் அல்லது திட்டங்களை அறிவிக்கும் அவர்களுடைய விளம்பரங்களைவெறியிடுதல் உட்பட அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்கான மாதிரி தேர்தல் நடத்தை விதிகளில் அடங்கியுள்ள விதித்தறைகளுக்கு முரணான எவ்விதமான செயல்பாடும், மாதிரித் தேர்தல் நடத்தை விதிகளின் விதித்துறைகளுக்குப் பொருந்தும் என்பதோடு கவனத்துக்குரியதாக அமைவதோடு அவற்றினை மீறுவதற்கு நிகரானதாகும்.

## உத்தரவு தொடர் எண். 9

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்தியஅரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட **25.3.2009–**ஆம் எண்ணிட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் கடிதம்.

பொருள் : 2009–ஆம் ஆண்டு மக்களவைக்கான பொதுத் தேர்தல் மாதிரித் தேர்தல் நடத்தை விதிகளின் பயன்பாடு விளக்கம் தொடர்பாக.

தலைமைத் தேர்தல் அலுவலர்கள் அவர்களுடைய மாநிலங்களில் பல்வேறு துறைகளிலிருந்து மாதிரித் தேர்தல் நடத்தை விதிகளின் பயன்பாடு குறித்து விளக்கம் பெறுவதற்காக, எந்தவொரு கடிதங்களை அவர்கள் பெற்றாலும், தேர்தல் ஆணையத்தின் வலைத் தளத்தில் ஏற்கனவே கிடைக்கப்பெறும் தேர்தல் ஆணையத்தின் பல்வேறு நிலையான உத்தரவுகள்/ வழிக்காட்டுதல்களைக் கருத்திற்கொண்டு அவற்றை பரிசீலிக்காமல் அப்படியே தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பி வருகிற போக்கு, தலைமை தேர்தல் அதிகாரிகளிடையே வளர்ந்து வருவதை தேர்தல் ஆணையம் கவனத்தில் கொண்டுள்ளது.

இதன் விளைவாக எண்ணற்ற கடிதங்கள் குவிவதால், தேர்தல் ஆணையத்தின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் இக் ககதங்கள் குறித்து நடிவடிக்கை எடுக்கிற பணிகளில் முழுவதும் ஈடுபட்டுள்ள சூழலில், தேர்தல் நடத்துவதில் மாநில அரசுத் துறைகளின் அன்றாடச் செயல்பாடுகளில், மாவட்ட நிர்வாகத்தின் கீழ் வரும் மிகச் சிறிய வட்டத்தின் செயல்பாடுகளில் கூட ஆணையம் ஈடுபடுகிற வகையில் பிற முக்கியமான பிரச்சினைகளைக் கையாள்வதில் நேரமில்லாத நிலை ஏற்படுகிறது

தேர்தல் ஆணையத்தின் உத்தரவுகள் அனைத்தும் நிடைக்கப்பெறும் இந்த நிலையில் எவ்விதத்திலும் பரிசீலித்தப் பார்க்காது, சிந்தையைச் செலுத்தாமல் அனைத்துப் கடிதங்களையும் ஆணையத்தின் உத்தரவிற்காக, அனுப்பி வருகிற தலைமைத் தேர்தல் அதிகாரிகள் தரப்பில் வளர்ந்து வரும் மேற்சொன்ன போக்கினை கவனமுடன் கருத்திற் கொண்ட பின்னர், அத்தகைய நேர்வுகள் தொடட்பாக தேர்தல் ஆணையத்தின் உத்தரவுகள் திட்டவட்டமாக இருக்குமிடங்களில் அத்தகைய நேர்வுகள் குறித்து நடிவடிக்கை எடுப்பதற்காக, எந்தவொரு கடிதத்தையும் இது முதற்கொண்டு தலைமைத் தேர்தல் அதிகாரிகள் ஆணையத்திற்கு அனுப்பக் கூடாது என்றும், சந்தேகம் இருக்குமிடங்களிலும், ஆணையத்தின் தற்போதைய உத்தரவுகளின், இடம்பெறாத பிரசினைகள் குறித்த கடிதங்களை மட்டுமே அவர்களுடைய குறிப்பிட்ட கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகளுடன் தலைமை தேர்தல் அதிகாரிகள், தேர்தல் ஆணையத்திற்கு அனுப்ப வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இதைப் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகை அளிக்கவும். ஏற்புரைச் செய்யவும் மற்றும் இணக்கத்தை உறுதிப்படுத்தவும்.

## உத்தரவு தொடர் எண்.10

அமைச்சரவைக் குழுச் செயலர், அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடிஆட்சிப் பகுதிகளின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட **01.04.2009**–ஆம் நாளிட்ட **437** / **6**/ INST–**2008** / CC & BE ஆம் எண்ணிட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் கடிதம்.

**பொருள்:** அரசு அலுவலகங்கள்/ வளாகங்களில் தேசியத் தலைவர்கள் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த தலைவர்களின் புகைப்படங்கள் / நாட்காட்டிகள், முதலியவற்றினை காட்சிப்படுத்துதல்.

மேலே உள்ள பொருள் பற்றி **28.03.2009** – ஆம் நாளிட்ட இதே எண்ணுள்ள ஆணையத்தின் கடிதம் பற்றி றிவனத்தை ஈர்ப்பதற்கும் வாக்காளர்களிலும் மிகுந்த செல்வாக்கைப் பெற்றுவர்களாகவும் இன்னமும் பொது வாழ்வில் தீவிரப் பங்காற்றக்கூடியவர்களாகவும் அரசியல் நடப்பு பொதுத் தேர்தல்களில் போட்டியிடக் கூடியவர்களாவும் உள்ள நிர்வாகிகள் புகைப்படங்கள், மற்றும் உருவங்கள் அரசு கட்டடங்கள், மற்றும் வளாகங்களில் காட்சிப்படுத்தக் கூடாது. ஏனெனில், அது பிற அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் அரசியல் செயற்பாடுகளில் இடையூறு ஏற்படுத்தும் என்பது தேர்தல் ஆணையத்தின் நோக்கம் என்பதைத் தெரிவிக்கவும் நான் உத்தரவிடப் பட்டுள்ளேன்.

பெறப்பட்டிருக்கின்ற தரவுகளின் அடிப்படையில் மேலேயுள்ள உத்தரவை ஆணையம் வெளியிட்டுள்ளது. இதற்கிடையில் கடந்த காலத்தை சேர்ந்த சில தேசியத் தலைவர்கள், கவிஞர்கள் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த தலைவர்களின் உருவங்களின் நீக்கம் பற்றி குறிப்பிட்ட சந்தேகங்கள் எழுப்பப்பட்டு விளக்கங்களும் கோரப்பட்டுள்ளன. இதைப் பொறுத்தவரையில், மேலே குறிப்பிடப்பட்டுள்ள உள்ளார்ந்த நோக்கமுள்ள ஆணையானது செயல்படுத்தப்படும் போது முழுவது பரிந்துகொள்ளப்பட வேண்டும் என்று ஆணையம் குறிப்பிட விரும்புகிறது. பிரதம மந்திரி, அமைச்சர்கள் முதமைச்சர்கள், மற்றும் பிற அரசியல் நிருவாகிகளின் புகைப்படங்கள் காட்சிப்படுத்தலாகாது எனும், அதே வேளையில் கடந்த காலத்தைச் சேர்ந்த தேசியத் தலைவர்கள், கவிஞர்கள் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்றுத் தலைவர்கள், குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநர்களைப் பொறுத்தவரையில் இந்த உத்தரவைப் பயன்படுத்தலாகாது. மேலும், ஏதேனும் புகைப்படம் அல்லது உருவங்களின் நீக்கம் குறித்து ஏதேனும் சந்தேகம் இருந்தால் இவ்விவகாரத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் தொடர்புடைய மாநிலம் / மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியின் தலைமைத் தேர்தல் அதிகாரியின் ஆலோசனையைக் கோரிப் பெறலாம் என்று .ளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

## உத்தரவு தொடர் எண்.11

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட 26.04.2009—ஆம் நாளிட்ட 437/ 6/ INST—2009—ஆம் எண்ணிட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் கடிதம்.

பொருள்: பொதுத் தேர்தல் 2009 – மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் – சம்பந்தமாக.

வாக்குப்பதிவுநடைபெற்று முடிந்த அனைத்து மாநிலங்களிலும், ஏதேனும் மறுவாக்குப்பதிவு நிலுவையிலுள்ள மாவட்டங்கள் தவிர பிறவற்றில் பின்வரும் செயற்பாடுகளை அனுமதிப்பதற்கு ஆணையம் தீர்மானித்துள்ளது என்பதைத் தெரிவிப்பதற்கு நான் உத்தரவிடப்பட்டுள்ளேன்.

1. மாவட்டங்களுக்கு அமைச்சர்கள் மேற்கொள்கிற சுற்றுப்பயணங்கள் மற்றும் அத்தகையச் சுற்றுப் பயணங்களின் போது அலுவலர்கள் உடனிருத்தல்
2. களத்தில் நடைபெற்றுவரும் திட்டங்களை ஆய்வு செய்தல் மற்றும் செயற்படுத்துதல்
3. தேர்தல் பணியிலுள்ள அலுவலர்களைத் தவிர மற்ற கள அலுவலர்களுடன் சேர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளுதல்
4. தேர்தல் பணியிலுள்ள அலுவலர்கள் தவிர ஏனைய அலுவலர்களுடன் தலைமையகங்களில் ஆய்வுக் கூட்டங்களை நடத்துதல்.
5. ஒப்பந்தப் புள்ளிகளைக் கோருதல், ஒப்பந்தப் புள்ளிகளை மதிப்பிடுதல், ஒப்பந்தப் புள்ளிகளை இறுதியாக்குதல் மற்றும் ஒப்பந்தங்களை (மாநிலச் சட்டமன்றத்திற்காக பொதுத் தேர்தல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மாநிலங்கள் தவிர) வழங்குதல்

தொடர்புடைய அனைத்து தரப்பினரின் கவனத்திற்கும் இது கொண்டுவரப்படலாம்.

## உத்தரவு தொடர் எண்.12

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்தியஅரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட 05.04.2011–ஆம் நாளிட்ட 437/ 6/ INST–2011–CC & BE –ஆம் எண்ணிட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் கடிதம்.

**பொருள்:** நகராட்சிகள் கூட்டம் நடத்துதல் தொடர்பாக அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் வழிநடத்துதலுக்கான மாதிரித் தேர்தல் நடத்தை விதிகள் – சம்பந்தமாக.

ஐயா,

மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் செயற்பாட்டில் உள்ள காலத்தின் போது குல்டி நகராட்சிமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறக் கூடாது என்று அறிவிக்கக் கோரி, கல்கத்தா உயர்நீதிமன்றத்தில் செயல்பட்டது என்று நீதிப் பேராணை மனு எண். 4766 / 2011 (ஸ்ரீ சுஜித் ராய் எதிர் மேற்கு வங்க அரசு மற்றும் ஏனையோர்) தெரிவிப்பதற்கு நான் உத்தரவிடப்பட்டுள்ளேன்.

இவ்வழக்கு குறித்த வினா தேர்தல் ஆணையத்தால் தீர்மானிக்கப்படுவதற்குரியது என்ற கருத்துரையுடன் மாண்பமை உயர்நீதிமன்றம் 11.03.2011 – ஆம் நாளிட்ட தனது ஆணையில் இம்மனுவை தள்ளுபடி செய்து விட்டது. மேலும், இந்த ஆணையின் நகலை தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பவும் உத்தரவிட்டுள்ளது அதனடிப்படையில், மாண்பமை உயர்நீதிமன்றத்தின் ஆணையின் ஒரு நகல் தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையத்தால் இவ்விகாரம் பரிசீலிக்கப்பட்டுள்ளது தேர்தல் நடைபெற்று முடிவடைகிற வரையில் எவ்வித புதிய கொள்கை முடிவுகள் மற்றும் அறிவிப்புகள்அத்தகைய கூட்டங்களில் மேற்கொள்ளப்படக் கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு, நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் மற்றும் பிற உள்ளாட்சி மன்றங்கள் தவிர்க்க முடியாத சட்டரீதியான கூட்டங்களை நடத்துவதற்கும் வழக்கமான அன்றாட நிருவாக விவகாரங்கள், மற்றும் அவசரகால விவகாரங்கள் குறித்து இத்தகைய கூட்டங்களில் முடிவுகள் எடுக்கப்படலாம் என்பதற்கும் தன்னுடைய தரப்பில் எவ்வித மறுப்புமில்லை என தேர்தல் ஆணையம் தீர்மானித்துள்ளது.

## உத்தரவு தொடர் எண்.13

இந்திய அரசின் அமைச்சரவை குழுச் செயலர், மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமைச் செயலர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட **11.10.2011 –**ஆம் நாளிட்ட **437 / 6/ 2011** /CC & BE **–**ஆம் எண்ணிட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் கடிதம்.

**பொருள்:** மக்களவை / மாநில சட்ட மன்றங்கள் / அவைகளுக்கான பொதுத் தேர்தல் / இடைத்தேர்தல்கள் மாதிரி தேர்தல் நடத்தை விதிகளின் செயற்பாட்டுக் காலம் – சம்பந்தமாக.

தேர்தல் ஆணையம் கீழ்க்கண்டவாறு தீர்மானித்துள்ளது எனறு தெரிவிக்குமாறு நான் உத்தரவிடப்பட்டுள்ளேன்.

I. மக்களவை / மாநில சட்டமன்ற பொதுத் தேர்தல்களைப் பொறுத்த வரையில் தேர்தல் அறிவிக்கைகளில் குறிப்பிட்டுள்ளவாறு தேர்தல் முடிந்திருக்க வேண்டிய நாளைக் (நாட்களை) கருத்திற் கொள்ளாது தொடர்புடைய புதிய அவை (அவைகளை) ஏற்படுத்தி முறையான அரசமைப்பு அறிவிக்கை வெளியான உடனேயே தேர்தல் ஆணையத்தால் தேர்தல் கால அட்டவணை அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து செயநல் உள்ள மாதிரி தேர்தல் நடத்தை விதிகளின் செயல்பாடு இனிமேல் அற்றுப்போகும்.

II. மக்களவை / மாநில சட்டமன்றங்களின் பொறுத்த இடைத் தேர்தல்களைப் பொறுத்த வரையில் தொடர்புடைய தேர்தல் நடத்தும் அதிகராரி இடைத் தேர்தல் முடிவுகளை முறையாக அறிவித்த உடனேயே மாதிரித் தேர்தல் நடத்தை விதிகளின் செயல்பாடு சுற்றுப்போகும்.

III. மாநில சட்ட மேலவைகளுக்கான அனைத்துத் தேர்தல்களைப் பொறுத்த வரையில், மாதிரித் தேர்தல் நடத்தை விதிகள் பயன்பாட்டில் இருக்குமிடங்களில், தொடர்புடைய தேர்தல் நடத்தும் அதிகாரியால் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட உடனேயே மாதிரி தேர்தல் நடத்தை விதிகளின் செயல்பாடு அற்றுப்போகும்

தொடர்புடைய அனைவரின் கவனத்திற்கும் இது கொண்டு வரப்படலாம்.

## உத்தரவு தொடர் எண். 14

இந்திய அரசின் அமைச்சரவைக் குழு செயலர், ஆந்திரப் பிரதேசம், கோவா, ஜார்க்கண்ட், கேரளா, மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரா, தமிழ்நாடு, திரிபுரா, உத்திரப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட 26.04.2012–ஆம் நாளிட்ட 437 / 6/ INST/2012 – CC & BE ஆம் எண்ணிட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் கடிதம்.

பொருள்: மக்களவை / மாநிலச் சட்டமன்றத்திற்கான இடைத் தேர்தல்கள் – மாதிரி தேர்தல் நடத்தை விதிகளை செயற்படுத்துதல் குறித்த உத்தரவுகள் – சம்பந்தமாக.

பல்வேறு மாநிலங்களில் குறிப்பிட்ட நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்களை 24.04.2012–ஆம் நாளிட்ட பத்திரிகைக் குறிப்பில் கண்டுள்ளவாறு தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளதைத் தெரிவிப்பதற்கு நான் உத்தரவிடப்பட்டுள்ளேன். மாதிரித் தேர்தல் நடத்தை விதிகளின் விதித்துறைளை அதனுடைய முழுமை நிலையில் நடைமுறைப்படுத்தப்படுவதற்காக என்று சட்டமன்ற / நாடாளுமன்றத் தொகுதி அமைந்துள்ள மாவட்டத்தில் (மாவட்டங்களில்), மாதிரித் தேர்தல் நடத்தை விதிகளின் விதித்துறைகள் நடைமுறைப்படுத்தப்படும் தேர்தல் ஆணையம் அந்த பத்திரிகைக் குறிப்பில் உத்தரவுகளை வெளியிட்டிருக்கிறது.

இடைத்தேர்தலின் போது மாவட்டத்தின் ஒரு பகுதி மட்டும் தேர்தல் செயல்பாடுகளில் ஈடுபட்டிருந்தாலும், மாவட்டம் முழுவதும் மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறைப்படுத்தப்படுவதால், மாவட்டம் முழுவதும் வளர்ச்சிப் பணிகள் பாதிக்கப்படுவதால், மாதிரித் தேர்தல் நடத்தை விதிகளை மாவட்டம் முழுவதும் நடைமுறைப்படுத்துவதை மறுபரிசீலனை செய்யும்படி ஆணையத்தை, பல மாநில நிர்வாகங்கள் கேட்டுக் கொண்டுள்ளன.

இது குறித்த அனைத்து பொருத்தமான காரணிகளையும் கவனத்தில் எடுத்துக் கொண்ட பின்னர், 24.04.2012 ஆம் நாளிட்ட பத்திரிகைக் குறிப்பில் அறிவிக்கப்பட்டுள்ள இடைத் தேர்தல்களுக்காக, சோதனை அடிப்படையில் ஏற்கனவே உள்ள மாதிரி தேர்த்ல் நடத்தை விதி தொடர்பான உத்தரவுகளில் பகுதியளவு மாற்றியமைக்கப்பட்டு கீழ்காணும் உத்தரவுகள் பின்பற்றப்படவேண்டும் என்று தேர்தல் ஆணையம் முடிவைடுத்துள்ளது.

**1. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி சட்டத்தின் கீழ்வரும் திட்டங்களை நடைமுறைப்படுத்திலை ஒழுங்குபடுத்தி, இயற்கைப் பேரிடர், வறட்சி, வெள்ளம், குடிநீர், ஆழ்குழாய்**

**கிணறுகள் தோண்டுதல், கால்நடைத் தீவனம், விவசாயிகளுக்கு வேளாண்மை இடுபொருட்கள் மற்றும் இடுபொருள் மானியங்கள், புதிய மேம்பாட்டுப்பணிகள் (ஆதாயம் ஈட்டுபவை அல்லது பணி நோக்கமுடையவை) நாடாளுமன்ற உறுப்பினருக்கான தொகுதி மேம்பாட்டு நிதி, சட்டமன்ற மற்றும் சட்டமேலவை உறுப்பினருக்கான தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் நடைபெறும் பணி உட்பட புதிய திட்டங்கள், நிகழ்ச்சிகள், சலுகைகள், நிதி உதவிகள், சொத்துக்களை சீர்குலைத்தல் தேர்தல் பரப்புரைக்காக அரசுச் சொத்துக்களை பயன்படுத்துதல், ஆகியவை தொடர்பான தேர்தல் ஆணையம் வெளியிட்ட உத்தரவுகள் இடைத்தேர்தல் நடைபெறவுள்ள, சட்டமன்றத் தொகுதி (தொகுதிகள்) நாடாளுமன்றத் தொகுதிகளின் கீழ்வருகிற பகுதிகளில் மட்டுமே பயன்படுத்தப்படும், அத்தகைய தொகுதி அமைந்துள்ள மாவட்டம் (மாவட்டங்கள்) முழுவதும் பயன்படுத்தப்படாது**

**2. எனினும், அமைச்சர்களின் சுற்றுப்பயணம், வாகனங்கள், விளம்பரங்கள், அரசு விருந்தினர் மாளிகையைப் பயன்படுத்துதல் போன்ற நடைமுறையிலுள்ள தேர்தல் ஆணையத்தின் அனைத்து உத்தரவுகள் மற்றும் (1)–ஆம் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவை நீங்கலாக அலுவலர்களின் பணியிடமாற்றம் முதலிய மாதிரி தேர்தல் நடத்தை விதி குறித்த நடைமுறையிலுள்ள ஆணையத்தின் அனைத்து உத்தரவுகளும் இடைத் தேர்தல் நடைபெறும் தொகுதி அமைந்துள்ள மாவட்டம் (மாவட்டங்கள்) முழுமைக்கும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும்.**

தொடர்புடைய அனைவரின் கவனத்திற்கும் இது கொண்டு வரப்படலாம்.

## உத்தரவு தொடர் எண்.15

அமைச்சரவைக் குழுச் செயலர், அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட 21.10.2013–ஆம் நாளிட்ட 437/6/INST/2013/CC&BE–ஆம் எண்ணிட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் கடிதம்.

**பொருள்:** மக்களவை / மாநிலச் சட்டமன்றத்திற்கான தேர்தல்கள் – மாதிரி தேர்தல் நடத்தை விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கான உத்தரவுகள் – சம்பந்தமாக

மக்களவை / மாநிலச் சட்டமன்றங்களுக்கான இடைத் தேர்தலுக்கான மாதிரித் தேர்தல் நடத்தை விதிகளின் பல்வேறு விதித்துறைகளை நடைமுறைப்படுத்துவது குறித்த 26.04.2012 ஆம் நாளிட்ட 438 / 6/ INST/2012/ CC & BE –ஆம் எண்ணிட்ட ஆணையத்தின் தற்போதைய உத்தரவுகளை பகுதியளவு மாற்றியமைத்து பின்வருமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

மாதிரித் தேர்தல் நடத்தை விதியின் கீழ்

I. மீட்புப் பணிகள் உட்பட அனைத்து வளர்ச்சிப் பணிகளைப் பொறுத்தவரையில் கட்டுப்பாடுகள்.

II.

அலுவலர்களின் பணியிட மாற்றம் குறித்த தடை (மாவட்டத் தேர்தல் அதிகாரி, தேர்தல் நடத்தும் அதிகாரி, உதவித் தேர்தல் நடத்தும் அதிகாரி, மற்றும் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் மற்றும் தேர்தல் நடத்துவதுடன் நேரடியாகத் தொடர்புடைய பிற அலுவலர்கள் தவிர) ஆகியவை, இடைத்தேர்தல் நடைபெறப்போகும் சட்டமன்றத் தொகுதி (தொகுதிகள்)/ நாடாளுமன்றத் தொகுதி (தொகுதிகளில்) மட்டுமே நடைமுறைப்படுத்தப்படும் அத்தகைய தொகுதி அமைந்துள்ள மாவட்டம் (மாவட்டங்கள்) முழுமைக்கும் நடைமுறைப்படுத்தப்படமாட்டாது. தொடர்புடைய அனைவரின் கவனத்திற்கும் இது கொண்டு வரப்படலாம்.

## உத்தரவு தொடர் எண்.16

சட்டீஸ்கர், இராஜஸ்தான், மத்திய பிரதேசம், மிசோரம் மற்றும் தேசிய தலைநகர ஆட்சிப்பகுதியான டெல்லி ஆகியவற்றின் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 13.11.2013ஆம் நாளிட்ட 437/6/1/INST/2013-CC&BE ஆம் எண் கடிதம். அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு நகல் அனுப்பப்பட்டுள்ளது.

**பொருள்: மாநில சட்டமன்ற தொகுதிகளுக்கான பொதுத் தேர்தல், 2013- மாதிரி தேர்தல் நடத்தை விதிகளை பயன்படுத்துதல்- - நாடாளுமன்ற உறுப்பினர்களின் உள்ளூர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தண்ணீர் தொட்டிகளில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களை காட்சிப்படுத்துதல் - தொடர்பாக.**

நாடாளுமன்ற உறுப்பினர்கள் / சட்டமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் தீட்டப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் உள்ளூர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிதியளிக்கப்பட்ட தண்ணீர் தொட்டிகள், அவசர ஊர்திகள் போன்ற வாகனங்கள் தேர்தல் நடைபெறும் மாநிலங்களில் பல்வேறு பகுதிகளில் சென்றுகொண்டிருக்கின்றன என்று ஆணையத்திற்கு புகார்கள் வரப்பெறுகின்றன என்பதைத் தெரிவிக்க நான் பணிக்கப்பட்டுள்ளேன். அவ்வாறு ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்லும் வாகனங்கள், சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்/ சட்டமன்ற உறுப்பினருக்கு ஆதரவான தேர்தல் பிரச்சாரமாகக் கருதப்படுமென்பதால் ஆணையம் இவ்விவகாரத்தைக் கருத்தில் கொண்டு, அத்தகைய நடமாடும் வாகனங்களின் மீதுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் / சட்டமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் தேர்தல் காலத்தின்போது உரியவாறு மறைக்கப்பட வேண்டுமென்று ஆணையிட்டுள்ளது.

இதனை நடைமுறைப்படுத்துவதற்காக, சம்பந்தப்பட்ட அனைவரின் கவனத்திற்கும் இது கொண்டுச் செல்லப்படலாம்.

## உத்தரவு தொடர் எண். 17

இந்திய அரசின் அமைச்சரவைக் குழு செயலர் மற்றும் அனைத்து மாநிலங்களின்மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட **05.03.2014 –** ஆம் நாளிட்ட **437 / 6 /** 1 **/2014 –** CC & BE – ஆம் எண்ணிட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் கடிதம்

**பொருள்:** மாதிரித் தேர்தல் நடத்தை விதிகளின் பயன்பாடு – மக்களவைக்கான பொதுத் தேர்தல் – 2014 மற்றும் ஆந்திரப் பிரதேசம், ஒடிஸ்ஸா மற்றும் சிக்கிம் மாநிலங்களின் சட்டமன்றங்களுக்காக ஒரே நேரத்தில் நடைபெறும் தேர்தல் மற்றும் சில குறிப்பிட்ட இடைத் தேர்தல்கள் – சம்பந்தமாக

1. சில மாநிலங்களின் சட்டமன்றங்களுக்கு சில குறிப்பிட்ட இடைத்தேர்தல்கள் உட்பட மக்களவைக்கான பொதுத் தேர்தல் மற்றும் ஆந்திரப் பிரதேசம், ஒடிஸ்ஸா மற்றும் சிக்கிம் மாநிலங்களின் சட்டமன்றங்களுக்கான தேர்தல்கள் நடத்துவதற்கான கால அட்டவணையை ஆணையம் அறிவித்துள்ளதைத் தெரிவிப்பதற்கு நான் உத்தரவிடப்பட்டுள்ளேன். (ஆணையத்தின் வலைத் கிடைக்கப் பெறும் **05.03.2014 –** ஆம் நாளிட்ட ECI/PN/10/2014**–** ஆம் எண்ணிட்ட பத்திரிகைக் குறிப்பு **–**www.eci.gov.in)

2. இந்த அறிவிப்புடன், அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுடைய வழிகாட்டுதலுக்காக மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் உடனடியாக நடைமுறைக்கு வருகின்றன மற்றும் பொதுத் தேர்தல்கள் நிறைவு பெறும் வரையிலும் அவை செயல்பாட்டில் இருக்கும். இந்த அறிவிப்பு, மத்திய / மாநில அரசுகள், அனைத்து அமைச்சங்கள் / துறைகள் மற்றும் மத்திய அரசின் மற்றும் மாநிலத்தின் மாநில அரசின் ஏனைய அனைத்து அலுவலகங்களின் கவனத்திற்கும் கொண்டு வரப்படலாம்.

3. அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் வழிநடத்துதலுக்கான மாதிரித் தேர்தல் நடத்தை விதிகளின் விதித்துறைகள் மற்றும் ஆணையத்தால் வெளியிடப்பெற்ற பல்வேறு உத்தரவுகள் மீது உங்களுடைய குறிப்பான கவனம் ஈர்க்கப்படுகிறது. அதில் ஏனையவற்றுக்கிடையே மத்தியில் அல்லது மாநிலத்தில் அல்லது தொடர்புடைய மாநிலங்களில் ஆட்சியில் இருக்கும் கட்சியானது அதனுடைய தேர்தல் பரப்புரை நோக்கங்களுக்காக தன்னுடைய அதிகாரத்தை (அலுவல் சார்ந்த பதவியை) பயன்படுத்தியிருக்கிறது என்ற எவ்விதமான புகாருக்கும் காரணமாக இருக்கக் கூடாது என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக

**(1)** (a) அமைச்சர்கள் தங்களுடைய அலுவலல் ரீதியான வருகையையும், தேர்தல் செயற்பாட்டுப் பணியையும் ஒன்றாக இணைக்கக் கூடாது மற்றும் தேர்தல் செயற்பாட்டுப் பணிகளின் போது அல்லது பணியாளர்களைஅலுவல் சார்ந்த அமைப்பு பயன்படுத்தவும் கூடாது.

(b) அரசு விமானங்கள், வாகனங்கள், உட்பட அரசுப் போக்குவரத்து சாதனங்கள் அலுவல் சார்ந்த அமைப்பு மற்றும் அரசுப் பணியாளர்கள் ஆகியோரை ஆட்சியில் இருக்கும் கட்சியின் நலனுக்கு உதவி புரிவதற்காக பயன்படுத்தக் கூடாது.

(ii) தேர்தல் கூட்டங்கள் நடத்துவதற்காக மற்றும் தேர்தல்களுடன் தொடர்பு கொண்ட வானூர்திகளுக்கான ஹெலிகாப்டர் இறங்குதளத்திற்காக மைதானம் போன்ற பொது இடங்களை அந்த ஆளும் கட்சி ஏகபோகமாக பயன்படுத்தக் கூடாது தனியுரிமையாளப்படக் கூடாது.

ஆட்சியிலுள்ள கட்சி பயன்படுதுகிற அதே வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில், அத்தகைய இடங்களை, பிற கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் பயன்படுத்தவும் அனுமதிக்க வேண்டும்.

(iii) மாநில அரசால் தரம் அல்லது அதற்கு மேற்பட்டஅல்லது அதற்கு நிகராக பல்வேறு மாநில அரசுகள் அல்லது மத்திய அரசு தங்களுடைடய சட்டத்தின்படி சரிசமமாக பாதுகாப்பு வழங்கியுள்ள அரசியல் கட்சிகளின் நிருவாகிகளுக்கு தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள அல்லது இடத்திலுள்ள ஒய்வு இல்லங்கள், பயணியர் விடுதிகள் மற்றும் இன்னபிற அரசு தங்குமிடங்கள் வழங்கலாம் அப்படிப்பட்ட தங்குமிடமானது தேர்தல் தொடர்பான அலுவலர்க்கு அல்லத தேர்தல் பார்வையாளர்களுக்கு ஏற்கனவே ஒதுக்கப்படாமலும் அவர்களால் தங்குவதற்குப் பயன்படுத்தப்படாமலும் இருப்பதைப் பொறுத்து அரசியல் கட்சியினருக்கு இடம் ஒதுக்கப்படும் அரசியல் கட்சி சார்ந்த நிருவாகிகள் அரசுக்குச் சொந்தமான விருந்தினர் மாளிகைகள்/ஒய்வு இல்லங்கள், இன்ன பிற அரசுக்குச் சொந்தமான தங்குமிடங்கள் இவற்றில் தங்கியிருக்கும் காலத்தில் எந்தவிதமான அரசியல் கட்சி செயல்பாடுகளிலும் ஈடுபடக்கூடாது.

(iv) தேர்தல் காலத்தில் நிதியிலிருந்து அரசு செலவில் மற்றும் பிற ஊடகங்களில் விளம்பரம் செய்தல் மற்றும் அலுவல் சார்ந்த மக்கள் ஊடகத்தை தவறாகப் பயன்படுத்தி ஒருதலைப்பட்சமாக ஒரு கட்சி சார்ந்த விளம்பரத்தை ஊடகங்களில் வெளியிடுதல், ஆட்சிப் பொறுப்பிலிருக்கின்ற எந்த ஒரு அரசியல் கட்சியின் சாதனைகளை மக்கள் ஊடகங்களில் விரம்பரம் செய்து தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகளை அதிகரித்தல் போன்றவற்றில் ஓர் ஆளுங்கட்சியானது தான் ஈடுபடுவதை கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும்.

(v) தேர்தல் ஆணையத்தால், தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து, அமைச்சர்கள் மற்றும் பிற அதிகாரிகள் தங்கள் விருப்புரிமை நிதிகளிலிருந்து மானியங்கள் வழங்குதல்/ தொகை வழங்குதல் கூடாது.

(vi) ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் கட்சியின் நலனுக்கு ஏற்ற வகையில் பொது மக்களைத் தங்கள் பக்கம் இழுத்து, தேர்தலில் அவர்களது வாக்குகளை பெறுகின்ற நோக்கில் அமைச்சர்களும் மற்றும் பிற அதிகாரிகளும் (a) தேர்தல் ஆணையம் தேர்தல் நாளை அறிவித்தபின் எந்த வடிவிலும் மானியங்களை அல்லது அது குறித்த வாக்குறுதிகளேை அறிவிக்கக் கூடாது, அல்லது (b) அலலது எந்த வகையான திட்டங்கள் அல்லது திட்டப் பணிகளுக்காக கட்டடங்கள் எழுப்ப அடிக்கல் நாட்டுதல் ( அரசுப் பணியாளர் நீங்கலாக) கூடாது.

(c) அல்லது புதிதாக சாலைகள் அமைத்தல் குடிநீர் வசதிகள் செய்து கொடுத்தல் இவைபற்றிய பொது முதலியமை பற்றி எந்தவிதமான உறுதிமொழியும் அளிக்கக் கூடாது.

(d) அல்லது ஆட்சி பொறுப்பில் இருக்கும் கட்சிக்கு ஆதரவாக வாக்காளர்களை ஈர்க்கக்கூடிய வகையில் அரசு சார்ந்த துறைகளிலும் பொதுத்துறை நிறுவனங்களிலும் எந்த விதமான தற்காலிக பணி நியமனங்கள் செய்தல் கூடாது.

**4.** மேலே பத்தி **3** (பிரிவு iv) இல் கண்டுள்ளபடி ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் அரசானது தனது சாதனைகளை பறைசாற்றும் வண்ணம் அரசு செலவில் மின்னணு சார்ந்த மற்றும் அச்சு ஊடகங்கள் வழியாக எவ்விதமான விளம்பரங்களும் செய்யக்கூடாது. தொலைக்காட்சி/வானொலி, அல்லது அச்சு ஊடகங்கள் இவற்றில் விளம்பரம் ஒளி/ ஒலிபரப்பு செய்யப்பட்டிருந்தால் அந்த விளம்பரம் ஒலி/ ஒளிபரப்பப்படாமல்/ உடனடியாக தடுத்து நிறுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும். இன்றுமுதல் எந்தவொரு செய்தித்தாளில், பத்திரிகைகள் முதலியவற்றில் அதாவது அச்சு ஊடகத்தில் அத்தகைய விளம்பரம் வெளியிடப்படாமல் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும் மேலும் அந்த விளம்பரங்களை திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**5.** தேர்தல் ஆணையத்தின் **5.3.2009** நாளிட்ட **437/6/2009 –**CCBE ஆம் எண். கொண்ட கடிதத்தில் உள்ள தேர்தல் ஆணையத்தின் உத்தரவுகள், "http://eci.nic.in/ என்கிற இணைய தளத்தில் தேர்தல் விதிகள் மற்றும் இந்திய தேர்தல் ஆணையம் என்ற தலைப்பில் உங்கள் தகவல்களுக்காகவும் தேவைப்படும் நடவடிக்கைகளுக்காகவும் கிடைக்கும் ,

**6.** தேர்தல் நடத்துகின்ற பொறுப்பில் இருக்கும் தொடர்புடைய அனைத்து அதிகாரிகள்/ அலுவலர்களை பணியிடமாற்றம் செய்வதற்கு ஒட்டுமொத்த தடை விதித்து ஆணையம் உத்தரவு பிறப்பித்துள்ளது ஆந்தத் தடை ஆணையானது கீழ்க்காணும் அதிகாரிகள்/ அலுவலர்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

ஆனால் அவர்களுக்கு மட்டுமென்றே வரையறுக்கப்படாத ஒன்றாக உள்ளது.

(i) தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றம் கூடுதல்/இணை/துணை தலைமைத் தேர்தல் அதிகாரிகள் ;

(ii) கோட்ட ஆணையர்கள்

(iii) தேர்தல் நடத்தும் பொறுப்பில் உள்ள மாவட்ட தேர்தல் அதிகாரிகள், தேர்தல் நடத்தும் அதிகாரிகள் உதவி தேர்தல் நடத்தும் அதிகாரிகள் மற்றும் பிற வருவாய்த்துறை அதிகாரிகள்.

(iv) 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 28A-இன் கீழ் தேர்தல் ஆணையத்திற்கு முகமையில் நியமிக்கப்பட்டிருக்கும் காவல் துறை கண்காணிப்பாளர் தேர்தல் பணி மேலாண்மை தொடர்பான காவல் துறைத் தலைவர்கள் மற்றும் காவல் துறைத் துணைத் தலைவர்கள், காவல் துறை முதுநிலை கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல்துறை துணை கண்காணிப்பாளர்கள், உட்கோட்ட காவல் துறை அதிகாரிகள் மற்றும் பிற காவல் துறை அதிகாரிகள்

தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்னால் பிறப்பிக்கப்பட்டு ஆனால் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் வரையில் செயல்படுத்தப்படாமல் இது தொடர்பாக உள்ள மேற்சொன்ன வகைப்பாட்டைச் சேர்ந்த அதிககரிகளின் பணியிட மாற்றங்கள் குறித்த ஆணைகள் தேர்தல் ஆணையத்தின் திட்டவட்டமான அனுமதியின்றி செயல் வடிவம் அளிக்கப்படக்கூடாது.

(vi) தேர்தல் முடிகிற வரையில் இந்தத்தடை செயலாக்கத்தில் இருக்கும். மாநில அரசுகள் தேர்தல் மேலாண்மை தொடர்பான பணியில் உள்ள முதுநிலை அதிகாரிகளை பணியிடமாற்றங்களுக்கு உட்படுத்துவதை தவிர்க்க வேண்டுமென்றும் தேர்தல் ஆணையம் அறிவுறுத்துகின்றது.

(vii) ஒரு அதிகாரியை பணியிடமாற்றம் செய்ய வேண்டிய கட்டாயத் தேவை ஒரு மாநில அரசுக்கு எழுந்தால், சம்பந்தப்பட்ட அந்த மாநில அரசு, அதன் தரப்பிலான நியாயமான காரணங்களுடன் முன் அனுமதி பெறுவதற்காக ஆணையத்தை அணுகலாம்..

7. இக்கடிதம் பெறப்பட்டதற்கு ஒப்புகை அளிக்கப்படலாம்.

## உத்தரவு தொடர் எண்.18

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் **14.03.2014** நாளிட்ட **437/6/**INST/**2014** CC & BE **–** ஆம் எண் கடிதம்.

**பொருள்:** பொதுத் தேர்தல்கள் **–** மாதிரித் தேர்தல் நடத்தை விதிமுறைகளை செயல்படுத்துதல் – தொடர்பாக.

மத்திய / மாநில அரசுகள் மூலமாக செயல்படுத்தப்படுகிற / பரிசீலிக்கப்படுகிற பல்வேறு திட்டங்கள்திட்டப்பணிகள் மற்றும் பல்வேறு ஊரக திட்டங்கள் தொடர்பாக தேர்தல் ஆணையம் வழங்கியுள்ள வழிகாட்டி நெறிகள் குறித்த **05.03.2009** ஆம் நாளிட்ட தேர்தல் ஆணையத்தின் **437/6/2009** CC & BE – ஆம் எண்ணுள்ள கடிதத்தைக் குறிப்பிடுமாறு நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

மனிதர்களால் விளையும் அல்லது இயற்கைப் பேரிடர்களால் விளையும் சேதங்களுக்குரிய நிவாரணப் பணிகளுக்குத் தேவைப்படுகிற தொகையைப் பொறுத்த வரையில், தேர்தல் ஆணையத்திற்கு தெரிவிக்கப்படாமலேயே, பாதிக்கப்பட்ட தனியர்களான நோயாளிகளுக்கு (பயனாளிகளுக்கு )நேரடியாக பண உதவி அளிக்கப்படுவதற்கு பதிலாக, மருத்துவமனைகளுக்கு நேரடியாக முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து / பிரதமர் நிவாரண நிதியிலிருந்து தொகை வழங்க அனுமதிக்கப்படலாம் என்றும் மேற்சொன்ன **5.3.2009** ஆம் நாளிட்ட இக்கடிதத்தின் பத்தி **9** (b) **–** இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த காலத்தே செய்யப்படவேண்டியதும், நோயாளியின் உடல் நலனுக்கு அபாயம் நேரக் கூடாது என்ற நோக்கில் தள்ளிவைக்கப்பட முடியாததுமாகிய இதய அறுவைசிகிச்ஐ,ச மாற்று சிறுநீரகம் பொருத்துதல், புற்றுநோய்க்கு அளிக்கப்பட வேண்டிய சிகிச்சை, இவை போன்ற பல்வேறு மருத்துவ சிகிச்சைகளுக்காக /அறுவை சிகிச்சைகளுக்காக பிரமதருடைய நிவாரண நிதியிலிருந்து / முதலமைச்சருடைய நிவாரண நிதியிலிருந்து மருத்துவ சிகிச்சைக்கான உதவித்தொகை விடுவிக்கப்படுவதும் ஆணையத்தின் கலனத்திற்கு வந்துள்ளது.

மருத்துவ சிகிச்சைக்காக/ அறுவை சிகிச்சைக்காக பிரதம மந்திரியின்/ முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து தொகை வழங்கப்படுவது குறித்து ஆணையம் மனிதாபிமான அடிப்படையில் கருத்து ஒன்றைக் கொண்டுள்ளது. மருத்துவ சிகிச்சைகளுக்காக மேற்சொன்ன நிவாரண நிதிகளிலிருந்து நிதி

வழங்கப்படுவதில், அதற்கு மறுப்பி எதுமில்லை ஆனால், சம்பந்தப்பட்ட அரசு அலுவலர்கள் / தனியார் மருத்துவமனை தலைமை அதிகாரிகள் மட்டுமே நோயாளிகளைத் தெரிவு செய்ய வேண்டும்.

மேற்குறித்த தேர்தல் ஆணையத்தின் உத்தரவு தொடர்புடைய அனைவருக்கும் தெரிவிக்கப்படலாம்.

## உத்தரவு தொடர் எண். 19

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் அமைச்சரவைக் குழு செயலாளர், தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட 20.03.2014 ஆம் நாளிட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 437/6/INST/2014 CC & BE – ஆம் எண் கடிதம்.

பொருள்: நாடாளுமன்ற மக்களவை மற்றும் சட்டமன்றத் தொகுதிகளுக்கான பொதுத் தேர்தல் / இடைத் தேர்தல் காலத்தில் இணையதளத்தில் இடம்பெற்றுள்ள அரசியல் வாதிகள் / அமைச்சர்கள் பற்றிய அனைத்துக் குறிப்புகளையும் நீக்கிவிடுதல் தொடர்பான உத்தரவுகள்– சம்பந்தமாக.

நாடாளுமன்ற மக்களவை மற்றும் சட்டமன்றத் தொகுதிகளுக்கான பொதுத் தேர்தல் / இடைத் தேர்தல் காலத்தில் இணைய தளத்தில் இடம்பெற்றுள்ள அரசியல் வாதிகள் / அமைச்சர்கள் பற்றிய அனைத்துக் குறிப்புகளையும் நீக்கிவிடுதல் தொடர்பாக தேர்தல் ஆணையம் வழங்கியுள்ள 21.11.2007 ஆம் நாளிட்ட 437/6/2007 (INST) - PLN-III – எண் கடிதத்தில் கண்டுள்ள உத்தரவுகளைத் தெரிவிக்குமாறு நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

தேர்தல் காலத்தில் மத்திய மாநில அரசுகளால் மேற்சொன்ன விதிமுறைகள் பின்பற்றப்படுவதில்லை என்பது தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்கு வந்துள்ளது.

அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்கு வழிகாட்டுவதற்காக மாதிரி தேர்தல் நடத்தை விதிமுறைகளில் பிரிவு VII (iv) பின்வருமாறு தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

VII .ஆட்சி யிலுள்ள கட்சி,

மத்தியிலோ மாநிலத்திலோ மாநிலங்களிலோ / ஆட்சியில் இருக்கின்ற கட்சியானது, தனது தேர்தல் பரப்புரைக்காக ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி இருப்பதாக எந்த விதமான புகாரும் எழவில்லை என்பதை உறுதிசெய்ய வேண்டும்.

(iv) தேர்தல் காலத்தில், அரசு செலவில் நாளிதழ்களில் மற்றும் பிற ஊடகங்களில் விளம்பரம் செய்தல் மற்றும் அலுவல் சார்ந்த மக்கள் ஊடகத்தைத் தவறாகப் பயன்படுத்தி, ஒருதலைப்பட்சமாக ஒரு கட்சி சார்ந்த விளம்பரத்தை ஊடகங்களில் வெளியிடுதல் ஆட்சிப்பொறுப்பில் இருக்கிற எந்தவொரு அரசியல் கட்சியின் சாதனைகளை மக்கள் ஊடங்களில் விளம்பரம் செய்து தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகளை அதிகரித்தல் போன்றவற்றில் ஓர் ஆளுங்கட்சி ஈடுபடுவது கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

அமைச்சங்களின் வலைத்தளங்களில் மற்றும் மாநில அரசுகளுக்குரிய வலைத்தளங்களில் பல அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களின் சாதனைகள் அரசியல்வாதிகளின் / அமைச்சர்களின் தனிப்பட்ட சாதனைகளாக காட்டப் பெற்றுள்ளது பற்றிய தேர்தல் ஆணையம் குறிப்புகளை பரிசீலித்துள்ளது.

அதன் அடிப்படையில், தற்போது நடைபெற்றுவருகின்ற நாடாளுமன்ற, மக்களவை /சட்டமன்றத் தொகுதிகளுக்கான பொதுத் தேர்தல் தொடர்பான மாதிரி தேர்தல் நடத்தை விதிமுறைகள் செயலில் உள்ள கால அளவில் அத்தகைய தகவல்கள் இணையதளங்களிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது.

மேற்குறித்த தேர்தல் ஆணையத்தின் உத்தரவு கண்டிப்பாகப் பின்பற்றப்படுவதற்காக தொடர்புடைய அனைவருக்கும் தெரிவிக்கப்படலாம்.

## உத்தரவு தொடர் எண்.20

மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகச் செயலாளருக்கு அனுப்பப்பட்ட 27.03.2014 ஆம் நாளிட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் 437/6/CG/2014 CC & BE – ஆம் எண் கடிதம்.

பொருள்: 2014 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31 ஆம் நாளன்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மூலம் ரூபாய் 65.77 கோடி மதிப்பில் 6400 மெட்ரிக் டன் அளவிலான சமையல் எண்ணெயை இராணுவப் படை வீரர்களுக்காக வாலாய முறையில் கொள்முதல் செய்தவதற்கான அனுமதி.

2) இந்த ஆண்டுக்கும் அடுத்த ஆண்டுக்குமான இராணுவ வீரர்களுக்கான அளவு நிர்ணயிக்கப்பட்ட உணவு பங்கீட்டுபி பொருட்களின் ஏற்கெனவே ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள அளவுகளில் அந்தந்த –க்கள் ஏற்பளித்தவாறு வாலாய கொள்முதல் செய்ய அனுமதி– தொடர்பாக

இந்த 26.03.2014 ஆம் நாளிட்ட மேற்குறித்த பொருண்மை அடங்கிய 1/ACDP/2013 –PAO – ஆம் எண் கொண்ட தங்களது நேர்முகக் கடிதத்தைக் குறிப்பிடுமாறும் மாதிரி தேர்தல் நடத்தை விதிமுறைகள் இராணுவப் படைக்கான ஆள்சேர்ப்பு இராணுவ வீரர்களின் பதவி உயர்வுகள் அவர்களுடைய பணி தொடர்பான அலுவல்கள், இராணுவப் படைக்கான அனைத்து வகையான பொருள்களையும் கொள்முதல் செய்தல் இராணுவப் படைக்கான தேவைகளை நிறைவு செய்ய ஒப்பந்தப்புள்ளிகள் கோரல் இவை போன்ற இராணுவப் படையுடன் நேரடித் தொடர்புடைய எவற்றிற்கும் பொருந்தாது. என்றும், எனவே இந்த விவகாரங்களில் மாதிரி தேர்தல் நடத்தை விதிமுறைகள் பற்றிய எந்தவிதமான கடிதங்களையும் தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பி வைக்கத் தேவையில்லை என்று தெரிவிக்குமாறும் நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

வருங்காலத்திற்கான தேர்தல்களுக்கும் பொருந்துகின்ற வகையில் இந்த உத்தரவுகள் தேர்தல் ஆணையத்தின் நிலையான ஆணைகளாகக் கருதப்படவேண்டும் வருங்காலத்திற்கான வழிகாட்டுதலுக்காக அமைந்திருக்குமாறு சம்பந்தப்பட்ட அனைவரின் கவனத்திற்கும் இத்தகவல் கொண்டுவரப்பட வேண்டும்.

அதன்படி இந்த இரண்டு குறிப்புகளும் இந்த உத்தரவுகளின் கீழ் அடங்குவனவாகும். நீங்கள் அதன்படி நடவடிக்கை எடுக்கலாம்.

## உத்தரவு தொடர் எண்.21

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் அமைச்சரவைச் செயலாளர், தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 29.12.2015ஆம் நாளிட்ட 437/6/1/INST/2015-CCS ஆம் எண் கடிதம்.

**பொருள் : மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் செயலிலுள்ள காலத்தின்போது பொதுத் துறை நிறுவனங்களுக்குச் சொந்தமான கட்டடங்களை / கட்டுமானங்களை அரசியல் விளம்பரத்திற்கு பயன்படுத்துவதற்கு தடை விதித்தல்- தொடர்பாக.**

7.10.2008ஆம் நாளிட்ட (கட்டளைத் தொடர் எண்.22-இன் இணைப்பு) ஆணையத்தின் 3/7/2008-JS-IIஆம் எண் சுற்றறிக்கைக் கடிதத்தில் தங்களது கவனத்தை ஈர்க்க நான் பணிக்கப்பட்டுள்ளேன். இதில், ஏனையவற்றிற்கிடையே, யாதொரு அரசு வளாகங்கள் அல்லது கட்டுமானங்களில் தேர்தல் சுவரொட்டிகள், விளம்பர பலகைகள், பதாகைகள் போன்றவைகளை வைக்கக்கூடாதென ஆணையிடப்பட்டுள்ளது. தேர்தல் காலங்களின்போது, தேர்தல் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக அரசியல் கட்சிகள் அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்குச் சொந்தமான கட்டடங்கள் / கட்டுமான தளங்கள் மற்றும் /அல்லது வளாகங்களில் அவைகளின் சுவரொட்டிகள், பதாகைகள் போன்றவற்றை காட்சிப்படுத்துகின்றனர்/ ஒட்டுகின்றானர் என்று ஆணையத்தின் கவனத்திற்கு தெரிய வந்துள்ளது. தேர்தல் காலத்தின்போது அரசியல் விளம்பரங்களை வெளியிடும் நோக்கத்திற்காக, பொதுத் துறை நிறுவனங்களின் கட்டடங்களும் வளாகங்களும் அரசு வளாகங்களைப் போன்றே கருதப்படுமென தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் இருக்கும் காலத்தில் பொதுத்துறை நிறுவனங்களுக்குச் சொந்தமான கட்டடங்களில் / கட்டுமான தளங்களில் அல்லது அவைகளின் வளாகங்களில் யாதொரு அரசியல் விளம்பரங்களையும் காட்சிப்படுத்தக்கூடாது அல்லது ஒட்டக்கூடாதென ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

பொதுத்துறை நிறுவனங்களின் துணை விதிகளில் அல்லது அரசியல் விளம்பரம் செய்ய தடை விதிப்பதற்கான விளம்பரத்திற்கு இடமளித்த விளம்பர முகமைகளுடனான ஒப்பந்தத்தில் யாதொரு குறிப்பிட்ட வழிவகையும் இல்லாத நேர்வில், வணிக ரீதியிலான விளம்பரங்களை வைப்பதற்காக விளம்பர முகவரமைப்புகளுக்கு குத்தகைக்கு இடமளிக்கும்போது வணிக முகவரமைப்புகள்/நிறுவனங்களுடனான பொதுத் துறை நிறுவனங்களின் வணிக உடன்படிக்கைகளில் “மாதிரி தேர்தல் நடைமுறை காலத்தின்போது, விமான நிலையங்கள், இரயில் நிலையங்கள், மாநிலங்களுக்கிடையேயான / உள்ளூர் பேருந்து நிலையங்கள , அரசு போக்குவரத்து அஞ்சல் அலுவகங்கள், அரசு மருத்துவமனைகள்/ மருந்தகங்கள் (முக்கிய நெடுஞ்சாலைகள், முக்கிய சாலைகள் போன்றவை நீங்கலாக) போன்ற இடங்களில் வணிக ரீதியிலான விளம்பரத்திற்காக குத்தகைக்கு விடப்பட்டுள்ள இடங்களில் யாதொரு அரசியல் விளம்பரமும் காட்சிப்படுத்தப்படக்கூடாது /ஒட்டப்படக் கூடாது.” என்ற பத்தியை சேர்க்குமாறு பொதுத் துறை நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்படலாம்.

மேற்சொன்ன அறிவுறுத்தல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும் இனி வருங்காலங்களில் யாதொரு தேர்தலிலும் பொதுத்துறை நிறுவனங்களின் வளாகங்களுக்குள் யாதொரு வகையிலான அரசியல் விளம்பரங்களை வைக்கும் நிகழ்வுகள் நடைபெறாது என்பதையும் உறுதி செய்வதற்காக சம்பந்தப்பட்ட அனைவருக்கும் உரிய கட்டளைகள் அளிக்கப்பட வேண்டுமென கோரப்படுகிறது.

## உத்தரவு தொடர் எண்.22

குஜராத் மாநிலத்தின் அமைச்சரவைச் செயலாளர், தலைமைச் செயலாளர் மற்றும் தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு அனுப்பப்பட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 25.10.2017ஆம் நாளிட்ட 437/6/1/ECI/INST/FUNCT/MCC/2017 ஆம் எண் கடிதம்.

**பொருள்: குஜராத் மாநிலத்திற்கான சட்டமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், மாதிரி தேர்தல் நடத்தை விதிகளை நடைமுறைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய உடனடி நடவடிக்கை-தொடர்பாக.**

குஜராத் சட்டமன்ற பொதுத் தேர்தலுக்கான அட்டவணையை தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. ஆணையத்தால் தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்ட நாள் முதல் 'மாதிரி தேர்தல் நடத்தை விதிகள்' செயல்பாடு நடைமுறைக்கு வரும் என்பதைத் தெரிவிக்க நான் பணிக்கப்பட்டுள்ளேன். குஜராத் மாநிலத்தின் சட்டமன்ற பொதுத் தேர்தலை கருத்திற்கொண்டு, மாதிரி தேர்தல் நடத்தை விதிகளின் விதித்துறைகளை முனைப்புடன் செயல்படுத்துவதற்காக பின்வரும் அறிவுரைகளை ஆணையம் வழங்கியுள்ளது:-

1. **சொத்துக்களை சேதப்படுத்துதல்** - 29.12.2015ஆம் நாளிட்ட 437 /6/ INST / 2015-CCS ஆம் எண் கடிதம், 18.01.2012ஆம் நாளிட்ட 437 /6/ INST / 2012-CC&BE ஆம் எண் கடிதம் மற்றும் 07.10.2008ஆம் நாளிட்ட 3 /7/2008 JS-II ஆம் எண் கடிதம் ஆகிய கடிதங்களில் உள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தின் கட்டளைகள், சொத்துக்களை சேதப்படுத்துவதிலிருந்து தடுக்கிறது. ஆணையத்தின் கட்டளைகள் கண்டிப்பாகப் பின்பற்றப்படுகின்றன என்பதை உறுதி செய்யவும் கீழே வரையறுக்கப்பட்டவாறு காலவரையறைக்குட்பட்ட நடவடிக்கை எடுக்கவும் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

(a) **அரசு சொத்துக்களை சேதப்படுத்துதல்**- இந்த செயல் நோக்கத்திற்காக, யாதொரு அரசு அலுவலகமும் அலுவலகக் கட்டடம் அமைந்துள்ள வளாகமும் அரசு வளாகம் என்பதில் அடங்கும். அரசுக்கு சொந்தமான இடத்திலுள்ள அனைத்து சுவர் எழுத்துக்கள், சுவரொட்டிகள் / காகிதங்கள் அல்லது ஏனைய யாதொரு வகையிலான சேத நடவடிக்கைகள், விளம்பரப் பலகைகள், பதாகைகள், கொடிகள் போன்றவை தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்ட திலிருந்து 24 மணி நேரத்திற்குள் அகற்றப்பட வேண்டும்.

(b) **பொது சொத்தை சேதப்படுத்துதல் மற்றும் பொது இடத்தைத் தவறாகப் பயன்படுத்துதல்**- பொது சொத்திலும், இரயில் நிலையம், பேருந்து நிலையங்கள், விமான நிலையங்கள், இரயில்வே பாலங்கள், சாலைகள், அரசு பேருந்துகள், மின்சாரம்/ தொலைபேசி கம்பங்கள், நகராட்சி/உள்ளூர் அமைப்புகளின் கட்டடங்கள் போன்ற பொது இடங்களிலும் உள்ள சுவர் எழுத்து, சுவரொட்டிகள் / காகிதங்கள் அல்லது ஏனைய யாதொரு வகையிலான சேத நடவடிக்கைகள், விளம்பரப் பலகைகள், பதாகைகள், கொடிகள் போன்ற வகையிலான அனுமதியற்ற அரசியல் விளம்பரங்கள் ஆகியவை ஆணையத்தால் தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்ட நேரத்திலிருந்து **அகற்றப்பட வேண்டும் (<u>48 மணி நேரத்திற்குள்)</u>**

(c) **தனியார் சொத்தை சேதப்படுத்துதல்**- தனியாருக்குச் சொந்தமான இடத்தில் வைக்கப்பட்டுள்ள அனைத்து அனுமதியற்ற அரசியல் விளம்பரமும் உள்ளூர் சட்டத்திற்குட்ப்பட்டும் நீதிமன்றத்தின் ஆணைக்குட்ப்பட்டும் ஏதேனும் அரசியல் விளம்பரம் தனியார் இடத்தில் வைக்கப்பட்டிருப்பின், அவ்விளம்பரமும் ஆணையத்தால் தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்ட நேரத்திலிருந்து **அகற்றப்பட வேண்டும்**.

(**<u>72 மணி நேரத்திற்குள்)</u>**

2. **அரசு வாகனத்தைத் தவறாகப் பயன்படுத்துதல்**- 10.04.2014ஆம் நாளிட்ட 464/INST/2014/EPS ஆம் எண் கடிதத்திலுள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தின் தொகுக்கப்பட்ட கட்டளைகளில், ஏனையவற்றுடன், **தேர்தல்களின்போது பிரச்சாரத்திற்காக, தேர்தல் அல்லது தேர்தல் தொடர்புடைய பயணத்திற்காக (அதில் குறிப்பிடப்பட்டுள்ள சில விதிவிலக்குகளுக்குட்ப்பட்டு) அரசியல் கட்சி, வேட்பாளர் அல்லது தேர்தலுடன் தொடர்புடைய ஏனைய யாதொரு நபரும் (தேர்தல் தொடர்பான அலுவலகப் பணி மேற்கொள்ளும் அலுவலர்கள் நீங்கலாக) அலுவலக வாகனத்தை பயன்படுத்துவதற்கு முற்றிலும் தடை விதிக்கப் பட வேண்டுமென கூறப்பட்டுள்ளது.** அலுவலக வாகனம் என்பது சொற்றொடரில், மத்திய அரசு, மாநில அரசு/மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதி நிருவாகங்கள், மத்திய / மாநில அரசின் பொதுத் துறை நிறுவனங்கள், மத்திய/மாநில அரசின் கூட்டுத் துறை நிறுவனங்கள், உள்ளூர் அமைப்புகள், மாநகராட்சிகள், விற்பனை வாரியங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது மொத்தத் தொகையுள் ஒரு சிறு பங்கு முதலீடு செய்யப்பட்டிருக்கும், அரசு நிதியளிக்கும் ஏனைய யாதொரு அமைப்பு ஆகியவற்றுக்கு சொந்தமான இயந்திர ஆற்றல் மூலம் இயங்கக்கூடிய அல்லது ஏனைய வகையில் இயங்கக்கூடிய போக்குவரத்திற்காக பயன்படுத்தக்கூடிய அல்லது பயன்படுத்தத்தக்க திறனுடைய யாதொரு வண்டி மற்றும் டிரக்குகள், லாரிகள், டெம்போக்கள்,

ஜீப்கள், கார்கள், ஆட்டோ ரிக்ஷாக்கள், மின் - ரிக்ஷாக்கள், பேருந்துக்கள் ஆகியவை அடங்கும். தேர்தல் அறிவிக்கப்பட்டதிலிருந்து 24 மணி நேரத்திற்குள் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் கட்டளைகளுடன் இணங்கி நடப்பதற்குத் தேவையான நடவடிக்கையை தலைமைத் தேர்தல் அலுவலர்/மாவட்ட தேர்தல் அலுவலர் எடுக்க வேண்டும்.

3. **அரசுக் கருவூலத்திலிருந்து செலவு செய்து விளம்பரம் செய்தல்**-5.03.2014ஆம் நாளிட்ட 437/6/1/2014-CC&BE ஆம் கடிதத்திலுள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தின் கட்டளைகளில் செய்தித்தாள்கள் மற்றும் ஏனைய ஊடகங்களில் அரசு கருவூலத்திலிருந்து செலவு செய்து விளம்பரம் செய்தல் மற்றும் அரசியல் செய்திகளை பதிவு செய்வதற்காக தேர்தலின்போது அலுவலக பொதுத் தகவல் சாதனங்களை தவறான முறையில் பயன்படுத்துதல் மற்றும் அதிகாரத்திலுள்ள கட்சியின் வெற்றியை கருத்திற் கொண்டி அவர்களது சாதனைகளை பரப்புதல் ஆகிய செயல்கள் கண்டிப்பாக தவிர்க்கப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது. அரசின் சாதனைகளை எடுத்துரைக்கின்ற யாதொரு விளம்பரமும் மின்னணு மற்றும் அச்சு ஊடகத்தில் அரசுச் செலவில் வெளியிடப்படக் கூடாது.ஒளிபரப்புவதற்காக அல்லது அச்சு ஊடகத்தில் வெளியிடப்படுவதற்காக ஏதேனும் விளம்பரங்கள் ஏற்கனவே வெளியிடப்பட்டிருப்பின், தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் முதல் மின்னணு ஊடகத்தில் அத்தகைய விளம்பரங்களின் ஒளிபரப்பு உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளது என்பதையும் செய்தித்தாள்கள், பருவ இதழ்கள் போன்றவைகளில் அதாவது யாதொரு அச்சு ஊடகத்திலும் அத்தகைய விளம்பரம் ஏதும் வெளியிடப்படவில்லை என்பதையும் உறுதி செய்யப்பட்டு உடனடியாக திரும்பப்பெறப்பட வேண்டும். தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டவுடன் , **அரசின் சாதனைகளை விளக்கும் யாதொரு விளம்பரத்தையும் அரசு/மின்னணு ஊடகத்திலிருந்து நீக்குவதற்கு/ அகற்றுவதற்கு தலைமைத் தேர்தல் அலுவலர்கள் /மாவட்டத் தேர்தல் அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

4. **அலுவலக வலைதளத்தில் அரசியல் சார்ந்த பொறுப்பாளர்களின் புகைப்படம்**- அமைச்சர்கள், அரசியல்வாதிகள் அல்லது அரசியல் கட்சிகள் பற்றி மத்திய/மாநில அரசுகளின் அலுவலக வலைதளத்திலுள்ள அனைத்து குறிப்புகளும் நீக்கப்பட வேண்டுமென 20.03.2014ஆம் நாளிட்ட 437/6/1/2014-CC&BE ஆம் கடிதத்திலுள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தின் கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. மாநில அரசின் அலுவலக வலைதளத்திலிருந்து அரசியல் சார்ந்த பொறுப்பாளர்களின் புகைபடத்தை நீக்குவதற்கு/மறைப்பதற்கு தலைமைத் தேர்தல் அலுவலர்கள் **உடனடி நடவடிக்கை** மேற்கொள்ள வேண்டும்.

5. **வளர்ச்சி தொடர்பான நடவடிக்கைகள்**- மாதிரி தேர்தல் நடத்தை விதி மீறல்கள் குறித்த யாதொரு புகாரை விசாரிக்கும் நேர்வில், தேர்தல் அறிவிக்கப்பட்டதிலிருந்து 72 மணி நேரத்திற்குள், குறிப்பிற்காக பின்வரும் பணிகளின் பட்டியல்களைத் தலைமைத் தேர்தல் அலுவலர்/மாவட்ட தேர்தல் அலுவலர் பெற வேண்டும். அவையாவன:

   (i) களத்தில் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ள பணிகளின் பட்டியல்
   (ii) களத்தில் தொடங்கப்படாத புதிய பணிகளின் பட்டியல்

6. **செலவின கண்காணிப்பு மற்றும் மாதிரி தேர்தல் நடத்தை விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள்-** மதுபானம்/பணம்/ தடை செய்யப்பட்ட மருந்துகள் கடத்தலை தீவிரமாக சோதனையிடுவதற்காக பறக்கும் படை, பறக்கும் படை குழுக்கள், வீடியோ குழுக்களும், சட்ட விரோதமாகக் கடத்தப்படும் மருந்து/போதை பொருட்களை சோதனை செய்வதற்கு ஆயத்தீர்வைத் துறையின் பறக்கும் படைகளும் தேர்தல் அறிவிப்பிற்கு பின்னர் உடனடியாக செயலப்டுத்தப்பட வேண்டும்.

7. **புகார் கண்காணிப்பு ஏற்பாட்டுமுறை**- தேர்தல் நடைபெறும் மாநிலங்களில், வலைதளம் மற்றும் அழைப்பு மையம் சார்ந்த புகார் தீர்க்கும் முறையைக் கொண்டிருக்க வேண்டும். அழைப்பு மையத்தின் கட்டணமில்லா தொலைபேசி எண் 1950 என்பதாகும். கட்டணமில்லா அழைப்பு மையத்தை அழைப்பதன் வாயிலாக அல்லது வலைதளத்தின் வாயிலாக புகார்கள் பதிவு செய்யப்படலாம். குறுஞ்செய்தி மற்றும் அழைப்பு மையம் வாயிலாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து புகார்தாரருக்குத் தெரிவிக்கப்படலாம். புகார்தாரர்கள் அவர்களது புகார் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் காணலாம்.. தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டதிலிருந்து **<u>24 மணி நேரத்திற்குள்</u> இம்முறை செயல்படுத்தப்பட வேண்டும்.** அனைத்து புகார்கள் மீதும் உரிய வகையில் முறையாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மாவட்ட அளவில், 24 மணி நேரமும் கட்டுப்பாட்டு அறை இயங்க வேண்டும். அதில் போதிய பணியாளர்களும் ஏனைய போக்குவரத்து வசதிகளும் உறுதி செய்யப்பட வேண்டும். குறிப்பாக கட்டுப்பாட்டு அறையில் 24 மணி நேரமும் பணியாளர்கள் அமர்த்தப்பட்டு யாதொரு சூழ்ச்சிகளையும் குழப்பங்களையும் தவிர்ப்பதற்காக அவர்களுக்கு வேலைமுறை பட்டியல் வழங்கப்பட வேண்டும்

8. **தகவல் தொழில்நுட்ப செயலி**-அலுவலக வலைதளம் மற்றும் சமூக ஊடகம் உட்பட அனைத்து தகவல் தொழில்நுட்ப செயலிகளும் **<u>அறிவிப்பு வெளியான நாள் முதல்</u> செயலுக்கு வர வேண்டும்**

9. **வாக்காளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் விழிப்புணர்வுக்காக தகவல்களைப் பரப்புதல்.**- தலைமைத் தேர்தல் அலுவலர்/மாவட்டத் தேர்தல் அலுவலர்/தேர்தல் நடத்தும் அலுவலர் வாயிலாக முக்கிய தேர்தல் நடவடிக்கைகள் பரப்பப்பட வேண்டும். இதற்குத் இந்த நோக்கத்திற்காக, அனைத்து நடவடிக்கைகளும் வானொலி, தொலைக்காட்சி, சினிமா வாயிலாக பரப்பப்பட வேண்டும். அரசு தொலைக்காட்சியில், வாக்காளர் கல்வி கையேடு குறித்து ஒளிபரப்ப வேண்டும்.

10. **கல்வி நிறுவனங்கள் மற்றும் சிவில் சங்கங்களிடமிருந்து முனைப்பான ஒத்துழைப்பு**- பொது மக்கள் மற்றும் ஏனைய பொறுப்பாளர்களிடம் தேர்தல் தொடர்பான தகவல்களை பரப்புவதற்காக கல்வி நிறுவனங்கள் மற்றும் சிவில் சங்கங்களின் ஒத்துழைப்பைக் கோரலாம்.

11. **ஊடக மையம்**- மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் / வாக்காளர் சரிபார்ப்பு காகித தணிக்கைச் சோதனை சாதனம் உள்ளிட்ட அனைத்து தேர்தல் ஏற்பாட்டுமுறைகள் குறித்து ஊடக மையம் வாயிலாக வாக்காளர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் ஏனைய பொறுப்பாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

12. **ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழு/ மாவட்ட செலவின கண்காணிப்பு குழு**- பதிவுசெய்யப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளும், மின் ஊடகத்தில் வெளியிட திட்டமிட்டுள்ள அவற்றின் அரசியல் விளம்பரங்களின் முன் சான்றளிப்பிற்காக , நேர்விற்கேற்ப மாநிலம் மற்றும் மாவட்ட அளவிலான ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழுக்களை அணுக வேண்டுமென 24.03.2014ஆம் நாளிட்ட 491/MCMC/2014/தகவல்தொடர்பு ஆம் கடிதத்திலுள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தின் கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்சொன்ன கடிதத்திலுள்ள ஆணையத்தின் கட்டளைகள் கண்டிப்பாக பின்பற்றப்படுவதை உறுதி செய்ய வேண்டுமென ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

13. **கட்டுப்பாட்டு அறை**- **மாவட்ட அளவிலான 24மணி நேர கட்டுப்பாட்டு அறை உடனடியாக செயல்படுத்தப்பட வேண்டும். போதிய அளவிலான பணியாளர்களும் சாதனங்களும் பணியமர்த்தப்பட்டுள்ளதை மாவட்டத் தேர்தல் அலுவலரால்/தலைமைத் தேர்தல் அலுவலரால் உறுதி செய்யப்பட வேண்டும்.** ஒட்டுமொத்தத் தேர்தல் நடைமுறையின்போது **புகார் கண்காணிப்பு மையத்துடன்கூடிய கட்டுப்பாட்டு அறை ஒன்று இந்தியத் தேர்தல் ஆணையத்தின் தலைமைச் செயலகத்தில் அமைக்கப்பட வேண்டும்.**

**இணைப்பு–1**

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் அமைச்சரவைச் செயலாளர்கள், தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் அலுவலர்களுக்கு அனுப்பப்பட்ட தேர்தல் ஆணையத்தின் 18.01.2012ஆம் நாளிட்ட 437/6/INST/2012-CC&BEஆம் எண் கடிதம்.

**பொருள்- உடைமைகளை சேதப்படுத்துவதிலிருந்து தடுத்தல் மற்றும் பிரச்சாரம் தொடர்பான ஏனைய இனங்கள் குறித்த திருத்தப்பட்ட கட்டளைகள்-தொடர்பாக**

கோவா, மணிப்பூர்,பஞ்சாப், உத்திர பிரதேசம் மற்றும் உத்திரகாண்ட் மாநிலங்களில் சட்டமன்றங்களுக்கான பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பேரில், மாதிரி தேர்தல் நடத்தை விதிகளின் விதித்துறைகள் 24.12.2011 முதல் நடைமுறைக்கு வந்தன என்பதைத் தெரிவிக்க நான் பணிக்கப்பட்டுள்ளேன். 'தனியார் இடங்களை சேதப்படுத்துதல்' என்ற தலைப்பின் கீழ் பத்தி 5-இன் கீழ் உள்ள 7.10.2008ஆம் நாளிட்ட 3/7/2008/JS-IIஆம் எண் கடிதத்தின் (நகல் இணைக்கப்பட்டுள்ளது) வாயிலாக வழங்கப்பட்ட ஆணையத்தின் கட்டளைகளை மீண்டும் வலியுறுத்த ஆணையம் முடிவு செய்துள்ளது. அவை வருமாறு:-

**துணைப்-பத்தி (d) " அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள்,அவர்களது முகவர்கள், பணியாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் ஆகியோர் நடைமுறையிலுள்ள யாதொரு உள்ளூர் சட்டம் அல்லது யாதொரு நீதிமன்ற ஆணைகளின் யாதொரு கட்டுப்பாட்டுகளுக்கு உட்பட்டு அவர்களது இடத்தில் பதாகைகள், தோரணங்கள், கொடிகள், கட்-அவுட்கள்ஆகியவற்றை வைத்துக் கொள்ளலாம். ஆனால், யாதொரு கட்சி, நிறுவனம் அல்லது நபரின் வற்புறுத்தலும் இல்லாமல் அவர்களது சொந்த விருப்பத்தின் பேரில், அவர்களாகவே அவ்வாறு செய்ய வேண்டும். மேலும், இத்தகைய செயல்கள் யாதொரு நபருக்கும் யாதொரு வகையிலும் எவ்வித இடையூறுகளையும் ஏற்படுத்தக்கூடாது. யாதொரு குறிப்பிட்ட வேட்பாளருக்கு வாக்கு சேகரிக்க வேண்டி, பதாகைகள், கொடிகள் போன்றவை அவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டிருப்பின், இந்திய தண்டனை விதிக்கோவையின் பிரிவு 171H-ன் விதித்துறைகள் ஏற்கப்பட்டு பின்பற்றப்பட வேண்டும் வேட்பாளர்களின் எழுத்துப்பூர்வமான பொது அல்லது சிறப்பு அனுமதி இல்லாமல், யாதொரு பொது கூட்டத்தை நடத்துவதற்காக அல்லது யாதொரு விளம்பரம், சுற்றறிக்கை அல்லது வெளியீடுகள் செய்வதற்காக அல்லது ஒரு வேட்பாளரை மக்களிடம் கொண்டுச் செல்வதற்காக அல்லது அவரை வெற்றியடையச் செய்வதற்காக செய்யப்படும் எவ்வகையிலான செலவினத்திற்கும் ஐந்நூறு ரூபாய் வரையிலான அபராததுடன் தண்டனை விதிக்கப்படுமென இந்திய தண்டனை**

**விதிக்கோவையின் பிரிவு 171H கூறுகிறது. ஆனால், அனுமதியின்றி பத்து ரூபாய்க்கு மிகாமல் அத்தகைய செலவினம் செய்த நபரொருவர், அத்தகைய செலவினம் செய்யப்பட்ட நாளிலிருந்து பத்து நாட்களுக்குள் வேட்பாளரின் எழுத்து வடிவிலான அனுமதியை பெற்றிருந்தாரெனில், அந்த வேட்பாளரின் அனுமதியுடன் அவர் அத்தகைய செலவினத்தை மேற்கொண்டார் என கருதப்படும்.**

இந்திய அரசுச் செயலாளர், உள்துறை அமைச்சகம், அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் அலுவலர்கள் ஆகியோருக்கு அனுப்பப்பட்ட தேர்தல் ஆணையத்தின் 7.10.2008ஆம் நாளிட்ட 3/7/2008/JS-IIஆம் எண் கடிதம்

**பொருள்- உடைமைகளை சேதப்படுத்துவதிலிருந்து தடுத்தல் மற்றும் பிரச்சாரம் தொடர்பான ஏனைய செயல்பாடுகள் குறித்த திருத்தப்பட்ட கட்டளைகள் - தொடர்பாக,**

தேர்தல் பிரச்சாரம் தொடர்பாக உடைமைகளை சேதப்படுத்துவதிலிருந்து தடுத்தல் குறித்த ஆணையத்தின் 16.10.2007ஆம் நாளிட்ட 3/7/2007/JS-IIஆம் எண் கடிதத்தில் கவனத்தை ஈர்க்க நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

2. கடந்த காலத்தில், உடைமகளை சேதப்படுத்துதல் குறித்து முனைப்புடன் செயல்பட, மாநில அரசுகள் சிறப்பு சட்டங்களை இயற்ற வேண்டுமென ஆணையம் பரிந்துரைத்துள்ளது. உடைமகள் சேதப்படுவதை தடுப்பது குறித்து நிருவகிக்கவும், முறைப்படுத்தவும் சில மாநிலங்கள் சிறப்பு சட்டங்களை உருவாக்கின. ஏனைய மாநிலங்கள், நகராட்சிகள் போன்ற குறிப்பிட்ட பகுதிகளை மட்டும் உள்ளடக்குவதற்கான சட்டங்களை மட்டும் கொண்டிருக்கும் இல்லையேல் எந்த சட்டத்தையும் கொண்டிருக்காது. ஆணையத்தில் உள்ள தகவல்களின் அடிப்படையில் இது குறித்து மாநிலங்களில் பெறப்படுகிற அந்தந்த நிலைகள் குறித்த அட்டவணை அறிக்கை இந்த சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளது (பிற்சேர்க்கை-I என குறிக்கப்பட்டுள்ளது). நாடு முழுவதும் ஒரே சட்டம் இல்லாத காரணத்தால், நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய ஒன்று மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது. 2009 ஆம் ஆண்டில் வரவிருக்கும் மாநிலங்களவைத் தேர்தலை கருத்திற்கொண்டு,தேர்தல்களின்போது தடையின்றி பிரச்சாரங்களை நடத்தவும், கள அளவில் செயல்படுத்துவதற்கான அதிகாரம் பெற்றுள்ளவர்கள் மற்றும் பல்வேறு மாநிலங்களில்/ தொகுதிகளில் தேர்தல்களை மேற்பார்வையிடுவதற்காக பணியமர்த்தப்பட்டுள்ள பார்வையாளர்களின் புரிதலுக்காக உடைமைகளை சேதப்படுத்துதல் குறித்த விரிவான வழிகாட்டி குறிப்புகளை உருவாக்குவது அவசியமாகிறது.

3. இப்பொருண்மை குறித்த அனைத்து அம்சங்களையும் கூர்ந்து கருதிப்பார்த்தபின், ஆணையம், முந்தைய உத்தரவுகளை ரத்துசெய்துவிட்டு, தேர்தல் காலத்தின் போது, அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள், தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் போன்றவற்றால் கடைபிடிக்கப்படவேண்டிய, பின்வரும் உத்தரவுகளைப் பின்பற்ற வேண்டுமென வரையறுத்துள்ளது.

**பொது இடங்களைச் சேதப்படுத்துதல்**

4. (a). யாதொரு அரசு வளாகத்திற்குள் (அதனுள் அமைந்துள்ள கட்டடங்கள் உட்பட), சுவரில் எழுதுவது, சுவரொட்டிகள் / காகிதங்களை ஒட்டுதல் அல்லது ஏனைய யாதொரு வகையில் சேதப்படுத்துதல், அல்லது வெட்டுருக்களை நிறுவுதல்/ காட்சிப்படுத்துதல், விளம்பரப் பலகைகள், பதாகைகள், கொடிகளை நிறுவுதல் போன்றவை அனுமதிக்கப்படமாட்டாது. இந்தச் செயல்நோக்கத்திற்காக, அரசு வளாகங்கத்தில் யாதொரு அரசு அலுவலகம் மற்றும் அலுவலகக் கட்டடம் அமைந்துள்ள வளாகம் ஆகியவை இதில் அடங்கும்.

(b) பணம் செலுத்துவதன் மூலம் அல்லது ஏனைய வகையில், யாதொரு பொது இடத்தில் (அரசு வளாகத்திற்குப் பதிலாக) வாசகங்கள் (slogan) எழுதுதல், சுவரொட்டியை ஒட்டுதல், காட்சிப்படுத்துதல் முதலியவை அல்லது வெட்டுருக்கள், விளம்பரப் பலகைகள், பதாகைகள், அரசியல் விளம்பரங்களை நிறுவுதல் போன்றவற்றிற்கு உள்ளூர் சட்டம் திட்டவட்டமாக அனுமதிக்குமாயின் அல்லது வகைசெய்யுமாயின், சட்டத்தின் தொடர்புடைய விதித்துறைகளுக்கேற்பவும் இப்பொருண்மை குறித்து ஏதேனும் நீதிமன்ற ஆணைகள் இருப்பின் அவற்றிற்குட்பட்டும் அவை கண்டிப்பாக அனுமதிக்கப்படலாம். அத்தகைய யாதொரு இடமும் யாதொரு குறிப்பிட்ட கட்சி(கள்) அல்லது வேட்பாளரால்(கள்) ஆதிக்கம் செய்யப்படவில்லை / ஏக போக உரிமை கொண்டிருக்கப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட வேண்டும். இது தொடர்பாக, அனைத்து கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்கு சமமான வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

(c) பொது இடத்தில் விளம்பரங்களை காட்சிப்படுத்துவதற்காக குறிப்பிட்ட இடம் ஒதுக்கப்பட்டு வழங்கியிருப்பின், எடுத்துக்காட்டாக, அறிவிப்புப் பலகைகள், விளம்பரப் பலகைகள் முதலியவை தனிநபருக்கு ஒதுக்கீடு செய்வதற்காக யாதொரு முகவரமைப்பிற்கு அத்தகைய இடம் வழங்கப்பட்டிருப்பின், தேர்தல் காலத்தின் போது, தேர்தல் தொடர்பான விளம்பரங்களுக்கு அனைத்து அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும், அத்தகைய விளம்பர இடத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கான சமமான நடுநிலையான வாய்ப்பினைப் பெற்றுளனரா என்பதை தொடர்புடைய நகராட்சி அதிகாரி யாரேனுமிருப்பின், அவர் வாயிலாக, மாவட்டத் தேர்தல் அலுவலர், உறுதி செய்ய வேண்டும்.

**<u>தனியார் இடங்களைச் சேதப்படுத்துவதிலிருந்து காத்தல்</u>**

5. (a). இந்தப் பொருண்மை குறித்து யாதொரு உள்ளூர் சட்டமும் இல்லாத மாநிலங்கள் மற்றும் சட்டமிருக்கும் மாநிலங்களில் சட்டத்தின் கீழுள்ள வரையறைகளுக்குட்பட்டு, தனியார் வளாகங்களில் கொடிகள், பதாகைகள் போன்ற தற்காலிகமான மற்றும் எளிதில் அகற்றப்படக்கூடிய வகையிலான விளம்பரப் பொருட்கள், குடியிருப்பவரின் சுயவிருப்பத்துடன்கூடிய அனுமதியுடன், வைக்கப்படலாம். அனுமதியானது தன் விருப்பத்தின்பேரில் அளிக்கப்படலாமேயன்றி வற்புறுத்தி அல்லது அச்சுறுத்தி பெறப்படலாகாது. அத்தகைய பதாகை அல்லது கொடி ஏனையோருக்கு யாதொரு இடையூறும் அளிக்கக்கூடாது. இது தொடர்பாக எழுத்துவடிவில் பெறப்பட்ட விருப்ப அனுமதியின் நகல், இத்தகைய நேர்வுகளில், கொடிகள் மற்றும் பதாகைகள் வைக்கப்பட்ட 3 நாட்களுக்குள், கீழே (c) துணைப் பத்தியில் குறிப்பிடப்பட்ட முறையில் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் அளிக்கப்பட வேண்டும்.

(b) சுவற்றில் எழுதுதல், சுவரொட்டியை ஒட்டுதல் மற்றும் அதனைப்போன்ற எளிதில் அகற்ற இயலாத ஏனைய நிரந்தரமான / ஓரளவு சேதப்படுத்தக்கூடிய விளம்பரங்களை உள்ளூர் சட்டம் அனுமதிக்கவில்லையெனில், உடைமையின் உரிமையாளரின் இசைவைப் பெற்றிருந்தபோதிலும், யாதொரு சூழ்நிலையிலும் அதனை மீறலாகாது. உடைமையை சேதப்படுத்துவதிலிருந்து தடுக்கும் பொருண்மை குறித்து யாதொரு உள்ளூர் சட்டமும் இல்லாத மாநிலங்களுக்கும் இது பொருந்தும்.

( c ) இடத்தின் உரிமையாளரின் அனுமதியுடன் தனியார் வளாகங்களில் சுவரில் எழுதுதல் மற்றும் சுவரொட்டிகளை ஒட்டுதல், விளம்பரப் பலகைகள் மற்றும் பதாகைகளை வைத்தல் போன்றவற்றை உள்ளூர் சட்டம், தெளிவாக அனுமதிக்குமெனில், உடைமையின் உரிமையாளரிடமிருந்து, போட்டியிடும் வேட்பாளர்கள் அல்லது தொடர்புடைய அரசியல் கட்சிகள், எழுத்துவடிவிலான முன் அனுமதி பெற வேண்டும். தேர்தல் நடத்தும் அலுவலரிடம் அல்லது இந்த நோக்கத்திற்காக அவரால் நியமிக்கப்பட்ட அதிகாரியிடம், அவற்றின் நகல்களை, அறிக்கையுடன் இணைக்கப்பட்ட முறையான படிவத்துடன் (பிற்சேர்க்கை 2 இல் குறித்தவாறாக) 3 நாட்களுக்குள் அளிக்க வேண்டும்.

இந்த நோக்கத்திற்காக ஏற்பட்ட செலவினம் அல்லது ஏற்படவிருக்கும் செலவினம் குறித்த விவரங்களுடன், அனுமதி பெறப்பட்ட உடைமையின் உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி ஆகிய விவரங்கள் அத்தகைய நேர்வுகளின் அறிக்கை மற்றும் மேலே துணைப்

பத்தி (a) இல் குறிப்பிடப்பட்ட நேர்வுகளில் தெளிவாக சுட்டிக்காட்டப்பட வேண்டும். பல்வேறு சமூகத்தினரிடையே கோபத்தை ஏற்படுத்தக்கூடிய அல்லது விரோதத்தை தூண்டக்கூடிய செய்திகள், அத்தகைய எழுத்து/ காட்சிப்படுத்துதலில், அனுமதிக்கப்படக் கூடாது. வேட்பாளரின்(களின்) தனிப்பட்ட பிரச்சாரத்தில், இந்த முறையில் ஏற்பட்ட செலவினம், வேட்பாளரால் மேற்கொள்ளப்பட்ட தேர்தல் செலவினத்தில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். யாதொரு வேட்பாளரையும் குறிப்பிடாமல், கட்சிக்காகச் செய்யப்பட்ட சிறப்புப் பிரச்சாரத்தினால் ஏற்பட்ட செலவினத்தை வேட்பாளரின் செலவினத்தில் சேர்க்கக் கூடாது. தேர்தல்களை நடத்துவதுடன் தொடர்புடைய தேர்தல் நடத்தும் அலுவலர் அல்லது தேர்தல் பார்வையாளர் அல்லது ஏனைய யாதொரு அலுவரால் எளிதாக சரிபார்க்கும்விதமாக, கிராமம்/ இடம்/ நகரம் வாரியான அத்தகைய தகவலை, தேர்தல் நடத்தும் அலுவலர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியிடம், தேவையான அனுமதி பெறப்பட்ட 3 நாட்களுக்குள் போட்டியிடும் வேட்பாளர் அளிக்க வேண்டும்.

(d) யாதொரு உள்ளூர் சட்டத்தின் கீழுள்ள யாதொரு வரையறைகள் அல்லது நடமுறையிலுள்ள யாதொரு நீதிமன்ற ஆணைகளுக்குட்பட்டு, அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள், அவர்களின் முகவர்கள், பணியாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள், அவர்களின் சொந்த இடத்தில், யாதொரு கட்சி, நிறுவனம் அல்லது நபரின் அழுத்தத்தினாலன்றி, அவர்களின் சொந்த விருப்பத்தின் பேரில் தன்னிச்சையாக, பதாகைகள், தோரணங்கள், கொடிகள், வெட்டுருக்கள் போன்றவற்றை வைக்கலாம். மேலும் இவை, எவருக்கும் எந்த வகையிலும் யாதொரு தொந்தரவையும் ஏற்படுத்தக்கூடாது. யாதொரு குறிப்பிட்ட வேட்பாளருக்கு வாக்கு சேகரிக்கும் வகையில், பதாகைகள், கொடிகள் போன்ற அத்தகைய காட்சிப்படுத்துதல்கள் வைக்கப்பட்டிருக்குமெனில், இந்தியத் தண்டனைச் சட்ட விதிக்கோவையின் 171 H ஆம் பிரிவின் விதித்துறைகள் பொருந்தும். மேலும் அவை பின்பற்றப்பட வேண்டும். அத்தகைய வேட்பாளரின் எழுத்துப்பூர்வமான பொது அல்லது சிறப்பு அனுமதி பெறாமல், வாக்குகளை அதிகரிப்பதற்காக அல்லது அவருக்கு வாக்குகளை பெறுவதற்கான, யாதொரு பொதுக்கூட்டத்தை நடத்துவதற்காக அல்லது யாதொரு விளம்பரம், சுற்றறிக்கை அல்லது துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுவதற்காக அல்லது ஏனைய யாதொரு வகையில் யாரேனும் செலவுகளைச் செய்தாரெனில் அல்லது அதற்கு அனுமதியளித்தாரெனில், அந்த நபருக்கு 500 ரூபாய் வரையிl அபராதம்

அதிகரிக்கப்படலாம் என இந்தியத் தண்டனைச் சட்ட விதிக்கோவையில் 171 H ஆம் பிரிவு வரையறுக்கிறது. இருப்பினும், யாதொரு நபர், அனுமதி பெறாமல் 10 ரூபாய்க்கு மிகாமல் அத்தகைய செலவினை செய்து, அந்த செலவினம் செய்த 10 நாட்களுக்குள், வேட்பாளரின் எழுத்துப்பூர்வ அனுமதியைப் பெற்றாரெனில், அவர் அந்த செலவை வேட்பாளரின் அனுமதியுடன் செய்யப்பட்ட செலவினமாகக் கருதப்படும்.

**அரங்குகள் / கலையரங்குகள் மற்றும் ஏனைய பொது உடைமைகளைச் சேதப்படுத்துதல்**

**6.** அரசு / உள்ளூர் அதிகார மன்றங்கள் / பொதுத் துறை நிறுவனங்கள் / கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றுக்குச் சொந்தமான / கட்டுப்பாட்டிலுள்ள அரங்கங்கள் / கலையரங்கங்கள் / கூட்டம் நடைபெறும் இடங்கள் ஆகியவற்றைப் பொறுத்த நேர்வில், அவற்றின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தக்கூடிய சட்டம் / வழிகாட்டி நெறிமுறைகள் போன்றவை அங்கு அரசியல் கூட்டங்கள் நடைபெறுவதற்குத் தடைவிதிக்கவில்லையெனில், அவற்றிற்கு அங்கு யாதொரு தடையும் இல்லை. இத்தகைய ஒதுக்கீடானது, யாதொரு அரசியல் கட்சி அல்லது வேட்பாளர்களால் முழு ஆதிக்கம் செலுத்தப்படாமல், அனைவருக்கும் நடுநிலைமையான முறையில் ஒதுக்கீடு செய்வது உறுதி செய்யப்பட வேண்டும். அத்தகைய இடங்களில், நடைமுறையிலுள்ள சட்டம்/ பின்பற்றத்தக்க வழிகாட்டிக்குறிப்புகளின் படி, யாதொரு வரையறைகளுக்குட்பட்டு, கூட்டங்கள் நடைபெறும் காலங்களின் போது, பதாகைகள், தோரணங்கள், கொடிகள், வெட்டுருக்கள் போன்றவற்றை காட்சிப்படுத்துவது அனுமதிக்கப்படலாம். அத்தகைய பதாகைகள், கொடிகள் போன்றவை அந்த வளாகத்தைப் பயன்படுத்திய கட்சி/ நபர்களால், கூட்டம் முடிவடைந்தவுடனோ , யாதொரு நேர்வில், கூட்டம் முடிந்த பின்னர் முறையான கால அளவிற்குள் அகற்றப்பட வேண்டும். அத்தகைய வளாகங்களில் நிலையான / தற்காலிகமான வகையிலான சேதங்கள் அனுமதிக்கப்படமாட்டாது.

7. உள்ளூர் சட்டம், ஏதேனுமிருப்பின், அல்லது மேற்சொன்ன அறிவுரைகளை மீறும் வகையில், யாதொரு அரசியல் கட்சி/ அமைப்பு / வேட்பாளர்/ நபர், உடைமைகளைச் சேதப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவாராயின், தேர்தல் நடத்தும் அலுவலர்/ மாவட்டத் தேர்தல் அலுவலர், தோற்றத்தைக் கெடுப்பவற்றை உடனடியாக அகற்றுமாறு, அக்குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு அறிவிப்பு வழங்குவார். அரசியல் கட்சி/ அமைப்பு /

வேட்பாளர் / நபர் முறையாகப் பதிலளிக்கவில்லையெனில் மாவட்ட அதிகாரிகள் உடைமையைச் சேதப்படுத்துவனவற்றை அகற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்கலாம். அத்தகைய சேதத்திற்குப் பொறுப்பான அரசியல் கட்சி/ அமைப்பு/ வேட்பாளர்/ நபரிடமிருந்து இத்தகைய செயல்களினால் ஏற்பட்ட செலவினத்தை திரும்பப் பெறலாம். மேலும், தொடர்புடைய வேட்பாளரின் தேர்தல் செலவினத்துடன் இந்தத் தொகை சேர்க்கப்பட வேண்டும். தொடர்புடைய சட்டத்தின் விதித்துறைகளின் கீழ், குற்றம் புரிந்தவரை விசாரிப்பதற்கான, நடவடிக்கை தொடங்கப்பட வேண்டும். (ஏனையோரின் உடைமைகளில் வேண்மென்றே சேதம் ஏற்படுத்தியதற்காக, சேதப்படுத்துவதிலிருந்து பாதுகாப்பது தொடர்பான சட்டம் ஏதேனுமிருப்பின், அதன் கீழ் அல்லது பொதுச் சட்டத்தின் விதித் துறைகளின் கீழ் ).

**வாகனங்களைச் சேதப்படுத்துதல்**

8. (a) மோட்டார் வாகனங்கள் சட்டத்தின் விதித் துறைகள், அவற்றின் கீழுள்ள விதிகள் மற்றும் நடைமுறையிலுள்ள நீதிமன்ற ஆணைகள் ஏதேனுமிருப்பின் அவற்றுக்கு உட்பட்டு, தனியார் வாகனங்களில், கொடிகள், ஸ்டிக்கர்கள் அந்த வாகனத்தின் உரிமையாளரால், அவரின் சொந்த விருப்பத்தில் பேரில், வாகனங்களில் ஒட்டப்படலாம். அவை, ஏனைய சாலைப்பயன்பாட்டாளர்களுக்கு, எந்த வகையிலும், யாதொரு வசதிகுறைவையோ அல்லது கவனத்தை திசை திருப்பும் விதத்திலோ அமையக்கூடாது. யாதொரு குறிப்பிட்ட வேட்பாளருக்கு வாக்கினை சேகரிக்கும் நோக்கில் அத்தகைய கொடிகள் மற்றும் ஸ்டிக்கர்களை காட்சிப்படுத்தப்படுமெனில், இந்தியத் தண்டனைச் சட்ட விதிக்கோவையின் 171 H ஆம் பிரிவின் விதித்துறைகள் ஈர்க்கப்பட்டு பின்பற்றப்பட வேண்டும்.

b) மாவட்ட தேர்தல் அலுவலர்/ தேர்தல் நடத்தும் அலுவலரிடமிருந்து தேவையான அனுமதியைப் பெற்ற பின்னர், தேர்தல் பிரச்சாரத்திற்காக முறையே பயன்படுத்தப்படுகிற வாகனம் நீங்கலாக ஏனைய வணிக வாகனங்களில், யாதொரு கொடி, ஸ்டிக்கர் போன்றவை காட்சிப்படுத்த அனுமதிக்கப்படமாட்டாது. அவ்வாறு பெற்ற அனுமதியின் மூல நகல், வாகனத்தில் முன்புறம் இருக்கும் கண்ணாடியில் (wind screen) காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

c) மோட்டார் வாகனங்கள் சட்டம்/விதிகள் மற்றும் ஏனைய யாதொரு உள்ளூர் சட்டம் / விதிகளில் உள்ள விதித்துறைகளின் நிபந்தனைகளுக்குட்பட்டு, வாகனங்களில் ஒலிபெருக்கியை பொருத்துதல் உட்பட அவற்றின் வாகனங்களின் வெளிப்புற மாற்றங்கள் மேற்கொள்ளப்படலாம். மோட்டார் வாகனங்கள் சட்டத்தின் கீழ், உரிய அதிகாரிகளிடமிருந்து தேவையான அனுமதியைப் பெற்றபின்னரே, மாற்றம் செய்யப்பட்ட வாகனங்கள் மற்றும் காணொலி ரதம் போன்ற சிறப்புப் பிரச்சார வாகனங்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.

**பிரச்சாரம் தொடர்பான ஏனைய இனங்கள்**

9. செலவினக் கணக்கைப் பொறுத்தமட்டில் பின்வருவன அனுமதிக்கப்படலாம்.

a) உள்ளூர் சட்டங்கள் மற்றும் நடைமுறையிலுள்ள தடையாணைகளுக்கு உட்பட்டு, ஊர்வலங்கள் மற்றும் திரளணிகள் போன்றவற்றில் கொடிகள், பதாகைகள், வெட்டுருக்கள் போன்றவற்றை எடுத்துச்செல்ல முடியும்;

b) அத்தகைய ஊர்வலங்களில், கட்சியால்/ வேட்பாளரால் அளிக்கப்பட்ட, தொப்பி, முகக்கவசம், கழுத்துத் துண்டு போன்ற சிறப்பு துணைப்பொருட்களை அணிவது அனுமதிக்கப்படலாம். இருப்பினும், கட்சியால்/ வேட்பாளரால் வழங்கப்பட்ட ஆடைகளான சேலை, சட்டை போன்ற முக்கியப் பொருட்கள் அனுமதிக்கப்பட மாட்டாது.

c) அரசியல் பிரச்விளம்பரப் பலகைகள் மற்றும் திரளணிகளுக்கு கல்வி நிறுவனங்களின் மைதானங்கள் (அதாவது அரசு உதவி பெறுபம் தனியார் அல்லது அரசு) உட்பட்ட கல்வி நிறுவன்ங்கள் பயன்படுத்தக்கூடாது.

10. தகவல் மற்றும் இணக்கத்திற்காக, தலைமை தேர்தல் அலுவலர்கள் ஆணையத்தின் உத்தரவுகளை, மாவட்ட தேர்தல் அலுவலர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் ஏனைய அனைத்து தேர்தல் தொடர்பான அதிகாரிகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில கட்சிகளின் மாநிலப் பிரிவுகள் உள்ளிட்ட மாநிலத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் மாநிலத்தைச் சேர்ந்த அனைத்து பதிவுசெய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத கட்சிகள் மற்றும் போட்டியிடும் வேட்பாளர்கள் (தேர்தல் நேரத்தின்போது) ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

11. இந்தக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகையை அளிக்கவும். மேற்சொன்னவை தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதைத் தலைமைத் தேர்தல் அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டும்.

**பிற்சேர்க்கை – 1**

**உடைமைகளைச் சேதப்படுத்துதல் - சட்டம்**

| **தொடர் எண்** | **மாநிலம்/ மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளின் பெயர்** | **சட்டம்/விதியின் பெயர்** | **பொருந்தக்கூடிய எல்லை** |
|---|---|---|---|
| 1 | ஆந்திரப்பிரதேசம் | ஆந்திரப்பிரதேசம், 1997 ஆம் ஆண்டு திறந்தவெளிகளை சேதப்படுத்துதல் மற்றும் அருவருப்பான மற்றும் மறுப்பிற்குரிய சுவரொட்டிகள் மற்றும் விளம்பரங்களைத் தடை செய்தல் சட்டம் | இச்சட்டம் மாநிலம் முழுவதற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. |
| 2. | அருணாச்சல பிரதேசம் | அருணாச்சலப் பிரதேசம் 1997 ஆம் ஆண்டு உடைமைகளைச் சேதப்படுத்துவதைத் தடைசெய்தல் சட்டம் | மாநிலம் முழுவதற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது |
| 3. | பீகார் | பீகார் 1985 ஆம் ஆண்டு உடைமைகளைச் சேதப்படுத்துவதைத் தடைசெய்தல் சட்டம் | மாநிலம் முழுவதற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது |
| 4. | சட்டீஸ்கர் | இம்மாநிலத்தில் இதற்கான சட்டம்/விதி எதுவும் இயற்றப்படவில்லை. ஆனால், இம்மாநிலத்தில், மத்தியப் பிரதேசம், 1994 ஆம் ஆண்டும், சம்பட்டி விருபான் நிவாரண் அதிநியம் பொருந்தத்தக்கதாகும். | மாநிலம் முழுவதற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது |

| | | | |
|---|---|---|---|
| 5. | கோவா | 1992 மற்றும் 2001 ஆம் ஆண்டு சட்டத்தின்படி திருத்தப்பட்டவாறாக கோவா 1988 ஆம் ஆண்டு உடைமைகளைச் சேதப்படுத்துவதைத் தடைசெய்தல் சட்டம், | மாநிலம் முழுவதற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது |
| 6. | ஹரியானா | ஹரியானா 1989 ஆம் ஆண்டு உடைமைகளைச் சேதப்படுத்துவதைத் தடைசெய்தல் சட்டம், காண்க 1996 ஆம் ஆண்டின் சட்டத்தினால் திருத்தப்பட்டது. | மாநிலம் முழுமைக்கும் பொருந்தும். |
| 7. | இமாச்சலப் பிரதேசம் | இமாச்சலப் பிரதேசம் 1985 ஆம் ஆண்டு திறந்த வெளி இடங்கள் சட்டம் (சேதப்படுத்துவதைத் தடைசெய்தல்) | மாநிலம் முழுமைக்கும் பொருந்தும் மற்றும் சிம்லா பேரூராட்சியில் அடங்கிய இடங்களில் ஒரு முறை செயலுக்கு வரும். மாநிலத்தில் எஞ்சிய பகுதியில்,மாநில அரசு அறிவிக்கை வெளியிடப்பட்ட அத்தகைய நாளிலிருந்து அமலுக்கு வரும். |
| 8. | **ஜார்கண்ட்** | தனி சட்டம் / விதி எதுவுமில்லை ஆனால், மாநிலத்தில், பீகார் 1985 ஆம் ஆண்டு உடைமைகளைச் சேதப்படுத்துவதைத் தடைசெய்தல் சட்டம் பொருந்தும். | மாநிலம் முழுமைக்கும் பொருந்தும். |

| | | | |
|---|---|---|---|
| 9. | ஜம்மு & காஷ்மீர் | ஜம்மு & காஷ்மீர் உடைமைகளைச் சேதப்படுத்துவதைத் தடைசெய்தல் சட்டம் எண் 19/1985 | மாநிலம் முழுமைக்கும் பொருந்தும். |
| 10. | கர்நாடகா | 1983 சட்டத்தின் வாயிலாகத் திருத்தப்பட்டவாறாக கர்நாடகா 1981 ஆம் ஆண்டு திறந்த வெளி இடங்கள் (சேதப்படுத்துவதைத் தடைசெய்தல்) சட்டம், | கர்நாடகா 1976 ஆம் ஆண்டு மாநகராட்சி சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட அல்லது தொடரப்பட்ட அல்லது 05.05.81 அன்று ஏனைய யாதொரு சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டு கர்நாடகா 1964 ஆம் ஆண்டு நகராட்சிகள் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட நகராட்சிகள், அறிவிக்கை வெளியிடப்பட்ட பகுதிகள், துப்புரவு வாரியங்கள், மாநில அரசின் அறிவிக்கை வெளியிடப்பட்ட அத்தகைய நாளிலிருந்து செயலுக்கு வந்த அல்லது ஏனைய யாதொரு சட்டத்தின் கீழ் அல்லது ஏனைய யாதொரு உள்ளூர் பகுதியில் அறிவிக்கை வாயிலாக மாநில அரசு நியமித்த பெங்களூர், மைசூர், ஹூப்ளி, தார்வார், மங்களூர் மற்றும் பெல்காம் பகுதிகளுக்குப் பொருந்தும். |

| | | | |
|---|---|---|---|
| 11. | மத்தியப்பிரதேசம் | மத்தியப் பிரதேசம் 1994 ஆம் ஆண்டு சம்பட்டி விருபான் நிவாரண் அதிநியம் | மாநிலம் முழுமைக்கும் பொருந்தும். |
| 12. | மகாராஷ்டிரா | உடைமைகளைச் சேதப்படுத்துவதைத் தடைசெய்தல் தொடர்பான மகாராஷ்டிரா சட்டம் 8/1995. | பொருந்தக்கூடிய பரப்பளவு பற்றி எவையும் குறிப்பாகச் சுட்டிக்காட்டப்படவில்லை |
| 13. | மிசோரம் | **மிசோரம் 1995 ஆம் ஆண்டு உடைமைகளைச் சேதப்படுத்துவதைத் தடைசெய்தல் சட்டம்** | மாநிலம் முழுமைக்கும் பொருந்தும். |
| 14. | நாகலாந்து | **நாகலாந்து 1958 ஆம் ஆண்டு உடைமைகளைச் சேதப்படுத்துவதைத் தடைசெய்தல் சட்டம்** | மாநில அரசால் அறிவிக்கை வெளியிடப்பட்ட அத்தகைய நாளிலிருந்து அமலுக்கு வரும் ஏனைய யாதொரு உள்ளூர் பகுதி அல்லது பகுதிகளில் அசாம் 1950 ஆம் ஆண்டு பழங்குடியினர் பகுதிகளை (டவ் குழுவின் நிருவாகம்) முறைப்படுத்துதல் சட்டத்தின் கீழ், ஏற்படுத்தப்பட்டு அறிவிக்கப்பட்ட பகுதிகளுக்கு இது நீட்டிக்கபட்டுள்ளது என அனுமதிக்கப்படலாம். |
| 15. | பஞ்சாப் | **பஞ்சாப் 1998 ஆம் ஆண்டு உடைமைகளைச் சேதப்படுத்துவதைத் தடைசெய்தல் சட்டம்** | மாநிலம் முழுமைக்கும் பொருந்தும். |

| | | | |
|---|---|---|---|
| 16. | சிக்கிம் | **சிக்கிம் 1988 ஆம் ஆண்டு உடைமைகளைச் சேதப்படுத்துவதைத் தடைசெய்தல் சட்டம்** | மாநிலம் முழுமைக்கும் பொருந்தும். |
| 17. | தமிழ்நாடு | 1992 ஆம் ஆண்டு சட்டத்தின் வாயிலாக திருத்தப்பட்டவாறாக தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு திறந்த வெளிகள் (சேதப்படுத்துவதைத் தடைசெய்தல்) சட்டம், | மாநிலம் முழுமைக்கும் பொருந்தும். |
| 18. | திரிபுரா | திரிபுரா 1976 ஆம் ஆண்டு சொத்துக்களைச் சேதப்படுத்துவதைத் தடைசெய்தல் சட்டத்துடன், திருபுரா 1998 ஆம் ஆண்டு (சொத்துக்களை சேதப்படுத்துவதை தடைசெய்தல் சட்டம்) சட்டவரைவுடன் சேர்ந்து இம்மாநிலத்தில் தற்போது செயல்பாட்டிலுள்ளது. | மாநிலம் முழுமைக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது மற்றும் முதல் நிகழ்வாக அகர்தலா நகரத்தின் நகராட்சி சார்ந்த எல்லைகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. ஆனால் மாநில அரசின் அரசிதழில் அவ்வப்போது வெளியிடப்படும் அத்தகைய ஏனைய உள்ளூர் பகுதிகள் அல்லது அறிவிக்கையில் குறிப்பிடப்பட்ட பகுதிகளுக்கு பொருந்தும் |
| 19. | உத்தர்காண்ட் | உத்தராஞ்சல் 2003 ஆம் ஆண்டு பொது உடைமைகளைச் சேதப்படுத்துவதைத் தடைசெய்தல் சட்டம் | மாநிலம் முழுமைக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 20. | அந்தமான் & நிக்கோபார் | 1987ஆம் ஆண்டு அந்தமான்& நிக்கோபார் தீவுகளில் சொத்துகளைச் சேதப்படுத்துதலைத் தடுப்பதற்கான விதிமுறை. | இது,அந்தமான் & நிக்கோபார் தீவுகளின் மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதி முழுவதற்கும் பொருந்தும். |
| 21. | சண்டிகர் மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதி | 1976 ஆம் ஆண்டு மேற்கு வங்காளத்தில் சொத்துகளைச் சேதப்படுத்தல் சட்டம், சண்டிகர் மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிக்குப் பொருந்துமாறு செய்யப்பட்டது. | இது மாநிலம் முழுவதற்கும் பொருந்தும் |
| 22. | டில்லி | 1976 ஆம் ஆண்டு மேற்கு வங்காளத்தில் சொத்துகளைச் சேதப்படுத்தல் சட்டம், டில்லிக்குப் பொருந்துமாறு செய்யப்பட்டது.(ஒரு தனிச்சட்டம் உருவாகக் கருதப்படுகிறது) | இது மாநிலம் முழுவதற்கும் பொருந்தும் |
| 23. | பாண்டிச்சேரி | 2000 ஆம் ஆண்டு பாண்டிச்சேரி திறந்த வெளிகள் [உருக்குலைத்தலைத் தடுத்தல்] சட்டம். | இது பாண்டிச்சேரியின் மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதி முழுவதற்கும் பொருந்தும். |

சொத்துகளைச் சேதப்படுத்துதலைத் தடுப்பது குறித்த யாதொரு குறிப்பிட்ட சட்டம் இல்லாத மாநிலங்கள்

| தொடர் எண் | மாநிலம் / மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதியின் பெயர் | |
|---|---|---|
| 1. | அசாம் | சட்டம் ஏதுமில்லை |
| 2. | குஜராத் | சட்டம் ஏதுமில்லை |
| 3. | கேரளா | சட்டம் ஏதுமில்லை |
| 4. | மணிப்பூர் | சட்டம் ஏதுமில்லை |
| 5. | மேகாலயா | சட்டம் ஏதுமில்லை |
| 6. | ஒரிசா | சட்டம் ஏதுமில்லை |
| 7. | இராஜஸ்தான் | இந்தப் பொருண்மை குறித்துக் குறிப்பிட்ட சட்டம் ஏதுமில்லை. ஆனால் இராஜஸ்தான் 1959 ஆம் ஆண்டு நகராட்சிகள் சட்டத்தின் 198 ஆம் பிரிவின் படி உரிமையாளர் அல்லது குடியிருப்பவரின் அனுமதியின்றி மற்றும் நகராட்சி சொத்து குறித்த நேர்வில் விளம்பரப் பலகையில் எழுதுதல், யாதொரு சுவரொட்டியை ஒட்டுதல், சுவரொட்டி, விளம்பர அட்டை (அல்லது) விளம்பரப்பலகை, அல்லது ஏனைய காகிதம் அல்லது வேறு வழிகளில் விளம்பரம் செய்தல் ஆகியவற்றுக்கு இருபது ரூபாய் வரையில் |

| | | |
|---|---|---|
| | | அபராதம் விதிக்கக்கூடிய தண்டனைக்குட்பட்டதாகும். |
| 8. | உத்தரப் பிரதேசம் | சட்டம் ஏதுமில்லை |
| 9. | மேற்கு வங்காளம் | **முன்னர் 1976 ஆம் ஆண்டு மேற்கு வங்காள உடைமைகளைச் சேதப்படுத்துதலைத் தடுப்பதற்கான ஒழுங்குபடுத்தல் சட்டம் இருந்தது. (மேற்கு வங்காளச் சட்டம் 1976/21) இந்தச் சட்டம் பின்னர் ரத்துசெய்யப்பட்டது.** |
| 10. | தாத்ரா & நகர் அவேலி | சட்டம் ஏதுமில்லை |
| 11. | டாமன் & டையு | சட்டம் ஏதுமில்லை |
| 12. | இலட்சத்தீவுகள் | சட்டம் ஏதுமில்லை |

**பிற்சேர்க்கை – 2**

**………………………..…நாடாளுமன்றத் தொகுதியின்/ சட்டமன்றத் தொகுதியின் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் திரு/திருமதி/ செல்வி…………………………… என்பவரால் காட்சிக்கு வைக்கப்பட்ட சுவர் எழுத்துக்கள்/ சுவரொட்டிகள்/ விளம்பரத் தட்டிகள்/ விளம்பரப் பதாகைகள் போன்றவைகளின் விவரங்களைத் தெரிவிக்கும் விவரஅறிக்கை.**

**கிராமத்தின்/ நகரத்தின்/ இடத்தின் பெயர்………………………..…**

| தொடர் எண் | எழுத்து மூலமான னுமதி பெறப்பட்ட தனியார் சொத்து உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி | சுவர் எழுத்துக்கள் அல்லது விளம்பரப்த்தட்டிகள் அல்லது விளம்பர பதாகைகள் அல்லது சுவரொட்டிகளின் விவரங்கள் [சுவர் எழுத்துகள்/ விளம்பரத் தட்டிகள்/ விளம்பரப் பதாகைகள்/ சுவரொட்டிகளின் அளவு குறிப்பிடப்படவேண்டும்] | சுவர் எழுத்துகள்/ விளம்பரத் தட்டிகள்/விளம்பர பட்டிகைகள்/ சுவரொட்டிகள், போன்றவைகளுக்குச் செய்யப்பட்ட (அல்லது) செய்யப்படக்கூடிய செலவினம் (ரூபாய்) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | மொத்தம் |

## இணைப்பு – III

அனைத்து மாநிலங்கள்/ மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமை தேர்தல் அதிகாரிகளுக்குத் தேர்தல் ஆணையத்தின் 10.04.2014 ஆம் நாளிட்ட 464/INST/2014 ஆம் எண் கடிதம்.

**பொருள்: 2014 ஆம் ஆண்டு மக்களவை பொதுத் தேர்தல் – தேர்தலின் போது வாகனங்கள் பயன்படுத்துதல் மீதான தொகுக்கப்பட்ட உத்தரவுகள் – தொடர்பாக.**

அனைத்து வாக்காளர்களுக்கும் ஏனைய பொறுப்பாளர்களுக்கும் சமவாய்ப்பளிக்கும் நோக்கிலும் மேலும் பணத்தைத் தவறாகப் பயன்படுத்துவதையும் அரசு இயந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தப்படுவதையும் கண்காணிக்கவும் விளக்கமளிப்பதற்காகவும் எளிதில் குறிப்பிடுவதற்காகவும் மேற்சொன்ன பொருண்மைமீது கடந்த காலத்தில் ஆணையம் பல உத்தரவுகளைப் பிறப்பித்தது. மக்களவை, மாநிலச் சட்டச் சபைகளுக்கான அனைத்துப் பொது / இடைத் தேர்தல்களின் போதும் சட்டமன்றங்களின் பட்டதாரிகள் மற்றும் ஆசிரியர்களுக்கான தொகுதிகளின் இருவருடத்திற்கொருமுறையான தேர்தல்கள்/ இடைத்தேர்தல்களின் போதும் வழிகாட்டுதலுக்காகவும் இணங்கி நடப்பதற்காகவும் மீண்டும் பிறப்பிக்கப்படுகின்றன.

**பொருந்தக்கூடிய காலம்-**

2. தேர்தல் நாள் அறிவிக்கப்பட்ட நாள் முதல் தேர்தல்கள் முடியும் வரை இந்த உத்தரவுகள் செயலில் இருக்கும்.

**‘அலுவலக வாகனம்’ என்பதன் பொருள்**

3. ’அலுவலக வாகனம்’ என்பது, (i) மத்திய அரசு, (ii)மாநில அரசுகள்/மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகள், (iii) மத்திய மற்றும் மாநில அரசுகளின் பொதுத் துறை நிறுவனங்கள், (iv) மத்திய மற்றும் மாநில அரசுகளின் கூட்டுத் துறை நிறுவனங்கள், (v)உள்ளூர் அமைப்புகள் (vi)மாநகராட்சிகள், (vii) நகராட்சிகள், (viii) விற்பனை வாரியங்கள் [தெரிந்த பெயரில்], (ix)கூட்டுறவுச் சங்கங்கள், (x)தன்னாட்சி மாவட்ட மன்றங்கள் அல்லது மொத்தப் பொது நிதியில் தொகையுள் ஒரு சிறு பங்கு முதலீடு செய்யப்பட்டிருக்கும், ஏனைய யாதொரு அமைப்பு ஆகியவற்றுக்குச் சொந்தமான

இயந்திர ஆற்றல் மூலம் இயங்கக்கூடிய போக்குவரத்திற்காகப் பயன்படக்கூடிய அல்லது பயன்படுத்தத்தக்க திறனுடைய யாதொரு வண்டி மற்றும் டிரக்குகள், லாரிகள், டெம்போக்கள், ஜீப்புகள், கார்கள், ஆட்டோ ரிக்ஷாக்கள், மின் – ரிக்ஷாக்கள், பேருந்துகள் ஆகியவை அடங்கும். பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் உள் விவகாரங்கள் அமைச்சகத்தின் கீழுள்ள மத்தியப் பொது அமைப்புகள் மற்றும் மாநில அரசுகளுக்குச் சொந்தமான வண்டிகளும் இதில் அடங்கும்.

**இந்தியத் தேர்தல் ஆணையத்தின் உத்தரவுகள்**

4. இங்கே குறிப்பிட்டுள்ள விதிவிலக்குகளுக்குட்பட்டு, தேர்தலின் போது பிரச்சாரம், தேர்தல் அல்லது தேர்தல் சார்ந்த பயணங்களுக்கு அலுவலக வாகனங்களைப் பயன்படுத்த முழுமையாகவும் முற்றிலுமாகவும் தடைவிதிக்கப்படுவதாக எனத் தேர்தல் ஆணையம் உத்தரவிடுகிறது. i) மத்திய அரசு, (ii)மாநில அரசுகள்/மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகள், (iii) மத்திய மற்றும் மாநில அரசுகளின் பொதுத் துறை நிறுவனங்கள், (iv) மத்திய மற்றும் மாநில அரசுகளின் கூட்டுத் துறை நிறுவனங்கள், (v)உள்ளூர் அமைப்புகள் (vi) விற்பனை வாரியங்கள், (vii)கூட்டுறவுச் சங்கங்கள், (viii)தன்னாட்சி மாவட்ட மன்றங்கள் அல்லது யாதொரு அரசியல் கட்சி, வேட்பாளர் அல்லது தேர்தலுடன் தொடர்புடைய ஏனைய பிற நபரால் (யாதொரு தேர்தல் தொடர்பான பணியை மேற்கொள்ளும் அலுவலர்கள் தவிர) தேர்தல்கள் தொடர்பாக மொத்தப் பொதுநிதியில் ஒரு சிறு பங்கு முதலீடு செய்யப்பட்டிருக்கும், ஏனைய யாதொரு அமைப்பு ஆகியவற்றுக்குச் சொந்தமான ஹெலிகாப்டர்கள், வானூர்திகள்,(இந்தப் பொருண்மையைக் குறித்த ஆணையத்தின் உத்தரவின் பேரில் கட்டுப்படுத்தப்பட்டவைகள் தவிர), கார்கள், ஜீப்புகள், ஆட்டோமொபைல்கள், படகுகள், மீவானூர்திகள் போன்றவற்றைப் பயன்படுத்த முற்றிலும் தடைவிதிக்கப்படும்.

5.மேற்சொன்ன பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள யாதொரு அதிகார அமைப்பிற்குச் சொந்தமான யாதொரு அலுவலக வாகனம் தேர்தல் காரணத்திற்காகப் பயன்படுத்தப்படுவதை மாவட்ட நிருவாகம் கவனமாகக் கண்காணிக்க வேண்டுமென ஆணையம் மேலும் உத்தரவிடுகிறது. அவ்வாறு இருப்பின், மாவட்ட மாஜிஸ்திரேட், உடனே, உரிய நடைமுறையைப் பின்பற்றி அத்தகைய வாகனங்களைக் கைப்பற்ற

அல்லது கைப்பற்றுவதற்குகோர வேண்டும். தேர்தல் பணிக்காக, 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 160 ஆம் பிரிவின் கீழ், அவ்வாறு கைப்பற்றப்பட்ட வாகனங்களைத் தேர்தல் நடைமுறைகள் முடியும் முன்னர் விடுவிக்கக்கூடாது.

**விளக்கங்கள்**

6. வாக்குப்பதிவு நடைபெறாத யாதொரு மாநிலங்களின் அல்லது மாநிலங்களிருந்து வந்து வாக்குப்பதிவு நடைபெறுகின்ற ஏனைய யாதொரு மாநிலத்தில் வெளிப்படையாக அல்லது மறைமுகமாகத் தேர்தல் பிரச்சாரத்திற்காகப் பயன்படுத்தப்படுவதற்குக் கருதப்படுகின்ற வாகனங்களுக்கும் இந்தத் தடை பொருந்தும் என விளக்கமளிக்கப்படுகிறது. யாதொரு அமைச்சகம்/துறை அல்லது யாதொரு பொதுப் பணித்துறை அல்லது தனியார் பங்களிப்புடன் கூடிய பொதுத்துறை நிறுவனம் அல்லது தன்னாட்சி அமைப்புகள் அல்லது அந்த அமைச்சகம்/ துறையுடன் இணைக்கப்பட்ட அலுவலகங்களின் கீழ் யாதொரு வாகனத்தைத் தவறாகப் பயன்படுத்துவதற்கு நேர்விற்கேற்ப, ஒவ்வொரு மாநிலம்/ மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதியின் தலைமைச் செயலாளர்/ சம்பந்தப்பட்ட துறையின் அரசுச் செயலாளர் தனிப்பட்ட முறையில் பொறுப்பாவர். எந்த அலுவலரின் பொறுப்பில் அத்தகைய வாகனங்கள் உள்ளதோ யாதொரு விதிமீறலுக்கு அவரும் பொறுப்பாவார்.

7. அமைச்சர் என்ற அதிகாரத்தினைப் பயன்படுத்தி அலுவலகப் பணி எனப் பொய்யாகச் சான்றளிக்கப்பட்டு எந்த ஒரு தேர்தல் பரப்புரைக்காக அல்லது தேர்தலுடன் தொடர்புடைய சுற்றுப்பயணங்களுக்காக, கட்டண அடிப்படையில் என்றாலும், மத்திய அல்லது ஒரு மாநில அரசின் அமைச்சர்கள் உள்ளிட்ட, யாதொரு நபரால், இந்த யாதொரு அதிகார அமைப்புகளின் அத்தகைய வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது என்று மேலும் விளக்கமளிக்கப்படுகிறது.

**விதிவிலக்கு**

8.தீவிரவாதிகள் மற்றும் தீவிரவாத நடவடிக்கைகளால் பிரதமர் மற்றும் ஏனைய அரசியல் நபர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்பதைக் கருத்தில் கொண்டு, இதற்காக நாடாளுமன்றம் அல்லது மாநிலச் சட்ட மன்றத்தால் அமைக்கப்பட்ட யாதொரு

சட்டப்பூர்வமான விதித்துறைகளால் நிர்வகிக்கப்படும் உயரளவு பாதுகாப்பு தேவைப்படுகிறவர்களுக்கு இந்தத் தடையிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படும்.

9. மேற்சொன்ன கட்டுப்பாடுகள் இந்தியக் குடியரசுத் தலைவர் மற்றும் குடியரசு துணைத் தலைவர், மக்களவை சபா நாயகர் மற்றும் துணை சபாநாயகர் மற்றும் மாநிலங்கள் அவை துணைத் தலைவர் மற்றும் பிற மாநிலத்திலிருந்து மாநிலத்தைப் பார்வையிட வரும் அத்தகைய யாதொரு பிரமுகர்களுக்கு அவர்களுக்கும் பொருந்தாது. எனினும், மக்களவைக்கான பொதுத் தேர்தலின் போது மக்களவையின் சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் மற்றும் மாநில அவையின் துணைத் தலைவர்களுக்கு இந்தக் கட்டுப்பாடுகள் பொருந்தும் என்றும் ஆனால் சட்டமன்றத் தேர்தலின் போது பொருந்தாது என்றும் மேலும் விளக்கமளிக்கப்படுகிறது. யூனியன் அல்லது மாநில அரசின் ஏனைய அமைச்சர்களைப் பொறுத்தவரையில், அத்தகைய விதிவிலக்குகள் அளிக்கப்படாது என மீண்டும் தெளிவுபடுத்தப்படுகிறது.

10. (a) குறிப்பிட்ட கட்சி அல்லது வேட்பாளரின் தேர்தல் நலன்களை மறைமுகமாக ஊக்குவிக்கும் நோக்கத்தில் 1988 ஆம் ஆண்டு சிறப்பு பாதுகாப்பு தொகுதி சட்டத்தின் கீழ் அல்லது அரசின் ஏனைய யாதொரு சிறப்பு சட்டம் / உத்தரவுகளின் கீழ் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்புத் தேவைகளின் மதிப்பீடு வெளிப்படையாக அல்லது மிகவும் மிகையாகச் செய்யப்பட்டுள்ளதாக ஐயம் கொள்வதற்கு ஏதேனும் சான்றாவணம் வைத்திருப்பின் உடனடியாக உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டிச் சம்பந்தப்பட்ட அரசின் கவனத்திற்கு இந்தப் பிரச்சினையை ஆணையம் கொண்டு செல்லும்.

10. (b) இந்த நோக்கத்திற்காக, அத்தகைய யாதொரு நபருக்கு மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு தேவைகளின் மதிப்பீடு குறித்து மத்திய அரசு அல்லது சம்பந்தப்பட்ட மாநில அரசிடமிருந்து யாதொரு தகவலையும் ஆணையம் கோரலாம். அத்தகைய தகவல் சம்பந்தப்பட்ட அரசால் உடனடியாக ஆணையத்திற்கு அளிக்கப்படவேண்டும்.

**ஒன்றாகச் செல்லும் வாகனங்கள் மீதான தடை**

11. பாதுகாப்பு வாகனங்கள் நீங்கலாக, எந்தச் சூழ்நிலையிலும், பத்துக்கு மிகுதியான கார்கள்/வாகனங்கள், வாகனங்கள் ஒன்றாகச் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது என ஆணையம் மேலும் உத்தரவிடுகிறது. மத்திய அரசு அல்லது மாநில அரசின் யாதொரு

அமைச்சர் அல்லது ஏனைய பிற நபரை அழைத்துச் சென்றாலும், 10 (பத்து) வாகனங்களுக்கு மேற்பட்ட அனைத்துப் பெரிய பாதுகாப்பு வாகனக் குழுக்கள் பிரிக்கப்படும். எனினும், அத்தகைய யாதொரு தனிநபருக்குப் பிறப்பிக்கப்பட்ட யாதொரு பாதுகாப்பு உத்தரவுகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும்.

12. மேலே வரையறுக்கப்பட்ட அளவுக்கு அதிகமான வாகன அணிவகுப்புடன் ஒருவர் சென்றால், வாகன அணிவகுப்பு உடைக்கப்பட்டும், தேர்தல் நடைமுறைகள் முடியும் வரை, ஆணையத்தின் உத்தரவுகளை மீறி அத்தகைய வாகனங்கள் அனுமதிக்கப்படாததை உறுதி செய்வது உள்ளூர் நிருவாகத்தின் கடமையாகும்.

**வேட்பு மனு தாக்கல் செய்யும் போது:**

13. தேர்தல் நடத்தும் அலுவலர்கள்/ உதவித் தேர்தல் நடத்தும் அலுவலர்களின் அலுவலகத்தைச் சுற்றியுள்ள 100 மீட்டர் பரப்பளவிற்குள் பிரச்சாரத்திற்குச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ள வாகனங்களின் உயரளவு எண்ணிக்கை 3.

**தேர்தல் பிரச்சாரத்திற்கு வாகனங்களைப் பயன்படுத்தல்**

14. ஒரு வேட்பாளர் தேர்தல் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தும் வாகனங்களுக்கு எண்ணிக்கைக்கு எந்த வரையறையும் இல்லை.

15. ஆனால் தேர்தல் பரப்புரை தொடங்கும் முன்னர், மாவட்டத் தேர்தல் அலுவலர் அல்லது இதற்காக மாவட்டத் தேர்தல் அலுவலரால் திட்டவட்டமாக அதிகாரமளிக்கப்பெற்ற அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய யாதொரு அலுவலர்/ அலுவலர்களிடம் பிரச்சாரம் செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் அத்தகைய வாகனங்கள் மற்றும் பகுதிகளின் விவரத்தினை அளிக்க வேண்டும். அவர் தேவையான கூர்ந்தாய்வுக்குப் பின்னர் அனுமதி வழங்குவார். வாகனத்தின் முகப்பு கண்ணாடியில் அந்த அனுமதியின் அசல் படி (நகல் அல்ல) காட்சிப்படுத்தப்பட வேண்டும். தொலைவிலிருந்தும் பார்க்கக்கூடிய வகையில் இந்த அனுமதியின் அளவு இருக்கவேண்டும். வாகன எண், அனுமதி வழங்கப்பட்ட நாள், வேட்பாளரின் பெயர் மற்றும் (தேர்தல் பிரச்சாரத்திற்காக எந்தப் பகுதியில் பயன்படுத்தப்படுகிறது) ஆகிய விவரங்கள் அனுமதியில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

16. தேர்தல் பிரச்சாரத்திற்குக் கூடுதல் வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு, வேட்பாளரால் அல்லது அவரின் முகவரால் அதற்கான அறிவிப்பு அளிக்கப்பட்டபின்னர், அவ்வாறு கூடுதல் வாகனங்கள் பயன்படுத்தலாம். அந்த வண்டிகள் பயன்படுத்துவதற்கு முன்னர், அவற்றிற்கான அனுமதிகளைப் பெற வேண்டும்.

17.அவ்வாறு பெறப்பட்ட விவரங்கள் மாவட்டத் தேர்தல் அலுவலர், தேர்தல் செலவினக் கண்காணிப்பாளரிடம் தெரிவிப்பார். அவர் இது தொடர்பான செலவினம் வேட்பாளரின் செலவினக் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளதைச் சரிபார்ப்பார்.

18.மேற்குறிப்பிட்ட அதிகாரியின் உரிய அனுமதி பெறாமல் பயன்படுத்தப்படும் யாதொரு வாகனமானது வேட்பாளருக்கு அங்கீகரிக்கப்படாத வகையில் பிரச்சாரம் செய்யப்படுவதாகக் கருதப்பட்டு, இந்தியத் தண்டனை விதிக்கோவையின் IX A ஆம் அத்தியாயத்தின் தண்டனை விதித்துறைகளுக்கு உட்படுவதுடன், பிரச்சாரப் பணியிலிருந்து உடனடியாக அகற்றப்படும்.

19 மாவட்ட நிருவாகத்திடம் வேட்பாளர் அல்லது அவரின் தேர்தல் முகவரால் அளிக்கப்பட்ட தகவலின் படி தேர்தல் பிரச்சாரத்திற்குப் பணியமர்த்தப்பட்ட வாகனங்களை நிருவாகம் கைப்பற்றக்கூடாது.

20. 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின், 77(1) ஆம் பிரிவின் கீழ் விளக்கம் (1) இன் பகுதி (a) இன் பயனை அரசியல் கட்சித் தலைவர்கள் அதாவது நட்சத்திரப் பேச்சாளர்கள் பெறுவதற்கு. யாதொரு தலைவர் தேர்தல் பிரச்சாரத்திற்காக மாநிலம் முழுவதும் ஒரே வாகனத்தைப் பயன்படுத்தினாலும் அத்தகைய கட்சித் தலைவர்கள் வெவ்வேறு வாகனங்களை வெவ்வேறு பகுதிகளுக்குப் பயன்படுத்தினாலும் சாலை போக்குவரத்திற்கான அனுமதி தலைமை தேர்தல் அலுவலரால் வழங்கப்படும். சம்பந்தப்பட்ட நட்சத்திரப் பேச்சாளரின் பெயரில் அனுமதி வழங்கப்பெறும். அவர் யாதொரு பகுதியில் பயன்படுத்தப்படும் அவரின் வாகனத்தின் முகப்பு கண்ணாடியில் தெளிவாக அதனைக் காட்சிப்படுத்த வேண்டும். வேட்பாளர்களுக்கு மாவட்டத் தேர்தல் அலுவலர்களால்/ தேர்தல் நடத்தும் அலுவலர்களால் அளிக்கப்படும் பிரச்சார வாகனங்களின் அனுமதி அட்டைகளின் வண்ணம் தலைமைத் தேர்தல் அலுவலரால் வழங்கப்படும் அனுமதி அட்டையின் வண்ணத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டிருக்கும்.

21. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியிடமிருந்து கோரிக்கை பெற்றவுடன், அங்கீகரிக்கப்பட்ட கட்சியின் மாவட்ட அளவிலான பொறுப்பாளர் ஒருவர் (நட்சத்திரப் பேச்சாளர் தவிர) தேர்தல் பணிக்காக மாவட்டத்தின் பல சட்டமன்றத் தொகுதிகளைப் பார்வையிடுவதற்காக அவர் பயன்படுத்த ஒரு வாகனத்திற்கு மாவட்டத் தேர்தல் அலுவலர் அனுமதி வழங்குவார். வாகனத்தின் எண், அரசியல் தலைவரின் பெயர் மற்றும் வழங்கப்பட்டுள்ள காலம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு அந்த அனுமதி வழங்கப்படவேண்டும். எளிதில் அடையாளம் காணும் பொருட்டு வெவ்வேறு வண்ணத்தில் இருக்க வேண்டும். சான்றொப்பம் அளிக்கப்பட்ட நகல் வாகனத்தின் முகப்புக் கண்ணாடியில் ஒட்டப்பட்டிருக்க வேண்டும் காவலர் மற்றும் பிற அதிகாரிகளால் சோதனையிடும் போது காட்டுவதற்காக ஓட்டுநர் அசலை வைத்திருக்க வேண்டும். இதற்கான செலவினம் வேட்பாளர்களின் கணக்கில் அல்லாது அரசியல் கட்சியின் கணக்கில் கணக்கு வைக்கப்படும்.

22. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி நிர்வாகிகள், தேர்தல் பணிகளுக்காக மட்டும் மாநிலம் முழுவதும் பயன்படுத்துவதற்கான வாகனங்களுக்கான அனுமதியை தலைமை தேர்தல் அதிகாரி வழங்கலாம். 100 க்கும் மேற்பட்ட சட்டமன்ற தொகுதிகளைக் கொண்டுள்ள மாநிலங்களின் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினருகு உயரளவான ஐந்து வாகனங்களையும் மீதமுள்ள மாநிலங்கள்/மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளுக்கு உயரளவான மூன்று வாகனங்களுக்கான அனுமதியை தலைமை தேர்தல் அதிகாரி வழங்கலாம். இந்த வாகனங்களுக்கான செலவினங்கள் அரசியல் கட்சியினரால் மேற்கொள்ளப்பட வேண்டுமேயன்றி வேட்பாளர்களால் அல்ல.

23. ஏதேனும் அரசியல் கட்சியினர், மாநிலம் முழுவதும் அவர்களின் பல்வேறு கட்சி அலுவலகங்களில் விளம்பரப் பொருட்களை வினியோகிப்பதற்காக வாகன அனுமதி வழங்கும்படி தலைமை தேர்தல் அதிகாரியிடம் கேட்டுக்கொள்வதன்பேரில், ஒரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிக்கு (தேசிய/மாநில) ஒரு வாகனத்திற்கான அனுமதியை தலைமை தேர்தல் அதிகாரி வழங்கலாம். இருப்பினும், தொடர்புடைய அரசியல் கட்சி (விண்ணப்பதாரர்) மாவட்டத்தின் பெயர், வழித்தடம் குறித்த வரைபடம் மற்றும் மேலே குறிப்பிட்ட பயன்பாட்டிற்காக வாகனம் தேவைப்படும் நாட்கள் ஆகியவற்றை குறிப்பிட வேண்டும். அத்தகைய வாகனங்களுக்கான அனுமதியை தலைமை தேர்தல் அதிகாரி வழங்கலாம். இருப்பினும், அத்தகைய வாகனங்கள் வழக்கமான சோதனைகளுக்கு

உட்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும், அவை தேர்தல் பிரச்சாரத்திற்காக பயன்படுத்தபடவில்லை என்பதையும் உறுதி செய்ய வேண்டும். அத்தகைய வாகனங்களுக்கான செலவினங்கள் அரசியல் கட்சியினரால் மேற்கொள்ளப்பட வேண்டுமேயன்றி வேட்பாளர்களால் அல்ல.

24. மாநிலங்கள் முழுவதுமான பிரச்சாரத்திற்காக, அரசியல் கட்சியால் வீடியோ-வேன்கள் போன்றவை பயன்படுத்தப்படவிருக்கின்ற நேர்வில், பிரச்சாரத்திற்காக வீடியோ-வேன்களைப் பயன்படுத்துவதற்காக ஏதேனும் அனுமதி வழங்கப்படுதற்கு முன்னர், வாகனத்தின் அத்தகைய பயன்பாடு, மோட்டார் வாகனச் சட்டத்தின்படியுள்ளதா என்று தலைமை தேர்தல் அலுவலர் உறுதி செய்யவேண்டும். 2006 ஆம் ஆண்டு 3648(MB) –ன் ரிட் மனுவில் அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் 23.06.2006 மற்றும் 14.02.2007 ஆம் நாளிட்ட தீர்ப்புகளின் மீது கவனம் ஈர்க்கப்படுகிறது.

## விளக்கங்கள்

25. 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 160 ஆம் பிரிவில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, சைக்கிள் ரிக்‌ஷாவும் ஒரு வாகனம் ஆகும். இதனையும் தேர்தல் பிரச்சாரத்தில் பயன்படுத்தலாம். இவ்வாகனம் பயன்படுத்தபடுமாயின், இதற்கான செலவினத்தை, வேட்பாளர் அவரது தேர்தல் செலவினக் கணக்குகளில் சேர்க்க வேண்டும். இதனை உறுதி செய்வதற்காக, வேட்பாளர் அவரது தேர்தல் பிரச்சாரத்திற்காகப் பயன்படுத்துகின்ற அத்தகைய ரிக்‌ஷாக்கள் பற்றிய தகவல்களை அளிக்க வேண்டும். ரிக்‌ஷாவை அடையாளப்படுத்துவதற்காக, யாதொரு நகராட்சி பதிவு/அனுமதியை அந்த ரிக்‌ஷா பெற்றிருக்கவில்லையென்றால், ரிக்‌ஷா ஓட்டுநரின் பெயரிலான அனுமதிச் சீட்டை தேர்தல் நடத்தும் அலுவலர் ரிகஷா ஓட்டுநருக்கு வழங்கலாம். தேர்தல் பிரச்சார நோக்கங்களுக்காக, அந்த ரிக்‌ஷாவை பயன்படுத்துகின்றபோது, ரிக்‌ஷா ஓட்டுநர், அந்த அனுமதிச் சீட்டை வைத்திருக்க வேண்டும். எனினும், வழக்கமாகப் பயணிகளை அழைத்து செல்வதற்கான பொதுவான காரணங்களுக்காகப் பயன்படுத்தப்படும் ரிக்‌ஷாக்களுக்கு ,ரிக்‌ஷா ஓட்டுநர்கள் அவரது சொந்த விருப்பத்தின்பேரில், வேட்பாளரின் பெயர் அல்லது அவரது கட்சி சின்னத்தைக் காட்டுகின்ற ஒரே ஒரு சுவரொட்டியை மட்டும் அவர்கள் காட்சிப்படுத்துவாராயின் அவர்களுக்கு அதற்கு விலக்களிக்கப்படலாம்.

## வாக்குப்பதிவு நாளன்று வாகனங்களின் பயன்பாடு

26. வாக்குச் சாவடிக்கு வாக்காளர்களை இலவசமாக அழைத்துச் சென்றுவருவதற்கு வேட்பாளர் அல்லது அவரது தேர்தல் முகவரின் ஒப்புதலுடன், வேட்பாளரால் அல்லது அவரது முகவரால் அல்லது ஏனைய யாதொரு நபரால் வாகனங்கள் வாடகைக்கு எடுக்கப்படுவது அல்லது வாங்கப்படுவது அல்லது பயன்படுத்தப்படுவது என்பது ”ஊழல் நடவடிக்கையாகும்” என்று 1951 ஆம் ஆண்டு, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 123(5) ஆம் பிரிவுவில் வகைசெய்யப்பட்டுள்ளது. 1951 ஆம் ஆண்டு, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 133 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய ‘ஊழல் நடவடிக்கை’ தண்டனைக்குட்பட்டு ஐநூறு ரூபாய் வரையிலான அபராதத்துடன் கூடிய தண்டனை விதிக்கத்தக்கதாகுமாகும்.

27. இந்த நடைமுறையை திரும்ப கட்டுப்படுத்தும் வகையில், பின்வரும் உத்தரவுகளை ஆணையம் வழங்குகிறது :

(A) மக்களவைத் தேர்தலுக்காகப் போட்டியிடுகின்ற ஒவ்வொரு வேட்பாளரும், வாக்குப்பதிவு நாளன்று பின்வருவனவற்றிற்கு உரிமையுடையவராவர் அவையாவன:

(a) தொகுதி முழுவதற்கும், அவரது சொந்த பயன்பாட்டிற்காக, ஒரு வாகனம்.

(b)கூடுதலாக தொகுதி முழுவதற்கும், நாடாளுமன்றத் தொகுதியிலுள்ள அவரது தேர்தல் முகவரின் பயன்பாட்டிற்காக ஒரு வாகனம்.

(c) மேலும், நாடாளுமன்ற தொகுதியில், உள்ள ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும், நேர்விற்கேற்ப, அவரது தேர்தல் முகவர் அல்லது பணியாளர்கள் அல்லது கட்சி பணியாளரின் பயன்பாட்டிற்காக ஒரு வாகனம் .

(B) மாநில சட்டமன்ற பேரவைத் தேர்தலுக்காக, அந்த தொகுதியில், வாக்குப்பதிவு நடைபெறும் நாளில், போட்டியிடுகின்ற ஒவ்வொரு வேட்பாளரும் பின்வருவனவற்றிற்கு உரிமையுடையவராகிறார், அவையாவன:-

(a ) அவரது சொந்த பயன்பாட்டிற்காக, ஒரு வாகனம்;

(b) அவரது தேர்தல் முகவரின் பயன்பாட்டிற்காக ஒரு வாகனம்.

(c) கூடுதலாக, அவரது பணியாளர்கள் அல்லது கட்சி பணியாளர்களின் பயன்பாட்டிற்காக ஒரு வாகனம்.

## விளக்கம்

28. இதுமுதற்கொண்டும், வேட்பாளர் அல்லது அவரது முகவர் அல்லது கட்சி பணியாளர்கள் அல்லது பணியாளர்கள், நான்கு/மூன்று/இரு சக்கர வாகனங்கள் அதாவது, கார்கள் (அனைத்து வகையிலான), வாடகை சீருந்துகள், ஆட்டோ ரிக்ஷாக்கள், ரிக்ஷாக்கள் மற்றும் இருசக்கர வாகனங்களை மட்டுமே பயன்படுத்த அனுமதிக்கப்படுவார்கள் என தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. வாக்குப்பதிவு நாளன்று இந்த நான்கு சக்கர வாகனங்களில் ஓட்டுநர் உட்பட 5 நபர்களுக்கு மேற்பட்டோர் பயணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள். வாக்குப்பதிவு நாளன்று வேட்பாளரின் அல்லது அவரது தேர்தல் முகவரின் பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட வாகனங்களை அவர்களைத் தவிர வேறு யாதொரு நபரும் பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டார்கள் என மேலும் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், ஓட்டுநர் உட்பட ஐந்து நபர்கள் என்ற நிபந்தனைக்குட்பட்டு வேட்பாளர் அல்லது அவரது தேர்தல் முகவர் அவர்களது வாகனத்தில் பயணிக்கலாம்.

29. மேற்குறிப்பிட்ட வாகனங்களுக்கான அனுமதி, மாவட்ட மாஜிஸ்டிரேட்/தேர்தல் நடத்தும் அதிகாரியால் வழங்கப்படும். வேட்பாளர்கள், வாக்குப்பதிவு நாளில் பயன்படுத்தும் அவர்களது வாகனத்தின் விவரங்களை சம்பந்தப்பட்ட மாவட்ட தேர்தல் அதிகாரி /தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் அளித்து வழங்கப்பட்ட அனுமதியை , வாகனத்தின் முகப்புக் கண்ணாடியில் தெளீவாகத் தெரியும் வகையில் ஒட்ட வேண்டும். அமைச்சர்கள், பணியாளர்கள்,முகவர்கள் மற்றும் யாதொரு வேட்பாளருக்கு ஆதரவு அளிப்பவர்கள் உட்பட அரசியல் கட்சிகளின் தலைவர்களால் வேறு எந்த வாகனமும் பயன்படுத்த அனுமதிக்கப்படக் கூடாது. வேட்பாளர் எந்த நிலையில் இருந்தாலும், இதற்கு விதிவிலக்கு அளிக்கப்பட மாட்டாது.

## வாகனம் என்பதன் விளக்கம்

30. டாக்ஸிகள், தனியார் கார்கள், டிரக்குகள், இணைப்பு வண்டியுடன்கூடிய அல்லது இணைப்பு வண்டி அல்லாத டிராக்டர்கள், ஆட்டோ ரிக்ஷாக்கள்,மின் ரிக்ஷாக்கள்,

ஸ்கூட்டர்கள், சிற்றுந்துகள், நிலைய சரக்கு வண்டிகள் போன்ற வாகனங்களுக்கு மட்டுமல்லாமல், அத்தகைய வாகனங்கள் உட்பட இயந்திர ஆற்றலால் அல்லது ஏனைய வகையில் இயங்கக்கூடிய அனைத்து வாகனங்களுக்கும் மேற்குறிப்பிட்ட கட்டுப்பாடுகள் பொருந்தும். மேலும், வாக்குப்பதிவு முடிவடையும் நேரத்திலிருந்து 24 மணி நேரத்திற்கு முன்னர் மற்றும் வாக்குப்பதிவு முடிவடையும் நேரம் வரை இக்கட்டுப்பாடுகள் பொருந்தும்.

31. மோட்டோர் வாகனங்கள் சட்டத்தின் கீழ் மற்றும் அதனுடன் சேர்ந்து, 1951- ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் மற்றும் இந்திய தண்டனை விதிக்கோவையின் IXA- ஆம் அத்தியாயத்தின் விதித்துறைகளின் கீழும், மேற்கூறப்பட்ட விதிமுறைகளை மீறுவோருக்கு எதிராக தண்டனைக்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இந்த விதிமுறைகளை மீறுவதற்காக பயன்படுத்தப்படுகிற அனைத்து வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட வேண்டும்.

## விதிவிலக்கு

32. வாக்குப்பதிவு நாளின்போது, அனைத்து வாகனப் போக்குவரத்திற்கும் முழுமையான தடை விதித்து, அதனால் இன்னல்களை உருவாக்கவோ, பொதுமக்களை அலைக்கழிக்கச் செய்வதோ ஆணையத்தின் நோக்கமல்ல. தேர்தல் தவிர்த்து வேறு நியாயமான காரணங்களுக்காக, எந்த விதிவிலக்கும் அல்லாமல், தேர்தல் நாளின்போது பின்வரும் வகையிலான வாகனங்களும் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும்.

(a) வாகன உரிமையாளர்களால், தேர்தல்களுடன் தொடர்பில்லாத அவர்களது சொந்தப் பயன்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படுகின்ற தனியார் வாகனங்கள்,

(b) வாக்குச் சாவடியின் 200 மீட்டர் சுற்று வட்டாரத்திற்குள், எந்தவொரு பகுதிக்கும் செல்லாமல், வாக்களிப்பதற்காக வக்குச்சாவடிக்கு செல்வதற்கு மட்டும் வாகன உரிமையாளரால் அவரின்அல்லது அவருடைய சொந்த குடும்ப உறுப்பினர்களுக்காக, பயன்படுத்துகிற தனியார் வாகனங்கள்,

(c) மருத்துவமனைப் பயன்பாட்டிற்கான வேன்கள், அவசர ஊர்தி,பால் வேன்கள், தண்ணீர் லாரிகள், அவசர மின்சாரப் பணி வேன்கள், பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள

காவல் துறை வேன், தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் போன்ற அவசியத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள்.

(d) குறிப்பிட்ட ஊர்களுக்கிடையே, நிர்ணயிக்கப்பட்ட வழித்தடங்களில் செல்கின்ற பேருந்துகள், போன்ற பொதுப் போக்குவரத்து வாகனங்கள்.

(e) விமான நிலையங்கள், இரயில் நிலையங்கள், மாநிலங்களுக்கிடையேயான பேருந்து நிலையங்கள், மருத்துவமனைகள் போன்ற இடங்களுக்கு செல்வதற்காக தவிர்க்க முடியாத பயணங்களை மேற்கொள்ளும் டாக்ஸிகள், மூன்று சக்கர ஸ்கூட்டர்கள், ரிக் ஷாக்கள் போன்ற வாகனங்கள்.

(f ) உடல்நலம் குன்றிய நபர்கள் அல்லது மாற்றுத் திறனாளிகளால் அவர்களது சொந்த பயன்பட்டிற்காகப் பயன்படுத்தப்படும் தனியார் வாகனங்கள்.

(g) பணியில் இருக்கும்போது, அவர்களின் பணியிடத்தை சென்றடைவதற்கு அரசு அதிகாரிகளால் பயன்படுத்தப்படுகிற வாகனங்கள்.

33. தேர்தல் பிரச்சாரத்தின் போது இடையூறுகள் ஏற்படுத்தும் நோக்கத்துடன், வேட்பாளர்கள்/ அவர்களது முகவர்கள் மற்றும் கட்சி தலைவர்கள் மற்றும் / அல்லது கட்சி ஆதரவாளர்களால் தனியார் வாகனங்களைப் பயன்படுத்தி, சமூக விரோத சக்திகள் உள்நுழைந்து அதன் வாயிலாக வாக்காளர்களின் மனதில் அச்சத்தை உருவாக்குதல், தடைசெய்யப்பட்ட ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்களை கடத்துவது போன்ற செயல்களினால் இடையூறு ஏற்படுத்த வாய்ப்புள்ளதால், போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் மற்றும் அவர்களது கட்சியின் தலைவர்கள் செல்லும் வாகனங்களை மாவட்ட நிருவாகம் தீவிரமாக கண்காணிக்க வேண்டுமென்று ஆணையம் மேலும் உத்தரவு பிறப்பித்துள்ளது. அத்தகைய நடவடிக்கையில் அல்லது வாக்காளர்களை மிரட்டுகின்ற அல்லது அவர்களது மனதில் அச்சத்தை உருவாக்குகின்ற எண்ணத்தில், சமூக விரோத சக்திகளை அழைத்து செல்வதற்காக கட்சியின் அல்லது தனிநபர் வாகனங்களுக்குள், ஏதேனும் வாகனம் ஈடுபட்டுள்ளது கண்டறியப்பட்டால், அத்தகைய வாகனங்களை சிறைபிடித்து, தேர்தல் முடிவடையும் வரையில் அவற்றை விடுவிக்காமல் இருப்பது உள்ளூர் நிருவாகத்தின் கடமையாகும். மேலும், அத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வாகன உரிமையாளர், வாகனத்தில்

சென்றவர்(சென்றவர்கள்) மற்றும் வேட்பாளர்/ அரசியல் கட்சிகள் மீது குற்றவியல் சட்டப்படி படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தொடர்புடைய அனைவரின் கவனத்திற்கு இவை கொண்டுவரபட்டு, நடவடிக்கை உறுதிசெய்யவும்.

## பிற்சேர்க்கை –IV

(அனைத்து மாநிலங்கள் மற்றும் இந்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதியின் தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பட்ட தேர்தல் ஆணையத்தின் 24.03.2014 ஆம் நாளிட்ட 491/MCMC/2014 ஆம் எண் கடிதம்.)

**பொருள்: மின்னணு ஊடகத்தில் அரசியல் தன்மையுள்ள விளம்பரங்களுக்கு சான்றளித்தல் - தொடர்பாக.**

மேலே கூறப்பட்டுள்ள பொருண்மை குறித்து மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் 13.04.2004 ஆம் நாளிட்ட ஆணையினை தொடர்ந்தும், தேர்தல் ஆணையத்தின் 15.04.2004 ஆம் நாளிட்ட கடிதத்தின் (நகல் இணைக்கப்பட்டுள்ளது ) வெளியிடப்பட்ட அதன் ஆனை குறித்து தெரிவிக்குமாறு அனுப்புமாறு நான் பணிக்கப்பட்டுள்ளேன். மேலே குறிப்பிட்ட ஆணையத்தின் உத்தரவின் பத்தி 5 இல், தொலைக்காட்சி அலைவரிசை மற்றும் /அல்லது கம்பிவட தொலைக்காட்சியில் விளம்பரத்தை ஒளிபரப்ப உத்தேசித்துள்ள ஒவ்வொரு பதிவுபெற்ற தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சி மற்றும் தேர்தலில் போட்டியிடுகிற ஒவ்வொரு வேட்பாளரும், அத்தகைய விளம்பரத்தை ஒளிபரப்புவதற்கு கருதப்பட்ட நாளுக்கு முன்னர் மூன்று நாட்களுக்கு குறையாத கால அளவில் தேர்தல் ஆணையத்திடம் /தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட நியமன அதிகாரியிடம் விண்ணப்பிக்க வேண்டும். மேலும், அத்தகைய விளம்பரத்துடன் ஒளிபரப்ப உத்தேசிக்கப்பட்டுள்ள விளம்பரத்தின் இரண்டு நகல்கள் மின்னணு வடிவில் உரியவாறு சான்றொப்பமிட்ட எழுத்துப்படியுடன் இணைக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி மாநிலம் மற்றும் மாவட்ட அளவிலான ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழு ஒன்றை ஆணையம் நியமனம் செய்தது. மேலும், அனைத்து பதிவுபெற்ற தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகள் மின்னணு ஊடகத்தில் (தொலைக்காட்சி அலைவரிசைகள், கம்பிவட்த் தொலைக்காட்சி, தனியார் பண்பலை அலைவரிசை உட்பட வானொலி, திரையரங்குகள், பொது இடங்களில் ஒலி ஒளி காட்சிப்படுத்தல் மற்றும் இணையதளம் ஆகியவை உட்பட) ஒளிபரப்ப உத்தேசிக்கப்பட்டுள்ள அரசியல் விளம்பரங்களின் சான்றளிப்பிற்காக நேர்விற்கேற்ப,

மேலே குறிப்பிட்டவாறு ஆணையத்தின் ஆணையை பின்பற்றி இந்த ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழுக்களை அவை அணுக வேண்டும்.

தற்போது, அரசியல் கட்சிகள்/வேட்பாளர்களுக்கு உதவுவதற்காக மேலே குறிப்பிட்ட ஆணையின் பத்தி10 (i)ஐ ஆணையம் தளர்த்தியுள்ளது. மேலும், தற்போதுள்ள நடைமுறையை பின்பற்றுவதற்கு பதிலாக அரசியல் கட்சிகள்/வேட்பாளர்கள் விரும்பினால் அவர்கள் கருதியுள்ள விளம்பரத்தின் எழுத்துப்படியை சான்றளிப்பிற்காக முதலில் சமர்ப்பித்து, மாற்று நடைமுறையையும் அவர்கள் பின்பற்றலாம். ஆணையத்தால் இவ்வெழுத்துப்படி அங்கீகரிக்கப்பட்டதுடன் இறுதி சான்றளிப்பிற்காக இறுதி வடிவத்தினை மின்னணு வடிவில் மற்றொருமுறை கட்சி/ வேட்பாளர் சமர்ப்பிப்பார்.

2. அத்தகைய நேர்வில், ஒவ்வொரு நிலைக்கான காலவரையறை தற்போதுள்ள ஆணையின் படி இருக்கும்.

3. மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களிலுள்ள அனைத்து ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழுக்களின் கவனத்திற்கு இவை கொண்டு வரப்படலாம். ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழுவின் பணி அதிகரிக்க வாய்ப்புள்ளதை கருத்தில்கொண்டு, அதற்கேற்ப குழுவுக்கு உதவும் வகையில் கூடுதல் பணியாளர்களை வீதாச்சார அடிப்படையில் உரியவாறு பணியமர்த்தப்படலாம்.

## உத்தரவு தொடர் எண். 23

இந்திய அரசின் அமைச்சரவைக் குழு செயலர், தலைமை செயலாளர் மற்றும் குஜராத் தலைமை தேர்தல் அதிகாரி ஆகியோருக்கு அனுப்பட்ட ஆணையத்தின் 25.10.2017 ஆம் நாளிட்ட 437/6/1/ECI/ FUNCT/MCC/2017 ஆம் எண் கடிதம்.

**பொருள்: மாதிரி தேர்தல் நடத்தை விதிப் பயன்பாடு – 2017 ஆம் ஆண்டு குஜராத் மாநிலத்தின் சட்டமன்ற பொதுத் தேர்தல் –தொடர்பாக.**

குஜராத் மாநிலத்தின் சட்டமன்ற பொதுத் தேர்தல் நடத்துவதற்கான கால அட்டவணையை ஆணையம் அறிவித்ததை தெரிவிப்பதற்கு நான் பணிக்கப்பட்டுள்ளேன். (25.10.2017 ஆம் நாளிட்ட ECI/PN/80/2017 ஆம் எண்ணிட்ட செய்திக் குறிப்பு ஆணையத்தின் www.eci.gov.in என்ற வலைதளத்தில் கிடைக்கப்பெறும் ).

2. இந்த அறிவிப்புடன், அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுடைய வழிகாட்டுதலுக்காக மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் உடனடியாக நடைமுறைக்கு வருகின்றன. மேலும், பொதுத்தேர்தல்கள் நிறைவு பெறும் வரையில் அவை செயல்பாட்டில் இருக்கும். இந்த அறிவிப்பு, மத்திய/மாநில அரசுகள், அனைத்து அமைச்சர்கள்/துறைகள்/ மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகள்/ மாநில அரசு அலுவலகங்கள் போன்ற அனைத்து அலுவலகங்களின் கவனத்திற்கு கொண்டுவரப்படலாம். இதனை செயல்படுத்துவதற்கு உங்களால் அளிக்கப்பட்ட உத்தரவுகளின் நகல் ஒன்று, அதன் தகவல் மற்றும் பதிவுக்காக ஆணையத்திற்கு அனுப்பப்படலாம்.

3. அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் வழிகாட்டுதலுக்கான மாதிரி தேர்தல் நடத்தை விதிகளின் விதித்துறைகள் மற்றும் ஆணையத்தால் வெளியிடப்பெற்ற பல்வேறு உத்தரவுகள் மீது உங்களுடைய குறிப்பான கவனம் ஈர்க்கப்படுகிறது. அதில் ஏனையவற்றுக்கிடையே மத்தியில் அல்லது மாநிலத்தில் அல்லது தொடர்புடைய மாநிலங்களில் ஆட்சியில் இருக்கும் கட்சியானது அதனுடைய தேர்தல் பரப்புரை நோக்கங்களுக்காக தன்னுடைய அதிகாரத்தை பயன்படுத்துகிறது என்ற எவ்விதமான

புகாருக்கும் காரணமாக இருக்கக் கூடாது என்பதை உறுதிபடுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக :-

(i) (a) அமைச்சர்கள் தங்களுடைய அலுவலக ரீதியான வருகையையும், பிரச்சாராப் பணிகளையும் ஒன்றாக சேர்க்கக் கூடாது மற்றும் பிரச்சாரப் பணியின்போது அலுவலக அமைப்பு முறையை அல்லது பணியாளர்களை பயன்படுத்தவும் கூடாது.

(b) அரசு விமானங்கள், வாகனங்கள், உட்பட அரசுப் போக்குவரத்து சாதனங்கள் அலுவல் சார்ந்த அமைப்பு மற்றும் அரசு பணியாளர்கள், ஆகியோரையும், அரசி இயந்திரத்தையும் ஆட்சியில் இருக்கும் கட்சியின் நலனுக்கு உதவுவதற்குப் பயன்படுத்தக்கூடாது.

(ii) தேர்தல் கூட்டங்கள் நடத்துவதற்காக மற்றும் தேர்தல்களுடன் தொடர்பான பணிகளுக்கான பயன்படுத்தப்படும் வானூர்திகளுக்கான ஹெலிகாப்டர் இறங்குதளத்திற்காக விளையாட்டுத்திடல் போன்ற பொது இடங்களில் அந்த ஆளும் கட்சி முழு ஆதிக்கம் செலுத்தக்கூடாது. ஆட்சியிலுள்ள கட்சி பின்பற்றும் அதே வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில், அத்தகைய இடங்களை, பிற கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் பயன்படுத்தவும் அனுமதிக்க வேண்டும்.

(iii) மத்திய அரசு அல்லது பல்வேறு மாநில அரசுகள் தங்களுடைய சட்டத்தின் விதித்துறைகளின்படி Z தரம் அல்லது அதற்கு மேற்பட்ட அல்லது அதற்கு நிகரான சரிசமமாக பாதுகாப்பு வழங்கியுள்ள அரசியல் கட்சிகளின் நிருவாகிகளுக்கு நடுநிலையுடன் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய இடத்திலுள்ள ஓய்வு இல்லங்கள், பயணியர் விடுதிகள் மற்றும் இன்னபிற அரசு தங்குமிடங்கள் வழங்கலாம். அத்தகைய தங்குமிடம் தேர்தல் தொடர்பான அலுவலர்களுக்கு அல்லாது தேர்தல் பார்வையாளர்களுக்கு ஏற்கெனவே ஒதுக்கப்படாமலும் அவர்களால் தங்குவதற்கு பயன்படுத்தப்படாமலும் இருப்பதைப் பொறுத்து அரசியல் கட்சியினருக்கு இடம் ஒதுக்கப்பட வேண்டும். அரசியல் கட்சி சார்ந்த நிருவாகிகள் அரசுக்குச் சொந்தமான விருந்தினர் மாளிகைகள் / ஓய்வி இல்லங்கள், இன்ன பிற அரசுக்குச் சொந்தமான தங்குமிடங்கள் முதலியவற்றில் தங்கியிருக்கும் போது எந்தவிதமான அரசியல் சார்ந்த செயல்பாடுகளில் ஈடுபடக் கூடாது.

(iv) தேர்தல் காலத்தில் அரசு செலவில் மற்றும் பிற ஊடகங்களில் விளம்பரம் செய்தல் மற்றும் அலுவல் சார்ந்த அதிகளவில் பயன்படுத்தப்படும் ஊடகத்தை தவறாகப் பயன்படுத்தி ஒருதலைப்பட்சமாக ஒரு கட்சி சார்ந்த விளம்பரத்தை ஊடகங்களில் வெளியிடுதல், ஆட்சிப் பொறுப்பிலிருக்கின்ற எந்த ஒரு அரசியல் கட்சியின் சாதனைகளை மக்கள் ஊடகங்களில் விளம்பரம் செய்து தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகளை அதிகரித்தல் போன்றவற்றில் ஆளுங்கட்சியானது தான் ஈடுபடுவதை விழிப்புணர்வுடன் தவிற்க வேண்டும்.

(v) தேர்தல் ஆணையத்தால், தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து, அமைச்சர் பெருமக்கள் மற்றும் பிற அதிகாரிகள் தங்கள் விருப்புரிமை நிதிகளிலிருந்து மானியங்கள் வழங்குதல்/தொகை வழங்குதல் போன்ற செயல்களில் ஈடுபடக்கூடாது.

(vi) தேர்தல் ஆணையத்தால் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து அமைச்சர்களும், பிற அதிகாரிகளும் பின் வருவனவற்றை செய்யக் கூடாது.

(a) யாதொரு வகையிலான மானியங்கள் அல்லது அது குறித்த வாக்குறுதிகளை அறிவிக்கக்கூடாது .

(b) யாதொரு வகையிலான திட்டங்கள் அல்லது திட்டப் பணிகளுக்கான கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டுதல் (அரசு குடிமைப்பணியாளர் நீங்கலாக) கூடாது.

(c) புதிதாக சாலைகள் அமைத்தல், குடிநீர் வசதிகள் செய்துகொடுத்தல் போன்றவைகளுக்கு எந்த வித உறுதிமொழியும் அளிக்கக் கூடாது.

(d) ஆட்சி பொறுப்பில் இருக்கும் கட்சிக்கு ஆதரவாக வாக்காளர்களை ஈர்க்கக் கூடிய வகையில் அரசுத்துறைகளிலும், பொதுத்துறை நிறுவனங்களிலும் எந்த வகையிலும் குறிப்பிட்ட ஒரு பணிக்கென நியமனங்கள் செய்தல் கூடாது.

4. மேலே பத்தி 3 (பிரிவு iv) இல் கண்டுள்ளபடி, ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் அரசானது தனது சாதனைகளை பறைசாற்றும் வண்ணம் அரசு செலவில் மின்னணு சார்ந்த மற்றும் அச்சு ஊடகங்கள் வழியாக எவ்விதமான விளம்பரங்களும் செய்யக்கூடாது.

தொலைக்காட்சி/ வானொலி, அல்லது அச்சு ஊடகங்கள் இவற்றில் விளம்பரம் ஒளி/ ஒலிபரப்பு செய்யப்பட்டிருந்தால் அந்த விளம்பரம் ஒலி/ஒளிபரப்பப்படாமல்/ உடனடியாக நிறுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும். இன்றிலிருந்தே எந்தவொரு செய்தித்தாள்கள், பத்திரிக்கைகள் போன்றவற்றில் அதாவது அச்சு ஊடகத்தில் அத்தகைய விளம்பரம் வெளியிடப்படாமல் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும் . மேலும், அந்த விளம்பரங்களை திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

5. தேர்தல் ஆணையத்தின் 5.3.2009 ஆம் நாளிட்ட 437/6/2009- CCBE ஆம் எண்ணுள்ள கடிதத்தில் உள்ள தேர்தல் ஆனையத்தின் உத்தரவுகள், “htt://eci.nic.in/ என்கிற இணைய தளத்தில் 'தேர்தல் விதிகள் மற்றும் இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவுகள்' என்ற தலைப்பில் உங்கள் தகவல்களுக்காகவும், அவசிய நடவடிக்கைகளுக்காகவும் கிடைக்கப்பெறும். உங்களுக்கு வழிகாட்டவேண்டி இந்த இணைப்பில் ஆணையத்தின் ஏனைய அனைத்து உத்தரவுகளும் கிடைக்கப் பெறும்.

6. தேர்தல் நடத்தும் பொறுப்பில் இருக்கும் தொடர்புடைய அனைத்து அதிகாரிகள்/ அலுவலர்களை பணியிடமாற்றம் செய்வதற்கு ஒட்டுமொத்த தடை விதித்து ஆனையம் உத்தரவு பிறப்பித்துள்ளது இவை இதில் சேர்க்கப்பட்டிருந்தாலும் வரையறைப்படுத்தப்படவில்லை. அந்த்த் தடை ஆணையானது கீழ்காணும் அதிகாரிகள்/ அலுவலர்களை உள்ளடக்கியதாக இருக்கும். ஆனால், அவர்களுக்கு கட்டுமென்றே வரையறுக்கப்படாத ஒன்றாக உள்ளது.

(i) தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும் கூடுதல்/ இணை/ துணை தலைமைத் தேர்தல் அதிகாரிகள்;

(ii) கோட்ட ஆணையர்கள் ;

(iii) தேர்தல் நடத்தும் பொறுப்பில் உள்ள மாவட்ட தேர்தல் அதிகாரிகள், தேர்தல் நடத்தும் அதிகாரிகள், உதவி தேர்தல் நடத்தும் அதிகாரிகள் மற்றும் ஏனைய வருவாய்த் துறை அதிகாரிகள்.

(iv) 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 28A –இன் கீழ் தேர்தல் அணையத்திற்கு அனுப்பப்படுகின்ற காவல்துறை கண்காணிப்பாளர், தேர்தல் பணி மேலாண்மை தொடர்பான காவல் துறைத் தலைவர்கள் மற்றும் காவல் துறைத் துணைத் தலைவர்கள், காவல் துறை முதுநிலை கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல்துறை துணை கண்காணிப்பாளர்கள், உட்கோட்ட காவல்துறை அதிகாரிகள் மற்றும் பிற காவல்துறை அதிகாரிகள்.

(v) தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்னால் பிறப்பிக்கபட்டு ஆனால் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் வரையில் செயல்படுத்தப்படாமல் இது தொடர்பாக உள்ள மேற்சொன்ன வகைப்பாட்டைச் சேர்ந்த அதிகாரிகளின் பணியிட மாற்றங்கள் குறித்த ஆணைகள் தேர்தல் ஆனையத்தின் திட்டவட்டமான அனுமதியின்றி செயல் வடிவம் அளிக்கப்படக்கூடாது.

(vi) தேர்தல் முடிகிற வரையில் இந்தத் தடை செயலாக்கத்தில் இருக்கும். மாநில அரசுகள் தேர்தல் நிருவாகம் தொடர்பான பணியில் உள்ள முதுநிலை அதிகாரிகளை பணியிடமாற்றங்களுக்கு உட்படுத்துவதை தவிர்க்க வேண்டுமென்றும் தேர்தல் ஆணையம் அறிவுறுத்துகின்றது.

(vii) ஒரு அதிகாரியை பணியிடமாற்றம் செய்ய வேண்டிய கட்டாயத் தேவை ஒரு மாநில அரசுக்கு எழுந்தால், சம்பந்தப்பட்ட அந்த மாநில அரசு, அதன் தரப்பிலான நியாயமான காரணங்களுடன் முன் அனுமதி பெறுவதற்காக ஆனையத்தை அணுகலாம்.

7. இக்கடிதம் பெறப்பட்டதற்கு ஒப்புகை அளிக்கவும்.

**உத்தரவு தொடர் எண்.24**

அமைச்சரவைக் குழு செயலாளர், இந்திய அரசுச் செயலாளர், திட்ட செயலாக்கத் துறை, குஜராத் தலைமைச் செயலாளர் மற்றும் தலைமை தேர்தல் அதிகாரிக்கு அனுப்பப்பட்ட 25.10.2017 ஆம் நாளிட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் 437/6/1/ECI/INST/FUNCT/MCC/2017 ஆம் எண் கடிதம்.

**பொருள்;- 2017 ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தல் – நாடாளுமன்ற உறுப்பினர்கள்/சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளூர் பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நிதிகளை வழங்குதல்**

குஜராத் சட்டமன்ற பேரவைக்கான பொது தேர்தல் குறித்த அறிவிப்பினைத் தொடர்ந்து, அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் வழிகாட்டுதலுக்காக, தேர்தல் மாதிரி நடத்தை விதிகளை செயல்படுத்துவதற்கு ஆணையம் அறிவித்துள்ளதன் படி, 25.10.2017 ஆம் நாளிட்ட ECI/PN/80/2017 தேர்தல் ஆணைய செய்தி குறிப்பு எண்ணை (ஆணையத்தின் வலைத்தளத்தில் – www.eci.gov.in செய்திக் குறிப்பு இடம் பெற்றுள்ளது) பார்வையிடுமாறு நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

2. நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள் பின்வரும் வரையறைகளுக்குட்பட்டது என ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

a) தேர்தல் நடைபெறும் இடங்களில், நாட்டின் யாதொரு பகுதியிலும், நாடாளுமன்ற உறுப்பினர் ( மாநிலங்களவை உறுப்பினர்கள் உட்பட) உள்ளூர் பகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் புதியதாக நிதி எதுவும் வழங்கப்படக்கூடாது. அது போன்று, சட்டமன்ற உறுப்பினர்கள்/மேலவை உறுப்பினர்கள் உள்ளூர் பகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், யாதொரு அத்தகைய திட்டம் செயலில் இருப்பின், தேர்தல் நடைமுறை முடிவடையும் வரையில், எந்தவொரு நிதியும் புதியதாக வழங்கப்படக்கூடாது.

b) இந்த கடிதம் வழங்கப்படுவதற்கு முன்னர், பணி ஆணைகள் வழங்கப்பட்டு ஆனால் களத்தில் உள்ளபடியாக பணி தொடங்கப்படாமல் இருப்பினும், அங்கு எந்தவொரு பணியும் தொடங்கப்படக்கூடாது. இந்தப் பணிகள் தேர்தல் நடைமுறை முடிவடைந்த பின்னரே தொடங்கப்படலாம். எனினும், பணி உள்ளபடியாக தொடங்கப்பட்டிருப்பின், அவை தொடரலாம்.

c) சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் முழு மனநிறைவுக்குட்பட்டு, முடிவடைந்த பணிகளுக்கான தொகைகளை வழங்க எவ்வித தடையும் செய்யக்கூடாது.

d) திட்டங்கள் தீர்மானிக்கப்பட்டு, நிதிகள் வழங்கப்பட்டு அல்லது விடுவிக்கப்பட்டு, பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு, அவை அதற்கான இடங்களில் சென்றடைந்திருப்பின், திட்டத்திற்கேற்ப, அத்தகைய திட்டம் செயல்படுத்தப்படலாம்.

**உத்தரவு தொடர் எண்.25**

அனைத்து மாநிலங்கள்/ மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு மற்றும் மாநிலங்கள்/மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு அனுப்பப்பட்ட 29.06.2017 ஆம் நாளிட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் 437/6/INST/2016-CCS ஆம் எண் கடிதம்.

**பொருள்:- தேர்தல் மாதிரி நடத்தை விதி – உத்தரவு – நாடாளுமன்ற/சட்டமன்ற தொகுதிக்கான இடைத் தேர்தல் – தொடர்பாக**

மேலே குறிப்பிடப்பட்ட பொருண்மை குறித்து, ஆணையம் அதனை மறு ஆய்வு செய்து, அதன் முந்தைய உத்தரவுகளில் பின்வரும் திருத்தங்களை வெளியிட்டுள்ளது.

1. **தேர்தல் மாதிரி நடத்தை விதிகளை செயல்படுத்துதல்**

26.04.2012 ஆம் நாளிட்ட 437/6/ INST/2012/CC&BE ஆம் எண் கடிதம் மற்றும் 21.10.2013 ஆம் நாளிட்ட 437/6/ INST/2012/CC&BE ஆம் எண் கடிதங்களில் உள்ள ஆணையத்தின் உத்தரவுகளில், சம்பந்தப்பட்ட மாவட்டம் அல்லது சம்பந்தப்பட்ட சட்டமன்ற தொகுதி அல்லது நாடாளுமன்ற தொகுதிக்கு பொருந்தக்கூடிய மாதிரி நடத்தை விதிகளின் பல்வேறு வழிமுறைகளை பட்டியலிட்டுள்ளது. மாநில தலைநகர்/பெருநகரங்கள்/மாநகராட்சிகளில் உள்ள தொகுதியைப் பொறுத்த நேர்வில், இந்த உத்தரவுகள் ஓரளவிற்கு திருத்தியமைக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன உத்தரவுகள் சம்பந்தப்பட்ட தொகுதியில் மட்டுமே பொருந்தும். மற்ற அனைத்து நேர்வுகளில், இடைத்தேர்தல்கள் நடைபெறும் தொகுதி அமைந்துள்ள மாவட்டங்கள் முழுவதும் மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் செயல்படுத்தப்படும்.

## 2. விளம்பரங்களை வெளியிடுதல்

இடைத்தேர்தல்கள் தொடர்புடைய தேர்தல் மாதிரி நடத்தை விதிகளை செயல்படுத்தும் காலத்தில் விளம்பரங்களை வெளியிடுதல் குறித்து பின்வருமாறு முறைப்படுத்தப்படும் என 25.06.2013 அன்று ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

(i) முக்கியத்துவமிக்க சிறப்பு நிகழ்வுகள் தொடர்புடைய பொதுத் தன்மை வாய்ந்த விளம்பரங்கள் வெளியிடப்படலாம். எனினும், சிறப்பு நிகழ்வுடன் சேர்ந்து வருகிற நாட்களில் மட்டுமே அத்தகைய விளம்பரம் செய்யப்பட வேண்டும். ஏனைய நாட்களில் விளம்பரம் செய்யப்படக்கூடாது. விளம்பரத்தில் யாதொரு அமைச்சர் மற்றும் ஏனைய அரசியல் சார்ந்த பொறுப்பாளர்கள் ஆகியோரின் புகைப்படங்கள் இடம் பெறக்கூடாது.

(ii) இடைத்தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கிய பகுதிகளில் யாதொரு குறிப்பிட்ட/சுட்டிக்காட்டப்பட்ட குறிப்புகள் அல்லது உட்பொருளைக் கொண்ட எந்தவொரு விளம்பரமும் அந்த காலகட்டத்தில் யாதொரு நாளிலும் வெளியிடப்படக்கூடாது.

**மேலும், மாவட்டங்களில், இடைத்தேர்தல் நடத்தப்படும் இடங்களில், எந்தவொரு புதிய திட்டங்களும் விளம்பரம் செய்யப்படக்கூடாது என தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது. (மேலே துணைப்பத்தி (ii)) (திருத்தப்பட்டுள்ளது)**

## 3. அமைச்சர்களின் சுற்றுப்பயணம்

நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றத்திலுள்ள யாதொரு தொகுதிகளின் இடைத்தேர்தலின் போது, அமைச்சர்களின் சுற்றுப்பயணம் தொடர்பாக 23.11.2007 அன்று ஆணையத்தால் வெளியிடப்பட்ட உத்தரவிற்கேற்ப, ஏனையவற்றிற்கிடையே, பொருந்தத்தக்க வரையறைகள் பின்வருமாறு;-

(i) இடைத்தேர்தலின் அறிவிப்பிற்குப் பின்னர், மத்திய அல்லது மாநில அரசின் அனைத்து அமைச்சர்களும், தேர்தல் பணியுடன் அவர்களின் அலுவல் சுற்றுப்பயணத்தை யாதொரு வகையிலும் சேர்க்கக்கூடாது. இடைத்தேர்தல் நடைபெறும் மற்றும் தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் செயலில் இருக்கும் மாவட்டம்/மாவட்டங்களில், முழுவதுமாக தனிப்பட்ட முறையில் பார்வையிடலாம்.

(ii) அலுவல் ரீதியான பயணம் தொடர்பாக ஏனைய யாதொரு மாவட்டத்திற்கு இடைத்தேர்தல் நடைபெறும் மாவட்டங்கள் வழியாக அலுவல் பணிநிமித்தமாக அமைச்சர் பயணம் மேற்கொள்ளும் நேர்வில், அவர், அங்கு யாதொரு அரசியல் பணியிலும் பங்கேற்கக்கூடாது.

**மேலும், அமைச்சர்கள் அல்லது அவருக்கு சமமான தரத்தில் / பதவியிலுள்ள நபர்கள், பிரச்சாரத்துடன் அவர்களின் அலுவல் பயணத்தை, மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் செயலில் இல்லாத இடத்திற்கு அலுவல் நோக்கத்திற்காக, அவர்களின் பயணத்தை சேர்க்கக்கூடாது என்பதையும், அவ்விடத்திலிருந்து, தேர்தல் பிரச்சாரத்திற்காக, தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் செயலில் இருக்கும் பகுதிகளுக்கு பயணிக்கக்கூடாது என்பதையும் தெளிவாகுகிறது. அவ்வாறு பயணம் மேற்கொள்ளும் நேர்வில், மொத்த பயணச்செலவும், தேர்தல் செலவினமாக கருதப்படும். (மேலே (ii) துணைப்பத்தி திருத்தம் செய்யப்பட்டுள்ளது)**

### 4. அலுவலர்களின் பணியிடமாற்றம்/ பதவியமர்த்தல் தொடர்பாக

மாநிலத்தில் இடைத்தேர்தல் நடத்துவதில் தொடர்புடைய அனைத்து அலுவலர்களுக்காக, பணியிடமாற்றக் கொள்கை செயல்படுத்துவது குறித்து நடைமுறையில் உள்ள இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவுகள், சம்பந்தப்பட்ட சட்டமன்றத் தொகுதி/பாராளுமன்ற தொகுதியின் கீழ்

வரக்கூடிய பகுதிக்குள் செயல்படுத்தப்படும். இந்த கொள்கையை செயல்படுத்துகையில், யாதொரு தேர்தல் பணிக்காக, தொகுதிக்கு வெளியேயுள்ள யாதொரு அலுவலரின் பணியமர்த்தல் குறித்த நேர்வில், அதை மாவட்ட தேர்தல் அலுவலர்/தேர்தல் நடத்தும் அலுவலர் கவனிப்பதுடன், ஆணையத்தின் பணியிடமாற்றக் கொள்கைக்கு இணக்கமாக செல்ல வேண்டும்.

### 5. அகவிலைப்படி அறிவிப்பு தொடர்பாக

இடைத்தேர்தலைப் பொறுத்தவரையில், மாநில அளவில் தாக்கம் ஏற்படுத்தி சம்பந்தப்பட்ட தொகுதிகளில் விளைவுகளை ஏற்படுத்துகிறவகையில், மாநில அரசுகள் முடிவெடுப்பதை தடுக்கிற எந்தவொரு உத்தரவும், இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவுகளில் இல்லை.

**இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அனைத்து காரணிகளையும் கருதிப்பார்த்த பின்னர், மாநில அரசின் அகவிலைப்படி அறிவிப்பு, வழக்கமான நிகழ்வாக கருதப்பட வேண்டுமே தவிர, அரசின் சாதனையாக விளம்பரப்படுத்தக்கூடாது என ஆணையம் முடிவு செய்துள்ளது.**

தொடர்புடைய அனைவருக்கும் தெரிவிப்பதுடன், முறையான விளம்பரம் அளித்து, இணங்கி நடப்பதை சொல்லாலும், செயலாலும் உறுதிப்படுத்தவும்.

**உத்தரவு தொடர் எண்.26**

அமைச்சரவைக் குழு செயலாளர், புது தில்லி, தலைமைச் செயலாளர்கள் மற்றும் இராஜஸ்தான் மற்றும் மேற்கு வங்காள தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட 28.12.2017 ஆம் நாளிட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் 437/6/1/ECI/INST/FUNCT/MCC/2017 ஆம் எண் கடிதம்.

**பொருள்:- இராஜஸ்தான் மற்றும் மேற்கு வங்காளத்தின் நாடாளுமன்ற தொகுதிகள் மற்றும் மாநில சட்டமன்ற தொகுதியிலிருந்து மக்களவையிலுள்ள தெளிவான காலியிடங்களை இடைத்தேர்தலில் நிரப்புவது – மாதிரி தேர்தல் நடத்தை விதியை செயல்படுத்துவது குறித்த உத்தரவுகள் – தொடர்பாக**

கீழ்க்காணும் நாடாளுமன்ற/ சட்டமன்ற தொகுதிக்கான இடைத்தேர்தலை குறித்து ஆணையம் தெரிவித்துள்ளது என்பதை குறிப்பிட நான் பணிக்கப்பட்டுள்ளேன். காண்க: 28.12.2017ஆம் நாளிட்ட ஆணையத்தின் ECI/PN/97/2017 ஆம் எண் கடிதம்

| மாநிலங்களின் பெயர் | தொகுதியின் பெயர் மற்றும் எண் |
|---|---|
| இராஜஸ்தான் | 8- அல்வார் நாடாளுமன்ற தொகுதி<br>13 – அஜ்மீர் நாடாளுமன்ற தொகுதி<br>183-மண்டல்கார் சட்டமன்ற தொகுதி |
| மேற்கு வங்காளம் | 26-உளுபெரியா நாடாளுமன்ற தொகுதி<br>107- நோபாரா சட்டமன்ற தொகுதி |

ஆணையத்தால் வெளியிடப்பட்டவாறாக, ஓரளவு திருத்தத்திற்குட்பட்டு, மாவட்டங்களில், நாடாளுமன்ற/சட்டமன்ற தொகுதி முழுவதும் அல்லது யாதொரு பகுதியில் நடைபெறுகிற இடைத்தேர்தலுக்காக, தேர்தல் மாதிரி நடத்தை விதி

உடனடியாக செயலுக்கு வருவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.(29.06.2017ஆம் நாளிட்ட 437/6/ INST/2016-CCS ஆம் எண் கடித எண்ணைக் காண்க (நகல் இணைக்கப்பட்டுள்ளது) (உத்தரவு தொடர் எண்.25)

2. இது சம்பந்தப்பட்ட அனைவரின் கவனத்திற்கும் கொண்டுவரப்படலாம்.

## உத்தரவு தொடர் எண்.27

அமைச்சரவைக் குழு செயலாளர், புது தில்லி, செயலாளர், அரசு செயலாளர், திட்ட செயலாக்கத் துறை, இராஜஸ்தான் மற்றும் மேற்கு வங்காளம் தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட 28.12.2017 ஆம் நாளிட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் 437/6/1/ECI/INST/FUNCT/MCC/2017 ஆம் எண் கடிதம்.

**பொருள்: இடைத்தேர்தல்கள் - நாடாளுமன்ற உறுப்பினர்கள்/சட்டமன்ற உறுப்பினர்களின் உள்ளூர் பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நிதிகளை வழங்குதல்**

இடைத்தேர்தலுக்காக, இராஜஸ்தான் மற்றும் மேற்கு வங்காள மாநிலங்களின் நாடாளுமன்ற தொகுதி மற்றும் மாநில சட்டமன்ற தொகுதியிலிருந்து மக்களவையிலுள்ள தெளிவான காலியிடங்களை, நிரப்புவதற்கான அட்டவணையை அறிவிப்பதற்கும், இந்த இடைத்தேர்தல் அறிவிப்புடன், அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் வழிகாட்டுதலுக்காக, தேர்தல் மாதிரி நடத்தை விதிகளின் வழிவகைகளை உடனடியாக செயல்படுத்துவதற்கும் 28.12.2017 ஆம் நாளிட்ட ஆணையத்தின் செய்திக்குறிப்பு எண்ணை பார்வையிட நான் பணிக்கப்பட்டுள்ளேன்.(ஆணையத்தின் வலைத்தளத்தில் – www.eci.gov.in இடம் பெற்றுள்ளது)

2. இடைத்தேர்தலின் போது தேர்தல் மாதிரி நடத்தை விதிகளை செயல்படுத்துவது குறித்த நாடாளுமன்ற உறுப்பினரின் உள்ளூர் பகுதி மேம்பாட்டு திட்டங்களின் கீழ் நிதிகளை வழங்குவது தொடர்பான விவகாரங்கள், 29.06.2017 ஆம் நாளிட்ட 437/6/INST/2016- CCS ஆணையத்தின் கடித எண்ணின் படி, ஏனையவற்றிற்கிடையே, பின்வருமாறு வகைசெய்யப்பட்டுள்ளது-

a) தேர்தல் நடைமுறை முடிவடையும் வரையில், தேர்தல் நடைபெறும் இடங்களில், சட்டமன்ற/நாடாளுமன்ற தொகுதி அமைந்திருக்கும் மாவட்டங்களில்,

நாடாளுமன்ற உறுப்பினரின் உள்ளூர் பகுதி மேம்பாட்டு திட்டங்களின் கீழ், நிதிகள் எதுவும் புதியதாக வழங்கப்பட மாட்டாது. **மாநில தலைநகரம்/பெருநகரங்கள்/மாநகராட்சிகள் அடங்கியுள்ள தொகுதியைப் பொறுத்த நேர்வில், மேற்சொன்ன உத்தரவுகள், சம்பந்தப்பட்ட தொகுதிக்கு மட்டுமே பொருந்தும்.** அது போன்றே, சட்டமன்ற உறுப்பினர்கள்/மேலவை உறுப்பினர்கள் உள்ளூர் பகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், யாதொரு அத்தகைய திட்டம் நடைமுறையில் இருப்பின், தேர்தல் நடைமுறை முடிவடையும் வரையில், எந்தவொரு நிதியும் புதியதாக வழங்கப்படக்கூடாது.

b) இந்த கடிதம் வழங்கப்படுவதற்கு முன்னர், பணி ஆணைகள் வழங்கப்பட்டு ஆனால் களத்தில் உள்ளபடியாக பணி தொடங்கப்படாமல் இருப்பினும், அங்கு எந்தவொரு பணியும் தொடங்கப்படக்கூடாது. இந்தப் பணிகள் தேர்தல் நடைமுறை முடிவடைந்த பின்னரே தொடங்கப்படலாம். எனினும், பணி உள்ளபடியாக தொடங்கப்பட்டிருப்பின், அவை தொடரலாம்.

c) சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் முழு மனநிறைவுக்குட்பட்டு, முடிவடைந்த பணிகளுக்கான தொகைகளை வழங்க எவ்வித தடையும் செய்யக்கூடாது.

d) திட்டங்கள் தீர்மானிக்கப்பட்டு, நிதிகள் வழங்கப்பட்டு அல்லது விடுவிக்கப்பட்டு, பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு, அவை அதற்கான இடங்களில் சென்றடைந்திருப்பின், திட்டத்திற்கேற்ப, அத்தகைய திட்டம் செயல்படுத்தப்படலாம்

**உத்தரவு தொடர் எண்.28**

அனைத்து மாநிலங்கள்/ மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட 18.01.2018 ஆம் நாளிட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் 437/6/1/ECI/INST/FUNCT/MCC/2017 ஆம் எண் கடிதம்.

**பொருள்: இடைத்தேர்தலின் போது தேர்தல் மாதிரி நடத்தை விதிகளை செயல்படுத்துவது தொடர்பான தெளிவுரைகள் – குறித்து**

தேர்தல் மாதிரி நடத்தை விதிகளை செயல்படுத்துவது தொடர்பாக, மாநில தலைநகர்/பெருநகரங்கள்/மாநகராட்சிகளில் உள்ள தொகுதியைப் பொறுத்த நேர்வில், தேர்தல் மாதிரி நடத்தை விதி உத்தரவுகள், சம்பந்தப்பட்ட தொகுதியின் பகுதியில் மட்டுமே பொருந்தும் என்ற 29.06.2017 ஆம் நாளிட்ட 437/6/INST/2016-CCS ஆணையத்தின் கடித எண்ணை பார்வையிட நான் பணிக்கப்பட்டுள்ளேன். மற்ற அனைத்து நேர்வுகளில், மேற்சொன்ன உத்தரவுகள், இடைத்தேர்தல்கள் நடைபெறும் தொகுதி அமைந்துள்ள மாவட்டங்கள் முழுவதும் தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் செயல்படுத்தப்படும்.(உடனடி பார்வைக்காக நகல் இணைக்கப்பட்டுள்ளது) (உத்தரவு தொடர் எண்.25)

இது தொடர்பாக, இராஜஸ்தானின் அஜ்மீர் நாடாளுமன்ற தொகுதியில், ஜெய்ப்பூர் மாவட்டம், மாநில தலைநகர மாநகராட்சி, பெருநகரம் மற்றும் ஊரகப்பகுதியாக இருப்பதால், அஜ்மீர் நாடாளுமன்ற தொகுதியில் தொடர்ந்து வருகிற இடைத்தேர்தலின் போது, ஜெய்ப்பூர் மாவட்டம் முழுவதும் அல்லது ஜெய்ப்பூர் மாவட்டத்தின் டுடு சட்டமன்ற தொகுதிக்கு மட்டுமே தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் செயல்படுத்தப்படுமா என்ற தெளிவுரை தேர்தல் நடத்தும் அலுவலரால் கோரப்பட்டுள்ளது. ஜெய்ப்பூர் மாவட்டத்தில் வழக்கமான நிருவாகப்பணியை மாற்றியமைத்தல்/இடையூறு செய்வதை தவிர்க்கும் பொருட்டு, ஜெய்ப்பூர் மாவட்டத்தின் டுடு சட்டமன்ற தொகுதியில் மட்டுமே தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் செயல்படுத்தப்படும் என ஆணையம் இவ்விவகாரத்தை கருதிப்பார்த்தி, தெளிவுப்படுத்தியுள்ளது.

தற்போது, இனிவரும் இடைத்தேர்தல்களில், மேற்சொன்ன உத்தரவுகள், நாட்டில் உள்ள மாநில தலைநகரம்/பெருநகரங்கள்/மாநகராட்சிகளுக்கு பொருந்தும் என ஆணையம் முடிவெடுத்துள்ளது. அதற்கேற்ப, மாநகராட்சி/பெருநகரம்/நகராட்சி அமைந்துள்ள யாதொரு மாவட்டத்தில், மாவட்டம் முழுவதும் அல்லாமல், குறிப்பிட்ட சட்டமன்ற தொகுதியில் மட்டுமே தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் செயல்படுத்தப்படும்.

## B.சிறப்பு வாய்ந்த நாட்களை கொண்டாடுதல்

### உத்தரவு தொடர் எண்.29

அமைச்சரவைக் குழு செயலாளர், புதுடில்லி, அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட **10.01.1998** ஆம் நாளிட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் **437/6/**PLN-III**–**ஆம் எண் கடிதம்.

**பொருள்: குடியரசு நாள் கொண்டாட்டம் –அரசியல் கட்சியாளர்களின் வருகை.**

குடியரசு நாள் கொண்டாட்டத்தில் அரசியல் கட்சிகளைச் சேர்ந்த நிருவாகிகள் கலந்துகொள்வதைப் பற்றி தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன. நடைபெறவுள்ள நாடாளுமன்ற மக்களவை, சட்டமன்ற பொதுத் தேர்தல்கள் மற்றும் சில இடைத் தேர்தல்களைக் கருத்திற் கொண்டு தொடர்புடைய அனைத்து அம்சங்களையும் தேர்தல் ஆணையம் கருதிப்பார்த்துள்ளது. பல்வேறு இடங்களில் நடைபெறும் குடியரசு நாள் கொண்டாட்டங்களின் முக்கிய நிகழ்வுகளில் மத்திய அமைச்சர்கள்/மாநில அமைச்சர்கள் / மாநில முதலமைச்சர்கள் பங்கேற்க எவ்வித தடையும் விதிப்பது இல்லை என்று ஆணையம் முடிவு செய்துள்ளது. ஆனால் அத்தகைய நிகழ்ச்சிகளில் பங்கேற்போர் தாய்த் திரு நாட்டின் அருமை பெருமைகளைப் பற்றி எடுத்துரைக்கவும் நாட்டு விடுதலைக்காகத் தமது இன்னுயிரை ஈந்து அரும் பெரும் செயல்கள் புரிந்த தியாகச் செம்மல்களின் நினைவைப் போற்றுகிற வகையில் மட்டுமே அவர்கள் உரையாற்ற வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு, அவர்களை அத்தகைய நிகழ்ச்சிகளில் பங்கேற்க தேர்தல் ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது எந்தச் Å்ழ்நிலையிலும் அரசியல் கட்சிகளின் பரப்புரைகளை நிகழ்த்துவதற்கான தளங்களாக (மேடைகளாக) அந்த இடங்களை மாற்றிவிடக்கூடாது.

அரசியல் கட்சிகள் மற்றும் கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களாகக் கூட உள்ள மத்திய அமைச்சர்கள், மதலமைச்சர்கள் மற்றும் மாநில மைச்சர்கள் தேர்தல் நடைமுறையை மேற்கொண்டிருக்கும் காலத்தில் குடியரசு நாள் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளக் கூடும் என்று கருதிப்பார்த்த தேர்தல் ஆணையம், அத்தகைய தருணங்களில் சொந்த மாவட்டங்களிலிருந்து அல்லது சொந்த மாவட்டங்களிலுள்ள தொகுதிகளிலிருந்து தேர்தலில் போட்டியிடுகிற வேட்பாளர்களாக அறிவிக்கப்படுள்ளவர்கள் அல்லது போட்டியில் கலந்துகொள்ள கருதியுள்ளவர்கள் என்ற நிலையிலுள்ள எந்த ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் / மாநில முதலமைச்சர்கள் மற்றும் மாநில அமைச்சர்கள் எவரும் அத்தகைய விழாக்களில் எத்தகையோரையும் சிறப்பு செய்யும் நிகழ்ச்சிகளில் பங்குபெறக்கூடாது. என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

எனினும், குடியரசு நாள் விழா கொண்டாட்டம் தொடர்பாக போது கலை நிகழ்ச்சிகள் கவிதை அரங்கங்கள் மற்றும் இன்ன பிற கலை பண்பாடு சார்ந்த நிகழ்ச்சிகள், நடத்தப்பெறுவதற்கு ஆணையம் தடை ஏதும் விதிக்கவில்லை. அத்தகைய நிகழ்ச்சிகளுக்கு வருகை தந்து பார்வையிட மத்திய அமைச்சர்கள், மாநில முதலமைச்சர்கள் மற்றும் மாநில பிற அமைச்சர்கள் மற்றும் அரசியல் கட்சி நிருவாகிகளுக்கும் தடை ஏதும் விதிக்கப்படவில்லை. இருப்பினும் அந்த நிகழ்ச்சிகளின் போது அரசியல் சார்ந்த உரைகள் நிகழ்த்தப்படாதிருப்பதை உறுதி செய்யும் வகையில் மிகுந்த கவனம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தற்போதுள்ள மரபையொட்டி தேசிய மற்றும் மாநில அளவில் (பதவிப் பிரமாணம் செய்துவைத்து ) பதவியில் அமர்த்ததல், விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு தாமிர பத்திரங்கள் வழங்குதல் ஆகியவை நடைபெற வேண்டும் என்று ஆணையம் முடிவுசெய்துள்ளது.

மேற்குறித்த தேர்தல் ஆணையத்தின் உத்தரவு கண்டிப்பாகப் பின்பற்றப்படுவதற்காகத் தொடர்புடைய அனைவருக்கும் தெரிவிக்கப்படலாம்.

## உத்தரவு தொடர் எண்.30

அமைச்சரவைக் குழு செயலாளர், புதுடில்லி , அனைத்து மாநிலங்கள் (பீகார் நீங்கலாக) மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமைச் செயலாளர்கள் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு நகல் இணைக்கப்பட்டு பாட்னா, தலைமை தேர்தல் அதிகாரிக்கு அனுபப்பட்ட **27.01.1998** ஆம் நாளிட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் ECI /GE98-437/6/BR/98-PLN-III ஆம் எண் கடிதம்.

**பொருள்:** மாநில முதலமைச்சரின் இல்லத்தில், அரசு செலவில் **10,000** விருந்தினர்கள் இஸ்லாமிய பெருநாளான இரமலான் நோன்புவிருந்து நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டது – தொடர்பாக.

பீகார் மாநிலத்தைச் சேர்ந்த மாநில முதலமைச்சரின் இல்லத்தில் அரசு செலவில் **10,000** விருந்தினர்கள் இஸ்லாமிய பெருநாளான இரமலான் நோன்புவிருந்து நிகழ்ச்சியில் பங்கேற்கலாமா என்ற கேள்வி தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது குறிப்பாக தேர்தல் நடைமுறைகள் தொடர்ந்து செயல்பட்டுவரும் நேரத்தில் மதம் சார்ந்த நிகழ்ச்சியில் (பண்டிகையில்) மாநிலச் செலவில் எந்தவொரு கேளிக்கையையும் அனுமதிப்பது சரியானதன்று என்று ஆணையம் கருத்து தெரிவித்துள்ளது எனினும் எந்த ஒரு தனியாரும் இப்படிப்பட்ட விழாக்களை,அவருடைய (ஆண்/பெண்) சொந்தக்கிணக்கில் செலவில் நடத்துவதற்குத் தடையில்லை மாநில அரசுகளும் மத்திய நேரடி ஆட்சிப்பகுதிகளிலுள்ள அரசுகளும் அமைச்சரவைச் செயலரும் உரிய நடவடிக்கையை மேற்கொள்வதற்கு ஏதுவாக அவர்கள் அனைவரின் கவனத்திற்கும் இது கொண்டுவரப்படுகிறது.

## உத்தரவு தொடர் எண்.31

அமைச்சரவை குழுச் செயலாளர், அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமைச் செயலாளர் மற்றும் தலைமைச் தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட **28.07.1999** ஆம் நாளிட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 437/6/99-PLN-III ஆம் எண் கடிதம்.

**பொருள்:** சுதந்திர நாள் கொண்டாட்டம் அரசியல் கட்சியாளர்களின் வருகை

சுதந்திர நாள் கொண்டாட்டத்தில் அரசியல் கட்சிகளைச் சேர்ந்த நிருவாகிள் கலந்துகொள்வதைப் பற்றி தகவல்கள் வந்துக்கொண்டுள்ளன நடைபெறவுள்ள நாடாளுமன்ற மக்களவை, சட்டமன்ற பொதுத் தேர்தல்கள் மற்றும் இடைத்தேர்தல்களைக் கருத்தில், கொண்டு தொடர்புடைய அனைத்து அம்சங்களையும் தேர்தல் ஆணையம் கருதிப் பார்த்துளளது. பல்வேறு இடங்களில் நடைபெறும் குடியரசு நாள் கொண்டாட்டங்களில் முக்கிய நிகழ்வுகளில் மத்திய அமைச்சர்கள் / மாநில அமைச்சர்கள் / மாநில முதலமைச்சர்கள் பங்கேற்க எவ்வித தடையும் விதிப்பதில்லை என்று ஆணையம் முடிவு செய்துள்ளது. ஆனால் அத்தகைய நிகழ்ச்சிகளில் பங்கேற்போர் தாய்த்திரு நாட்டின் அருமை பெருமைகளை பற்றி எடுத்துரைக்கவும் நாட்டு விடுதலைக்காக தமது இன்னுயிரை ஈந்து அரும் பெரும் செயல்கள் புரிந்த தியாகச் செம்மல்களின் நினைவைப் போற்றுகிற ளவகையில் மட்டுமே அவர்கள் உரையாற்ற வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு அவர்களை அத்தகைய நிகழ்ச்சிகளில் பங்கேற்க தேர்தல் ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது. எந்தச் சூழ்நிலையிலும் அரசியல் கட்சிகளின் பரப்புரைகளை நிகழ்த்துவதற்கான தளங்களாக (மேடைகளாக) அந்த இடங்களை அத்தகையோர் மாற்றிவிடக்கூடாது.

அரசியல் கட்சிகள் மற்றும் கூட்டணிக்கட்சிகளின் வேட்பாளர்களாகக் கூட உள்ள மத்திய அமைச்சர்கள், மாநில அமைச்சர்கள் மற்றும் முதலமைச்சர்கள் தேர்தல் நடைமுறைகயை மேற்கொண்டிருக்கும் காலத்தில் சுதந்திர நாள் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளக் கூடும் என்று கருதிப் பார்த்த தேர்தல் ஆணையக் அத்தகைய தருணங்களில் சொந்த மாவட்டங்களிலிருந்து அல்லது சொந்த மாவட்டங்களிலுள்ள தொகுதிகளிலிருந்து தேர்தலில் போட்டியிடுகிற வேட்பாளர்களாக அல்லது போட்டியில் கலந்துகொள்ள கருதியுள்ளவர்கள் என்ற நிலையிலுள்ள எந்த ஒரு அரசியல் கட்சியைச் சோர்ந்த மத்திய அமைச்சர்கள் / மாநில முதலமைச்சர்கள் மற்றும் மாநில அமைச்சர்கள் எவரும் அத்தகைய விழாக்களில் எத்தகையோரையும் சிறப்பு செய்யும் நிகழ்ச்சிகளில் பங்குபெறக்கூடாது. என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது இருப்பினும், நீண்ட நாட்களாக இருந்துவரும் மரபுகளுக்கேற்ப இந்தியப் பிரதமரும் மாநில முதலமைச்சரும் முறையே தேசியத் தலைநகரிலும் மாநிலத் தலைநகரங்களிலுருந்தும் சுதந்திர நாள் கொண்டாட்டத்தின் போத சிறப்பு செய்யும் நிகழ்ச்சியில் பங்கு பெறலாம்.

சுதந்திர நாள் விழா கொண்டாட்டம் தொடர்பாக கலைநிகழ்ச்சிகள், கவிதை அரங்கங்கள் மற்றும் இன்னபிற கலைபண்பாடு சார்ந்த நிகழ்ச்சிகள் நடத்தப்பெறுவதற்கு ஆணையம் தடை ஏதும் விதிக்கவில்லை. அத்தகைய நிகழ்ச்சிகளுக்கு வருகை தந்து பார்வையிட மத்திய அமைச்சர்கள், மாநில முதலமைச்சர்கள் மற்றும் பிற அமைச்சர்கள் மற்றும் அரசியல் கட்சி நிருவாகிகளுக்கும் தடை ஏதும் விதிக்கப்படவில்லை. இருப்பினும் அந்த நிகழ்ச்சிகளின்போது, ஆட்சியிலள்ள கட்சியின் சாதனைகளை விளக்கி உரைகள் நிகழ்த்தப்படாதிருப்பதை உறுதிசெய்யும் வகையில் மிகுந்த கவனம் மேற்கொள்ளப்படவேண்டும்.

தற்போதுள்ள மரபையொட்டி தேசிய மற்றும் மாநில அளவில் பதவிப் பிரமாணப் செய்து வைத்து பதவியில் அமர்த்துதல் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு தாமிரப் பத்திரங்கள் வழங்குதல் மற்றும் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெறலாம் என்று ஆணையம் முடிவு வழங்கிடவும் ஆணையம் அனுமதிக்க முடிவு செய்துள்ளது.

மேற்குறித்த தேர்தல் ஆணையத்தின் உத்தரவு கண்டிப்பாகப் பின்பற்றப்படுவதற்காக தொடர்புடைய அனைவருக்கும் தெரிவிக்கப்படலாம். இதனைப் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகை அளிக்கலாம்.

## உத்தரவு தொடர் எண்.32

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட **16.08.1999**ஆம் நாளிட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 437/6/99-PLN-III ஆம் எண் கடிதம்.

**பொருள்:** சத்பாவன நாள் கொண்டாட்டம் அரசியல் கட்சி நிருவாகிகளின் பங்கேற்பு

நாடு முழுவதும் கொண்டாடப்படும் சத்பாவன நாள் விழாவில் அரசியல் கட்சிகளின் நிருவாகிகள் பங்குபெறுவது குறித்து கடிதங்கள் வந்துள்ளன என்று தெரிவிக்க நான் பணிக்கப்பட்டுள்ளேன். நாடாளுமன்ற மக்களவை மற்றும் சில மாநிலங்களுக்கான சட்டமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள இவ்வேளையில் இது குறித்த கருத்துக்களை ஆணையம் நன்கு ஆய்வு செய்து மத்திய அமைச்சர்கள் / மாநில முதலமைச்சர்கள் / மாநிலலங்களிலுள்ள பிற அமைச்சர்கள் "சத்பாவன நாள்" கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளும் போது அவர்கள் ஆற்றும் உரை மக்களிடையே நல்லிணத்தை வளர்க்கும் வகையில் மட்டமே இருக்க வேண்டும் மற்றும் ஆட்சியிலுள்ள கட்சியின் சாதனைகளைப் பறைசாற்றும் வகையிலான அரசியல் சார்ந்த உரையாக நிபந்தனை இல்லாதிருப்பதை உறுதிசெய்வதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் அவர்கள் பங்குபெறுவதற்கு அனுமதி வழங்கப்படும் எந்தவொரு சூழ்நிலையிலும் அது, அரசியல் பிரச்சாரத்திற்காக மேடையாக ஆகிவிடக் கூடாது அமைச்சர்களின் பெயரில் செய்திகள் ஏதேனும் வெளியிடப்பட்டால், அவை தேசிய ஒருமைப்பாட்டிற்கான சிந்தனைப் போக்கிற்கான கருத்தாக அமைந்திருக்கவேண்டும். சம்பந்தப்பட்ட அமைச்சரின் புகைப்படம் அதில் இடம் பெறக்கூடாது.

மேற்குறித்த தேர்தல் ஆணையத்தின் உத்தரவு கண்டிப்பாகப் பின்பற்றப்படுவதற்சகாக தொடர்புடைய அனைவரின் கவனத்திற்கும் கொண்டுவரப்படலாம்.

## உத்தரவு தொடர் எண்.33

மத்திய அமைச்சரவைக்குழு செயலகத்தின் அமைச்சரவைக் குழு செயலாளர் மற்றும் தேசிய தலைநகர் பகுதியான புதுடில்லி, மேற்கு வங்கம், உத்தரப்பிரதேசம், இராஜஸ்தான், பஞ்சாப், நாகாலாந்து, மணிப்பூர் மத்தியப்பிரதேசம், கர்நாடகம், ஜம்மு காஷ்மீர், இமாச்சல பிரதேசம், குஜராத், கோவா, பீகார், அஸ்ஸாம், ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரா, அருணாச்சல் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலுள்ள தலைமைத் தேர்தல் அதிகாரிகள் ஆகியோருக்கு அனுப்பப்பட்ட **28.09.2004** ஆம் நாளிட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் **437/6/2004–**PLN-III ஆம் எண் கடிதம்.

**பொருள்:** காந்தி ஜெயந்தி கொண்டாட்டம் – அரசியல் சட்சி நிருவாகிகளின் பங்கேற்பு.

நாடு முழுவதும் காந்தி ஜெயந்தி, **2004**ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் **2** ஆம் நாள் கொண்டாடப்படுவதை உங்களுக்குத் தெரிவிக்க நான் பணிக்கப்பட்டுள்ளேன். ஆந்திரப் பிரதேசம், மராட்டியம் ஆகிய மாநிலங்களுக்கான சட்டமன்ற பொதுத் தேர்தல்கள் மற்றும் சில இடைத்தேர்தல்கள் விரைவில் விருப்பபதைக் கருத்திற்கொண்டு, இந்த ஆணையம், தொடர்புடைய அனைத்த அம்சங்களையும் பரிசீலித்து, நாட்டுட விடுதலைக்காக மகாத்மா காந்தி.ன் சாதனை மிக்க பணிகள் குறித்து பாராட்டும் வகையில் மட்டுமே அவ்விழாவில் பங்குபெறுவோரின் பேச்சுக்கள் அமையவேண்டும் என்றும், ஆட்சியிலுள்ளள கட்சியின் சாதனைகளால் பறைசாற்றும் விதத்தில் அரசியல் சார்ந்த உரைகள் அமையாதியரப்பதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, மத்திய அமைச்சசர்கள்/ மாநில அமைச்சர்கள்/ மாநில முதல்வர்கள் காந்தி ஜெயந்தி வியாவில் பங்கேற்கலாம் என்று ஆணையம் முடிவு செய்துள்ளது. எந்தவொரு சூழ்நிலையிலும் அது, அரசியல் கட்சிப் பரப்புரைக்கான தளமாக அது அமைந்துவிடக்கூடாது. அமைச்சர்கள் பெயரால் வெளியிடப்பட்ட ஏதேனும் செய்திகள், மகாத்மா காந்தியின் கோட்பாட்டில் அமைந்த கருத்துக்களை கொண்டதாக மட்டுமே இருக்க வேண்டும். அதே நேரத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சருடைய புகைப்படம் அதில் இடம் பெறக்கூடாது.

மேற்சொன்ன உத்தரவுகள், கண்டிப்பாகப் பின்பற்றப்படுவதற்காக, தொடர்புடைய அனைவரின் கவனத்திற்கும் கொண்டுவரப்படலாம். இதனைப் பெற்றுக்கொண்டமைக்காக ஒப்புகை அளிக்கவும்.

## உத்தரவு தொடர் எண்.34

கோவா, பஞ்சாப், மணிப்பூர், உத்தரகாண்ட் மற்றும் உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களிலுள்ள தலைமைத் தேர்தல் அதிகாரிகள் மற்றும் தலைமைச் செயலாளர்களுக்கு அனுப்பப்பட்ட **24.01.2012** ஆம் நாளிட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் **437/6**/INST/2012-CC & BE ஆம் எண் கடிதம்.

**பொருள்:** குடியரசு நாள் கொண்டாட்டம் – அரசியல் கட்சிக்காரர்களின் வருகை குறித்த தெளிவுரை – தொடர்பாக.

**28.12.2011** ஆம் நாளிட்ட ஆணையத்தின் **437/6**/INST/2012-CC & BE என்ற எண்ணிட்ட கடிதத்தை குறிப்பிட நான் பணிக்கப்பட்டுள்ளேன். அதில் கீழ்வருவனவற்றை ஆணையம் தெரிவித்துள்ளது

**தேர்தல் நடைமுறைகளின் போது கொண்டாட்டப்படும் குடியரசு நாள் விழாவில் கலந்துகொள்ளும் அரசியல் கட்சிகள் மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் முதலமைச்சர்கள் மற்றும் மாநில அமைச்சர்கள் வேட்பாளர்களாகக்கூட இருக்கலாம் என்பதால், அவைருக்கும் சமவாய்ப்பு அளிப்பதைக் கருத்திற் கொண்டு யாதொரு மத்திய அமைச்சரோ / மாநில முதலமைச்சரோ / மாநிலத்தின் அமைச்சர் அல்லது அரசியல் கட்சி நிருவாகி / முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களது சொந்த மாவட்டத்திலோ தொகுதியிலோ அல்லது அவர் போட்டியிடுகிற / போட்டியிடக் கருதுகிற தொகுதியிலோ யாதொரு இடத்தில் யாதொரு குடியரசு நாள் கொண்டாட்டத்திலும் கலந்து கொண்டு மரியாதை செலுத்தக் கூடாது என ஆணையம் உத்தரவிடுகிறது.**

கீழ்வருவனவற்றைக் குறிப்பிடும் **23.11.2007** ஆம் நாளிட்ட **437/6/**2007- PLN-III ஆம் எண்ணிட்ட ஆணையத்தின் கடிதத்தின் பத்தி **3**இன் மேல் உங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

**(3)** அமைச்சர்கள் தங்களுடைய தலைமையகத்தில் தங்களுடைய இருப்பிடத்திலிருந்து அவர்களுடைய அலுவலத்திற்குச் செல்ல அவர்களுடைய அலுவலக வாகனங்களைப் பயன்படுத்தலாம். ஆளால், அவர்கள், தேர்தல் தொடர்பான பணிக்காக அல்லது யாதொரு அரசியல் செயல்பாட்டிற்காககட்சி அலுவலகத்திற்குச் செல்வதற்காக (அது அவருடைய பயண வழியில் அமைந்திருந்தாலும் கூட) அலுவலக வாகனத்தைப் பயன்படுத்தக் கூடாது.

அவர்களது வருகையை அறிவிக்கும் வண்ணம் யாதொரு நிறத்திலுள்ள யாதொரு சூழல் விளக்குடன் கூடிய முன்னே செல்லும் கார்கள் அல்லது எச்சிரிக்கை ஒலி எழுப்பும் சாதனம் பொருத்தப்கபட்ட யாதொரு ஊர்தி அவரின் தேர்தல் தொடர்பான பணியின் போது மாநில அரசே

ஆயுதங்கள் ஏந்திய பாதுகாப்புப் பணியாளருடன் அத்தகைய வாகனத்தை அனுமதித்திருந்தாலும் கூட அவர்கள் அதனைப் பயன்படுத்தக்கூடாது".

பஞ்சாப் மாநில முதலமைச்சர் இராமா மண்டியில் பிரச்சாரம் செய்து கொண்டுவருகிறார் என்றும், அங்கிருந்து பெரோஸ்பூருக்கு **26.01.2012** அன்று தேசியக் கொடி ஏற்றுவதற்காக பிரயாணம் செய்யவிருப்பது பற்றியும் தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு கடிதம் வரப்பெற்றுள்ளது.

முதலமைச்சர் இராமா மண்டியிலிருந்து பெரோஸ்பூர் வரை சென்று திரும்பும் வாகனச் செலவை மாநில அரசே ஏற்க வேண்டும் என்று முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் வேண்டினார்.

மேலே குறிப்பிட்டுள்ள உத்தரவுகளின் வழிவகையின்படிஅந்தச் செய்தி ஆணையத்தால் கருத்தில் கொள்ளப்பட்டது, சிறப்பு நேர்வாக, அத்தகைய பிரமுகர்கள் குடியரசு தினவிழா கொண்டாட்டத்தின் போது தேசியக் கொடி ஏற்ற நேருமானால், அவர்கள் அந்த இடங்களுக்கு, ஏதேனும் தேர்தல் பிரச்சாரம் செய்யும் இடத்திலிருந்து நேரே செல்லாம் என ஆணையம் முடிவு செய்துள்ளது. இதற்கான பயணச் செலவை சம்பந்தப்பட்ட மாநில அரசு ஏற்றுக்கொள்ளும். இடைய தலைமையகத்தின் வழியாக இந்த இடங்களுக்கு அவர்கள் பயணம் செய்யத் தேவையில்லை. இருப்பினும், அமைச்சர்கள் தேர்தலில் போட்டியிடுகிற இடம் அவர்களின் சொந்த மாவட்டங்களிலோ அமைந்துள்ள அல்லது மாவட்டங்களிலோ கொடியேற்றம் செய்யக்கூடாது என்பதை ஆணையம் மீண்டும் வலியுறுத்துகிறது.

## C. விளம்பரங்களை வெளியிடுதல்

## உத்தரவு தொடர் எண்.35

இந்திய அரசின் அமைச்சரவை செயலாளர், இந்திய அரசின் செய்தி மற்றும் ஒளிப்பரப்புத் துறை அமைச்சக செயலாளர், அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய நேரடி ஆட்சிப் பகுதிகளின் அரசு தலைமைச் செயலாளர்கள் ஆகியோருக்கும் அரசின் அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமை நேர்தல் அதிகாரிகளுக்கு நகல் அனுப்பப்பட்ட தேர்தல் ஆணையத்தின் **08.03.2004**ஆம் நாளிட்ட 437/6/2004–PLN III, ஆம் எண் கடிதம்.

**பொருள்:** அரசு செலவில் விளம்பரங்கள் மற்றும் விளம்பர பலகைகளை காட்சிப்படுத்துதல்.

அதிகாரத்திலள்ள கட்சியின் சாதனைகளை பறைசாற்றுகின்ற எண்ணற்ற விளம்பரத் பலகைகள் அரசு செலவில், மத்திய மற்றும் மாநிலங்கள்/மத்திய நேரடி ஆட்சிப் பகுதிகளின் காட்சிப்படுத்தியுள்ளது அரசால் ஆணையத்தின் கவனத்திற்கு வந்துள்ளது. அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் வழிகாட்டு மாதிரி நடத்தை விதிகள் – அதிகாரத்திலுள்ள கட்சி –VII ஆம் பத்தியின் (iv)ஆம் துணைப் பத்தியில் இன் கீழ்கண்டவற்றின் மீது உங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

மத்திய அல்லது சம்பந்தப்பபட்ட மாநிலம்/மத்திய நேரடி ஆட்சிப் பகுதியில் அதிகாரத்திலுள்ள அரசியல் கட்சி, அதன் தேர்தல் பிரச்சார செயல் நோக்கங்களுக்காக அதன் அரசுப் பதவியை பயன்படுத்தியுள்ளது என்றும், குறிப்பாக (iv)அரசு செலவில் செய்தித்தாள்கள் மற்றும் இதர ஊடங்களில் விளம்பரம் வெளியிட்டது என்ற யாதொரு புகாருக்கு எவ்விவி ஆதாருமும் இல்லை என்றும் உறுதி செய்வதுடன் தேர்தலில் ஆளும் கட்சியின்வெற்றி வாய்ப்புகளை மேம்படுத்தும் நோக்கில் சாதனைகள் தொடர்பான விளம்பரங்கள் மற்றும் அரசியல் செய்திகளை ஒருதலைபட்சமாக வெளியிட அரசு ஊடங்களை தவறுதலாக பயன்படுத்துதல் போன்றவை கவனத்துடன் தவிர்க்கப்பட வேண்டும். **2004**ஆம் ஆண்டு பிப்ரவரி **29**ஆம் நாளன்று மக்களவை மற்றும் ஆந்திர பிரதேசம், கர்நாடகம், ஒரிஸா மற்றும் சிக்கிம் மாநில சட்டப்பேரவைத் தொகுதிகளின் தேர்தல்களின் அட்டவணை அறிவிப்புடன் மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் உடனடியாக செயலக்கு வந்தது. தேர்தல் நாள் அறிவிப்பிற்கு முன்னரே விளம்பரத் தட்டிகள், விளம்பரங்கள் அல்லது சுவரொட்டிகள் அரசுப் பணத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டு இருப்பினும் அத்தகைய விளம்பரத் தட்டிகள் மற்றும் விளம்பரங்களை தொடர்ந்து காட்சிக்கு வைப்பதால் அவை அதிகாரத்திலுள்ள அரசியல் கட்சிகளுக்கு மட்டு மிஞ்சிய உரிமையளித்து வாக்காளர்களை அதிகாரத்திலுள்ள கட்சிக்கு சாதகமாக்குவதால் விளைவுகளை உண்டாக்குவது மாதிரி தேர்தல் நடத்தை விதிகளை மீறும் செயலாகும்.

காட்சிப்படுத்தப்பட்டுள்ள அத்தகைய விளம்பரத் தட்டிகள், விளம்பரங்கள் முதலியவை சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் உடனடியாக அகற்றப்பட்டு, அது குறித்த நிறைவேற்றுகை அறிக்கை ஒன்று ஆணையத்திற்கு அளிக்கப்பட வேண்டும் என ஆணையம் உத்திரவிட்டுள்ளது.

மேலும், தேர்தல் நேரங்களின் போது அரசுப் பணத்தில் செய்தித்தாள்கள் மற்றும் மின்னணு ஊடகங்கள் உள்ளிட்ட இதர ஊடகங்கள் வாயிலாக விளம்பரங்களை வெளியிடக் கூடாது மற்றும் அதிகாரத்தில் உள்ள கட்சிகளின் வெற்றி வாய்ப்பை மேம்படுத்தும் நோக்கில் சாதனைகள் தொடர்பான விளம்பரங்கள் மற்றும் அரசியல் செய்திகளை ஒருதலைபட்சமாக வெளியிட ஊடகங்களை தவறான நோக்கில் பயன்படுத்துதல் போன்றவை கவனத்துடன் தவிர்க்கப்பட வேண்டும் எனவும் ஆணையம் உத்தவிட்டுள்ளது.

ஆணையத்தின் உத்தரவுகளை உடனடியாக நிறைவேற்ற மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் அனைத்து அமைச்சகங்கள்/ துறைகள்/ அலுவலகங்களுக்கு தெரிவிக்கப்படலாம்.

## உத்தரவு தொடர் எண். 36

அனைத்து மாநிலங்கள்/மத்திய நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பபட்ட தேர்தல் ஆணையத்தின் 15.04.2004ஆம் நாளிட்ட 50 9/75/2004/JS–1 ஆம் எண் கடிதம்.

**பொருள்:** தொலைக்காட்சி அலைவரிசை மற்றும் கேபிள் நெட்வொர்க் ஆகியவற்றில் அரசியல் நிலை விளம்பரங்கள் தொடர்பான 13.04.2004ஆம் நாளிட்ட உச்சநீதிமன்ற ஆணை.

மாண்பமை உச்சநீதிமன்றம், சிறப்பு அனுமதி மனு(C) எண்: 6679/2004–இல் (தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சகம் எதிர் திருவாளர்கள். ஜெமினி தொலைக்காட்சி நிறுவனத்தார் மற்றும் ஏனையோர்) பிறப்பித்த 13.04.2004ஆம் நாளிட்ட ஆணையினை தொடர்ந்து தேர்தல் ஆணையத்தால் பிறப்பிக்கப்பட்ட 15.04.2004ஆம் நாளிட்ட ஆணையின் நகல். ஒன்றை இத்துடன் இணைத்து அனுப்புமாறு நான் பணிக்கபட்டுள்ளேன்.

2. டெல்லியில் தலைமையிடத்தை கொண்டுள்ள யாதொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது யாதொரு சங்கங்கள்/ கழகங்களால் தொலைக்காட்சி அலைவரிசைகள் மற்றும் கேபிள் நெட்வொர்க்குகளில் ஒளிபரப்பப்படும் விளம்பரங்களுக்கு சான்றளித்தல், கூர்ந்தாய்வு செய்தல் மற்றும் முன் ஆய்விற்காக இந்த ஆணையின் 6(i) ஆம் பத்தியில் அறிவுறுத்தப்பட்டவாறாக டெல்லியிலுள்ள தலைமைத் தேர்தல் ஆணையர் குழு ஒன்றை அமைக்க வேண்டும் என ஆணையம் உத்தரவிட்டுள்ளன கவனத்தில் கொள்ளப்படலாம். அதேப் போன்று 6(iii) ஆம் பத்தியில் கூறப்பட்டவாறு, மாநிலங்களில்/ மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளில் தலைமையிடத்தைக் கொண்டுள்ள அரசியல் கட்சிகள் மற்றும் ஏனைய கழகங்கள்/குழுக்கள் ஆகியவற்றால் அளிக்கப்படும் விண்ணப்பங்களை பரிசீலனை செய்ய ஏனைய மாநிலங்களின்/மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் குழுக்களை அமைக்க வேண்டும். ஆணையின் 6(V) ஆம் பத்தி எண்] [காண்க . சம்பந்தப்பட்ட தொகுதியின் தேர்தலில் போட்டியிடும் தனிப்பட்ட வேட்பாளர்களின் விளம்பரங்களை முன் ஆய்வு, கூர்ந்தாய்வு மற்றும் சான்றளிக்கும் நியமன அதிகாரியாக ஒவ்வொரு பாராளுமன்றத் தொகுதியின் தேர்தல் நடத்தும் அலுவலர் அறிவிக்கப்பட்டுள்ளார். ஆந்திரப் பிரதேசம், கருநாடகம், ஒரிஸா மற்றும் சிக்கிம் மாநில சட்டமன்ற தொகுதிகளின் தற்போதைய பொதுத் தேர்தலிலும் சில மாநிலங்களின் இடைத் தேர்தல்களிலும் போட்டியிடும் வேட்பாளர்களின் விளம்பரங்களுக்கு சான்றளிக்க கோரும் விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட சட்டமன்ற தொகுதி அடங்கியுள்ள பாராளுமன்றத் தொகுதியின் தேர்தல் நடத்தும் அலுவலர் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**3.** விளம்பரங்களுக்கு சான்றளிக்க கோரும் விண்ணப்பங்களின் மீது நியமன அதிகாரிகளின் குழுக்களின் முடிவுகள் தொடர்பான புகார்களை/குறைகளை களைய மேலும் ஒரு குழுவினை அனைத்து மாநிலங்கள் /மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

**4.** சான்றளிக்க கோரும் ஒவ்வொரு விண்ணப்பங்களும் இந்த ஆணையில் இணைக்கப்பட்டுள்ள பிற்சேர்க்கை –A வில் வழங்கப்பட்டுள்ள வடிவமைப்பில் விவர அறிக்கை ஒன்றில் சம்பந்தப்பட்ட குழு அல்லது சம்பந்தப்பட்ட நியமன அதிகாரியின் முன்பாக அளிக்கப்பட வேண்டும். விளம்பரம் ஒன்றை ஒளிபரப்புவதற்கான சான்றிதழ் இந்த ஆணையில் இணைக்கப்பட்டுள்ள பிற்சேர்க்கை–B இல் வழங்கப்பட்டுள்ள வடிவமைப்பில் குழுவால் நியமன அதிகாரியால் வழங்கப்பட வேண்டும். இதன் சான்றொப்பமிடப்பட்ட எழுத்துப்படியுடன், மின்னணு வடிவில், கருதப்பட்ட விளம்பரங்களின் இரண்டு நகல்களையும் அளிக்க வேண்டும்.

**5.** சான்றளிக்க கோரி பெறப்பட்ட அனைத்து விண்ணப்பங்களும் பதிவேட்டில் முறையாக வைத்து வரப்படவேண்டும். ஒவ்வொரு விண்ணப்பமும் முறையாக வரிசை எண் இடப்பட்டு, மின்னணு படிவத்தின் இரண்டு நகல்களிலும் அந்த வரிசை எண் குறிப்பிடப்பட வேண்டும். விண்ணப்பம் பெறும் அலுவலர் அவரது கையொப்பத்தினை மின்னணு நகலில் இடவேண்டும். சான்று வழங்கிய பின்னர், ஒளிபரப்பு செய்ய சான்று வழங்கப்பட்ட விளம்பரத்தின் மின்னணு படி ஒன்றை குழு/ நியமன அதிகாரி வைத்திருத்தல் வேண்டும்.

**6.** மாநில/மத்திய அரசின் நேரடித் ஆட்சிப் பகுதியிலுள்ள குழுக்கள் மற்றும் நியமன அதிகாரிகள் விளம்பரங்களை முன் ஆய்வு செய்தல் மற்றும் கூர்ந்தாய்வு செய்தல் செயல் நோக்கங்களுக்காக தேவைப்படக் கூடிய தொலைக்காட்சி, விசிஆர் VCR, விசிடி VCD (குறுந்தகடுகள்) போன்ற தேவையான சாதனங்களை/உள்கட்டமைப்பு வசதிகளை வாடகைக்கு எடுத்தல் அல்லது வாங்குவதன் வாயிலாக அனைத்து தலைமைச் தேர்தல் அதிகாரிகளும் உடனடி நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

ஒரே வகையிலான பொருட்களுக்கு மாநில அரசுகளால் ஏற்பளிக்கப்பட்ட விலைகள் மற்றும் நடைமுறைககளின்படி எந்தவொரு கொள்முதலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**7.** தேர்தல் ஆணையத்தின் உத்தரவுகளுக்கு எளிய அளவில் விளம்பரப்படுத்தப்படலாம். மேலும், மாநிலம்/மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளில் உள்ள அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்/மாவட்ட மாஜிஸ்திரேட்டுகள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள், தொலைக்காட்சி அலைவரிசைகள், கேபிள் இயக்குபவர்கள் மற்றும் அரசியல் கட்சியினர் கவனத்திற்கு குறிப்பிடத்தக்க வகையில் கொண்டு வரப்படலாம்.

**8.** இதனைப் பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புகை அளிக்கவும்.

**<u>நகல்</u>**

## இந்தியத் தேர்தல் ஆணையம்

நிர்வாச்சன் சதன், அசோகா சாலை, புதுடெல்லி–110001

எண். 509/75 2004/JS-I நாள்: 15.04.2004

<u>ஆணை</u>

1. ஒரு விளம்பரம், வரையறுக்கப்பட்ட விளம்பர குறியீடுகளுக்குள் இருப்பது உறுதி செய்யப்பட்டாலன்றி, மற்றபடி எந்த ஒரு நபரும் யாதொரு விளம்பரத்தை கேபிள் சேவை வாயிலாக ஒளிபரப்பு அல்லது மறு ஒளிபரப்பு செய்யக்கூடாது என 1995 ஆம் ஆண்டு கேபிள் தொலைக்காட்சி (முறைப்படுத்துதல்) சட்டம் வகைசெய்வதாலும்; மற்றும்

2. 1994 ஆம் ஆண்டு கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பு (முறைப்படுத்துதல்) விதிகளின் 7 ஆம் விதியின் (3) துணைவிதி, மேலே குறிப்பிடப்பட்டுள்ள 6 ஆம் பிரிவின் படி விளம்பரக் குறியீட்டை வரையறுத்து, "முழுமையாக அல்லது முக்கியமாக மதம் சார்ந்த அல்லது அரசியல் சார்ந்த விளம்பரம் அனுமதிக்கப்படக் கூடாது,; மதம் அல்லது அரசியலைச் சார்ந்த வகையில் விளம்பரங்கள் இயக்கப்படக் கூடாது" என்பதற்கு வகைசெய்வதாலும்; மற்றும்

3. ஆந்திரப்பிரதேச உயர்நீதிமன்றம் 5214/ 2004 ஆம் எண் நீதிப்பேராணை பலவகை மனுவில் (ஜெமினி டி.வி தனியார் நிறுவனம் எதிர் இந்தியத்தேர்தல் ஆணையம் மற்றும் ஏனையோர்) 23.03.2004 ஆம் நாளிட்ட அதனுடைய தீர்ப்பு மற்றும் ஆணையில் 1994 ஆம் ஆண்டு கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பு (முறைப்படுத்துதல்) விதிகளின் 7(3) ஆம் விதியின் மேற் சொன்ன விதித்துறைகளை ரத்து செய்வதாலும்; மற்றும்

4. இந்திய உச்சநீதிமன்றம் 6679/2004 ஆம் எண் சிறப்பு அனுமதி மனுவில் (உரிமையியல்) (துகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் எதிர் திருவாளர்கள். ஜெமினி டி.வி மற்றும் ஏனையோர்) 2.4.2004 ஆம் நாளிட்ட அதனுடைய இடைக்கால ஆணையில் எதிர்க்கப்பட்டுள்ள ஆணைக்கு பதிலாக பின்வருமாறு உத்தரவிட்டுள்ளதாலும்; அவை வருமாறு;

(i) நம் நாட்டின் சட்டதிட்டங்களுக்கு பொருந்தாத வகையில் அமைந்த எந்தவிதமான விளம்பரங்களையும், நீதிமுறைமை, நாகரீகம் இவற்றிற்கு புறம்பான மற்றும் சந்தேகத்திற்குரிய கருத்துக்களையும், பொதுமக்களுக்கு அதிர்ச்சியளித்தல், வெறுப்பூட்டுதல் மற்றும் கலகம் செயவதற்கான உணர்ச்சிகளைத் துாண்டல் இவ்வகையிலமைந்த விளம்பரங்களையும், எந்தவொரு கேபிள் இயக்குபவர் அல்லது தொலைக்காட்சி நிறுவனம் ஒளிபரப்பக் கூடாது;

(ii) இந்த ஒளிபரப்பு இந்தியத் தேர்தல் ஆணையத்தால் கண்காணிக்கப்பட வேண்டும்.

(iii) அத்தகைய விளம்பரத்தை வெளியிட்டதன் பேரில் வேட்பாளர் மேற்கொண்ட செலவினம் சோர்க்கப்பட வேண்டுமா அல்லது சேர்க்கபப்பட வேண்டாமா என்பது **5.4.2004** ஆம் நாளன்று கருதிப்பார்க்கப்படடும்; மற்றும்

(iv) அத்தகைய விளம்பரங்கள் சட்டத்திற்குட்பட்ட வகையிலுள்ளதா என்பதற்கான வழிவகைகள் இந்திய தலைமைத் தேர்தல் ஆணையரால் வரையறுக்கப்பட வேண்டும்.

**5.** இந்திய உச்சநீதி மன்றம் **6679/2004** ஆம் எண் சிறப்பு அனுமதி மனுவில் **(**உரிமையியல்**)** மேற்கொண்டு பிறப்பித்த **13.4.2004** ஆம் நாளிட்ட ஆணையில் பின்வருமாறு உத்தரவிட்டுள்ளதாலும்; அவை வருமாறு

" நாங்கள்ஆணை பிறப்பிப்பதற்கு முன்னர், அவ்வப்போது திருத்தப்பட்டவாறான **1995** ஆம் ஆண்டு கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பு (முறைப்படுத்துதல்) சட்டம் மற்றும் அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகள் ஆகியவற்றின் குறிப்பிட்ட சில விதித்துறைகளை கவனத்தில் கொள்வது பயனுடையதாக இருக்கும். நாட்டில் கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பின் செயல்பாட்டை முறைப்படுத்துவது இச்சட்டத்தின் நோக்கமாகும். ஒரு விளம்பரம் வரையறுக்கப்பட்ட விளம்பரக் குறியீடுகளுக்குள் இருப்பது உறுதி செய்யப்பட்டாலன்றி, மற்றபடி எந்த ஒரு நபரும் யாதொரு விளம்பரத்தையும் கேபிள் தொலைக்காட்சி சேவை வாயிலாக ஒளிபரப்பு அல்லது மறுஒளிபரப்பு செய்யக்கூடாது என இச்சட்டத்தின் **6** ஆம் பிரிவு வகை செய்கிறது. அனுமதியளிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரி, இச்சட்டத்தின் வதித்துறைகள் ஏதேனும் கேபிள் தொலைக்காட்சி இயக்குபவரால் மீறப்பட்டுள்ளது அல்லது மீறப்பட்டு வருகிறது என்று நம்புவதற்கு காரணம் இருந்தால் கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பை இயக்குவதற்காக அத்தகைய கேபிள் தொலைக்காட்சி இயக்குபவர் பயன்படுத்தி வருகிற சாதனத்தை பறிமுதல் செய்வதற்கு இச்சட்டத்தின் **11** ஆம் பிரிவு வகை செய்கிறது. இச்சட்டத்தின் ஏதேனும் விதித்துறைகள் மீறப்படுகிற நேர்வில் சாதனத்தை அவர் பறிமுதல் செய்யலாம் என இச் சட்டத்தின் **12** ஆம் பிரிவு வகை செய்கிறது. அதைப்போன்றே சாதனத்தை பறிமுதல் செய்வதற்கும், தண்டனை அளிப்பதற்கும் இச்சட்டத்தின் **13**ஆம் பிரிவு வகை செய்கிறது. இச்சட்டத்தின் விதித்துறைகளை மீறப்படுவதற்கான தண்டணை அளிப்பதற்கு இச்சட்டதின் **16–**ஆம் பிரிவு மேலும் வகை செய்கிறது. அதிகாரம் பெற்ற அலுவலர் ஒருவர், பொதுநலன் கருதி அவ்வாறு செய்வது அவசியமானது அல்லது உகந்தது என அவர் கருதுவாராயின் ஏதேனும் விளம்பரம் வரையறுக்கப்பட்ட நிகழ்ச்சி குறியீடு மற்றும் விளம்பர குறியீடு ஆகியவற்றிற்கு இணக்கமாக இல்லாது மற்றும் அது மதம், இனம், மொழி, சாதி அல்லது சமுதாயம் அல்லது ஏதேனும் பிற காரணங்களின் பேரில் பகைமையை வளர்க்கக் கூடிய மற்றும் வெவ்வேறு சாதியினர், இனத்தினர், மொழியினர் அல்லது மதம் சார்ந்த குழுவினர் அல்லது சமுதாயத்தினர் இடையே இணக்கமின்மை அல்லது பகைமை உணர்வு, வெறுப்பு அல்லது தீய எண்ணத்தை ஏற்படுத்தலாம் அல்லது பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கக் கூடிய ஏதேனும் விளம்பரத்தை, யாதொரு கேபிள் தொலைக்காட்சி இயக்குபவர் ஒளிபரப்புவதிலிருந்து அல்லது மறு ஒளிப்பரப்பு செய்வதிலிருந்து ஆணை

வாயிலாக தடை செய்வதற்கு இச்சட்டத்தின் **19–**ஆம் பிரிவு வகை செய்கிறது. இச்சட்டத்தின் **22–**ஆம் பிரிவு, இச்சட்டத்தின் விதித்துறைகளை நடைமுறைப்படுத்துவதற்கான விதிகளை இயற்றுவதற்கு மத்திய அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது. மேற்சொன்ன சட்டத்தின் **22–**ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு மத்திய அரசுக்கு **1994–**ஆம் ஆண்டு, கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பு விதிகள் என்றழைக்கப்படுகின்ற விதிகளை இயற்றுவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. (சுருக்கமாக "விதிகள்") இந்த விதிகளின் 7ஆம் விதி, ஒரு விளம்பரம் கேபிள் சேவை வாயிலாக ஒளிபரப்பப்படுகிற போது அது அந்த நாட்டின் சட்டங்களுக்கு ஒத்திசைவாக இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட வேண்டும் என்றும், சந்தாதாரர்களின் நன்னெறி, பண்பாடு, மத உணர்வுகளை புண்படுத்தும் வகையில் இருக்கக் கூடாது என்றும் வகை செய்கிறது. ஏனையவற்றுக்கிடையே துணை விதி(2), இந்திய அரசமைப்பு சட்டத்தின் ஏதேனும் விதித்துறைக்கு மாறாக ஏதேனும் இனம், சாதி, நிறம், சமயக் கோட்பாடு, நாட்டினம் ஆகியவற்றை எள்ளி நகையாடுகிற மற்றும் ஏதேனும் வகையில் மக்களை குற்றம் செய்ய. தூண்டுகிற, அமைதியின்மை அல்லது வன்முறை அல்லது சட்ட மீறுகை அல்லது கீழ்தரமான நடவடிக்கைக்கு காரணமாக அமைகிற விளம்பரம் எதுவும் அனுமதிக்கப்படக் கூடாது என்பதற்கு வகை செய்கிறது. மேலும் (3)–ஆம் துணை விதி, முழுமையாக அல்லது முக்கியமாக மதம் சார்ந்த அல்லது அரசியல் சார்ந்த விளம்பரம் அனுமதிக்கப்படக் கூடாது; இந்த பின்னனியில் நாங்கள் தற்போது பின்வருமாறு ஆணை பிறப்பிக்க கருதியுள்ளோம்.

தொலைக்காட்சி அலைவரிசை மற்றும்/அல்லது கேபிள் கட்டமைப்பில் விளம்பரத்தை ஒளிபரப்பக் கருதுதுகிற பதிவுபெற்ற ஒவ்வொரு தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சி மற்றும் தேர்தலில் போட்டியிடுகிற ஒவ்வொரு வேட்பாளரும், அத்தகைய விளம்பரத்தை ஒளிபரப்புவதற்கு கருதப்பட்ட நாளுக்கு முன்னர் மூன்று நாட்களுக்கு குறையாத கால அளவில் தேர்தல் ஆணையத்திடம்/நியமன அதிகாரியிடம் (தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டவாறு) விண்ணப்பிக்க வேண்டும். வேறு ஏதேனும் நபர் அல்லது பதிவுப் பெறாத அரசியல் கட்சிகளைப் பொறுத்த நேர்வில், ஒளிபரப்பு நாளுக்கு முன்னர் ஏழு நாட்களுக்கு குறையாத கால அளவில் விண்ணப்பிக்க வேண்டும். இத்தகைய விண்ணப்பத்துடன், ஒளிபரப்பக் கருதிய விளம்பரத்தின் இரண்டு நகல்கள் மின்னணு வடிவில் உரியவாறு சான்றொப்பமிடப்பட்ட எழுத்துப்படியுடன் இணைக்கப்பட வேண்டும். முதல் கட்ட தேர்தல்களின் போது விண்ணப்பம் வரப்பெற்ற இரண்டு நாட்களுக்குள் தீர்வு செய்யப்பட வேண்டு. அது குறித்து முடிவு எடுக்கப்படுகிற வரையில் எங்களுடைய **02.04.2004**ஆம் நாளிட்ட ஆணை பொருந்தும். அடுத்த கட்ட தேர்தலின் போது விண்ணப்பம் வரப்பெற்ற மூன்று நாட்களுக்குள் தீர்வு செய்யப்பட வேண்டும். அதுகுறித்து முடிவு எடுக்கப்படும் வரையில் **02.04.2004**ஆம் நாளிட்ட ஆணை பொருந்தும். அத்தகைய விண்ணப்பங்களை தீர்வு செய்கிற போது விளம்பரத்தின் ஏதேனும் பகுதியை நீக்குமாறு/மாற்றியமைக்குமாறு உத்தரவிட தேர்தல் ஆணையத்திற்கு/நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

சான்றளிப்புக்கான விண்ணப்பம் கீழ்காணும் விவரங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

a) விளம்பரத் தயாரிப்புக்கான செலவு;

b) நிகழ்ச்சிக்கிடையில் ஒளிபரப்பாகிற எண்ணிக்கை பற்றிய விவரங்களுடன் அத்தகைய ஒவ்வொரு விளம்பர இடைச்சேர்ப்பிற்காக வசூலிக்க கருதப்பட்ட கட்டணம் ஆகிய விவரங்களுடன் தொலைக்காட்சி அலைவரிசை அல்லது கேபிள் கட்டமைப்பில் ஒளிபரப்பக் கருதப்பட்ட அத்தகைய விளம்பரத்தின் தோராயமான செலவு;

c) வேட்பாளரின்/வேட்பாளர்களின்/அரசியல் கட்சிகளின் தேர்தல் வெற்றி வாய்ப்பிற்கு பயன்படக் கூடியதா என்பது குறித்த அறிக்கை ஒன்றையும் அது கொண்டிருக்க வேண்டும்.

d) விளம்பரம், ஒரு அரசியல் கட்சி அல்லது வேட்பாளர் தவிர வேறு ஏதேனும் நபரால் அளிக்கப்பட்டிருப்பின், அது அரசியல் கட்சியின் அல்லது வேட்பாளரின் ஆதாயத்திற்காக அளிக்கப்படவில்லை என்றும் மேற்சொன்ன விளம்பரம் ஏதேனும் அரசியல் கட்சி அல்லது வேட்பாளரால் ஆதரிக்கப்படவில்லை அல்லது தரகுத் தொகை வழங்கப்படவில்லை அல்லது தொகை வழங்கப்படவில்லை என்பதை அந்த நபர் சத்தியப் பிரமாணத்தில் தெரிவிக்க வேண்டும்.

e) அனைத்து தொகைகளும் காசோலை அல்லது கேட்பு வரைவோலை மூலம் செலுத்தப்படும் என்பதற்கான அறிக்கை.

இச்சட்டத்தின் **2(a)** பிரிவு உள்ளூர் அதிகார வரம்பிற்குள் “அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி” என்பதற்கு

a) மாவட்ட மாஜிஸ்திரேட்டு
b) உட்கோட்ட மாஜிஸ்திரேட்டு அல்லது
c) காவல்துறை ஆணையாளர் என்று பொருள் விளக்கம் அளிக்கிறது என நாம் கண்டறிந்தோம்.

அதுப்போன்ற **1951**ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் **28–**A பிரிவு, தேர்தல் நடத்தும் அலுவலர், தேர்தல் நடத்தும் உதவி அலுவலர், வாக்குச்சாவடி தலைமை அலுவலர், வாக்குப்பதிவு தலைமை அலுவலர், மற்றும் இப்பகுதியின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள ஏனைய பிற அலுவலர் மற்றும் ஏதேனும் தேர்தல் நடத்துவதற்காக மாநில அரசால் அப்போதைக்கு நியமிக்கப்பட்ட ஏதேனும் காவல் துறை அதிகாரி ஆகியோர் அத்தகைய தேர்தலுக்கான அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்தும் அந்நாள் முதற்கொண்டும் தொடங்கி அத்தகைய தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படுகிற நாளுடன் முடிவடைகிற கால அளவிற்கு தேர்தல் ஆணையத்திற்கு முகமைப்பணியில் உள்ளவர்களாக கருதப்படுவர். அத்தகைய அலுவலர்,

அத்தகைய கால அளவில் தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாடு, கண்காணிப்பு மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு உட்பட்டவராக இருப்பார்.

பல்வேறு கேபிள் கட்டமைப்புகளிலும், தொலைக்காட்சி அலைவரிசைகளிலும் அனைத்து விளம்பரங்களையும் நேரடியாக முன்னரே தணிக்கை செய்வது தேர்தல் ஆணையத்திற்கு சாத்தியமில்லை என்பதால், இது தொடர்பாக தேர்தல் ஆணையம் அதனுடைய அதிகாரங்களை உட்கோட்ட மாஜிஸ்திரேட்டு பதவித் தரத்திற்கு அல்லது மாநில அரசின் குடிமைப்பணி அலுவலர் பதவித் தரத்திற்கு குறையாத, அனைத்து மாநிலங்களின் அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் அந்தந்த மாவட்ட மாஜிஸ்திரேட்டுகளுக்கு பகிர்ந்தளிப்பது அவசியமாக ஆகியுள்ளது. தேர்தல் ஆணையத்தால் பிறப்பிக்கப்பட்ட் ஒரு பொதுவான ஆணை வாயிலாக இவ்வாறு செய்யலாம். இந்த அதிகாரிகள் தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாடு, மேற்பார்வை மற்றும் ஒழுங்கு முறையின் கீழ் செயல்படுவார். தேர்தல் ஆணையம், நேர்விற்கேற்ப அதன் அதிகாரங்களை ஒவ்வொரு மாநிலத்தின் அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதியின் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு பகிர்ந்தளிக்கலாம்.

விளம்பரம் ஒன்றிற்கு சான்றளிப்பது அல்லது சான்றளிக்க மறுப்பது குறித்த முடிவு தொடர்பாக ஏதேனும் அரசியல் கட்சியின் அல்லது வேட்பாளரின் அல்லது ஏனைய பிற நபரின் புகார்களை அல்லது குறைகளை ஏற்பதற்கான குழு ஒன்றை ஒவ்வொரு மாநிலத்தின்/மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியின் தலைமைத் தேர்தல் அதிகாரி நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்பட்ட குழு அதனுடைய முடிவை தேர்தல் ஆணையத்திற்கு தெரிவிக்கும்.

அவ்வாறு அமைக்கப்பட்ட குழுவானது, இந்தியத் தேர்தல் ஆணையத்தின் ஒட்டுமொத்த கண்காணிப்பு, நெறிப்படுத்தல் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும்.

மேலே தெரிவிக்கப்பட்டுள்ளதற்கு உட்பட்டு மின்னணு ஊடகத்தில் விளம்பரங்களுக்காக விண்ணப்பிக்கிற அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் அல்லது ஏனைய யாதொரு நபர்/குழு தெரிவிக்கிற முடிவுக்கு கட்டுப்பட்டும் இணக்கமாகவும் நடக்க வேண்டும்.

நேர்விற்கேற்ப, நீக்குவதற்கான அல்லது மாற்றியமைப்பதற்கான கருத்துக்கள் மற்றும் கருத்துரைகளை அவை வரப்பெற்ற 24 மணி நேரத்திற்குள் தொடர்புடைய அரசியல் கட்சி அல்லது தேர்தலில் போட்டியிடுகிற வேட்பாளர் அல்லது ஏனைய பிற நபர் கட்டுப்பட்டும் இணக்கமாகவும் நடக்க வேண்டும். அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட விளம்பரம் ஆய்விற்காகவும் சான்றளிப்பிற்காகவும் மீண்டும் அளிக்கப்படும்.

1951ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 126–ஆம் பிரிவின் விதித்துறைகள் இந்த ஆணையின் கீழ் இடம் பெற்றுள்ள விளம்பரத்திற்குப் பொருந்தும்.

குழு அல்லது நியமன அதிகாரி/தேர்தல் ஆணையம் எடுத்த முடிவினால் ஏதேனும் அரசியல் கட்சி, வேட்பாளர் அல்லது ஏனைய யாதொரு நபர் பாதிக்கப்பட்டிருப்பின் விளக்கம் பெறுவதற்காக அல்லது உரிய ஆணைகளைப் பெறுவதற்காக இந்த நீதி மன்றத்தை மட்டுமே அணுக வேண்டும். அத்தகைய விளம்பரத்திற்கு எதிரான புகார் தொடர்பான எந்தவொரு மனுவையும் எந்தவொரு நீதிமன்றம், நடுவர் மன்றம் அல்லது அதிகார மன்றம் ஏற்காது.

இந்த ஆணை 16.04.2004ஆம் நாளிலிருந்து செயலுக்கு வருவதுடன் 10.05.2004 அன்று வரையில் தொடர்ந்து செயலில் இருக்கும்.

இந்த ஆணை, இந்திய அரசமைப்பு சட்டத்தின் 142ஆம் பிரிவின் கீழுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி வெளியிடப்படுகிறது. இது கேபிள் கட்டமைப்பு மற்றும்/அல்லது தொலைக்கட்சி அலைவரிசைகள் மற்றும் கேபிள் இயக்குபவர்கள் உட்பட மின்னணு ஊடகத்தில் விளம்பரத்தை வெளியிடுவதற்கு கருதுகின்ற அனைத்து அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள், நபர்கள், நபர்களின் தொகுதி அல்லது அமைப்புகள் ஆகியோரை கட்டுப்படுத்தும்.

அத்தகைய விளம்பரங்கள் ஒளிபரப்பப்படுவதை கண்காணிப்பதற்கு அவசியம் என கருதப்பட்டவாறான அத்தகைய பணியாளரை கோரி பெறுவதற்கு தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரமுண்டு. இந்த ஆணை அல்லது இச்சட்டத்தின் யாதொரு விதித்துறைகள் மீறப்படுகிறது என தேர்தல் ஆணையம் கருதுமாயின், அத்தகைய மீறல்களை உடனடியாக நிறுத்துமாறு மீறுபவருக்கு ஆணை ஒன்றை பிறப்பிப்பதுடன், சாதனங்களை நேரடியாக பறிமுதல் செய்வதற்கும் அதிகாரமுண்டு. அத்தகைய ஆணை வழங்கப்பட்ட நபர்/நபர்கள் உடனுக்குடன் அதற்கு இணங்கி நடக்க வேண்டும்.

விளம்பரங்களை கண்காணிப்பதற்கு ஆகும் செலவுகளுக்கான நிதிகள் பற்றி மத்திய அரசால் தேர்தல் ஆணையத்திற்கு தெரிவிக்கப்படவேண்டும். இந்த ஆணை பற்றி மின்னணு ஊடகத்திலும், அச்சு ஊடகம் வாயிலாகவும் மத்திய அரசால் போதுமான அளவிற்கு விளம்பரபடுத்தப்பட வேண்டும். இந்த ஆணையானது 02.04.2004 அன்று இந்த நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணையின் தொடர்ச்சியாகும். இது ஒரு இடைக்கால நடவடிக்கையாக 10.05.2004 அன்று வரையில் செயலில் இருக்கும்.

மேற்சொன்ன ஆணைக்குட்பட்டு 23.03.2004ஆம் நாளிட்ட ஆந்திரப்பிரதேசத்தின் உயர்நீதிமன்ற தீர்ப்பானது நிறுத்தி வைக்கப்பட வேண்டும். இந்த சட்டத்தின் விதிமுறை மீறுதல் தொடர்பான மத்திய

அரசின் அதிகாரங்களுக்கு கூடுதலாக அமையும் வகையில் இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறதே தவிர அரசின் தரத்தை தாழ்த்தும் நோக்கில் வழங்கப்பட்டதன்று.

**6.** எனவே, தற்போது மாண்பமை உச்சநீதிமன்றத்தின் மேற்சொன்ன உத்தரவுகளின் தொடர்ச்சியாக, தேர்தல் ஆணையம் பின்வரும் உத்தரவுகளைப் பிறப்பிக்கிறது.

i) கீழ்காணும் பத்தி (ii)–இல் குறிப்பிடப்பட்டுள்ள அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகளால் வழங்கப்படும் விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு கீழ்கண்ட நபர்கள் அடங்கிய குழு ஒன்றை ஏற்படுத்த டெல்லி தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு இதனால் உத்தரவிடப்படுகிறது.

a) இணை தலைமைத் தேர்தல் அதிகாரி– தலைவர்.

b) டெல்லி பாராளுமன்றத் தொகுதியின் தேர்தல் நடத்தும் அலுவலர்.

c) தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சகத்திடம் இருந்து கேட்டுப் பெறப்பட வேண்டிய வகை **1** பதவித்தரத்திற்கு குறையாத வகையிலான அலுவலராக உள்ள ஒரு வல்லுநர்.

ii) கீழ்காணும் முறையிலான தொலைக்காட்சி அலைவரிசையில் அல்லது கேபிள் கட்டமைப்பில் ஒளிபரப்பப்படும் யாதொரு விளம்பரங்களுக்கு சான்று பெற பெறப்படும் விண்ணப்பங்களை மேற்கண்ட குழு ஏற்றுக்கொள்ளும்.

a) தேசிய தலைநகர பகுதியான டெல்லியில் தலைமையிடத்தை கொண்டுள்ள பதிவுப்பெற்ற அனைத்து அரசியல் கட்சிகள்.
b) தேசிய தலைநகர பகுதியான டெல்லியில் தலைமையிடத்தை கொண்டுள்ள குழுக்கள் அல்லது சங்கங்கள் அல்லது கழகங்கள் அல்லது தனிநபர்கள்.

iii) கீழ்காணும் பத்தி (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள அரசியல் கட்சிகள் அல்லது அமைப்புகளின் விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு பின்வரும் குழுவினை அமைக்குமாறு பிற மாநிலங்கள்/மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியின் தலைமைத் தேர்தல் அலுவலருக்கு இதனால் உத்தரவிடப்படுகிறது.

a) கூடுதல், இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரி – தலைவர்.
b) மாநிலத்தின் தலைநகரத்தில் உள்ள யாதொரு பாராளுமன்றத் தொகுதியின் தேர்தல் நடத்தும் அலுவலர்.

c) தகவல் மற்றும் ஒளிபரப்புத்துறை அமைச்சகத்திடமிருந்து பெறப்பட வேண்டிய வகை 1 பதவித் தரத்திற்கு குறையாத வகையிலான அலுவலராக உள்ள ஒரு வல்லுநர்.

iv) மேற்கண்ட பத்தி (iii)இன்படி அமைக்கப்பட்ட குழுவானது, கீழ்க்காணும் வகையில் தொலைக்காட்சி அலைவரிசை அல்லது கேபிள் கட்டமைப்பில் ஒளிபரப்பப்படும் விளம்பரங்களின் சான்றிதழ்க்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும்.

a) அந்த மாநிலத்தின்/மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியில் தலைமையிடத்தைக் கொண்டுள்ள பதிவுப்பெற்ற அனைத்து அரசியல் கட்சிகள்.

b) அந்த மாநிலத்தில்/மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியில் அவர்களின் பதிவுப்பெற்ற அலுவலகங்களை கொண்டுள்ள அனைத்து அமைப்புகள் அல்லது நபர்களின் தொகுதி அல்லது கழகங்கள்.

v) பாராளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் தனிப்பட்ட வேட்பாளர் ஒருவரால் கேபிள் கட்டமைப்பு மற்றும் தொலைக்காட்சி அலைவரிசை வாயிலாக விளம்பரப்படுத்தக் கருதப்படும் விளம்பரங்களுக்கான விண்ணப்பங்களை பரிசீலித்து சான்று வழங்குவதற்கான நோக்கில் நாட்டில் உள்ள ஒவ்வொரு பாராளுமன்றத் தொகுதியின் தேர்தல் நடத்தும் அதிகாரி இதன் மூலம் நியமன அதிகாரியாக அறிவிக்கப்படுகிறார். பாராளுமன்ற தொகுதிக்குள் அடங்கும் சட்டமன்ற தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கும் அத்தகைய நியமன அதிகாரியே தேர்தல் நடத்தும் அதிகாரி ஆவார். விண்ணப்பங்களின் மீதான சான்றளிக்கும் பணியில் உதவிட மாநில குடிமைப்பணியை சார்ந்த ஒரு துணை உட்கோட்ட மாஜிஸ்திரேட்டு பதவித் தரத்திற்கு குறையாத வகையிலான எந்தவொரு தேர்தல் நடத்தும் உதவி அலுவலரை மேற்கண்ட தேர்தல் நடத்தும் அதிகாரி நியமித்துக் கொள்ளலாம்.

7. விளம்பரத்திற்கு சான்று வழங்குதலுக்கு இசைவு அல்லது மறுப்பு தெரிவிக்கின்ற வகையிலான முடிவு தொடர்பாக, யாதொரு அரசியல் கட்சி அல்லது வேட்பாளர் அல்லது வேறு ஏதேனும் நபரின் புகார்களை/குறைகளை ஏற்றுக்கொள்ள கீழ்க்கண்ட ஒரு குழுவை ஒவ்வொரு மாநிலத்தின்/மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியின் தலைமைத் தேர்தல் அதிகாரி ஏற்படுத்துவார்.

i. தலைமைத் தேர்தல் அதிகாரி – தலைவர்.

ii. இந்தியத் தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட யாதொரு பார்வையாளர்கள்.

iii. மேற்சொன்ன பத்திகள் 6(i) & 6(iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒருவரைத் தவிர குழுவால்தான் விருப்பத்திற்கேற்ப ஒரு வல்லுநர் நியமிக்கப்படலாம்.

**8.** பதிவுப்பெற்ற அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் யாதொரு விளம்பரங்களுக்கு சான்றிதழ் கோரும் விண்ணப்பங்களை குழுக்களிடம் அளிக்க வேண்டும்; அல்லது நேர்விற்கேற்ப, மேற்சொன்ன பத்திகள் **6**(i), 6(iii) மற்றும் **6**(iv)இல் குறிப்பிடப்பட்டுள்ள நியமன அதிகாரியிடம், தொலைக்காட்சியில் அத்தகைய விளம்பரங்கள் ஒளிபரப்பு செய்யப்படும் நாளுக்கு மூன்று நாட்கள் முன்பாகவே அத்தகைய விண்ணப்பங்கள் அளிக்கப்பட வேண்டும். முதற்கட்ட தேர்தல்களில், அத்தகைய விண்ணப்பங்கள் பெறப்பட்ட இரண்டு நாட்களுக்குள் தீர்வு செய்யப்பட வேண்டும். அத்தகைய விண்ணப்பங்களின் மீதான முடிவு எடுக்கப்படும் வரையில் **02.04.2004**ஆம் நாளிடப்பட்ட உச்சநீதிமன்ற உத்தரவு இதற்கு பொருந்தும்.

**9.** ஏனைய யாதொரு நபர் அல்லது பதிவுப்பெறாத அரசியல் கட்சிகளினால் விளம்பரங்களுக்கு சான்று கோரி அளிக்கப்படும் விண்ணப்பங்கள் அத்தகைய விளம்பரம் ஒளிபரப்பப்படும் நாளுக்கு ஏழு நாட்களுக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**10.** அத்தகைய ஒவ்வொரு விண்ணப்பங்களும் பிற்சேர்க்கை–Aவில் வழங்கப்பட்ட முறையில் கீழ்கண்டவற்றுடன் இணைத்து அளிக்கப்பட வேண்டும்.

i) உரியவாறு சான்றொப்பமிடப்பட்ட எழுத்துப் படியுடன் மின்னணு வடிவிலான கருதப்பட்ட விளம்பரத்தின் இரு படிகள்.

ii) சான்று கோரி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் கீழ்கண்ட விவரங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

a) விளம்பரத்திற்கான தயாரிப்புச் செலவு
b) கேபிள் கட்டமைப்பில் அல்லது தொலைக்காட்சி வாயிலாகவோ ஒளிபரப்பப்படும் அத்தகைய விளம்பரதிற்கான தோராய செலவு பற்றிய விவரங்களை அவை எத்தனை முறை ஒளிபரப்பப்படும் என்பதையும், ஒவ்வொரு முறை ஒளிபரப்புவதற்கான கட்டணத்தையும் தனித்தனியே குறிப்பிட்டு அளிக்க வேண்டும்.
c) வேட்பாளரின்/வேட்பாளர்களின்/கட்சிகளின் வெற்றி வாய்ப்பினை மேம்படுத்தும் வகையில் அத்தகைய விளம்பரங்கள் உள்ளனவா என்பது குறித்த ஒரு அறிக்கையையும் இத்துடன் அளிக்க வேண்டும்.
d) விளம்பரம், ஒரு அரசியல் கட்சி அல்லது வேட்பாளர் தவிர வேறு ஏதேனும் நபரால் அளிக்கப்பட்டால், அது அரசியல் கட்சியின் அல்லது வேட்பாளரின் ஆதாயத்திற்காக அளிக்கப்படவில்லை என்றும் மேற்சொன்ன விளம்பரம் ஏதேனும் அரசியல் கட்சி

அல்லது வேட்பாளரால் ஆதரிக்கப்படவில்லை அல்லது தரகுத் தொகை வழங்கப்படவில்லை அல்லது தொகை வழங்கப்படவில்லை என்பதை அந்த நபர் சத்தியப்பிரமாணத்தில் தெரிவிக்க வேண்டும்.

e) அனைத்து தொகைகளும் காசோலை அல்லது கேட்பு வரைவோலை வாயிலாக செலுத்தப்படும் என்பதற்கான அறிக்கை ஒன்று.

11) ஒரு விளம்பரத்திற்கு சான்றளிக்க கோரும் விண்ணப்பத்தின் மீது முடிவு எடுக்கும் போது, மேற்சொன்ன பத்தி 6(i) மற்றும் 6(iii)இல் குறிப்பிட்டுள்ளபடி அமைக்கப்பட்டுள்ள குழுக்கள் அல்லது மேற்சொன்ன பத்தி 6(V) உள்ளவாறான நியமன அதிகாரி அல்லது மேற்சொன்ன பத்தி 7இல் குறிப்பிட்டுள்ளவாறான ஆய்வுக்குழு விளம்பரத்தின் எந்தவொரு பகுதியையும் நீக்குமாறு/மாற்றுமாறு உத்திரவிடுவதற்கு அதிகாரமுண்டு. விளம்பரத்தின் பகுதியை நீக்குவதற்கும் மாற்றுவதற்கும் கருத்துக் குறிப்புகளை தெரிவிக்கும் வகையில் அமைந்த அவ்வாறான ஒவ்வொரு ஆணையும் அனைவரையும் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும்.

மேலும், அத்தகைய ஆணை குறித்த தகவல் கிடைக்கப்பெற்ற 24 மணி நேரத்திற்குள் சம்பந்தப்பட்ட அரசியல் கட்சி அல்லது போட்டியிடும் வேட்பாளர் அந்த ஆணைக்கு கட்டுப்படும் விதத்தில் நடந்து கொள்ள வேண்டும். அத்தகைய மாற்றம் செய்யப்பட்ட விளம்பரமானது மறு ஆய்வுக்கும் சான்றளிப்பிற்கும் மீண்டும் அனுப்பப்படும்.

12. நேர்விற்கேற்ப மேற்சொன்ன பத்தி 6(i) மற்றும் 6(iii)–இல் குறிப்பிடப்பட்டவாறு அமைக்கப்பட்ட குழுக்கள் அல்லது நியமன அதிகாரி அல்லது மேற்சொன்ன பத்தி 6(ii)இல் குறிப்பிட்டுள்ளபடி அமைக்கப்பட்டுள்ள ஆய்வு குழு, மேற்சொன்ன பத்திகள் (4) மற்றும் (5)–இல் உட்புகுத்தப்பட்ட உச்சநீதிமன்ற உத்தரவுகளுக்கு ஏற்பவும், சட்டத்தின் தேவைகளை நிறைவு செய்யும் வகையிலும் அத்தகைய விளம்பரம் அமைந்துள்ளது என மனநிறைவு கொள்ளுமாயின் அவை ஒளிபரப்ப தகுதியானவை என்பதற்கான சான்றினை வழங்க வேண்டும்.

இச்சான்று வழங்குவதற்கான படிவம் இணைப்பு–Bயில் தரப்பட்டுள்ளது.

13. 13.04.2004ஆம் நாளன்று உச்சநீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள ஆணையில் கண்டுள்ள உத்தரவுகள் 10.05.2004ஆம் நாள் வரையிலும் செயல்பாட்டில் இருக்கும், அவை அனைவராலும் கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும். மேலும், தேர்தல் தொடர்பான விளம்பரங்களை தொலைக்காட்சி அலைவரிசைகள், கேபிள் கட்டமைப்புகள் மற்றும்/அல்லது கேபிள் ஆபரேட்டர்கள் உட்பட மின்னணு ஊடகத்தில்

விளம்பரங்களை ஒளிபரப்ப கருதுகிற அனைத்து அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள்,  நபர்கள், குழு நபர்கள் அல்லது அமைப்புகளை இந்த உச்சநீதிமன்ற ஆணை கட்டுப்படுத்தும்.

## <u>பிற்சேர்க்கை – அ</u>

### I. விளம்பரங்களுக்கு சான்று கோருவதற்கன விண்ணப்பம்.

i. விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரி.

ii. அரசியல் கட்சி / போட்டியிடும் வேட்பாளர் யாதொரு நபர் / நபர்களின் கழகம் / சங்கம் / அறக்கட்டளை மூலமான விளம்பரங்கள் ( பெயரை வழங்கவும்)

iii. (a) ஒருவேளை அரசியல் கட்சி எனில், அக்கட்சியின் நிலை (அங்கீகரிக்கப்பட்ட தேசிய/மாநில கட்சியா / அங்கீகாரம் பெறாத கட்சியா)

(b) ஒருவேளை வேட்பாளர் எனில், அவேர் வோட்டியிடும் சட்டமன்ற / பாராளுமன்றத் தொகுதியின் பெயர்.

iv. அரசியல் கட்சி / குழு அல்லது நபர்களின்அமைப்பு / கழகம் / சங்கம் / அறக்கட்டளையின் தலைமையிட முகவரி.

v. இந்த விளம்பரம் ஒளிபரப்புச் செய்ய கருதப்பட்டுள்ள அலைவரிசைகள் / கேபிள் நெட்வொர்க்குகள்

vi. (அ) இந்த விளம்பரம் யாதொரு வேட்பாளர் / வேட்பாளர்களுக்கு தேர்தலில் வெற்றி வாய்ப்புக்கு பயன்படும் வகையில் உள்ளதா

(ஆ) ஆம் எனில், அத்தகைய  வேட்பாளர் / வேட்பாளர்களின் பெயர் / பெயர்கள், முழு முகவரியுடன் மற்றும் தொகுதி / தொகுதிகளின் பெயர் / பெயர்கள்.

vii. விளம்பரம் அளிக்கப்பட்ட நாள்

viii. இந்த விளம்பரத்தில பயன்படுத்தப்பட்டுள்ள மொழி / மொழிகள் (உரியவாறு சான்றொப்பமிடப்பட்ட எழுத்துப்படியுடன் மின்னணு வடிவிலான இரண்டு படிகளுடன் இந்த விளம்பரம் அளிக்கப்பட வேண்டும்)

ix. விளம்பரத்தின் தலைப்பு

x. விளம்பரம் தயாரிப்பதற்கு ஏற்பட்ட செலவு

xi. ஒளிபரப்பு செய்வதற்கு கருதப்பட்ட விளம்பரங்களின் ஒளிபரப்பப்படும் குறிப்பிட்ட கால இடைவேளைகளின் எண்ணிக்கையுடன் அதற்கான தோராயமான செலவு, மற்றும் ஒவ்வொரு ஒளிபரப்புக்குமான கட்டணம்.

ஔை. மொத்தமாக செலவிடப்பட்ட தொகை (ரூபாயில் )

........................... என்பவரின் மகனாகிய / மகளாகிய / மனைவியாக திரு/திருமதி

................................. என்கிற நான் (முழு முகவரி)

இந்த விளம்பரத்தை தயாரித்து ஒளிபரப்புவது மற்றும் தொடர்பான அனைத்து தொகைகளும் காசோலை / கேட்பு காசோலை வாயிலாக செலுத்தப்படும் என்று உறுதியளிக்கிறேன்.

இடம்: விண்ணப்பதாரரின் கையொப்பம்.

நாள் :

(அரசியல் கட்சி / வேட்பாளர் நீங்கலாக, நபரால் / நபர்களால் ஒளிபரப்பப்படும் விளம்பரத்திற்கு பொருந்தும்)

........................... என்பவரின் மகனாகிய / மகளாகிய / மனைவியாக திரு/திருமதி

................................. என்கிற நான் (முழு முகவரி)

இத்துடன் அளிக்கப்பட்டுள்ள விளம்பரங்கள் / யாதொரு அரசியல் கட்சி அல்லது வேட்பாளரின் ஆதாரத்திற்கானது அல்ல மற்றும் எந்தவொரு அரசியல் கட்சி அல்லது விளம்பரம் / விளம்பரங்களான செலவிப் பொறுப்பை ஏற்கவில்லை. தரவுத்தொகை அளிக்கவில்லை அல்லது தொகை செலுத்தவில்லை என்று இதன் மூலம் தெரிவித்து உறுதியளிக்கிறேன்.

இடம்: விண்ணப்பதாரரின் கையொப்பம்.

நாள் :

## பிற்சேர்க்கை – ஆ

ஒளிபரப்பு செய்வதற்கான விளம்பரத்திற்கு சான்றளித்தல்

I

i. விண்ணப்பதாரர் / அரசியல் கட்சி / வேட்பாளர் நபர்/ நபர்களின் குழு / கழகம்: அமைப்பு / அறக்கட்டளையின் பெயர் மற்றும் முகவரி.

ii. விளம்பரத்தின் தலைப்பு

iii. விளம்பரத்தின் கால அளவு

iv. விளம்பரத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழி / மொழிகள்

v. விளம்பரம் அளிக்கப்பட்ட நாள்:

vi. ஒளிபரப்புவதற்கு சான்றளிக்கப்பட்ட நாள்:

II

மாண்பமை இந்திய உச்சநீதிமன்றத்தினால் வரையறுக்கப்பட்ட வழிகாட்டி குறிப்புகளின்படி மேற்சொன்ன விளம்பரம் ஒளிபரப்பத் தகுதியானது என்று சான்றளிக்கப்படுகிறது.

தலைவரின் / குழு உறுப்பினர்களின் / நியமன அதிகாரியின் கையொப்பம்

இடம்:

நாள் :

## உத்தரவு தொடர் எண்.37

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடிஆட்சிப்பகுதிகளின் தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ள 24.08.2004 ஆம் நாளிட்ட 3.09.2004/J.S.II ஆம் எண் கடிதம்.

பொருள்: துண்டு வெளியீடுகள், சுவரொட்டிகள் முதலியனவற்றை அச்சிடுவது குறித்த கட்டுப்பாடுகள்.

தேர்தல்தொடர்பாக துண்டு வெளியீடுகள், சுவரொட்டிகள் முதலியனவற்றை அச்சிட்டு, வெளியிடுவது தொடர்பாக 1951ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் 127–A ஆம் பிரிவின் விதித்துறைகளை தொடர்ந்து அதன் வழிகாட்டி குறிப்புகளை வெளியிட்டுள்ள மேற்சொன்ன பொருண்மை குறித்தஆணையத்தின் 2.9.94 ஆம் நாளிட்ட3/9/(ESOG8)/94 – JS –II ஆம் எண் ஆணையின் மீது தங்கள் கவனத்தை ஈர்க்க நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

இந்த விதித்துறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

“127A தேர்தல் தொடர்பான துண்டு வெளியீடுகள், சுவரொட்டிகள் முதலியனவற்றை அச்சிடுவது குறித்த கட்டுப்பாடுகள்.

1. எந்தவொரு தேர்தல் தொடர்பான துண்டு வெளியீடுகள் அல்லது சுவரொட்டியின் முகப்புப் பகுதியில், அதனைஅச்சிட்டு, வெளியிடுபவரின் பெயர் மற்றும் முகவரி இல்லாமல், எந்தவொரு நபரும் அச்சிடக்கூடாது அல்லது வெளியிடக்கூடாது அல்லது அச்சிடுவதற்க அல்லது வெளியிடுவதற்கு காரணமாக இருக்கக்கூடாது.

2. எந்தவொரு நபரும், யாதொரு தேர்தல் துண்டு வெளியீடுகள், சுவரொட்டிகளை அச்சிடவோ அல்லது அச்சிடுவதற்கு ஏற்பாடு செய்யவோகூடாது.

    a. அச்சிடுபவரைஅடையாளம் காணுகின்ற வகையில், அதனைவெளியிடுபவர் உறுதிமொழிஒன்றை அளித்து, அதில் அவர் கையொப்பமிட்டு அவர் நன்கு அறிந்த இரு நபர்களால் சான்றளிக்கப்பட்டு, அதனை இரட்டிப்புபடிவத்தில் அச்சிடுபவருக்கு அளித்திருந்தாலன்றி; மற்றும்

b. கணிசமான கால அளவிற்குள், இந்த ஆவணத்தை அச்சிட்டபிறகு, அச்சசிட்டவருக்கு அனுப்பப்பட்டுள்ள உறுதிமொழி ஒரு நகலையும், ஆவணத்தின் நகல் ஒன்றுடன்

c. எந்தமாநிலத்தின் தலைநகரில் அச்சிடப்பட்டதோஅந்ததலைநகரிலுள்ள தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு; மற்றும்

d. ஏனைய பிற யாதொரு தேர்வில் எந்தமாவட்டத்தில் அச்சிடப்பட்டதோ அந்த மாவட்ட மாஜிஸ்திரேட்டுக்கு அச்சிடுபவரால் உறுதிமொழி நகல் அனுப்பி வைக்கப்பட்டாலன்றி, மற்றபடி யாதொரு துண்டு வெளியீடு அல்லது சுவரொட்டியை அச்சிடுவதற்கு காரணமாக இருக்கக்கூடாது.

**3.** இப்பிரிவின் செயல்நோக்கத்திற்காக

a. ஆவணத்தை கையால் எழுதி நகல் எடுப்பதை தவிர, ஆவணத்தை பல நகல்கள் எடுக்கின்ற எந்தவொரு செயல்முறையும் ‘‘அச்சிடப்படுவதாகக் கருதப்பட்டு, அதற்கிணங்க இந்த ஆவணத்தில் அச்சிடுபவர் என்ற சொற்றொடராக பொருள் கொள்ளவேண்டும் ; மற்றும்

b. ‘‘தேர்தல் துண்டு வெளியீடு அல்லது சுவரொட்டி’’ என்பது, தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர் அல்லது வேட்பாளர்கள் குழுவின் தேர்தல் வெற்றி வாய்ப்பை மேம்படுத்தவதற்கு அல்லது பாதிக்கும் வகையில் விநியோகிக்கப்பட்ட யாதொரு அச்சிடப்பட்ட துண்டு வெளியீடு துண்டறிக்கை அல்லது ஏனைய ஆவணம் அல்லது தேர்தல் பற்றிய குறிப்பினை கொண்டிருந்து ஆனால், தேர்தல் முகவர்களுக்கு அல்லது பணியாளர்களுக்கு வாலாயமான உத்தரவுகள் அல்லது தேர்தல் கூட்டம் ஒன்றின் நாள், நேரம், இடம் மற்றும் ஏனைய விவரங்களை வெறுமனே அறிவிக்கின்ற யாதொரு துண்டறிக்கை, சுவர் விளம்பரம் அல்லது சுவரொட்டி கொண்டிராத யாதொரு சுவர் விளம்பரம் அல்லது சுவரொட்டி என பொருள்படும்.

**4.** உட்பிரிவு **(1)** அல்லது உட்பிரிவு **(2)–**இன் கீழுள்ள விதித் துறைகளை மீறுகின்ற யாதொரு நபரும், குறிப்பிட்ட கால அளவிற்கு சிறைத் தண்டனை விதிப்பதற்கு உட்டவராவார். இக்கால அளவு ஆறு மாதங்கள் வரையிலும் நீட்டிக்கத்தக்கதாகும் அல்லது இரண்டாயிரம் ரூபாய் அளவிற்கு அபராதம் விதிக்கக்கூடும் அல்லது இவ்விரண்டும் விதிக்கப்படத்தக்கதாகும்.

**2.** தேர்தல் காலங்களில் குறிப்பாக அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்கு எதிராக அச்சு ஊடகத்தில் முக்கியமாக செய்தித் தாள்களில் துணை விளம்பரங்கள் வருவது

கண்டறியப்பட்டுள்ளது. பல நேர்வுகளில், அத்தகைய விளம்பரங்கள் குறிப்பிட்ட வேட்பாளர்களின் வெற்றி வாய்ப்பை மேம்படுத்துவதற்காக வெளியிடப்படுகிறது. 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் 77(1) ஆம் பிரிவின் படி, யாதொரு வேட்பாளரின் தேர்தல் தொடர்பான அத்தகைய விளம்பரங்களுக்கு ஏற்பட்ட செலவினை அந்தப் பிரிவின் கீழ் வைத்து வரப்பட வேண்டிய வேட்பாளரின் தேர்தல் செலவினத்தோடு சேர்க்கப்பட வேண்டும். மேலும், மேலும், வேட்பாளரின் அனுமதியில்லாமல், வேட்பாளரின் தேர்தல் வெற்றி வாய்ப்பை மேம்படுத்துவதற்கு விளம்பரம், சுற்றறிக்கை அல்லது வெளியீட்டதற்கு ஆகும் செலவினத்தை இந்திய தண்டனை விதிக்கோவையின் 171–H ஆம் பிரிவு தடை செய்கிறது. துணை விளம்பரங்கள் மேற்சொன்ன சட்ட விதித்துறையின் நோக்கங்களை தோல்வியுறச் செய்கிறது.

(3) மேலே குறிப்பிடப்பட்ட சட்ட விதிமுறைகளின் தேவைகளுக்கு உதவும் பொருட்டு, தேர்தல் காலத்தில், அச்சு ஊடகத்தில் யாதொரு அரசியல் கட்சி அல்லது வேட்பாளருக்கு சாதகமாக அல்லது எதிராக யாதொரு விளம்பரங்கள்/தேர்தல் விவகாரம் குறித்த நேர்வில், அத்தகைய விவகாரத்துடன்/விளம்பரத்துடன் வெளியிடுபவரின் பெயர் மற்றும் முகவரியும் அளிக்கப்பட வேண்டும் என ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

(4) இந்த உத்தரவு, உங்கள் மாநிலத்திலுள்ள மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மற்றும் அச்சு ஊடகம் உட்பட சம்பந்தப்பட்டவர்கள் அனைவரின் தகவல் மற்றும் ஒத்திசைவிற்காக, அவர்கள் கவனத்திற்கு கொண்டுச் செல்லப்படலாம்.

## உத்தரவு தொடர் எண்.38

நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வறுமை தணிப்பு துறை, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வறுமை தணிப்பு அமைச்சகத்தின் மத்திய அரசு செயலாளருக்கு அனுப்பப்பட்ட தேர்தல் ஆணையத்தின் **29.09.2004** ஆம் நாளிட்ட **437/6/28/2004**/PLN –III ஆம் எண் கடிதம்.

பொருள்: **04.01.2004** அன்று தேசிய நாளிதழ்களில், உலக வசிப்பிட தினம் குறித்து விளம்பரம் வெளியிடுதல்.

மேற்சொன்ன பொருண்மை தொடர்பாக **28.09.2004** ஆம் நாளிட்ட உங்களின் **1706–**D/Dir (UPA) ஆம் எண் கடிதத்தை பார்வையிடுமாறும், பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு fife விளம்பரங்களை வெளியிட மறுப்பு தெரிவிக்கவில்லை என்பதை உங்களுக்கு தெரிவிக்குமாறும் நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

i. சம்பந்தப்பட்ட அமைச்சரின் நிழற்படம், விளம்பரத்தில் இருக்கக்கூடாது.
ii. ஒரு தேர்தல் அரசியல் கட்சி அல்லது கட்சிகள் கூட்டணியாக குறிப்பிடுவதை தவிர்க்க வேண்டும்
iii. மும்பை மற்றும் கொல்கத்தாவிலிருந்து வெளிவரும் நாளிதழ்களில், இவை வெளியிடப்படக் கூடாது.

## உத்தரவு தொடர் எண்.39

பீகார் மற்றும் ஜார்கண்ட் தலைமை செயலாளர்கள்/ தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையம் அனுப்பியுள்ள **24.12.2004** ஆம் நாளிட்ட **437/6/2006–** PLN III ஆம் எண் கடிதம்.

பொருள்: அரசு செலவில் விளம்பரங்கள் மற்றும் விளம்பர பலகைகளை காட்சிப்படுத்துதல்.

அதிகாரத்திலுள்ள கட்சியின் சாதனைகளை பறைசாற்றுகின்ற எண்ணற்ற விளம்பரப் பலகைகள் அரசு செலவில், மத்திய மற்றம் மாநிலங்கள் / மத்திய நேரடி ஆட்சிப் பகுதிகளின் அரசால் காட்சிப்படுத்தியுள்ளது ஆணையத்தின் கவனத்திற்கு வந்துள்ளது. அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் வழிகாட்டு குறிப்புகளுக்க்ான மாதிரி நடத்தை விதிகள் – அதிகாரத்திலுள்ள கட்சி–VII ஆம் பத்தியின் (iv) ஆம் துணைப் பத்தியில் கீழ்கண்டவற்றின் மீது உங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

“மத்திய அல்லது சம்பந்தப்பட்ட மாநிலம் / மத்திய நேரடி ஆட்சிப் பகுதியில் அதிகாரத்திலுள்ள அரசியல் கட்சி, அதன் தேர்தல் பிரச்சார செயல் நோக்கங்களுக்காக அதன் அரசுப் பதவியை பயன்படுத்தியுள்ளது என்றம், குறிப்பாக (iv) அரசு செலவில் செய்தித்தாள்கள் மற்றும் இதர ஊடகங்களில் வெளியிட்டது என்ற யாதொரு புகாருக்கு எவ்வித ஆதாரமும் இல்லை என்றம் உறுதி செய்வதுடன் தேர்தலில் ஆளும் கட்சியின் வெற்றி வாய்புகளை மேம்படுத்தும் நோக்கில் சாதனைகள் தொடர்பான விளம்பரங்கள் மற்றும் அரசியல் செய்திகளை ஒருதலைபட்சமாக வெளியிட அரசு ஊடகங்களை தவறுதலாக பயன்படுத்துதல் போன்றவை கவனத்துடன் தவிர்க்கப்பட வேண்டும்.

**2. 2004** ஆம் ஆண்டு பிப்ரவரி **29**ஆம் நாளன்று மக்களவை மற்றும் பீகார், அரியானா மற்றும் ஜார்கண்ட் மாநில சட்டப் பேரவைத் தொகுதிகளின் தேர்தல்களின் அட்டவணை அறிவிப்புடன் மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் உடனடியாக செயலக்கு வந்தது. தேர்தல் நாள் அறிவிப்பிற்கு முன்னரே விளம்பரத் தட்கிள், விளம்பரங்கள் அல்லது சுவரொட்டிகள் அரசுப் பணத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டு இருப்பினும் அத்தகைய விளம்பரத் தட்டிகள் மற்றும் விளம்பரங்களை தொடர்ந்து காட்சிக்கு வைப்பதால் அவை அதிகாரத்திலுள்ள அரசியல் கட்சிகளுக்கு மட்டும் மிஞ்சிய உரிமையளித்து வாக்காளர்களை அதிகாரத்திலுள்ள கட்சிக்கு சாதகமாக்குவதால் அலுவல் சார்ந்த மக்கள் ஊடகத்தை தவறாகப் பயன்படுத்துதல் போன்றவை விழிப்போடு தவிர்க்கப்பட வேண்டும்.

**3.** மக்களுக்கு, குடும்ப கட்டுப்பாடு, சமூக நலத் திட்டங்கள் முதலியன குறித்த பொதுத் தகவல் அல்லது பொது செய்திகளை தெரிவிக்கும் கருத்துக்களை உடைய விளம்பரப் பலகைகள், விளம்பரங்களை அரசால் காட்சிப்படுத்தப்படலாம் என ஆணையம் உத்தரவிட்டுள்ளது. ஆயினும், அத்தகைய அனைத்து விளம்பர பலகைகள், விளம்பரங்கள், யாதொரு வாழும் அரசியல் கட்சியினரின் / அரசியல் கட்சியின் சாதனைகளை தெரிவிக்கிற அல்லது கருத்துத் தெரிவிக்கும் பொருட்டு அவர்களின் நிழற்படங்கள் அல்லது பெயர் அல்லது கட்சிச் சின்னங்களை கொண்டிருந்தால் அவை உடனே நீக்கப்பட வேண்டும். ஏனென்றால், அரசியல் கட்சியினர் அல்லது அரசியல் கட்சி, அவர்களைப் பற்றி அல்லது அதனைப் பற்றி புகழவும் அல்லது அதன் அல்லது யாதொரு அரசியல் தலைவரின் தனித்தன்மையை உயர்த்துவதற்கு அரசு பணத்தில் செலவு செய்வதற்கம் பொதுவான வள ஆதாரங்களையும் பயன்படுத்தக்கூடாது. அத்தகைய விளம்பரப் பலகைகள் முதலியன சந்தேகத்திற்கிடமின்றி தனி நபர் / கட்சி தேர்தல் பிரச்சார கணக்கில் அடங்கும்.

4. மேலும், தேர்தலின்போது, அரசு செலவில் செய்தித்தாள்கள் மற்றும் மின்னணு ஊடகங்கள் உள்ளிட்ட ஏனைய ஊடகத்தில் இதன் பின்னர் விளம்பரங்களை வெளியிடக்கூடாது என்றும் அதிகாரத்தில் உள்ள கட்சிகளின் தேர்தல் வெற்றி வாய்ப்பை மேம்படுத்தும் நோக்கில், சாதனைகள் தொடர்பான விளம்பரங்கள் மற்றும் அரசியல் செய்திகளை ஒருதலைபட்சமாக வெளியிட ஊடகங்களை தவறான நோக்கில் பயன்படுத்துதல் போன்றவை கவனத்துடன் தவிர்க்கப்பட வேண்டும் என்றும் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

5. ஆணையத்தின் உத்தரவுகளை உடனடியாக நிறைவேற்ற மாநில அரசின் அனைத்து துறைகளுக்கும் / அலுவலகங்களுக்கும் தெரிவிக்கப்படலாம்.

6. இதனை பெற்றுக் கொண்டதற்கு ஒப்புகை அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## உத்தரவு தொடர் எண்.40

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்தி அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையம் அனுப்பியுள்ள **3.08.2007** ஆம் நாளிட்ட **3/9/2007**/JS –II ஆம் எண் கடிதம்.

பொருள்: செய்தித்தாள் மற்றும் ஏனைய அச்சு ஊடகத்தில் தேர்தல் தொடர்பான விளம்பரங்கள் – தேர்தல் பிரச்சாரம் – தொடர்பாக.

கீழே தரப்பட்டுள்ள, **1951** ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் **126** ஆம் பிரிவின் விதித்துறைகள் மீது கவனம் ஈர்க்க நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

பிரிவு–**126** வாக்குப்பதிவு முடிவடைவதற்கு நிர்ணயிக்கப்பட்ட **48** மணி நேரத்தில் பொதுக்கூட்டங்களை தடை செய்தல்.

**(1)** யாதொரு நபரும்

(a) தேர்தல் ஒன்றோடு தொடர்புடைய, யாதொரு பொதுக்கூட்டம் அல்லது ஊர்வலத்தை கூட்டுவது, நடத்துவது அல்லது பங்கேற்பது அல்லது உரையாற்றுவது கூடாது ; அல்லது

(b) திரைப்படக்கருவி, தொலைக்காட்சி அல்லது ஏனைய அதே போன்ற சாதனங்கள் வாயிலாக, யாதொரு தேர்தல் விவகாரத்தை பொதுமக்களுக்கு காட்சிபடுத்தக்கூடாது.

(c) யாதொரு தேர்தலிலும், வாக்குப்பதிவு பகுதியில், வாக்குபதிவு முடிவடைவதற்கு நிர்ணயிக்கப்பட்ட **48** மணி நேரத்தில் யாதொரு வாக்குப்பதிவு பகுதியில் பொதுமக்களை ஈர்க்கும் வகையில் இசையரங்க நிகழ்ச்சி அல்லது திரையரங்க நிகழ்ச்சி அல்லது ஏனைய யாதொரு பொழுதுபோக்கு அல்லது கேளிக்கை நிகழ்ச்சி நடத்துவதன் வாயிலாக அல்லது ஏற்பாடு செய்வதன் வாயிலாக பொதுமக்களுக்கு தேர்தல் விவகாரங்களை பரப்புதல் கூடாது.

**(2)** உட்பிரிவு **(1)**ன் விதித்துறைகளை மீறுகின்ற யாதொரு நபரும், இரண்டாண்டுகளுக்கு நீட்டிக்கத்தக்க அளவிற்கு சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இவ்விரண்டும் விதிக்கப்படும்.

**(3)** இப்பிரிவில், "தேர்தல் விவகாரம்" என்பது தேர்தல் ஒன்றின் முடிவினை பாதிக்கும் வகையில் அல்லது தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் கருதப்பட்ட அல்லது கணக்கிடப்பட்ட யாதொரு விவகாரம் என பொருள்படும்.

(2) மேற்சொன்ன 48 மணிநேர கால அளவில் தேர்தல் தொடர்பான விவகாரத்தை வானொலி மூலம் ஒலிபரப்பலாமா என சில மாநிலங்களிலிருந்து கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

(3) தேர்தல் விவகாரத்தை, தொலைக்காட்சி அல்லது அதுபோன்ற சாதனங்கள் வாயிலாக காட்சிப்படுத்துவதை, 126 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவைச் சேர்ந்த (b) பகுதி தடை செய்கிறது. இந்த செயல் நோக்கத்திற்காக, வானொலியானது, ஏனைய அதுபோன்ற சாதனமாக கருதப்படும் என தெளிபடுத்தப்படுகிறது. எனவே யாதாரு தேர்தல் விவகாரத்தை வானொலி மூலம் ஒலிபரப்புவது/ பரப்புவது என்பது (b) பகுதியின் கீழ் வருவதுடன் மேற்சொன்ன பிரிவில் குறிப்பிடப்பட்ட 48 மணி நேரத்தில் அவ்வாறு செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

(4) இதுகுறித்து ஏதேனும் ஐயமிருப்பின் அதனை களைவதற்கு உங்கள் மாநிலத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகள் உட்பட சம்பந்தப்பட்ட அனைத்து நபர்களின் கவனத்திற்கு கொண்டுச் செல்லப்படலாம்.

(5) இக்கடிதம் பெற்றமைக்கு ஒப்புகை அளிக்கவும்.

## உத்தரவு தொடர் எண்.41

அனைத்து மாநிலங்களின்/ மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையம் அனுப்பியுள்ள **3/9/2007** ஆம் நாளிட்ட **3.09.2007**/JS-II ஆம் எண் கடிதம்.

பொருள்: துண்டு வெளியீடுகள், சுவரொட்டிகள் அச்சிடுவதில் கட்டுப்பாடுகள்.

**1951** ஆம் ஆண்டு மக்கள் பிரதிநித்துவச் சட்டத்தின் **127–** ஆம் பிரிவின் விதித்துறைகள் தொடர்பாக ஆணையத்தின் **24–8–2004** ஆம் நாளிட்ட **3/9/2007**/JS-II ஆம் கடிதத்தின் மீது கவனத்தை ஈர்க்க நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

**2.** விளம்பரங்கள், அச்சு ஊடகங்களிலிருந்து வேறொரு பெயரிலும், சில நிறுவனங்களின் பெயரிலும் வெளியிடப்படுகின்றன என்பது ஆணையத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

**3.** தேர்தல் காலங்களில் குறிப்பிட்ட அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்கு ஆதரவாகவும், எதிராகவும் அச்சு ஊடகத்தில் முக்கியமாக செய்தித் தாள்களில் வெளியிடப்படுகின்ற விளம்பரங்களை பொறுத்தவரையில் பின்வரும் கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்படலாம்.

[a] விளம்பரங்களைப் பொறுத்தவரையில், அதற்கான மூலாதாரத்தை கண்டறிய பின்வரும் நடவடிக்கை எடுக்கப்படலாம்.

(i) விளம்பரம், வேட்பாளரின் சம்மதத்துடன் அல்லது அவருக்கு தெரிந்தே வெளியிடப்பட்டிருப்பின் சம்பந்தப்பட்ட வேட்பாளரால்/வேட்பாளர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக கருதப்பட்டு, வேட்பாளரின்/வேட்பாளர்களின் தேர்தல் செலவில் கணக்கு வைக்கப்படும்.

(ii) வேட்பாளரின் அனுமதியின்றி விளம்பரம் வெளியிடப்பட்டிருப்பின், இந்திய தண்டனை விதிக்கோவையின் **171–**H ஆம் பிரிவை மீறியதற்காக விளம்பர வெளியீட்டாளர் மீது வழக்கு தொடர்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படலாம். [சம்பந்தப்பட்ட வேட்பாளர்/வேட்பாளர்களிடமிருந்து எழுத்து பூர்வமான அனுமதியின்றி விளம்பரத்திற்கு செய்யப்பட்ட செலவினம்]

[b] விளம்பரத்தில் வெளியிடுவோர் அடையாளம் சுட்டிக்காட்டப்படவில்லை எனில் பின்னர் நீங்கள் சம்பந்தப்பட்ட செய்தித்தாள் நிறுவனத்தை தொடர்புகொண்டு தகவல் பெற்று மேற்செபான்னவாறு உரிய நடவடிக்கை மேற்கொள்வது குறித்து கருதிப்பார்க்கலாம்.

4. மேலே குறிப்பிடப்பட்ட தேர்தல் ஆணையத்தின் உத்தரவுகளை பின்பற்றுவதற்காக ஏனைய தேர்தல் அலுவலர்களுடன் மாவட்ட தேர்தல் அதிகாரிகள், தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படலாம். மாவட்ட தேர்தல் அதிகாரிகள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் முதலியோருக்கு வழங்கப்பட்ட உத்தரவுகளின் நகல் ஒன்று, ஆணையத்திற்கு மேற்குறிப்பெழுதுவதன் வாயிலாக இதுதொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி உறுதிசெய்யப்படவேண்டும்.

5. இதனை பெற்றுக் கொண்டமைக்கு தயவுகூர்ந்து ஒப்புகை அனுப்பவும்.

## உத்தரவு தொடர் எண்.42

இந்திய அரசின் அமைச்சரவை செயலாளர் மற்றும் அனைத்து மாநிலங்களின் / மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையம் அனுப்பியுள்ள **21.11.2007** ஆம் நாளிட்ட **437/6/2007**(INST) – PLN III ஆம் எண் கடிதம்.

பொருள்: மக்களவை மற்றும் மாநில சட்டமன்ற பேரவைகளுக்கான பொது/இடைத் தேர்தல் காலத்தில், அரசு இணையதளத்தில் அரசியல்வாதிகள் / அமைச்சர்கள் மீதான அனைத்து குறிப்புகளையும் நீக்கிவிடுவது தொடர்பான உத்தரவுகள் தொடர்பாக.

மாநில அரசின் இணையதளங்கள்/ அமைச்சரின் அலுவலக இணையதளங்களில், பல்வேறு துறை மற்றும் அரசமைப்பு சார்ந்தவர்கள் தங்கள் சாதனைகளை சிறப்பித்துக் கூறி, அதை அரசியல்வாதிகள்/ அமைச்சர்களின் சொந்த சாதனைகளாக புகழ்ந்து பேசுவது போன்று தற்போது கிடைக்கக்கூடிய பல்வேறு குறிப்புகள் குறித்த கேள்விகளை ஆணையம் கருதிப்பார்த்துள்ளதை தெரிவிக்க நான் பணிக்கப்பட்டுள்ளேன். மக்களவை/மாநில சட்டமன்ற பேரவைகளின் பொதுத்தேர்தல் தொடர்பாக மாதிரி தேர்தல் நடத்தை விதி நடைமுறையிலிருக்கும் போது அத்தகைய மாநில அரசின்/ மத்திய அரசின் அலுவல் இணையதளத்தில் அனைத்து அமைச்சர்கள், அரசியல் வாதிகள் அல்லது அரசியல் கட்சிகளின் குறிப்புகள் கிடைக்கக்கூடிய எடுத்துவிடப்படவேண்டும்/ நீக்கப்பட வேண்டும் என ஆணையம் முடிவுசெய்துள்ளது. இடைத்தேர்தல்களின்போது, அத்தகைய இடைத்தேர்தலில் வேட்பாளராக இருக்கும் அத்தகைய அரசியல்வாதிகள்/ அமைச்சர்களுக்கு மட்டுமே இந்த உத்தரவுகள் வரையறுக்கப்படலாம்.

இதனை கண்டிப்பாக பின்பற்றுவதற்காக, சம்பந்தப்பட்ட அனைவரின் கவனத்திற்கு இதைக் கொண்டுச் செல்லலாம்.

இதனை பெற்றுக் கொண்டதற்கு தயவுகூர்ந்து ஒப்புகை அளிக்கவும்.

## உத்தரவு தொடர் எண்.43

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு இந்திய தேர்தல் ஆணையம் அனுப்பியுள்ள **23.02.2009** ஆம் நாளிட்ட **437/6**/INST/2009 – CC BE ஆம் எண் கடிதம்.

பொருள் உலக வசிப்பிட தினம், போலியோ சொட்டுமருந்து/ ஹெச்ஐவி விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் சுதந்திர தினம், குடியரசு தினம், காந்தி ஜெயந்தி, மாநில உருவாக்க தினம் போன்ற பல்வேறு தினங்களின் கொண்டாட்ட தருணங்களுடன் தொடர்புடைய விளம்பரங்களின் வெளியீடு.

மக்களவை/ மாநில சட்டமன்ற பொது/ இடைத்தேர்தல்களில் மாதிரி தேர்தல் நடத்தை விதி நடைமுறையிலிருக்கும்போது உலக வசிப்பிட தினம், போலியோ சொட்டுமருந்து/ HIV விழிப்புணர்வு பிரச்சாரம் குறித்த விளம்பரங்களை வெளியிடுவதற்கு அனுமதி கோரி அமைச்சர்களிடமிருந்து / துறைகளிடமிருந்து பல்வேறு குறிப்புகளை ஆணையம் பெறுகிறது.

முக்கியமான சமூகப் பிரச்சனைகள் பற்றிய விளம்பரங்கள் வெளியிடுவதை ஆணையம் ஒருபோதும் எதிர்க்க கருதவில்லை. அதிகாரத்திலிருக்கும் கட்சி, அரசு இயந்திரங்களை/ அமைப்புகளைத் தவறாகப் பயன்படுத்தி, சமவாய்ப்புகள் அளிப்பதற்கு எதிரான சமூக தகவல்களைப் பரப்பி அதனால் சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தல் கொள்கையை மீறும்வகையில் செயல்படவில்லை என்பதை மட்டுமே அது உறுதி செய்ய விரும்புகிறது. எனவே வாக்காளர்களை வசப்படுத்தி அவர்களுக்கு சாதகமாக வாக்களிக்க தூண்டக்கூடிய யாதொரு அமைச்சர்/அரசியல் உயர் பதவியில் இருக்கும் நபரின் நிழற்படம் அல்லது தேர்தல் செய்திகள் இல்லாமல் மற்றும் கட்சியின் சாதனைகளை சிறப்பித்துக் கூறாமல் இருக்கும் அத்தகைய விளம்பரங்களுக்கு தடையில்லை என்ற தெளிவான நிலைபாட்டை தேர்தல் ஆணையம் எடுத்துள்ளது. சுதந்திர தினம், குடியரசு தினம், காந்தி ஜெயந்தி மற்றும் மாநில உருவாக்க தினம் போன்ற வெவ்வேறு முக்கியமான வரலாற்று சிறப்புமிக்க தினங்களை கோலாகலமாக கொண்டாடப்படும்போது, அதில் பங்கேற்கும் மத்திய/மாநில அமைச்சர்கள், அந்நேரத்தில், அதிகாரத்திலுள்ள கட்சியின் அல்லது தேர்தலில் போட்டியிடுகின்ற அவர்களின் அரசியல் கட்சிகளின் சாதனங்களை எடுத்துரைப்பதன் வாயிலாக அரசியல் ஆதாயம் பெற ஒரு தளமாக பயன்படுத்திக் கொள்வர். இதை ஆணையம் கடுமையாக கருதிப்பார்த்து, அமைச்சர்கள் அத்தகைய கொண்டாட்டங்களில் பங்கேற்கும்போது, அவர்கள் பேச்சுகளின்/ சொற்பொழிவுகளின் மையக்கருத்தானது, வரலாற்றுப் பின்னணி, சரித்திர நாயகர்களின் சாதனைகள் செயல்கள் குறித்து மட்டுமே இருக்க வேண்டும் என்றும் அவர்கள் அரசியல் பேச்சுகள் பேசாமல்,

பொதுவிடத்தை, அரசியல் பிரச்சார மேடையாக மாற்றலாம் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும் என்று முடிவு செய்தது.

அத்தகைய தருணங்கள், ஆட்சியிலிருக்கும் கட்சியின் சாதனைகளை உயர்த்துவதற்காக பயன்படுத்தப்படுவதால் இந்த காலகட்டத்தில் அதுபோன்ற காரணங்களுக்காக ஆட்சியிலிருக்கும் **“ XXX** ஆண்டுகள்/நாட்கள்” போன்ற கொண்டாட்டங்களுக்கு முழுமையான தடை விதிக்கப்படும். .

## உத்தரவு தொடர் எண்.44

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ள இந்திய தேர்தல் ஆணையத்தின் **13.04.2009** ஆம் நாளிட்ட 437/6/INST-2008-CC &BE ஆம் எண் கடிதம்.

பொருள்: மாதிரி தேர்தல் நடத்தை விதி பயன்படுத்தமை – அரசுச் செலவில் விளம்பரங்கள் மற்றும் விளம்பரப் பலகைகளை காட்சிபடுத்துதல்.

மாநில அரசு/ மத்திய அரசு, ஆட்சியிலிகின்ற கட்சியின் சாதனைகளை விளக்குகிற விளம்பரச் சட்டங்களை அதிக எண்ணிக்கையில் அரசுச் செலவில் காட்சிப்படுத்தியதாக ஆணையத்தின் கவனத்திற்கு வந்துள்ளது. பத்தி ஏஐஐ, உட்பபத்தி (ஸ) – அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் வழிகாட்டுதலுக்கான மாதிரி தேர்தல் நடத்தை விதியின் **4**ஆம் பத்தியைச் சேர்ந்த துணைப்பத்து (iV)–க்கு ஆட்சியிலிருக்கும் கட்சி தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது. அவவை பின்வருமாறு

'' மத்தியில் அல்லது மாநிலங்களில்/ மத்திய அரசன் நேரடி ஆட்சிப் பகுதியில், ஆட்சியிலிருக்கும் சம்பந்தப்பட்ட கட்சி, தேர்தல் பிரச்சார நோக்கத்திற்காக, தன்னுடைய அதிகார நிலையை பயன்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிற யாதொரு புகாருக்கும் காரணம் எதுவும் கற்பிக்கப்படவில்லை என்பதை உறுதி செய்ய வேண்டும் மற்றும் குறிப்பாக (iV) ஆட்சியிலுள்ள கட்சியின் வெற்றி வாய்ப்புகளை அதிகரிக்கிற நோக்கத்துடன், தேர்தல் காலத்தில் அரசியல் சார்ந்த செய்திகளை பாரபட்சமாக வெளியிடுவதற்காக, சாதனைகள் தொடர்பாக பிரச்சாரம் செய்வதற்காகவும், அரசு செலவில் செய்தித்தாள்களிலும் பிற ஊடகங்களிலும் விளம்பரம் செய்தல் மற்றும் அலுவலல் சார்ந்த மக்கள் ஊடகத்தை தவறாகப் பயன்படுத்துதல் போன்றவை கவனமாகத் தவிர்க்கப்பட வேண்டும்.''

மக்களவைக்கும் பல்வேறு மாநிலங்களுக்கான சட்டமன்றப் பேரவை பொதுத் தேர்தல்களின் அட்டவணை அறிவிப்புடன், மாதிரி தேர்தல் நடத்தை விதி, **2.3.2009** அன்றுநடைமுறைக்கு வந்தது. அரச செலவில், அத்தகைய விளம்பரங்கள் மற்றும் விளம்பரப்பலகைகளை தொடர்ந்து காட்சிப்படுத்துவது, அத்தகைய விளம்பர பலகைகள், விளம்பரங்கள் அல்லது சுவரொட்டிகளை தேர்தல் நாள் அறிவிப்பதற்கு முன்னர காட்சிப்படுத்தப்பட்டிருந்தாலும் கூட அவை மாதிரி தேர்தல் நடத்தை விதியை மீறுவதாகவே அமையும். ஏனென்றால், அது ஆட்சியிலிருக்கும் கட்சிக்கு அளவுக்கதிகமான உரிமையை அளிப்பதுடன், ஆட்சியிலிருக்கும் கட்சிக்கு சாதகமாக வாக்காளர்களை ஈர்க்கக் கூடியதாகவும் உள்ளதால் அவை தேர்தல் ல்டத்தை விதிகளை மீறியதாக் கருதப்படுகின்றன.

அரசு செலவில் காட்சிபடுத்தப்பட்ட அத்தகைய அனைத்து விளம்பரப் பலகைகள், விளம்பரங்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனே அவற்றை அகற்றிவிட்டு இணக்க அறிக்கையை ஆணையத்திற்கு அளிக்கும்படி ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இனிவரு காலங்களில், தேர்தல் நேரத்தில், அரசு செலவில், நாளிதழ்கள் மற்றும் மின்னணு ஊடகம் உட்பட இதர ஊடகங்களில் விளம்பரங்களை வெளியிடக்கூடாது என ஆணையம் உத்தவிட்டுள்ளதுடன் ஆட்சியிலிருக்கும் கட்சியின் தேர்தல் காலத்தில், தேர்தல் செய்திாக்காக, கட்சிக்காரர் மற்றும் கட்சியின் சாதனைகளை விளம்பரப்படுத்துவது, எதிர்கால வாய்ப்பினை மேலும் மிகைப்படுத்தி தெரிவிக்கும்பொருட்டு மக்கள் ஊடகத்தை தவறாகப் பயன்படுத்துவதையும் கவனமுடன் தவிர்க்கப்பட வேண்டும்.

உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வதற்காக, மத்திய அரசு மற்றும் மாநில அரசின் அனைத்து அமைச்சகங்களுக்கும்/துறைகளுக்கும்/ அலுவலகங்களுக்கும் ஆணையத்தின் இந்த உத்தரவுகள் தெரிவிக்கப்படலாம்.

## உத்தரவு தொடர் எண்.45

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியின் அமைச்சரவைக்குழு செயலாளர், தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ள இந்திய தேர்தல் ஆணையத்தின் **25.06.2013** ஆம் நாளிட்ட **437**/6 INST-2013/ CC BE ஆம் எண் கடிதம்.

பொருள்: மாதிரி தேர்தல் நடத்தை விதி – மக்களவை/ மாநில சட்டமன்ற பேரவைக்கான இடைத்தேர்தல்கள் நடைபெறும் காலத்தில், மத்திய/மாநில அரசுகளால் விளம்பரங்கள் வெளியிடுதல் – தொடர்பாக.

மக்களவைக்கான பொதுத் தேர்தலைப் பொறுத்தவரையில் நாடு மாதிரி தேர்தல் நடத்தை விதிகள், முழுவதற்கும் பொருந்தும் என்பதனையும் சம்மந்தப்பட்ட யாதொரு மாநிலத்தின் சட்டமன்றத்திற்கான பொதுத் தேர்தலின் போது, அவை தொடர்புடைய மாநிலத்திற்கும் பொருந்தும் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். இடைத்தேர்தல்களைப் பொறுத்த மட்டில் அமைச்சர்களின் சுற்றுப்பயணங்கள், விளம்பரங்கள், அரசினர் விருந்தினர் மாளிகைகளை பயன்டுத்துதல், அதிகாரிகளின் பணியிடமாற்றம் முதலிய இடைத்தேர்தல் நடைபெறுகிற மாவட்டம் முழுவதற்கும் பொருந்துகிற சில வழிவகைகள் நீங்கலாக, வாக்குப்பதிவு நடைபெறவிருக்கிற மாவட்டம் முழுவதற்குமே மாதிரி இடைத்தேர்தல் நடத்தை பொறுந்துகின்றது.

(ஆணையத்தின், **26.04.2012** ஆம் நாளிட்ட **437**/6 INST-2013/ CC BE ஆம் எண் கடிதத்தை காண்க)

**2.** மத்திய மற்றும் மாநிலங்கள் அரசு இரண்டிலும், நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த விளம்பரங்கள் அடங்கிய பல்வேறு வகையான விளம்பரங்கள் வெளியிடுவதைக் காண முடிகிறது. அத்தகைய விளம்பரங்கள், குடியரசு தினம், சுதந்திர தினம், புகழ்வாய்ந்த தலைவர்களின் பிறத் தினங்கள், அரசு விழாக்கள் போன்ற சிறப்பான தருணங்களில் அடிக்கடி வெளியிடப்படுகின்றன. அத்தகைய தருணங்களில், இடைத்தேர்தல்கள் நடைபெற்றிருந்து, அத்தகைய விளம்பரங்கள் வெளியிடப்படும் நேரத்தில், மாதிரி தேர்தல் நடத்தை விதி விவகாரம் குறித்த வினா எழுப்பப்படும். இடைத்தேர்தலின்போது அத்தகைய விளம்பரங்ளை, பிற இடங்களில் வெளியிடப்படும்போது, மாதிரி தேர்தல் நடத்தை விதியின் கீழ் வருகிற குறிப்பிட்ட இடங்களில், அத்தகைய விளம்பரங்களை, குறிப்பாக அச்சு ஊடகத்தில் தடை செய்வது என்பது தொழில்நுட்ப ரீதியா இயலாத ஒன்றாகும்.

**3.** ஆணையம் இந்த விவகாரம் குறித்து கருதிப்பார்த்துய்யது. இந்த விவகாரம் குறித்த அனைத்து அம்சங்களையும் கருத்திற்கொண்டு, இடைத்தேர்தலோடு தொடர்புடைய மாதிரி தேர்தல் நடத்தை விதி

நடைமுறையிலிருக்கும் காலத்தில், அரசு செலவில், விளம்பரங்களை வெளியிடுவது குறித்து பின்வருமாறு முறைப்படுத்தப்படும் என ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

(i) குறிப்பிட்ட முக்கியமான சந்தர்ப்பங்களுடன் தொடர்புடைய பொதுப்படையான விளம்பரங்கள் வெளியிடப்படலாம். ஆயினும் அவ்வாறு வெளியிடப்படும் விளம்பரங்கள், குறிப்பிட்ட தருணங்களில் நாட்களுடனும் இசைவான நாட்களுடனும் வரைறுக்கப்பட வேண்டும், அவை ஏனைய நாட்களில் வெளியிடக்கூடாது. விளம்பரத்தில் யாதொரு அமைச்சர் மற்றும் ஏனைய அரசியல் பொறுப்பாளர்களின் நிழற்படங்கள் இடம் பெற்றிருக்கக் கூடாது.

(ii) இடைத்தேர்தல் தொகுதிகளின் அடங்கியுள்ள பகுதிகளில், யாதொரு திட்டவட்டமான/ குறிப்பிட்ட குறிப்புகளையுடைய/மறைபொருள் அடங்கிய விளம்பரம், இடைத் தேர்தல்கால அளவில் எந்தவொரு நாளிலும் வெளியிடப்படக் கூடாது

4) இந்த உத்தரவுகள், இடைத் தேர்தல் தொடர்பானவற்றிற்கு மட்டுமே பொருந்தும் என்பதை கவனத்தில் கொள்ளலாம். பொதுத் தேர்தலைப் பொறுத்தவரையில், அரசு செலவில் செய்யப்படும் விளம்பரங்கள் மீது செயல்படுத்தப்படும் தடை யானது கடுமையாக செயற்படுத்தப்பட வேண்டும்.

5) இனி வருங்காலங்களில் இவற்றை பின்பற்றி நடவக்கைகை மேற்கொள்வதற்காக இந்த வழிகாட்டி குறிப்புகளை கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும், சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட வேண்டும்.

## உத்தரவு தொடர் எண்.46

இந்திய தேர்தல் ஆணையத்தின் **09.10.2013** ஆம் நாளிட்ட **437/6**/CG/2013/CC & BE ஆம் எண்ணிட்ட கடிதம் அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் மற்றும் தலைமை செயலாளர்கள் அமைச்சரவைச் குழு செயலாளர்களுக்கு அனுப்பப்பட்டது. மத்திய அரசு செயலாளர், செய்தி மற்றும் ஒலிபரப்பு துறை அமைச்சகம், சாஸ்திரி பவன், புதுடில்லி மற்றும் தலைமை இயக்குநர், விளம்பரம் மற்றும் ஒலி – ஒளி காட்சியக விளம்பர இயக்குநரகம், புதுடில்லி ஆகியோருக்கு நகல் அனுப்பப்பட்டுள்ளது.

பொருள்: மாதிரித் தேர்தல் நடத்தை விதிகள் – மத்திய அரசின் யாதொரு விளம்பரங்களை வாக்குப் பதிவு நடைபெறும் மாநிலங்களில் அல்லது வாக்குப்பதிவு நடைபெறும் மாநிலங்களில் பயன்பாட்டிலுள்ள செய்தித் தாள்களில் வெளியிடுதல் – தொடர்பாக.

மத்திய மற்றும் மாநில அரசுகளின் நலத்திட்டங்கள் மற்றும் சாதனைகளின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடும் விளம்பரங்களை வாக்குப்பதிவு நடைபெறாத சில மாநில அரசுகளால் வெளியிடப்பட்டு வருவதுடன், வாக்குப்பதிவு நடைபெறும் மாநிலங்களில் உள்ள செய்தித்தாள் பதிப்புகளிலும் வெளியிடப்பட்டு வருகின்றன என்பதை ஆணையம் கவனித்து வருகிறது என்பதையும், இது மாதிரித் தேர்தல் நடத்தை விதியை மீறியதாக ஆணையம் கருதுகிறது என்பதையும் தெரிவிக்க நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

இனிவரும் காலங்களில், மாதிரித் தேர்தல் நடத்தை விதிகள் செயலில் இருக்கும் காலத்தில் தேர்தல் நடைபெறாத மாநிலங்களால் வெளியிடப்படுகின்ற இது போன்ற அனைத்து விளம்பரங்களும் அவை செய்தித்தாள் பதிப்பாக வெளியிடுவதற்கு முன்னர் அல்லது வாக்குப்பதிவு நடைபெறும் மாநிலங்களில் பயன்பாட்டில் உள்ள பத்திரிக்கைகளில் வெளியிடும் முன்னர், இசைவு வேண்டி ஆணையத்திற்கு அனுப்பப்பட வேண்டும் என்று ஆணையம் உ.ததரவிட்டுள்ளது.

இக்கடிதத்தை பெற்றுக் கொண்டதற்கு ஒப்புகை அளிக்கவும்.

## உத்தரவு தொடர் எண்.47

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியின் தலைமை தேர்தல் அதிகாரிகள் மற்றும் தலைமை செயலாளர்கள், அமைச்சரவை குழு செயலாளர் ஆகியோருக்கு அனுப்பப்பட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் **17.10.2003** ஆம் நாளிட்ட **437/6**/CG/2013/CC & BE ஆம் எண் கடிதம்.

**பொருள்: மத்திய பிரதேசம், மிசோரம், ராஜஸ்தான், சட்டிஸ்கர் மற்றும் தேசிய தலைநகர் ஆட்சிப் பகுதியான டெல்லி ஆகிய மாநிலங்களின் சட்டமன்றப்பேரவைக்கான பொதுத் தேர்தல் – விளம்பரங்களை மத்திய மற்றும் மாநில அரசுகளின் வெளியிடுதல் – தொடர்பாக.**

தேர்தல் ஆணையத்தின் **09.10.2013**ஆம் நாளிட்ட **437/6**/CG/2013/CC & BE ஆம் கடிதத்தின் மீது தங்களின் கவனத்தை ஈர்க்க நான் பணிக்கப்பட்டுள்ளேன். (நகல் இணைக்கப்பட்டுள்ளது ) அதில் அனைத்து விளம்பரங்களும் மாநில அரசின் தேர்தல் நடைபெறாத மாநில அரசுகள் மற்றும் தேர்தல் நடைபெறும் மாநிலங்களின் செய்தித்தாள்களில் வெளியிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள அனைத்து விளம்பரங்களும் மாதிரித் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருக்கும் காலத்தில் அவர்களால், செய்தித் தாள்களில் பதிப்பாக அல்லது தேர்தல் நடைபெறும் மாநிலங்களில் பயன்படுத்தப்படும் செய்தித்தாள்களில், வெளியிடப்படுவதற்காக அவை அனுப்பப்படும் முன்னர் ஆணையத்தின் அனுமதியை பெற வேண்டும் என ஆணையம் வலியுறுத்துகிறது.

மேற்சொன்ன உத்தரவுகள் வழங்கப்பட்டிருந்ந் போதிலும் ஆணையத்தின் இசைவு பெறாமல், வாக்குப்பதிவு நடைபெறும் மாநிலங்களில் பயன்பாட்டிலுள்ள செய்தித்தாள்களில் அல்லது செய்தித்தாள் பதிப்புகளாக தேர்தல் நடைபெறாத சில மாநிலங்களால் விளம்பரங்கள் வெளியிடப்பட்டு வருவதை ஆணையம் அறிந்துள்ளது. அவ்வாறு அதன் உத்தரவுகளில் மீறப்படுவது குறித்து ஆணையம் அதன் வருத்தத்தை தெதிவித்துள்ளது. அதன் உத்தரவுகள் மீறப்படுவது குறித்து கவனத்திற்கு கொண்டுவரப்படுமாயின், சம்மந்தப்பட்ட அரசின் தகவல் மற்றும் மக்கள் தொடர்புத் துறை செயலாளர்/இயக்குநரே அத்தகைய தவறுக்கு நேரடியாக பொறுப்பேற்க வேண்டும் என்று ஆணையம் மேலும் அறிவுறுத்தியுள்ளது.

## உத்தரவு தொடர் எண்.48

மத்திய அரசு செயலாளர், செய்தி மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சகம், சாஸ்திரி பவன், புதுடில்லி அவர்களுக்கு அனுப்பப்பட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 30.10.2013ஆம் நாளிட்ட 437/6/CG/2013/CC & BE ஆம் எண் கடிதம்.

பார்வை: அமைச்சகத்தின் 24.10.2013 ஆம் நாளிட்ட 1/54/2010 MVC ஆம் எண் கடிதம்.

பொருள்: முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் நினைவு நாள் ஆண்டு நிறைவு விழா மற்றும் சர்தார் வல்லபாய் பட்டிடேலின் பிறந்த நாள் ஆண்டு நிறைவு விழா போன்றவற்றை DAVP'S செய்தித்தாள்களில் விளம்பரமாக குறித்த தேர்தல் ஆணையத்தின் அனுமதி – தொடர்பாக.

மேற்சொன்ன பொருண்மை தொடர்பாக 30.10.2013ஆம் நாளிட்ட ஆணையத்தின் அதே எண் கடிதத்தைக் குறிப்பிட நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

இப்பொருண்மை குறித்து ஆணையம் மறு பரிசீலனை செய்து சமீபத்தில் மறைந்த தலைவர்களை தவிர்த்து, காலஞ்சென்ற அரசியல் தலைவர்கள் தொடர்பான செய்திகள் மற்றும் புகைப்படங்களை வெளியிடுவதில் மறுப்பேதுமில்லை என இந்த முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இதனை கருத்தில் கொண்டு, ஆணையம் பார்வையில் கண்டுள்ளவாறு தங்கள் கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ள, உத்தேசிக்கப்பட்டிருக்கும் விளம்பரத்திலுள்ள புகைப்படங்கள் மற்றும் செய்திகளை வெளியிட அனுமதிக்கப்பட்டுள்ளது.

## உத்தரவு தொடர் எண்.49

அனைத்து மாநிலங்கள் மற்றும் இந்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியின் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட ஆணையத்தின் **01.04.2014**ஆம் நாளிட்ட **437/6/1**/2014/CC & BE ஆம் எண்கடிதம்.

பொருள்: பல்வேறு மாநிலங்களில் ஆதார் தொடர்பான விளம்பரங்களைத் தொடருதல் – குறித்து.

மாதிரித் தேர்தல் விதிகள் செயலுக்கு வருவதற்கு முன்னர் ஆதார் அட்டை தொடர்பான விளம்பரம் செய்யப்பட்டுள்ள விளம்பரங்களைத் தொடரலாமா, வேண்டாமா என்று மாதிரித் தேர்தல் நடத்தை விதியின் நோக்கில் சில மாநிலங்கள் ஐயங்களை எழுப்பி அதன் மீதான விளக்கங்களைப் பெற, தேர்தல் ஆணையத்தை அணுகி வருகின்றன என்பதைக் கூற நான் பணிக்கப்பட்டுள்ளேன். இந்த விஷயம் ஆணையத்தால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. ஆதார் தொடர்பாக செய்யப்படும் விளம்பரங்களில் பொது மக்களுக்கு ஆதார் அட்டை குறித்த தகவல் அளிக்கும் நோக்கத்தை மட்டுமே கொண்டதாக இருக்க வேண்டும் என்று ஆணையம் தெளிவுபடுத்தியுள்ளது. திட்டங்கள் தொடர்பாக ஆணையம் (அ) அரசின் சாதனைகளை முதன்மைப்படுத்தும் யாதொரு விளம்பரத்தைச் செய்ய அனுமதிக்கப்படமாட்டாது. இந்த தகவல் உங்கள் மாநிலத்திலுள்ள சம்மந்தப்பட்ட VIDAI அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட வேண்டும்.

## உத்தரவு தொடர் எண்.50

கோவா, மணிப்பூர், பஞ்சாப், உத்தரகாண்ட் மற்றும் உத்தரப்பிரதேச தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட 06.01.2017 ஆம் நாளிட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் 437/6/1/ECI/INST/FUNCT/MCC/2017 ஆம் எண் கடிதம்.

**பொருள்: 2017 ஆம் ஆண்டு மணிப்பூர், பஞ்சாப், உத்தரகாண்ட், உத்தரப்பிரதேசம் மற்றும் கோவா சட்டமன்றத்திற்கான பொதுத்தேர்தல் – தொடர்பாக**

கோவா தலைமை தேர்தல் அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட சுய விளக்கமுடைய மின்னஞ்சலின் நகல் ஒன்றை இத்துடன் இணைப்பதற்கு நான் உத்தரவிடப்பட்டுள்ளேன்.

2. இது தொடர்பாக, மக்களுக்கு, குடும்ப கட்டுப்பாடு, சமூக நல திட்டங்கள் முதலியன குறித்த பொது தகவல் அல்லது பொது செய்திகளை தெரிவிக்கும் கருத்துக்களையுடைய விளம்பரப் பலகைகள், விளம்பரங்களை அரசால் காட்சிப்படுத்தப்படலாம் என ஏனையவற்றிற்கிடையே, 24.12.2004 ஆம் நாளிட்ட 437/6/2004-PLN-III ஆணையத்தின் உத்தரவு எண்ணின் பத்தி 3-இல் தெரிவித்ததை காணலாம். (நகல் இணைக்கப்பட்டுள்ளது). எனினும், அத்தகைய அனைத்து விளம்பரப் பலகைகள், விளம்பரங்கள், யாதொரு வாழும் அரசியல் கட்சியினரின்/அரசியல் கட்சியின் சாதனைகளைத் தெரிவிக்கிற அல்லது கருத்து தெரிவிக்கும் பொருட்டு, அவர்களின் நிழற்படங்கள் அல்லது பெயர் அல்லது கட்சி சின்னங்களைக் கொண்டிருந்தால், அவை உடனே நீக்கப்பட வேண்டும். ஏனென்றால், அரசியல் கட்சியினர் அல்லது அரசியல் கட்சி அவர்களைப் பற்றி அல்லது அதனைப் பற்றி புகழவும் அல்லது யாதொரு அரசியல் தலைவரின் தனித்தன்மையை உயர்த்துவதற்கு அரசுப் பணத்தில் செலவு செய்வதற்கும், பொது வள ஆதாரங்களை பயன்படுத்தக்கூடாது. அத்தகைய விளம்பரப்பலகைகள் போன்றவை சந்தேகத்திற்கிடமின்றி, தனிநபர்/கட்சி தேர்தல் பிரச்சார கணக்கில் அடங்கும்.

3. எனவே, மேற்சொன்ன விளம்பரத்தில் அரசியல் தலைவரின் நிழற்படம் நீக்கப்படவேண்டும்/மறைக்கப்பட வேண்டும். மேலும், மேற்சொன்ன உத்தரவு சொல்லாலும், செயலாலும் முற்றிலும் உடன்படுமாறு, அதுபோன்ற வகையிலான/தன்மையிலான விளம்பரங்கள்/விளம்பரப்பலகைகள் போன்றவை நீக்கப்பட வேண்டும்/மறைக்கப்பட வேண்டும்.

**இணைப்பு**

பொது நிதி செலவினத்தில் விளம்பரங்கள் மற்றும் விளம்பரப்பலகைகள் காட்சிப்படுத்துவது தொடர்பான உத்தரவு தொடர் எண்.39.

## D. வானூர்திகள் / வாகனங்களை பயன்படுத்துதல்

## உத்தரவு தொடர் எண்.51

1) அமைச்சரவை குழு செயலாளர் ராஷ்ட்ரபதி பவன், புதுடில்லி

2) இந்திய அரசு செயலாளர், உள்விவகார துறை அமைச்சகம், புதுடில்லி

3) இந்திய அரசு செயலாளர், சட்டம், நீதி & நிருவன விவகார துறை அமைச்சகம், புதுடில்லி

4) அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியின் தலைமைச் செயலாளர்கள்

5)அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியின் தலைமைத் தேர்தல் அலுவலர்களுக்கு அனுப்பப்பட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 20.10.1994 ஆம் நாளிட்ட 437/6/94/MSC– தொகுதி –5 ஆம் ஆணை எண் கடிதம்.

**பொருள்: வானூர்தி மற்றும் ஹெலிகாப்டர்களை வாடகைக்கு அமர்த்துதல்.**

**ஆணை:**

1. தேர்தல் காலத்தில், தேர்தல் தொடர்பான பயணங்களுக்காக அல்லது தேர்தல் பிரச்சாரத்திற்காக, தேர்தல் பணிக்காக அலுவலக வாகனங்கள் பயன்படுத்துவது முழுமையாக தடைவிதித்து ஆணையம் ஏற்கனவே உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது.

2. சில அரசியல் கட்சிகள், அரசு தேர்தல் பணிக்காக/பொதுத் துறை நிறுவனங்களுக்குச் சொந்தமான வானூர்திகள் / ஹெலிகாப்டர்கள் தனியார் நிறுவனங்களின் வாயிலாக வாடகைக்கு எடுத்து பயன்படுத்துவது ஏனைய அரசியல் கட்சிகளுக்கு மற்ற நிலையை ஏற்படுத்துகிறது என்பது தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே, தேர்தல் ஆணையம் அரசு விமானங்கள்/ஹெலிகாப்டர்களை வாடகைக்கு எடுத்து பயன்படுத்தும் போது (பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் கழகங்களுக்குச் சொந்தமானவை உட்பட) வாடகைக்கு எடுத்து பயன்படுத்தும் போது முற்றிலும் சமவீத வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் மற்றும் பெரியளவில் விளம்பரப்படுத்தப்பட வேண்டும் என்ற நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் என்று ஆணையம் உத்தரவி.டடுள்ளது. இந்த நடை முறையின் படி

அனைத்து அரசியல் கட்சிகளும் ஊர்தி பயன்பாடுகளை சம அளவில் பெறுகின்ற வகையில் சில குறைந்தப்பட்ச நிபந்தனைகள் இந்த நடைமுறையில் சேர்க்கப்பட வேண்டும். அவையாவன:-

2.1. ஆளும் கட்சியை ஒருபுறமும், ஏனைய கட்சிகள் மற்றும் தேர்தல் களத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் மறுபுறம் என இருதரப்பினருக்குமிடையே எந்த பாகுபாடும் காட்டக் கூடாது.

**2.1.** இதற்கான செலவினங்களை சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகளோ அல்லது போட்டியிடும் வேட்பாளர்களோ ஏற்றுக் கொள்ள வேண்டும். அத்துடன் அதற்கான பதிவுருக்களை முறையாக பராமரிக்கப்பட வேண்டும்.

**2.3** கட்டணங்களும், விதிமுறைகளும் மற்றும் இவை குறித்த நிபந்தனைகளும் அனைவருக்கும் ஒரேசீராக இருக்க வேண்டும்.

**2.4** உள்ளபடியாக ஒதுக்கீடு, முதலில் வருபவர்களுக்கே முன்னுரிமை என்ற விதத்தில் இருக்க வேண்டும். இந்த நோக்கத்திற்காக, மனுவை பெறும் அதிகாரியினால் முறைப்படி மனு பெற்ற தேதியும், நேரமும் குறித்து வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

**2.5** அரிதான நேர்வாக இரண்டு (அ) அதற்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் ஒரே நாளில் ஒரே நேரத்தில் மனுக்கள் அளித்திருந்தால், அத்தகைய தருணங்களில் குலுக்கல் முறையில் ஒதுக்கீடு முடிவு செய்யப்படும்.

**2.6** வேட்பாளர்கள் தங்கள் மனுக்களில் ஆணையத்தின் விதிமுறைகளின் படி, கேட்கப்பட்டுள்ள விவரங்களை முழுமையாக அளிக்காமல் இருந்து அல்லது தொழிநுட்ப காரணங்களால், அம்மனுக்கள் நிராகரிக்கப்படக் கூடிய நெருக்கடியான கட்டத்தில் உதவிட யாருக்கெல்லாம் மீண்டும் மனுக்கள் தேவைப்படுகின்றதோ அவர்களுக்கெல்லாம் அந்த மனுவின் படிவம் ஒன்று கிடைப்பதற்கான வழி வகை செய்யப்பட வேண்டும்.

**2.7** எந்தவொரு தனிநபருக்கும், நிறுவனத்திற்கும், கட்சிக்கும் அல்லது வேட்பாளருக்கும் ஒரே நேரத்தில் மூன்று நாட்களுக்கு மேல் வானூர்தியை / ஹெலிகாப்டரை வாடகைக்கு வழங்க அனுமதிக்ககூடாது. இந்த தேவையை உறுதி செய்யாத எந்தவொரு மனுவும் நிராகரிக்கப்பட வேண்டும்.

**3.** இந்த நடை முறையில் மேற்கூரிய நிபந்தனைகள் / வரையறைகள் ஒரு எடுத்துக்காட்டு அளவில் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளனவே தவிர விரிவான அளவில் அவை இல்லை. இயன்ற வரையில் இந்த நடைமுறையானது அனைத்து கட்சிகளுக்கும் / வேட்பாளர்களுக்கும் நியாயமாகவும், சம வாய்ப்பு அளிக்கப்படும் விதத்தில் பின்பற்றப்படும் வகையில் முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

**4.** இந்த நடைமுறை அனைத்தும் அமைந்த தகவல்கள் யாவும், வெளிப்படையாகவும், பரந்த அளவில் விளம்பரம் செய்ய தக்கதாகவும் தேவைப்பட்டால் செய்தித்தாள்கள் மற்றும் மின்னனு ஊடகங்கள் வழியாகவும் முன்னதாகவே அளிக்கப்பட வேண்டும்.

**5.**இது தொடர்பாக வழங்கப்பட்ட உத்தரவுகளின் நகல் வழங்கப்பட்ட பின்னர் உடனடியாக தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

## உத்தரவு தொடர் எண்.52

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியின் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் மற்றும் தலைமைச் செயலாளர், அமைச்சரவை குழு செயலாளர் ஆகியோருக்கு அனுப்பப்பட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின்**09.04.1996**ஆம் நாளிட்ட **437/6/96–**PLN-III ஆம் எண் கடிதம்.

பொருள்: பொதுத் தேர்தல்கள் – அமைச்சர்கள் / வேட்பாளர்களை உள்ளடக்கிய பாதுகாப்பு.

**1.**அரசியல் சார்ந்த பிரமுகர்கள் அலுவலகத்லோ (அ) வெளியில் இருக்கும் போதோ, தேர்தல் தொடர்பான மோட்டார் சிற்றுந்துகள் மற்றும் வாகனங்கள் மற்றும் வானுார்திகள் / ஹெலிகாப்டர்கள் பயன்பாட்டிற்கான வினாக்கள் அவ்வப்போது உத்தரவுகளாக வெளியிடப்படுகின்றன. இது தொடர்பான ஏனைய அனைத்து உத்தரவுகளும் தொகுப்பு / திருத்தமாக பின்வரும் உத்தரவுகளாக வெளியிடப்பட்டன. இவை செயலுக்கு வந்தவுடன் கவனமாக பின்பற்றப்பட வேண்டும்.

**2.1** மாதிரித் தேர்தல் நடத்தை விதிகள் குறித்த தற்போதுள்ள அறிவுறுத்தல்களின் எந்தப் பகுதியையும் எந்த காரணம் பற்றியும் யாருக்காகவும் தளர்த்தக் கூடாது. பயணம், போக்குவரத்து. பாதுகாப்பு குறித்த உறுதிகளை பெறுவதில் விதிமுறைகளின் முன்பாக அனைவரும் சமமாகவே கருதப்படுவர். யாருக்கும் எவ்விதமான சலுகையும் காட்டப்படக் கூடாது. கட்சி சார்பில் தேர்தல் பணிக்காக நாட்டின் பிரதமர் சுற்றுப்பயணம் மேற்கொண்டாலும் இவ்வித விதிகள் அவருக்கும் பொருந்தும் எனவே தற்போது நடைமுறையிலிருக்கும் விதிகள் மிகுந்த கவனத்துடன் பின்பற்றப்பட வேண்டும்.

**2.2** எஞ்சியுள்ள அனைத்து அரசியல் உயர்நிலையில் இருப்பவர்கள் உதாரணமாக மத்திய அரசின் அமைச்சர் அல்லது முதலமைச்சர் மாநில அரசின் அமைச்சர் அல்லது வாரியத்தின் தலைவராக இருப்பவர் மாநில கழகத்தின் தலைவர் பொறுப்பிலுள்ளவர் கூட்டுறவு அமைப்பின் பொறுப்பாளர் போன்றோர் இந்த விதிகளுக்கு கட்டுப்பாட்டவர்கள் ஆவர். ஆயினும் அரசு பணியில் இல்லாதவருக்கு இவை பொருந்தாது.

**2.3** பாதுகாப்பு அல்லாத பிற எந்த காரணத்திற்காகவும் அரசிற்கு சொந்தமான / அரசு நிதியுதவி பெற்று இயக்கப்படுகின்ற வாடகை, அடிப்படையிலான போக்குவரத்து வாகனங்கள் பயன்பாடு குறித்த முழு தடையிலிருந்து எந்த விதமான விதி தளர்வும் அளிக்கப்பட இயலாது. இத்தகைய நீக்கங்கள் வண்டியின் ஆயூட்காலம், அதன் விலை மற்றும் அனைத்து வகையான வண்டிகள் போன்ற மாதிரிகளைக் குறிப்பிடுகின்றன.

**2.4** பாதுகாப்பு உள்ளிட்ட எந்த காரணத்தை முன்னிட்டும் அரசுக்கு சொந்தமான வானூர்தியை (இறக்கை பொருத்தப்பட்ட அல்லது ெ்லிகாப்டர் ) அரசு செலவில் இயக்கிடும் வகையில் பெற்றோ, வாடகைக்கு அரசிடமிருந்து அனுமதி பெற்று பயன்படுத்த அனுமதி இல்லை. இது தொடர்பாக விதி விலக்குகள் ஏதும் அளிக்கப்பட மாட்டாது.

**2.5** பாதுகாப்புக்கு உட்பட்ட, குறிப்பிட்ட நபர்களை பொருத்த வரையில் உளவு பிரிவை சார்ந்த அதிகாரிகள் உள்ளிட்ட பாதுகாப்பு முகவரமைகள், நிர்ணயித்துள்ள பயன்பாட்டு முறைகளையொட்டி அரசுக்கு சொந்தமான குண்டு துளைக்காத வாகனத்தை ஒரு குறிப்பிட்ட நபர் பயன்படுத்தி கொள்வதற்கு அனுமதிக்கப்படுவர். பாதுகாப்பு அதிகாரிகள் திட்ட வட்டமாக நிர்ணயித்துள்ள வரம்பை மீறி தற்காலிக தேவை என்ற பெயரில் அதிகமான கார்களை தேர்தல் பணிக்காக பயன்படுத்துவதை அனுமதிக்கக் கூடாது. எந்தவொரு நபரும் பதவியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர் வேட்பாளராக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர் பயன்பாட்டிற்கென்று ஒதுக்கப்படும் குண்டு துளைக்காத வாகனத்தின் பயன்பாட்டுச் செலவை அவரே ஏற்க வேண்டும்.

**2.6** கார்களில் செல்லக்கூடிய முன் வரிசையில் பாதுகாப்பிற்கு செல்வோர், பாதுகாவலர்கள் உள்ளிட்ட கார்கள் அணிவகுப்பில் இயக்கப்படக் கூடிய கார்களின் எண்ணிக்கை பாதுகாப்பு அதிகாரிகளால் வகுக்கப்பட்டிருக்கும் வதிகளுக்கு ஏற்ப தவறாது இருக்க வேண்டும். எந்த Åழலிலும், இந்த எண்ணிக்கை அதிகமாக இருக்கக் கூடாது. அரசிற்கு சொந்தமான வண்டிகளாக இருந்தாலும் வாடகைக்கு அமர்த்தப்பட்ட வண்டிகளாக இருந்தாலும் அப்படிப்பட்ட வண்டிகளுக்கான இயக்க செலவை மாநில அரசே ஏற்றுக் கொள்ளும் பாதுகாப்பு வீரர்கள் வழங்கிய வகையில் ஏற்பட்ட செலவை கூட சம்பந்தப்பட்டவரிடமிருந்து வÅலிக்க தேவையில்லை.

**2.7** எக்காரணத்திற்காகவும், ஒரு அரசியல் கட்சி (அ) வேட்பாளர் தனியாருக்குரிய வானூர்தியை / ெ்லிகாப்டரை வாடகைக்கு அமர்த்தும் தருணங்களில் எல்லாம் அதற்காக செலவாகும் தொகையை தேர்தல் செலவின கணக்கின் ஒரு பகுதியாக எவ்வித விதிவிலக்கின்றி சேர்த்துக்கொள்ள வேண்டும்.

**2.8** முன்னாள் பிரதமர்கள் என்ற வகையில் அடங்கும் அனைவரும் இந்த விதிமுறைகளில் அடங்குவர். பதவியில் இருக்கும் பிரதமருக்கு வழங்கப்படும் சிறப்பு சலுகைகளுக்கு அவர்கள் உரிமையுடையவர் ஆக மாட்டார்கள்.

**2.9** வாகனங்களின் மீது பொருத்தியோ அல்லது பிற வகையிலோ ஒலி பெருக்கிகளை பயன்படுத்தும் எந்தவொரு நபருக்கும் பாதுகாப்பு உள்ளிட்ட பயன்களில் எந்த விதமான விதித் தளர்வும் செய்யப்படமாட்டாது.

## உத்தரவு தொடர் எண்.53

அனனத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியின் தலைமைத் தேர்தல் அதிகாரிகள், தலைமைச் செயலாளர்கள் மற்றும் அமைச்சரவைக் குழு புதுடில்லி ஆகியோருக்கு அனுப்பப்பட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் **08.01.1998**ஆம் நாளிட்ட **437/6/98–**PLN-III ஆம் எண் கடிதம்.

பொருள்: அரசியல் கட்சிகளால் பயன்படுத்தப்படும் வானூர்திகள்– தொடர்பாக.

அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்குச் சொந்தமான அரசு வானூர்திகளின் பயன்பாடு குறித்து விரிவான உத்தரவுகள் ஆணையத்தால் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன. நடைமுறையிலுள்ள உத்தரவுகளின் படி, தேர்தல் நடைபெறும் காலங்களில் அரசியல் பிரமுகர்களான முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் உட்பட அனைவரும் வானூர்திகள் பயன்படுத்துவது முழுமையாக தடைசெய்யப்பட்டுள்ளது. பதவியிலுள்ள பிரதமருக்கு மட்டுமே இதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவுகள் **16.12.1997** அன்று மீண்டும் சமீபத்தில் ஆணையத்தால் வலியுறுத்தப்பட்டுள்ளது.
முதலமைச்சர்களின் பாதுகாப்பு உள்பட பல்வேறு காரணங்களுக்காக இந்த வரையறைகளை தளர்த்துமாறு சில முதலமைச்சர்களிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன.

இது குறித்து தேவையான பகுதிகளிலிருந்து மேலும் பல தகவல்கள் ஆணையத்தால் பெறப்பட்டு கூர்ந்து ஆய்வுச் செய்யப்பட்டன. இது தொடர்பான அனைத்து காரணிகளையும் கவனத்தில் கொண்டு கருதிப் பார்த்த பின்னர், தற்போதுள்ள உத்தரவுகளே நிலையானவை எனவும், யாதொரு காரணத்திற்காகவும் இந்த விவகாரத்தில் நிபந்தனைகளை தளர்த்த இயலாது எனவும் ஆணையம் முடிவு செய்தது.

முதலமைச்சர்கள் உட்ளபட அரசியல் பிரமுகர்கள் தனியர்ர் வானூர்திகளை பயன்படுத்த ஆணையத்தினுடைய நடைமுறையிலுள்ள கட்டுப்பாடுகளில் தடை ஏதும் விதிக்கப்படவில்லை. அதற்கிணங்க, முதலமைச்சர் உள்பட அரசியல் சார்ந்த பொறுப்பாளர்களுக்கு தனியார் வானூர்திகள் தேவைப்படின், அவர்களின் தேர்தல் பிரச்சாரம் மற்றும் ஏனைய தேர்தல் தொடர்பான செயல்பாடுகளுக்கு அத்தகைய வானூர்திகளை பயன்படுத்தலாம் என ஆணையம் தெளிவுப்படுத்தியுள்ளது. அவ்வகையில் பயன்படுத்தப்பட்ட வானூர்திகளுக்கான செலவினங்களை சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகளால் செலுத்தப்பட வேண்டும் மற்றும் இது தொடர்பான செலவுகள் உரியவாறு அவர்களுடைய கணக்கில் சேர்க்கப்பட வேண்டும்.

இதனை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகையை அளிக்கவும்.

## உத்தரவு தொடர் எண்.54

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய தேர்தல் நேரடி ஆட்சிப் பகுதியின் தலைமைத் தேர்தல் ஆணையர்கள் மற்றும் தலைமைச் செயலாளர்கள், அமைச்சரவை குழு செயலாளருக்கு அனுப்பப்பட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் **18.08.1999** ஆம் நாளிட்ட **437/6/98–PLN-III** ஆம் எண் கடிதம்.

**பொருள்: தேர்தல் நடைபெறும் காலங்களில் வானூர்திகளை பயன்படுத்துதல்.**

அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுக்குச் சொந்தமான அரசு வானூர்திகளின் பயன்பாடு குறித்து விரிவான உத்தரவுகளை ஆணையம் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது. நடைமுறையிலுள்ள உத்தரவின்படி தேர்தல் நடைபெறும் காலங்களில் அரசியல் பிரமுகர்களான முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் உட்பட அனைவரும் வானூர்திகள் பயன்படுத்துவது முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது பதவியிலுள்ள பிரதமருக்கு மட்டுமே இதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவுகள் **14.07.1999**ஆம் நாளிட்ட அன்று சமீபத்தில் மீண்டும் ஆணையத்தால் விலியுறுத்தப்பட்டது.

அ) முதலமைச்சர்களின் பாதுகாப்பு உள்பட பல்வேறு காரணங்களுக்காக இந்த வரையறைகளை தளர்த்துமாறு சில முதலமைச்சர்களிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன.

ஆ) இது குறித்து தேவையான பகுதிகளிலிருந்து மேலும் பல தகவல்கள் ஆணையத்தால் பெறப்பட்டு ஆழமாக ஆய்வு செய்யப்பட்டன. இது தொடர்பான அனைத்து காரணிகளையும் கவனத்தில் கொண்டு கருதிப் பார்த்த பின்னர், தற்போதுள்ள உத்தரவுகளே நிலையானவை எனவும், யாதொரு காரணத்திற்காகவுத் இந்த விவகாரத்தில் நிபந்தனைகளை தளர்த்த இயலாது எனவும் ஆணையத்தால் முடிவு செய்யப்பட்டது.

இ) முதலமைச்சர்கள் உள்பட அரசியல் பிரமுகர்கள் தனியார் வானூர்திகளை பயன்படுத்த ஆணையத்தினுடைய நடைமுறையிலுள்ள கட்டுப்பாடுகளில் தடை ஏதும் விதிக்கப்படவில்லை, அதற்கிணங்க முதலமைச்சர் உள்பட அரசியல் சார்ந்த பொறுப்பாளர்களுக்கு தனியார் வானூர்திகள் தேவைப்படும், அவர்களின் தேர்தல் பிரச்சாரம் மற்றும் ஏனைய தேர்தல் தொடர்பான செயல்பாடுகளுக்கு அத்தகைய வானூர்திகளை பயன்படுத்தலாம் என ஆணையம் தெளிவுப்படுத்தியுள்ளது. அவ்வகையில் பயன்படுத்தப்பட்ட வானூர்திகளுக்கான செலவினங்களை சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகளால் செலுத்தப்பட வேண்டும் மற்றும் இது தொடர்பான செலவுகள் உரியவாறு அவர்களின் கணக்கில் சேர்க்கப்பட வேண்டும்.

ஈ) இதனை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகையை அளிக்கவும்.

## உத்தரவு தொடர் எண்.55

புதுடில்லி, சிவில் விமானப் போக்குவரத்து துறையின் இந்திய அரசு செயலாளருக்கு அனுப்பப்பட்ட **18.08.1999** ஆம் நாளிட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் **437/6/98**–PLN-III ஆம் கடிதத்தின் நகல், இந்திய அரசு வருவாய் துறையின் செயலாளர், புதுடில்லி, சிவில் போக்குவரத்து துறையின் தலைமை இயக்குநர் மற்றும் அனைத்து மாநிலங்கள், மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியின் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் / தலைமை செயலாளர்கள் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**பொருள்: அரசியல் கட்சிகள் மற்றும் அரசு அதிகாரிகள் அட்டவணையிடப்பட்ட வணிக ரீதியான விமானங்களை தவிர மற்ற தனி நபருக்கு உரிமையான வானூர்திகளைப் பயன்படுத்துதல்.**

**12**–வது மக்களவை கலைக்கப்பட்டுள்ளதையும், **13**–வது மக்களவை அமைப்பதற்காக தேர்தல் அறிவுப்பு வெளியிடப்பட்டதையும் நீங்கள் நன்கு அறிவீர்கள். இந்த செயல்முறை **10.10.1999** ஆம் நாளிற்கு முன்னர் முடிக்கப்பட வேண்யுள்ளது. உயர் பதவியிலிருப்பவர்களான முதலமைச்சர்கள் மற்றும் மத்திய அரசின் அமைச்சர்கள் மூத்த அரசியல் தலைவர்கள் மற்றும் கட்சி தலைவர்கள், தங்களின் தேர்தல் பிரச்சாரத்திற்காகவும், தேர்தல் தொடர்பான பல்வேறு கூட்டங்களில் பங்கேற்பதற்காகவும், அட்டவணையிடப்பட்ட வணிக ரீதியிலான விமானங்களை தவிர, தனியாருக்கு உரிமையுடைய வானூர்திகளை பயன்படுத்தலாம்.

**2.** அட்டவணையிடப்படாத விமானங்களுக்கான அனைத்து முக்கியமான பதிவுகளும், சட்டம் மற்றும் தொடர்புடைய விதிகளின் கீழ் தேவைப்படுகிறவாறான உரிய அதிகாரிகளால் பராமரிக்கப்படுகின்ற முழுமையான பதிவுகள் இன்றியமையாததாகும். பல்வேறு இடங்களில் இருந்து புறப்படும் மற்றும் வந்து சேரும் வானூர்திகளின் நேரம், பயணியர் அறிக்கை போன்ற விவரங்கள் பராமரிக்கப்பட வேண்டும். அவ்வப்போது வரப்பெறும் பல்வேறு புகார்கள் தொடர்பான விவங்கள் சரிபார்க்கப்பட்டு அத்தகைய தகவல்களை ஆணையம் கோரலாம். அதற்கிணங்க, மத்திய மற்றும் மாநில அரசுகளில் உரிய அதிகாரிகளிடம் இவ்வாறு கவனமாக வைக்கப்பட்டுள்ள பதிவுருக்களின் விவரங்கள் குறித்து விழிப்புடன் இருக்குமாறு ஆணையம் தங்களைக்கேட்டுக் கொள்கிறது எனக் கூற நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

இத்தகைய நோக்கத்திற்காக வானூர்திகள் பயன்பாட்டிற்கான கட்டணங்கள் செலுத்துவது தொடர்பான ஆணையத்தின் பார்வைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது மற்றொரு அம்சமாகும். சில நேர்வுகளில், தனி நபரால் / அரசியல் கட்சியினரால், கட்டணம் ரொக்கமாக செலுத்தப்படுவது குறித்து அறிக்கை அளிக்கப் பட வேண்டும்.

**3.** இந்திய அரசு செயலாளர், வருவாய் துறை மற்றும் அனைத்து மாநில அரசுகளின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் அனைத்து தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கும் தகவலுக்காகவும், தேவையான நடவடிக்கைகளுக்காகவும் இக்கடிதத்தின் நகல் விளக்கக் குறிப்புடன் அனுப்பப்பட்டுள்ளது.

## உத்தரவு தொடர் எண்.56

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியின் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் **30.03.2001** ஆம் நாளிட்ட **4/2001/** J.S.**11** ஆம் எண் கடிதம்.

**பொருள்: தேர்தல் நடைபெறும் போது அலுவலக வாகனங்களை தவறாகப் பயன்படுத்ததுவதை தடைசெய்தல் – விளக்கம்**

**1998** ஆம் ஆண்டு இந்தியத் தேர்தல் ஆணையத்தின் உத்தரவுகள் குறித்த சுருக்கக் குறிப்பின் **171 –173** ஆம் பிரிவின் மீண்டும் அளிக்கப்பட்டுள்ள மேற் சொன்ன பொருள் குறித்து **15.01.1996** ஆம் நாளிட்ட **437/6/96–**PLN-III ஆம் எண் ஆணையின் மீது தங்கள் கவனத்தை ஈர்க்க நான் பணிக்கப்பட்டுளேன்.

**2.** மக்களவை பொதுத் தேர்தலின் போது, மக்களவைத் தலைவர், துணைத் தலைவர், மாநிலங்களவைத் துணைத் தலைவர் ஆகியோரைப் பொருத்தமட்டில், பிரச்சாரம், தேர்தல் தொடர்பான பணிகள், தேர்தல் தொடர்பான பயணம் ஆகியவற்றிற்கு அலுவலக வாகனங்களைப் பயன்படுத்துவது குறித்த மோற்சொன்ன ஆணையின் வரையறைகள் இவர்களுக்கும் பொருந்தும் என ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

**3.** சுதந்திரமான மற்றும் நேர்மையான வாக்குப்பதிவு நடைபெறுவதையும் தேர்தல் குறைபாடுகளற்ற நடைமுறைகளின் பேனுவதையும் உறுதி செய்யும் பொருட்டு, ஆணையத்தின் **15.01.1996** ஆம் நாளிட்ட ஆணையில், ஆணையம் விவரித்துள்ளவாறு பிரச்சாரம் செய்தல், தேர்தல் பணி அல்லது தேர்தல் தொடர்பான பயணத்திற்காக அலுவல் சார்ந்த வாகனங்களின் பயன்பாடு சட்டமன்றத்தின் அவைத் தலைவர் / துணை அவை தலைவர் அம்மாநில சட்டமன்றத்திற்கான பொது தேர்தலில் போட்டியிடுகிற ஒரு வேட்பாளராக இல்லாவிட்டாலும், அதனைக் கருத்திற் கொள்ளாமல் யாதொரு சட்டமன்றத்திற்கு பொதுத் தேர்தல் நடைபெறுகின்ற போது அம்மாநில சட்டமன்றத்தின் அவைத்தலைவர் மற்றும் துணைத் தலைவரை பொருத்த வரையில் அலுவலக வண்டிகளைப் பயன்படுத்துவது தொடர்பான வவரயறைகள் அனைவருக்கும் ஒரே மாதிரியே பொருந்தும் என்று இந்தியத் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

**4.** உங்களுடைய மாநிலத்திலுள்ள அனைத்து அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில கட்சிகளின் பிரிவுகளி உட்பட சம்மந்தப்பட்ட அனைத்து அமைப்புகளின் கவனத்திற்கும் இது கொண்டுவரப்பட வேண்டும்

5. தமிழ்நாடு தலைமைத் தேர்தல் ஆணையரிடமிருந்து வரப்பெற்ற **16.03.2001** ஆம் நாளிட்ட **2243/2001–1** ஆம் எண்ணுள்ள செய்தியை இது தெரிவிக்கிறது.

6. இக்கடிதத்தை பெற்று கொண்டதற்கான ஒப்புகையை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## உத்தரவு தொடர் எண்.57

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளின் தலைமை தேர்தல் அலுவலர்களுக்கு அனுப்பப்பட்ட **08.05.2001–**ஆம் நாளிட்ட எண்.**4/2001/**JS-II**–**ஆம் எண்ணிட்ட தேர்தல் ஆணையத்தின் கடிதத்தின் நகல்

1. புதுதில்லி, சிவில் விமானப் போக்குவரத்து துறையின் தலைமை இயக்குநர்.
2. மத்திய அரசு செயலாளர், சுற்றுலா மற்றும் சிவில் விமானப் போக்குவரத்துத் துறை, புதுதில்லி.
3. இந்திய அரசின் அமைச்சரவை செயலாளர், புதுதில்லி.
4. அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் அரசு தலைமை செயலாளர்கள் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

பொருள்: வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாட்களில் அரசியல் கட்சிகளின் தலைவர்களால் தனியாரின் இறக்கை பொருத்தப்பட்ட விமானம் மற்றும் ஹெலிகாப்டர்களைக் கொண்டு வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை நடைமுறைகளை மேற்பார்வையிடுதல் மற்றும் கண்காணித்தல் – குறித்து.

வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாட்களின்போது, ஒரு தொகுதியிலிருந்து மற்றொரு தொகுதிக்கு செல்வதற்காக தனியாரின் நிலையான இறக்கைப் பொருத்தப்பட்ட வான் ஊர்தி மற்றும் ஹெலிகாப்டரைக் கொண்டு, வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை நடைமுறைகளை மேற்பார்வையிடவும் கண்காணிக்கவும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அனுமதிக்கப்படலாமா என்ற வினா எழுந்துள்ளது.

**2.** தேர்தல் ஆணையம், அதன் அனைத்து நோக்கங்களில் காணப்படும் ஐயப்பாடுகளை கவனத்துடன் பரிசீலித்துள்ளது என்பதைக் குறிப்பிட நான் பணிக்கப்பட்டுள்ளேன். தேர்தல் ஆணைய நடத்தைகளின் மேற்பார்வை, வழிநடத்தல் மற்றும் கட்டுபாட்டிற்கான பொறுப்பு, அரசமைப்புச் சட்டத்தின் **324–**ஆம் பிரிவின்படி, தேர்தல் ஆணையத்திடம் மட்டும் நிலைபெற்றுள்ளதால், இந்த தலைவர்களால் மேற்கொள்ளப்படும் வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை நடைமுறைகளின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள், தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கைகளின் செயல்பாட்டிற்கும் அதனின் அதிகாரங்களை பயன்படுத்துவதற்கும் இடையூறாக அமையும். மேலும், அனைத்து கட்சிகளிலும் பெரும்பாலான தலைவர்கள், வெவ்வேறு பாதுகாப்பு தர வகைப்படுத்துதலின்கீழ் வகைப்படுத்தப்பட்டு அத்தகைய தர வகைப்படுத்துதல் வழியிலான பாதுகாவலர்கள் அவர்களின் பாதுகாப்புக்காக வழங்கப்பட்டுள்ளன. வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாட்களில், அவர்கள் ஒரு

தொகுதியிலிருந்து மற்றொரு தொகுதிக்குச் செல்வார்களாயின், போதுமான பாதுகாப்பு முன்னேற்பாடுகள் மேற்கொண்டு அவர்கள் ஒவ்வொருவருக்கும் பாதுகாவலர்கள் வழங்கப்படவேண்டும். வாக்குப் பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாட்களில், முறையான சட்டம், ஒழுங்கு மற்றும் அமைதியான சூழலை ஏற்படுத்தும் நோக்கில், வாக்குச் சாவடிகள் மற்றும் வாக்கு எண்ணிக்கை மையங்களிலும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள வாக்காளர்கள், வாக்குப் பதிவு கட்சிகள் மற்றும் வாக்குப் பதிவு பொருட்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் பணி, தொகுதிகளில் சுற்றுக் காவல் பணியிலும் காவல் துறையினர் மற்றும் ஏனைய பாதுகாப்பு பணியாளர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். ஒரு தொகுதியிலிருந்து மற்றொரு தொகுதிக்கு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் செல்லும்போது, அவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கான இந்த ஏற்பாடுகளில் ஏற்படும் யாதொரு குழப்பம் அல்லது கவன மாற்றம், சுதந்திரமான மற்றும் நியாயமான வாக்குப் பதிவு நடத்துதல் மற்றும் அமைதியான தேர்தல்களின் மீது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தலாம். அரசு மரபு முறைப்படி, அரசியல் கட்சித் தலைவர்கள் வருகைப் புரிகின்றபோது, சில வசதிகளையும் மதிப்புகளையும் பெறுவதற்கு, இந்த அரசியல் தலைவர்களுள் பெரும்பாலானோர் உரிமையுடையவராக இருப்பதால், இத்தகைய நட்களின்போது, ஏற்கனவே அதிகப்படியான நிருவாகச் சுமையைக் கொண்டுள்ள மாவட்டம் மற்றும் உட்கோட்டம் அளவிலான நிருவாக அமைப்பின் மீது கூடுதல் சுமையாக இது கருதப்படும். மேலும், அவர்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்வது, குறிப்பாக வாக்குப் பதிவின்போதிலான ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்வது தடைசெய்யப்பட்ட காலமான 48 மணி நேரத்தின்போதான பிரச்சாரமாகவும் எடுத்துக்கொள்ளப்படலாம். வாக்குப் பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை நாட்களின்போது, அரசியல் கட்சிகளின் தலைவர்களால் பயன்படுத்தப்படும் தனியாரின் இறக்கைப் பொருத்தப்பட்ட விமானம் மற்றும் ஹெலிகாப்டர்கள், ஏற்கனவே அதிகரித்து வரும் தேர்தல் செலவினங்களை கணிசமாக அதிகரிக்கும். மேலும், தேர்தல் களத்தை குழப்புவதோடு அல்லாமல், தேர்தல்களின் அதிக செலவினங்களின் மீதான நியாயமான தடை நடவடிக்கைகளையும் பின்னடையச் செய்யலாம் என்பதை குறிப்பிடுவது இங்கு பொருத்தமானதாக இருக்கலாம். இதனால், அதிக பணம் கொண்டிராத அரசியல் கட்சிகளுக்கு அனுகூலமற்ற சூழல் உருவாகலாம்.

**3.** மேற்கூறிய அனைத்து விவரங்களையும் கருத்திற் கொண்டு, வாக்கு பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாட்களில், அரசியல் கட்சியின் எந்த தலைவரும், மேற்பார்வையிடவும் கண்காணிக்கவும், தனியாரின் இறக்கைப் பொருத்தப்பட்ட விமானம் மற்றும் ஹெலிகாப்டர்களைப் பயன்படுத்தக்கூடாது என்று ஆணையம் முடிவு செய்துள்ளது.

**4.** சிவில் விமானப் போக்குவரத்துத் துறையின் தலைமை இயக்குநர், மேற்கூறிய ஆணையை கருத்திற் கொண்டு, ஏதேனும் அவசரமான நேர்வில், தேர்தல் ஆணையத்தின் முன் அனுமதி பெற்றாலன்றி, வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாட்களில், மேற்சொன்ன செயல் நோக்கத்திற்காக,

அரசியல் கட்சிகளின் தலைவர்களின் நடமாட்டத்திற்காக நிலையான இறக்கைப் பொருத்தப்பட்ட தனியார் விமானம் மற்றும் ஹெலிகாப்டர்களை பறப்பதை அனுமதிக்கக் கூடாது என்றும் ஆணையம் முடிவு செய்துள்ளது.

**5.** ஆணையத்திற்கு தகவல் அளிப்பதன் கீழ், ஆணையத்தின் மேற்சொன்ன ஆணைகள் அனைத்து அரசியல் கட்சிகளின் தகவல், வழிகாட்டுதல் மற்றும் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டி, உங்கள் மாநிலத்தில் செயல்படுகின்ற அனைத்து அரசியல் கட்சிகளின் கவனத்திற்கும், கொண்டுவரப்பட வேண்டும்.

## உத்தரவு தொடர் எண்.58

தலைமைச் செயலாளர்/அனைத்து மாநிலங்களின் தலைமை/மத்தியஅரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமை தேர்தல் அலுவலர்களுக்கு அனுப்பப்பட்ட **08.05.2014–**ஆம் நாளிட்ட தேர்தல் ஆணையத்தின் **437/6/2004/**PLN-III M ஆம் எண் கடிதம்.

பொருள்: **2004–**ஆம் ஆண்டு, லோக்சபாவிற்கான பொதுத் தேர்தலின்போது சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல் நடப்பதை உறுதிசெய்வதற்காக, வாகனங்களின் போக்குவரத்து மீதான நியாயமான கட்டுப்பாடுகள் – விளக்கம் குறித்து.

ஆணையத்தின் **16.01.1996–**ஆம் நாளிட்ட **437/6/96/** PLN-III ஆம் எண்ணிட்ட ஆணையில் உள்ளவாறு, வாகனங்களை ஓட்டுவதன் மீதான கட்டுப்பாடுகள், மோட்டார்சைக்கிள்கள் மற்றும் ஸ்கூட்டர்கள் போன்ற இரு சக்கர வாகனங்களுக்கும் பொருந்துமா எனவும், மேலும் எந்த நேரத்திற்கு அவை பொருந்தும் என்ற ஐயப்பாடும் எழுந்துள்ளது என்பதைக் குறிப்பிட நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்கள் நடைபெறுவதை கருத்தில் கொண்டு, மோட்டார்சைக்கிள்கள் மற்றும் ஸ்கூட்டர்கள் (மிதிவண்டிகள் நீங்கலாக) போன்ற அனைத்து இரு சக்கர வாகனங்களுக்கும் இந்த உத்தரவுகள் பொருந்தும். மேலும், வாக்குப் பதிவு முடிக்கப்படுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட நேரத்திலிருந்து **24** மணி நேரம் முன்பிலிருந்து வாக்குப்பதிவு நிறைவடையும் வரையிலான காலங்களின் போது இந்த உத்தரவுகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இருப்பினும், தேர்தல் பணியிலுள்ள அரசு ஊழியர்களுக்கு, முன்பு கூறப்பட்ட ஆணையின் **8–**ம் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களுடன், நோயாளி அல்லது வயது முதிர்ந்த/ஏலாமையுள்ள நபர்களைக் கொண்டு செல்வதற்காக அத்தகைய இரு சக்கர வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்ற நேர்வுகளிலோ இந்த கட்டுப்பாடுகள் பொருந்தாது.

ஆணையை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகை அளிக்கவும்.

## உத்தரவு தொடர் எண். 59

அசாம், கேரளா, தமிழ்நாடு, மேற்கு வங்காளம் மற்றும் புதுச்சேரி மாநிலங்களின் தலைமை தேர்தல் அலுவலர்களுக்கு அனுப்பப்பட்ட தேர்தல் ஆணையத்தின் **17.03.2006–**ஆம் நாளிட்ட **464**/INST/2006/PLN-I ஆம் எண் கடிதம்.

பொருள்: அசாம், கேரளா, தமிழ்நாடு, மேற்கு வங்காளம் மற்றும் புதுச்சேரி மாநிலங்களின் சட்டமன்ற பேரவைக்கான பொதுத் தேர்தல்கள் – வாகனங்களுக்கான அனுமதி – குறித்து.

அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் பதிவுபெற்ற அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகளின் (மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் **77–**ஆம் பிரிவின்கீழ் போக்குவரத்து செலவுகளுக்கு விலக்களிக்கப்பட்டவர்கள்) தலைவர்களுக்கும் அவர்களது பெயரால் பின்வரும் படிவத்தின்படி வாகன அனுமதிகள் வழங்கப்படலாம் என ஆணையம் விரும்புகிறது.

**2006–**ஆம் ஆண்டு ––––––––––––––––– சட்டமன்ற பேரவைத் தொகுதிக்கான பொதுத் தேர்தல்.

அனுமதியின் தொடர் எண் :

அரசியல் கட்சியின் பெயர் :

தலைவரின் பெயர் :

குறிப்பு:

1. ––––––––––––– **2006–**ஆம் ஆண்டு –––––––––––– சட்டமன்ற பேரவைத் தொகுதிக்கான பொதுத் தேர்தலுக்காக, தலைவரே பயணம் செய்கின்ற வாகனங்களுக்கு மட்டும் இந்த வாகன அனுமதி செல்திறன் உள்ளதாகும்..
2. யாருடைய பெயரில் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதோ, அந்த தலைவர், கட்சியின் வேறு எந்த நிருவாகியால் இந்த அனுமதியானது தவறான முறையில் பயன்படுத்தப்படவில்லை என்பதை உறுதி செய்ய வேண்டும். யாருடைய பெயரில் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதோ, அந்த தலைவரே, அனுமதியை தவறாக பயன்படுத்தியதற்காக பொறுப்பாவர்.

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் **77(1)–**ஆம் பிரிவின் கீழு உள்ள **(2)–**ஆம் விளக்கத்தின் படி வரையறுக்கப்பட்டுள்ள கால அளவுற்குள், உங்களிடம் அளிக்கப்பட்டுள்ள பல்வேறு அரசியல் கட்சிகளின்

தலைவர்களின் பெயர்களுக்கு இந்த அனுமதிகளை வழங்குவதற்கானத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இந்த அனுமதிகள் காப்புறை செய்யப்பட்டு முறையான ஒப்புகையின் கீழ், சம்பந்தப்பட்ட கட்சியின் தலைவர்/பொது செயலாளரிடம் ஒப்படைக்கப்படலாம்.

## உத்தரவு தொடர் எண். 60

இந்திய அரசின் அமைச்சரவைக் குழு செயலாளர், அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமை தேர்தல் அலுவலர்கள் மற்றும் தலைமை செயலாளர்களுக்கு அனுப்பப்பட்ட தேர்தல் ஆணையத்தின் **23.11.2007–**ஆம் நாளிட்ட **437/6/2006–**PLN-III-ஆம் எண் கடிதம்

பொருள்: தேர்தல்களின்போது வாகனங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடைசெய்தல் – குறித்து.

தேர்தல்களின்போது வாகனங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பது குறித்த மாதிரி நடத்தை விதிகளின் பயன்பாட்டுத் தகுதி குறித்து பல்வேறு உத்தரவுகளை கடந்த காலத்தில் தேர்தல் ஆணையம் அவ்வப்போது வழங்கி வந்துள்ளது. சம்பந்தப்பட்ட அனைவரின் வசதிக்காக, மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையிலுள்ள காலத்தின்போது, இந்த உத்தரவுகள் பின்பற்றப்படுவதற்காக, இந்த உத்தரவுகள் தற்போது தொகுக்கப்பட்டுள்ளன. தேர்தல்களின்போது வாகனங்கள் தவறாகப் பயன்படுத்துதல் மீதான கட்டுப்பாடுகள் குறித்த இந்த உத்தரவுகள், அரசமைப்புச் சட்டத்தின் **324–**ஆம் பிரிவின் கீழும், இதுகுறித்து ஆணையத்தை செயல்படுத்துகின்ற ஏனைய அனைத்து அதிகாரங்களுக்குக் கீழும் வழங்கப்பட்டுள்ளன.

<u>வாக்குப் பதிவுகளின்போது:</u>

(i) வாக்குச் சாவடிக்கும் வாக்குச் சாவடிகளிலிருந்து வாக்காளர்களை இலவசமாக அழைத்துச் செல்வதற்கும் வேட்பாளர் அல்லது அவரது தேர்தல் முகவரின் ஒப்புதலுடன், வேட்பாளரால் அல்லது அவரது முகவரால் அல்லது ஏனைய யாதொரு நபரால் வாகனங்கள் வாடகைக்கு எடுக்கப்படுவது அல்லது வாங்கப்படுவது அல்லது பயன்படுத்துவது என்பது ஊழல் நடவடிக்கையாகும் என்று **1951–**ஆம் ஆண்டு, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் **123(5)–**ஆம் பிரிவு வழங்குகிறது. **1951–**ஆம் ஆண்டு, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் **133–**ஆம் பிரிவின் கீழ் அத்தகைய "ஊழல் நடவடிக்கை" தண்டனைக்குட்பட்டு ஐநூறு ரூபாய் வரையிலான அபராதத்துடன் கூடிய தண்டனை விதிக்கத்தக்கதாகும்.

தேர்தல் ஆணையத்தின் **(16.01.1996–**ஆம் நாளிட்ட **437/6/96–**PLN-III**–**ஆம் எண்ணிட்ட உத்தரவைக் காண்க**)**

(ii) மக்களவைத் தேர்தலுக்காகப் போட்டியிடுகின்ற ஒவ்வொரு வேட்பாளரும், வாக்குப்பதிவு நாளின்போது பின்வருவனவற்றிற்கு உரிமையுடையவராவர், அவையாவன:

a) தொகுதி முழுவதற்கும், அவரது சொந்த பயன்பாட்டிற்காக, ஒரு வாகனம்.

b) தொகுதி முழுவதற்கும், அவரது தேர்தல் முகவரின் பயன்பாட்டிற்காக ஒரு வாகனம்.

c) கூடுதலாக, சி1 ஆவணங்கள் மற்றும்/நிருவாகி/மேசைன் கணினி /23.11.2007/00–9/MCC வாகனங்களுக்கான உரிமை வழங்குதல். ஆவணம் 2. பாராளுமன்ற தொகுதியில் உள்ள ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும், அவரது தேர்தல் முகவர் அல்லது பணியாளர் அல்லது கட்சி பணியாளரின் பயன்பாட்டிற்காக ஒரு வாகனம் (20.11.2006ஆம் நாளிட்ட 437/6/2006-PLN-IIஆம் எண்ணிட்ட ஆணையத்தின் உத்தரவைக் காண்க).

(iii) சட்டமன்ற பேரவைத் தேர்தலுக்காக, அந்த தொகுதியில், வாக்குப்பதிவு நடைபெறும் நாளில், போட்டியிடுகின்ற ஒவ்வொரு வேட்பாளரும் பின்வருவனவற்றிற்கு உரிமையுடையவராகிறார், அவையாவன:

a) அவரது சொந்த பயன்பாட்டிற்காக ஒரு வாகனம்.

b) அவரது தேர்தல் முகவரின் பயன்பாட்டிற்காக ஒரு வாகனம்.

c) கூடுதலாக, அவரது பணியாளர்கள் அல்லது கட்சிப் பணியாளர்களின் பயன்பாட்டிற்காக ஒரு வாகனம்.

(24.03.2007 ஆம் நாளிட்ட 437/6/96–PLN-III-ஆம் எண்ணிட்ட தேர்தல் ஆணையத்தின் உத்தரவைக் காண்க)

(iv) மேற்குறிப்பிட்ட வாகனங்களுக்கான அனுமதி, மாஜிஸ்டிரேட்/தேர்தல் நடத்தும் அதிகாரியால் வழங்கப்படும். வேட்பாளர்கள், அவர்களது வாகனத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பதிவுசெய்து, அதிகாரிகளால் வழங்கப்பட்ட அனுமதியை, வாகனத்தின் முகப்புக் கண்ணாடியில் ஒட்ட வேண்டும். அமைச்சர்கள், பணியாளர்கள், முகவர்கள் மற்றும் யாதொரு வேட்பாளரின் அனுதாபிகள் உட்பட அரசியல் கட்சிகளின் தலைவர்களால் வேறு எந்த வாகனமும் பயன்படுத்த அனுமதிக்கப்படக் கூடாது. வேட்பாளர் எந்த நிலையில் இருந்தாலும், இதற்கு விதிவிலக்கு அளிக்கப்பட மாட்டாது.

(16.01.1996 ஆம் நாளிட்ட 437/6/96–PLN-III-ஆம் எண்ணிட்ட தேர்தல் ஆணையத்தின் உத்தரவைக் காண்க )

(v) இதன்பின்னர், வேட்பாளர் அல்லது அவரது முகவர் அல்லது கட்சி பணியாளர்கள் அல்லது பணியாளர்கள், நான்கு/மூன்று/இரு சக்கர வாகனங்கள் அதாவது, கார்கள் (அனைத்து வகையிலான), டாக்ஸிகள், ஆட்டோ ரிக்ஷாக்கள், ரிக்ஷாக்கள் மற்றும் இரு சக்கர வாகனங்களை மட்டுமே பயன்படுத்த அனுமதிக்கப்படுவார்கள் என தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. வாக்குப்பதிவு நாளின்போது, இந்த நான்கு சக்கர வாகனங்களில் ஓட்டுநர்கள் உட்பட 5 நபர்களுக்கு மேற்பட்டோர் பயணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள். வாக்குப்பதிவு நாளின்போது, வேட்பாளரின் அல்லது அவரது தேர்தல் முகவரின் பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட வாகனங்களை வேறு யாதொரு நபரும் பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டார்கள் என மேலும் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது. (20.11.2006ஆம் நாளிட்ட 437/6/2006–PLN-III-ஆம் எண்ணிட்ட தேர்தல் ஆணையத்தின் உத்தரவைக் காண்க)

(vi) வாகனங்களைப் பயன்படுத்துவது தொடர்பான இந்த உத்தரவுகள், மோட்டார்சைக்கிள்கள் மற்றும் ஸ்கூட்டர்கள் (மிதிவண்டிகள் நீங்கலாக) போன்ற அனைத்து இரு சக்கர வாகனங்களுக்கும் பொருந்தும். வாக்குப்பதிவை நிறைவு செய்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட நாளிலிருந்து 24 மணி நேரத்திற்கு முன்னரும் வாக்குப்பதிவு நிறைவடையும் வரையிலும் இந்த உத்தரவுகள் பொருந்தத் தக்கனவாக பின்பற்றத் தக்கனவாக இருக்க வேண்டும். எனினும் தேர்தல் பணியில் உள்ள அரசு ஊழியருக்கோ, நோயாளி அல்லது வயதானோர்/இயலாத நபர்களை அழைத்துச் செல்வதற்காக அத்தகைய வாகனம் பயன்படுத்தப்படுகின்ற நேர்வில் இந்த கட்டுபாடுகள் பொருந்தாது. (08.05.2004 ஆம் நாளிட்ட 437/6/2004–PLN-III-ஆம் எண்ணிட்ட தேர்தல் ஆணையத்தின் உத்தரவைக் காண்க)

(vii)மோட்டார் வாகனங்கள் சட்டத்தின் கீழ் மட்டுமல்லாமல், அதனுடன் சேர்த்து, 1951–ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் மற்றும் இந்திய தண்டனை விதிக்கோவையின் IXA–ஆம் அத்தியாயத்தின் விதித்துறைகளின் கீழும், மேற்கூறப்பட்ட விதிமுறைகளை மீறுவோருக்கு எதிரான தண்டனைக்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இந்த விதிமுறைகளை மீறுவதற்காக பயன்படுத்தப்படுகிற அனைத்து வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட வேண்டும். (16.01.1996ஆம் நாளிட்ட 437/6/96–PLN-III-ஆம் எண்ணிட்ட தேர்தல் ஆணையத்தின் உத்தரவைக் காண்க)

8. எனினும், வாக்குப்பதிவு நாளின்போது, அனைத்து வாகனப் போக்குவரத்திற்கும் முழுமையான தடை விதித்து, அதனால் இன்னல்களை உருவாக்கவோ, பொதுமக்களை அலைக்கழிக்கச் செய்யவதோ

ஆணையத்தின் நோக்கமல்ல. தேர்தல் தவிர்த்து வேறு நியாயமான காரணங்களுக்காக, எந்த விதிவிலக்கும் அல்லாமல், தேர்தல் நாளின்போது பின்வரும் வகையிலான வாகனங்கள் பயன்படுத்தப்பட அனுமதிக்கப்பட வேண்டும்.

1. வாகன உரிமையாளர்களால், தேர்தல்களுடன் தொடர்பில்லாத அவர்களது சொந்தப் பயன்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படும் தனியார் வாகனங்கள்,

2. வாக்குச் சாவடியின் 200 மீட்டர் சுற்று வட்டாரத்திற்குள், வேறு எங்கும் செல்லாமல், வாக்குப் பதிவு செய்வதற்காக வாக்குச்சாவடிக்கு செல்வதற்காக மட்டும் வாகன உரிமையாளரால் தனக்காக அல்லது அவரது சொந்த குடும்பத்தின் உறுப்பினர்களுக்காக, பயன்படுத்தப்படுகிற தனியார் வாகனங்கள்,

3. மருத்துவமனை வேன்கள், அவசர ஊர்தி, பால் வேன்கள், தண்ணீர் லாரிகள், அவசர மின்சாரப் பணி வேன்கள், பணியிலுள்ள காவலர், தேர்தல் பணியிலுள்ள அலுவலர்கள் போன்ற அவசிய த்தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள்

4. குறிப்பிட்ட ஊர்களுக்கிடையே, நிலையான வழித் தடங்களில் செல்கின்ற பேருந்துகள், போன்ற பொதுப்போக்குவரத்து வாகனங்கள்.

5. விமான நிலையங்கள், இரயில் நிலையங்கள், மாநிலங்களுக்கிடையேயான பேருந்து நிலையங்கள், மருத்துவமனைகள் போன்ற இடங்களுக்கு செல்வதற்காக டாக்ஸிகள், மூன்று சக்கர ஸ்கூட்டர்கள், ரிக்ஷாக்கள் போன்ற தவிர்க்க முடியாத வாகனங்கள்.

6. உடல்நலம் குன்றிய நபர்கள் அல்லது மாற்றுத் திறனாளிகளால் அவர்களது சொந்த பயன்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படும் தனியார் வாகனங்கள்.

(16.01.1996 ஆம் நாளிட்ட 437/6/96–PLN-III-ஆம் எண்ணிட்ட தேர்தல் ஆணையத்தின் உத்தரவைப் பார்க்கவும்)

<u>வேட்புமனு தாக்கலின்போது:</u>

தேர்தல் நடத்தும் அலுவலர்கள்/உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களின் அலுவலகங்களின் 100 மீட்டர்கள் எல்லைக்குள், வர அனுமதிக்கப்படக்கூடிய வாகனங்களின் உயரளவு எண்ணிக்கை மூன்றாக இருக்க வேண்டும்.

(09.02.2007 ஆம் நாளிட்ட 464/6/INST/2007 PLN-Iஆம் எண்ணிட்ட தேர்தல் ஆணையத்தின் உத்தரவைப் பார்க்கவும்)

<u>தேர்தல் காலத்தின்போது:</u>

**9.** தேர்தல் நாளின்போது, வேட்பாளரின் ஆதரவாளர்களை தொகுதிக்குள் கொண்டு செல்வதற்காக, வேட்பாளர்கள், அவர்களது முகவர்கள் மற்றும் கட்சி தலைவர்கள் மற்றும் ஆதரவாளர்களால் தனியார் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டதும், குறிப்பிட்ட கட்சி/வேட்பாளருக்காக வாக்காளர்கள் வாக்களிப்பார்கள் அல்லது வாக்களிப்பதிலிருந்து மொத்தமாக விலகிவிடுவார்கள் என்பதால், வாக்காளர்களின் மனதில் அச்சத்தை உருவாக்க, பல நேரங்களில் உடல் வலிமை பெற்ற சமூக விரோத சக்திகள் வெளிப்படையாக உள்நுழைந்த இதற்கு முன் நடைபெற்றுள்ளது. தேர்தல்களின்போது, இடையுறு செய்யும் எண்ணத்தில், தடைசெய்யப்பட்ட ஆயுதங்கள் மற்றும் வெடி பொருட்களைக் கடத்துவதற்காகவும் சில நேரங்களில் இந்த வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன. அத்தகைய விரும்பத்தகாத/சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடைசெய்வதற்காக, சட்ட விரோத பொருட்கள் மற்றும் ஆயுதங்களைக் கொண்டு செல்லுதல் போன்ற குற்ற நடவடிக்கைகள் உட்பட தவறுகள் நடக்க வாய்ப்புள்ளதால், போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் மற்றும் அவர்களது கட்சியின் தலைவர்கள் செல்லும் வாகனங்களை மாவட்ட நிருவாகம் தீவிரமாக கண்காணிக்க வேண்டுமென்று ஆணையம் மேலும் ஆணையிடுகிறது. அத்தகைய நடவடிக்கையில் அல்லது வாக்காளர்களை மிரட்டுகின்ற அல்லது அவர்களது மனதில் அச்சத்தை உருவாக்குகின்ற எண்ணத்தில், சமூக விரோத சக்திகளை அழைத்துச் செல்வதற்காக கட்சியின் அல்லது தனிநபரின் வாகனங்களுள், ஏதேனும் வாகனம் ஈடுபட்டுள்ளது கண்டறியப்பட்டால், அத்தகைய வாகனங்களை சிறைபிடித்து, தேர்தல் முடிவடையும் வரையில் அவற்றை விடுவிக்காமல் இருப்பது மாவட்ட நிருவாகத்தின் கடமையாகும். கூடுதலாக அத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வாகன உரிமையாளர், வாகனத்தில் சென்றவர்(கள்) மற்றும் வேட்பாளர்/அரசியல் கட்சிகளுக்கு எதிரான குற்றவியல் நடவடிக்கை, சட்டத்தின்படி எடுக்கப்பட வேண்டும். **(16.01.1996**ஆம் நாளிட்ட **437/6/96–**PLN-IIIஆம் எண்ணிட்ட தேர்தல் ஆணையத்தின் உத்தரவைப் பார்க்கவும்**).**

**10.** சுதந்திரமான, நியாயமான மற்றும் அமைதியான தேர்தல்களை உறுதிசெய்வதற்காக, தேர்தல்கள் அறிவிக்கப்பட்டவுடனே வாகனங்களை சோதனை செய்வதற்காக நடவடிக்கையை மாவட்ட நிருவாகம் தொடங்க வேண்டும். தேர்தல் நடைமுறை நிறைவடையும் வரை இந்த நடவடிக்கையைத் தொடர வேண்டும். **(16.01.1996**ஆம் நாளிட்ட **437/6/96**-PLN-IIIஆம் எண்ணிட்ட தேர்தல் ஆணையத்தின் உத்தரவைப் பார்க்கவும்**)**

**11.** எந்தத் தொகுதியிலும், தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து, தேர்தல் நடவடிக்கை நிறைவடையும் வரையில், எந்த சூழ்நிலைகளின் கீழும், தேர்தல்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற கார்கள்/வாகனங்கள், மூன்றிற்கும் மேற்பட்ட வாகனங்களைக் கொண்ட அணிவகுப்பில் செல்ல

அனுமதிக்கப்படக் கூடாது. ஏதேனும் மத்திய அல்லது மாநில அரசின் அமைச்சர் அதில் இடம் பெற்றிருந்தாலும் , அனைத்துப் பெரிய வாகன அணிவகுப்புகளும் ஒருங்கே செல்ல அனுமதிக்கக் கூடாது. எனினும், அத்தகைய யாதொரு தனிநபரின் நேர்வில் வழங்கப்பட்ட பாதுகாப்பு உத்தரவுகளுக்கும் இது பொருந்தும். வேறு வகையில் கூறுவதென்றால், எந்த சூழ்நிலையிலும், அந்த குறிப்பிட்ட நபரின் பாதுகாப்பு வகைப்பாட்டினைக் கருத்திற்கொண்டு, அனுமதிக்கப்பட்ட பாதுகாப்பு வாகனங்கள் உட்பட உரிய நபரின் வாகன அணிவகுப்பு மூன்று வாகனங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். **(18.03.1997**ஆம் நாளிட்ட **437/6/97–**PLN-IIIஆம் எண்ணிட்ட தேர்தல் ஆணையத்தின் உத்தரவைப் பார்க்கவும்**)** பிரிக்கப்பட்ட அத்தகைய வாகன அணிவகுப்புகளுக்கிடையே குறைந்தது **200** மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும். **(05.04.2007**ஆம் நாளிட்ட **464**/UP-LA/2007ஆம் எண்ணிட்ட தேர்தல் ஆணையத்தின் உத்தரவைப் பார்க்கவும்**).**

**12.** அணிவகுப்பு பிரிக்கப்பட்ட பின்னரும், ஆணையத்தின் உத்தரவுகளை மீறிய மேலே வரையறுக்கப்பட்ட வாகன எண்ணிக்கையைவிட அதிகமான எண்ணிக்கையிலான வாகன அணிவகுப்பில் ஏதேனும் ஒருவர் செல்கிறாரெனில், தேர்தல் நடைமுறைகள் நிறைவடையும்வரை, அத்தகைய வாகனங்கள் அனுமதிக்கப்படவில்லை என்பதை உறுதி செய்வது, மாவட்ட நிருவாகத்தின் கடமையாகும்.

**13. 1951**ஆம் ஆண்டு, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் **77(1)**ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள விளக்கத்தின் (அ) பகுதியின் பலனைப் பெறுகின்ற அரசியல் கட்சிகளின் தலைவர்களால், சாலை போக்குவரத்து முறை வேண்டப்படுகின்ற நேர்வில், ஒரு தலைவரால் மாநில முழுவதுமான தேர்தல் பிரச்சாரத்திற்காக ஒரே வாகனம் பயன்படுத்தப்பட வேண்டியிருந்தாலோ, அத்தகைய கட்சித் தலைவர்களால் பல்வேறு பகுதிகளில் பல்வேறு வாகனங்கள் பயன்படுத்தப்பட வேண்டியிருந்தாலோ, எதுவாகயிருப்பினும், அதற்கான ஒருமுகமான அனுமதி தலைமை தேர்தல் அதிகாரியால் வழங்கப்பட வேண்டும். யாதொரு பகுதியில், அவரால் (ஆண்/பெண்) பயன்படுத்தப்படுகின்ற வாகனத்தின் முகப்புக் கண்ணாடியில் தெளிவாகத் தெரியும்படி ஒட்டக்கூடியவாறு உரிய , நபரின் பெயரில் அனுமதி வழங்கப்படும். தலைமைத் தேர்தல் அதிகாரியால் அவ்வாறு வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டுகள், வேட்பாளர்களுக்காக, மாவட்ட தேர்தல் அலுவலர்களால்/ தேர்தல் நடத்தும் அலுவலர்களால் வழங்கப்படவுள்ள அனுமதிச் சீட்டிலிருந்து முற்றிலும் வேறுபட்ட நிறத்தில் இருக்க வேண்டும். **(05.04.2007**ஆம் நாளிட்ட **464**/UP-LA/2007ஆம் எண்ணிட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவைப் பார்க்கவும்**).**

**14.** மாநிலங்கள் முழுவதுமான பிரச்சாரத்திற்காக, அரசியல் கட்சியால் வீடியோ–வேன்கள் போன்றவை பயன்படுத்தப்படவிருக்கின்ற நேர்வில், பிரச்சாரத்திற்காக வீடியோ–வேன்களைப் பயன்படுத்துவதற்காக ஏதேனும் அனுமதி வழங்கப்படுவதற்கு முன்னர், வாகனத்தின் அத்தகைய பயன்பாடு,

மோட்டார் வாகனச் சட்டத்தின்படியுள்ளதா என்று தலைமை தேர்தல் அலுவலரால் உறுதி செய்யப்பட வேண்டும். **2006**ஆம் ஆண்டு **3648**(MB)**–**ன் ரிட் மனுவில் அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் **23.06.2006** மற்றும் **14.02.2007**ஆம் நாளிட்ட தீர்ப்புகளின் மீது கவனம் ஈர்க்கப்படுகிறது.

**(05.04.2007**ஆம் நாளிட்ட **464**/UP-LA/2007ஆம் எண்ணிட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவைப் பார்க்கவும்**).**

**15.** எந்தத் தொகுதியிலும், தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து, தேர்தல் நடைமுறைகள் முடிவடையும் வரையில், போட்டியிடும் வேட்பாளர்களால் பயன்படுத்தப்பட்ட வாகனங்களை, போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் மற்றும் ஏனைய கட்சித் தலைவர்களுடன் செல்கின்ற நபர்களை, மாவட்ட நிர்வாகம் உன்னிப்பாகக் கவனித்து ஆணையத்தின் உத்தரவுகள் மீறப்படவில்லை என்பதை உறுதி செய்ய வேண்டும். **(18.03.97**ஆம் நாளிட்ட **437/6/97** PLN-III ஆம் எண்ணிட்ட தேர்தல் ஆணையத்தின் உத்தரவைப் பார்க்கவும்**).**

**16.** தேர்தல் பிரச்சாரம் தொடங்குவதற்கு முன், இது குறித்து மாவட்ட தேர்தல் அலுவர் அல்லது அவரால் இதற்கான குறிப்பாக அதிகாரமளிக்கப்பட் /அலுவலர்களிடம், தேர்தல் பிரச்சாரத்தில் பயன்படுத்துகின்ற அனைத்து வாகனங்களின் விவரங்களை பதிவு செய்து கொள்ளுமாறு, போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் கேட்டுக்கொள்ளப்பட வேண்டும். கூடுதல் வாகனங்களை பயன்படுத்துவதற்கு முன்னர், வேட்பாளர் அல்லது அவரது முகவரால் இது குறித்து விவரம் வெளியிடப்பட்ட பிறகே கூடுதல் வாகனங்கள் மேற்கொண்டு பயன்படுத்தப்படலாம். தேர்தல் பிரச்சாரத்திற்காக பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களின் விவரங்களைத் தெரிவிக்கின்றபோது, அந்த வாகனம் பயன்படுத்தப்படும் பகுதிகள், வட்டம்/ வட்டங்களின் விவரங்களும் தெரியப்படுத்தப்பட வேண்டும். **(18.03.97**ஆம் நாளிட்ட **437/6/97** PLN-III ஆம் எண்ணிட்ட தேர்தல் ஆணையத்தின் உத்தரவைப் பார்க்கவும்**).**

**17.** அவ்வாறு பெறப்பட்ட விவரங்கள், மாவட்ட தேர்தல் அலுவலரால், தேர்தல் செலவினப் பார்வையாளர்களிடம் தெரிவிக்கப்பட வேண்டும். வேட்பாளர்கள் அல்லது அவர்களது தேர்தல் முகவர்களால் இத்தகைய தேர்தல் பிரச்சாரத்திற்காகப் பணியமர்த்தப்பட்ட வாகனங்களை மாவட்ட நிருவாகம் கோரக்கூடாது. பிரச்சாரத்திற்காக, மாவட்ட நிருவாகத்திடம் பதிவுபெறாத ஏதேனும் வாகனம், பிரச்சாரத்திற்காக பயன்படுத்தப்படுவது கண்டறியப்பட்டால், அது அனுதியளிக்கப்படாத பிரச்சாரமாக அது கருதப்பட்டு அச் செயல் மேலும் இந்திய தண்டனைச் சட்டத்தின் விதிக்கோவையின் IX ஏ' அத்தியாயத்தின் படியான தண்டனைக்குட்படும். ஆதலால் பிரச்சார நடவடிக்கையிலிருந்து அவை உடனடியாக நீக்கப்பட வேண்டும். **(18.03.97–**ஆம் நாளிட்ட **437/6/97–**PLN-III ஆம் எண்ணிட்ட தேர்தல் ஆணையத்தின் உத்தரவைப் பார்க்கவும்**).**

**18. 1951ஆம் ஆண்டு, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 160ஆம் பிரிவில் விளக்கமளிக்கப்பட்டவாறு, சைக்கிள் ரிக்ஷாவும் தேர்தல் பிரச்சாரத்தில் பயன்படுத்தக் கூடிய ஒரு வாகனமாகும்., இதற்கான செலவினத்தை, வேட்பாளர் அவரது தேர்தல் செலவினக் கணக்குகளில் சேர்க்க வேண்டும். இதனை உறுதி செய்வதற்காக, வேட்பாளர் அவரது பிரச்சாரத்திற்காகப் பயன்படுத்துகின்ற அத்தகைய ரிக்ஷாக்கள் பற்றிய தகவல்களை அளிக்க வேண்டும். ரிக்ஷாவை அடையாளப்படுத்துவதற்காக, எந்தவொரு நகராட்சி பதிவு/அனுமதியை ரிக்ஷா பெற்றிருக்கவில்லையென்றால், ரிக்ஷா ஓட்டுநரின் தனிப்பட்ட பெயரிலான அனுமதிச் சீட்டு, தேர்தல் நடத்தும் அலுவலரால் ரிக்ஷா ஓட்டுநரிடம் அளிக்கப்படலாம். தேர்தல் செயல்நோக்கங்களுக்காக, அந்த ரிக்ஷாவைப் பயன்படுத்துகின்றபோது, ரிக்ஷா ஓட்டுநர், அந்த அனுமதியை வைத்திருக்க வேண்டும். எனினும், சாதாரண சமயங்களில் பயணிகளை அழைத்துச் செல்வதற்கான பொதுவான காரணங்களுக்காகப் பயன்படுத்தப்படும் ரிக்ஷாக்களுக்கு, ரிக்ஷா ஓட்டுநர் அவரது சொந்த விருப்பத்தின்பேரில், வேட்பாளரின் பெயர் அல்லது அவரது கட்சி சின்னத்தைக் காட்டுகின்ற ஒரே ஒரு சுவரொட்டியை மட்டும் அவர்கள் காட்சிப்படுத்துகிறாரெனில் விதிவிலக்களிக்கப்படலாம்.**

**(12.07.2006ஆம் நாளிட்ட 437/6/2006** PLN-III **(தொகுப்பு–9)ஆம் எண்ணிட்ட தேர்தல் ஆணையத்தின் உத்தரவைப் பார்க்கவும்).**

**2., மேற்குறிப்பிட்ட உத்தரவுகள் வழுவாது கடைபிடித்தல் வேண்டி சம்பந்தப்பட்ட அனைவரின் கவனத்திற்கும் கொண்டு செயல்பட வேண்டும்.**

## உத்தரவு தொடர் எண்.61

**1)** சட்டீஸ்கர், ராஜ்பூர் **2)** ஜம்மு & காஷ்மீர், ஜம்மு **3)** மத்திய பிரதேசம், போபால், **4)** மிசோரம், ஏஸ்வால், **5)** தில்லியின் தேசிய தலைநகரப் பகுதி, தில்லி **6)** ராஜஸ்தான், ஜெய்ப்பூர் ஆகிய மாநிலங்களின் தலைமை தேர்தல் அலுவலர்களுக்கு அனுப்பப்பட்ட **19.10.2008–**ஆம் நாளிட்ட **437/6/2008–**CC&BE–ஆம் எண்ணிட்ட தேர்தல் ஆணையத்தின் கடிதம்.

**பொருள்:** 2008 ஆம் ஆண்டு, சட்டமன்றப் பேரவைகளுக்கான பொதுத் தேர்தல்கள் – பல்வேறு வாரியங்கள்/ஆணையங்களின் நிர்வாகிகளால், அலுவலக வாகனம் பயன்படுத்தப்படுவது **–** குறித்து.

பல்வேறு தன்னாட்சி நிறுவனங்களின் தலைவர், துணைத் தலைவர், ஆணையர்கள் போன்ற அலுவல்சாரா நிருவாகிகளுக்கு மாநில அரசால் வழங்கப்பட்டுள்ள வாகனங்கள், தேர்தலின்போது தவறாகப் பயன்படுத்தப்படுவதாக ஆணையத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. போட்டியிடுகின்ற கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்கிடையே நியாயமான தேர்தல் களத்தை உறுதிசெய்வதற்காக, தேர்தல் செயல்நோக்கங்களுக்காக அலுவலக வாகனம் பயன்படுத்தப்படுவதை, மாதிரி நடத்தை விதிகளும் அவ்வப்போது வழங்கப்பட்ட பல்வேறு உத்தரவுகளும் தடை செய்கின்றது.

இது தொடர்பான அனைத்து காரணக் கூறுகளையும், கருத்தில் கொண்ட பிறகு, தன்னாட்சி நிறுவனங்களின் அனைத்து நிர்வாகிகளும், அலுவலகத்திற்கும் வீட்டிற்குமிடையே பயணம் செய்வதற்கும், தலைமையகத்துக்குள் நடக்கும் ஏதேனும் அலுவலகக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கும் மட்டும் அலுவலக வாகனத்தைப் பயன்படுத்துமாறு உத்தரவிடப்படலாம் என்று ஆணையம் முடிவு செய்துள்ளது.

அனைவரும் இவ்வழிமுறைகளைத் தவறாது கடைபிடிக்க வேண்டி, சம்பந்தப்பட்ட அனைவரின் கவனத்திற்கும் இது கொண்டு செல்லப்பட வேண்டும்.

## உத்தரவு தொடர் எண்.62

அமைச்சரவை செயலாளர், அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமை செயலாளர்கள்/தலைமை தேர்தல் அலுவலர்களுக்கு அனுப்பப்பட்ட 24.10.2008 ஆம் நாளிட்ட 437/6/1/2008–CC& BE ஆம் எண்ணிட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் கடிதம்.

**பொருள்** : முன்னணி பிரச்சாரகர்களின் பயணத்தின் மீதான தேர்தல் செலவினம் – தேர்தல் பிரச்சாரத்திற்காக ஹெலிகாப்டரை பயன்படுத்துதல்–தொடர்பாக

1951 ஆம் ஆண்டு, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 77 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின்படி,

தேர்தலில் நிற்கும் ஒவ்வொரு வேட்பாளரும் தானாகவோ அல்லது அவரது முகவர் மூலமாகவோ அவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து தேர்தல் முடிவு அறிவிக்கப்படும் நாள்வரை (இரு நாள்களும் உள்ளிட்ட) அவரால் அல்லது அவரது தேர்தல் முகவரால் செலவு செய்யப்பட்ட அல்லது செலவு செய்ய அதிகாரமளிக்கப்பட்ட தேர்தல் தொடர்பான அனைத்து செலவினங்களின் சரியான கணக்கை வைத்துவரவேண்டும் என்பதைக் குறிப்பிட நான் பணிக்கப்பட்டுள்ளேன். அத்தகைய அனைத்து விவரங்களும் வரையறுக்கப்பட்டுள்ளவாறு கணக்கில் இருக்க வேண்டுமென்று (2) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ளது. அத்தகைய மொத்த செலவினமானது, வரையறுக்கப்பட்டுள்ள மொத்தத் தொகையை விட அதிகமாக இருக்கக் கூடாதென, (3) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

(2) அரசியல் கட்சியின் பிரச்சார நிகழ்ச்சிக்காக, அரசியல் கட்சியின் தலைவர்களால் (பொதுவாக நட்சத்திர பிரச்சாரகர்கள் என எங்களால் குறிப்பிடப்படுபவர்கள்) வான் வழியாக அல்லது வேறு ஏதேனும் போக்குவரத்து முறையில் செய்யப்பட்ட பயணம் குறித்த செலவினம், அந்த அரசியல் கட்சிக்காக, வேட்பாளரால் செலவு செய்யப்பட்ட அல்லது செலவு செய்ய அனுமதியளிக்கப்பட்ட தேர்தல் தொடர்பான செலவினமாகக் கருதப்படக்கூடாது.

(3) 77(1) ஆம் பிரிவின் விதித்துறைகளும் அதன் கீழுள்ள (1) ஆம் விளக்கமும், 77(1) ஆம் பிரிவின் விதித்துறைகளின் முக்கிய நோக்கத்தைச் பொருள் கொள்ளப்படவேண்டும். வேட்பாளரால் அல்லது அவரது தேர்தல் முகவரால் செலவு செய்யப்பட்ட அல்லது செலவு செய்ய அனுமதியளிக்கப்பட்ட அனைத்து தேர்தல் செலவுகளையும் பற்றிய கணக்கினைப் பராமரிக்க வேண்டுமென்று 77(1) ஆம் பிரிவு தெளிவாகக் குறிப்பிடுகின்றது. வேட்பாளர்களின் தேர்தல் தொடர்பாக, அரசியல் கட்சியின் தலைவர்களால் செய்யப்பட்ட செலவினக் கணக்கிலிருந்து (1) ஆம் விளக்கம் விலக்களிக்கிறது. அதனால், அவரது தொகுதியில், அவரது அரசியல் கட்சியின் தலைவர்களால், மேற்கொள்ளப்படும் தேர்தல் பிரச்சாரம் தொடர்பான யாதொரு வகையிலான பயணம் /போக்குவரத்து மீதான தேர்தல் செலவினம், வேட்பாளரின் மொத்த செலவினங்களில்

சேர்க்கப்படக்கூடாது. வேட்பாளர், ஏனைய தொகுதிகளிலுள்ள அவரது கட்சியின் பிற வேட்பாளர்களுடன் எந்த நிலைபாட்டில் உறவு கொண்டிருந்தாலும், 77(1) ஆம் பிரிவின் (1) ஆம் விளக்கத்தின் வரம்பிற்குள், 77(1) ஆம் பிரிவின் விளக்கத்தின் படிஅரசியல் கட்சியின் தலைவர்அவரது சொந்தத் தொகுதியில், அவரது அரசியல் கட்சியின் தலைவராகக் கருதப்படமாட்டார், அவரது சொந்த தொகுதியில் / தொகுதிகளில், முதலில் அவர் ஒரு வேட்பாளர் ஆவார். ஆதலால், ஹெலிகாப்டர்/விமானம் அல்லது வேறு வகையிலான போக்குவரத்து முறையில் அவரது தொகுதி/ தொகுதிகளுக்குள் அவரது செய்யும் பயணத்திற்காக அனைத்து செலவினமும், அவரது தொகுதிக்காக வரையறுக்கப்பட்ட மொத்த உயரளவு செலவினத்துள் கணக்கிடப்பட வேண்டும். அவரது தொகுதியிலிருந்து பிற தொகுதிக்கு நட்சத்திர பிரச்சாகராக அவர் செல்கின்றபோது, அவர் தொகுதியிலிருந்து பிற தொகுதிக்கு பயணம் செய்வதன் மீதான செலவினம், விதிவிலக்களிக்கப்பட்ட வகைபாட்டின் கீழ் கணக்கிடப்படும். அதே போன்று அவரது சொந்த பிரச்சாரத்திற்காக, பிற தொகுதியிலிருந்து அவரது சொந்த தொகுதிக்கு திரும்புதலுக்கான பயணச் செலவுக்கும் விலக்களிக்கப்படும். ஆனால் அவரது தொகுதியை அடைந்த பிறகு அத் தொகுதிக்குள் அவருடைய பயணம் மீதான செலவினம் அவரது கணக்கில் காட்டப்பட வேண்டும். மேற்குறிப்பிடப்பட்டுள்ள வழிவகைகளில் செய்யப்படும் ஏனைய யாதொரு மாற்றம், 77(1) ஆம் பிரிவின் முக்கிய நோக்கத்தை சிதைத்துவிடும். இடைத்தேர்தலில், அரசியல் கட்சி ஒன்று, நட்சத்திர பேச்சாளராக அதன் வேட்பாளரின் பெயரை சேர்ப்பதன் வாயிலாக அவரது தொகுதிக்குள் யாதொரு போக்குவரத்து முறையைப் பயன்படுத்தி, அவர் பயணம் செய்வதற்கும் அதனைக் கணக்கில் காட்டாமல் இருப்பதற்கும் அவருக்கு உரிமை அளிக்கும் என்பதும் இதனால் தெளிவாகிறது.

## **உத்தரவு தொடர் எண்.63**

தலைமைச் செயலாளர்/அனைத்து மாநிலங்களின்/மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமை தேர்தல் அலுவலர்களுக்கு எழுதப்பட்ட **31.10.2008** ஆம் நாளிட்ட தேர்தல் ஆணையத்தின் 437/6/INST/2008–CC/ BE எண்ணிட்ட கடிதம்.

**பொருள் : 1951** ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 77 பிரிவு **(1)** ன் கீழ், பகுதி (a) யில் அளிக்கப்பட்டுள்ள விளக்கத்தின்படி அரசியல் கட்சி பிரசாரகர்கள் சாலைபோக்குவரத்து வசதிகளால் பயன்படுத்துதல் – தொடர்பாக.

தேர்தல் ஆணையத்தின் **16/10/2007** ஆம் நாளிட்ட 437/6/2007/VOL–IV/ PLN-III மற்றும் **7/10/2008** ஆம் நாளிட்ட **3/7/2008**/S-III ஆம் எண்களுள்ள கடிதங்களுகிணங்க அணிவகுப்பில் வாகனங்களைப் பயன்படுத்துதல், வாகனங்களில் கொடிகள் மற்றும் ஒட்டுவில்லைகள் (Stickers) பயன்படுத்துதல் குறித்த வழிகாட்டுக்குறிப்புகள் ஏற்கனவே தேர்தல் ஆணையத்தால் மாற்றியமைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கமாறு நான் பணிக்கப்பட்டுள்ளேன். பின்னர் மேலே தெரிவிக்கப்பட்ட முந்தைய உத்தரவு, **1951** ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 77 பிரிவு **(1)** ன் கீழ், பகுதி (a) யில் அளிக்கப்பட்டுள்ள விளக்கத்தினைப் பயன்கொள்கிற தலைவரின் (தலைவர்கள்) வாகன (Caravan) வரிசையில் அனுமதிக்கப்படுகிற வாகனங்களின் எண்ணிக்கை, குறித்த முந்தைய உத்தரவு, இந்த உத்தரவின் மூலம் மாற்றியமைக்கப்பட்டு, ரத்து செய்யப்படுகிறது.

(i) அணிவகுப்பில் செல்கிற வாகனங்களின் எண்ணிக்கை குறித்த கட்டுப்பாடு விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளது. இருப்பினும் அணிவகுப்பில் செல்கிற வாகனங்கள் பின்னர் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைக்கு உட்பட்டு இருக்க வேண்டும்.

(ii) **1951** ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 77 பிரிவு **(1)** ன் கீழ், பகுதி (a) யில் அளிக்கப்பட்டுள்ள விளக்கத்தில், மாநிலம் முழுவதிலும் தேர்தல் பிரச்சாரத்திற்காக ஏதேனும் தலைவரால் அதே வாகனம் பயன்படுத்தப்பட்டிருந்தால் அல்லது அத்தகைய கட்சி தலைவர்கள் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு வாகனங்களை பயன்படுத்தியிருந்தால் அதனைக் கருத்தில் கொள்ளாமல் தலைமைத தேர்தல் அதிகாரியால் அனுமதி வழங்கப்படும். தொடர்புடைய நபரின் பெயரில் அனுமதி வழங்கப்பட்டும் அவர் (ஆண்/பெண்) அதை எந்தப் பகுதியில் பயன்படுத்தினாலும் அந்த வாகனத்தின் முன்பக்க கண்ணாடியில் நன்கு தெரியும் விதத்தில் ஒட்டி வைக்க வேண்டும். தலைமைத் தேர்தல் அதிகாரி அவ்வாறு வழங்குகிற அனுமதிகள், வேட்பாளர்களுக்காக மாவட்ட தேர்தல் அதிகாரிகள்/ தேர்தல் நடத்தும் அதிகாரிகள்

வேட்பாளர்களுக்கு வழங்குகிற அனுமதிச் சீட்டகளைப் போலன்றி வெவ்வேறு நிறங்களைக் கொண்டிருக்கும்.

(iii) மேலே (ii) இனத்தில் அவ்வாறு அனுமதிக்கப்பட்ட வாகனத்தை (ii) இனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தலைவர் நீங்கலாக, வேறு ஏதேனும் ஒருவர் அதனைப் பயன்படுத்தினால் நேர்வில், அந்த செலவில் 50% அந்தத் தொகுதியிலிருந்து போட்டியிடுகிற அக் கட்சி வேட்பாளரின் செலவில் பதிவு செய்யப்படும்.

(iv) மாநிலங்கள் முழுவதிலும் பிரச்சாரம் செய்வதற்காக அரசியல் கட்சி ஒன்றின் காட்சி பேரூந்துகளை (வீடியோவேன்) பிரச்சாரத்திற்காகப் பயன்படுத்த அனுமதி அளிப்பதற்கு முன்னர் பயன்படுத்தினால் அத்தகைய வாகனத்தின் பயன்பாடு மோட்டார் வாகனச்சட்டத்திற்கு இணக்கமாக உள்ளதா என்பதை தலைமைத் தேர்தல் அதிகாரி உறுதி செய்யவேண்டும். இந்த வகையில், அலகாபாத் உயர்நீதி மன்றத்தின் 3648 (MB) /2006 என்னிட்ட நீதிப்பேராணை மனுவில் வழங்கப்பட்ட 23.6.2006 மற்றும் 14.0.2007 ஆகிய நாட்களிட்ட தீர்ப்பின் மீது கவனம் ஈர்க்கப்படுகிறது. அதன் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அத்தகைய வாகனங்கள் குறித்து செய்யப்பட்ட செலவு அந்த பேரூந்து / வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள / தொகுதிகளிலுள்ள கட்சியின் போட்டியிடுகிற வேட்பாளரின் செலவில் வீதாச்சார முறையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதா என்பதை அந்தந்த மாவட்ட தேர்தல் அதிகாரிகள் உறுதிசெய்யவேண்டும்.

இதனை அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் தேர்தல் தொடர்புடைய அனைத்து தேர்தல் சார்ந்த அலுவலர்கள் ஆகியோரின் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டு வரவேண்டும்.

.

## உத்தரவு தொடர் எண்.64

தலைமைச் செயலாளர் / அனைத்து மாநிலங்களின் மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமைத் தேர்தல் அலுவலர்களுக்கு எழுதப்பட்ட 28/03/2009 ஆம் நாளிட்ட தேர்தல் ஆணையத்தின் 437/6/INST/2008-CC & BE எண் கடிதம்.

**பொருள்: தேர்தலின்போது வாகனங்களை தவறாகப் பயன்படுத்துவதைத் தடுத்தல் – தொடர்பாக.**

ஐயா,

தேர்தல் ஆணையத்தின் 23/11/2007 ஆம் நாளிட்ட 437/6/2006–PLN-III ஆணையின் பொருளைக்குறித்து 31/10/2008 ஆம் நாளிட்ட 437/6/INST/2008-CC & BE கடித எண்ணில் 1951ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 71 பிரிவு (1)ன் கீழ், பகுதி (a) யில் அளிக்கப்பட்டுள்ள விளக்கத்தின்படி, அரசியல் தலைவர்களுக்கு அணிவகுப்பில் செல்கிற வாகனங்களின் எண்ணிக்கை குறித்த கட்டுப்பாடு திரும்பப்பெறப்பட்டுள்ளது. மேல் குறிப்பிட்ட 23/11/2007 ஆம் நாளிட்ட ஆணையத்தின் உத்தரவில் பகுதி மாற்றம் செய்து, பின் வரும் வழிகாட்டிக் குறிப்புகளை ஆணையம் வழங்குகிறது.

2. ஒரு அணிவகுப்பில் செல்லும் வாகனங்களின் எண்ணிக்கைக்கு எந்த வித கட்டுப்பாடும் இல்லை என்று தற்போது தெளிவுரை வழங்கப்படுகிறது இப்பொருள் தொடர்புடைய அனைவருக்கும் இது பொருந்தும்.

3. அனைத்து அரசியல் கட்சிகள் / வேட்பாளர்கள் / அனைத்து தேர்தல் தொடர்புடைய அதிகாரிகள் ஆகியோர் இதனைக் கடைபிடிக்க வேண்டி அவர்களின் கவனத்திற்கு உடனடியாக இதனைக் கொண்டு செல்லலாம்.

## உத்தரவு தொடர் எண்.65

தலைமைத் செயலாளர் / அனைத்து மாநிலங்களின் / மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமைத் தேர்தல் அலுவலர்களுக்கு எழுதப்பட்ட 09/04/2009 ஆம் நாளிட்ட தேர்தல் ஆணையத்தின் 437/6/INST/2008-CC & BE எண் கடிதம்.

**பொருள்:** மாதிரித் தேர்தல் நடத்தை விதிகள் பொருந்தும் நேர்வுகள் – அரசியல் கட்சிகளால் ஹெலிகாப்டர் / வானூர்தி பயன்படுத்துதல் தொடர்பாக.

பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான ஹெலிகாப்டர் / அரசு வானூர்திகளின் பயன்படுத்தல் தொடர்பாக விரிவான அறிவுறுத்தல்களை ஆணையம் ஏற்கனவே வழங்கியுள்ளதைக் குறிப்பிடுமாறு நான் பணிக்கப்பட்டுள்ளேன். தற்போதைய உத்தரவின் படி, தேர்தல் நடைமுறைகளின் போது, அமைச்சர்கள் மற்றும் முதலமைச்சர் உட்பட அரசியல் தலைவர்கள் வானூர்திகளைப் பயன்படத்ததற்கு முழுவதும் தடைவிழிக்கப்பட்டுள்ளது. பதவியிலுள்ள பிரதமருக்கு மட்டும் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு உட்பட பல்வேறு காரணங்களுக்காக இத்தகைய கட்டுப்பாடுகளை தளர்த்துமாறு பல முதலமைச்சர்களிடமிருந்து கோரிக்கை பெறப்பட்டது.

ஆணையம், இப் பொருள்பற்றி விரிவாக ஆராய்ந்து, உரிய தரப்பினரிடமிருந்து மேற்கொண்டும் தகவல்களைப் பெற்றது தொடர்புடைய அனைத்து அம்சங்களையும் பரிசீலித்த பின்னர் இப் பொருண்மையில் நடைமுறையிலுள்ள உத்தரவுகளே தொடரும் என்றும், எந்த ஒரு காரணத்திற்காகவும் இந்த விவகாரத்தில் தளர்வு அளிக்கப்படமாட்டாது என்றும் முடிவெடுத்துள்ளது.

இருப்பினும், ஆணையத்தின் தற்போதைய நெறிமுறைகள் முதலமைச்சர் உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் தனியார் விமானத்தைப் பயன்படுத்துவதைத் தடை செய்யவில்லை. அதற்கிணங்க முதலமைச்சர்கள் உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் கேட்டுக்கொண்டால் தனியார் விமானங்களை வாடகைக்கு எடுத்து அவர்களுடைய அரசியல் பிரச்சாரத்திற்காகவும் பிற தேர்தல் நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தலாம் என்பதை ஆணையம் தெளிவுபடுத்துகிறது.

## உத்தரவு தொடர் எண்.66

தலைமைச் செயலாளர் / அனைத்து மாநிலங்களின் / மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமை தேர்தல் அலுவலர்களுக்கு எழுதப்பட்ட 25/10/2009 ஆம் நாளிட்ட 437/6/INST/2008-CC & BE எண் கடிதம்.

**பொருள்:** தேர்தல் பிரச்சாரத்தின்போது வாகனங்களைப் பயன்படுத்துதல் –பாதுகாப்பு காரணங்களுக்காக குண்டுதுளைக்காத வாகனங்கள் பயன்பாடு – தொடர்பாக.

மேற்சொன்ன பொருள் தொடர்பான தேர்தல் ஆணையத்தின் 24/10/2007 ஆம் நாளிட்ட 437/6/2006–PLN-III கடிதத்தை காண்க. மேற்சொன்ன கடிதத்தில் பாதுகாப்பைக்கருத்தில் கொண்டு Z–பிளஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டு குண்டு துளைக்காத வாகனம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நபர்களைப் பொறுத்த நேர்வில், மாதிரி நடத்தை விதி நடைமுறையில் இருக்கிற காலத்தில் அவ் வாகனத்தை பயன்படுத்த அனுமதிக்கப்படுவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகைய குண்டு துளைக்காத வாகனங்களை இயக்குவதற்கான செலவு அரசால் ஏற்கப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப் பொருள் மீது ஆணையம் மறுபரிசீலனை செய்துள்ளது. அத்தகைய மறுபரிசீலனையின் பேரில், பாதுகாப்பு காரணங்களுக்காக, குண்டு துளைக்காத வாகனங்களை அரசியல் தலைவர் பயன்படும் வகை செய்கிறபோது, மாதிரி நடத்தை விதி செயலில் இருக்கும் போது அத்தகைய வாகனங்களை அவர் அலுவல் சாராத நோக்கங்களுக்காக பயன்படுத்தினால் அதற்கான செலவை தொடர்புடைய நபர் ஏற்கவேண்டுமென்றும் 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச்சட்டம் 77(1) பிரிவின் (1) மற்றும் (2) ஆம் விளக்கத்தின் படி அந்த நபர் அரசியல் கட்சியின் ஒரு தலைவராக இருந்தால், மேற்சொன்ன 77(1) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பயணத்திற்கான செலவை, தொடர்புடைய அரசியல் கட்சி ஏற்க வேண்டும். எந்த ஒரு நேர்விலும் இத்தகைய செலவினத்தை அரசு ஏற்காது.

இந்த உத்தரவுகளை அனைத்து தேர்தல் அதிகாரிகள் மற்றும் மாநிலத்திலுள்ள தொடர்புடைய பிற அதிகாரிகள், அனைத்து அரசியல் கட்சிகளின் மாநில பிரிவுகள் உட்பட உங்களுடைய மாநிலத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சியினர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு வரலாம்.

## உத்தரவு தொடர் எண்.67

தலைமைச் செலாளர் / அனைத்து மாநிலங்களின் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமைத் தேர்தல் அலுவலர்களுக்கு எழுதப்பட்ட **05.10.2010**ஆம் நாளிட்ட தேர்தல் ஆணையத்தின் **437/6**/INST/2010-CC & BE எண்ணிட்ட கடிதம்.

**பொருள்:** தேர்தலின்போது வாகனங்களைத் தவறாக பயன்படுத்துதலைத் தடுத்தல் –தொடர்பாக.

தேர்தல் ஆணையத்தின் **28/03/2009**ஆம் நாளிட்ட கடிதம் எண் **437/6**/INST/2008-CC & BE யின் பொருளின் மீதான தற்போதைய அறிவுறுத்தல்களில் நடத்தை விதி நடைமுறையில் உள்ளபோது, அணிவகுப்பில் செல்லும் வாகனங்களின் எண்ணிக்கைக்கு எவ்விதக் கட்டுப்பாடும் இல்லை என்று ஆணையம் தீர்மானித்து அறிவித்திருந்ததைக் காண்பதற்கு நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

ஜம்மு மற்றும் காஷ்மீரின் ஸ்ரீநகரில், **2010** ஜுன் மாதத்தில் நடந்த தலைமைத் தேர்தல் அதிகாரிகளின் மாநாட்டில், மேற்குறிப்பிட்ட தீர்மானத்தை மறுபரிசீலனை செய்து நடத்தை விதி அமலில் உள்ளபோது, அனிவகுப்பில் செல்லும் வாகனங்களுக்கு ஏதேனும் சில கட்டுப்பாடுகளை விதிக்குமாறு கோரப்பட்டது. அம்மாநாட்டில் நடைபெற்ற விவாதங்களின் அடிப்படையில் அவ்விசயம் ஆணையத்தால் மறுபரிசீலனை செய்யப்பட்டது. நடத்தை விதி அமலில் உள்ளபோது, அணிவகுப்பில் செல்லும் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சியினரின் வாகனங்கள், வேட்பாளர்கள் அரசியல் கட்சி தலைவர்கள் ஆகியோர்களின் பாதுகாப்பு வாகனங்கள் முதலியன ஏதுமிருந்தால், அதைத் தவிர்த்து பத்து வாகனங்களுக்கு மிகையாக அந்த அணிவகுப்பில் இருக்கக் கூடாது. மாவட்டத் தேர்தல் அதிகாரி சீரான முறையில் கண்காணித்தலை உறுதி செய்யும் பொருட்டு, அணிவகுப்பில் செல்லவிருக்கிற வாகனங்களின் குறித்த எண்ணிக்கை மற்றும் அதன் அடையாள விவரங்களை முன் கூட்டியே ஏற்பாட்டாளர்களிடமிருந்து பெறலாம். தொடர்புடைய அனைவரின் பார்வைக்கும் இந்த அறிவிப்பினைக் கொண்டுவந்து இதனை கடுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

## உத்தரவு தொடர் எண்.68

அசாம், மேற்கு வங்கம், கேரளா, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி ஆகியவற்றின் தலைமைத் தேர்தல் அலுவலர்களுக்கு எழுதப்பட்ட **23/03/2011**ஆம் நாளிட்ட தேர்தல் ஆணையத்தின் **464**/INST/2011-EPS எண் கடிதம்.

**பொருள்:** சட்டமன்றத்திற்கான பொதுத் தேர்தல்கள் வேட்பாளர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஆகியோர் பிரச்சாரத்திற்கு பயன்படுத்தும் ஹெலிகாப்டர்கள் – உரிய பதிவேடுகளை முறையாகப் பேணுதல் **–** தொடர்பாக.

தேர்தல் காலங்களில், வேட்பாளர்கள் அரசியல் கட்சிகளின் நட்சத்திர பிரசாரர்கள்(ம) பிற அரசியல் பிரமுகர்கள் ஆகியோர் தேர்தல் பிரச்சாரத்திற்காகவும், பிற காரணங்களுக்காகவும் ஹெலிகாப்டர் / வானூர்திகளை பயன்படுத்தக் கூடும் என்பதையும் பல்வேறு மாவட்டங்களில் அவர்கள் தரையிறங்கக் கூடும் என்பதையும் தெரிவிப்பதற்கு பணிக்கப்பட்டுள்ளேன். இது குறித்து அரசியல் கட்சியினர் திட்டமிட்ட பயண விவரம் (ம) பயணம் செய்யும் நபர்கள் பற்றிய விவரங்கள் (ம) ஹெலிகாப்டர் / வானூர்திகளில் ஏற்றிச்செல்லப் பட வேண்டிய பொருட்கள் பற்றிய விவரங்களை மூன்று நாட்களுக்கு முன்னதாகவே தெரிவிக்க வேண்டும் மாவட்ட நிருவாகம் / மாவட்டத் தேர்தல் அலுவலர்கள் ஓர் அட்டவணை புத்தகத்தை பராமரித்து அவர்களின் மாவட்டத்தில் ஹெலிகாப்டர்கள் / வானூர்தி ஆகியவற்றின் தரையிறங்கிய (ம) மேலேழும்பிய விவரங்கள் (ம) அவைகள் எதற்காக தரையிறங்கின (ம) குறிப்பிட்ட அந்த விமானம் / ஹெலிகாப்டரில் இருந்த நபர்கள் ஆகியவற்றின் விவரங்களையும் அந்த வானூர்தி / ஹெலிகாப்டர் தறையிரங்க அனுமதி பெற்றதா என்பதை குறித்தும் பதிவு செய்ய வேண்டும் என்று ஆணையம் மேலும் உத்தரவிட்டுள்ளது. மாவட்டத் தேர்தல் அலுவலர்கள், அத்தகைய ஹெலிகாப்டர்கள் / வானூர்திகளின் வருகை (ம) புறப்பாடு பற்றிய தினசரி அறிக்கையை தொடர்புடைய தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு அனுப்பி வைப்பதுடன், அதன் நகலை ஆணையத்திற்கும் அனுப்பிவைக்க வேண்டும். அனைத்து மாவட்டத் தேர்தல்அதிகாரிகளும் இதனை நடைமுறைபடுத்துவதற்காக அவர்களின் கவனத்திற்கு இதைத் தாங்கள் கொண்டு வரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## உத்தரவு தொடர் எண்.69

அசாம், மேற்கு வங்கம், கேரளா, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி ஆகியவற்றில் தலைமைத் தேர்தல் அலுவலர்களுக்கு எழுதப்பட்ட **23/03/2011**ஆம் நாளிட்ட தேர்தல் ஆணையத்தின் **464**/INST/2011-EPS எண் கொண்ட கடிதம்.

**பொருள்:** மேற்குறிப்பிட்ட மாநிலங்களுக்கான சட்டமன்றங்களின் பொதுத் தேர்தல்கள்– தேர்தல்களில் கூட்டணி அல்லது இடப்பங்கீடு கொண்டுள்ள கட்சியினரின் கட்சிக் கொடிகளை பறக்கவிடுவதற்கான அனுமதி – தொடர்பாக.

பீகாருக்கு ஆணையத்தின் அண்மை வருகையின் போது, அரசியல் கட்சிகள் தங்கள் வேட்பாளர்களின் பிரச்சார வாகனங்களில் தங்களுடன் கூட்டணி அல்லது இடப்பங்கீடு கொண்டுள்ள அத்தகைய கட்சியினரின் கொடிகளையும் பொருத்திக்கொள்ள அனுமதிக்குமாறு ஆணையத்திடம் கேட்டுக் கொண்டனர் என்பதைத் தெரிவிக்குமாறு நான் பணிக்கப்பட்டுளேன். ஆணையத்தால் இப்பொருள் பரிசீலனை செய்யப்பட்டது. ஏதேனும் அரசியல் கட்சி (கட்சிகள்) தேர்தல் கூட்டணி அல்லது இடப்பங்கீடு வைத்திருந்தால், அவர் அதற்கான முழு விவரங்களுடன் விண்ணப்பித்தால் செய்தால், பிரச்சார வாகனங்களில் தாங்கள் யாருடன் அத்தகைய கூட்டணி / இடப்பங்கீடு வைத்துள்ளாரோ அத்தகைய கட்சியினரின் கொடிகளை பறக்கவிட அனுமதி வழங்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், வாகனங்களில் கொடிகளின் பயன்பாடு என்பது மோட்டார் வாகனச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றின்படியே அமையும். இது அனைத்து அரசியல் கட்சியினர் உட்பட தொடர்புடைய அனைவரின் கவனத்திற்கும் கொண்டு வரப்படல் வேண்டும்.

## உத்தரவு தொடர் எண்.70

அசாம், மேற்கு வங்கம், கேரளா, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி ஆகியவற்றில் தலைமைத் தேர்தல் அலுவலர்களுக்கு எழுதப்பட்ட **23/03/2011**ஆம் நாளிட்ட தேர்தல் ஆணையத்தின் **464**/INST/2011-EPS எண் கொண்ட கடிதம்.

**பொருள்:** மாநிலங்களுக்கான சட்டமன்றப் பொதுத் தேர்தல்கள் – பரப்புகைப் பொருட்கள் போக்குவரத்திற்கு வாகன அனுமதிக்கான அரசியல் கட்சியினரின் கோரிக்கை – தொடர்பாக.

அரசியல் கட்சி மாநிலத்தில் உள்ள தங்களின் பல்வேறு கட்சி அலுவலகங்களுக்கு தங்களின் பரப்புகைப் பொருட்களை விநியோகம் செய்வதற்கு, வாகன அனுமதி வழங்கும்படி தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் வேண்டுகோள் விடுத்தால், தலைமைத் தேர்தல் அதிகாரி அத்தகைய வாகனங்களுக்கு அனுமதி வழங்கலாமென்று ஆணையம் தீர்மானித்துள்ளது. இருப்பினும், தொடர்புடைய அரசியல் கட்சி (விண்ணப்பதாரர்) மாவட்டத்தின் பெயர், வரைபடம் மற்றும் மேற்குறிப்பிட்ட பயன்பாட்டிற்கு வாகனம் தேவைப்படும் நாள்கள் ஆகியவற்றை குறிப்பிட வேண்டும். அத்தகைய வாகனங்களுக்கு தலைமைத் தேர்த்ல் அதிகாரி அனுமதி வழங்குவார், எனினும் அத்தகைய வாகனங்களும் சாதாரண பரிசோதனைக்கு உட்பட்டவை மற்றும் அவைகளை தேர்தல் பிரச்சாரத்திற்கு பயன்படுத்துதல் கூடாது. வாகன அனுமதி கோரிய அத்தகைய வாகனங்களுக்கான செலவினம் அக்கட்சியின் சட்டமன்றத் தொகுதிகளின் வேட்பாளர்களால் சமமான விகிதத்தில் பகிர்ந்து கொள்ப்பட வேண்டும்.

## உத்தரவு தொடர் எண்.71

அசாம், மேற்கு வங்கம், கேரளா, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி ஆகியவற்றில் தலைமைத் தேர்தல் அலுவலர்களுக்கு எழுதப்பட்ட 23/03/2011ஆம் நாளிட்ட தேர்தல் ஆணையத்தின் 464/INST/2011-EPS எண் கொண்ட கடிதம்.

**பொருள்:** மாநில சட்டமன்றத்திற்கான பொதுத் தேர்தல்கள் – 2011 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் மாவட்டப் பொறுப்பாளர்களுக்கான வாகன அனுமதி – தொடர்பாக.

எந்த அரசியல் கட்சியாவது, தேர்தல் பயன்பாட்டிற்காக தங்களின் மாவட்ட அளவிலான பொறுப்பாளர்கள் / தலைவர்கள் ( நட்சத்திர பிரச்சாரகர்கள் தவிர) மாவட்டத்திற்குள் உள்ள பல சட்டமன்றத் தொகுதிகளுக்கு தேர்தலின் காரணமாக பயணம் செய்வதற்கு வாகனங்களின் அனுமதி கோரி விண்ணப்பித்தால் தேவைப்படும் அனுமதி மாட்டம் தொடர்புடைய, மாவட்ட தேர்தல் அதிகாரியால் வழங்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட பணிக்கப்பட்டுள்ளேன், அது போன்ற Å்ழலில் நபரின் பெயரில், வாகன பதிவு எண்ணையும் குறிப்பிட்டு அனுமதிக்கப்படும். இந்த வாகனத்திற்கான செலவினம் அவர்கள் பயணம் செய்த மாவட்டத்தின் கட்சியின் வேட்பாளர் (வேட்பாளர்கள்) செலவுகளில் பதிவு / பகிர்வு செய்யப்படும். இந்த அனுமதியை பிற மாவட்டங்களில் பயணம் செய்வதற்குப் பயன்படுத்தக்கூடாது.

அரசியல் தலைவரின் பெயர், வாகனத்தின் எண் (பதிவு) மற்றும் வழங்கப்படும் கால அளவு ஆகியவற்றையும் குறிப்பிட்டு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று அவ் உத்தரவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அனுமதியானது வேட்பாளர்கள் (ம) நட்சத்திர பிரச்சாரர்களுக்கு அளிக்கப்படும் அனுமதியை வேறுபடுத்திக்காட்டும் வகையில், வண்ண காகிதத்தினால் எளிதாக அடையாளம் காணும் வகையில் வழங்கப்படல் வேண்டும். வாகனத்தின் சான்றொப்பமிடப்பட்ட அனுமதியின் நகல், கண்ணாடியில் நன்கு தெரியும் வகையில் ஒட்டப்பட்டிருப்பதுடன், அதன்மூலப்படி காவல்துறை அல்லது பிற அதிகாரிகளின் பரிசோதனைக்காக உரியவரிடம் இருக்க வேண்டும். இது குறித்து கண்காணிப்புக் குழுக்களுக்கும் தெரியப்படுத்துதல் வேண்டும்.

## உத்தரவு தொடர் எண்.72

பீகார் தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட 12.10.2015 ஆம் நாளிட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் 437/6/1/ECI/INST/ 2017 – CCS ஆம் எண் கடிதம் மற்றும் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் தகவலுக்காக நகல் மேலொப்பத்துடன் அனுப்பப்பட்டுள்ளது.

பொருள்;-2015 ஆம் ஆண்டு பீகார் சட்டமன்ற தொகுதிக்கான பொது தேர்தல் – அரசியல் கட்சிகளால் வானூர்தியை மாற்றுவதற்கான அனுமதி – தொடர்பாக.

அரசியல் கட்சிகள், அழைப்பு குறியீடுகளை வலியுறுத்தாமல் வானூர்தியை பயன்படுத்த அனுமதிப்பது, அதே சமயம், அரசியல் கட்சிகளுக்கு எப்போதும் அளிக்கப்படும் தனி அல்லது இரண்டு விசைப்பொறியுடன் கூடிய வானூர்தியின் வகை குறித்த விவரங்கள், சில நேரங்களில், ஆணையத்தால், பல்வேறு காரணங்களால் அனுமதிக்கப்பட்ட வானூர்தி கிடைக்கப்பெறாதது போன்ற கோரிக்கையை தெரிவிப்பதற்கு நான் பணிக்கப்பட்டுள்ளேன். இந்த விவகாரம் குறித்த தெளிவுரை, சிவில் போக்குவரத்து தலைமை இயக்குநரிடமிருந்து கோரப்பட்டு, அவரிடமிருந்து பெறப்பட்ட தெளிவுரையின் நகல், தேவையான நடவடிக்கைக்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**இணைப்பு**

சிவில் விமான போக்குவரத்து அமைச்சகத்தின் செயலாளருக்கு அனுப்பப்பட்ட 08.10.2015 ஆம் நாளிட்ட Av.14015/GEN/2008- AT-1ஆம் எண் சிவில் விமானபோக்குவரத்து அமைச்சகத்தின் கடிதம்.

**பொருள்:- ஹெலிகாப்டர்/வானூர்தியைப் பயன்படுத்துவதற்கான அனுமதி**

மேற்சொன்ன பொருண்மை மீது 08.10.2015 ஆம் நாளிட்ட JS(BS)/EC/2015 நேர்முக கடித எண்ணைக் காண்க.

2.இது தொடர்பாக, சிவில் விமானப் போக்குவரத்து தலைமை இயக்குநரிடமிருந்து ஏற்பிசைவுடன் கூடிய அனுமதியை பெற்ற அட்டவணையிடப்படாத இயக்கும் அனுமதி பெற்றவர்கள், அவர்களின் வானூர்தி/ஹெலிகாப்டர்களுக்கு அனுமதிக்கு மேலொப்பம் பெறத் தேவையில்லை. எனினும், அடையாளம் காணும் நோக்கத்திற்காக, தொடர்பு சமிக்ஞைகளாக, வானூர்தி/ஹெலிகாப்டரின் பதிவு செய்ததை குறிப்பிடுகிற அருகாமையிலுள்ள இந்திய வானூர்தி நிலைய ஆணையம்/இந்திய விமானப்படை/இந்தியக் கடற்படையிடம் அவர்களின் விமானப் பயணத் திட்டங்கள் போன்றவற்றை அளிக்குமாறு அவர்கள் கேட்டுக்கொள்ளப்படலாம். மேலும், தனியாருக்கு சொந்தமான/மாநில அரசு வானூர்தியை, முதலமைச்சர்கள் மற்றும் ஏனைய உயர் பிரமுகர்களை அழைத்துச் செல்வதற்காக, 02/1981 வானூர்தி பாதுகாப்பு சுற்ற்றிக்கை எண்ணில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டிக்குறிப்புகளை பின்பற்றுவதற்கு இயக்குபவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். இது குறித்து தலைமை தேர்தல் ஆணையரின் கவனத்திற்கு கொண்டு செல்லலாம்.

## E.பிரச்சாரம்

## உத்தரவு தொடர் எண்.73

தலைமைச் செயலாளர் / அனைத்து மாநிலங்களின் / மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமைத் தேர்தல் அலுவலர்களுக்கு எழுதப்பட்ட 26/12/2000 ஆம் நாளிட்ட தேர்தல் ஆணையத்தின் 3/8/2000 J.S.II எண்ணிட்ட கடிதம்.

**பொருள்:** தேர்தல் பிரச்சாரத்திற்காக ஒலிப்பெருக்கிகளைப் பயன்படுத்துதல் – தொகுக்கப்பட்ட உத்தரவுகள்.

அனைத்து அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் அவர்களுடைய தொண்டர்கள், ஆதரவாளர்கள் மற்றும் அனுதாபிகள் தங்களுடைய தேர்தல் பிரச்சாரத்திற்காக ஒலிப்பெருக்கிகளைப் பயன்படுத்துகின்றனர். இந்த ஒலிப்பெருக்கிகள் அரசியல் கட்சிக்கூட்டம் நடைபெறுகின்ற மேடைகளில் மட்டுமின்றி டிரக்குகள், டெம்போக்கள், மகிழுந்துகள், வாடகை ஊர்திகள், பேரூந்துகள் (வேன்) வான்கள் மூன்று சக்கர வாகனங்கள் சைக்கிள் ரிக்ஷாக்கள் போன்ற வாகனங்களின் மீதும் பொருத்தப்பட்டு / அவற்றின் மீது கட்டப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. பெருத்த இரைச்சல் எழுப்பும் ஒலிப்பெருக்கிகளுடன் கூடிய இந்த வாகனங்கள் அனைத்தும் சாலைகள், தெருக்கள், சந்துகள் மற்றும் கிராமம் முழுவதும் உள்ள குடியிருப்பு பகுதிகளில் வலம் வருகின்றன. இந்த ஒலி பெருக்கிகள் ஏற்படுத்துகிற இரைச்சல், ஒலியின் மாசினை ஏற்படுத்துவதுடன் பொதுமக்கள் அமைதிக்கும் ஊறு விளைவிக்கிறது. அதிகாலையிலும் நள்ளிரவிலும், நாள் முழுவதும், இந்த ஒலிப்பெருக்கிகள் ஏற்படுத்துகிற ஒலியினால் மக்களுக்கு, குறிப்பாக மாணவர்களின் அவர்கள் கல்விக்கு பெரும் இடையூறு ஏற்பட்டு அவருடைய கல்வி கடுமையாக பாதிக்கப்படுகிறது. நிறுவனங்கள், மருத்துவ மனைகள் முதலியவற்றில் அல்லது வீடுகளில் உள்ள வயது முதிர்ந்தவர்களும் இயலாதவர்களும் இதனால் கடுமையான இடையூறுக்கு ஆளாகின்றனர்.

2. ஒலிப்பெருக்கிகள் தேர்தல் பிரச்சாரத்திற்கான ஒரு சாதனமாக இருப்பதுடன் பொதுமக்களுக்குத் தகவலையும் அளிப்பதால், தேர்தல் காலத்தில் ஒலிப்பெருக்கிகள் பயன்படுத்தப்படுவதை முற்றிலுமாக நிறுத்த இயலாது, என்பதை ஆணையம் அறியும். ஆனால் அதே சமயத்தில் வேளை தவறிய நேரங்களிலும், பயன்படுத்தக்கூடாத இடங்களிலும் பெருத்த ஒலியுடன் பொதுமக்களின் அமைதிக்கு இடையூறு ஏற்படுத்தியும் நோயுற்றவர்களுக்கு குறிப்பாக மாணவர்களுக்கு இடையூறு ஏற்படுத்துகிற வகைதொகையற்ற மற்றும் தடையற்ற ஒலிப்பெருக்கிப் பயன்பாட்டை அனுமதிக்க இயலாது. நியாயமான சில கட்டுப்பாடுகள் இன்றியமையாதவையாகும்.

**3.** இந்த விவகாரத்தின் அனைத்து அம்சங்களையும் கருதிப்பார்த்த பின்னர், தேர்தல் ஆணையம் அரசமைப்புச் சட்டத்தின் **324**ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும் இது தொடர்பாக ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், தேர்தல் ஆணையத்தின் முந்தைய உத்தரவுகளை விலக்கிக் கொண்டு அதற்கு பதிலாக இனி வரும் காலத்தில் அனைத்துத் தேர்தல்களின் போதும் ஒலிப்பெருக்கிகளின் பயன்பாடு, பின்வருமாறு கடுமையாக முறைப்படுத்தப்படும் என்று இதன்மூலம் உத்தரவிடப்பட்டுள்ளது.

(i) தேர்தல் அறிவிப்பு வெளியிடப்படுகிற நாளிலிருந்து தொடங்கி தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படுகிற நாள் வரையிலான தேர்தல் காலம் முழுவதிலும் தேர்தல் பிரச்சாரத்திற்காக பொதுக்கூட்டங்களில் நிலையான ஓர் இடத்தில் பொருத்தப்பட்டு பயன்படுத்தப்படுகிற அல்லது வாகனங்களில் பொருத்தப்பட்ட ஒலிப்பெருக்கிகள் ஊரகப்பகுதிகளின் அதாவது மாநகராட்சி அல்லது நகராட்சி எல்லைகளுக்கு வெளியேயுள்ள பகுதிகளில் காலை **6** மணி முதல் இரவு **11** மணி வரையிலும் பிற பகுதிகளில் அதாவது மாநகராட்சிக்குட்பட்ட அல்லது நகராட்சி எல்லைக்குட்பட்ட வருகிற பகுதிகளில் காலை **6** மணி முதல் இரவு **10** மணி வரையிலும் மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும். **(**இந்தப் பத்தி நீக்கப்பட்டு, தேர்தல் ஆணையத்தின் **26/9/2005** ஆம் நாளிட்ட **3/8/2005/**JS-II எண் கடிதத்தின் **184**ஆம் இனத்தில் பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது.)

**3(i)** தேர்தல் பிரச்சாரத்திற்காக பொதுக்கூட்டங்களில் நிலையான ஓர் இடத்தில் பொருத்தப்பட்டு பயன்படுத்தப்படுகிற அல்லது ஏதேனும் வாகனங்களில் பொருத்தப்பட்ட ஒலிப்பெருக்கிகள், அல்லது இவ்வகையிலான பிற சாதனம் இரவு **10** மணிக்கும் காலை **6** மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் பயன்படுத்தப்படக்கூடாது.

(ii) பொதுப்பிரச்சாரத்திற்காக அல்லது பொதுக்கூட்டங்களுக்காக அல்லது ஊர்வலத்திற்காக மற்றும் நகர்ந்து செல்கிற வாகனங்களில் அல்லது வேறுவகையிலான அனைத்து ஒலிப்பெருக்கிகளும் அவை மேலே இப்பகுதி குறிப்பிடப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட நேரங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும், அதற்கு மேற்பட்ட காலஅளவில் பயன்படுத்தக்கூடாது.

(iii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தை மீறி பயன்படுத்தப்படுகிற அனைத்து ஒலிப்பெருக்கிகளும், உரிய துணை சாதனத்துடன் பறிமுதல் செய்யப்படும்.

(iv) டிரக்குகள், டெம்போக்கள், கார்கள், டாக்ஸிகள், வேன்கள், மூன்று சக்கர ஸ்கூட்டர்கள், சைக்கிள்ரிக்ஷாக்கள் முதலிய வாகனங்கள் மட்டுமே என்று வரையறுக்கப்படாமல், அத்தகைய வாகனங்கள் உட்படவும் ஏதேனும் வாகனங்களில் மீது பொருத்தப்பட்ட ஏதேனும் ஒலிப்பெருக்கிகளை பயன்படுத்துகிற

அனைத்து அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் மற்றும் ஏனைய பிற நபர்கள் ஒலிப்பெருக்கிகளை பயன்படுத்துவதற்கு அனுமதியளிக்கிற அதிகாரிகளிடம் அந்த வாகனங்களின் பதிவு எண்ணைத் தெரிவிக்க வேண்டும். அந்த வாகனங்களின் அத்தகைய பதிவு அடையாள வழங்குகிற அனுமதிச் சீட்டுகளில் குறிப்பிடப்படவேண்டும்.

(v) எழுத்து மூலமாக மேற்சொன்ன அனுமதியில்லாமல் பயன்படுத்தப்படுகிற ஒலிப்பெருக்கி பொருத்தப்பட்ட எந்த ஒரு வாகனமும், ஒலிப்பெருக்கி அதனுடன் இணைந்த அனைத்து சாதனத்துடன் சேர்த்து உடனடியாக பறிமுதல் செய்யப்படும்.

(vi) நகர்கின்ற வாகனத்தில் அல்லது நிலையிலே பொருத்தப்பட்ட ஒலி பெருக்கியை பயன்படுத்துகிற அங்கீகாரம் பெற்ற அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் மற்றும் பிற நபர்கள் அது பற்றி

1) அத்தொகுதியில் தேர்தல் நடத்தும் அதிகாரியுடன் மற்றும்

2) ஒலிப்பெருக்கிகளைப் பயன்படுத்துவதற்கு முன்னர் அவர்கள் பெற்ற அனுமதிகளின் முழு விவரங்களை காவல் துறைக்கு எழுத்து மூலமாகத் தெரிவிக்க வேண்டும். நடமாடும் ஒலிப்பெருக்கிகளைப் பொறுத்த நேர்வில் அவர்கள் தேர்தல் நடத்தும் அதிகாரிக்கும் உள்ளூர் காவல் துறை அதிகாரிக்கும் வாகனங்களின் பதிவு எண்களையும் தெரிவிக்க வேண்டும்.

ஏ) அதிகாரிகள் மேற்சொன்ன உத்தரவுகளை மீறி, யாரும் எவ்வித ஒலிபெருக்கியும் பயன்படுத்தக் கூடாது என்பதைக் கடுமையாக செயல்படுத்த வேண்டிய பொறுப்பு ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துவதற்கான அனுமதி வழங்கும் மாநில அரசு மற்றும் உள்ளூர் காவல் துறை அதிகாரிகளைச் சாரும் யாதொரு தேர்தல் பகுதியில், தேர்தல் முடிவுக்காக நிர்ணயிக்கப்பட்ட நேரம் முடிவடைந்த 48 மணி நேர காலத்தில் யாதொரு வகையிலும் அல்லது யாதொரு வாகனங்களின் மீது எவ்வித ஒலிப்பெருக்கிகளையும் பொருத்துவதற்கு அனுமதிக்கக் கூடாது. வாக்களித்தல் முடிவு அடைந்த பிறகும், தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு தே தர்தல் நடைமுறை முடிவு பெறும்வரை முறையான சட்டம் மற்றும் ஒழுங்கு பராமரிக்கப்பட வேண்டும். பொதுவாக ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துவது பொதுமக்களுக்குத் தொல்லைத் தருவதாக கருதப்படுகிறது மற்றும் இதன் பயன்பாடு அரசியல் தாக்கம் மிகுந்த சூழ்நிலையில் கிளர்ச்சியை உருவாக்கப்பட்டளிக்கிறது. மாவட்ட நிருவாகங்கள், தேர்தல் முடிவடையும் வரையில், முறையான சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிக்க வேண்டி மேலே கூறப்பட்ட 48 மணி நேர தடைக்காலத்திற்குப் பிறகு ஒலி பெருக்கிகளை பயன்படுத்த யாரேனும் விண்ணப்பித்தால் அதனை தேர்தல் முடியும் வரை முறையான சட்டம், ஒழுங்கைப் பராமரிப்பதன் அவசியத்தை அனுமதிப்பதற்கான கருதிப் பார்க்க வேண்டும்.

சம்பந்தப்பட்ட அனைத்து மாநில அரசு அதிகாரிகளால், ஒலி மாசுபாடு மற்றும் மக்களின் அமைதிக்கு ஊறு விளைவிப்பதைத் தடுத்து அமைதியை பாதுகாக்க, ஆணையத்தின் மேற்சொன்ன உத்தரவுகள் கட்டாயமாகச் செயல்படுத்தப்பட வேண்டும் யாதொரு விதிமீறல் இருந்தால் அது பற்றி ஆணையத்தால் மிகுந்த அக்கறையுடன் கருதிபார்க்கப்பட்டு, தவறிழைத்த அலுவலர்களுக்கு எதிராக கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த ஆணையின் நகல், அங்கீகரிக்கப்பட்ட அனைத்து தேசிய மற்றும் மாநிலக் கட்சிகளின் உள்ளூர் பிரிவுகளுக்கு ஆங்கிலம், இந்தி மற்றும் உள்ளூர் அலுவலக மொழிகளில், ஒவ்வொரு 10 வேட்பாளர்கள், அவர்களின் வேட்பு மனுவைத் தாக்கல் செய்யும் நேரத்தில், ஒப்புகையின் கீழ் கிடைக்குமாறு செய்யப்பட வேண்டும்.

இந்தக் கடிதம் வரப் பெற்றமைக்கு உடனடியாக ஒப்புகை அளிக்கப்பட வேண்டும்.

## உத்தரவு தொடர் எண்.74

தேர்தல் ஆணையம், அனைத்து மாநிலங்களின் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமைச் செயலாளர்களுக்கும், தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கும் அனுப்பியுள்ள **8.01.2007** ஆம் நாளிட்ட **464–** INST/2077- PLN-1 ஆம் எண் கடிதம்

**பொருள்** : பிரச்சாரம் முடிவடைந்த பிறகு தொகுதியில் அரசியல் தலைவர்கள் இருந்தல் மீதான கட்டுப்பாடுகள்.

**1951** ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவர் சட்டத்தின் **126** ஆம் பிரிவின் கீழ், வாக்களித்தல் முடிவு பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட **48** மணி நேரம் முடிவடையும் காலத்தில் தேர்தல் பிரச்சாரமும் முடிவடைய வேண்டும் இடைத்தேர்தல் பிரச்சாரக் காலங்களில், அந்தப் பிரச்சாரத்திற்கு உதவும் பொருட்டு, அரசியல் கட்சிகள், தேர்தல் தொகுதிக்கு வெளியிலிருந்து அவர்களின் ஆதரவாளர்களை அணி திரட்டலாம். பிரச்சாரக் காலம் முடிவடைந்த பிறகு, எவ்வித பிரச்சாரமும் அத்தொகுதிக்குள் நடைபெறக் கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு, தொகுதியின் வாக்காளர்களாக இல்லாதவர்கள் மற்று,ம் தொகுதிக்கு வெளியிலிருந்து கொண்டு வரப்பட்ட அரசியல் கட்சியினர் –கட்சி தொண்டர்கள்– பொறுப்பாளர்கள்– ஊர்வல அதிகாரிகள் போன்றவர்கள் தொடர்ந்து அத்தொகுதியில் தொடர்ந்து இருக்கக்கூடாது. ஏனெனில், தேர்தல் முடிவடைந்த பின்னும் தொடர்ந்து அவர்கள் தொகுதியில் இருந்தால் அது சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான சூழ்நிலை குறைவுபடும் உட்படுத்தலாம்.

**3.** எனவே, மாவட்ட தேர்தல் நிருவாகம், காவல் நிருவாகம், தேர்தல் பிரச்சாரம் முடிவடைந்த பிறகு, அத்தகைய அனைத்து அரசியல் சார்ந்த பொறுப்பாளர்களும் உடனடியாக பிரச்சாரம் முடிவடைந்தவுடன் தொகுதியை விட்டு வெளியேறுவதை உறுதி செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இந்த செயல்பாட்டுக்கு அனைத்து அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் முகவர்கள் இணங்கும் பொருட்டு, அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட வேண்டும்.

**4.** மேற்சொன்ன உத்தரவு மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்ய, தேர்தல் நிருவாகம்–காவல் நிருவாகம் பின்வருவனவற்றை சேர்த்து, அனைத்து தேவையான நடவடிக்கைகளை எடுக்கலாம் என்று ஆணையம் மேலும் ஆணையிடுகிறது.

## உத்தரவு தொடர் எண்.75

தேர்தல் ஆணையம், அனைத்து மாநிலங்களின்–மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமைச் செயலாளர்களுக்கும், முதன்மை தேர்தல் அதிகாரிகளுக்கும் அனுப்பியுள்ள 12.10.2007 ஆம் நாளிட்ட 464–உத்தரவு–2007–PLN–1 ஆம் எண் கடிதம்.

**பொருள்:** பிரச்சாரம் முடிவடைந்த பிறகு, தொகுதியில் உள்ள அரசியல் கட்சிகள் மீதான கட்டுப்பாடுகள்.

1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ், வாக்களித்தல் முடிவுபெறும் நேரத்திற்கு 48 மணி நேரம் முன்பாக தேர்தல் பிரச்சாரமும் முடிந்திருக்க வேண்டும்.

2. இடைத்தேர்தல் பிரச்சாரக் காலங்களில், அந்த பிரச்சாரக் காலங்களில், அந்த பிரச்சாரத்திற்கு உதவும் பொருட்டு, அரசியல் கட்சிகள், தேர்தல் தொகுதிக்கு வெளியிலிருந்து அவர்களின் ஆதரவாளர்களை அணி திரட்டலாம். பிரச்சாரம் முடிவடைந்த பிறகு, எவ்வித பிரச்சாரமும் அந்த தொகுதிக்குள் நடைபெறக் கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு, தொகுதியின் வாக்காளர்களாக இல்லாதவர்கள் மற்றும் தொகுதிக்கு வெளியிலிருந்து கொண்டவரப்பட்ட அரசியல் சார்ந்தவர்கள், கட்சித் தொண்டர்கள், ஊர்வலத்தின் பொறுப்பாளர்கள், பிரச்சாரகர்கள் போன்றோர் அத்தொகுதியில் தொடர்ந்து இருக்கக் கூடாது. ஏனெனில், தேர்தல் முடிவடைந்த பின்னும் தொடர்ந்து அவர்கள் அங்கிருப்பது சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல் தரத்தைக் குறைப்பதாக அமையும்.

3. எனவே, மாவட்ட தேர்தல் நிருவாகம் காவல் நிருவாகம், தேர்தல் பிரச்சாரம் முடிவடைந்த பிறகு, அத்தகைய அனைத்து அரசியல் சார்ந்த பொறுப்பாளர்களும் பிரச்சாரம் முடிவடைந்தவுடன் உடனடியாக தொகுதியை விட்டு வெளியேறுவதை உறுதி செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இந்த உத்திரவினை அனைத்து அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் முகவர்கள் கடைப்பிடிக்கும் பொருட்டு, அவர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட வேண்டும்.

4.மேற்சொன்ன உத்தரவு செயல்படுத்தப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு, தேர்தல் நிருவாகம், காவல் நிருவாகம் பின்வருவனவற்றை சேர்த்து, அனைத்து தேவையான நடவடிக்கைகளை எடுக்கலாம். என்று ஆணையம் மேலும் உத்தரவிடுகிறது.

1. அத்தகைய மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ள கல்யாண மண்டபங்கள்–சமுதாயக் கூடங்கள் போன்றவற்றில் வெளியாட்கள், அந்த வளாகத்தில் தங்கியுள்ளனரா, என்பதை சரிபார்க்க வேண்டும்.

**2.** தங்கும் விடுதிகள் மற்றும் விருந்தினர் மாளிகைகளில் தங்கியுள்ளவர்களின் பட்டியலைக் கண்காணித்து சரிபார்க்க வேண்டும்.

**3.** தொகுதிகக்கு வெளியிலிருந்து வரும் வாகனங்களின் போக்குவரத்தைக் கண்காணிக்க தொகுதியின் எல்லைகளில் தணிக்கைச் சாவடிகளை அமைக்க வேண்டும்.

**4.** மக்கள் / மக்கள் கூட்டத்தின் அடையாளத்தை சரிபார்க்க, அவர்கள் வாக்காளர்களா அல்லது வாக்காளர்கள் இல்லையா என்பதை அறியும் பொருட்டு, அவர்களின் அடையாளத்தை சரிபார்க்க வேண்டும்.

**5.** தொடர்புடைய அனைவரின் கவனத்திற்கும் மேற்காண் விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டி கொண்டுசெல்லப்பட வேண்டும். இதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையை ஆணைத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

## உத்தரவு தொடர் எண்.76

தேர்தல் ஆணையம் இராஜஸ்தான், ஜெய்ப்பூர் முதன்மை தேர்தல் அதிகாரிக்கு அனுப்பப்பட்ட 02.12.2008 நாளிட்ட 464–உத்தரவு–2008 EPS ஆம் எண் கடிதம் மற்றும் அனைத்து மாநிலங்களின்– மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் (இராஜஸ்தான் தவிர்த்து) முதன்மை தேர்தல் அதிகாரிகளுக்கு நகல் அனுப்பப்பட்டது.

**பொருள்: பிரச்சாரம் முடிவடைந்த பின்னர், தொகுதியில் உள்ள அரசியல் சார்ந்த பொறுப்பாளர்கள் மீதான கட்டுப்பாடுகள்**

பிரச்சாரம் முடிவடைந்த பின்னர், தொகுதிக்கு– மாநிலத்திற்கு வெளியிலிருந்து வந்திருக்கும் நபர்கள் மீதான கட்டுப்பாடுகள் குறித்த ஆணையத்தின் 8.01.2007 ஆம் நாளிட்ட 464– உத்தரவு–2007–PLN–1, மற்றும் 27.02.2008 ஆம் நாளிட்ட 464–உத்தரவு–2008 PLN-I ஆம் எண் கடிதத்துடன் (நகல்கள் இணைக்கப்பட்டுள்ளது) படித்து பார்வையிட நான் பணிக்கப்பட்டுள்ளேன். இராஜஸ்தானின் சட்டமன்றப் பேரவைக்கு நடைபெறும் தற்போதைய பொதுத்தேர்தல்களுக்கு மேற்சொன்ன உத்தரவுகள் பொருந்துமா என்பது குறித்த தெளிவுரை கேட்கப்பட்டுள்ளது. நடப்பிலுள்ள இராஜஸ்தான் மாநிலத்தின் பொதுத்தேர்தலை பொறுத்த வரையில், மேற்சொன்ன உத்தரவுகள் வேண்டிய மாறுதல்களுடன் கடைபிடித்தல் வேண்டும் என்று தெளிவுப்படுத்தப்படுகிறது. உத்தரபிரதேசம், குஜராத், கர்நாடகா, மத்திய பிரதேசம், தேசிய தலைநகர் பகுதியான டில்லி, சட்டீஸ்கர் மற்றும் மிசோரம் ஆகியவற்றின் மாநில சட்டமன்றத் தேர்தல்களுக்கான பொதுத் தேர்தல் சமயத்தில் மேற்சொன்ன உத்தரவுகள் முறையாக செயல்படுத்தப்பட்டன என்று இங்கு குறிப்பிடப்படுகிறது. அதன்படியே, மேற்சொன்ன உத்தரவுகள் கடுமையாக செயல்படுத்தப்படுவதை என்று உறுதி செய்யவேண்டும்.

1. அத்தகைய மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ள கல்யாண மண்டபங்கள்–சமுதாயக்கூடங்கள் போன்றவற்றில் வெளியாட்கள், அந்த வளாகத்தில் தங்கியுள்ளனரா, என்பதை சரிபார்க்க வேண்டும்.

2. தங்கும் விடுதிகள் மற்றும் விருந்தினர் மாளிகையில் தங்கியுள்ளவர்களின் பட்டியலைக் கண்காணித்து சரிபார்க்க வேண்டும்.

3. தொகுதிக்கு வெளியிலிருந்து வரும் வாகனங்களின் போக்குவரத்தைக் கண்காணித்து சரிபார்க்க வேண்டும்.

4. மக்கள்/மக்கள் கூட்டத்தின் அடையாளத்தை சரிபார்க்க, அவர்கள் வாக்காளர்களா இல்லையா என்பதை அறியும் பொருட்டு, அவர்களின் அடையாளத்தை சரிபார்க்க வேண்டும்.

5. அனைவரின் கவனத்திற்கும் இவை கொண்டு செல்லப்பட வேண்டும் மற்றும் இதற்கான கண்டிப்பான ஒத்திசைவை உறுதி செய்யவேண்டும்.

## உத்தரவு தொடர் எண்.77

தேர்தல் ஆணையம் அனைத்து மாநிலங்களின் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் முதன்மை தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ள **18.03.2009** ஆம் நாளிட்ட **464–உத்தரவு–2009–**EPS ஆம் எண்ணிட்ட கடிதம். **(**எல்லா அரசியல் கட்சியினருக்கும் நகலிடப்பட்டது**).**

**பொருள் :** தேர்தல் பிரச்சாரத்திற்காக பள்ளி விளையாட்டுத் திடலைப் பயன்படுத்துதல்.

சுதந்திரமான, நியாயமான தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்வதற்கு ஆணையம் எப்போதும் பெருமுயற்சி எடுத்து வருகிறது. யாதொரு நபருக்கும் அல்லது உடைமைக்கும் எவ்வித சேதமும் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்ய, தேர்தல் நடைமுறையின் பல்வேறு அம்சங்கள்குறித்து அவ்வப்போது உத்தரவுகளை வெளியிட்டுள்ளது. ஆணையம், தேர்தல் செயல்முறையின் ஒருமைப்பாட்டிற்கும் வெளிப்படைத்தன்மைக்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. அனைத்து அரசியல் கட்சிகளுக்குரிய சனநோக்கிலான தேர்தல் களத்தை உறுதி செய்வதும், மத்திய மற்றும் மாநிலங்களிலுள்ள ஆளுங்கட்சிகள், அவர்களின் ஆட்சி அதிகாரத்தையும் ஆட்சி அமைப்பையும் தேர்தல் நோக்கத்திற்காகப் பயன்படுத்தக் கூடாது என்பதை உறுதி செய்வதும் ஆணையத்தின் முக்கிய நோக்கமாகும். எனவே தேர்தல் பிரச்சாரம், அனைத்து பொது மக்களிடையே சென்றடைவதிலும், வாக்கெடுப்பு விழிப்புணர்வை அவர்களிடையே உருவாக்குவதிலும் அரசியல் கட்சிகளுக்கும் ஒரு பயனுள்ள சாதனமாக விளங்குகிறது.

2. தேர்தல் பிரச்சாரத்திற்கு திடல்கள் பற்றாக்குறை தொடர்பாக பல்வேறு மாநிலங்களிடமிருந்தும் – மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளிலிருந்து முறையீடுகளை ஆணையம் பெற்று வருகிறது. அரசியல் கட்சிகள் அரசியல் கூட்டங்கள் நடத்துவதற்காக பள்ளி மற்றும் கல்லூரித் திடல்களை அவர்கள் பயன்படுத்த அனுமதிக்குமாறு ஆணையத்தை அவ்வப்போது வலியுறுத்தி வருகிறது. ஆணையம் இந்த பொருள்மையைக் கருதிப் பார்த்து, அரசியல் கூட்டங்களுக்காக வழங்கப்பட்ட பள்ளி மற்றும் கல்லூரி திடல்களைப் பயன்படுத்த அனுமதி வழங்க முடிவு செய்துள்ளது.

அனைத்து மாநிலங்களின் – மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமை தேர்தல் அதிகாரிகள்(பஞ்சாப் மற்றும் அரியானா தவிர்த்து) தேர்தல் செயல்முறையின் போது, பிரச்சார நோக்கங்களுக்காக பள்ளித் திடலைப் பயன்படுத்துவது – தொடர்பாக,

அ) எந்தவொரு சூழ்நிலையிலும், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் கல்விப்பணிக்கு ஊறு ஏற்படுத்தக்கூடாது.

ஆ) நோக்கத்திற்காக பள்ளி கல்லூரி நிருவாகம் இதற்கு எவ்வித மறுப்புரையும் தெரிவிக்கக் கூடாது. அத்தகைய பிரச்சாரத்திற்கான முன் அனுமதி பள்ளி/கல்லூரி நிருவாகத்திடமிருந்தும் மற்றும் கோட்டாட்சி அலுவலரிடமிருந்தும் பெறப்பட வேண்டும்.

இ) அத்தகைய அனுமதி முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வழங்கப்படுமே தவிர, எந்த அரசியல் கட்சியும் அந்த திடல்களைப் பயன்படுத்த முன்னுரிமை கொண்டாட அனுமதிக்கக் கூடாது.

ஈ) அரசியல் கூட்டங்களுக்கான பள்ளி–கல்லூரி திடல்களின் ஒதுக்கீடுகளில் யாதொரு விதிமீறல் இருந்தால், அவை ஆணையத்தால் கடுமையாக எடுத்துக்கொள்ளப்படும். இதற்கு உரிய கோட்டாட்சியர் பொறுப்பாவார்.

உ) அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் மற்றும் பிரச்சாரம் செய்பவர்கள் மேற்சொன்னவற்றில் எவ்வித விதி மீறலும் இல்லாததை உறுதி செய்தல் வேண்டும்.

**3.**பிரச்சார நோக்கத்திற்காக அத்தகைய திடல்கள் பயன்படுத்தப்பட்டால், அவை உரிய அதிகாரிகளிடம் எவ்வித சேதமுமில்லாமல் திருப்பி அளிக்கப்படவேண்டும் அல்லது சேதம் ஏதேனுமிருப்பின் அதற்கான இழப்பீட்டுத் தொகை அளிக்கப்படவேண்டும் என்றும் உரிய பள்ளி – கல்லூரி அதிகாரிகளிடம் அவ்விளையாட்டுத் திடலை திரும்ப ஒப்படைக்கும் அரசியல் கட்சி/கட்சிகள் அவ்விழப்பீட்டுத் தொகையினை செலுத்துவதற்கும் பொறுப்புடையவர் ஆவர் என்று மேலும் ஆணையம் உத்தரவிடுகிறது.

**4.** இந்த விவகாரத்தில் பஞ்சாப் மற்றும் அரியானா உயர் நீதிமன்றத்தின் தடை இருப்பதால், பஞ்சாப் மற்றும் அரியானாவைத் தவிர அனைத்து மாநிலங்களுக்கும், மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளுக்கும் மேற்சொன்ன உத்தரவு பொருந்தும்.

## உத்தரவு தொடர் எண்.78

தேர்தல் ஆணையம், அனைத்து மாநிலங்களின்–மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் முதன்மை தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ள **15.09.2009** ஆம் நாளிட்ட **437–6–2009–**CCBE ஆம் எண். கடிதம்.

**பொருள்:** மாதிரி தேர்தல் நடத்தை விதிகளை செயல்படுத்துதல் –தேர்தல் அறிவிப்பிற்கு பின் சாதி, மதம் மொழி வழக்கங்கள் அடிப்படையிலான கூட்டங்களை மரபுகளை தடை செய்வதற்கான முன்மொழிவு– தொடர்பாக.

**31.08.2009**ஆம் நாளிட்ட DPAR **106** CUMMASAM **2009** ஆம் எண்ணுள்ள தங்கள் கடிதத்தில் சொல்லப்பெற்ற இப்பொருள் ஆணையத்தால் கருதிப்பார்க்கப்பட்டு, அத்தகைய கூட்டங்களை கூர்ந்து கவனித்து வீடியோ படமெடுக்க வேண்டும் என்றும் அரசியல் மற்றும் தேர்தல் நோக்கங்களுக்காக சாதியைப் பயன்படுத்துவது குறித்து ஏதாவது ஆதாரம் கிடைத்தால், சட்டத்தின் உரிய விதிமுறைகளின்படி மாதிரி தேர்தல் நடத்தை விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன் விபரம் ஆணையத்திற்குத் தெரிவிக்கப்பட வேண்டும். இக்கடிதத்தை பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகை அளிக்க வேண்டுகிறேன்.

## உத்தரவு தொடர் எண்.79

தேர்தல் ஆணையம், அங்கீகரிக்கப்பட்ட அனைத்து தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் தலைவருக்கு / பொது செயலாளருக்கு அனுப்பியுள்ள **28.11.2013** ஆம் நாளிட்ட**437/ 6** / உத்தரவு / **2013–** CC & BE ஆம் எண் கொண்ட கடிதம்.

**பொருள்:** அரசியல் கட்சிகளின் மற்றும் வேட்பாளர்களின் வழிகாட்டுதலுக்கான மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் – தேர்தல் பிரச்சாரத்தின் உயர் தரத்தினைக் காத்தல் – தொடர்பாக – சட்டிஸ்கர், மத்திய பிரதேசம், மிசோரம், இராஜஸ்தான், டில்லி ஆகிய ஐந்து சட்டமன்ற பேரவை தேர்தல்களுக்காக நடைபெற்றுக் கொண்டிருக்கும் தேர்தல் பிரச்சாரத்தின் தாழ்ந்த நிலை கண்டு ஆணையம் மிகுந்த கவலையும், ஆழ்ந்த வேதனையும் கொண்டுள்ளது.

**2.** ஆணையத்தால் பெறப்பட்ட தொடர்ச்சியான புகார்கள் மற்றும் எதிர் புகார்கள் பின்வரும் உண்மைகளைச் சுட்டிக் காட்டுகிறது.

அ) பரஸ்பர வெறுப்பு, விரோதம் அல்லது பகைமையை ஏற்படுத்துகிற ஆத்திரமூட்டுகிற மற்றும் எரிச்சலூட்டுகிற பேச்சுகளும் அறிக்கைகளும்,

ஆ) நற்பாங்கின் வரம்பு மீறிய மற்றும் தவறான மொழி பயன்பாடு

இ) இத்தகைய வேறுபாடுகளைக் களைய/அகற்ற தேர்தல் நடத்தை விதிகளில் வகை சொல்லப்பட்வாறு சுவரொட்டி / பதாகைகள் வாயிலாக அரசியல் எதிரிகளின் தனிப்பட்ட தன்மை மற்றும் நடத்தையை தாக்கிக் கூறுதல், ஒருவர் மீது ஒருவருக்கு வெறுப்பு, பகைமை அல்லது விரோதத்தை தூண்டுவதோடு, மதம், சாதி, சமூகம் போன்றவற்றின் அடிப்படையில் பல்வேறு அரசியல் கட்சிகளுக்கும் வகுப்பினருக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை அதிகமாக்குதல். இத்தகைய வேறுபாடுகளை களைய / அகற்ற மாதிரி

**3.** அரசியலமைப்பின் பிரிவு **19 (1)** (a) **–**இன் கீழ் இந்திய குடிமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை பேச்சுரிமை மற்றும் கருத்து சுதந்திரத்தை ஆணையம் முறையாக ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால் அத்தகைய பேச்சுரிமை மற்றும் கருத்து சுதந்திரம் முழுமையானதல்ல என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அந்த பிரிவு **19–**ன் பகுதி **(2)** ன் விதிமுறையில், அத்தகைய முறையில் அவற்றைக் கையாளும் போது, பண்பு நலன்களில், நன்னடத்தையில் எவ்வித விதி மீறல்கள் இல்லாமலும், மக்கள் ஒழுங்கு முறைக்கு தொல்லை தராமலும், பெயருக்குக் களங்கம் விளைவிக்காமலும் அல்லது தவறுகளைத் தூண்டாத வகையிலும் அவ்வுரிமை விதிக்கப்பட்டுள்ளது. பல்வேறு விதிமுறைகளின்படி, அந்த முக்கியமான நோக்கத்தை அடைவதை மாதிரி தேர்தல் நடத்தை விதி இலக்காக கொண்டுள்ளது.

**4. 1968** ஆம் ஆண்டு தேர்தல் சின்னங்கள் **(**ஒதுக்கீடு மற்றும் பங்கீடு**)** சட்டத்தின் பத்தி **16–**இன் கீழ், மாதிரி தேர்தல் நடத்தை விதிகளின் தொடர்ந்த விதி மீறல்களுக்காக, ஒவ்வொருவரின் அங்கீகாரத்தை ரத்து செய்ய வேண்டுமென்று அங்கீகரிக்கப்பட்ட இரண்டு தேசிய கட்சிகளிடமிருந்து மனுக்களை ஆணையம் பெற்றுள்ளது. இதிலிருந்து தாக்கத்தை அறியலாம்.

**5.** இந்த நிலையில், இரண்டு தேசிய கட்சிகளும் கேட்டுள்ளவாறு ஆணையம் நடவடிக்கை எடுக்க முயலாது எனினும், ஆணையம் மாதிரி தேர்தல் நடத்தை விதிகளில் யாதொரு தொடர்ந்த விதி மீறல்களுக்கும், மட்டு மீறிய மற்றும் தவறான மொழியைப் பயன்படுத்தும், அத்தகைய தவறிழைக்கும் அரசியல் கட்சிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அறிவிக்கிறது.

## உத்தரவு தொடர் எண்.80

தேர்தல் ஆணையம், அங்கீகரிக்கப்பட்ட அனைத்து தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் தலைவர்–பொது செயலாளருக்கு அனுப்பியுள்ள **04.12.2013** நாளிட்ட **437/6**/INST/2013/CC&BE ஆம் எண்கொண்ட கடிதம்.

**பொருள்:** அரசியல் கட்சிகளுக்கு பொதுவான அறிவுரைகள் – தொடர்பாக.

பாதுகாப்புப் படைப் பிரிவுகளைச் சேர்ந்த அரசியல் கட்சிகள் பணியாளரின் புகைப்படங்களை தலைவர்கள் மற்றும் வேட்பாளர்கள் தம்முடைய தேர்தல் விளம்பரங்களில் பயன்படுத்துவதற்காக பாதுகாப்பு அமைச்சகம் இவ்வாணையத்திற்குக் கொணர்ந்து இது குறித்து ஆணையம் உரிய உத்தரவுகளை வெளியிட வேண்டும் என்று கோரியுள்ளது.

ஒரு நாட்டின் படைகள், நாட்டின் எல்லை அரணாகவும் அரசியல் அமைப்பின் காவலாகவும் உள்ளனர் என்று இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது. அவர்கள் தற்கால மக்களாட்சியில் அரசியல் சாராத மற்றும் நடுநிலையான பொறுப்பாளர்கள் ஆவார். எனவே அரசியல் கட்சிகள் மற்றும் தலைவர்கள் தம்முடைய அரசியல் பிரச்சாரங்களில், படைப்பிரிவுகளை தேர்தல் பரப்புரைக்காகப் பயன்படுத்தும் போது அதிக எச்சரிக்கை தேவை. அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் தேர்தல் தொடர்பாக, இராணுவ தளபதி அல்லது ஏனைய படைப்பிரிவு பணியாளரின் ஒளிப்படம் மற்றும் படைப்பிரிவு விழாக்களின் புகைப்படங்களை தேர்தல் பிரச்சாரங்கள்/ விளம்பரங்கள் / கொள்கை பரப்புகை ஆகிய எந்த வகையிலும் பயன்படுத்தக்கூடாது என்று ஆணையம் கருதுகிறது.

அதன்படியே, அரசியல் கட்சிகள் அவர்களின் வேட்பாளர்களுக்கும், தலைவர்களுக்கும், படைப்பிரிவுப் பணியாளர்களின் ஒளிப்படங்களை அல்லது விளம்பரங்களில் படைப்பிரிவுப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ள விழாக்களின் ஒளிப்டங்களை அல்லது மற்ற வகையில் அவர்களின் தேர்தல் பரப்பலின் / பிரச்சாரத்தின் பகுதியாக காட்டப்படுவதை தவிர்க்குமாறு எல்லா அரசியல் கட்சியினரையும் ஆணையம் கேட்டுக்கொள்கிறது.

எனவே, இப்பொருள் குறித்து தக்க நடவடிக்கை மேற்கொண்டு தங்கள் வேட்பாளர்கள்/ தலைவர்கள் / கட்சித் தொண்டர்கள் ஆகியோரைத் தக்கவாறு ஆற்றுப்படுத்துமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

## உத்தரவு தொடர் எண்.81

தேர்தல் ஆணையம், அனைத்து அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் தலைவருக்கு பொது செயலாளருக்கு–தலைவருக்கு அனுப்பி அனைத்து மாநிலங்களின்–மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு நகல் அனுப்பப்பட்ட 04.03.2014 ஆம் நாளிட்ட 509–35–2014 RCC ஆம் எண் கொண்ட கடிதம்.

**பொருள்:** பிரதாப் சந்திரா–எதிர்–இந்திய யூனியன் மற்றும் பிறர் உலகாபாத் உயர்நீதி மன்றத்தின் லக்னோ அமர்வு வழங்கிய 603/2014 ரிட்மனு எண் (PIL–சிவில்) சார்ந்த தீர்ப்பு.

அரசியல் கட்சிகளின் திரளணிகளில் தேசியக் கொடியைப் பயன்படுத்துவது குறித்த வழக்கில் மாண்பமை அலகாபாத் உயர்நீதி மன்றத்தின் லக்னோ அமர்வு 30.01.2014 அன்று பிறப்பிக்க ஆணையின் நகலை இத்துடன் நான் அனுப்புமாறு பணிகைப்பட்டுள்ளேன். அரசியல் கட்சிகளின் திரளணிகளில் தேசியக் கொடியைப் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது என்று எதிர்வாதிகளுக்கு (மத்திய அரசு, உத்தரப் பிரதேசத்தின் மாநில அரசு, தேர்தல் ஆணையம் மற்றும் மாநில தேர்தல் ஆணையம்) உத்தரவிடுமாறு இவ்வழக்கில் வேண்டப்பட்டுள்ளது. திரளணிகளில் அரசியல் கட்சிகள் தேசியக் கொடியை முறையாகப் பயன்படுத்துவதற்கு எவ்விதத் தடையும் இல்லை என்று கூறி, மாண்பமை அலகாபாத் உயர்நீதி மன்றம் மனுவைத் தீர்வு செய்த போது, 1950 ஆம் ஆண்டு இந்திய தேசியக் கொடி, முத்திரை மற்றும் பெயர்கள் (ஒழுங்கு முறை) சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டு தேசிய சின்ன அவமதிப்பு தடுப்புச்சட்டத்தின் கூறுகளை வழுவாது கடைப்பிடித்தல் உரிய அதிகாரிகளின் தலையாய கடமையாகும் என்று கருத்தறிவித்துள்ளது.

மாண்பமை உயர்நீதி மன்றத்தின் மேற்சொன்ன ஆணையைக் கவணத்தில் கொண்டு, அனைத்துக் கட்சிகளின் எல்லாத் தொண்டர்கள், தலைவர்களின் கட்சியின் பணிநிலைப் பிரிவுகளின் கவனத்திற்கும் கொண்டு சென்று, ஆணையில் குறிப்பிடப்பட்ட தேசியக்கொடி விதித் தொகுதி மற்றும் சட்டத்தின் வழிவகைகளில் எவ்வித விதி மீறல்கள் இல்லையென்பதை உறுதி செய்ய வேண்டும்.

இதை பெற்றும் கொண்டமைக்கு ஒப்புகை அளிக்கவும்.

### <u>நகல்</u>

சட்டம் சார்ந்தவை – அலகாபாத் உயர் நீதிமன்ற தீர்ப்பு தகவல் முறை (அச்சு வழியிலான தீர்ப்புரை –

இது தகவல் / பார்வைக்கான, சான்றளிக்கப்படாத நகலாகும்.

முறையான பயன்பாட்டிற்கு சான்றளிக்கப்பட்ட நகலை மட்டுமே பார்வையிட வேண்டும். யாதொரு தவறு ஏற்படும் நேர்வில், துணைப் பதிவாளரின் (நகலுக்கு) கவனத்திற்கு கொண்டு வரவும்.

அலகாபாத் உயர்நீதி மன்றத்தின், லக்னோ அமர்வு

நீதிமன்ற எண்.2

வழக்கு – பல்வகை அமர்வு எண்.603/2014

மனுதாரர் பிரதாப் சந்திரா (PIL)

எதிர்மனுதாரர் – உள் அமைச்சகம் மற்றும் ஏனையோர் வழியாக இந்திய அரசு–உள்துறை செயலாளர் வழியாக மனுதாரரின் வழங்குரைஞர் – விஜய்குமார் பாண்டே

எதிர்மனுதாரரின் வழக்குரைஞர்–சி.எஸ்.சி, ஏ.ஸ்.ஜி, அப்ராஜிதா பன்சால், மனிஷ் மாதூர்.

மாண்புமிகு இம்டியாஸ், ஜே.மாண்புமிகு தேவேந்திர குமார் உபாத்யாயா.ஜே.

மனுதாரருக்கான வழக்குரைஞர் விஜய்குமார் பாண்டே

எதிர் மனுதாரருக்கான வழக்குரைஞர்: சி.எஸ்.சி,, ஏ.எஸ்.சி., அப்ராஜிதா பன்சால், மனிஷ் மாத்தூர்

யாதொரு அரசியல் கட்சிகளின் யாதொரு தனிப்பட்ட திரளணிகளில் தேசியக் கொடியை பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது என்று எதிர்மனுதாரர்களுக்கு உத்திரவிடுமாறு இந்தப் பொது நலன் வழக்கு வாயிலாக கோரப்பட்டுள்ளது. ‘

இந்திய அரசால் அறிவிக்கப்பட்ட தேசியக் கொடி விதி தொகுப்பில், தேசியக் கொடியை முறையாக பயன்படுத்துவதற்கான சில நெறிமுறைகள் வகுக்கப்பட்டன. மேற்குறிப்பிட்ட விதித் தொகுப்பின் பத்தி 2.1–ன்படி, 1950 ஆம் ஆண்டு இந்திய தேசியக் கொடி முத்திரைகள் மற்றும் பெயர்கள் (தவறான பயன்பாட்டைத் தடுத்தல்) சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டு தேசிய சின்ன அவமதிப்பு தடுப்புச் சட்டம் அல்லது தொடர்புள்ள யாதொரு ஏனைய சட்டக்கூறுகளை மீறாமல் பொது மக்கள், தனியார் அமைப்புகள், கல்வி நிறுவனங்கள் தேசியக் கொடியைப் பயன்படுத்த எந்தக் கட்டுப்பாடும் இல்லை.

1950 ஆம் ஆண்டு தேசிய சின்னங்கள் மற்றும் பெயர்கள் (தவறான பயன்பாட்டைத் தடுத்தல்) சட்டத்தை மீறி வணிக நோக்கங்களுக்காக தேசியக் கொடியைப் பயன்படுத்துவதை தேசியக் கொடி விதிக்கோவை குறிப்பாக தடை செய்கிறது. அரசால் வெளியிடப்பட்ட உத்தரவுகளுக்கிணங்க, பொதுக் கட்டடங்களின் மீது அரைக்கம்பத்தில் கொடி பறக்கும் வேளைகளைத் தவிர தேசியக் கொடி யாதொரு நபருக்கும் வணக்கம்

செலுத்தும் வகையில் சாய்வாகவோ அல்லது தொய்வாகவோ அரைக்கம்பத்தில் பறக்க விடக்கூடாது எனவும் இது தெளிவாக வரையறுத்துள்ளது. தேசியக் கொடி விதித் தொகுப்பில் ஏனைய சில நெறிமுறைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

தேசியக் கொடி விதித்தொகுப்பு மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட ஏனைய சட்டங்கள் ஆகியவை அவர்களின் கடுமையான கடைப்பிடித்தலுக்காக வெளியிடப்பட்டுள்ளன. 1950 ஆம் ஆண்டு தேசிய சின்னங்கள் மற்றும் பெயர்களின் (முறையற்ற வகையில் பயன்படுத்துவைதை தடை செய்தல்) சட்டங்களின் விதிமுறைகளில் மீறல்கள் இருப்பின் அது, தண்டனைக்குரியது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

அரசியல் கட்சிகள் தேசியக் கொடியை முறையாகப் பயன்படுத்துவதில் ஏதேனும் தடை உள்ளதா என்று மனுதாரரின் வழக்குரைஞரிடம் எழுப்பிய குறிப்பான வினாவுக்கு, அவரால் நீதிமன்றத்திற்கு பதில் அளிக்க இயலவில்லை. எனினும் 1971 ஆம் ஆண்டு தேசிய சின்ன அவமதிப்பு தடுப்புச் சட்டம் மற்றும் 1950 ஆம் ஆண்டு தேசிய சின்னங்கள் மற்றும் பெயர்கள் (முறையற்ற வகையில் பயன்படுத்துவதை தடை செய்தல்) சட்டங்களின்படி, இந்திய தேசியக் கொடியிலுள்ள விதிமுறைகளுக்கு இணங்கி, தேசியக் கொடியை முறையான வகையில் மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்பதை உறுதி செய்வது மாநில அதிகாரிகளின் கடமையாகும் என்று தெரிவித்துள்ளார். இந்திய தேசியக் கொடியின் மதிப்பையும் மாண்பையும் பாதுகாக்கும் பொருட்டு, மேலே குறிப்பிடப்பட்ட இந்திய தேசியக் கொடியின் மற்றும் சட்டங்களின் விதித் துறைகளின் கருதிப்பார்த்து, கண்டிப்பான கடைப்பிடித்தலை உறுதி செய்வது உரிய அதிகாரிகளின் கடமையென்று சொல்லத் தேவையில்லை.

தொடர்புடைய அனைவராலும் இவ்விதிகள் கண்டிப்பாக கடைப்பிடிக்கப்படும் என்பதை நாங்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறோம்.

மேற்சொன்ன கருத்துடன், இந்த மனு இறுதியாக தள்ளுபடி செய்யப்படுகிறது.

ஆணை நாள்: 30.01.2014

MFA/-

http://elegalix.allahabadhighcourt.in/elegalix/StartWebSearch.do என்ற இணைய முகவரிக்குள் சென்று அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் லக்னோ அமர்வில் அளிக்கப்பட்ட தீர்ப்புகளைப் பார்க்கலாம் – ஆணைகளுக்கு உரிமைக் கைவிடுதல்.

## உத்தரவு தொடர் எண்.82

தேர்தல் ஆணையம், அனைத்து மாநிலங்களின் / மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பட்ட **26.04.2014** ஆம் நாளிட்ட **437/6** / உத்தரவு / **2014** ஆம் எண் கடிதம்

**பொருள்:** அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் தவிர ஏனைய நபர்களால் மேற்கொள்ளப்படும் தேர்தல் தொடர்பான பிரச்சார செயல்பாடுகள்.

சில அரசியல் கட்சிகளுக்கு அல்லது வேட்பாளர்களுக்கு ஆதரவாக அல்லது எதிராக தேர்தல் பிரச்சரம் செய்வதற்கு ஒப்பாக சந்திப்புகள், கூட்டங்கள், யோகாப் பயிற்சி, பொதுக்கூட்டங்கள் பேரணிகள் போன்றவற்றை நடத்துவதாக புகார்கள் பெறப்பட்டுள்ளது. இத்தகைய அமைப்புகள் தங்கள் பிரச்சாரத்தின்போது மத உணர்ச்சிகளைத் தூண்டும் வகையில் வாக்காளர்களுக்கு வேண்டுகோள் விடுப்பதாகவும் அப்புகார்களில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

2. அவர்கள் யாதொரு நபரையும் தனிப்பட்ட முறையில் தாக்கியோ, அவரது பண்பு நலன் மற்றும் நன்னடத்தைக்கு தீங்கிழைக்கும் வகையிலோ அறிக்கை ஏதும் விடக்கூடாது.

**3.** பொது நிகழ்ச்சிகள் நடத்த அமைப்புகள் மற்றும் நபர்கள் அனுமதி கோரும் போது மேற்சொன்ன வழிகாட்டி முறைகளுக்கு இணங்கி நடப்பதாக உறுதி மொழி அளிக்குமாறு அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட வேண்டும்.

அத்தகைய நபர்களின் மற்றும் அமைப்புகளின் பொது நிகழ்ச்சிகள் வீடியோகாட்சிகள் வாயிலாக கூர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும். மேற்சொன்ன வழிகாட்டி குறிப்புகளை மீறுவது, அத்தகைய நேர்வுகளில் சட்டம் ஒழுங்கு பராமரிக்கும் மாவட்ட அதிகாரிகள் உரிய தண்டனை நடிவடிக்கைகளை விரைவாக எடுக்க வேண்டும். மேலும், உறுதி மொழியை மீறும் அத்தகைய நபர்களுக்கு மாவட்ட நிருவாகம், அந்த தேர்தல் காலங்களின் போது, யாதொரு நிகழ்ச்சிகளை நடத்த யாதொரு அனுமதியையும் வழங்கக் கூடாது என்பதை உறுதி செய்ய வேண்டும்.

**4.** யாதொரு குறிப்பிட்ட வேட்பாளர் அல்லது வேட்பாளர்களின் தேர்தல் நடவடிக்கைகளை நேரடியாக மேம்படுத்துவதற்கு ஏற்பட்ட செலவினமாக இருந்தால், இந்திய தண்டனைச் சட்டத்தின் 171H–இன் பிரிவின் கீழ் தேவைப்படுகிற சிறப்பு ஒப்புதல் முன்னதாகவே வேட்பாளரிடமிருந்து எழுத்து மூலமாக பெறப்பட வேண்டும். அத்தகைய ஒப்புதல் **4**மணி நேரத்திற்குள் மாவட்ட தேர்தல் அதிகாரியிடம் அளிக்கப்பட வேண்டும். இதில் யாதொரு விதி மீறல் இருந்தால், உரிய நபரின் மீது வழக்கு தொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

மாநிலங்களின் / மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளிலுள்ள தேர்தல் தொடர்பான அதிகாரிகளின் கண்டிப்பான கடைப்பிடித்தலுக்காக இந்த வழிகாட்டிக் குறிப்புகள் கொண்டு வரவேண்டும். தொடர்புடைய அனைவரின் தகவலுக்காக இதுவும் விரிவாக விளம்புகை செய்யப்படவேண்டும்.

## உத்தரவு தொடர் எண்.83

தேர்தல் ஆணையம், ஹரியானா, ஜம்மு காஷ்மீர், ஜார்க்கண்ட், மற்றும் காஷ்மீரின் முதன்மை தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ள 11.09.2014 ஆம் நாளிட்ட 437–6–உத்தரவு–2007 CCBE,

**பொருள்:** மக்களவை–சட்டசபைகளுக்கான பொது–இடைத்தேர்தல்க மாதிரி நடத்தை விதிகளை செயற்படுத்துதல் – பயனாளி அட்டைகள், மின்கட்டண அட்டைகள், கட்டுமான இடங்கள், பெயர்ப்பலகைகள் முதலியவற்றில் அரசியல் கட்சியினரின் புகைப்படங்களை காட்சிப்படுத்தல் – தொடர்பாக.

i) பயனாளி அட்டைகள், கட்டுமான இடங்கள், மின் கட்டண அட்டைகள் முதலியவற்றில் அரசியல் கட்சியினரின் புகைப்படங்களை காட்சிப் படுத்துதல் வைத்தல் தொடர்பாக பல்வேறு தலைமை தேர்தல் அதிகாரிகள் சில விளக்கங்களை கோரியுள்ளனர் என்பதை தெரிவிக்குமாறு நான பணிக்கப்பட்டுள்ளேன். தேர்தல் ஆணையம் இது குறித்து பரிசீலித்து பின்வருமாறு முடிவெடுத்துளளது. அவை வருமாறு.

மாதிரி தேர்தல் நடத்தை விதிகளை செயல்படுத்தும் போது, பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட பயனாளர்கள் அட்டைகள், கட்டுமான இடங்களில் பெயர்ப்பலகைகளை நிறுவுகையில் அவற்றின் புகைப்படங்கள், முதலமைச்சரின் செய்திகள், அமைச்சர்கள் மற்றும் ஏனைய அரசியல் கட்சிகளை உள்ளடங்ககியிருக்கக் கூடாது இருப்பினும், மாதிரி நடத்தை விதிகளை செயற்படுத்துவதற்கு முன்னர், பயனாளி அட்டைகளில் அரசியல் கட்சிகளின் புகைப்படங்களுடன் வழங்குதல், கட்டுமான இடங்களில் பெயர்ப்பலகைகளை நிறுவுதல் ஆகியவற்றைப் பொருத்த வரையில் யாதொரு தலையீடும் இருக்காது.

ii) அதே போல், மாதிரி நடத்தை விதிகள் செயல்படுத்தப்பட்டபின், மின்கட்டணம், குடிநீர் கட்டணம் போன்றவற்றுக்கான பட்டிகளை உருவாக்கும் போது யாதொரு கட்சியின் –அரசியல் அமைப்புகளின் சின்னங்கள் – புகைப்படங்கள் அல்லது செய்திகளை அவை உள்ளடக்கியிருக்கக்கூடாது.

iii) தேர்தல் ஆணையத்தின் 13.11.2013 (நகல் இணைக்கப்பட்டுளளது) ஆம் நாளிட்ட 437–6–உத்தரவு–2013CCC&BEஆம் எண் கடிதத்தில் கண்டுள்ள உத்தரவுகளை கவனமுடன் பின்பற்றப்பட வேண்டும்.

**உத்தரவு தொடர் எண்.84**

பீகார் மாநிலத்தின் அனைத்து தேசிய அரசியல் கட்சிகள் மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் தலைவர்/அவைத்தலைவர்/பொதுச் செயலாளருக்கு அனுப்பப்பட்ட 17.09.2015 ஆம் நாளிட்ட தேர்தல் ஆணையத்தின் 437/INST/2015- CCS ஆம் எண் கடிதம்.

**பொருள்;-அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் வழிகாட்டுதலுக்கான தேர்தல் மாதிரி நடத்தை விதி – தேர்தல் பிரச்சாரத்தின் போது பண்பாட்டைக் கடைபிடிப்பது – தொடர்பாக**

2015ஆம் ஆண்டு பீகார் மாநில சட்டமன்ற தேர்தலுக்கான தேர்தல் அட்டவணையின் அறிவிப்பினைத் தொடர்ந்து, தேர்தல் மாதிரி நடத்தை விதி செயலுக்கு வருவதால், தேர்தல் பிரச்சாரத்தின் போது பண்பாட்டைக் கடைபிடிப்பது குறித்த விவகாரம் மற்றும் தேர்தல் மாதிரி நடத்தை விதிகளை மீறுவது மற்றும் மட்டுமீறிய, இழிவான வார்த்தைகளை பயன்படுத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அறிவிப்பை அனைத்து அரசியல் கட்சிகளுக்குத் தெரிவிக்கும் 28.11.2013 ஆம் நாளிட்ட ஆணையத்தின் 437/6/INST/2013-CC&BE ஆம் எண் கடிதத்தை தங்களின் கவனத்திற்கு கொண்டு வர நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

2.மேலும், பெண்களின் மரியாதை மற்றும் கண்ணியத்திற்கு முரண்பாடாக அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் யாதொருசெயல்/நடவடிக்கை/ வேறுவகையில் செய்வதை தவிர்க்க ஆணையம் மேற்கொண்டும் அறிவுறுத்தியுள்ளது.

3. இந்த விவகாரத்தில் உங்கள் தலைவர்கள், ஆட்சிப் பணியாளர்கள் மற்றும் வேட்பாளர்களுக்கு நீங்கள் தகுந்தவாறு அறிவுரை வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு

(உத்தரவு தொடர் எண்.78-இல்)

**உத்தரவு தொடர் எண்.85**

பீகார் மாநிலத்தின் அனைத்து தேசிய அரசியல் கட்சிகள் மற்றும் பீகார் மாநில அரசியல் கட்சிகளின் தலைவர்/அவைத் தலைவர்/பொதுச் செயலாளருக்கு அனுப்பப்பட்ட 09.10.2015 ஆம் நாளிட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் 437/6/INST/2015- CCS ஆம் எண் கடிதம்.

**பொருள்;- பீகார் சட்டமன்றத்திற்கான பொதுத் தேர்தல்- தேர்தல் மாதிரி நடத்தை விதி – தேர்தல் பிரச்சாரத்தில் பேணுதல் – தொடர்பாக**

பீகார் சட்டமன்றத்தில் நடைபெறுகின்ற பொதுத் தேர்தலில், பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் வேட்பாளர்களால் அடிமட்டநிலையில் பேசப்படும் அரசியல் உரைகள் குறித்து ஆணையம் வேதனை மற்றும் தீவிர கவலையடைகிறது. ஆணையம், அரசியல் கட்சிகளுக்கு வழிகாட்டிக்குறிப்புகள்/ஆலோசனைகளை 17.09.2015 அன்று தாமதாக வெளியிட்ட போதிலும்கூட, இச்சூழ்நிலை தொடர்ச்சியாக இன்றளவும் தொடர்வது மனநிறைவளிப்பதாக இல்லை. அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ள தேர்தல் மாதிரி நடத்தை விதிகளுக்கு மாறாக, மதம், சாதி மற்றும் சமூக அடிப்படையில் பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் குடிமக்களின் வகையினரிடையே பாகுபாடினை உண்டுபண்ணுகிற நோக்கில் ஒருவருக்கொருவர் மீதான வெறுப்பு, வேற்றுமை அல்லது தீய எண்ணம் ஆகியவற்றினை ஏற்படுத்துகிற அரசியல் உரைகளின் பேச்சு தொனி மற்றும் பாங்கு கண்டறிந்து குறிப்பிட வேண்டும்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 19(1)(a) ஆம் பிரிவின் கீழ், உத்தரவாதமளிக்கப்பட்ட பேச்சுரிமை மற்றும் கருத்து சுதந்திரத்திற்கான அடிப்படை உரிமை வரம்பற்றதல்ல, மற்றும் ஏனையவற்றிற்கிடையே ஒழுக்கம் மற்றும் அறநெறி எல்லைகளை மீறுதல் அல்லது பொதுஅமைதிக்கு இடையூறு செய்தல் அல்லது அவதூறு ஏற்படுத்துதல் அல்லது குற்றம் செய்ய தூண்டுதல் ஆகியவற்றை மேற்கொள்ளாத வகையில், பீகார் நடப்பு சட்டமன்ற தேர்தலில்,

மேற்சொன்ன அடிப்படை உரிமையை செயல்படுத்த வேண்டும் என்று ஆணையம் அரசியல் கட்சி தலைவர்கள் மற்றும் வேட்பாளர்களுக்கு நினைவுப்படுத்த விழைகிறது.

மாண்பமை உச்சநீதிமன்றத்தின் கடாக் யஸ்வந்த்ராவ் கங்கர் ராவ் எதிர் E.S பாலசாகிப் விக்கிபட்டீல் ( AIR 1994 SC 678) வழக்கினை அறிந்து கொள்வதற்கு, அனைத்து அரசியல் கட்சிகள், அவர்களின் தலைவர்கள் மற்றும் வேட்பாளர்களின் கவனத்தை ஈர்க்க ஆணையம் விழைகிறது. உயரளவிலான தலைமைப்பதவியிலுள்ளவர்களின் கடமையானது, விரும்பத்தக்க விதிமுறைகளை மேற்கொள்வதன் வாயிலாக, வாக்காளர்களுக்கு தேவைப்படும் தகவலை அளிப்பதற்கான நடைமுறையினை, மாநில மற்றும் தேசிய அளவிலான அனைத்து அரசியல் கட்சிகள் அமைக்க வேண்டும். அவ்வாறு அமைப்பதால், அது கீழ்நிலையில் உள்ளவர்களை சென்றடைவதுடன், சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான உகந்த சூழ்நிலைக்கு வகைசெய்யும். உயர்மட்ட தலைவர்களின் எதிர்மாறான உரைகள், தேர்தல் பிரச்சாரத்தை சீர்குலைத்து, கீழ்மட்ட நிலையை அடைவதுடன், சில சமயங்களில் வன்முறையை ஊக்குவித்து, குற்ற அரசியலுக்கு வழிவகுக்கும். இந்த ஆரோக்கியமற்ற போக்கு அதிகரித்து வருவதன் விளைவாக மக்களாட்சி நல்ல முறையில் செயல்படுவது என்பது ஒரு முக்கிய பிரச்சனையாக உள்ளது. மேலும், சரியான திசையில் மக்களாட்சி செயல்படுவதற்கு இந்த போக்கினை மாற்றியமைக்க வேண்டியது, அனைத்து அரசியல் கட்சிகளின் உயர்மட்ட தலைவர்களுடைய கடமையாகும்."

தேர்தல் பிரச்சார உரையில், மிகுந்த கட்டுப்பாடு மற்றும் ஒழுக்கத்தை பின்பற்றி, இனி வரும் தேர்தல்களில், தேர்தல் பிரச்சாரத்தின் போது, உன்னத நிலையிலான ஒழுக்கம் மற்றும் நடத்தையினை பேணி, ஒரு எடுத்துகாட்டாக விளங்க வேண்டும் என்று ஆணையம் அனைத்து அரசியல் கட்சிகளின் அனைத்து அளவிலான தலைவர்களுக்கும் வலியுறுத்துகிறது.

## உத்தரவு தொடர் எண்.86

அனைத்து மாநிலங்கள்/ மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட 21.04.2016 ஆம் நாளிட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் 437/6/1/2016- CCSஆம் எண் கடிதம்.

பொருள்;- மக்களவை/மாநில சட்டமன்றங்களுக்கான இடைத்தேர்தல்கள் – தேர்தல் மாதிரி நடத்தை விதிகளை செயல்படுத்துவதற்கான உத்தரவுகள் – மதம்/இன அடிப்படையில் அமைச்சர்கள்/ தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள்/சட்டமன்ற உறுப்பினர்களால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் – தொடர்பாக

இடைத்தேர்தலின் போது, தேர்தல் மாதிரி நடத்தை விதி மீறல்களை தவிர்க்கும் பொருட்டு, தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் செயல்பாட்டில் இல்லாத மாவட்டங்களின் பகுதிகள்/அவர்களின் மாநிலப்பகுதிகள்/ மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளில், மதம்/இன அடிப்படையில், ஆட்சியில் உள்ள கட்சி மற்றும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள்/சட்டமன்ற உறுப்பினர்களால் அளிக்கப்படும் வாக்குறுதிகள்/ கோரிக்கைகள், ஆணையத்தின் கவனத்திற்கு சென்றுள்ளது என்பதைத் தெரிவிப்பதற்கு, மேற்சொன்ன பொருண்மை குறித்து 26.04.2014 ஆம் நாளிட்ட (தொடர் எண்.14-இல்) ஆணையத்தின் 437/6/INST/2012/CC & BE ஆம் எண் கடிதத்தை இங்கு குறிப்பிட நான் பணிக்கப்பட்டுள்ளேன். எனினும், இது, இடைத்தேர்தல் நடைபெறும் இடங்களில், சட்டமன்ற தொகுதி/நாடாளுமன்ற தொகுதியின் வாக்காளர்களின் மனதில் நிச்சயமாக தாக்கத்தை ஏற்படுத்துவதுடன், அந்த தொகுதிகளில் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை சீர்குலைக்கும்.

மேற்சொன்னவற்றை கருத்திற்கொண்டு, மாநிலத்தில்/மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளில், யாதொரு சட்டமன்ற தொகுதி/நாடாளுமன்ற தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவித்தவுடன், சம்பந்தப்பட்ட தலைமை தேர்தல் அதிகாரி, தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் செயலில் இல்லாத பகுதிகளிலும், மதம்/இன

அடிப்படையில், ஆட்சியில் உள்ள கட்சி மற்றும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள்/சட்டமன்ற உறுப்பினர்கள் வாக்குறுதிகள்/ உறுதிமொழிகளை அளிக்கக்கூடாது என்று மாநில/மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு ஆலோசனை வழங்குவதற்கு இங்கு ஆணையம் அறிவுறுத்துகிறது. இதன் வாயிலாக, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கு இன்றியமையாத உகந்த சூழ்நிலைக்கான தேர்தல் நடைமுறை நியாயமான முறையில் பேணப்படுவதுடன், பொது மக்களிடையே தவறான எண்ணம் உருவாகுவதை தடுக்கிறது.

இக்கடிதம் பெற்றமைக்கு ஒப்புகை அளிக்கப்படலாம்.

## உத்தரவு தொடர் எண்.87

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 4.01.2017 ஆம் நாளிட்ட 437/ 6 / Campaign/ ECI/INST/FUNCT/MCC-2016 ஆம் எண் கடிதம்.

பொருள்: மக்களவை/ சட்டமன்றங்களுக்கான பொது / இடைத் தேர்தல்கள்- தேர்தல் பிரச்சாரம் குறித்த உத்தரவு –தொடர்பாக.

சட்டப்படிக்கான விதித்துறைகளுக்கிணங்க தேர்தல் பிரச்சாரங்களை மேற்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்திலும், பொறுப்பாளர்களிடையே அதாவது அரசியல் கட்சிகள் அல்லது அவர்களது ஆதரவாளர்களிடையே ஏற்படும் சண்டை சச்சரவுகளையும், போட்டிகளையும் தவிர்க்கவேண்டுமென்பதற்காகவும், பிரச்சார காலத்தின்போது அமைதியையும், சட்ட ஒழுங்கையும் பேணுவதை உறுதி செய்வதற்காகவும், எண்ணற்ற உத்தரவுகளை ஆணையம் கடந்த காலத்தில் வெளியிட்டுள்ளது. பின்வரும் உத்தரவுகளையும் வெளியிட ஆணையம் முடிவு செய்துள்ளது. அவையாவன:-

1. வீடியோ வேன்கள்

10.04.2014 ஆம் நாளிட்ட 464/ INST/2014- EPS ஆம் எண் கடிதத்திலுள்ள ஆணையத்தின் உத்தரவுகளில், மோட்டார் வாகனச் சட்டத்தின் விதித்துறைகளையும், 2006 ஆம் ஆண்டு ரிட் மனு எண் 3648(MB)இல் அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் 23.06.2006 மற்றும் 14.02.2007 ஆம் நாளிட்ட தீர்ப்புகளையும் கருத்திற்கொண்டு, மாநிலம் முழுவதும் பிரச்சாரத்திற்காக அரசியல் கட்சியால் பயன்படுத்தப்படவிருக்கிற வீடியோ வேன்களுக்கான அனுமதி தலைமை தேர்தல் அலுவலரால் வழங்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்சொன்னவற்றை ஆணையம் வலியுறுத்துவதுடன் மேற்கொண்டு பின்வருமாறு உத்தரவிடுகிறது. அவையாவன:-

i. தேர்தல் பிரச்சாரத்திற்காக வீடியோ வேன்களை பயன்படுத்துவதற்கான அனுமதி தலைமை தேர்தல் அதிகாரி அளவில் மட்டுமே வழங்கப்படும். வீடியோ வேன், மோட்டார் வாகனச் சட்டத்திற்கு இணக்கமாக உள்ளது என தலைமை தேர்தல் அதிகாரியிடம் போக்குவரத்து ஒருங்கிணைப்பு அதிகாரி சான்றிதழ் வழங்க வேண்டும்.

ii. வீடியோ வேன்களில் தேர்தல் பிரச்சாரத்திற்கான பொருட்களின் விவரங்கள் ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழுக்களிடமிருந்து முன்னதாக சான்றளிக்கப்பட வேண்டும். வாக்குகள் கோருவதற்கு, அரசியல் கட்சியின் திட்டத்தையும், கொள்கைகளையும் பரப்புவதற்காக, அக்கட்சியின் வீடியோ வேன் பயன்படுத்தப்பட வேண்டும். யாதொரு குறிப்பிட்ட வேட்பாளருக்காக வாக்குகள் அல்லது ஆதரவு கோரப்படக் கூடாது. எனினும், ஒரு வேட்பாளர்/ வேட்பாளர்களுக்கு வாக்குகள்/ ஆதரவு கோருவதற்காக அவை பயன்படுத்தப்படுமாயின் அந்த வீடியோ வேனின் செலவினம் அத்தகைய வேட்பாளர்/ வேட்பாளர்களால் உரியவாறு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். இதனை தேர்தல் செலவின பார்வையாளர்கள் கூர்ந்து கண்காணிக்க வேண்டும்.

iii. தலைமைத் தேர்தல் அதிகாரியிடமிருந்து வீடியோ வேன்களை பயன்படுத்துவதற்கு அனுமதி கோருகிற யாதொரு கட்சி/வேட்பாளர், மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ், உரிய அதிகாரியிடமிருந்து தேவையான அனுமதி/ தடையில்லா சான்றிதழை முதலில் பெற

வேண்டும். சாலைகளில் வீடியோ வேன்களை இயக்குவதற்கான இப்பொருணமை தொடர்பான ஏதேனும் மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் நீதிமன்ற ஆணைகளிருப்பின் அவற்றுடன் தொடர்புடைய விதித் துறைகளுடனான இணக்கத்தை உறுதி செய்வதற்கு இந்த சான்றளிப்பு அவசியமாகிறது.

iv. பிரச்சாரத்திற்கு பயன்படும் வீடியோ வேன்களின் எண்ணிக்கை குறித்து எவ்வித கட்டுப்பாடும் இல்லாத போதிலும், அதற்கான செலவினமானது கட்சியின் தேர்தல் செலவின கணக்கில் உரியவாறு சேர்க்கப்பட்டு தேர்தலுக்குப் பின்னர் இந்தியத் தேர்தல் ஆணையத்திடம் அளிக்கப்பட வேண்டும்

*கூடுதல்/புதிய கட்டளைகள் சாய்வு எழுத்துக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன

v. பிரச்சாரத்திற்காக/பரப்புரைக்காக பயன்படுத்தப்படும் வீடியோ வேன்களின் வழித்தடம் குறித்து உள்ளூர் நிருவாகம்/மாவட்ட தேர்தல் அலுவலரிடம் முன்னதாக தெரிவிக்கப்பட வேண்டும். இதனை மீறுகிற நேர்வில்,தலைமை தேர்தல் அதிகாரியால் உரிய அறிவிப்பு வழங்கப்பட்ட பின்னர், வீடியோ வேன்களுக்கான அனுமதி திரும்பப் பெறப்படலாம்.

2 இருசக்கர வாகனங்களைப்(பைக்) பயன்படுத்துதல் – தேர்தல் செயல்பாடுகளுக்கான இருசக்கர வாகனங்களின் பயன்பாடு முறைப்படுத்தப்பட வேண்டியது அவசியம் என கருதப்படுவதால் பின்வரும் உத்தரவுகளை ஆணையம் வழங்குகிறது.

(i) பைக் என்பது ஒரு இருசக்கர வாகனம் . அவை, தேர்தல் பிரச்சாரத்திற்காக மட்டுமே அவை பயன்படுத்தப்பட வேண்டும் என கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. வாகனங்களின் பாதுகாப்பு விதிகளின் படி, (10.04.2014 ஆம் நாளிட்ட 464/ INST/2014- EPS ஆம் எண் கடிதத்திலுள்ள இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவுகளில் வகை செய்யப்பட்டுள்ளவாறு) இருசக்கர வாகனங்களின் எண்ணிக்கள் கட்டுப்படுத்தப்படலாம். எந்த சூழ்நிலையிலும், பாதுகாப்பு வாகனங்கள் நீங்கலாக, பத்துக்கும் மேற்பட்ட வாகனங்கள் அணிவகுப்பில் கலந்துக் கொள்வதற்கு அனுமதிக்கப்படக் கூடாது என ஏனையற்றிற்கிடையே வகைசெய்கிறது. யாதொரு மத்திய அல்லது மாநில அமைச்சர் அல்லது ஏனைய யாதொரு நபரை கொண்டுச் செல்கிற போதிலும், பத்துக்கும் மேற்பட்ட வாகனங்களைக் கொண்டுள்ள அனைத்து பெரிய அணிவகுப்புகளும் பிரிக்கப்பட வேண்டும். எனினும், இவை அத்தகைய தனிநபர் குறித்து வழங்கப்பட்டுள்ள யாதொரு பாதுகாப்பு உத்தரவுகளுக்குட்பட்டிருக்கும். வாகன அணிவகுப்பு பிரிக்கப்பட்ட போதிலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமான அளவில் வாகன அணிவகுப்பில் நபரொருவர் செல்கிறாரெனில், தேர்தல் நடைமுறை நிறைவடையும் வரையில், ஆனையத்தின் உத்தரவுகளை மீறி அத்தகைய வாகனங்கள் அனுமதிக்கப்படவில்லை என்பதை உறுதி செய்வது உள்ளூர் நிருவாகத்தின் கடமையாகும் .

(ii) பிரச்சாரத்திற்காக அனுமதியளிக்கப்பட்ட இருசக்கர வாகனங்களைத் தவிர, ஏனைய இருசக்கர வாகனங்களின் பயன்பாடு குற்றவியல் தண்டனை விதிக்கோவையின் 144 வது பிரிவின் படி, தடையாணையின் கீழ் முறைப்படுத்தப்பட வேண்டும்.

(iii) ஒரு வண்டியில் ஒரு கொடி(அதிக அளவில் 2X1 அடி) மட்டுமே அனுமதிக்கப்பட வேண்டும்.

(iv) கொடியைத் தாங்கிச் செல்லும் கழியின் நீளம் 3 அடிக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**3.** சாலைக் காட்சிகள் - 10.04.2014 ஆம் நாளிட்ட 464/ INST/2014- EPS ஆம் எண் கடிதத்திலுள்ள ஆணையத்தின் உத்தரவுகளில், பிரச்சாரத்திற்காக, தேர்தல்களின்போது தேர்தல் அல்லது தேர்தல் தொடர்பான பயணத்திற்காக அலுவலக வாகனத்தைப் பயன்படுத்துவதற்கு முற்றிலுமாக தடைவிதிக்கப்படுவதற்கு ஏனையவற்றிற்கிடையே வகைசெய்யப்பட்டுள்ளது. பத்து வாகனங்களுக்கு(பதுகாப்பு வாகனங்கள் நீங்கலாக) மேற்பட்ட வாகன அணிவகுப்பில் செல்வதற்கு கார்/வாகனங்களுக்கு அனுமதியளிக்கக்கூடாது எனவும் இது வகை செய்கிறது. யாதொரு மத்திய அல்லது மாநில அமைச்சர் அல்லது ஏனைய யாதொரு நபரை கொண்டுச் செல்கிற போதிலும் அனைத்து பெரிய அணிவகுப்புகளும் பிரிக்கப்பட வேண்டும். எனினும், இவை அத்தகைய தனிநபர் குறித்து வழங்கப்பட்டுள்ள யாதொரு பாதுகாப்புக் உத்தரவுகளுக்குட்பட்டிருக்கும். சாலைக் காட்சிகளின்போது பொதுமக்கள்/ பயணிகளுக்கு ஏற்படும் இடையூறுகளைத் தவிர்ப்பதற்கு சாலைக் காட்சிகள் முறைப்படுத்தப்படுவது அவசியம் என கருதி ஆணையம் பின்வரும் உத்தரவுகளை வெளியிடுகிறது. அவையாவன:-

a. உரிய அதிகாரியிடமிருந்து சாலை காட்சிகளுக்கான முன் அனுமதி பெற வேண்டும்.

b. பொதுமக்களுக்கு ஏற்படும் இடையூறுகளைத் தவிர்கும் பொருட்டு, இயன்ற வரையில். நீதிமன்ற ஆணைகள் மற்றும் உள்ளூர் சட்டங்களுக்குட்பட்டு,

பெரிய மருத்துவமனைகள், சிகிச்சை மையங்கள், இரத்த வங்கிகள் மற்றும் அதிக நெரிசல் மிக்க சந்தைகள் ஆகிய இடங்களைக் கொண்ட வழிதடங்கள் தவிர விடுமுறை நாட்களின் போதும், ஏனைய வழிதடங்களில் போக்குவரத்து நெரிசல் அல்லாத நேரங்களின்போதும் மட்டுமே, சாலைக் காட்சிகள் அனுமதிக்கப்பட வேண்டும்.

c. சாலைக் காட்சிக்காக கூடுகின்ற வாகனங்கள் மற்றும் நபர்களின் எண்ணிக்கை முன்னதாகவே தெரிவிக்கப்பட வேண்டும்.

d. பொதுமக்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு, சாலை அளவில் பாதிக்கும் மேற்பட்ட பகுதியில் சாலைக் காட்சி நடத்தப்படக் கூடாது.

e. சாலைக் காட்சியில் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்கள், ஒவ்வொரு பத்து வாகனங்களுக்கு பிறகு பிரிக்கப்பட வேண்டும். அவற்றிற்கிடையே 200 மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும்.

f. பொதுமக்கள் மற்றும் சாலைக் காட்சியில் கலந்து கொண்டிருக்கும் நபர்களின் பாதுகாப்பு உறுதிசெய்யப்பட வேண்டும். பட்டாசுகளை வெடிப்பதற்கும் நெருப்புப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கும் அனுமதிக்கப்படக் கூடாது.

g. மிகையளவாக 6X4 அடி என்ற அளவுக்குட்பட்டு பதாகைகள் பயன்படுத்தப்படலாம்.

h. இந்திய தேர்தல் ஆணையத்தின் தற்போதுள்ள உத்தரவின்படியும் இந்த பொருண்மைக் குறித்த உள்ளூர் சட்டங்கள் மற்றும் நீதிமன்ற ஆணைகளுக்குட்பட்டும் ஒலிப்பெருக்கிகள் பயன்படுத்த இயலும்.

i. சாலைக் காட்சிகளில் விலங்குகளைஙப பயன்படுத்துவது முற்றிலுமாக தடை செய்யப்பட்டுள்ளது. குழந்தைகள், குறிப்பாக சீருடையில் இருக்கும் பள்ளீக் குழந்தைகள் சாலைக் காட்சிகளில் பங்குபெற வைக்கக்கூடாது.

j. முன் அனுமதியுடன் ஒரே ஒரு கொடியை மட்டும் சாலைக் காட்சிகளில் கட்சி ஆதரவாளர்கள் பயன்படுத்தலாம். கொடியின் அளவு உயரளவாக 3X2 அடியாக இருக்க வேண்டும்.

4. வேட்புமனு தாக்கலின்போது வாகன போக்குவரத்து- 10.04.2014 ஆம் நாளிட்ட 464/ INST/2014- EPS ஆம் எண் கடிதத்திலுள்ள இந்திய தேர்தல் ஆணைய உத்தரவுகளில், வேட்பனு தாக்கலின்போது, தேர்தல் நடத்தும் அலுவலரின் அலுவலகத்திலிருந்து 100 மீட்டர் புறஎல்லைப் பகுதிக்குள்ளாக மூன்று வாகனங்கள் மட்டுமே அனுமதிக்கப்படும் என ஏனையவற்றிற்கிடையே வகை செய்யப்பட்டுள்ளது. 100 மீட்டர் புறஎல்லைப்பகுதி பரப்பளவு என்று எல்லைப்பகுதி வரையறை தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட தேர்தல் அலுவலரால் தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும் என தற்போது அறிவுறுத்தப்பட்டுள்ளது. வேட்பாளர் +4 அங்கீகரிக்கபட்ட நபர்கள் நுழைவதற்காக, ஒரே ஒரு கதவு மட்டுமே திறக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும், ஏனைய அனைத்து கதவுகளும் மூடப்பட்டிருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவர்கள் உள்ளே வரும் நேரத்தை பதிவு செய்வதற்காக நுழைவுக் கதவில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட வேண்டும்.

5. வாக்குப்பதிவு நாளன்று வாகனங்களைப் பயன்படுத்துதல்-10.04.2014 ஆம் நாளிட்ட 464/ INST/2014- EPS ஆம் எண் கடிதத்திலுள்ள ஆணையத்தின் உத்தரவுகள், வேட்பாளர்கள்/ அவ்ரது முகவரால் அல்லது வேட்பாளர் அல்லது அவரது தேர்தல் முகவரின் அனுமதியுடன் ஏனைய நபரால் வாக்குப்பதிவு நாளன்று சட்டத்திற்கு புறம்பான வகையில் மிகையாக வாகனங்கள் பயன்படுத்தப்படுவதை கட்டுப்படுத்துவதற்கு வகைசெய்யப்பட்டுள்ளது.

மேற்சொன்ன உத்தரவுகளில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளின் நோக்கத்திற்காக, வாகனங்கள் என்றால் இயந்திர ஆற்றல்கொண்டு அல்லது ஏனைய வகையில் இயக்கப்படும் ஆனைத்து வாகனங்கள் என பொருள்படும் என தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

6. ஊர்வலங்கள் மற்றும் தேர்தல் கூட்டங்களில் ஒலிப்பெருக்கிகளைப் பயன்படுத்துதல் – 26.12.2000 ஆம் நாளிட்ட 3/8/2000/JS-II ஆம் எண்ணிட்ட ஆணையத்தின் கடிதத்திலுள்ள அதனின் உத்தரவுகள், உரிய அதிகாரியின் எழுத்துவடிவிலான முன் அனுமதிக்காக ஏனையவற்றிற்கிடையே வகை செய்கிறது. உள்ளூர் சட்டம், நீதிமன்ற ஆணைகள்/ மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்தின் யாதொரு ஆணைக்கு உட்பட்டு, தேர்தலுக்காக பொதுக்கூட்டங்களில் பயன்படுத்துகின்ற, எந்தவகையிலான வாகனங்களில் பொருத்தப்பட்ட அல்லது நிலையாக உள்ள ஒலிப்பெருக்கிகள், இரவு பத்துமணி முதல் காலை ஆறுமணிவரை பயன்படுத்தப்படக்கூடாது. அந்தப்பகுதியின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த உள்ளூர் மக்களின் உணர்வுகள் மற்றும் வானிலை நிலவரங்கள், விழாக்காலம், தேர்வுக்காலம் போன்றவைகளும் கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். ஒலிப்பெருக்கி பொருத்தபட்டுள்ள யாதொரு வாகனத்திற்கும் மோட்டார் வாகனங்கள் சட்டம்/ விதிகள் பொருந்தும். பரிசோதகர்கள்/ கண்காணிப்பாளர்கள் அல்லது ஏனைய அலுவலரிடம் காட்டுவதற்காக, அனுமதிக்கடிதத்தை வாகன ஓட்டுநர் வைத்திருக்க வேண்டும். மேற்சொன்ன நேரத்திற்கு அதிகமான நேரத்தில் பயன்படுத்தப்படுகிற அனைத்து ஒலிப்பெருக்கிகளும் அத்துடன் இணைக்கபெற்ற கருவிகளுடன் பறிமுதல் செய்யப்படும். ஒலிமாசு மற்றும் பொதுமக்களின் அமைதி பாதிக்கப்படவில்லை என்பதை உறுதி செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**ஒலிப்பெருக்கிகளால் /அதிர்வெண் பெருக்கிகளால் எழும் ஒலியின் டெசிபெல்கள், சம்பந்தபட்ட சட்டம்/ வழிகாட்டி நெறிமுறைகளின் கீழ் நிர்ணயிக்கபட்டவாறாக, அனுமதிக்கதக்க அளவிற்கு மிகாமல் இருப்பதை சம்பந்தப்பட்ட மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியங்களின் அதிகாரிகளால் உறுதி செய்யப்பட வேண்டும் என ஆணையம் மேலும் வலியுறுத்தியுள்ளது. பொருத்தமான முறையை ஏற்பாடு செய்வதன் மூலம் மாவட்ட தேர்தல் அலுவலர் இதனை கண்காணிக்க வேண்டும்.**

**7. கொடிகளின் பயன்பாடு:** செயலிலுள்ள யாதொரு உள்ளூர் சட்டத்தின் அல்லது நீதிமன்ற ஆணைகளின் கீழ் வரையறுக்கப்பட்ட யாதொரு பொருண்மைகளுக்கு உட்பட்டு, அரசியல் கட்சியினர், வேட்பாளர்கள், அவர்களின் முகவர்கள், பணியாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் யாதொரு நபரின் அல்லது அமைப்பின் அல்லது யாதொரு கட்சியின் தூண்டுதலின் பேரில் அல்லாமல் தங்களது சொந்த விருப்பத்தின்பேரில் அவர்களது சொந்தச் செலவில் பதாகைகள், தோரணங்கள், கொடிகள், உருவப்படங்கள் ஆகியவற்றை வைக்கலாம், என்றும் அவ்வாறு வைக்கும் போது அவை யாருக்கும் எந்தவகையிலும் எவ்விதப் பாதிப்பையும் ஏற்படுத்தக் கூடாது என்றும் 7.10.2008 ஆம் நாளிட்ட 3/7/2008-JS –II ஆம் எண் கடிதத்தில் இந்தியத் தேர்தல் ஆணையம் உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. மேலும், காட்சிப்படுத்தப்படும் அத்தகைய பதாகைகள், கொடிகள் போன்றவை யாதொரு குறிப்பிட்ட வேட்பாளருக்காக வாக்களிக்க வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டிருந்தால், இந்தியத் தண்டனை விதிக்கோவையின் 171H ஆம் பிரிவின் கீழ் பொது அல்லது சிறப்பு ஆணையரிடம் அனுமதி பெறுவது அவசியமானதாகும். கட்சி அலுவலகங்களில் மற்றும் கட்சியின் பணியாளர்கள் / ஆதரவாளர்களின் வீடுகளில் கட்சியின் / வேட்பாளரின் மூன்று கொடிகளை மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என ஆணையம் தற்போது தெரிவித்துள்ளது. சில நபர்கள் ஒன்றிற்கு மேற்பட்ட கட்சியின் அல்லது வேட்பாளரின் கொடிகளைக் காட்சிப்படுத்த விரும்பினால், ஒவ்வொரு கட்சிக்கும் / வேட்பாளருக்கும் ஒரேயொரு கொடி மட்டுமே பயன்படுத்த வேண்டும் என வரையறைக்கப்படுகிறது. உள்ளூர்

சட்டம் மற்றும் நீதிமன்ற ஆணைகளுக்கு உட்பட்டுக் கொடிகள் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

வாகனங்களில் பயன்படுத்தப்படும் பதாகைகள், கொடிகள் பின் வருமாறு முறைப்படுத்தப்பட வேண்டும்ஒழுங்குபடுத்தப்படும்;-

a. ஸ்பாட் லைட்டுகள் அதாவது பிரத்யேகமான விளக்குகள் மற்றும் சைரன் ஒலி அமைப்பான்களை பொருத்தக்கூடாது.

b. மாநிலம் முழுவதிலும் உள்ளூர் சட்டம், நீதிமன்ற உத்தரவுகள் மற்றும் மோட்டார் வாகனச் சட்டம் ஆகியவற்றின் விதித்துறைகள் அனைத்தும் ஒரே சீராக நடைமுறைப்படுத்தப்படுவதைத் தலைமைத் தேர்தல் அதிகாரி உறுதிசெய்ய வேண்டும்.

c. இப்பொருண்மை குறித்து சட்டத்தின் தொடர்புடைய விதித்துறைகள் மற்றும் நீதிமன்ற உத்தரவுகள் / ஆணைகளுக்குட்பட்டு (ஏதேனுமிருப்பின்) யாதொரு நபரும் தகுதிவாய்ந்த அதிகாரியின் முன் அனுமதி பெற்றிருந்தாலொழிய யாதொரு வாகனங்களின் மீது யாதொரு கொடி அல்லது பதாகை அல்லது பெரிய அளவிலான ஸ்டிக்கர் போன்றவற்றை வைக்கக் கூடாது.

d. அரசியல் கட்சியின் அல்லது வேட்பாளரின் கொடி / விளம்பரப் பதாகைகளின் உயரளவு எண்ணிக்கை மற்றும் அளவு போன்ற விவரங்கள் பின்வருமாறு :-

   i) இரு சக்கர வாகனங்கள் – 2x1 அடி அளவுள்ள ஒரு கொடி. ஸ்டிக்கர் அல்லது விளம்பரப் பதாகைகளுக்கு அனுமதியில்லை.

   ii) மூன்று சக்கர வாகனங்கள், நான்கு சக்கர வாகனங்கள், பேட்டரி ரிக்சுஷாக்கள் – ஸ்டிக்கர் அல்லது விளம்பரப் பதாகைகளுக்கு அனுமதியில்லை. 3x2 அடி அளவுள்ள ஒரு கொடி மட்டும்.

   iii) தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சி தேர்தலுக்கு முன்னதாக மற்றொரு அரசியல் கட்சியுடன் கூட்டணி அமைத்திருந்தால் அல்லது தொகுதிப் பங்கீடு உடன்பாடு செய்திருந்தால் வேட்பாளர் / அரசியல் கட்சியினர் தேர்தல் பரப்புரை வாகனத்தில் ஒவ்வொரு கட்சிக்குமான ஒரு கொடியைக் காட்சிப்படுத்தலாம்.

e. தேர்தல் பரப்புரையில் ஒரே நேரத்தில் பேட்டரி ரிக்ஷாக்கள் உட்பட 10 வாகனங்களுக்கு மட்டுமே சாலையில் செல்வதற்கு அனுமதியளிக்கப்படவேண்டும். வாகனங்களின் எண்ணிக்கை 10க்கும் மேல் இருப்பின் பரப்புரை குழுவின் ஒவ்வொரு 10 வாகனங்களும் ஒவ்வொரு தொகுதியாக பிரித்து அனுப்பப்பட வேண்டும்.

8. **தற்காலிக பரப்புரை அலுவலர்:** இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 12.11.2007 ஆம் நாளிட்ட 437/6/2007(INST)-PLN-III ஆம் எண் கடிதத்தில் ஏனையவற்றிற்கிடையே எந்தவொரு பொது அல்லது தனியார் சொத்துகளை ஆக்கிரமிப்பு செய்து அல்லது மத வழிபாட்டு தலங்கள் அல்லது மத வழிபாட்டு தல வளாகங்கள் அல்லது கல்வி நிறுவனங்கள் அல்லது மருத்துவமனைகள் அல்லது ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள வாக்குப்பதிவு மையங்களிலிருந்து 200 மீட்டர் தொலைவிற்குள் அத்தகைய அலுவலகம் அமைக்கப்பட மாட்டாது என வகைசெய்யப்பட்டுள்ளது. அத்தகைய அலுவலகங்களில் தொடர்புடைய அரசியல் கட்சியின் கொடி மற்றும் தேர்தல் சின்னங்கள் மற்றும் புகைப்படங்களுடன் கூடிய விளம்பரப் பதாகைகள் மட்டும் வைக்கலாம். அத்தகைய அலுவலகங்களில் வைக்கப்படும் பதாகைகள் 4அடி x 8அடி என்ற அளவிர்கு மிகாமல் இருக்க வேண்டும். உள்ளூர் சட்டமானது குறைவான அளவிற்குக் வரையறை செய்திருப்பின் அதற்குட்பட்ட அளவிலேயே பதாகைகள் அமைக்கப்படவேண்டும். தேர்தல் செலவினப் பார்வையாளர் தொடர்புடைய வேட்பாளரின் கணக்கில் செலவினம் முறையாக கணக்கு வைக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

9. **ஒற்றைச் சாளர முறை –** இது தொடர்பாக இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 20.3.2014 ஆம் நாளிட்ட 464/INST/2014-EPS ஆம் எண் கடிதத்திலுள்ள அறிவுறுத்தல்களின் மீது கவனம் ஈர்க்கப்படுகிறது. தகவல் தொழில் நுட்ப துறையின் சுவிதா வலைத்தளம் வாயிலாக அனுமதிகள் கோரும் அனைத்து விண்ணப்பங்களும் 24 மணி நேரத்திற்குள் தீர்வு செய்யப்பட வேண்டும் என தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

10. **தேர்தல் தொடர்பான விளம்பரங்களுக்குத் தொடர்வண்டி நிலையங்கள், பேருந்து நிலையங்கள், வானூர்தி நிலையங்கள், தொடர்வண்டி பாலங்கள்**

**மற்றும் இருப்புப்பாதைகள், அரசுப் பேருந்துகள், அரசு மற்றும் பொதுத்துறை கட்டடங்கள், மின்சார மற்றும் தொலைபேசி கம்பங்கள், நகராட்சி அல்லது உள்ளூர் அதிகார அமைப்புகளின் கட்டடங்கள் மற்றும் அவை தொடர்பான இடங்களைப் பயன்படுத்துதல்**

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 29.12.2015 ஆம் நாளிட்ட 437/6/INST/2015-CCS ஆம் எண் கடிதத்தில் உள்ள உத்தரவானது யாதொரு அரசு / பொதுத் துறை நிறுவன வளாகங்களில் வணிகம் சார்ந்த இடமாக இருப்பினும் தேர்தல் பரப்புரை தொடர்பான சுவரொட்டிகள், சாரக்கட்டுகள், விளம்பரப் பதாகைகள் காட்சிப்படுத்தலை தடை செய்கிறது. தேர்தல் சமயங்களில் அரசியல் விளம்பரங்களை காட்சிப்படுத்துவதற்கு அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் வணிக இடங்களைப் பயன்படுத்தக்கூடாது. அரசியல் விளம்பரங்களை காட்சிப்படுத்துவதை தடுப்பதற்காக விளம்பரங்கள் செய்ய குத்தகைக்கு அளித்த விளம்பர முகமைகளுடனான ஒப்பந்தங்களில் அல்லது பொதுத் துறை நிறுவனங்களின் துணை விதிகளில் குறிப்பிட்ட விதித்துறைகளில் இல்லாத நேர்வுகளில், வணிக விளம்பரங்களை வைப்பதற்காக விளம்பர முகவரமைப்புகளுக்குக் குத்தகை அடிப்படையில் இடத்தை அளிக்கும் போது வணிக முகவரமைப்புகளுடன் / நிறுவனங்களுடன் பொதுத்துறை நிறுவனங்கள் வணிக ஒப்பந்தங்களைச் செய்யும் போது, பின்வரும் பத்தியை சேர்க்க வேண்டும் என உத்தரவிடலாம். அதாவது, “மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் செயலில் இருக்கும் போது, விமான நிலையம், இரயில் நிலையங்கள், மாநிலத்திற்கிடையே / உள்ளூர் பேருந்து நிலையங்கள், அரசு போக்குவரத்து கழகம், அஞ்சல் நிலையங்கள், அரசு மருத்துவமனைகள் / மருந்தகங்கள் போன்ற பகுதியில் (முதன்மை நெடுஞ்சாலைகள், முக்கியச் சாலைகள் நீங்கலாக) வணிக விளம்பரங்களுக்காகக் குத்தகைக்கு அளிக்கப்பட்ட இடங்களில் அரசியல் விளம்பரங்கள் காட்சிப்படுத்தப்படக்கூடாது / ஒட்ட கூடாது. அவ்வாறு வழங்கப்பட்ட இடங்களில் மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் செயலில் இருக்கும் போது யாதொரு அரசியல் விளம்பரம் செய்யப்பட்டிருப்பின் அதனை உடனடியாக அகற்ற வேண்டும்”.

அரசு / உள்ளூர் அமைப்புகள் / பொதுத்துறை நிறுவனங்கள் / கூட்டுறவு ஆகியவற்றுக்கு சொந்தமான இடத்தில் நடைபெறும் கூட்டங்கள் குறித்த நேர்வில், இந்தியத் தேர்தல் ஆணையம் 7.10.2008 ஆம் நாளிட்ட 3 / 7 / 2008 ஆம் எண் உத்தரவில் ஏனையவற்றிற்கிடையே, அதனை பயன்படுத்துவதை நிருவகிக்கும் சட்டம் / வழிக்காட்டிக்குறிப்புகளில் அரசியல் கூட்டங்களை நடத்த தடைசெய்யவில்லையாயினும் கூட்டம் நடத்த யாதொரு மறுப்பும் இல்லை என்ற போதிலும் வாய்ப்பு முறையில் இடம் ஒதுக்கப்பட்டதையும் யாதொரு அரசியல் கட்சிக்கு அல்லது வேட்பாளருக்கு ஏகபோக உரிமை அளிக்கப்படவில்லை என்பதையும் உறுதிசெய்யப்பட வேண்டும் என வகைசெய்கிறது. அத்தகைய நிகழ்வுகளில், செயலிலுள்ள சட்டம் / வழிக்காட்டிக்குறிப்புகளின் கீழ் வரும் யாதொரு வரையறைக்குட்பட்டு கூட்டம் நடைபெறும் காலக்கட்டங்களில் பதாகைகள், தோரணங்கள் , கொடிகள், உருவப்படங்கள் ஆகியவற்றைக் காட்சிப்படுத்துவதற்கு அனுமதிக்கலாம். கூட்டம் நடந்து முடிந்த பின்னர், வளாகங்களை பயன்படுத்திய கட்சியினர் / தனிநபர் இத்தகைய பதாகைகள், கொடிகள் போன்றவற்றை உடனடியாக அகற்றப்பட வேண்டும். எந்தநேர்விலும் கூட்டம் முடிந்தபின்னர் குறித்த காலத்திற்குள் அகற்றப்பட வேண்டும். இத்தகைய வளாகங்களில் சுவர் விளம்பரம் செய்தல் அல்லது சுவரில் ஒட்டுதல் போன்றவை நிரந்தரமாக / பகுதி நிரந்தரமாக மறைக்கும் விதமான அனுமதிக்கப்பட மாட்டாது. மேற்சொன்ன அறிவுறுத்தல்களை ஆணையம் மீண்டும் வலியுறுத்துகிறது. இந்தியத் தேர்தல் ஆணையத்தின் பார்வையாளர்கள் கவனமாகக் கண்காணித்து, இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு அவர்களின் அறிக்கைகளைக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தகவல் தெரிவித்து உரியவாரு விளம்பரப்படுத்தி ஏட்டளவில் மட்டுமின்றி சொல்லாலும் செயலாலும் இணங்கி நடப்பதை உறுதி செய்ய வேண்டும்.

## உத்தரவு தொடர் எண்.88

அங்கீகரிக்கப்பட்ட அனைத்துத் தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் தலைவர் / செயலாளர் / பொதுச் செயலாளர் ஆகியோருக்கு அனுப்பப்பட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 10.01.2017 ஆம் நாளிட்ட 437/6/2017 (கொள்கை) ஆம் எண் கடிதம். அனைத்து மாநிலங்கள் / மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு நகல் அனுப்பப்படுகிறது.

**பொருள்: 2017 ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவைகளுக்கான பொதுத் தேர்தல்கள் – மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் – தொடர்பாக.**

மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் மற்றும் இந்தியத் தண்டனை விதிக்கோவையின் பல்வேறு விதித்துறைகள் ஏனையவற்றிற்கிடையே அரசியல் கட்சியினர் மற்றும் அதன் தலைவர்கள் மதம் அடிப்படையில் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினருக்கிடையே வேற்றுமையை உருவாக்கும் அறிக்கைகள் வெளியிடுவதைக் கைவிட வேண்டும் என வழிவகைச் செய்கிறது. ஏனெனில் அவை சுதந்திரமான மற்றும் அமைதியான முறையில் தேர்தலை நடத்துவதற்கும் சமுதாயத்தில் நிலவும் அமைதிக்கும் ஊறு விளைவிக்கும் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். இந்த விவகாரத்தில் நாட்டின் மாண்பமை உச்ச நீதிமன்றம் தனது வருத்தத்தை தெரிவித்துள்ளது. (காண்க: 37/1992 (அபிராம் சிங் எதிர் C.D.கம்மசேன்) ஆம் சிவில் மேல்முறையீட்டு எண்ணிட்ட 02.01.2017 ஆம் நாளிட்ட தீர்ப்பு மற்றும் ஆணை மற்றும் 8339/1995 ஆம் சிவில் மேல்முறையீட்டு எண்.)

சட்டத்தின் விதித்துறைகளை அல்லது மாதிரி தேர்தல் நடத்தை விதிகளை மீறினால் தேர்தல் ஆணையம் அமைதியான பார்வையாளராக வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்காது. தண்டனையிலிருந்து யாரும் தப்ப முடியாது. ஆணையம் தனது அனைத்து அதிகாரங்களையும் கொண்டு, யாதொரு விதிமீறலுக்கும் கடுமையான நடவடிக்கை எடுக்கும்.

## உத்தரவு தொடர் எண்.89

அங்கீகரிக்கப்பட்ட அனைத்துத் தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் தலைவர் / செயலாளர் / பொதுச் செயலாளர் ஆகியோருக்கு அனுப்பப்பட்ட 25.02.2017 ஆம் நாளிட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 437/6/2017 (கொள்கை) ஆம் எண் கடிதம். அனைத்து மாநிலங்கள் / மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு நகல் அனுப்பப்படுகிறது.

**பொருள்: 2017 ஆம் ஆண்டு உத்தரப்பிரதேசம், உத்தரகாண்ட், பஞ்சாப், மணிப்பூர் மற்றும் கோவா ஆகிய மாநிலங்களின் சட்டமன்றப் பேரவைகளுக்கான பொதுத் தேர்தல்கள் – மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் – தொடர்பாக.**

பார்வை:- உத்தரவு தொடர் எண்.83, 84 மற்றும் 87

1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் விதித்துறைகள், மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் மற்றும் இந்தியத் தண்டனை விதிக்கோவை குறித்து நீங்கள் முழுமையாக அறிந்திருப்பீர்கள் என்றும், அரசியல் கட்சி தலைவர்கள் மற்றும் அதன் வேட்பாளர்கள் மதம், சாதி, சமயம், வகுப்பு மற்றும் மொழி ஆகியவற்றின் அடிப்படையில் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினருக்கிடையே வேற்றுமை மற்றும் பகைமையை உருவாக்கும் வகையில் அறிக்கைகள் வெளியிடுவதைக் கைவிட வேண்டும் என்றும், அவை சுதந்திரமான மற்றும் அமைதியான முறையில் தேர்தலை நடத்துவதற்கும் சமுதாயத்தில் நிலவும் அமைதிக்கும் ஊறு விளைவிக்கும் என்றும் தெரிவிக்க நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

தேர்தல் பிரச்சாரத்துடன் மதம் மற்றும் சாதியை இணைப்பது குறித்து மாண்பமை உச்ச நீதிமன்றம் அண்மையில் தனது வருத்தத்தை தெரிவித்துள்ளது. . (காண்க: 37/1992 (அபிராம் சிங் எதிர் C.D.கம்மசேன்) ஆம் சிவில் மேல்முறையீட்டு எண்ணிட்ட 02.01.2017 ஆம் நாளிட்ட ஆணை மற்றும் சிவில் மேல்முறையீட்டு எண். 8339/1995) மேற்சொன்ன (1), (2) மற்றும் (3) இன் படி, இந்த விவகாரம் குறித்து ஆணையம் விரிவான வழிகாட்டிக் குறிப்புகளை வெளியிட்டுள்ளது.

தேர்தல் பிரச்சாரத்தின் போது, உன்னத நிலையைப் பேணுவதற்குக் கடந்த காலங்களில் அரசியல் கட்சிகளுக்கு ஆணையம் மீண்டும் மீண்டும் அறிவுரைகளை வழங்கியுள்ளது. இருப்பினும், மேற்சொன்ன அறிவுரைகள் விரும்பிய பயனை அளிக்கவில்லை என்பதை அறிந்து குழு வருந்தியதுடன், அண்மைக்காலங்களில் அரசியல் தலைவர்கள், அவர்களது தேர்தல் பிரச்சாரத்தின் போது மதத்தை இணைத்து அச்சமூட்டும் நிலையை ஏற்படுத்தும் கிளர்ச்சிமிகுந்த அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றனர் என்பதையும் ஆணையம் கவனத்தில் கொண்டது. சில நேரங்களில், இத்தகைய அறிக்கைகள் தேர்தல் காரணமாக மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் செயலில் இருக்கும் மாநிலத்தில் வெளியிடாமல் வேறு பகுதிகளில் வெளியிடப்படுகின்றன.

இந்த மின்னணு காலத்தில், அரசியல் கட்சியினர் அறிக்கை வெளியிடும் போது, அவை அந்தப் பகுதி அல்லது அங்கு உள்ள பார்வையாளர்களை மட்டும் சென்றடையாமல், தொலைக்காட்சிகள், சமூக ஊடகங்கள் அல்லது அச்சு ஊடகங்கள் வாயிலாகத் தேர்தல் நடைபெறும் வேறு பகுதிகளையும் / மாநிலங்களையும் சென்றடைகின்றன. அவ்வகையான அறிக்கைகள் சந்தேகத்திற்கிடமின்றி தேர்தல் நடக்கும் மாநிலங்களில் உள்ள வேட்பாளர்களின் மனதில் தீயவிளைவுகளை ஏற்படுத்தும். இத்தகைய அறிக்கைகள் தேர்தல் நடைபெறும் பகுதிகளில் நிலவும் அமைதிக்கும் நல்லிணக்கத்திற்கும் அடிக்கடி பாதிப்பு ஏற்படுத்துவதோடு, தேர்தல் களத்தில் ஊறு விளைவிக்கக்கூடிய தாக்கத்தையும் ஏற்படுத்துகிறது.

ஒவ்வொரு பொறுப்புள்ள குடிமகனும், அரசியல் கட்சியினரும் இத்தகைய அறிக்கைகள் வெளியிடுவதைத் தவிர்ப்பதற்காகத் தேர்தல் காலத்தின் போது, பொது இடத்தில் சொற்பொழிவுகள் / உரைகள் / பேட்டியளித்தல் போன்றவை அளிக்கும் போது சுயக் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும் என ஆணையம் கருதுகிறது. அரசியல் தலைவர்கள் மதம் மற்றும் சாதியை இணைத்துப் பொருள் கொள்ளத்தக்க வகையில் அறிக்கை வெளியிடக்கூடாது. மேலும் ஒருவருக்கொருவர் விரோதம் ஏற்படுத்தும் வகையிலும், மரியாதை குறைவு

ஏற்படுத்தும் வகையிலும், அரசியல் கட்சியினருக்கிடையே பகை உணர்வைத் தூண்டும் வகையிலும் அவர்களது தேர்தல் பிரச்சாரத்தில் மக்களிடையே மதம், சாதி, வகுப்பு, மற்றும் மொழி வேற்றுமைகளைத் தூண்டும் வகையிலும், அவர்களது அறிக்கை அமையவில்லை என்பதை உறுதிசெய்ய வேண்டும்.

இத்தகைய அறிக்கைகள் மாதிரி தேர்தல் நடத்தை விதிகளுக்கும் சட்டத்தின் உணர்வுகளுக்கும் எதிரானது மட்டுமல்லாமல் தேர்தல் நடைபெறாத பகுதிகளிலும், தேர்தல் நடைபெறும் மாநிலங்களில் / பகுதிகளில் உள்ள வாக்காளர்களின் மனதில் விரும்பத்தகாத தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எனவே இத்தகைய அறிக்கைகள் வெளியிடுவதைத் தவிர்க்க வேண்டும் என அரசியல் கட்சியினரையும் அரசியல் தலைவர்கள் அனைவரிடமும் ஆணையம் மீண்டும் ஒருமுறை தெரிவிக்கிறது.

## உத்தரவு தொடர் எண்.90

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட 24.05.2017 ஆம் நாளிட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 437 / 6 / உத்தரவு / 2016-CCS ஆம் எண் கடிதம்.

**பொருள்:- தேர்தல் பிரச்சாரம் முடிவடைந்த பின்னர் தொகுதியில் அரசியல் பொறுப்பாளர்களின் நடமாட்டம் குறித்த வரையறை:**

பார்வை: கட்டளை தொடர் எண். 73, 74 மற்றும் 75

தொகுதியில் வாக்காளர் அல்லாத அனைத்து அரசியல் பொறுப்பாளர்களும் தேர்தல் பிரச்சாரம் முடிவடைந்தவுடன் தொகுதியை விட்டு வெளியேற வேண்டும் என மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆணையத்தின் கடிதம் வழிவகைசெய்கிறது (1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 126 ஆம் பிரிவும் குறிப்பிடுகிறது) என்பதைத் தங்களுக்குத் தெரிவிக்க நான் பணிக்கப்பட்டுள்ளேன். அண்மையில் நடைபெற்ற இடைத்தேர்தலின் போது ஒரு முக்கிய அரசியல் கட்சித்தலைவர் பிரச்சார கால அளவு முடிவடைந்த பின்னரும் சில மருத்துவக் காரணங்களை குறிப்பிட்டு தொகுதியில் இருந்து வெளியேறாமல் இருந்தார் என்பது தங்களது கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிறது.

**இந்த விவகாரத்தைக் கருத்திற்கொண்டு ஆணையம் பின்வரும் வழிக்காட்டிக்குறிப்புகளை வெளியிடுகிறது-**

1. **சம்பந்தப்பட்ட மாவட்டத் தேர்தல் அதிகாரி, தலைமைத் தேர்தல் அதிகாரியுடன் கலந்தாலோசித்து விலக்கு கோரும் அரசியல் பொறுப்பாளர்களின் உடல் பரிசோதனைக்காக மருத்துவக் குழு ஒன்றை அமைக்க வேண்டும். அக்குழுவினர், நோயாளியை மருத்துவ பரிசோதனை செய்த பின்னர், அவரது மருத்துவ அறிக்கையினை ஆய்வு செய்து, நோயாளியின் (அரசியல் தலைவர்) நிலை குறித்து அதாவது மருத்துவ காரணங்களின்படி அவரை அவசர ஊர்தி அல்லது வாகனங்களினால் தொகுதிக்கு வெளியில் கொண்டு செல்ல அல்லது இடமாற்றம் செய்ய இயலாது என்ற அறிக்கையை அளிக்க வேண்டும்.**

2. **சம்பந்தப்பட்ட தலைமை தேர்தல் அதிகாரி வாயிலாகப் பெறப்பட்ட மருத்துவ வாரியத்தின் அறிக்கை பரிசீலிக்கப்பட்ட பின்னர், விலக்களிப்பது குறித்த முடிவை இந்தியத் தேர்தல் ஆணையத்தால் மட்டுமே பரிசீலிக்கப்படும்.**
3. **விலக்கு அளிக்கப்பட்ட அத்தகைய அரசியல் பொறுப்பாளர்கள் யாதொரு அரசியல் / தேர்தல் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு எந்தவிதத்திலும் ஈடுபடுத்தப்படக்கூடாது என்ற நிபந்தனையின் பேரில் தொகுதிக்கு உள்ளேயே தங்குவதற்கு அனுமதியளிக்கப்படலாம். இதனை உறுதி செய்வதற்கு, ஒரு வீடியோ கண்காணிப்பு குழுவானது நீதித்துறை நடுவரின் தலைமையின் கீழ் தகுதிவாய்ந்த காவல்துறை பணியாளர்களுடன் அந்த இடத்தின் அனைத்து நுழைவாயில்களிலும் வாக்குப்பதிவு முடியும் வரை பணியமர்த்தப்படவேண்டும். தொகுதியில் அவ்வாறு தங்குவதற்காக ஏற்படும் செலவினமானது அந்தத் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளரின் தேர்தல் செலவினக் கணக்கில் சரியாகக் கணக்கு வைக்கப்பட வேண்டும்.**

முழு இணக்கத்திற்காகச் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தயவுசெய்து தெரிவிக்கவும். தேர்தல் தொடர்புடைய அலுவலர்களின் பயிற்சிக்காகப் பயிற்சி தொகுதியில் இது சேர்க்கப்படவேண்டும்.

**உத்தரவு தொடர் எண்.91**

அனைத்து மாநிலங்களின் / மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் அங்கீகரிக்கப்பட்ட மாநில கட்சிகளின் தலைவர் / பொதுச் செயலாளர் அனைத்து மாநிலங்கள் / மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் ஆகியோருக்கு அனுப்பப்பட்ட 24.05.2017 ஆம் நாளிட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 437/6/INST/2016-CCS ஆம் எண் கடிதம்.

**பொருள்:- தேர்தல் பிரச்சாரத்தின் போது அரசியல் கட்சிகள் தேசியக் கொடியைப் பயன்படுத்துதல் – தொடர்பாக**

அண்மையில் நடந்த இடைத்தேர்தலில், தேர்தல் பிரச்சாரத்தின் போது தேசியக் கொடி போர்த்தப்பட்டிருந்த அரசியல் தலைவரின் போலி சவப்பெட்டி தேர்தல் இலாபத்திற்காகப் பயன்படுத்தப்பட்டது நமது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது என்பதை தங்களுக்குத் தெரிவிக்க நான் பணிக்கப்பட்டுள்ளேன். அது பொருத்தமற்றது. அரசியல் கட்சிகளின் பேரணிகளில் தேசியக் கொடியைச் சரியான முறையில் பயன்படுத்துவது தொடர்பாக ஆணையத்தின் 04.03.2014 ஆம் நாளிட்ட (நகல் இணைக்கப்பட்டது) 509/35/2014 – RCC ஆம் கடிதத்தின் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது. இது ஏனையவற்றிற்கிடையே, 1971 ஆம் ஆண்டு தேசிய மரியாதைக்கு எதிரான அவதூறுகளைத் தடுத்தல் சட்டம் மற்றும் 1950 ஆம் ஆண்டு சின்னங்கள் மற்றும் பெயர்கள் (முறையற்ற வகையில் பயன்படுத்துவதை தடுத்தல்) சட்டத்தின் விதித்துறைகள் மற்றும் தேசிய கொடி குறியீட்டின் விதித்துறைகள் கட்டாயம் பின்பற்றப்படுவதை உறுதிசெய்வது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கடமை என வகைசெய்கிறது.

கண்டிப்பாக பின்பற்றுவதற்கு சம்பந்தப்பட்ட அனைவரின் கவனத்திற்கு வாய்மொழியாகவும் எழுத்துப்பூர்வமாகவும் இதைக் கொண்டு செல்லுமாறு மீண்டும் ஒருமுறை உங்களிடம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**உத்தரவு தொடர் எண்.92**

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் 24.05.2017 ஆம் நாளிட்ட 437/6/INST/2016-CCS ஆம் எண் கடிதம். அங்கீகரிக்கப்பட்ட தேசிய அரசியல் கட்சிகளின் தலைவர் / பொதுச்செயலாளர் மற்றும் அனைத்து மாநிலங்கள் / மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் மாநில அரசியல் கட்சிகளின் தலைவர் / பொதுச்செயலாளர் ஆகியோருக்கு நகல் அனுப்பப்படுகிறது.

**பொருள்:தேர்தல் பிரச்சாரத்தின் போது வாகனங்களை பயன்படுத்துதல் – தெளிவுரை தொடர்பாக**

1988 ஆம் ஆண்டு மோட்டார் வாகன சட்டத்தின் விதித்துறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு உத்தரப்பிரதேச மாநிலத்தில் 1998 ஆம் ஆண்டு உத்தரப்பிரதேச மோட்டார் வாகன விதிகள் போன்று, சில மாநிலங்கள் / மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகள் தேவையான விதிகளை உருவாக்கியுள்ளன என்பதை கூறவும், மேலே குறிப்பிட்ட பொருண்மை குறித்து 4.01.2017 (தொடர் எண்.86) ஆம் நாளிட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 437/6/பிரச்சாரம்/இதேஆ/உத்தரவுகள்/ செயல்பாடுகள்/ மாதிரி தேர்தல் நடத்தை விதிகள்-2016ஆம் எண் கடிதத்தை குறிப்பிடுவதற்கும் நான் பணிக்கப்பட்டுள்ளேன். வாகனங்களைப் பயன்படுத்துவது, மத்திய / மாநில சட்டங்களின் விதித்துறைகள் முழுமையாக செயல்படுத்தப்படும் வகையில் தேர்தல் தொடர்பான நோக்கங்களுக்கான வாகனங்களின் பயன்பாடு முறைப்படுத்தப்படவேண்டும். 4.01.2017 ஆம் நாளிட்ட மேற்சொன்ன அறிவுறுத்தல்களின் பின்னணியில் உள்ள அடிப்படைக் கொள்கைகள் பொதுமக்களின் பாதுகாப்பையும் பணபலம் தவறாக பயன்படுத்தப்படும்போது கண்காணிப்படுவதையும் உறுதிசெய்ய வேண்டும். பொதுமக்களின் பாதுகாப்பு என்பது சாலையில் செல்லும் நபர்களின் பாதுகாப்பு மற்றும் பிரச்சார வாகன ஓட்டுநர் மற்றும் அவருடன் செல்லும் நபர்களின் பாதுகாப்பு என்று பொருள்படும். பிரச்சார வாகனத்திற்கு அனுமதியளிக்கும் தேர்தல் நடத்தும் அலுவலர்

சம்பந்தப்பட்ட போக்குவரத்து அதிகாரிகளால் நிர்ணயிக்கப்பட்டுள்ள சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளை கவனத்தில் கொள்ள வேண்டும். பொதுவாக போக்குவரத்து அதிகாரிகள், வாகனத்தின் உற்பத்தியாளர்களால் நிர்ணயிக்கப்பட்ட குறிப்புகளான நிலையான வடிவமைப்பு, மின்கம்பியிடல் ஆகியவற்றின் அடிப்படையில் வாகனத்திற்கு அனுமதியளிப்பார்கள். வாகனத்தை கணிசமான அளவிற்கு மாற்றக்கூடிய வகையில் பிரச்சார வாகனத்தில் யாதொரு மாற்றங்களையும் / திருத்தங்களையும் செய்யக்கூடாது. ஒருவேளை தேர்தல் நடத்தும் அலுவலருக்கு / மாவட்ட தேர்தல் அதிகாரிக்கு ஏதேனும் ஐயம் ஏற்படுகின்ற நேர்வில் அனுமதியளிப்பதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட சாலை போக்குவரத்து அலுவலரிடம் கலந்தாலோசிக்க வேண்டும்.

2. ஆணையம் மேற்சொன்ன அறிவுறுத்தல்களில் மேலும் சில திருத்தங்கள் / விரிவாக்கங்களை செய்துள்ளது. அவை பின்வருமாறு;-

(i) பத்தி 2 (இருசக்கர வாகனங்களின் பயன்பாடு) (iii) – ஒரு இருசக்கர வாகனத்தில் அதிகபட்ச அளவான 1 அடி x ½ அடி கொண்ட ஒரே ஒரு கொடியை மட்டுமே அனுமதிக்கப்படலாம் என்று படிக்கப்படவேண்டும்.

(ii) பத்தி 3 (சாலை ஊர்வலம்) (2) (e) – சாலை ஊர்வலங்களில் பயன்படுத்தப்படும் பிரச்சார வாகனங்கள், ஒவ்வொரு 10 வாகனங்களாக பிரிக்கப்பட்டு அவற்றிற்கிடையே 100 மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும் என்று படிக்கப்படவேண்டும்.

(iii) பத்தி 3 (சாலை ஊர்வலம்) (2) (g) – ”கையில் எடுத்து கொள்ளப்படும் பதாகைகள் அதிகபட்ச அளவான 6 அடி x 4 அடி என்ற அளவில் இருக்க வேண்டும்; ”

(iv) பத்தி 3 (சாலை ஊர்வலம்) (2)(j) – தேர்தல் நடத்தும் அலுவலரின் அனுமதியுடன் சாலை ஊர்வலங்களில் செல்லும் பிரச்சார வாகனங்களில் 1 அடி x ½ அடி அளவு கொண்ட ஒரே ஒரு கொடியை மட்டுமே எடுத்து செல்வதற்கு அனுமதிக்கப்படும் என்று படிக்கப்படவேண்டும்.

(v) பத்தி 7 (கொடிகளைப் பயன்படுத்துதல்) (d) – மேற்சொன்ன பத்திகள் (i) மற்றும் (ii) இல் அனுமதிக்கப்பட்ட கொடியின் உயரளவு 1 அடி x ½ அடி என்று படிக்கப்பட வேண்டும். மேலும், பத்திகள் (i) மற்றும் (ii) இல் தெரிவிக்கப்பட்டவாறு யாதொரு வண்டிகளிலும், எந்தவொரு பதாகையும் அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், 1 அல்லது 2 சிறிய அளவிலான ஸ்டிக்கர்கள் ஒவ்வொரு வாகனத்திலும் அனுமதிக்கப்படலாம்.

யாதொரு வாகனத்திலும் கொடிகள் அல்லது ஸ்டிக்கர்களைப் பயன்படுத்தும் போது, அவ்வாகனத்தை ஓட்டும் ஓட்டுனரின் பார்வையையும், அவ்வாகனத்திற்கு முன்னால் அல்லது பின்னால் வரும் (சம்பந்தப்பட்ட வாகனத்தின் அல்லது சாலையிலுள்ள ஏனைய யாதொரு வாகனத்தின்) பயணிகளை எவ்விதத்திலும் பார்க்க இயலாமல் தடுக்கும் வகையில் இருக்கக்கூடாது.

கண்டிப்பான பின்பற்றப்படுவதற்காக சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தயவுசெய்து தெரிவிக்கவும்

## F..காணொளிக் காட்சி

## உத்தரவு தொடர் எண்.93

தேர்தல் ஆணையம், இந்திய அரசின் அமைச்சரவைச் செயலாளர், அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதியின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியின் முதன்மைத் தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ள **30.12.2004** ஆம் நாளிட்ட **437–66.2004–** PLNIIIஆம் எண் கடிதம்

**பொருள்:** மாதிரி நடத்தை விதிகள்– காணொளிக் காட்சியைத் தடை செய்தல் **–** தொடர்பாக.

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் மாநிலங்களின் முதலமைச்சர்கள், அமைச்சர்கள் மற்றும் ஆணைய மத்திய மற்றும் மாநில அரசுகளின் அரசியல் அமைப்புகள் மற்றும் அலுவலர்கள் காணொலிக்காட்சிக்கான வெளியீடுகள் தொடர்பான விவகாரத்தை ஆணையம் கருதிப்பார்த்துள்ளது. மற்றும் மாநிலங்களின் அரசியல் அமைப்புகள் மற்றும் அலுவலர்கள் தனியாகவோ அல்லது தொகுப் பாகவோ தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், மற்றும் மாநிலத்தில் அல்லது தொகுதியில், மாதிரி நடத்தை விதிகள் செயற்படுத்தப்பட்ட பின்னர் யாதொரு காணொலிக் காட்சியும் நடைபெறக் கூடாது என தேர்தல் ஆணையத்தின் **1996** ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் **17** ஆம் நாளிட்ட (நகல் இணைக்கப்பட்டுள்ளது) அ**437–6–96–**PLN-III ஆம் எண் கடிதத்தை பார்வையிட நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

இக்கடிதம் பெற்றமைக்கு ஒப்புதல் அளிக்கவும்

## உத்தரவு தொடர் எண்.94

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளின் முதன்மை செயலாளர்கள் மற்றும் தலைமை தேர்தல் அலுவலர்களுக்கு அனுப்பியுள்ள **18.03.2014** ஆம் நாளிட்ட **437–6–**உத்தரவு**–2014** CC&BE ஆம் எண்ணிட்ட தேர்தல் ஆணையத்தின் கடிதம்.

**பொருள்:** மாதிரி நடத்தை விதிகள் காணொலிக் காட்சியைத் தடை செய்தல் **–** தொடர்பாக மேற்சொன்ன பொருளில் தேர்தல் அணையத்தின் **30.12.2004** – PLN-IIIஆம் எண் கடிதத்தை நான் பார்வையிடப் பணிக்கப்பட்டுள்ளேன். மேற்சொன்ன கடிதத்தில் மத்திய அரசின் நேரடி ஆட்சிகுட்பட்ட பகுதிகள் அல்லது மாநில அரசுகளின் அலுவலர்களுடன் தலைமை அமைச்சர்–அமைச்சர்கள் அரசியல் அமைப்புகளுக்கான மாதிரி நடத்தை விதிகளை செயற்படுத்தும் காலத்தில் யாதொரு காணொலிக் காட்சியும் செயற்படுத்தப்படக்கூடாது.

**2.** ஆணையம், இயற்கை பேரிடரின் போது சூழ்நிலையை கணிக்க–கண்காணிக்க குறிப்பிட்ட வேண்டுகோளின்படி, காணொலிக் காட்சியை அனுமதிக்க மறுபரிசீலனை செய்யப்படும். குறிப்பிடத்தக்க அளவுகோல் **–** அளவிற்கு மேல் பேரிடர் ஏற்பட்ட உடன், காணொலிக் காட்சி அவசியமேன கருதப்பட்டால் கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் தொடர்புடைய அலுவலர்களுடன் ஒரு காணொலிக் காடசியை தொடர்புடைய முதலமைச்சர் அல்லது அமைச்சர் நடத்தலாம் என ஆணையம் முடிவு செய்துள்ளது.

i) காணொலிக் காட்சிணை நடத்துவதற்கு முன, தொடர்புடைய துறை மாநில தலைமை தேர்தல் அலுவலரை அணுகி, தலைமை தேர்தல் அலுவலரின் அனுமதியை பெற வேண்டும். யாதொரு அடுத்து வரும் காணொலிக் காட்சிக்கும் ஆணையத்திடமிருந்து அனுமதி பெறப்பட வேண்டும்.

ii) இயற்கை பேரிடருக்கான நிவாரணத்திற்கு பொறுப்பேற்றுக் கொண்ட அந்தப் பகுதியைச் சார்ந்த மாவட்ட ஆட்சியர்–மாவட்ட குற்றவியல் நீதிபதி மற்றும் அலுவலர்கள் மட்டுமே காணொலிக் காட்சியை கவனிக்க அழைக்கப்படுவார்.

iii) பேரிடரின் மீட்பு நிவாரணம் மற்றும் ஏனைய அம்சங்களைத் தவிர யாதொரு பிரச்சனையும் காணொலிக் காட்சியில் படக் கூடாது.

iv) காணொலிக் காட்சக்கு முன்போ அல்லது பின்போ யாதொரு செய்தி விளம்பர காணொலிக் காட்சியில் வழங்கப்படக் கூடாது.

v) ஊடகத்தில் காணொலிக் காட்சி வெளியிடப்படக்கூடாது.

vi) காணொலிக் காட்சியின் செயல் முறைகளுக்கான ஆடியோ, வீடியோ பதிவுகள் தொடர்புடைய துறையால் பராமரிக்கப்பட வேண்டும் மற்றும் தலைமை தேர்தல் அலுவலருக்கு அதன் நகல் அளிக்கப்பட வேண்டும்.

vii) காணொலிக் காட்சியின் மூலமாக வாக்காளர்களுக்கு உறுதி வழங்குமாறு அமையும் அறிவிப்புகள், யாதொரு நிதிக்கான அறிவிப்புகள் அல்லது வாக்குறுதி பணம் அல்லது இனத்திற்கான உதவிகள் மற்றும் அரசியல் வகைக்கான அறிக்கைகள் போன்றவை வழங்கப்படக்கூடாது.

viii) காணொலிக் காட்சியின்போது தலைமை தேர்தல் அலுவலரின் பிரதிநிதி இருத்தல் வேண்டும்.

**3.** மேற்கண்ட விலக்களிப்பு, குறிப்பிட்ட அளவுகோல்—அளவு பேரிடருக்கு பின் உடனடியாக மட்டுமே செயல்படுத்தப்படும். காணொலிக் காட்சியைத் தடை செய்வது அமைச்சர்கள் மற்றும் அரசியல் அமைப்புகள்அலுவலர்களால் மாதிரி நடத்தை விதிகளை செயற்படுத்தும்போது பொது விதியாக தொடரப்படலாம்.

**4.** இந்த உத்தரவுகள் மாநில அரசு மற்றும் மாநிலத்தின் அனத்து தேர்தல் அலுவலரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும்.

## G. விருந்தினர் இல்லங்கள் முதலியவற்றை பயன்படுத்துவதற்கான கட்டுப்பாடுகள்

## உத்தரவு தொடர் எண்.95

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதியின் தலைமைச் செயலாளர்கள், உள்ளுறை ஆணையர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் அலுவலர்களுக்கு அனுப்பியுள்ள**08.01.1998** ஆம் நாளிட்ட **437/6/98–** PLN –III ஆம் எண்ணிட்ட தேர்தல் ஆணையத்தின் கடிதம்.

<u>பொருள்</u> :

**தேர்தல் நோக்கம் தொடர்பான அரசியல் கட்சியின் கூட்டங்களை நடத்துவதற்கு அரசின் விருந்தினர் இல்லங்கள், பவன்கள் மற்றும் மாநில சதன்கள் பயன்படுத்துவதற்கான கட்டுப்பாடுகள்** ஆணையம், சில அரசியல் கட்சிகளின் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளுக்காக வேறுபட்ட மாநில விருந்தினர் இல்லங்கள், டெல்லியிலுள்ள பவன்கள் மற்றும் மாநில சதன்கள் பயன்படுத்துவதை குறிப்பில் கொண்டுள்ளது. இவை, கட்சி கூட்டங்கள், பத்திரிக்கையாளர் சந்திப்பு மற்றும் கலந்தறிதல் போன்றவற்றை நடத்துவதை உள்ளடக்கியுள்ளன. ஆணையம், அனைத்து காரணக் கூறுகளையும் கவனத்தில் கொண்ட பின், ஏற்கனவே குறிப்பிட்ட வகைகள் மற்றும் யாதொரு அரசியல் நடவடிக்கைகளுக்காகவும், அத்தகைய வளாகப் பகுதிகள் பயன்படுத்தப்படக் கூடாது என்று முடிவு செய்துள்ளது. டெல்லியுள்ள அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளின் உள்ளுறை ஆணையர்களும், தொடர்பு அலுவலர்களும், இதன் தொடர்பாக யாதொரு விதிமுறை மீறலும் ஏற்பட வில்லையென உறுதிபடுத்தமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இருப்பினும், உண்மையான தேவைகளான அலுவலர்களுக்கான இருப்பிடம் மற்றும் டெல்லிக்கு அலுவலக நோக்கங்களுக்காக மட்டுமே சுற்றுலா வந்துள்ள பார்வையாளர்கள் பயன்படுத்தவதில் யாதொரு கட்டுப்பாடுகளும் இல்லை. உள்ளுறை/தொடர்பு அலுவலர்கள் தமக்கான அறைகளை ஒதுக்கீட்டை நேர்மையான மற்றும் சமமான முறையில் மேற்கொள்ள வேண்டும் மற்றும் அரசியல் அமைப்புகள் மற்றும் கட்சிகள் முழு தளங்கள் மற்றும் பெரிய பகுதிகளை தனிப் பயன்பாட்டிற்காக, நீண்ட காலத்திற்காக வழங்குவது முறையானதல்ல என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகை அளிக்கவும்

## உத்தரவு தொடர் எண். 96

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளின் தலைமை செயலாளர்கள் மற்றும் அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளின் தலைமை தேர்தல் அலுவலர்களுக்கு அனுப்பியுள்ள **06.04.2004** ஆம் நாளிட்ட **437/6/38/2004–** PLN –III ஆம் எண்ணிட்ட தேர்தல் ஆணையத்தின் கடிதம்.

<u>பொருள்</u>:

**மாதிரி நடத்தை விதிகள் – ஓய்வு இல்லங்கள், பயணியர் விடுதி மற்றும் ஏனைய அரசு குடியிருப்புகளை பயன்படுத்துதல்** ஆணையம், ஓய்வு இல்லங்கள், பயணியர் விடுதி மற்றும் ஏனைய அரசு குடியிருப்புகளை மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகள் மற்றும் பல்வேறு மாநிலங்களில் மாதிரி நடத்தை விதிகளை மீறி சீரற்ற தன்மையில் ஒதுக்கீடு செய்தல் மற்றும் பயன்படுத்துவது தொடர்பாக ஆணையத்திற்கு முறையீடுகள் வந்துள்ளன.

ஆணையம், பல்வேறு பிரிச்சனைகளை கருத்திற் கொண்டபின்னும், தொடர்புடைய காரணிகளைக் கவனத்தில் கொண்டும், மாதிரி நடத்தி விதிகளின் விதித்துறைகளை சொல்லிலும் செயலிலும் செயல்படுத்த ஆணையம் கருதியுள்ளது மற்றும் நேர்மையான மற்றும் சமமான முறையில் குடியிருப்புகளை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும் அது முடிவெடுத்துள்ளது. அவை தொடர்பான கூறுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**இனம் VII ஆட்சியிலிருக்கும் கட்சி,** (iii) ஓய்வு இல்லங்கள். பயணியர் விடுதிகள் அல்லது ஏனைய அரசு குடியிருப்புகள், ஆட்சியிலிருக்கும் கட்சி அல்லது அதன் வேட்பாளர்கள் துய்ப்பதற்கான தனியுரிமையாக்கப்படக் கூடாது மற்றும் அத்தகைய குடியிருப்புகள் ஏனைய கட்சிகள் மற்றும் வேட்பாளர்களாலும் நேர்மையான முறையில் பயன்படுத்த அனுமதிக்கப்பட வேண்டும். ஆனால் பிரச்சார அலுவலகமாகவோ (அதனோடு தொடர்புடைய வளாகங்களையும் சேர்த்து) அல்லது தேர்தல் பிரச்சார நோக்கத்திற்கான யாதொரு பொதுக் கூட்டத்தையும் நடத்துவதற்கு எந்த கட்சியோ அல்லது வேட்பாளரோ பயன்படுத்துவதற்கான இடமாகவோ அனுமதிக்கப்படலாகாது.

சுற்றுலா மாளிகையை, பயணியர் விடுதியை எந்த செயலாளரும் பர ப்புரை அலுவலகமாக பயன்படுத்த அனுமதிக்கக்கூடாதென்பதை என உறுதி செய்யவேண்டும். ஏனெனில், சுற்றுலா மாளிகைகள் / பயணியர் விடுதிகள் அத்தகைய செயலாளர்கள் தங்கள் பயணங்களுக்கு இடையே கடந்து செல்லும்போது தற்காலிகமாக உணவு உண்டு தங்கியிருக்க (உண்டுறை விடுதி) மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

ஆணையம் மேலும் பணிக்கப்படுகிறது அதாவது :

(i) (மாதிரி நடத்தை விதிகளை மீறுவதாகக் கருதப்பட்டால் மற்றும் யாதொரு விதிமீறலும்) அரசியல் கட்சிகளை சார்ந்த உறுப்பினர்களால், அரசுக்குச் சொந்தமான விருந்தினர் இல்லங்கள் தற்செயலான கூட்டங்கள்கூட நடத்தப்பட அனுமதிக்கப்படமாட்டாது.

(ii) விருந்தினர் இல்லத்தில் குடியிருப்பு ஒதுக்கப்பட்ட நபரின் வாகனம் மற்றும் அந்நபரால் பயன்படுத்தப்படும் ஏனைய இரண்டுக்கு வாகனங்கள் மட்டுமே விருந்தினர் இல்ல வளாகத்திற்கும் அனுமதிக்கப்படும்.

(iii) யாதொரு தனி நபரால் 48 மணி நேரத்திற்கு மேல் அறைகள் பயன்படுத்தப்படக் கூடாது.

இருப்பினும், குறிப்பிட்ட பகுதியில் வாக்குப்பதிவு முடிவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்பும், வாக்குப்பதிவு அல்லது மறுவாக்குப்பதிவு முடிவடையும் வரை அத்தகைய ஒதுக்கீடுகள் நிறுத்தி வைக்கப்படும். இத்தகைய நெறிமுறைகள் தலைமை தேர்தல் அலுவலர்களால் கடுமையாக மற்றும் நடுநிலையாக செயல்படுத்தப்படுகிறதா என மேற்பார்வையிட ஆணையம் கட்டளையிடுகிறது.

## உத்தரவு தொடர் எண்.97

இந்திய அரசின் அமைச்சரவைக் குழு செயலாளர் அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளின் தலைமை செயலாளர்கள் மற்றும் தலைமை தேர்தல் அலுவலர்களுக்கு **1.4.2006** ஆம் நாளிட்ட **437/6/2006–** PLN –III (தொகுதி–II) ஆம் எண்ணுள்ள தேர்தல் ஆணையத்தின் கடிதம்.

**<u>பொருள்</u>: அரசு விருந்தினர் இல்லங்களை ஒதுக்கீடு செய்தல் – தொடர்பாக**

யாதொரு அரசு விருந்தினர் இல்லம்/ ஒய்வு இல்லம்/ மத்திய அல்லது மாநில அரசுகளின் பொதுத்துறை நிறுவனங்களின் விருந்தினர் இல்லத்தில், தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் அல்லது தேர்தல் நடக்கும் இடங்களில் தேர்தல் தொடர்பான அலுவலர்கள் அல்லது பார்வையாளர்களை தங்க வைக்க வேண்டி இருப்பதால் யாதொரு மத்திய அல்லது மாநில அரசின் அமைச்சர், மக்களை உறுப்பினர்கள் அல்லது சட்டசபை உறுப்பினர்கள் அல்லது அரசியல் அமைப்பினர் குடியிருக்கைக்கு அது வழங்கப்பட மாட்டாது என **14.3.2000** ஆம் நாளிட்ட **437/6/2006–** PLN –III (தொகுதி–II) ஆம் எண்ணிட்ட ஆணையத்தால் வெளியிடப்பட்ட கடிதத்தின் பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வேறுபட்ட அரசியல் தலைவர்களின் பாதுகாப்பு காரணங்களை கருத்திற் கொண்டு இத்தகைய விதிமுறைகள் தளர்த்தப்பட வேண்டுமென பல்வேறு மாநிலங்களின் அரசுகள் மற்றும் அரசியல் அமைப்பினரிடமிருந்து முறையீடுகள் பெறப்பட்டுள்ளன.

தேர்தல் அறிவிக்கப்பட்ட இடங்களில் அல்லது நடக்கும் இடங்களின் அரசினர் விருந்தினர் இல்லங்கள்/ஓய்வு இல்லங்கள் அல்லது மத்திய அல்லது மாநில அரசின் பொதுத்துறை நிறுவனங்களின் விருந்தினர் இல்லங்களில், மாநிலத்தால் 'Z' பிரிவு அளவுகோல் அல்லது பல்வேறு மாநில அரசால் சட்டங்களின் வழிமுறைகளின் கீழ் சமமான முறையில் அதற்கு நிகரான அளவிலான பாதுகாப்பு அளிக்கப்பட்டவர்களுக்கு, தங்க இடமளிக்கலாம் என பெறப்பட்ட கோரிக்கைகளை கருத்திற்கொண்டு ஆணையம் முடிவு செய்துள்ளது.

இத்தகைய குடியிருப்புகள் ஏற்கனவே தேர்தல் தொடர்பான அலுவலர்கள் அல்லது பார்வையாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படவோ அல்லது தங்கி இருக்கவோ இல்லை என்ற நிபந்தனைக்கு உட்பட்டவையாகும். அரசின் விருந்தினர் இல்லங்கள்/ஓய்வு இல்லங்கள் அல்லது பொதுத்துறை நிறுவனங்களின் விருந்தினர் இல்லங்களில் தங்கியிருக்கும்போது, அரசியல் அமைப்பினரால் யாதொரு அரசியல் நடவடிக்கையும் நடைபெறவில்லையென மேலே குறிப்பிட வேண்டும்.

## H.அமைச்சர்களின் சுற்றுலாக்கள்

## உத்தரவு தொடர் எண்.98

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளின் தலைமைத் தேர்தல் அலுவலர்களுக்கு அனுப்பியுள்ள **21.10.1994** ஆம் நாளிட்ட **437/6**/ES0025/94/MCS ஆம் எண்ணிட்ட தேர்தல் ஆணையத்தின் கடித எண்.

பொருள்: **தேர்தல் காலம்– அமைச்சர்களின் சுற்றுலாக்கள்**

அலுவலக வாகனங்களை, பிரச்சாரம், அரசியல் பணிகளில் தேர்தல் ஈடுபடுத்துதல் அல்லது தேர்தல் தொடர்பான பயணங்களை தேர்தலின்போது பயன்படுத்துவதற்கு முழுமையாகத் தடை விதித்தலையும் மற்றும் முற்றிலுமாக திரும்பப் பெறுதல் மற்றும் தேர்தலுடன் தொடர்புடைய ஏனைய யாதொரு நபர் அல்லது வேட்பாளர், தேர்தலுடன் தொடர்புடைய யாதொரு அரசியல் கட்சியும் யாதொரு காரணத்திற்காகவும், யாதொரு வாகனத்தையும் பயன்படுத்துவது முற்றிலுமாக தடை செய்யப்பட்டுள்ளதையும் **(1993** ஆம் ஆண்டு டிசம்பர் **31** ஆம் நாளிட்ட ஆணையத்தின் **437/6**/93/PS-II ஆம் எண்ணிட்ட கடிதத்தை காண்க) தனது கடித்தத்தில் ஆணையக் வலிபுயறுத்தியிருந்தது.

**2) 02.02.1994** ஆம் நாளிட்ட **437/6**/94 ஆம் எண்ணிட்ட ஆணையத்தின் கடிதத்தின் வாயிலாக உள்துறை அமைச்சகத்தின் **01.11.1989** ஆம் நாளிட்ட **10/17/89**/-M&G ஆம் எண்ணிட்ட சுற்றறிவிக்கையின் கவனத்தை ஈர்த்து, தேர்தல் பிரச்சாரம் தொடர்பான அமைச்சர்களின் பயணங்கள் தொடர்பான குறிப்புகளிலிருந்து, தண்டனை அளிப்பதிலிருந்து யாதொரு வகையிலும் புறந்தள்ளுதலோ, திருத்தம் செய்வதோ அல்லது பாதிப்படைவதிலிருந்தோ **01.11.1989** ஆம் நாளிட்ட உள்துறை அமைச்சகத்தின் குறிப்புகளுடன் வெளியிடப்படக்கூடாது.

**3)** உச்சநீதிமன்றத்தின் **29.04.1994** ஆம் நாளிட்ட **312** இண் **1994** ஆம் எண்ணிட்ட ரிட் மனு (சிவில்) ஆணையில் (தமிழ்நாடு மாநிலம் எதிர் தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் ஏனையோர்) தமிழ்நாடு முதலமைச்சரின் நேர்வில் பின்வரும் விதிவிலக்கினை அளிக்கக்கோரி பணிக்கப்பட்டுள்ளது.

" தேர்தல் நடைமுறைகள் தூய்மையாக இருக்கவேண்டும் என்பதையும் சுதந்திரமாகவும், நேர்மையான முறையிலும், பாதுகாப்பாக தேர்தல் நடைபெறுவதையும், உறுதி செய்யும் பொருட்டு தேர்தல் ஆணையம் மேற்கொள்ளும் முயற்சிகளை நாங்கள் அறிவோம். எனினும், சில முக்கிய அரசியல் பிரமுகர்களுக்கு, தீவிரவாதிகள் நடவடிக்கைகளினால் அவர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் இருக்க்க்கூடுமாதலால், உயர் நிலை பாதுகாப்பு அவர்களுக்கு தேவைப்படலாம் என்பதை தேர்தல்

ஆணையம் கவனத்தில் கொள்ளாது விட்டுவிடக்கூடுமென நாங்கள் அஞ்சுகிறோம். பிரதம மந்திரிக்கு மட்டும் பாதுகாப்பு அளிப்பதை உறுதிசெய்துவிட்டு மற்றவர்களுக்கு அப் தேர்தல் ஆணையம் அனுமதித்துள்ளவாறு அவ்வாணையத்தின் **31.3.1994** நாளிட்ட ஆணையின்படி, பாதுகாப்பை மறுப்பது என்பது இப்பொருள் சார்ந்த சிக்கலை சரியாக உணர்ந்து அறிந்ததாகக் கொள்ள முடியாது. எல்லா நிலைகளிலும் உரிய சட்டக்கூறுகளை தேர்தல் ஆணையம் கவனத்தில் கொள்ள வேண்டும். எனினும், இதில் ஒன்றை நாம் தெளிவாகக் கருத்தில் கொள்ளவேண்டும். தூய்மையான தேர்தல் நடைமுறையினை உறுதிப்படுத்துவதற்கான தேர்தல் ஆணையத்தின் பொறுப்புகளையும் கடமைகளையும் கருத்திற் கொள்ளும்போது, தமிழ்நாடு சிறப்புப் பாதுகாப்புபடை (TNSSG) இயக்குநரின் பாதுகாப்பு பற்றிய மதிப்பீடானது, மறைமுகமாக கட்சி சார்ந்த நடவடிக்கைகளுக்கு துணை போகும் அளவுக்கு வரம்பு மீறி மிகையாகவும் வெளிப்படையாகத் தெரியுமளவிற்கும் இருப்பதாக ஐயுறுவதற்கு தகுந்த ஆதாரம் இருப்பின், தேர்தல் ஆணையம், அதனை தேவையான திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதன் பொருட்டு மாநில அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லலாம்.

**4.** அமைச்சரவை செயலாளரின் **3.5.1994** ஆம் நாளிட்ட **10/22/094**–ES ஆம் எண்ணிட்ட கடிதத்தின்படி **1988** ஆம் ஆண்டு சிறப்பு பாதுகாப்புக் குழு சட்டத்தின் விதிமுறைகளின் கீழ் பின்வரும் பாதுகாப்பினை வழங்க அறிவுரைகளை வெளியிட்டுள்ளது.

( i) பிரதமர் மற்றும் அவரின் நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள்

(ii) எந்த மேனாள் பிரதமர் அல்லது அந்த மேனாள் பிரதமர் தம் பதவியை விட்டு விலகிய நாளிலிருந்து ஐந்தாண்டு காலம்வரை அவரது நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள்

**5.** உச்சநீதிமன்றத்தின் மேற்சொன்ன ஆணைகளைக் கருத்திற்கொண்டு, **31.12.1993** ஆம் நாளிட்ட **437/6**/93/PS-II ஆம் எண் கடிதத்தின் **3** ஆம்படி **8.5.1994** ஆம் நாளிட்ட அதே எண்ணுள்ள கடிதத்தின் **6** எண்ணுள்ள பத்தி கூறியுள்ளபடி, **31.12.1992** ஆம் நாளிட்ட **437/6**/93/P-II ஆம் எண்ணிட்ட சுற்றறிக்கை கடிதத்தில் மேற்சொன்ன **3** ஆம் பத்தியில் கீழ்க்கண்டவற்றை அதற்குப் பதிலாக மாற்ற ஆணையம் முடிவு செய்துள்ளது.

**3 (**A) - மேற்குறிப்பிட்ட **2** ஆம் பத்தியில் குறிப்பிடப்பட்ட தடையுத்தரவுகளில் ஒரே விதிவிலக்கானது, மக்களவை அல்லது சட்டசபையின் யாதொரு சட்ட வழிவகைகளின் மூலம் நிர்வகிக்கப்படுகின்ற பாதுகாப்புத் தேவைகளை, அதிக அளவில் பாதுகாப்பு தேவைப்படும் (பிரதமர் மற்றும் ஏனைய அரசியல் பிரமுகர்கள், அவர்களின் சார்பாக) உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய அதிகபட்ச மற்றும் தீவிரவாத நடவடிக்கைகள் மற்றும் பயமுறுத்தல்களைக் கண்காணிக்க வேண்டும்.

**3** (B) - தேர்தல் வழிமுறைகள் தொடர்பான தூய்மையை உறுதி செய்யும் பொருட்டு தொடர்பான பொறுப்புகள் மற்றும் கட்டுப்பாடுகளையும் தெளிவுபடுத்த ஆணையம் விரும்புகிறது. மேற்குறிப்பிட்ட சிறப்பு சட்டங்களின் கீழ் அதிகாரிகளால் பாதுகாப்பு தேவைகளை மதிப்பீடு செய்வதற்கான பொருட்களில் ஏதேனும்

ஐயம் இருப்பின் அல்லது கட்சி சார்ந்த வாக்குப்பதிவு விருப்பத்திற்காக, உயர்விற்காக, தெளிவின்றியோ அல்லது நேர்மையின்றியோ அரசின் யாதொரு சிறப்பு குறிப்புரைகள் மீறப்படும்போதும், இத்தகைய நேர்வில் அதனை சரிசெய்வதற்கான, முறையான படிகளை செயல்படுத்துவதற்காக, மத்திய அரசு மற்றும் / அல்லது மாநில அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லவேண்டும்.

3 (C) - இதனை அடைய, ஆணையம் யாதொரு நபரையும் பாதுகாப்புத் தேவைகள் தொடர்பான யாதொரு தகவலையும் பெற, மத்திய அரசு அல்லது மாநில அரசிடமிருந்து அழைக்கலாம். அத்தகைய தகவல், தொடர்புடைய அரசால், ஆணையத்துக்கு அளிக்கப்பட வேண்டும்.

**6.** உச்சநீதிமன்றத்தின் ஆணைகளைக் கடுமையாகக் கடைபிடிக்க, அனைத்து மாநில அரசுகள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட நிர்வாகத்தினரை **14.5.1994** ஆம் நாளிட்ட **437/6**/94 ஆம் எண்ணிட்ட ஆணையத்தின் கடிதத்தில் மேலும் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. மேலும், சட்ட பூர்வமான அதிகாரங்கள் அல்லது யாதொரு அதிகாரத்தின் கீழ் அளிக்கப்பட்ட தனிநபர்களுக்கான பாதுகாப்பு தொடர்பானவை முழுவதுமாக மதிக்கப்பட வேண்டும்.

**7.** அத்தகைய தனிநபர்கள் தேர்தல் தொடர்பான பணிகள் மற்றும் அரசியல் தேர்தலுக்காக மாநிலம் / தொகுதிக்குப் பயணிக்கும் போது, தடை அரண்/முகப்பு அலகு முதலிய பாதுகாப்பு ஏற்பாடுகளினால் ஏற்படும் செலவினங்கள் தொடர்புடைய அந்தந்த அரசியல் கட்சிகளால் ஏற்றுக் கொள்ளப்படவேண்டும் என ஆணையம் மேலும் அறிவுறுத்தியுள்ளது / ஆணை பிறப்பித்துள்ளது.

## உத்தரவு தொடர் எண்.99

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளின் தலைமைத் தேர்தல் அலுவலர்களுக்கு அனுப்பியுள்ள **17.01.1996** ஆம் நாளிட்ட **437/6/**96/PLN-III ஆம் எண்ணிட்ட தேர்தல் ஆணையத்தின் கடித எண்.

**பொருள்: பொதுத் தேர்தல்கள்– அமைச்சர்களின் சுற்றுலாக்கள்**

தேர்தல் பிரச்சாரத்துடன் தொடர்புடைய அமைச்சர்களின் சுற்றுலாக்களுக்கான சுருக்கக் குறிப்புகளின் தொகுப்பின் மறு ஆக்கத்தை இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் **1989** ஆம் ஆண்டு நவம்பர் **1** ஆம் தேதி நாளிட்ட **10/17/89–** M&G ஆம் சுற்றறிவிக்கையின் வாயிலாக தெரிவிக்க நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

இத்தகைய குறிப்புகள் தேர்தல் காலத்தின்போது, இந்திய அரசின் தனிப்பட்ட மற்றும் அலுவலக சுற்றுலாக்களுக்கான தனித்தனியாக குறிப்பிட்ட சில வழிவகைகள் கவனிக்கப்படுகின்றன. மற்றும், இத்தகைய சுற்றுலாக்கள், பொதுவாக ஒன்றின் மேல் ஒன்றாக அமையப்படக் கூடாது. மேற்குறிப்பிட்ட சுற்றறிவிக்கையின் நகல் **1989** ஆம் ஆண்டு நவம்பர் **1** ஆம் நாளிட்ட உள்துறை அமைச்சகத்தின் இணைப்பு I–னுடன் இணைக்கப்பட்டுள்ளது.

**2.** மத்திய அரசு மற்றும் மாநில அரசு இரண்டின் அமைச்சர்களால் தேர்தல்கள் நடைபெறும் இடங்கள், மற்றும் ஏனைய அருகிலிருக்கும் மற்றும் யாதொரு மாநிலத்தின் அமைச்சர்கள், அரசியல் தேர்தல் காலத்தின்போது உள்துறை அமைச்சகத்தின் மேற்குறிப்பிட்ட அறிவுறுத்தல்கள் கடைபிடிக்கப்படிக்கப்படுகிறதா என ஆணையம் கவனமாகப் பார்வையிடுகிறது.

மேற்குறிப்பிட்ட உள்துறை அமைச்சகத்தின் அறிவுரைகள் தெளிவின்றி, உறுதியின்றி மற்றும் இசைவுத் தன்மையுடையதாக அமைந்து இருப்பதாவுது, அவை தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படத்தக்கதாகவும், தவறாகப் பயன்படுத்தப்படுவதாகவும், தேர்தல் காலத்தின் போது அதிக பொது அலுவலக நபர்களால் பாரபட்சமற்ற நிலையை உருவாக்குவதாகவும் விளங்கி வருவதால், தேர்தல் நடவடிக்கைகளில் தூய்மையைப் பராமரிப்பதில் இடரை ஏற்படுத்தி, வாக்காளர்களின் வாக்களிக்கும் அதிகார உரிமையை களங்கப்படுத்தியும் அமைகிற விதத்தில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் அதிகாரமளிக்கப்பட்ட ஆளுங்கட்சியினர் தந்திரங்களைத் திறமையாக கையாளுவதாக ஆணையம் கவலையுறுகிறது.

**3.** அண்மைக் காலங்களில் ஆணையம் தேர்தல்களை கண்காணிக்கும்போது, ஆளும் கட்சியில் உறுப்பினர்களாக இருக்கும் மத்திய மற்றும் சில மாநில அமைச்சர்கள், விருந்தினர் இல்லம் உள்ளிட்ட

அரசுக்குச் சொந்தமான தளவாடங்கள் மற்றும் அலுவலக கட்டிடங்களை அரசுத் திட்டங்களைக் கண்காணிக்கச் செல்வது போன்ற போலியான தோற்றத்தை உருவாக்கி உண்மையில் தங்கள் கட்சிகளின் தேர்தல் பிரச்சாரத்தில் பங்கேற்கும் ரகசிய எண்ணத்துடன் இருப்பதை, ஆணையம் வேதனையுடன் கவனிக்கிறது.

மேலே குறிப்பிடப்பட்ட அலுவலகப் பயணங்களில், அத்தகைய அமைச்சர்கள் தங்கள் துறை அலுவலர்களை அழைத்துச் செல்வதாக அறிவிக்கப்படாதிருப்பதிலிருந்தே அரசியல் கட்சிகளின் அமைப்பினருடன் மேற்கொள்வதாக அறிந்துகொள்ள முடிகிறது. அதன் விளைவாக, அத்தகைய பயணங்கள் மற்றும் கூட்டங்களின் போது யாதொரு துறை அலுவலர்கள் உடனிருக்கவில்லை என்று தெரிவிக்கப்படுவதிலிருந்தும் அலுவலக பயணம் முறையாக அமையவில்லை எனவும் அறிய முடிறகிறது.

**4.** மாவட்ட நிர்வாகம் மற்றும் மாநில அரசின் உள்ளாட்சி அலுவலர்கள் தேர்தல் நடத்துவது தொடர்பான சட்டரீதியான மற்றும் ஏனைய பணிகளை மேற்கொள்ள வேண்டிய நிலையில், அத்தகைய அமைச்சர்களின் நிர்வாக மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளின் பெயரில், அவர்கள் அமைச்சர்களைக் கவனித்துக் கொள்ளும்படிக் கட்டாயப்படுத்தப்படுவதானது, தேர்தல்கள் சுதந்திரமாக நடைபெறவேண்டிய தேவையைச் சிதைப்பதுடன், கடுமையாக ஆணையம் எதிர்க்கவேண்டிய அதிகாரிகளின் பாரபட்ச போக்கையும் வெட்ட வெளிச்சமாக்குறிது.

**5.** மேற்குறிப்பிட்ட சூழ்நிலைகளில், அரசியலமைப்பின் பிரிவு **324** ன்படி ஆணையம் முழுமையான அதிகாரங்களைக் கொண்டு உரிமை அளிக்கப்பட்டுள்ளது, மற்றும், அதன் அனைத்து அதிகாரங்களையும் கருத்தில் கொண்டு நேர்மையான மற்றும் சுதந்திரமான வாக்குப்பதிவிற்கான வழிகாட்டுதல்களை வெளியிட முடிவு செய்துள்ளது.

**6.** ஆணையத்தின் இத்தகைய குறிப்புரைகள், மேற்குறிப்பிட்ட குறிப்புகளான **1989** ஆம் ஆண்டு நவம்பர் **1** ஆம் நாளிட்ட **10/17/89–** M&G ஆம் எண்ணிட்ட இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் குறிப்புகளை எவ்விதத்திலும் புறக்கணிக்கவோ, மட்டுப்படுத்தவோ அல்லது பாதிப்பு ஏற்படுத்துவதையோ செய்யவில்லை. ஆணையம் தனது முந்தைய ஆணைகளை ரத்து செய்துவிட்டு பின்வருமாறு உத்தரவிடுகிறது.

**6.1** இத்தருணம் முதற்கொண்டு, ஆணையத்தால் தேர்தல்கள் அறிவிக்கப்பட்டபின், தேர்தல் தொடங்குவதாக அறிவிக்கப்பட்ட காலத்திலிருந்து தேர்தல் நடவடிக்கைகள் முடிவடையும் வரை, மத்திய அல்லது மாநில அரசின் எந்த அமைச்சரும் யாதொரு தொகுதிக்கும் பணிசார்ந்த பார்வையினை மேற்கொள்ளச் செல்லக் கூடாது.

**6.2** தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட யாதொரு மாநிலத்திலோ அல்லது தொகுதியிலோ, தொகுதிக்கு தேர்தல்கள் தொடங்குவதாக அறிவிக்கப்பட்ட காலத்திலிருந்து, தேர்தல் நடவடிக்கைகள் முடிவடையும் காலம் வரையிலும், யாதொரு பணிசார்ந்த கலந்துரையாடலுக்காக மேற்சொன்ன தொகுதிக்கு வெளியே,

எந்த இடத்திற்கோ அல்லது அலுவலகத்திற்கோ அல்லது விருந்தினர் இல்லத்திற்கோ யாதொரு தேர்தல் தொடர்பான அலுவரையும் எந்த அமைச்சரும் அழைப்பாணை விடுக்கக் கூடாது என ஆணையம் அறிவுறுத்துகிறது.

**6.3** இத்தகைய குறிப்புகளில், ஒரு விதிவிலக்கு யாதெனில், சட்டம் ஒழுங்கு சீர்குலைதல் அல்லது இயற்கை பேரழிவு அல்லது ஏனைய யாதொரு அவசரகால தேவைகளின் போது, அத்தகைய காரணத்திற்காக அமைச்சர்கள்/ முதலமைச்சர்கள் மேற்பார்வையிடுதல்/ மீட்டுபடுத்துதல்/ நிவாரணம் போன்ற குறிப்பிட்ட காரணங்களுக்காக தனிப்பட்ட முன்னிலை தேவைப்படும்போது தொடர்புடைய துறையில் பொறுப்பிலுள்ள அமைச்சர் அல்லது முதலமைச்சர் தொகுதிக்கு, பணி சார்ந்த வருகை மேற்கொள்ளலாம் அல்லது அத்தொகுதியின் தேர்தல் தொடர்பான அலுவலர்களை தொகுதிக்கு வெளியே வர அழைப்பு விடுக்கலாம்.

**7.** யாதொரு அரசியல் தேர்தல் அல்லது யாதொரு அரசியல் நடவடிக்கைக்காக இன்றி, அமைச்சர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அலுவலகப் பணிக்காக, தமது அலுவலக வாகனங்களை தலைமையிடத்திலிருந்து தாம் வசிக்கும் இடத்திற்கு அல்லது அலுவலகத்திற்கு பயன்படுத்த உரிமையுடையவராகிறார் என தெளிவாக்கப்படுகிறது.

**8.** இத்தகைய உத்தரவுகளில் ஏதேனும் மீறல் இருப்பின், அவை மாதிரி நடத்தை விதிகளை முழுவதுமாக மீறுவதாக மட்டும் கருதப்படாது. மேலும் ஆணைய அலுவலர்களால் அமைதியான, நேர்மையான மற்றும் சுதந்திரமான வாக்குப்பதிவினை உறுதிசெய்வதற்கான மக்களின் உண்மையான விருப்பத்தினை வெளிப்படுத்தும் வகையில், பிறப்பிக்கப்பட்ட கட்டளைகள் வேண்டுமென்றே முழுமையான அளவிலான அத்துமீறிய செயற்பாட்டு வகைகளிலமைந்த மீறல்களாகக் கருதப்பட்டு ஆணையத்தால், சூழ்நிலைகளுக்கு ஏற்ப கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தக்கவையாகவும் கருதப்படும்.

## உத்தரவு தொடர் எண்.100

புது டில்லியிலுள்ள ஸ்ரீ.வி.என்.மாத்தூர், செயலாளர், ரயில்வே வாரியம், ரயில்வே அமைச்சகத்தின் ரயில்வே பவனுக்கு அனுப்பியுள்ள **28.12.2004** ஆம் நாளிட்ட தேர்தல் ஆணையத்தின்**437/6/7/2004**/PLN-III ஆம் எண் கடிதம்.

**பொருள் இந்திய ரயில்வே அமைச்சரின் சுற்றலாக்கள்.**

பின்வரும் கருத்துக்களுக்கான தெளிவுரைகளை வேண்டுவது **25.12.2004** ஆம் நாளிட்ட 2004/G/32/1 ஆம் எண் கடிதத்தில் காண்க.

1. அமைச்சரவை துணைக் குழுக்கான கூட்டங்கள் மற்றும் அமைச்சரவைக் கூட்டங்களில் பங்கேற்பது அல்லது ரயில்வே நிதிநிலை அறிக்கை தொடர்பான பொருண்மைகளில் பங்கேற்பதற்காக, மதிப்பிற்குரிய ரயில்வே அமைச்சர் பாட்னாவிலிருந்து டெல்லி தலைமையகத்திற்கு திரும்ப வேண்டுகையில் அவரின் டெல்லி வருகை பணி சார்ந்ததாகக் கருதப்படக்கூடும்.
2. மேற்கு வங்காளத்தில் பல்வேறு ரயில்வே திட்டங்களில் பங்கேற்பதற்காக பாட்னாவிலிருந்து (தேர்தல் பிரச்சாரம் செய்யும் பொழுதும்) கொல்கத்தா வரையில் மாண்புமிகு ரயில்வே அமைச்சர் பணி சார்ந்த பயணங்களை மேற்கொள்ளுதல், பாட்னாவிலிருந்து கொல்கத்தா பயணத்தின் போதும் மற்றும் ரயில்வே பணிகளில் பங்கேற்பதற்காக ஹெலிகாப்டர் மூலம் மேற்கு வங்காளத்தின் பல்வேறு இடங்களை அமைச்சர் பார்வையிடும்போதும், அவை பணி சார்ந்ததாகவே கருதப்படக்கூடும்.
3. மாண்புமிகு ரயில்வே அமைச்சர் தனது விமான பயணங்களின்போது மக்களவை உறுப்பினருக்காக அடையாள அட்டை / சலுகைகளை பயன்படுத்திக் கொள்ளும்பொழுதும் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதியின் அமைச்சர் பாட்னாவிற்கு அரசியல் பணிக்காக செல்லும்போதும் மற்றும் டெல்லியிலுள்ள தலைமையிடத்திற்கு திரும்புவதற்காக ரயில்/விமான பயணங்களை மேற்கொள்ளும் போதும், எழுப்பப்பட்ட இவ்விவகாரங்களை ஆணையம் பரீசிலித்து, பின்வருமாறு தெளிவுபடுத்தியுள்ளது.

i. மாண்புமிகு அமைச்சர் தேர்தல் பிரச்சாரத்திற்காக பாட்னாவில் இருக்கும்பொழுது, ரயில்வே நிதிநிலை அறிக்கை தொடர்பான கூட்டங்கள் அல்லது அமைச்சரவைக் கூட்டங்கள் அல்லது அமைச்சரவை துணைக்குழு கூட்டங்களில், பணிசார்ந்த பங்கேற்பிற்காக பாட்னாவிலிருந்து டெல்லிக்கு வரக்கூடாது.

ii. முழு பயணத்திற்குமான செலவினையும் தானே ஏற்றுக்கொண்டபோதிலும், மாண்புமிகு அமைச்சர் பாட்னாவிலிருக்கும்போது தனது அரசியல் அல்லது தனிப்பட்ட பயணத்தை கொல்கத்தா அல்லது வேறு எங்கேனும் அலுவலக பயணத்துடன் இணைக்க இயலாது. அலுவலகப் பயணத்தை ஆரம்பிக்கும் முன் மாண்புமிகு அமைச்சர் தலைமையிடத்திற்குத் திரும்ப வேண்டும். எந்தவித சந்தர்ப்ப சூழ்நிலைகளிலும், மாநில அரசு அல்லது மத்திய அரசின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளின்

அமைச்சர்கள் அரசியல் சார்ந்த அல்லது தனிப்பட்ட பயணத்தின்போது பீகார் அல்லது ஜார்க்கண்ட் அல்லது ஹரியானா மாநிலத்திற்கோ இந்தியாவின் ஏனைய யாதொரு இடத்திற்கோ தங்களது சொந்த அல்லது அரசியல் சார்ந்த பயணங்களை அலுவல் சார்ந்த பயணத்துடன் இணைக்கக்கூடாது.

iii. மாண்புமிகு அமைச்சர் மக்களவை உறுப்பினர்களுக்கான சலுகைகளான இலவச ரயில்வே/ விமான நுழைவு இசைவுச் சீட்டு போன்ற இயல்பான சலுகைகளை பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் மத்திய ரயில்வே அமைச்சர் என்ற முறையில் பாட்னா சென்று தலைநகரான டில்லிக்குத் திரும்ப இலவச இரயில் பயணச் சலுகை / விமானப் பயணச் சலுகை இவற்றைப் பெற உரிமையற்றவராவார்.

## உத்தரவு தொடர் எண். 101

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமை தேர்தல் அலுவலர்கள் இந்திய அரசின் அமைச்சரவை செயலாளருக்கு அனுப்பியுள்ள 2007 ஆம் ஆண்டு நவம்பர் 23 ஆம் நாளிட்ட தேர்தல் ஆணையத்தின்437/6/7/2004/PLN-III ஆம் எண்ணிட்ட கடிதம்.

**பொருள்: அமைச்சர்களின் சுற்றுலாக்கள் –பொதுத் தேர்தல்கள்**

பார்வை:

1. தேர்தல் ஆணையத்தின் 17.01.1996 ஆம் நாளிட்ட 437/6/96/2004/PLN-III ஆம் எண்ணிட்ட கடிதம்.
2. தேர்தல் ஆணையத்தின் 15.07.1999 ஆம் நாளிட்ட 437/6/99/2004/PLN-III ஆம் எண்ணிட்ட கடிதம்.
3. தேர்தல் ஆணையத்தின் 12.06.2003 ஆம் நாளிட்ட 437/6/4/2003/PLN-III ஆம் எண்ணிட்ட கடிதம்.

தேர்தல் அரசியல் தொடர்பாக, அமைச்சர்கள், தேர்தல் நடைபெறும் இடங்களில் அல்லது அறிவிக்கப்பட்ட பின் மற்றும் மாதிரி நடத்தை விதிகள் செயல்பாட்டில் இருக்கும் மாநிலம்/மாநிலங்களில் பயணங்களை மேற்கொள்ளக் கூடாது என அறிவுறுத்த நான் பணிக்கப்பட்டுள்ளேன். ஆணையம், சுதந்திரமான மற்றும் நேர்மையான முறையில் தேர்தல்கள் நடைபெறுவதற்கு முன், தேவையுள்ள ஏற்றத்தாழ்வற்ற (சமமான) நிலையை உறுதிசெய்யும் பொருட்டு, அமைச்சர்களின் சுற்றுலாக்களை, நேரத்திற்கு நேரம் நிர்வகிக்கும் பொருட்டு சில வழிகாட்டும் நெறிமுறைகளை குறிப்பிட்டுள்ளது. அலுவலக தளவாடங்களை சுற்றுலா உயர் பதவியாளர் தேர்தல் தொடர்பான யாதொரு பணிக்காகவும் பயன்படுத்தக் கூடாது என்பதும் உறுதி செய்யப்படவேண்டும். உச்சநீதிமன்றத்தின் 16.08.99 ஆம் நாளிட்ட இந்திய ரிட் மனு 1999 ன்–339 ஆம் எண்ணிட்ட நரேந்திரகுமார் கௌர் எதிர் தேர்தல் ஆணைய வழக்கில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

2. கடிதத்தில் உள்ளடங்கியுள்ள ஆணையத்தின் குறிப்புகள் கீழ்க்கண்ட பத்திகளில் இலகுவாகப் புரியும் வண்ணம், பார்வைக்காகத் தொகுக்கப்பட்டுள்ளது.

1. மத்திய அரசின் அமைச்சர் முழுவதும் அலுவல் சார்ந்த பயணத்திற்காக தனது தலைமையகத்திலிருந்து மாநில/மாவட்ட தொகுதி எல்லைக்கு செல்ல வேண்டி இருப்பின், பொது மக்கள் நலன்சார்ந்த, தவிர்க்க இயலாத நிலையில், அமைச்சர் எந்த மாநிலத்திற்கு பயணிக்க விரும்புகிறாரோ, அம்மாநிலத்தின் தலைமைச் செயலாளருக்கு ஆணையத்தின் நகலுடன் இந்திய அரசின் தொடர்புடைய

துறை/ அமைச்சகத்தின் செயலாளரிடமிருந்த இதன் விளைவாக சான்றளிக்கப்பட்ட கடிதம் அனுப்பப்பட வேண்டும். இத்தகவலை செயலாளர் பெற்றுக் கொண்டதாக அளித்த ரசீதின்படி மத்திய அமைச்சர் யாதொரு விதத்திலும் அரசியல் நடவடிக்கையை அப்பயணத்தின்போது சிந்திக்கவில்லையெனில், நடவடிக்கையை முழுவதும் பணி சார்ந்த அப்பயணத்தை மேற்கொள்வதாகத் தெரிவிக்கும்போது தலைமைச் செயலாளர் மத்திய அமைச்சருக்கு அரசு வாகனம் மற்றும் தங்குமிடம் மற்றும் அவரின் அலுவல் பயணத்திற்கான ஏனைய வழக்கமான மரியாதைகளை அளிக்கலாம். இதனை மேற்கொள்ளும்போது, மாநிலத்தின் தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட மாநில தலைமைத் தேர்தல் அலுவலர், மாதிரி நடத்தை விதிகள் முழுமையாக செயல்படுத்தப்படுகிறதா என்பது குறித்தும் தலைமைச் செயலாளரால் முன்னரே எச்சரிக்கப்பட வேண்டும்.

## உத்தரவு தொடர் எண்.102

அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் தலைமைத் தேர்தல் அலுவலர்களுக்கு இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையம் 2009 ஆம் ஆண்டு பிப்ரவரி 18 ஆம் நாளிட்ட கடிதம் எண் 437 /6/ INST/ 2008- CC&BE

**பொருள்** : மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் (1951) 77 ஆவது பிரிவின் கீழ் மாதிரி நடத்தை விதிமுறைகளை எழுத்திலும் செயலிலும் முழுமையாகப் பின்பற்றுவது குறித்து...

தேர்தல் தொடர்பான நேர்வுகளில் தேர்தல் மாதிரி நடத்தை விதிமுறைகள், தேர்தல் சட்டம், இந்தியத் தண்டனைச் சட்டம் ஆகியவற்றில் இடம் பெற்றுள்ளவற்றைக் கடைப்பிடிப்பது தொடர்பாக அனைத்து அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநிலக் கட்சிகளுக்கும் கடித நகல் அனுப்பப்பட்டுள்ளது. அது இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

2) மாநிலத் தலைமைத் தேர்தல் அலுவலர்கள் / மாவட்ட தேர்தல் அலுவலர்கள் / தேர்தல் நடத்தும் அலுவலர்கள் / தேர்தல் பார்வையாளர்களால் / எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

i) 77 (1) ஆவது பிரிவின் கீழ் (நட்சத்திரப் பேச்சாளர்கள்) கீழ் குறிப்பிட்டுள்ளபடி தலைவர்களின் பரப்புரை உன்னிப்பாகத் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் நிறுத்தியுள்ள ஏதாவது ஒரு வேட்பாளரோ நட்சத்திரப் பரப்புரைப் பேச்சாளரோ தனது பரப்புரையின்போது விதிகளை மீறினால், அதை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில், தேர்தல் ஆணையத்தின் அளவில் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாக வெளியிடப்பட வேண்டும்.

ii) பல்வேறு அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள், பரப்புரையாளர்களால் மீறப்படும் விதி மீறல் நிகழ்வுகள் குறித்து, மாநிலத் தலமைத் தேர்தல் அலுவலர்கள், மாவட்டத் தேர்தல் அலுவலர்கள், கட்சிகளின் அடிப்படையிலான தொடர் கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும். விதி மீறும் கட்சிகள், வேட்பாளர்கள், பரப்புரையாளர்களின் பெயர்கள் கொண்ட பதிவேட்டை நாள்தோறும் வைத்திருக்க வேண்டும்.

iii) மேற்சொன்ன ஆவணம் (மீறல் பட்டியல்) அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் பொதுமக்களின் பார்வைக்காக வெளியிடப்படும் வகையில், ஊடகங்களில் பிரசுரிக்கப்பட வேண்டும். இவ்வாறு செய்வது, விதி மீறல்களில் ஈடுபடுவதைத் தடுக்கும்.

3. இந்த அறிவுறுத்தல்கள் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மற்றும் மாநில தேர்தல் நடத்தும் அலுவலர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டும். அரசியல் கட்சிகளுக்கு அறிவுறுத்தும் வகையிலான இணைக்கப்பட்ட கடிதத்தின் நகல், உங்களது மாநில / யூனியன் பிரதேசங்களில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் உட்பட ஒவ்வொரு கட்சிக்கும் அளிக்கப்பப்படலாம்.

அனைத்து அங்கீகரிக்கப்பட்ட, மாநில அரசியல் கட்சிகளுக்கு இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையம் 2009 ஆம் ஆண்டு பிப்ரவரி 18 ஆம் நாளிட்ட கடிதம் எண் 437 /6/ INST/ 2008-CC&BE

**பொருள் : மாதிரி தேர்தல் நடத்தை விதிகளை முழுமையாகக் கடைப்பிடிப்பது குறித்து…**

தேர்தல்கள் குறித்து அறிவிக்கப்பட்ட உடனடியாக அரசியல் கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்குமான தேர்தல் நடத்தி விதிமுறைகள் நடைமுறைக்கு வந்துவிடுகின்றன. தேர்தலின்போது, தேர்தல் நடத்தை விதிகளை மீறும் வகையிலான நிகழ்வுகள் குறித்து தேர்தல் ஆணையத்தின் முடிவுக்கு வந்துவிடுகின்றன. வேட்பாளர்கள் மட்டுமின்றி, அரசியல் கட்சியினர், அரசியல் கட்சித் தலைவர்கள் உள்ளிட்டோருக்கு எதிரான விதி மீறல் நிகழ்வுகள் ஆணையத்திடம் தெரிவிக்கப்படுகின்றன. தேர்தல் பரப்புரையின்போது, சாதி, சமயங்கள் குறித்து தெரிவிக்கப்படும் கருத்துகள், தனி நபரின் புகழைச் சிதைக்கும் வகையிலான கருத்துகள், சமயங்களின் இடங்களைத் தேர்தல் தேவைக்காகப் பயன்படுத்துதல், வாக்காளர்களுக்குக் கையூட்டு அளிப்பது ஆகியவை தேர்தல் விதி மீறல்களாக, வேட்பாளர்களாலும், அரசியல் கட்சிப் பிரதிநிதிகளாலும் பொதுவாகக் குறிப்பிடப்படுகின்றன.

தேர்தல் நடத்தை விதி மீறல்கள், சட்டத்தின் அம்சங்கள் ஆகியவை மீறப்படுவது குறித்து தேர்தல் ஆணையத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்படும்போது, ஆணையம் உரிய வழக்குகள், சிக்கல்களில் தொடர்புடையவருக்கு அறிவிப்புகள் பிறப்பிக்கும். *எனவே, தலைவர்களின் குறைகள், தவறுகளுக்கு தொடர்புள்ள அரசியல் கட்சியே பொறுப்பு என்பது காரணமானதும், அறிவுபூர்வமானதும் ஆகும். இந்தச் சூழ்நிலையில், தேர்தல் சின்னங்கள் (ஒதுக்கீடு மற்றும் ஒதுக்குதல்) ஆணை (1968)யின் '16A' பத்தியில் இடம்பெற்ற கருத்துகள் அனைத்து அரசியல் கட்சிகளின் கவனத்துக்குக் கொண்டு வரப்படுகின்றன.*

மேற்கண்டதற்கு ஏற்ப, தேர்தல் நடத்தி விதிகளும், சட்டத்தின் அம்சங்களும் எழுத்திலும் செயலிலும் முழுமையாகக் கடைப்பிடிக்கப்படும் வகையில், அனைத்துக் கட்சிகளும் தங்களால் நியமிக்கப்பட்ட கட்சியினருக்கு உரிய வகையில் தெரிவிக்கும்படி அனைத்து அரசியல் கட்சிகளும் அறிவுறுத்தப்படுகின்றன.

## உத்தரவு தொடர் எண். 103

இந்திய அரசு செயலர், உள்துறை அமைச்சகம் (பி.ம பிரிவு), ஜெய்சல்மர் இல்லம், புதுதில்லிக்கு அனுப்பப்பட்ட 07 ஜுன் 2010 நாளிட்ட இ.தே.ஆ. கடித எண். 437/6/ உத்தரவு / 2010 –CC&BE.

**பொருள்:** சிறப்புப் பாதுகாப்புப் படையினரால் பாதுகாக்கப்படுவோரது ( பிரதம மந்திரி தவிர) தேர்தல் பிரச்சாரத்திற்காக பயன்படுத்தப்படும் குண்டு துளைக்காத வாகனங்கள்– சார்ந்தவை.

மேற்சொன்ன பொருண்மை மீதான 16.03.2010 மற்றும் 17.04.2010 நாளிடப்பெற்ற தங்கள் கடிதங்களைப் படித்துப் பார்க்குமாறு நான் பணிக்கப்பெற்றுள்ளேன். அதில் பத்தி எண்.3ல் எழுப்ப்ப்பெற்றிருக்கும் ஐயங்களைத் தெளிவுறுத்தவும் நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

I. சிறப்புக்காவல் படையினரால் பாதுகாக்கப்படுபவர்கள் 25.03.2009 நாளிட்ட ஆணையத்தின் கடித எண்ணில் 437 / Inst / 2009 - CC&BE இல் குறிப்பிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைமுறைகளின் கீழ் உறுதிசெய்யப்படுகின்றனர்.

II. பாதுகாப்புக் காரணங்களுக்காக, பாதுகாப்பு அதிகாரிகளால், சிறப்பு காவல் படையினர்களால் பாதுகாக்கப்படுபவர்களால் பயன்படுத்தப்படும், மிகையான பல்வேறுபட்ட வாகனங்களுக்கும் அரசு சார்பில் செலவினை வழங்க அனுமதிக்கப்படும். (சிறப்புப் பாதுகாப்புப்படையால் பாதுகாக்கப் படுபவரைத் தவிர வேறு ஏதேனும் வாகனங்களுக்கு)

III. 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச்சட்டம் பிரிவு 77(1) கீழ் சிறப்புப்பாதுகாப்புப்படையால் பாதுகாக்கப்படுபவர் அல்லது அவரது அரசியல் கட்சி சார்பில் குண்டுதுளைக்காத வாகனத்திற்கான செலவினை ஏற்கும் பட்சத்தில் பாதுகாக்கப்படுபவருடன் தனியாள் B,R வாகனத்தில் வருவதற்கான தடை ஏதும் இல்லை. (அதாவது சம்பந்தப்பட்ட அரசியல் கட்சித் தலைவர் அக்கட்சியின் நட்சத்திரப் பேச்சாளர் என்றழைக்கப்படுகிறார்.) ஒருவேளை சிறப்புப் பாதுகாப்புப் படையினரால் பாதுகாக்கப்படுபவருடன் வேறு ஏதேனும் அரசியல் பிரமுகர் உடன் வரும் சூழ்நிலைகளில், 31 அக்டோபர் 2008 நாளிட்ட கடித எண் 437 / 6 / / Inst / 2008 – CC & BE இல் 50 பயணப்படி குறிப்பிட்ட சம்பந்தப்பட்ட சட்டமன்றத் தொகுதியின் தேர்தல் செலவிலிருந்து பிடிக்கப்படும். எனினும், பிரிவு 77(1) ன் கீழ், அந்நபர் நட்சத்திரப்பேச்சாளர் எனில், செலவினத்தைப் பிரித்துக்கொடுத்தல் தவிர்க்கப்படும்.

## உத்தரவு தொடர் எண். 104

அமைச்சரவைக்குழுச்செயலர் புது தில்லி, அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச தலைமை செயலாளர்கள் மற்றும் அனைத்து யூனியன் பிரதேச மற்றும் மாநில தலைமைத் தேர்தல் அலுவலர்கள் அவர்களுக்கு அனுப்பப்பட்ட **24** மார்ச் **2011** ஆம் நாளிட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் கடித எண். **437/ 6** / உத்தரவு / **2011–** CC & BE

**பொருள்:** முதலமைச்சர்களின் சுற்றுப்பயணம் – சார்பாக.

மேற்கண்ட பொருளின்படியும், ஆணையத்தின் தற்போதுள்ள வழிகாட்டுதல்களின் படியும், வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் நடத்தை விதிகளைப் பின்பற்றும்பொழுது, முதலமைச்சரின் தனி அலுவலரோ அல்லது பிற அமைச்சர்களோ முதலமைச்சரின் தனி / சொந்த சுற்றுப்பயணத்தின்போது உடன் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதைக் குறிப்பிட்டுக் காட்ட நான் பணிக்கப்படுகிறேன்.

2. இந்த பொருண்மை ஆணையத்தினால் மறு ஆலோசனை செய்யப்படலாம். நடத்தை விதிமுறைகளுக்கான காலகட்டத்தில் மாநில / யூனியன் பிரதேசங்களின் முதலமைச்சர்களின் தனி அலுவலர்களில் ஒருவர் மட்டும் அவருடன் தனி / சொந்த சுற்றுப்பயணம் செய்யலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. எனினும், அந்த தனி அலுவலர் எந்தவிதமான அரசியல் சார் நிகழ்வுகளிலோ அல்லது முதலமைச்சரின் அரசியல் பணிகளில் உதவுவதோ கூடாது.

3. இதுகுறித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்தப்படும்.

## உத்தரவு தொடர் எண். 105

அமைச்சரவைக் குழுச்செயலாளர், புதுதில்லி, அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமை செயலாளர்கள் மற்றும் அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்ட **01** ஏப்ரல் **2011** ஆம் நாளிட்ட இ.தே.ஆ.இன் கடித எண். **437/ 6 /** குறிப்புகள் / **2011–** CC & BE.

**பொருள்:** முதலமைச்சர்களின் சுற்றுப்பயணம் – சார்பாக.

முதலமைச்சர்களின் சுற்றுப்பயணம் பற்றிய **24** மார்ச் **2011** நாளிட்ட கடிதத்தின் வழிமுறைகளின் பத்தி **(2)**–ன் படி, பகுதியாக திருத்தம் செய்யப்பட்ட ஆணையத்தின் வழிகாட்டுதல்களில் வழிகாட்டு நெறிமுறைகளின் காலத்தில் மாநில / யூனியன் பிரதேச முதலமைச்சருடன் சொந்த / தனி சுற்றுப்பயணம் செய்ய அனுமதிக்கப்பட்ட அலுவலர்களில் ஒருவர் அரசிதழ் பதிவு செய்யப்பட்டவராக இருத்தல் கூடாது. மேலும், முன்னரே கூறியவாறு, அந்த அலுவலர் எந்தவிதமான அரசியல் சார் நடிவடிக்கைகள் அல்லது முதலமைச்சருக்கு அரசியலில் உதவுவது கூடாது என்பதும் ஆணையத்தால் தீர்மானிக்கப்பட்டது.

இந்த விதிமுறைகள் பிரதம மந்திரி / மத்திய அமைச்சரவைக்கு அமைச்சர்கள் போன்றவர்களுக்கும் பொருந்தும் என ஆணையம் தீர்மானித்துள்ளது.

## உத்தரவு தொடர் எண். 106

அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமை செயலர்கள் மற்றும் தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்ட 5 ஏப்ரல் 2011 ஆம் நாளிட்ட இ.தே.ஆ. கடித எண். 437/ 6 / உத்தரவு / 2010– CC & BE /Vol. II.

**பொருள்:** தேர்தல் பிரச்சாரததிற்குப் பயன்படுத்தப்படும் வாகனங்களின் பயன்பாடு பாதுகாப்பு காரணங்களுக்காக வழங்கப்பட்ட குண்டு புகா வாகனங்கள் வழிமுறைகள் சார்பாக.

மேற்சொன்ன பொருளின்படி, 25 மார்ச் 2009 ஆம் (நகல் இணைக்கப்பட்டுள்ளது) நாளிட்ட ஆணையத்தின் கடித எண். 437/6/ உத்தரவு / 2009 – CC & BE ஐ தங்களது கவனத்திற்குக்கொண்டுவர நான் பணிக்கப்படுகிறேன்.

2. பாதுகாப்புக்காரணங்கள் கருதி, அரசியல் செயலாளர்களுக்கு ஏதேனும் குண்டு துளைக்கா வாகனங்கள் வழங்கப்படுமா, அவ்வாறு அவர்கள் தேர்தல் பிரச்சாரங்களுக்கு கொடுப்பு தொகை அடிப்படையில் வாகனங்களைப் பயன்படுத்தும்போது அவர்களுடன் மற்றவர்களையும் அனுமதிக்கப்படுவரா போன்ற விளக்கங்கள் கேட்புக்கடிதங்கள் ஆணையத்தால் பெறப்பட்டுள்ளன.

3. இப்பொருண்மை ஆணையத்தால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். குண்டு துளைக்காக வாகனம் வழங்கப்பட்ட Z+ (Z+பிரிவு) வகையிலான அரசியல் செயலாளர் அதற்கான தொகையினை அவரே அல்லது அவரது கட்சியோ ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில அரசியல் செயலாளர் அல்லது வேட்பாளர் உட்பட பிற எவரும் அவ்வாகனத்தில் பயணம் செய்ய எவ்விதத் தடையும் இல்லை என ஆணையம் நிர்ணயித்துள்ளது.

4. மக்கள் பிரதிநிதிததுவச்சட்டம் 1951, பிரிவு 77 (1) ன் விளக்கம் (2) ன் படி, குண்டு துளைக்காத வாகனம் வழங்கப்பட்ட அரசியல் பிரமுகர் ‘நட்சத்திரப் பேச்சாளர்’ எனில் குண்டு துளைக்காத வாகனத்திற்கான செலவினை எந்தவொரு வேட்பாளரது சொந்த செலவினமாகக் கருதப்பட மாட்டாது என்று மேலும் விவரிக்கப்பட்டுள்ளது.

5. அரசியல் செயற்பாட்டாளர் நட்சத்திரப் பேச்சாளராக இல்லாதிருக்கும் போது, குண்டு – புகா வாகனத்திற்கான செலவானது, அந்த வாகனம் பயன்படுத்தப்பட்ட தேர்தல் பிரச்சாரம் செய்யப்பட்ட வேட்பாளரின் கணக்கில் சேர்க்கப்படும்.

## உத்தரவு தொடர் எண். 107

அமைச்சரவைக் குழுச்செயலாளர், புதுதில்லி, அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச தலைமை செயலாளர்கள் மற்றும் அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமை தேர்தல் அலுவலர்களுக்கு அனுப்பப்பட்ட 27 ஏப்ரல் 2011 நாளிட்ட இ.தே.ஆ.இன் கடித எண். 437/ 6 / உத்தரவு / 2010 – CC & BE.

**பொருள்:** முதலமைச்சர்கள் மற்றும் மத்திய அமைச்சர்களின் சுற்றுப்பயணங்கள் – சார்பாக.

ஆணையத்தின் 01 ஏப்ரல் 2011 நாளிட்ட பகுதியாகத்திருத்தம் செய்யப்பட்ட வழிகாட்டுக் குறிப்பு எண். 437/ 6 / உத்தரவு / 2011– CC & BE படி, அமைச்சர்களின் தனி / சொந்த சுற்றுப்பயணம் செய்யும் அலுவலர்களுக்கான வரைமுறை பிரதமருக்குப் பொருந்தாது.

## உத்தரவு தொடர் எண்.108

முதன்மைச்செயலர், பிரதம மந்திரி அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ள **07.10.2014** ஆம் நாளிட்ட இ.தே.ஆ. கடித எண். **437/ 6** /CG/2014 – CC & BE.

பொருள்: பிரதம மந்திரியின் வருகையின் போது நடத்தை விதிமுறைகளில் தளர்வு – சார்பாக.

மேற்சொன்ன பொருள் மீது, திரு. வினோத் ஜீட்ஷி, தேர்தல் இணை ஆணையருக்கு அனுப்பப்பட்ட 7 அக்டோபர் 2014 ஆம் நாளிட்ட கடிதத்தின் படி, இவ்விவகாரத்தைக் கருத்தில் கொண்டு, நடப்புத் தேர்தல்கள்போதும் வருங்காலத்தில் நிகழவிருக்கும் அனைத்து தேர்தல்களின்போதும் தேர்தல் நடத்தை விதிமுறைகளின்று பிரதமருக்கு விலக்கு அளிக்க ஆணையம் முடிவு செய்துள்ளது எனத் தெரிவிக்க நான் பணிக்கப் பெற்றுள்ளேன்.

## உத்தரவு தொடர் எண். 109

அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு அனுபப்பட்ட **19.06.2015** நாளிட்ட இ.தே.ஆ. கடித எண். **437/ 6** /MISC/2015 – CC.

**பொருள்:** பிரதம மந்திரியின் தேர்தல் சுற்றுப் பயணத்தின் போது மாநில நிர்வாகத்தினால் அமைக்கப்படும் ஹெலிபேட்கள் – சார்பாக.

மேற்சொன்ன பொருளின்படி, **18** ஜீன் **2015** நாளிட்ட ஆணையரின் கடித எண் உள்துறை அமைச்சகத்திற்கு தகவல் மற்றும் எதிர்கால வழிகாட்டுதல்களுக்காகவும் இத்துடன் இணைக்கப்பட வேண்டுமெனவும் நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

**நகல்**

உள்துறை அமைச்சகம், புது தில்லிக்கு அனுப்பப்பட்ட **19.06.2015** நாளிட்ட இ.தே.ஆ. கடித எண். **437/ 6** /MISC/2015 – CC.

பொருள்: பிரதம மந்திரியின் தேர்தல் சுற்றுப் பயண வருகையின் போது மாநில நிர்வாகத்தினால் அமைக்கப்படும் ஹெலிபேட்கள் – சார்பாக.

மேற்கண்ட பொருளின்படி, **22** மே **2015** தேதியிட்ட கடித எண். VI.23014/241/2012-VSIன் படி, பிரதம மந்திரியின் தேர்தல் சுற்றுப்பயணத்தின் – பாதைக்கான ஹெலிபேட் அமைப்பதை மாநில நிர்வாகத்திடம் வேண்டுதல் வழங்கப்பட வேண்டும். எனினும், அத்தகைய ஹெலிபேட்கள் அமைக்கத்தேவையான செலவுகளை அந்தந்த சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகளே ஆணையத்தின் நட்சத்திர பேச்சாளர்களக்கான செலவினத்துடன் தொடர்புடைய ஆணைய வழிகாட்டு முறைகளுடன் சேர்தே ஏற்க வேண்டும்.

J. விருப்புரிமை நிதியிலிருந்து வழங்கப்படும் கொடுப்புத்தொகை மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் / சட்ட மன்ற உறுப்பினரின் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத்திட்டம்.

# I. விருப்புரிமை நிதிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்/சட்டமன்ற உறுப்பினரின் உள்ளூர் மேம்பாட்டுத் திட்டம்

## உத்தரவு தொடர் எண். 110

தேர்தல் ஆணையத்தின் 09.11.1984 ஆம் நாளிட்ட கடித எண். 576 / 17/ 84 லிலிருந்து

1) அமைச்சரவைக்குழுச்செயலாளர், இந்திய அரசு, அமைச்சரவைக்குழுத் தலைமைச்செயலகம், புதுதில்லி.
2) ஆனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் அரசு தலைமைச் செயலாளர்கள்
3) இந்திய அரசின் செயலாளர், உள்துறை அமைச்சகம் புதுதில்லி மற்றும்

அனைத்து தலைமைத்தேர்தல் அலுவலர்கள்.

**பொருள்:** பொது அல்லது இடைத்தேர்தல்களின் போது விருப்புரிமை நிதியிலிருந்து வழங்கப்படும் கொடுப்புத்தொகை – சார்பாக.

உச்சநீதி மன்றத்தின் 1967 ஆம் ஆண்டு காசிராம் தாள் சிங் மற்றும் பிறர் மெல்முறையீட்டு எண்.1632 (NCE)இன் படி, கீழ்க்கண்டவாறு கூறுமாறு நான் பணிக்கப்படுகிறேன்:–

ஆணையம் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு முன்னரே போதுமான வழிமுறைகளை பரிந்துரைப்பதன் மூலம், தேர்தலின் போது விருப்புரிமை நிதியை அமைச்சர்கள் மற்றும் பிற அதிகாரிகள் மானிய / கொடுப்புத்தொகையினை ஒப்பளிக்க மாட்டார்கள். அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் மற்றும் அரசாங்கத்திற்கான ஆணையத்தினால் உருவாக்கப்பட்ட மாதிரி தேர்தல் நடத்தைகளுக்கான வழிமுறைகள் அம்மாதிரியான செயல்திட்டங்களுக்கான மானியம் / கொடுப்புத்தொகையினை ஊக்குவிக்காதவாறு இருக்கும்.

இதுகுறித்து மத்திய / மாநில / யூனியன் பிரதேச அரசுகள் தேவையான / பொருத்தமான வழிமுறைகளையோ அல்லது முழுமைக்குமான மரபுசார் வழிமுறைகயோ வழங்க வேண்டும். இத்தகைய வழிமுறைகள் அல்லது மரபுகள் அனைத்துத் தேர்தல்கள் – பொது அல்லது இடைத்தேர்தல்களிலும் பின்பற்றப்படுமாறு / கடைபிடிக்கப்படுமாறு வேண்டப்படுகிறது.

2. இவ்விவகாரம் குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை ஆணையத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.

3. ஆணையத்தின் 10 அக்டோபர் 1979 ஆம் நாளிட்ட கடித எண். 576/17/79 இன் முந்தைய தகவல் ரத்து செய்யப்பட்டதாகக் கருதப்படுகிறது.

4. இக்கடிதத்தைப் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகை வேண்டப்படுகிறது.

## உத்தரவு தொடர் எண்.111

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமைத் தேர்தல் அலுவலர்களுக்கு அனுப்பியுள்ள **07.11.1989** ஆம் நாளிட்ட **437/6/89** ஆம் எண்ணிட்ட தேர்தல் ஆணையத்தின் கடிதம்.

**பொருள்:** பொதுத் தேர்தல்கள் நிகழ்வை முன்னிட்டு, அமைச்சர்களின் விருப்புரிமை நல்கையிலிருந்து செய்யப்பட்ட செலவுகள் – தொடர்பாக

மேற்கண்ட பொருளின் மீதான புதுதில்லி, உள்துறை அமைச்சகத்தின் **03.11.1989** ஆம் நாளிட்ட **26.4.89** (பொது) ஆம் எண் கடிதத்தின் நகல் ஒன்றை இத்துடன் திருப்பி அனுப்பவும், இந்திய தேர்தல் ஆணையத்தின் தொகுப்பாணைகள் அடங்கிய சிற்றேட்டில் இந்த ஆணைகளைச் சேர்க்கவும், அந்தச் சிற்றேட்டில் இருக்கப்பெறும் நிலையாணைகளின் ஒரு பகுதியாக இதனைக் கருதவும் தங்களிடம் கோரிக்கை விடுக்கவும் நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

கடிதம் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் அளிக்கவும்.

எண். **26.4.89**, பொது, இந்திய அரசு மத்திய அரசின் உள்துறை அமைச்சகம் /
கிருக மந்த்ராலயா, புது தில்லி.
பெறுநர்
முதன்மைச் செயலாளர்
(அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகள்)
நாள்: **03.11.1989**

பொருள்: மக்களவைத் தேர்தலை முன்னிட்டு, அமைச்சர்களின் விருப்புரிமை நல்கையிலிருந்து செய்யப்பட்ட செலவுகள் –கூட்டம் அமைத்தல்

ஐயா,

மேற்குறிப்பிடப்பட்டிருக்கும் பொருளின் மீதான இந்த அமைச்சகத்தின் **24.11.1984** ஆம் நாளிட்ட, பொது **26.4.84** ஆம் எண்ணிட்ட கமுக்கக் கடிதத்தைப் பார்வையில் கொள்ளவும், வரவிருக்கும் மக்களவைத் தேர்தலை கருத்தில் கொண்டு, இந்த அமைச்சகத்தின் **28.01.1977** ஆம் நாளிட்ட, **20.1.77–**FFG ஆம் எண்ணிட்ட கமுக்கக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் கூட்டங்கள் கண்டிப்பாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கவும் நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

செயலாளர், தேர்தல் ஆணையம், நிர்வச்சன் சதன், அசோகா சாலை, புது தில்லி அவர்களின் தகவலுக்காக நகல் திருப்பி அனுப்பப்படுகிறது.

எண்.20/1/77–FFG

இந்திய அரசு/ மத்திய அரசின் உள்துறை

அமைச்சகம்/கிருக மந்த்ராலயா, புது தில்லி.

நாள்: 28.01.1977

பெறுநர்

முதன்மைச் செயலாளர்

(அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகள் )

பொருள்: தேர்தலை முன்னிட்டு, அமைச்சர்களின் விருப்புரிமை நல்கையிலிருந்து செய்யப்பட்ட செலவுகள் –கூட்டம் அமைத்தல்

ஐயா,

தேர்தல்களை முன்னிட்டு, தங்களது விருப்புரிமை நல்கையிலிருந்து அமைச்சர்களால் செய்யப்பட்ட செலவுகள் தொடர்பாக, மாநில அரசுகள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதி நிர்வாகங்களின் முதன்மைச் செயலாளர்களுக்கு அனுப்பப்பட்ட 29.10.1969 ஆம் நாளிட்ட 5/3/68–தேர்தல் III ஆம் எண்ணிட்ட இந்த அமைச்சகத்தின் கமுக்க சுற்றுக் கடிதத்தின்பால் தங்களது பார்வையை ஈர்க்க நான் பணிக்கப்பட்டுள்ளேன். மார்ச் 1977 இல் வரவிருக்கும் மக்களவைத் தேர்தல்களைக் கருத்தில் கொண்டு, கருணை அடிப்படையிலான காரியங்களுக்கு ஏற்படும் கட்டாய தேவைகள் எழும் நேர்வுகளன்றி, தேர்தல்களுக்கு முன் விருப்புரிமை நல்கையிலிருந்து செலவுகள் செய்தல் தவிர்க்கப்பட வேண்டும் என்பது தொடர்பான கூட்டம் அவற்றில் குறிப்பிடப்பட்டவாறு கண்டிப்புடன் பின்பற்றப்பட வேண்டும்.

எண். 50/3/68–தேர்தல் III

இந்திய அரசு/ மத்திய அரசின் உள்துறை அமைச்சகம் /

கிருக மந்த்ராலயா, புது தில்லி.

நாள்: 29.10.1969

பெறுநர்

முதன்மைச் செயலாளர்,

(அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சி பகுதிகள்)

பொருள்: உச்சநீதி மன்றத்தின் குறிப்புரை – தேர்தல்கள் காலத்தில் அமைச்சர்களின் அதிகாரத்தின் கீழிருக்கும் விருப்புரிமை நல்கையிலிருந்து செய்யப்படும் செலவுகள் – மரபு உருவாக்கம்

------

தேர்தல்களை முன்னிட்டு, அமைச்சர்கள் தங்களது விருப்புரிமை நல்கையிலிருந்து செய்யப்படும் செவுகள் குறித்து இந்திய அரசின் அனைத்து அமைச்சகங்கள் மற்றும் மாநில அரசுகளின் முதன்மைச் செயலாளர்களுக்கும் அனுப்பப்பட்ட தேர்தல் ஆணையத்தின் 25.06.1968 ஆம் நாளிட்ட 82/HN/24/67 ஆம் எண்ணிட்ட சுற்று கடிதத்தின் மீது தங்களது பார்வையை ஏற்க நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

ஆணையத்தின் பரிந்துரையை கவனமாகப் பரிசீலனை செய்த பின், விருப்புரிமை நல்கையிலிருந்து செய்யப்படும் செலவுகளின் ஒழுங்குமுறை குறித்த விதிகளில் நிதித்துறை ஒன்றை உருவாக்குவதற்குப் பதிலாக பொதுத் தேர்தல் இடைக்கால தேர்தல் அல்லது யாதொரு தொகுதியின் இடைத்தேர்தலில் வாக்கெடுப்பு நடைபெறும் மூன்று காலத்திற்கு முன்பிலிருந்து அமைச்சர்களின் விருப்புரிமை நல்கையிலிருந்து பொதுவாக யாதொரு செலவினமும் மேற்கொள்ளப்படக்கூடாது என்றும் வரவைப் பின்பற்ற வேண்டும் என்று இந்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்திய அரசின் அனைத்து செயலாளர்களும் அனுப்பப்பட்ட இந்த அமைச்சகத்தின் 28.10..1969 நாளிட்ட 50/3/68– தேர்தல் III ஆம் எண்ணிட்ட கடிதத்தின் நகல் இணைக்கப்படுகிறது. மாநில அரசுகள் / மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளும் ஒத்த மரபினைப் பின்பற்ற விரும்பலாம்.

துறை ஆணை 50/3/68–தேர்தல் II

இந்திய அரசு/ மத்திய அரசின் உள்துறை அமைச்சகம்/ கிருக மந்த்ராலயா,

புது தில்லி

நாள் : **28/10/1969**

செயலாளர்

என் இனிய ——————————————

தேர்தல்கள் காலத்தில், அமைச்சர்கள் தங்கள்து விருப்புரிமை நல்கையிலிருந்து செலவுகள் மேற்கொள்வது குறித்து இந்திய அரசின் அனைத்து அமைச்சகங்கள் மற்றும் மாநில அரசுகளின் முதன்மைச் செயலாளர்களுக்கு தேர்தல் ஆணையத்தால் அனுப்பப்பட்ட **25.01.1968** ஆம் நாளிட்ட 82/HN/24/67 ஆம் எண் கடிதத்தைக் (நகல் இணைக்கப்பட்டுள்ளது) காண்க. தங்களது பார்வையை ஈர்க்க நான் பணிக்கப்பட்டுள்ளேன். ஆணையத்தின் பதிந்துரையைக் கவனமாகப் பரிசீலனை செய்தபின், விருப்புரிமை நல்கையிலிருந்து செய்யப்படும் செலவுகளின் ஒழுங்குமுறை குறித்த விதிகளில் விதித்துறை ஒன்றை உருவாக்குவதற்குப் பதிலாக, பொதுத் தேர்தல், இடைக்காலத் தேர்தல் அல்லது யாதொரு தொகுதியின் இடைத் தேர்தலில் வாக்கெடுப்பு நடைபெறும் மூன்று மாத காலத்துக்கு முன்பிலிருந்து, அமைச்சர்களின் விருப்புரிமை நல்கையிலிந்து, பொதுவாக யாதொரு செலவினமும் மேற்கொள்ளப்படக் கூடாது என்னும் மரபைப் பின்பற்ற வேண்டும் என இந்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்திய அரசின் அனைத்துச் செயலாளர்களுக்கும் அனுப்பப்பட்ட இந்த அமைச்சகத்தின் **8.10.1969** ஆம் நாளிட்ட **50/3/68–** தேர்தல் III தவிர, யாதொரு செலவினமும் பொதுவாக, அமைச்சரின் விருப்புரிமை நல்கையிலிருந்து மேற்கொள்ளப்படக் கூடாது என்னும் மரபு உருவாக்கப்பட வேண்டும்.

**2.** அமைச்சர்களின் அதிகாரங்களுக்குக் கீழிருக்கும் விருப்புரிமை நல்கைகள் தொடர்பாக, இம்மரவு கண்டிப்புடன் பின்பற்றப்பட வேண்டும் எனக் கோரப்படுகிறது.

**3.** பிரதம மந்திரியின் ஒப்புதலோடு இது நடைமுறைக்கு வருகிறது.

தங்கள் உண்மையுள்ள,

**–ஓம்–**

எஸ்.ஆர்.சிங்

பெறுநர்

இந்திய அரசின் அனைத்துச் செயலாளர்கள்

# இந்திய தேர்தல் ஆணையம்

## தல்கதோரா சாலை, புதுதில்லி –

எண். 82/HN/24/67 நாள் 05.06.1968

ஆஷாடா 4,1890(சாகா)

பெறுநர்

1. இந்திய அரசின் அனைத்து அமைச்சகங்கள்

2. அனைத்து மாநில அரசுகள்/அனைத்து மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகள் நிர்வாகத்தின் அனைத்து முதன்மைச் செயலாளர்கள்

பொருள்: தேர்தல்கள் காலத்தில் விருப்புரிமை நல்கைகளிலிருந்து செலவுகள் மேற்கொள்ளுதல்.

ஐயா,

24/1967 எண்ணிட்ட தேர்தல் மனு மீதான பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்களுக்கான உயர் நீதிமன்ற ஆணைக்கு எதிரான 1632/(NCE)/1967 ஆம் எண்ணிட்ட உரிமையியல் மேல்முறையீட்டு வழக்கின் உச்ச நீதிமன்ற ஆணையிலிருந்து தொடர்புடைய பகுதிகளின் நகல் ஒன்றை இணைக்கவும் தேர்தல்களின் நேர்மையைக் கருத்தில் கொண்டு, தேர்தல் காலத்தில் விருப்புரிமை நல்கையிலிருந்து பணம் விநியோகம் செய்தல் தவிர்க்கப்பட வேண்டும் என்ற உச்ச நீதிமன்றத்தின் கருத்தை ஆணையம் மதித்து ஏற்றுக்கொள்வதாகத் தெரிவிக்கவும் நான் பணிக்கப்பட்டுள்ளேன். அத்தகைய செலவு பொதுமக்களின் நலனுக்காக இருக்கலாம். அது ஊழல் செயலாக இல்லாமல் இருக்கலாம். அவ்வாறு, விநியோகம் செய்வது பொது மக்களுக்குப் பயனுள்ளதாக இருந்தாலும், ஊழல் செயலாக இல்லாமல் இருந்தாலும் அது தவறான நடவடிக்கையே. தவறான நடவடிக்கையையும் ஊழல் செயலையும் ஒரு மெல்லிய கோடுதான் பிரிக்கிறது என நீதிமன்றம் கருத்து தெரிவித்திருக்கிறது. பொது நலனுக்காக செலவிடப்படுவது எதுவானாலும் ஆற்றலானது தேர்தல்கள் காலத்திலன்றி, அதற்கு மிகவும் முன்னரே செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதும் சிறிய ஆதாரம் கூட, இந்தத் தீய செயலை ஊழல் செயலாக மாற்றிவிடும் என்தும் புரிந்துக் கொள்ளப்படுகிறது.

**2.** குறிப்பிட்ட வேறு சில வழக்குகளிலும் இத்தகைய தீர்ப்புகள் நீதிமன்றங்களால் வழங்கப்பட்டுள்ளன. தீர்ப்புரைகளிலிருந்து தொடர்புடைய தகுதிகள் கீழ்க்காணுமாறு முன்வைக்கப்பட்டுள்ளன.

(a) திரு.காதர் செரீப் எதிர் முனுசுவாமி கவுண்டர் (1955) (உச்ச நீதிமன்றம்)

" ஈகை காரியங்களுக்காக நன்கொடை வழங்குவது பாராட்டத்தக்க செயல்தான் என்றாலும், தேர்தலின் போதொ, தேர்தல் காலத்தை ஒட்டியோ அவை வழங்கப்பட்டால் குறிப்பிட்ட வேட்பாளருக்கு ஆதராக வாக்காளர்களை வாக்களிக்கத் தூண்டுவதே அதன் உண்மையான நோக்கம் என்ற குற்றச்சாட்டிற்கு உள்ளாக்கப்படும் என்னும் கருத்து மீண்டும் மீண்டும் குறிப்பிடப்பட்டு வருகிறது.

(b) பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின் பாதியில், இங்ககிலந்தின் மிகவுநட குறிப்பிடத்தக்க நீதியரசர்களில் ஒருவரான நீதியரசர் போவன் ஜே அவர்கள், விகன் வழக்கில் (20' M & H ) பின்வருமாறு குறிப்புரை தெரிவித்தார்.

"அடுத்ததாக, இது தொண்டுதான் என்ற பிரிந்துரைக்கு நான் பதிலளிக்க விரும்புகிறேன். தேர்தல் காலங்களில் இவ்வாறு கொடைகள் அளிக்கப்படுவதை அரசியல்வாதிகள் பின்னால் வைக்கப்பட வேண்டும். அந்த சமயத்தில், விகான் நகரம் துயரத்தில் இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. நகர் முழுவதும் போதிய எரிபோருளோ, உணவோ இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனாலும், அவர்கள் ஒதுங்கியிருக்க வேண்டியிருந்த்து, அதே நாளில் வேறொரு கடமையையும் அவர்கள் நறைவேற்ற வேண்டியிருந்தது. அதனால் ஒரே நேரத்தில் இரண்டு பணிகளை மேற்கொள்ள இயலாமல் இருந்திருப்பார்கள். உண்மையில், பொதுவாகத் தேர்தல் காலத்தில் ஏழைகளுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கும் உணர்வானது, விநியோகிப்பவர்கள் அறிந்திருக்காவிட்டாலும், அது உண்மையில் ஈகை செயல் அல்ல. ஈகையின் மாறாக ஈகை என்னும் வேடம் தரித்த ஈகைப் பண்பை அப்பட்டமாகப் பின்பற்றிய செயல் ஆகும் என்று நான் எண்ணுகிறேன்.

**3.** மக்களின் பொது நலனைக் கருத்தில் கொண்டு, விருப்புரிமை நல்கைகள் அமைச்சர்களின் அதிகாரத்துக் கீழ் இருந்தாலும், விதிகள்படி அவற்றின் மீது சில நிபந்தனைகள் விதிக்கப்பட வேண்டும். நாடு தழுவிய பொதுத் தேர்தல் அல்லது இடைக்கால தேர்தல் அல்லது இடைத் தேர்தல் நடைபெற்று வரும் காலங்களிலோ மற்றும் அத்தகைய தேர்வுக்கான அறிவிப்புகள் வெளிவந்த பிறகோ, எந்த நேர்விலும் விருப்புரிமை நல்கையிலிருந்து செலவுகள் மேற்கொள்ளப்படக் கூடாது. குறிப்பிட்ட நிபந்தனைகள் விதிக்கப்பட வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளப்படும் செலவுகள் இயன்ற வரையில், ஒரு

குறிப்பிட்ட மாவட்டம் அல்லது தொகுதியால் மட்டுமே பயன்படுத்தப்படாமல், மாநிலம் முழுவதும் ஒரே சீராக பிரித்துக்கொடுக்கப்பட வேண்டும்.

4. நேர்மையான மற்றும் சுதந்திரமான தேர்தல்களைக் கருத்தில் கொண்டு, ஆரோக்கியமான மரபுகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும், தேவையென்றால், தேர்தல் காலத்தில் அந்த நிதியிலிருந்த செலவுகள் செய்யவோ, செலவுகள் செய்யப்படும் என்ற வாக்குறுதி அளிக்கவோ இயலாத வகையில், அமைச்சர்களால் விருப்புரிமை நிதியிலிருந்து செலவுகள் செய்யப்படுவது குறித்த விதிகளில் மாற்றங்கள் செய்யப்படவும் வேண்டும் என்று ஆணையம் விரும்புகிறது. எனவே, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில், உச்ச நீதிமன்றம் மற்றும் பஞ்சாப், அரியானா மாநிலங்களுக்கான உயர் நீதிமன்றம் ஆகியவை தெரிவித்த கருத்துக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கம் வகையில் தொடர்புடைய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்படலாம்.

கடிதம் கிடைக்கப்பெற்றமைக்கு பதில் அளிக்கவும்.

## உத்தரவு தொடர் எண்.112

தேர்தல் ஆணையம் அமைச்சரவை குழு செயலாளர், திட்டச் செயலாக்க துறைச் செயலாளர் அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசு நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமைச் செயலாளர்கள் / தலைமைத் தேர்தல் அதிகாரிகள் ஆகியோருக்கு எழுதிய **5.3.2014** ஆம் நாளிட்ட **437/6/**1/2014 CC & BE ஆம் எண் கடிதம்.

**பொருள்: 2014ஆம் ஆண்டு மக்களவைக்கான பொதுத் தெர்தல்கள் மற்றும் ஆந்திரப் பிரதேசம், ஒடிசா மற்றும் சிக்கிம் ஆகிய மாநில சட்டமன்றப் பேரவைகளுக்கான தேர்தல் – நாடாளுமன்ற உறுப்பினர்கள் / சட்டமன்ற உறுப்பினர்களின் உள்ளூர்ப் பகுதிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிதிகளை வழங்குதல்.**

மக்களவைக்கான பொதுத் தேர்தல் , சில இடைதேர்தல்கள் உட்பட ஆந்திரப் பிரதேசம், ஒடிசா மற்றும் சிக்கிம் ஆகிய மாநிலங்களின் சட்டமன்றங்களுக்கான பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்கான வழிகாட்டுதலுக்காக மாதிரி நடத்தை விதியை செயல்படுத்துவது பற்றி தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அதன்படி, தேர்தல் ஆணையத்தின் **5.3.2014** ஆம் நாளிட்ட ECI/PN/**10/2014** ஆம் எண்ணுள்ள பத்திரிகை குறிப்பை நான் குறிப்பிட விழைகிறேன் (பத்திரிகை குறிப்பு தேர்தல் ஆணையத்தின் www.eci.gov.in என்ற தேர்தல் ஆணையத்தின் வலைதளத்தில் உள்ளது )

**2.** நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர்ப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் நிதிகளை வழங்குவது குறித்துத் தேர்தல் ஆணையம் பரிசீலித்து பின்வருமாறு முடிவெடுத்துள்ளது.

**(**அ) தேர்தல் நடைபெற்று வருகிற நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் மாநிலங்களவை உறுப்பினர் உட்பட நாடாளுமன்ற உறுப்பினரின் உள்ளூர்ப் பகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியின் கீழ் புதிதாக நிதி எதுவும் வழங்கப்படக் கூடாது. ஏதேனும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்தாலும், தேர்தல் நடைமுறை முடிகிற வரையில் அவற்றிற்கு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் / சட்டமன்ற மேலவை உறுப்பினர் உள்ளூர்ப் பகுதி மேம்பாட்டுத் நிதியின் கீழ் புதிதாக நிதியினை வழங்கக் கூடாது.

(ஆ) இக்கடிதம் வெளியிடுவதற்கு முன்பு, பணிகளுக்கான ஆணை வழங்கப்பட்டு ஆனால் அதற்கான பணிகளை தொடங்காமல் இருந்தால், அப்பணிகளைத் தொடரக் கூடாது. தேர்தல் நடைமுறைகள் முடிந்த பின்னரே அவற்றிற்கான பணிகளைத் தொடங்க வேண்டும். இருப்பினும், ஒரு பணியினை ஏற்கெனவே தொடங்கியிருப்பின் அவை தொடரலாம்.

(இ) அலுவலர்களின் முழு மனநிறைவுடன் முடிக்கப்பட்ட பணிகளுக்கு செலுத்து தொகை வழங்குவதில் தடையேதும் இல்லை.

## உத்தரவு தொடர் எண்.113

அமைச்சரவை செயலாளர், திட்டங்கள் செயலாக்கத் துறையின் செயலாளர் மற்றும் மாநிலங்கள் யூனியன் பிரதேசப் பகுதிகளின் தலைமைச் செயலாளர்கள்/ தலைமைத் தேர்தல் அலுவலர்களுக்கு அனுப்பப்பட்ட **23.04.2014** ஆம் நாளிட்ட 437/6/1/2014 -CC BE ஆம் எண்ணிட்ட தேர்தல் ஆணையத்தின் கடிதம்.

பொருள்: **2014** ஆம் ஆண்டு மக்களவைப் பொதுத் தேர்தல்கள், மற்றும் ஒரே நேரத்தில் நடைபெறும் ஆந்திர பிரதேசம், கர்நாடகா, ஒரிஸா மற்றும் சிக்கிம் மாநிலங்களுக்கான சட்டப் பேரவைத் தேர்தல்கள் மற்றும் குறிப்பிட்ட இடைத் தேர்தல்கள்– நாடாளுமன்ற / சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிதிகள் விடுவித்தல்.

---.

மாதிரி தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறையில் உள்ள காலத்தில், மேற்கண்ட பொருளின் மீது ஆணையத்தால், பரிந்துரைக்கப்பட்ட வழிமுறைகள் அடங்கிய **05.03.2014** ஆம் நாளிட்ட ஆணையத்தின் கடிதத்தைக் காண நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

இந்த விவகாரம் ஆணையத்தால் மீண்டும் பரிசீலிக்கப்பட்டு, திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, நிதிகள் வழங்கப்பட்டு அல்லது விடுவிக்கப்பட்டு, பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு, மற்றும் பணியிடத்துக்குக் கொண்டு சேர்க்கப்பட்ட இடங்களில், திட்டமிட்டவாறு அத்தகைய திட்டங்கள் செயலாக்கப்படலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்திய உச்சநீதி மன்றத்தில்,

உரிமையியல் மேல்முறையீட்டு உச்சவரம்பு

உரிமையியல் மேல்முறையீடு எண். **1632/1967**

காசி ராம் –– மேல் முறையீட்டாளர்.

எதிர்

தால் சிங் மற்றும் ஏனையோர் –– எதிர்மனுமதாரர்கள்

## தீர்ப்பு

செலவினங்களின் முதல் தலைப்பின் கீழ் இக்ரா கிராம ஊராட்சிக்கு ரூபாய் 20,000, ராம்ராய் கிராமத்தில் உள்ள ஒரு கோயில் குளத்திற்கு 15.02.1967 அன்று ரூபாய் 5,000, பம்மன்வாஸ் கிராம ஊராட்சிக்கு 9.01.1967 அன்று ரூ.1,000/– பிபிபூர் கிராம ஊராட்சிக்கு டிசம்பர் 1966 அன்று ரூ.25,000/– 9–01–1967 அன்று ராம்ராய் கிராம ஊராட்சியின் பொதுப் பணிகளுக்காகவும் இலஜ்ஜீவானா கலான் என்ற ஊரில் தனக் சமூக நலக் கூடம், மேரா கிராமத்தில் உள்ள வால்மீகி தாழ்த்தப்பட்டவருக்கான சமூக நல மையங்கள் ஆகிய ஒவ்வொன்றுக்கும் ரூ.500 லஜ்வான குருத்ஜில் உள்ள தாழ்த்தப்பட்டோர் கிணறு பழுதுபார்ப்பதற்காக ரூ.500 என்ற வகையில் தொகை தருவதாக அவர் உறுதியளித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிதி நல்கைகள் வழங்கப்படுவதற்கு முன்பு அமைச்சர் இவ்வாறான பல கிராமங்களுக்கு வருகை தந்த போது அக்கிராமங்களில் உள்ள வாக்காளர்கள் அவர்களின் முன்னேற்றத்திற்கு அவர் எதுவும் செய்யவில்லை என்று கூறி அவருக்கு வாக்களிக்கப் போவதில்லை என்று தெரிவித்ததாகவும், மேற்சொன்ன தொகைகளை அளிப்பாக அவர் கொடுத்த வாக்குறுதியைப் பின்னர் ஏற்றதாகவும், அதனால் இந்தக் கிராமங்களின் கணிசமான வாக்குகளையும் எதிர்மனுதாரர் பெற்றதாகவும் கூறப்படுகிறது. இந்தக் குற்றச்சாட்டுகளை உறுதி செய்வதற்கான ஆதாரங்களை உயர் நீதிமன்றம் கவனமாகப் பரிசீலனை செய்தபின், சட்டத்தின் 123 ஆம் பிரிவிற்கான தேவைகளைப் பூர்த்தி செய்யவில்லை என்ற முடிவிற்கு வந்துள்ளது. சட்டத்தின் அடிப்படையிலும், உண்மையின் அடிப்படையிலும் முடிவு எடுப்பதில் உயர் நீதிமன்றதில் பிழை நேர்ந்ததாகக் கருத நேர்கிறது. இந்தச் சூழ்நிலையில் ஊழல் செயலாக நாம் கருதுவதை ஆய்வு செய்வதற்கு முன்னர் உண்மைகளை முதலில் எடுத்துக்கூற வேண்டும்.

மேத்தாப் சிங் (RW.10) என்பவரால் அளிக்கப்பட்ட ஆதாரம் மூலமே கிராம பஞ்சாயத்திற்கு அன்பளிப்பு அளித்தது உறுதி செய்யப்படுகிறது. எதிர்மனுதாரர் வளர்ச்சி வட்டாரத்தின் தலைவராக ரூ.5000 அளிப்பதாக வாக்குறுதி அளித்திருந்தாா். ஆனால் அளிக்கவில்லை. வாக்கு சேகரிப்பதற்காக அவர் வந்த போது, வாக்குறுதியைக் காப்பாற்றாத காரணத்தால் அவருக்கு வாக்களிக்கத் தயாராக இல்லை. பின்னர் அவர் கிராம மக்களை அமைதிப் படுத்தி, அவருக்கு ஆதரவு தெரிவித்தால், குறிப்பிட்ட தொகையை அளிக்கப்போவதாக வாக்குறுதி அளித்தார். இந்தச் சாட்சி பணிப் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட காவல்துறை சார் ஆய்வாளர் என்றும் தேர்தல் மனுதாரரின் வாக்குச் சாவடி முகவர் என்றும் உயர் நீதிமன்றம் குறிப்பிட்டிருந்தது. வாக்குறுதி அளித்த 7 நாட்களுக்குப் பின்னர் தொகை பெறப்பட்டதாக அவர் தெரிவித்தது பொய் என்று அறியப்பட்டது. ஏனெனில், இந்தத் தொகை வாக்குப்பதிவு நடைபெற்ற ஒரு மாதத்திற்குப் பின்னர் மார்ச் 1967–இல் வழங்கப்பட்ட விவரங்கள் ஆவணங்களின் மூலம் தெளிவாகத் தெரிகின்றன. ஒரு கிராமப் பள்ளியின் கட்டுமானப் பணிகள் முடிக்கப்படாத நிலையில் இருந்ததாகவும், அதனை முடிப்பதற்குப் பணம் தேவைப்பட்டதாகவும் லக்கி ராம் எதிர்மனுதாரரின் சாட்சி 5

ஒப்புக்கொண்டார். இந்தத் தொகை யாதொரு வாக்காளருக்கோ, வாக்காளர்களுக்கோ அளிக்கப்படவில்லை என்பது குறிக்கப்பட வேண்டும். கிராம பஞ்சாயத்திடம் அதன் பயன்பாட்டுக்காக ஒப்படைக்கப்பட்டது. எனவே இந்தத் தொகை எதிர்மனுதாரருக்கு ஆதரவு அளிக்க வேண்டியவர்கள் மற்றும் அவரை எதிர்ப்பவர்கள் ஆகியோரின் நலனுக்காகச் செலவிடப்பட்டிருக்கும். ஊழல் என்று பொருள் ஏற்படும் வகையில், வாக்குகளுக்கான யாதொரு பேரமும் நிகழவில்லை என்று சாட்சியாளர் கூறியதை உயர்நீதிமன்றம் நம்பவில்லை. சாட்சியத்தைப் படித்துப் பார்த்தததில் கிராம சமுதாயத்தினர் அவரிடம் உதவி கோரினர் என்றும் பொதுப்பயன்பாட்டுக்காக எதிர்மனுதாரரும் அவருக்கு உதவியளித்ததாக நாங்கள் ஐயமறத் தெளிகிறோம். தேர்தல் முடிவடைந்த பின்னர் அந்தத் தொகை வழங்கப்பட்டது.

அதைப் போன்றே, ரூ.5,000/— ராம்ராய் கிராம சபைக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தேவி தயாள் (RW —11) மற்றும் மங்கள் சிங் (RW—12) ஆகியோரின் சாட்சியம் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இத்தொகை காங்கிரஸ் கட்சி எதிர்மனுதாரருக்கு சீட்டினை வழங்குவதற்கு முன்னரே, அதாவது 08.12.1966 அன்றே அனுமதிக்கப்பட்டது. இங்கு தெரிவித்துள்ள சாட்சியமும் வாக்குகளைப் பெறுவதற்காக ஏதேனும் பேரம் நடைபெற்றதாகத் தெரிவிக்கவில்லை. இரண்டு சாட்சிகள், பதிலளிக்கிற எதிர்மனுதாரருக்குப் பிறழ் சாட்சிகள் என்பது நிருபிக்கப்பட்டது. தேவி தயாள்1952 ஆம் ஆண்டில் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளராயிருந்தார், பதிலளிக்கிற எதிர்மனுதாரருக்கு எதிராகப் பல மனுக்களை அளித்திருந்தார். காங்கிரஸ் சீட்டுக்கான விண்ணப்பத்தை, பதிலளிக்கிற எதிர்மனுதாரர் 06.12.1966 அன்று அளித்திருந்தார். அதற்கு 08.12.1966 அன்று அனுமதி அளிக்கப்பட்டது. வேட்புமனு தாக்கல் செய்த பின்னர் தொகை வழங்கப்பட்டது என்ற தேவி தயாளின் சாட்சியம் நிச்சயமாக உண்மைக்கு மாறானது. மங்கள் சிங், வாராந்திர பத்திரிகை ஒன்றின் ஆசிரியராக உள்ளார். அவரது இதழ் எதிர்மனுதாரருக்கு எதிரான பல புகார்களை எழுதி வெளியிட்டுள்ளது. எதிர்மனுதாரர் அமைச்சர் ஆவதற்கு முன்பே முன்னரே, கோயில் குளத்திற்காக ரூ.25,000/— வசூலித்தார் என்றும் அவருடைய முயற்சிகள் மூலம் ஒரு நிரந்தர சாலை, ஒரு மருந்தகம், ஒரு கால்நடை மருத்துவமனை ஓர் அஞ்சலகம் ஆகியவை அமைக்கப்பட்டன மற்றும் நீர்நிலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் தொடக்கப் பள்ளி ஒன்றையும் அவர் நிலை உயர்த்தினார் என்றும் எதிர்மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். ராம்ராய் அவருடைய சொந்த ஊராக இருந்ததால், ஊராட்சிப் பணியில் அவர் அக்கறை காட்டினால் என்றும் நீர் தட்டுப்பாடு இருந்தால் கோயில்

குளத்தை மேம்படுத்துவதற்காக உதவி செய்யும் வகையில் கிராம ஊராட்சிக்கு வழங்கினார் என்றும் பதிலளிக்கிற எதிர்மனுதாரர் தெரிவித்தார். சட்டத்தின் 123 ஆம் பிரிவிற்குள் வருகிற விவகாரத்தைக் கொண்டு வருகிற சாட்சியம் எதுவும் உயர்நீதி மன்றத்துக்குக் கிடைக்கவில்லை. இந்தப் பிறழ் சாட்சிகளை அது நம்ப மறுக்கிறது. சாட்சியத்தைக் கருதிப் பார்த்ததன் பேரில் முடிவு தவறானது என்று நாங்கள் ஐயமறத் தெளியவில்லை.

பாமன்வாஸ் கிராம ஊராட்சியின் தொடக்கப் பள்ளிக்கு ரூ.1000/– தொகை வழங்கப்பட்டது. இது, தேர்லுக்கு ஒரு மாதம் அல்லது ஒன்றே கால் மாதத்திற்கு முன்போ அளிக்கப்பட்டது. இராம்தத் (RW –20) மூலம் இது நிரூபிக்கப்பட வேண்டும். இராம்தத் மனுதாரர், இவரின் வாகனத்தைப் பயன்படுத்தும் அளவிற்கு தேர்தல் மனுதாரரிடம் நட்பாக இருந்துள்ளார் என்பது சான்றுடன் உள்ளது. சில காலம் அப்பள்ளி கூரை இல்லாமல், மாணவர்கள் மரத்தடியின் கீழ் அமர்ந்துள்ளனர் என்று சான்று காட்டுகிறது. இத்தொகையைக் கையூட்டாகக் கருத இயலாது என்று நாங்கள் மன நிறைவடைகிறோம்.

பிபிபூருக்கு ரூ.2500/– செலுத்தப்பட்டதை நிரூபிக்க சான்று ஏதுமில்லை. மேலும், தேர்தல் மனுதாரருக்கு எதிரானது என்று சுட்டிக்காட்ட யாரும் எங்களின் கவனத்திற்குக் கொண்டு வரவில்லை.

சமுதாயக் கூடங்களை மேம்படுத்துவதற்காக நான்கு தொகைகளான ஒவ்வொன்றுக்கும் ரூ.500/– செலுத்தப்பட்டன. அவர்கள் பேரத்தின் ஒரு அங்கமாக செயல்பட்டதை நிரூபிப்பதற்கு எடுத்து கொள்ளப்பட்ட முயற்சி, உயர் நீதிமன்றத்தால் ஏற்கப்படவில்லை. லாஜ்வானா காலனுக்கு தொகை வழங்கப்பட்டதை பொறுத்தவரையில் தேர்தல் மனுதாரரின் வாக்குப்பதிவு முகவரான ராம்சிங் (RW–13), நீதியரசரால் நடத்தை பற்றி கருத்து தெரிவிக்கப்பட்ட ஃபூலா (RW–14) வேட்பாளர்களின் ஒருவரான மங்கேராம் (RW–19) மற்றும் மற்றொரு வேட்பாளரின் உதவியாளரான ஜெய்ரால் (RW–21) ஆகியோர் சாட்சிகள் ஆவர். அவர்களிடையே அல்லது ஏனைய வேட்பாளர்களிடையே கொண்ட ஈடுபாடு காரணமாக அல்லது முரண்பாடுகள் மற்றும் குறைபாடுகள் காரணமாக அவர்கள் சாட்சியம் திருப்திகரமாக இல்லை

என்று கண்டறியப்பட்டது.  நாங்கள் சாட்சியத்தை படித்துப் பார்த்தோம், அதில் மாறுபடுவதற்கான எந்த காரணத்தையும் நாங்கள் கண்டறியவில்லை.

ஒவ்வொருவருக்கும் ரூ.500/– வழங்கப்பட்ட ஏனைய இரண்டு தொகை வழங்கலைப் பொறுத்தவரையில், கானக் மற்றும் வால்மீகி சமுதாயங்களின் வாக்குகளைப் பெறுவதற்கான நோக்கத்துடன் அத்தொகை வழங்கப்பட்டது என்ற மறுப்புரை மட்டுமே எங்களிடம் எழுப்பப்பட்டது. ஏனெனில் இந்தக் கிராமங்களில் சமுதாய நலக் கூடம் எதுவுமில்லை என்று தெரிவிக்கப்பட்டது.  இருப்பினும் இந்தக் கிராமங்களில் ஆதிதிராவிட சமுதாயத்தினர் கூடுகிற இடங்கள் உள்ளன என்பதை சாட்சியம் தெரிவிக்கிறது.  உண்மையில், மறு மற்றும் இந்தச் சாட்சியங்களில் சமுதாய நலக்கூடங்களாக இவை குறிப்பிடப்படுகின்றன.  பதிலளிக்கும் மனுதாரரின் இந்தச் செயல், ஊழல் நடவடிக்கைக்கு ஒப்பாகும் என்பது கண்டறியப்படவில்லை.  சாட்சியத்தைச் கருதிப் பார்த்ததில் உயர் நீதிமன்றக் கருத்தில் நாங்கள் உடன்படுகிறோம்.  எங்களுடைய கருத்தின்படி கையூட்டு வாங்குவது சம்பந்தப்பட்ட ஒரு ஊழல் நடவடிக்கை முற்றிலுமாக நிரூபிக்கப்பட வேண்டும் சட்டம் கோருகிறது.  நேரடியாக அல்லது மறைமுகமாக வாக்காளர் ஒருவரை வாக்களிப்பதற்கு அல்லது வாக்களிப்பதிலிருந்து தவிர்ப்பதற்கு நேரடியாக அல்லது மறைமுகமாகப் பரிசு அளிக்கிற வாக்குறுதி குறித்த நேர்வில் ஆதாரம் தெளிவாகக் காட்டப்பட வேண்டும். அமைச்சர் ஒருவரின் நிலைமை கடினமானது.  அவருடைய தேர்தல் உள்ளபோது அவருடைய செயல் முடிவுக்கு வர இயலாது.  அவர் குறைபாடுகளைக் கவனிக்க வேண்டியது அவசியமாகும் இல்லையெனில் அவர் தோல்வியடைவார்.  அவர் பொதுமக்கள் முன்னிலையில் நிருவாகம் பற்றிய அவருடைய தோற்றத்தை மேம்படுத்த வேண்டும்.  நேர்மையுடன் மேற்கொள்ளப்பட்ட அவருடைய செயல்பாடுகள் ஒவ்வொன்றும் அவருக்கு எதிராக கருதப்பட்டு அவற்றின் மீது கெடுநோக்கம் கற்பிக்கப்பட்டால் நிருவாகம் ஒரு செயலற்ற நிலைக்கு வந்துவிடும்.  அரியானா மாநிலம் **1.11.1966** செயல்படத் தொடங்கியது.  தேர்தல் நெருங்கும் நிலையில் அரசியல் கட்சி பொதுவான செயல்பாடுகளின் ஈடுபட வேண்டி இருக்கும்.  விருப்புரிமையின் அடிப்படையில் பொதுவான திட்டங்களுக்காக வழங்கப்படும் நிதி நல்கையினது சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களை மேம்படுத்துவதற்கும் பொது மக்களுக்கான உடனடியான குறைகளைக் களைவதற்கும் உரியதாகும்.  இதற்கான நிதி ஏறத்தாழ மூன்று மாதங்களுக்குள் செலவழிக்கப்பட வேண்டியதாகும். அமைச்சரின் ஒப்பளிப்பானது அவருடைய சார்நிலை அலுவலர்களின் ஒப்புதலையும் பரிந்துரையையும் பொதுவாக உள்ளடக்கியதாகும்.  இக்காரணத்திற்காகத்தான் குடிநீர் வழங்குவதற்கான ஆணைகள் வலியுறுத்தப்படவில்லை.  இவை முதலாம் எதிர் மனுதாரருக்கு எதிராக அவற்றைக் கொள்ள முடியாது. எனவே, பணம் கொடுக்கப்படுவது பற்றி மட்டுமே இங்கு கருதப்பட வேண்டும்.  நேரடியாக வாக்காளருக்குப் பணம் வழங்கப்படாது பொதுவாக ஊராட்சிக்கு இத்தொகை வழங்கப்பட்டது.  இந்தப் பணத்தைப் பொறுத்தவரை வாக்காளர்களுக்கு சார்பாக உள்ளவர்களுக்கும் எதிராக உள்ளவர்களுக்கும் நன்மை

செய்யவே பயன்பட்டிருக்க வேண்டும். ஐயத்திற்கு இடமின்றி அவருடைய வாதங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு உரியதாக இருந்தாலும் அதனைத் தவிர்க்க இயலாது. நிதி ஏதும் செலவிடப்படாவிட்டாலும், நல்ல நிர்வாகமானது மக்களின் வாழ்நிலையை மாற்றியுள்ளது. எனவே இதில் ஊழல் நடைமுறை ஏதுமில்லை என்று நாங்கள் கருதுகிறோம். வாக்குகளைப் பெறுவதற்காக அந்த அமைச்சர் நேரடியாகவோ மறைமுகமாகவோ பேரம் பேசியதற்கு நல்ல சாட்சியம் ஏதும் இருந்திருப்பின் அதனுடைய முடிவு வேறுமாதிரியாக இருந்திருக்கும். ஆனால் அதற்கான சாட்சியம் ஏதுமில்லை.

இந்த வழக்கில் முதல் எதிர்மனுதாரரின் நடவடிக்கையானது அறியாமல் நிகழ்ந்தது என்று எங்களால் முடிவு எடுக்கப்பட்டாலும் அரசினுடைய அணுகுமுறை பாராட்டத்தக்கதாக இல்லை என்று நாங்கள் தெரிவிக்க விழைகிறோம். தேர்தல் என்பது நேர்மையாக நடத்தப்பட வேண்டியதாகும். பல்வேறு தொகுதிகளில் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் நிதி செலவிடுவது என்பது பொதுநன்மைக்காக இருந்தாலும் கூட அது ஊழல் நடைமுறையாக இல்லாவிட்டாலும் ஒரு தீங்கான நடைமுறையாகவே கொள்ளப்படும். தீங்கான நடைமுறைக்கும் ஊழலான நடைமுறைக்கும் இடையே உள்ள வேறுபாடானது மிக நுட்பமானதாகும். நன்மை செய்வதற்கான ஆற்றலை தேர்தலுக்கு முன்புதான் பயன்படுத்த வேண்டும் என்பதில்லை. இன்னும் வெகுகாலம் முன்னரே அதனைப் பயன்படுத்தலாம் இதில் சிறிய சாட்சியம் இருந்தாலும் கூட ஒரு முறையற்ற நடைமுறை என்பது ஊழல்மிகு நடைமுறையாக மாறக்கூடும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே, தேர்தலுக்கு சற்று முன்பாக விருப்புரிமை நிதியை வழங்குவது தவிர்க்கப்பட வேண்டும்.

ஒப்பம்/–
M. இதயத்துல்லா,
ஒப்பம்.
K.S. ஹெக்டே

புது தில்லி
பிப்ரவரி 07, 1968

## J.அலுவலர்களின் நியமனம் மற்றும் அலுவலர்களின் பணியிடமாற்றத்தின் மீது தடை

### உத்தரவு தொடர் எண்.114

மகாராஷ்டிரா அரசின் தலைமைச் செயலாளர் மற்றும் மகாராஷ்டிராவின் தலைமைத் தேர்தல் அலுவலர் ஆகியோருக்குத் தேர்தல் ஆணையம் அனுப்பிய எண்.437/6/1/2004–PLN III, 11.08.2004 நாளிட்ட கடிதம்.

**பொருள்:** மகாராஷ்டிரா சட்டப் பேரவைக்கான க்கான பொதுத் தேர்தல் – அலுவலர்களின் நியமனம்– மும்பை மகாராஷ்டிரா நிர்வாகத் தீர்ப்பாயத்தின் ஔரங்காபாத் கிளையின் தீர்ப்புரை – தொடர்பாக.

மகாராஷ்டிரா சட்ட பேரவைக்கான பொதுத் தேர்தல்கள் நேர்மையான மற்றும் சுதந்திரமான முறையில் நடைபெற வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு மாநிலத்தின் தேர்தல் நடைமுறைகளோடு தொடர்புடைய அலுவலர்கள் தங்களது சொந்த மாவட்டங்களில் பணிபுரியவில்லை என்பதையும், நான்கு ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் ஒரே மாவட்டத்தில் பணிபுரியும் அலுவலர்கள் பணியிட மாற்றம் செய்யப்படுவர் என்பதையும் உறுதி செய்யும் வகையில், ஆணையத்தால் வெளியிடப்பட்ட விரிவான விதிமுறைகள் அடங்கிய, 5.08.2004 ஆம் நாளிட்ட ஆணையத்தின் கடிதத்தை (உடனடி பார்வைக்காக இணைக்கப்பட்டது) காண்க. இது தொடர்பாக, ராமச்சந்திர பாபுராவ் பவார் எதிர் மகாராஷ்டிரா மாநிலம் மற்றும் ஏனையோர் விவகாரத்தில் மும்பை, மகாராஷ்ரா நிர்வாகத் தீர்ப்பாயத்தின் ஔரங்காபத் கிளையால் வழங்கப்பட்ட 22.06.2004 ஆம் நாளிட்ட 222/2004 ஆம் அலுவலக நடவடிக்கை எண்ணிட்ட ஆணையின் மீது தங்களது கவனத்தை ஈர்க்க நான் பணிக்கப்பட்டுள்ளேன். மேற்சொன்ன அலுவலக நடவடிக்கையில், இந்திய தேர்தல் ஆணையம் மூன்றாவது பிரதிவாதியாக இணைக்கப்பட்டது. மேற்சொன்ன அலுவலக நடவடிக்கை தள்ளுபடி செய்யப்பட்டாலும், மாண்புமிகு தீர்ப்பாயமானது, 26.06.2004 ஆம் நாளிட்ட தனது ஆணையின் 11 ஆம் பத்தியில் கீழ்க்காணுமாறு குறிப்பட்ட கருத்துரைகளைப் பதிவு செய்துள்ளது.

" நாடாளுமன்ற தேர்தல்களுக்கான அறிவிப்பு ஜனவரி அல்லது பிப்ரவரி 2004 ஆம் மாதத்தில் அறிவிக்கப்பட்டது. அரசு ஊழியரின் குறிப்பிட்ட ஒரு இடத்திற்கான நியமனங்கள் மற்றும் பணியிடமாற்றங்கள் தொடர்பான குறிப்பிட்ட கொள்கை ஒன்றை தேர்தல் ஆணையம் ஏற்றுக்கொண்டது. 11.02.2004 ஆம் நாளில் ஆணையத்தால் வழங்கப்பட்ட விரிவான விதிமுறைகளில் குறிப்பிட்டுப் பட்டியலிட்டவாறு தேர்தல் நடைமுறையோடு தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் சொந்த ஊரில் பணிபுரிபவர்கள் அல்லது ஒரே இடத்தில் நான்கு ஆண்டுகள் காலத்தை நிறைவு செய்தவர்கள், அந்த இடத்திலிருந்து வேறு இடத்திற்குப் பணியிட மாற்றம் செய்யப்பட வேண்டும். தேர்தல் ஆணையம் மற்றும் மாநில அரசின் நிருவாகிகள் இந்தத் திட்டத்தை உண்மையுடனும் நேர்மையுடனும் செயல்படுத்தக்

கடமைப்பட்டிருந்தனர். இருப்பினும், இத்தகைய திட்டத்தின் போர்வையில் குறிப்பிட்ட ஊழியர்களைப் பணியிட மாற்றம் செய்யவும், ஆதாயம் அடையும் ஏனையோரை அதே இடத்தில் தக்க வைத்துக்கொள்ளவும், இவ்வாறு குறிப்பிட்ட விதிமுறைகளை வகுத்தல் ஒரு நகைப்புக்குரிய செயலே என நான் கருதுகிறேன். துணை ஆட்சியர் திரு.டி.எம்.போருடே (வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம்) அவர்களால் அளிக்கப்பட்ட மனு ஒரு சிறந்த உதாரணமாகும். அவர் அகமத்நகர் மாவட்டத்தைச் சார்ந்தவர். அவரது வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் துணை ஆட்சியர் பதவி, தேர்தல் நடத்தும் உதவி அலவலராக ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது. அகமத் நகரின் ஆட்சியர் **26.03.2004** ஆம் நாளன்று அவரைப் பணியிட மாறற்றம் செய்தற்கான கோரிக்கையை முன்வைத்தார். இருப்பினும், அவர் என்ன காரணமோ, அதே இடத்தில் தக்கவைக்கப்பட்டார். மனுதாரர் மேலும் தங்டே, லவாண்டே, ஜாரே போன்றவர்களை எடுத்துக்காட்டி அவர்கள் அனைவரும் அகமத்நகர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனக் குறிப்பிட்டார். திரு. லவாண்டே துணை மாவட்ட தேர்தல் அலுவலராகப் பணியாற்றினார். இருந்தாலும், அவர்கள் அனைவரும் அந்த இடத்திலிருந்து பணியிட மாற்றம் செய்யப்படவில்லை. தேர்தல் ஆணையத்தால் குறிப்பிட்ட கொள்கை பின்பற்றப்படுவதை கேலிக்கூத்து என நான் அழைப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும். முகங்களைப் பார்த்துச் செயல்படுத்துவதற்காகவே இந்தக் கொள்கை பின்பற்றப்படுவதன்றி வேறு காரணங்களுக்காக அல்ல. உண்மையில், தேர்தல் ஆணையமானது, ஒரு தன்னாட்சி அமைப்பாகும். தேர்தல்களில், நேர்மையான முடிவுகள் வெளியிடப்பட வேண்டும் என ஆணையம் முடிவு செய்தது. சொந்த ஊரில் பணிபுரியும் அலுவலர் ஒரே இடத்தில் நான்கு ஆண்டுகள் காலத்தை நிறைவு செய்த அலவலர்களையும் பணியிட மாற்றம் கொள்கையை ஏற்றுக்கொண்டது. இருப்பினும் மேற்சொன்ன அக்கொள்கையானது நேர்மையான முறையில் செயல்படுத்தப்படவில்லை. மாறாக, சூது நினைக்கும் தீய சக்திகள் தீங்குகள் செய்து தவறான கோரிக்கைகளை / திட்டங்களை முன்வைக்கின்றனர். தேர்தல்கள் எனும் போர்வையில் ஆணையத்தின் கீழ் பணிபுரியும் அலுவலர்கள், மற்றும் குறிப்பாக அரசு நிருவாகிகள், இச்சூழலைத் தவறாகப் பயன்படுத்துவதில்லை என்பதை ஒரு தன்னாட்சி அமைப்பான தேர்தல் ஆணையம் கண்காணிக்க வேண்டும் என நான் கருதுகிறேன். தேர்தல் ஆணையர் இத்தகைய நிகழ்வுகளைப் பொறுத்துக் கொள்ளவும் புறக்கணிக்கவும் செய்தால், தீங்கு விளைவிக்கும் எண்ணம் கொண்ட தீய சக்திகள் தங்களது அதிகாரங்களைச் சட்டத்துக்கு புறம்பான காரணங்களுக்காகத் தவறாகப் பயன்படுத்த நேரும். அதனால் இந்த நல்ல அலுவலர்களும் பாதிப்புக்கு உள்ளாவர். இந்த விவகாரத்தை தீவிரமாகப் பரிசீலிக்கவும் உரிய நடவடிக்கை எடுக்கவும் தேர்தல் ஆணையத்திடம் கோரிக்கை விடுக்க நான் கடமைப் பட்டுள்ளேன்.

ஆணையம் தனது ஆணைகள் தவறாகப் பயன்படுத்துவதைத் தீவிரமாக எடுத்துக் கொண்டுள்ளது. மாநில நிர்வாகம் மற்றும் தலைமைத் தேர்தல் அலுவலர், இத்தகைய குறைபாடுகள் எதிர்காலத்தில் ஏற்படாது என்பதை உறுதி செய்யும் வகையில் மேலும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று ஆணையம் விரும்புகிறது.

## உத்தரவு தொடர் எண்.115

அரசின் அமைச்சரவைக்குழுச் செயலாளர், தலைமைச் செயலாளர் மற்றும் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் தலைமைத் தேர்தல் அலுவலருக்கு அனுப்பப்பட்ட **19.10.2008** ஆம் நாளிட்ட **437/6/1/2008** ஆம் எண்ணிட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் கடிதம்.

பொருள்: தேர்தல் மாதிரி நடத்தை விதியின் பயன்பாடு – மாநில சட்டப் பேரவைக்கான பொதுத் தேர்தல்கள் – தொடர்பாக.

ஜம்மு-காஷ்மீர் மாநில சட்டப்பேரவைக்கான பொதுத் தேர்தல் நடத்துவதற்கசான அட்டவணையை ஆணையம் அறிவித்திருப்பதாகக் கூற நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

**2.** இந்த அறிவிப்போடு, அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்கு வழிகாட்டும் மாதிரி தேர்தல் நடத்தை விதியின் விதிமுறை நடைமுறைக்கு வருகின்றன. அரசு மத்திய அரசு மற்றும் ஜம்மு-காஷ்மீர் மாநில அரசின் அனைத்து அமைச்சகங்கள் / துறைகள் மற்றும் அனைத்து இதர அலுவலகங்களின் கருத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

**3.** தேர்தல் மாதிரி நடத்தை விதியின் VII (Vi) ஆம் பகுதியின் மீது தங்கள் குறிப்பிட்ட கவனம் ஈர்க்கப்படுகிறது. மற்றவற்றிற்கிடையில் அது பின்வருமாறு குறிப்பிடுகிறது.

தேர்தல்கள் ஆணையத்தால் அறிவிக்கப்பட்ட காலத்திலிருந்து அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியோர் பின்வருவனவற்றைச் செய்யக் கூடாது.

(a) எந்த வடிவிலுமான யாதொரு நிதி நல்கைகளும் அல்லது அவற்றுக்கான வாக்குறுதிகளையும் கொடுத்தல் அல்லது

(b) (ஆட்சி பணியாளர்கள் நீங்கலாக) திட்டப் பணிகள் அல்லது யாதொரு வகையிலான திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டுதல் அல்லது

(c) சாலைகள் அமைத்தல், குடிநீர் வசதிகளுக்கான வழிமுறைகள் போன்றவை தொடர்பாக யாதொரு வாக்குறுதி அளித்தல் அல்லது

(d) அரசு பொதுத்துறை நிறுவனங்கள் போன்றவற்றில் ஆட்சியிலிருக்கும் கட்சிக்கு ஆதரவாக, வாக்காளர்களை வாக்களிக்கத் தூண்டும் அதிகாரம் மிக்க பதவிகளில் தற்காலிக நியமனங்கள் செய்தல்.

**4.** தேர்தலோடு தொடர்புடைய அனைத்து அதிகாரிகள்/ அலவலர்களின் பணியிட மாற்றங்கள் மீது முழுமையான தடை விதிக்க வேண்டும் என்று ஆணையம் உத்தரவிடுகிறது. இவை கீழ்க்காணும் அதிகாரிகள்/ அலுவலர்கள் உள்ளடக்கியோரைக் கட்டுப்படுத்துவதில்லை.

(i) தலைமைத் தேர்தல் அலுவலர் மற்றும் கூடுதல்/இணை/துணை தலைமைத் தேர்தல் அலுவலர்கள்.

(ii) கோட்ட ஆணையர்கள்

(iii) தேர்தல் நடைமுறைகளோடு தொடர்புடைய மாவட்ட தேர்தல் அலுவலர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள், தேர்தல் நடத்தும் உதவி அலுவலர்கள் மற்றும் ஏனைய வருவாய் அலுவலர்கள்

(iv) 1951 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 28-அ பிரிவின் கீழ் தேர்தல் ஆணையத்தால் மாற்றுப் பணியமர்த்தப்பட்ட தேர்தல் நிர்வாகத்தில் காவல்துறை தொடர்புடைய அதிகாரிகளான மண்டல காவல்துறை தலைவர் மற்றும் காவல்துறை துணைத் தலைவர், முதுநிலை காவல்துறை கண்காணிப்பாளர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர் உள்ளிட்ட காவல் அதிகாரிகள்.

(v) பகுதி மற்றும் மண்டல அலுவலர்கள், போக்குவரத்து பிரிவு, மின்னணு வாக்குப் பதிவு இயந்திரப் பிரிவு (இவிஎம்), வாக்குச்சாவடிக்குத் தேவையான பொருட்களைக் கொள்முதல் செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் பிரிவு, பயிற்சிப் பிரிவு, அச்சுப் பிரிவு ஆகியவற்றின் அலுவலர்கள் மற்றும் மாநில தேர்தல் நிர்வாகத்தின் முதுநிலை அலுவலர்கள் ஆகியோரும் இவற்றில் அடங்குவர்.

(vi) மேற்சொன்ன பிரிவுகளில் உள்ள அலுவலர்களுக்கு வழங்கப்படும் பணி மாறுதல் ஆணை தேர்தல் அறிவிப்பிற்கு முன்னரே வழங்கப்பட்டிருந்தாலும், தேர்தல் நடத்தை விதிமுறை நடைமுறைக்கு வந்த பின்னர், தேர்தல் ஆணையத்தின் சிறப்பு அனுமதியைப் பெறாமல் செயல்படுத்த இயலாது.

(vii) தேர்தல் ஆணையத்தின் முன் அனுமதியைப் பெறாமல் அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணி நியமனங்கள் அல்லது பதவி உயர்வுகள் ஆகியவற்றை வழங்கக் கூடாது.

## உத்தரவு தொடர் எண்.116

அனைத்து மாநில மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமைச் செயலாளர்களின் மற்றும் தலைமைத் தேர்தல் அலுவலர்களுக்கு அனுப்பப்பட்ட **18.2.2009** ஆம் நாளிட்ட, இந்திய தேர்தல் ஆணையத்தின் கடித எண்.**437/6/**உத்தரவு/**2009**–CC&BE

**<u>பொருள்:</u>** தேர்தல் பணிகளுக்காக அலுவலர்களை நியமிப்பது குறித்து **04.02.2009** தேர்தல் ஆணையத்தின் ஆணைகள் தொடர்பான விளக்கங்களில் **4.2.2009** ஆம் நாளிட்ட அதே கடிதத்தில் தேர்தல் ஆணையத்தின் மீது உங்கள் கவனத்தை ஈர்க்க நான் பணிக்கப்பட்டுள்ளேன். அதன்படி தலைமைத் தேர்தல் அலுவலர்கள் கருத்தரங்கிலும், தலைமைச் செயலாளர்களுடன் தேர்தல் ஆணையம் நடத்திய கூட்டத்திலும் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் குறித்தான விளக்கங்கள் கேட்கபட்டதையும் நான் உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

இந்தப் பொருள் குறித்து தேர்தல் ஆணையம் விரிவாகப் கருதிப் பார்த்து கீழ்க்கண்ட முறையில் மேலும் ஒரு வழிகாட்டி நெறியை இது தொடர்பாக அறிவிக்க முடிவு செய்துள்ளது.

பெரிய மாநகர தலை நகரங்களில் / குறைந்த எண்ணிக்கையிலான மாவட்டங்களைக் கொண்ட சிறு மாநிலங்களில் ஒரு குறிப்பிட்ட காவல்துறை அதிகாரியை மேற்சொன்ன தேர்தல் விதிமுறைகளுக்கு ஒப்ப பணியிட மாற்றம் செய்யப்படுவது என்பது கடினமாக இருக்கக் கூடும். அப்படிப்பட்ட சூழல்களில் உட்கோட்ட எல்லைப் பகுதிக்குள்ளாக குறிப்பிட்ட காவல் துறை அதிகாரியின் பணியிட மாற்றம் என்பது ஒரு விதி விலக்காக அமைகிறது. பிற நேர்வுகளில் அதாவது மாவட்ட எல்லைப் பகுதிக்குள் பணியிட மாற்றம் செய்வது தேர்தல் ஆணையத்தின் முன் அனுமதி பெற்றே செய்யப்பட வேண்டும். பணியிட மாற்றங்கள் குறித்து முடிவு செய்யலாம்.

இந்த உத்தரவு ஆனது காவல் துறை உதவி ஆய்வாளருக்கு பொருந்துமா என ஒரு வினா எழுப்பப்பட்டுள்ளது. ஒரு காவல் நிலையத்திற்கு பொறுப்பான காவல் துறை உதவி ஆய்வாளராக அந்த அலுவலர் இருக்கும்போது அவர் இந்த விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டுள்ளவர் ஆவர் என்று விளக்கம் தரப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட வழிகாட்டி நெறிகளின்படி அவர் பணியிட மாற்றம் செய்யப்படுவதற்கு உரியவர் ஆவர்.

## உத்தரவு தொடர் எண்.117

அனைத்து மாநில மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளுக்கான தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் அலுவலர்களுக்கு அனுப்பப்பட்ட **9.1.2014** ஆம் நாளிட்ட தேர்தல் ஆணையத்தின் கடித எண்.**437/6/1/2014** CC&BE

**பொருள்:** 2014ஆம் ஆண்டின் மக்களவைக்கான தேர்தலில் பணியாளரை அதிகாரிகளை நியமிப்பது – தொடர்பாக

**2014**ஆம் ஆண்டுக்கான மக்களைத் தேர்தல் விரைவில் நடைபெற இருப்பதை நீங்கள் அறிவீர்கள்

தேர்தல்களைச் சுதந்திரமாகவும் நேர்மையாவும் நடத்த வேண்டிய பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் தேர்தல் ஆணையம் மாநிலங்களில் தேர்தல் பணிகளை மேற்கொண்டிருக்கும் நீண்ட காலமாக ஓர் இடத்திலேயே பணியாற்றி வரும் அலுவலர்களை யாரும் அவர்தம் சொந்த ஊர்கள் அல்லது மாவட்டங்களில் தொடர்ந்து பணியாற்றுவதை அனுமதிக்கக் கூடாது என்பதை உறுதி செய்ய முடிவ செய்துள்ளது.

(a) அதாவது அவருடைய சொந்த மாவட்டத்தில் பணியமர்த்தப்பட்டால்

(b) அவர் அந்த மாவட்டத்தில் கடந்த **4** ஆண்டுகளில் **3** ஆண்டுகால சேவையை முடித்திருந்தாலோ **31.5.2014**ஆம் நாளுக்கு முன்பாக **3** ஆண்டு பணிக் காலத்தை நிறைவு செய்து இருந்தாலோ

(i) ஆணையம் இது குறித்து நிர்ணயத்துள்ள நாளை பல மாநில அரசுகள் பின்பற்றுவதில்லை என்பதைத் தேர்தல் ஆணையம் அறிந்துள்ளது. எனவே மூன்றாண்டு கணக்கீட்டில் தேர்தல் ஆணையம் நிர்ணயித்துள்ள நாளினை மாநில அரசுகள் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் என்று வலியியுறுத்து உள்ளது. அதன்படி, **31.05.2014**ஆம் நாளுக்கு முன்னதாக மூன்றாண்டு என்ற கால அளவினை கருத்தில் கொண்டு கணக்கிடப்பட வேண்டும்.

(ii) இந்த உத்தரவுகள் குறிப்பிட்ட தேர்தல் பணிகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மாவட்ட துறை தேர்தல் அதிகாரிகள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் தேர்தல் நடத்தும் துறை அலுவலர்கள் போன்ற அதிகாரிகளுக்கு மட்டுமின்றி கூடுதல் மாவட்ட நடுவர் துணை ஆட்சியர்கள், உட்கோட்ட குற்றவியல் நடுவர்கள், வட்டாட்சியர்கள் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அல்லது தேர்தல் பணிக்காக ஈடுப்படுத்தப்பட்டிருக்கும் பிற அதிகாரிகள் உள்ளிட்ட மற்ற மாவட்ட அதிகாரிகளுக்கும் இவ்விதிகள் பொருந்தும்.

காவல் துறையை பொறுத்தவரையில் தேர்தல் நேரத்தில் மாவட்டத்தில் தேர்தல் பணிகளுக்காக ஈடுப்படுத்துவதற்கு பொறுப்பாக விளங்கும் காவல் துறைத் தலைவர், காவல் துறைத் தலைவர் மாநில ஆயுதப் படையின் காவல் துறையினர், சிறப்புக் காவல் துறை கண்காணிப்பாளர், கூடுதல் காால் துறை கண்காணிப்பாளர்கள், உட்கோட்ட தலைமைக் காவல் அதிகாரி, ஆய்வாளர்கள் அல்லது அதற்கு சமமான நிலையில் பதவி வகிப்பவர்கள் ஆகியோருக்கும் இந்த தேர்தல் தொடர்பான உத்தரவுகள் பொருந்தும். கணினிமயமாக்க பிரிவுகள், சிறப்புப் பிரிவு, பயிற்சி சாாந்த பிரிவு உள்ளிட்ட துறைகளில் நியமிக்கப்படும். காவல் துறை அதிகாரிகளுக்கு இவ்விதிகள் பொருந்தா. இவை தவிர காவல் துறை சாா்பு ஆய்வாளர்கள் அதிகாரிகள் நிலையிலான காவல் துறை அதிகர்ரிகள் அவர்கள் வகிக்கும் சொந்த சட்டப் பேரவைத் தொகுதிகளில் பணியமர்த்தக் கூடாது. காவல் துறை சாா்பு ஆய்வாளா் நிலையிலான காவல் துறை அதிகாரிகள் அந்த உட்கோட்டத்தில் **4** ஆண்டுகளில் **3** ஆண்டுகளுக்கு பணி முடித்திருப்பின் அல்லது **31.5.2014**ஆம் நாள் அல்லது அதற்கு மூன்று ஆண்டுகள் நிறைவு செய்யவிருப்பின் அவர்களுடைய காவல் உட்கோட்டங்களில் மட்டுமின்றி சட்டமன்ற தொகுதியிலிருந்தும் பணிமாற்றம் செய்யப்படக் கூடாது.

(iii) எனவே அனைத்து மாவட்டங்களிலும் விரிவான ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு மேற்சொன்ன நாளில் கடந்த **4** ஆண்டுகளில் **3** ஆண்டுகள் பணி காலத்தை முடித்துள்ள அல்லது முடிக்கும் அத்தகைய அனைத்து அதிகாரிகளும் உடனடியாக அவர்களுடைய சொந்த மாவட்டங்கள் அல்லது மாவட்டங்களுக்கு வெளியே பணியமர்த்தப்பட வேண்டும் என தேர்தல் ஆணையம் விழைகிறது. அலுவலர்கள் அவர்களுடைய சொந்த மாவட்டங்களில் பணியமர்த்தப்படவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். **3** ஆண்டுகள் பணிக்காலத்தை கணக்கிடும் போது மாவட்டத்திற்குள் அந்த பணிக்கான பதவி உயர்வும் கணக்கிடப்பட வேண்டும். இந்த ஆய்வினை மேற்கொள்கின்ற போது மாநில தலைமை இடங்களில் பணியமர்த்தப்பட்ட அதிகாரிகளுக்கு இந்த உத்தரவுகள் பொருந்தாது என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

(iv) கடந்த காலங்களில் தேர்தல் அல்லது தேர்தல்களின் தொடர்பான பணிகளின் போது அலுவலர்கள், பணியாளர்கள் தவறிழைத்தாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தாலோ, தேர்தல் ஆணையம் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்திருந்தாலோ, அத்தைய அதிகாரிகள் அலுவலர்களுக்குத் தேர்தல் பணி ஒதுக்கிடக் கூடாது என ஆணையம் விரும்புகிறது.

(v) ஏதேனும் ஒரு அதிகாரி அலுவலர்களுக்கு எதிரான குறை வழக்கு நீதி மன்றத்தில் நிலுவையில் இருக்குமாயின் அத்தகையோருக்கும் எந்த தேர்தல் பணியையோ, தேர்தல் தொடர்பான பணியையோ வழங்கக் கூடாது என்று ஆணையம் விரும்புகிறது.

(vi) தேர்தல் ஆணையத்தின் உத்தரவுக்கிணங்க பணியிட மாற்றம் செய்யப்பட்ட அதிகாரிகள்/ அலுவலர்கள், மாற்றல் நிமித்தம் அவர்கள் எந்தெந்த ஊர்களுக்கு போய் பணியாற்ற வேண்டுமோ அப்படி

செய்யாமல் அத்தகைய மாற்றல்களின் நோக்கத்தை திசை திருப்பும் வண்ணம் விடுப்பு எடுத்துக்கொண்டு அவர்கள் சொந்த பகுதியிலேயே தங்கி விடுகின்றனர் என்பது போன்ற புகார்கள் கடந்த காலத்தில் தேர்தல் ஆணையத்திற்கு வந்திருக்கின்றன. இது குறித்து கடுமையாக ஆய்ந்த தேர்தல் ஆணையம், அப்படிப்பட்ட மாறுதல் ஆணைகளை பெற்ற அதிகாரிகள்/ அலுவலர்கள் உடனடியாக முன்பு பணிபுரிந்து வந்த இடங்களை விட்டு (மாவட்டங்களை விட்டு) கண்டிப்பாக இடம் பெயர வேண்டும் என்று முடிவு எடுத்துள்ளது.

(vii) மேலும் தேர்தல் ஆணையத்தின் மேற்கண்ட உத்தரவுகளைச் செயல்படுத்தும்போது இட மாற்றல் ஆணைகளைப் பெற்று உரிய இடங்களுக்குச் சென்று பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளாமல் விடுப்பில் சென்றுள்ளவர்களின் காலியாக உள்ள இடங்களுக்கு வேறு இடங்களில் இருந்து அதிகாரிகளை / அலுவலர்களை மாற்றும் தருணங்களில் அனைத்து மாநிலங்களின் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் / மத்திய அரசின் நேர ஆட்சிப்பகுதிகளுக்கான தலைமைத் தேர்தல் அதிகாரிகளைக் கலந்தாலோசித்த பின்னரே நியமனங்கள் வழங்கப்பட வேண்டும். இந்த உத்தரவுகளின் கீழ் வழங்கப்படும் பணியிட மாற்றல்களுக்கான ஆணைகளின் நகல்கள் (படிகள்) கண்டிப்பாக உரிய தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு தரப்பட வேண்டும்.

(viii) வாக்காளர் பட்டியல்கள் திருத்த பணியில் ஈடுப்பட்டிருக்கும் அதிகாரிகள் எவரையேனும் மாற்றுவதாக இருந்தால், அவர்களை அத்தகைய வாக்காளர் பட்டியல்கள் இறுதி செய்யப்பட்டு அவை வெளியிடப்பட்ட பின்னரே தலைமைத் தேர்தல் அதிகாரியுடன் கலந்தாலோசித்து அவர்களுக்கு மாற்றல் ஆணைகளை வழங்க வேண்டும்.

(ix) அடுத்து வரும் 6 திங்களில் ஏதேனும் ஒரு அதிகாரி பணி ஓய்வு பெறுவதாக இருந்தால், அவருக்கு ஆணையத்தின் இந்த உத்தரவுகள் / ஆணைகள் பொருந்தாது. மேலும் சொந்த மாவட்டங்களில்/ 3 ஆண்டுகளுக்கும் அதர்க்கும் மேலாகப் பணி புரிந்து வந்திருக்கும் அதிகாரிகளுக்கு தேர்தல் காலங்களில், தேர்தல் பணிகள் எதையும் ஒப்படைக்க கூடாது. எனவே, அத்தகைய பிரிவினரும் மேற்சொன்ன தேர்தல் விதிமுறைகளுக்கு உட்படாதவர்கள்அமைவர்.

(x) தலைமைத் தேர்தல் அலுவலர்களின் அலுவலகங்களில் பணியாற்றிவரும் அதிகாரிகள் / அலுவலர்கள் தவிர மாநிலங்களில் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளில் பல்வேறு பணித்திறன் வகைகளில் பணி நீட்டிப்பு பெற்றுள்ளவர்கள் அல்லது மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளவர்கள் யாதொருவருக்கும் தேர்தல் தொடர்பான எந்தப் பணியையும் அளிக்கக் கூடாது என்று மேலும் தெளிவுறுத்தப்படுகிறது.

2. எடுக்கப்பட்டுள்றள நடவடிக்கைகளின் விவரங்களைத் தேர்தல் ஆணையத்தின் தகவலுக்காக உடனடியாக அளிக்கப்படலாம். எனினும் அப்படிப்பட்ட விவரங்கள் 5–02–2014 நாளுக்கு முன்னதாகவே அளிக்கப்படுமாறு பார்த்துக் கொள்ளப்படவேண்டும்.

3. பணியிட மாற்றம் குறித்து விளக்கம் / தெளிவு கோரி பல்வேறு மாநிலங்களிலிருந்தும் எண்ணற்ற குறிப்புகள் கடந்த காலத்தில் பொதுத் தேர்தலின் போது பெறப்பட்டுள்ளன. இது குறித்த விவகாரங்கள் அனைத்தும், தலைமைத் தேர்தல் அலுவலர் நிலையிலேயே கையாளப்பட வேண்டும் என்று ஆணையம் அறிவுறுத்துகிறது.

தலைமைத் தேர்தல் அலுவலர் அளவில், மேற்குறித்த விவகாரங்களின் அனைத்து கூறுகளும் அலசி ஆராயப்பட்ட பின்னரும் அந்த அதிகாரி அவை குறித்து விளக்கம் அளித்துள்ள நிலையில், முடிவு எடுக்கப்பட இயலாமல் இருந்தால் உரிய பரிந்துரைகளின் அடிப்படையில் மிக அவசரமான நிலையில் தனித்தனியான விவகாரங்களைத் தேர்தல் ஆணையத்திற்கு அனுப்ப வேண்டும்.

4. இந்த அறிவுறுத்தல்கள் உரியவர்கள் அனைவரின் கவனத்திற்கும் எடுத்துச் செல்லப்படலாம்.

## உத்தரவு தொடர் எண்.118

அனைத்து மாநில மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் அலுவலர்களுக்கு அனுப்பப்பட்ட 21–02–2014 ஆம் நாளிட்ட தேர்தல் ஆணையத்தின் கடித எண் 437/6/1/2014.

<u>பொருள்:</u> 2014 ஆம் ஆண்டின் மக்களவைக்கான பொதுத் தேர்தல் – பணியிடமாறுதல்கள்/ அதிகாரிகளைப் பணியிடங்களுக்கு நியமித்தல் – தொடர்பான விளக்கங்கள்.

9–01–2014 ஆம் நாளிடப்பட்ட அதே எண்ணில் மேற்கண்ட பொருளில் அமைந்த இல்வலுவலகத்தின் கடிதத்தைப் படித்து பார்க்குமாறு நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

அதன்படி சில மாநில அரசுகளிடமிருந்து தேர்தல் ஆணையத்தின் விதிகளுள் ஒன்றாக அமைந்திருக்கும் பணி இட மாற்றங்கள் தொடர்பான ஓர் ஆணையில் <u>“ தேர்தல் பணிகளில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஈடுபடுத்தப்பட்டிருக்கும் அலுவலர்கள் அவரவர்தம் சொந்த மாவட்டங்களில் பணிபுரிவது தொடரக்கூடாது</u> ” என்று அறிவுறுத்தும் வகையில் அமைந்துள்ளது. அதைச் செயல்படுத்தும் போது, தேர்தல் பணிகளில் மறைமுகமாக ஈடுபடுத்தப்பட்டிருக்கும் அலுவலர்கள் மிக பெறும் எண்ணிக்கையில் இருப்பதால் அவர்களை மாற்றுவது கடினம். எனவே, இது குறித்து ஆணையை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என் மாநில அரசுகள் கேட்டுக்கொண்டன. தேர்தல் ஆணையத்திடம் இந்த விதிமுறையை மறு பரிசீலனை செய்ய அவர்கள் விடுத்திருக்கும் கோரிக்கையை ஆராய்ந்து பார்த்து அதன் மீது தேர்தல் ஆணையம் ஒரு முடிவு எடுத்துள்ளது. அந்த முடிவின் அடிப்படையில் பின் வருமாறு ஒரு விதி திருத்தத்தை அது செய்துள்ளது.

> “ <u>தேர்தல்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ள எந்த ஒரு அலுவலரும் தொடர்ந்து சொந்த மாவட்டத்தில் பணி புரிய அனுமதிக்கக் கூடாது</u> ” என்பதே அந்த விதித்திருத்தமாகும் எனினும், தேர்தல்களுடன் மறைமுகமாகத் தொடர்பு கொண்டுள்ள எந்த அலுவலர்கள் மீதும், அடிப்படை இருக்கும் வகையிலான புகார்கள் பெறப்பட்டால், அந்த அலுவலர்கள் மீதும் தக்க நடவடிக்கையை ஆணையம் உறுதியாக மேற்கொள்ளும். ஆனால் பகுதி அலுவலர்களாக (Sector செக்டார் அலுவலர்களாக) நியமிக்கப்பட்டுள்ளவர்கள், தேர்தல் பணிகளுடன் நேரடியாக ஈடுபடுத்தப்பட்டிருந்தாலும், அவர்கள் இந்த விதிமுறைகளுக்கு (ஆணைகளுக்கு) உட்படுத்தப்படமாட்டார்கள். ஏனெனில், களப்பணிகளில் ஈடுப்படுத்தப்பட்டிருக்கும் அவர்கள் அவர்களது களங்கள்

குறித்து அறிந்திருப்பதன்மூலம், அங்கு தேர்தலில் அவர்களது செயல்ஆற்றல் திறனுடையதாக இருக்கும் என்பதால் அவர்களை அந்தந்தப் பகுதிகளிலேயே தேர்தல் பணியாற்ற அனுமதிக்கலாம் என்று தேர்தல் ஆணையம் தெளிவுப்படுத்தியுள்ளது. எனினும் களப்பணியில் உள்ள அத்தகைய அலுவலர்கள் சிறிதும் பாகுபாடு காட்டாமல் / ஒரு தலைப்பட்சமாக இல்லாமல் நேர்மையாக நடந்து கொள்கிறார்களா / செயலாற்றுகிறார்களா என்பதை உறுதி செய்யும் விதத்தில், தலைமைத் தேர்தல் அலுலவர், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர் ஆகியோர் தீவிரமாக அவர்களைக் கண்காணிக்க வேண்டும்.

## உத்தரவு தொடர் எண்.119

அனைத்து மாநிலங்களின் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமைச் செயலர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் அலுவலர்களுக்கு அனுப்பப்பட்ட 16.08.2014 ஆம் நாளிட்ட 437/6/1/2014 ஆம் எண்ணிட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் கடிதம்.

**பொருள்:** நாடாளுமன்ற / சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கு நடைபெறும் இடைத்தேர்தல் அலுவலர்களின் பணியிட மாற்றம் / பணி நியமனம் – தொடர்பாக.

மாநிலங்களில் நடைபெறும் இடைத்தேர்தலுடன் தொடர்புடைய அலுவலர்கள் நீண்டகாலமாக அவர்கள் பணிபுரியும் இடங்கள் சட்டமன்ற / நாடாளுமன்றத் தொகுதியின் (தொகுதிகளின்) வரம்பிற்குள் வரவில்லை என்பதையும் அவர்களுடைய சொந்தத் தொகுதியாக இல்லை என்பதையும் உறுதிப்படுத்தும் நிலையான கொள்கையை சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை நடத்தும் தன்னுடைய பொறுப்புடன் தேர்தல் ஆணையம் கடைப்பிடித்து வருகிறது.

2) சட்டமன்ற தொகுதி (களுக்கு)க்கு இடைத் தேர்தல்

2.1) நடைமுறையிலுள்ள உத்தரவுகளை இரத்து செய்துவிட்டு தேர்தல் ஆணையம் கீழ் கண்டவாறு தீர்மானித்திருக்கிறது.

1. இடைத் தேர்தலுடன் நேரடியாகத் தொடர்புடைய ஒரு அலுவலர்

2. அவள் / அவர், அவளுடைய / அவருடைய சொந்த சட்டப் பேரவைத்தொகுதியின் வரம்புக்குள் பணியிலிருந்தால்

3. கடந்த நான்கு ஆண்டுகளில் அவள் அவர் மூன்று ஆண்டுகள் அங்கேயே பணியாற்றியிருந்தால், ஒருவேளை அச்சட்டப் பேரவைத் தொகுதி காலியிடமாக நேரிட்ட நாளிலிருந்து ஆறாவது மாதத்தின் இறுதி நாளன்றோ அல்லது அதற்குப் முன்னரோ 3 ஆண்டுகள் பணியை நிறைவு செய்திருந்தாலோ

அச்சட்டப்பேரவைத் தொகுதியின் வரம்பெல்லைக்குள் தற்போதைய பதவியில் தொடர்வதற்கு எந்த அலுவலரும் அனுமதிக்கப்படமாட்டார்.

அத்தகைய அலுவலர்கள் சட்டப்பேரவைத் தொகுதியின் எல்லைக்கு வெளியே இடமாற்றம் செய்யப்படுவார்கள்.

**2.2 (1).** இடைத் தேர்தல்கள் நடைபெறப் போகும் சட்டப்பேரவைத் தொகுதிகளின் தேர்தல் நடத்தும் அலுவல்கள் மற்றும் தேர்தல் நடத்தும் உதவி அலுவலர்களை இந்த உத்தரவுகள் கட்டுப்படுத்தும் சட்டப்பேரவைத் தொகுதியின் எல்லைக்குள் அமைந்துள்ள துணை / உதவி ஆட்சித் தலைவர்கள், உட்கோட்ட நிர்வாக நடுவர்கள் கோட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் வட்டார வளர்ச்சித் தலைவர்கள் போன்ற இதர அலுவலர்களையும் இந்த உத்தரவுகள் கட்டுப்படுத்தும்.

(i) தேர்தல் அலுவலர்களாக நியமிக்கப்படும் பகுதி அலுவலர்கள் தேர்தல் பணிகளில் நேரடியாக ஈடுபட்டாலும் தேர்தல் நடைபெறும் பகுதிகள் / களங்கள் பற்றிய அவர்களுடைய அனுபவ அறிவு பயனுறு செயற்பாட்டிற்கு முக்கியம் என்பதாலும் அவர்கள் களச் செயல்பாட்டில் பணியமர்த்தப்பட்டுள்ளதாலும் அவர்கள் இந்த உத்தரவின் கீழ் பரமாட்டார்கள் இருப்பினும் தேர்தல் நடைபெறும்போது அவர்களுடைய பணிச் செயல்பாடு முழுமையான நடுநிலையில் உள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்கு அவர்களை தலைமைத் தேர்தல் அலுவலர், மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர் ஆகியோர் கவனமாக கண்காணிக்க வேண்டும்.

(ii) காவல் துறையிலுள்ள அலுலவர்களைப் பொறுத்தவரையில், காவல் துறையின் உட்கோட்டத் தலைவர் / துணைக் கண்காணிப்பாளர்கள் / வட்டக் காவல் அலுவலர்கள், ஆய்வாளர்கள், துணை ஆய்வாளர்கள் அல்லது அத்துறையிலுள்ள சமமான தரநிலையிலுள்ள அலுவலர்களுக்கு சட்டப்பேரவைத் தொகுதிக்குள்ளாக இந்த உத்தரவுகள் பொருந்தும்

**(2.3)** _கடந்த நான்கு ஆண்டுகளில் அதே சட்டமன்றத் தொகுதியில் மூன்று ஆண்டுகள் பணியை மேலே சொன்ன தேதியில் நிறைவுபெற்றுள்ளனரா அல்லது நிறைவு பெற்றுவிடுவார்களா என்பதைத் தெரிந்து கொண்டு, அத்தகைய அனைத்து அலுவலர்களையும் அவர்களுடைய சொந்தக் தொகுதிக்கு வெளியே பணியமர்த்துவதற்கேற்ப தேர்தல் ஆணையமும் உடனடியாக ஒரு விரிவான ஆய்வு செய்யலாம் என விரும்புகிறது. தவிரவும் சீரான தன்மைக்காகப் பத்தி **2.1 (ii)–**இல் குறிப்பிட்டவாறு ஆறாவது மாதத்தின் இறுதி நாளிலிருந்து பின்னோக்கி ஆம் மூன்று ஆண்டுகளைக் கணக்கிட வேண்டும்.

**3.** நாடாளுமன்றத் தொகுதி(களுக்கு)க்கு நடைபெறும் இடைத்தேர்தல்

**3.1** நடைமுறையிலுள்ள உத்தரவுகளை இரத்து செய்துவிட்டு இடைத்தேர்தல் நடைபெறப் போகும் நாடாளுமன்றத் தொகுதியின் இடைத் தேர்தல்களுடன் தொடர்புடைய பின்வரும் எந்த ஒரு அலுவலரும் அதே நாடாளுமன்றத் தொகுதியின் எல்லைகளுக்குள் தற்போதைய பதவியில் தொடர்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் எனத் தேர்தல் ஆணையம் தீர்மானித்திருக்கிறது.

(i) அவர் தொடர்புடைய தொகுதியின் எல்லைக்குள் வரும் அவருடைய சொந்த மாவட்டத்தில் பணியிலிருந்தால்

(ii) கடந்த நான்கு ஆண்டுகளில் அவர் மூன்று ஆண்டுகள் அங்கேயே பணியாற்றி இருந்தால் அத்தொகுதி காலியிடமான நாளிலிருந்து ஆறாவது மாதத்தின் இறுதி நாளிலோ அல்லது அதற்கு முன்னரோ 3 ஆண்டுகள் பணியை நிறைவு செய்திருந்தால்

அத்தகைய அலுவலர்கள் அந்நாடாளுமன்றத் தொகுதியின் எல்லைக்கு வெளியே பணியிட மாற்றம் செய்யப்படுவர்கள்.

**3.2** இடைத் தேர்தல்கள் நடைபெறப் போகும் நாடாளுமன்றத் தொகுதியின் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவித் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் இந்த உத்தரவின் கீழ் வருகிறார்கள். தேர்தல் நடத்தும் அலுவலராக நியமிக்கப்பட்டுள்ள மாவட்டத் தேர்தல் அலுவலரை மட்டுமே இந்த உத்தரவுகள் கட்டுப்படுத்தும். ஏனைய மாவட்ட தேர்தல் அலுவலர்களைப் பொறுத்தவரையில் இடைத்தேர்தல்கள் நடைபெறப் போகும் நாடாளுமன்றத் தொகுதியில் அவர்களுடைய மாவட்டத்தின் சில பகுதி வந்தாலும் கூட இந்த உத்தரவுகள் அவர்களுக்குப் பொருந்தாது. இருப்பினும் நாடாளுமன்றத் தொகுதியின் எல்லைக்குள் அமைந்துள்ளப் பகுதிகளிலுள்ள கூடுதல் ஆட்சியர், கூடுதல் மாவட்ட நடுவர், துணை ஆட்சியர்கள், துணைக் கோட்ட நடுவர்கள், கோட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் போன்ற ஏனைய அலுவலர்களுக்கு இந்த உத்தரவுகள் பொருந்தும்.

இருப்பினும் பகுதி அலுவலர்களின் பயனுறு செயற்பாட்டிற்கு பகுதி / களத்தினைப் பற்றிய அவர்களுடைய அனுபவ அறிவு முக்கியமாகத் தேவைப்படும் இடங்களில் களப் பணியாற்ற அவர்கள் பணியமர்த்தப்படுவதால் நேரடியாகத் தேர்தல் பணியில் ஈடுபட்டாலும் பகுதி அலுவலர்களாக நியமிக்கப்படும் அலுவலர்கள் இந்த உத்தரவுகளின் கீழ் வரமாட்டார்கள் என தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் தேர்தல் நடைபெறும் போது அவர்களுடைய பணிச்செயற்பாடு முழுமையாக நடுநிலையானது என்பதை உறுதிப்படுத்துவதற்கு அவர்களைத் தலைமைத் தேர்தல் அலுவலர், மாவட்டத் தேர்தல் அலுலவர் மற்றும் தேர்தல் நடத்தும் அலுலவர் ஆகியோர் கவனமாகக் கண்காணிக்க வேண்டும்.

காவல்துறையிலுள்ள அலுவலர்களைப் பொறுத்தவரையில், தேர்தல் நடத்தும் அலுவலராவும் உள்ள மாவட்ட தேர்தல் அலுவலரின் மாவட்டத்தில் பணியில் இருக்கக் கூடிய காவல் கண்காணிப்பாளருக்கு இந்த உத்தரவுகள் பொருந்தும். இடைத்தேர்தல்கள் நடைபெறப் போகும் நாடாளுமன்றத் தொகுதியில் அவர்களுடைய மாவட்டத்தின் சில பகுதிகள் அமைந்தாலும் கூட, ஏனைய காவல் கண்காணிப்பாளர்கள் இந்த உத்தரவுகளின் கீழ் வர மாவட்டார்கள். இருப்பினும் நாடாளுமன்றத் தொகுதியின் எல்லைக்குள்

அமைந்துள்ள இடத்தில் பணியிலுள்ள கூடுதல் காவல் கண்காணிப்பாளர், உட்கோட்ட காவல் தலைவர் துணை காவல் கண்காணிப்பாளர் / வட்ட ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் அல்லது சமமான தரநிலையிலுள்ள பணியிலிருப்போரை இந்த உத்தரவுகள் கட்டுப்படுத்தும்.

**3.3** ஆதலால் ஒரு விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, கடந்த நான்கு ஆண்டுகளுள் சட்டமன்ற பேரவைத் தொகுதி எல்லையில் மேற்சொன்ன நாளன்று , மூன்று ஆண்டு காலம் பணி முடிந்த அல்லது பணி செய்து முடிக்க வேண்டிய, அத்தகைய அனைத்து அதிகாரிகளும் அவர்களுடைய சொந்தத் தொகுதியல்லாத வேறு தொகுதியில் உடனடியாகப் பணியமர்த்தப்பட வேண்டும், என ஆணையம் மேலும் விரும்புகிறது. மேலும், ஒரே சீரான தன்மைக்காக மூன்றாண்டு காலமானது பத்தி **3.1** (ii)ல் குறிப்பிட்டுள்ளவாறு, ஆறாவது மாதத்தின் கடைசி நாளிலிருந்து பின்னோக்கி கணக்கிடப்பட வேண்டும்.

**4.** ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்க பரிந்துரைக்கப்பட்டுள்ள அல்லது கடந்த காலத்தில் ஏதேனும் தேர்தல் / தேர்தல்கள் தொடர்புடைய பணியில் ஏதேனும் தவறுகளுக்காக குற்றம் சாட்டப்பட்டுள்ள அலுவலர்களுக்கு அதிகாரிகள் தேர்தல் தொடர்புடைய பணி ஒதுக்கீடு செய்யப்படக்கூடாது என்றும் தேர்தல் ஆணையம் கூறுகிறது.

**5.**ஏதேனும் நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்கு நிலுவையாக உள்ள யாதொரு அதிகாரி / அலுவலரும் தேர்தல் பணி அல்லது தேர்தல் தொடர்புடைய பணியில் ஈடுபடுத்தப்படக்கூடாது என்று தேர்தல் ஆணையம் விரும்புகிறது.

**6.** தேர்தல் ஆணையம் வெளியிட்ட உத்தரவையொட்டி மாநில அரசு மேற்சொன்ன பதவிகளில் உள்ள அலுவலர்களைப் பணியிடமாற்றம் செய்கின்றபோது தனி நபர்கள் எந்த மாவட்டத்திலிருந்து பணியிடமாற்றம் செய்யப்படுகிறார்களோ அந்த மாவட்டத்திலிருந்து வெளியேறாமலும், விடுப்பில் செல்வதன் மூலமும் இந்நோக்கை இந்நடவடிக்கையை முடக்க முயல்கின்றனர் என்று, தேர்தல் ஆணையத்திற்கு கடந்த காலத்தில் புகார்கள் வரப்பெற்றுள்ளன. ஆணையம் இதனை கடுமையானதாகக் கருதுகிறது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள உத்தரவுகளையொட்டி பணியிடமாற்றம் செய்யப்படுகிற அத்தகைய அலுவலர்கள் பணியிடமாற்ற ஆணைகளைப் பெற்ற உடனேயே அவர்கள் பணியிடமாற்றம் செய்யப்பட்ட மாவட்டத்திலிருந்து வெளியேறுமாறு கேட்டுக்கொள்ளப்பட வேண்டும்.

**7.** வழக்கமாக காலியிடம் ஏற்பட்ட தேதியிலிருந்து (ஆணையத்தின் கட்டுப்பாட்டிற்கு மீறும் Åழ்நிலை நீங்கலாக ) ஆறு மாதகால அளவிற்குள் அந்த காலியிடத்தை நிரப்பும் பொருட்டு இடைத் தேர்தல் நடைபெறும். எனவே, ஒரு தொகுதியில் காலியிடம் ஏற்பட்ட உடனே இந்த வழிகாட்டு நெறிமுறைகளைச்

செயல்படுத்த மாநில அரசு தொடங்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது. எனவே, அதிகாரிகளின் இறுதி நேர இடம்பெயர்தலைத் தவிர்க்கலாம்.

8. யாதொரு அலுவலரும் வரும் ஆறு மாதத்திற்குள் பணி ஒய்வு பெறுவாராயின் மேற்குறிப்பிட்ட ஆணையத்தின் கட்டளையின் படி அவர் விதிவிலக்கு பெறுகிறார். மேலும், தேர்தல்களின் போது தேர்தல் பணிகளை மேற்கொள்ளவதற்கு (உள்துறை / +3 அளவுகோல் ) வகையினைச் சார்ந்த அலுவலர்கள் 6 மாதத்திற்குள் பணி ஒய்வு பெறுபவராக இருப்பின் ஈபடக் கூடாது.

9. எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் தகவலுக்காக, ஆணையத்திடம் தெரிவிக்கப்படலாம்.

10. தேர்தல் ஆணையம் அறிவித்த இடைத்தேர்தல்கள் முதற்கொண்டு இந்த உத்தரவுகளின் பயன்பாடு செயல்படத் தொடங்கும். (தேர்தல் ஆணையத்தின் 16.08.2014 ஆம் நாளிட்ட ECI/PN/37/2014 ஆம் எண்ணிட்ட பத்திரிகைக் குறிப்பைக் காண்க) இவை, அவ்வப்போது நடைபெறக்கூடிய சட்டப்பேரவைத் தொகுதிக்கான / நாடாளுமன்றத் தொகுதிக்கான (தொகுதிகளுக்கான ) அனைத்து இடைத்தேர்தல்களிலும் கண்டிப்பாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

## உத்தரவு தொடர் எண்.120

மேகாலயா, நாகலாந்து மற்றும் திரிபுரா மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள்/தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட 06.12.2017 ஆம் நாளிட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 437/6/1/INST/ECI/ FUNCT/MCC/2017 ஆம் எண் கடிதம்.

பொருள்: மேகாலயா, நாகலாந்து மற்றும் திரிபுரா மாநிலங்களின் சட்டமன்றங்களுக்கான பொதுத்தேர்தல்-அதிகாரிகள் பணி நியமனம்/பணியிட மாற்றம்- தொடர்பாக.

மேகாலயா,நாகலாந்து மற்றும் திரிபுரா மாநிலங்களின் தற்போதைய சட்டமன்றத்தின் பதவிக்கால அளவு முறையே 6.03.2018,13.03.2018 மற்றும் 14.03.2018 ஆம் நாட்கள் வரையில் உள்ளது என்பதை தெரிவிக்க நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

2. தேர்தல் நடைபெறும் மாநிலங்களில் / மத்திய நேரடி ஆட்சிப்பகுதிகளில் தேர்தலை நடத்தும் பணிகளில் நேரடியாகத் தொடர்புடைய அதிகாரிகளை அவர்களது சொந்த மாவட்டத்தில் அல்லது குறிப்பிடத்தக்க காலஅளவில் தொடர்ச்சியாக ஓரிடத்தில் பணியாற்றி வரும் இடங்களில் பணியமர்த்தம் செய்தல் கூடாது என்ற நிலையான கொள்கையை குழு பின்பற்றி வருகிறது.

3. எனவே, தேர்தல் பணிகளில் நேரடியாகத் தொடர்புடைய எந்தவொரு அலுவலரும் தற்போதுள்ள மாவட்ட அளவிலான பதவிகளில் மாவட்டத்தின் அதே பதவிகளில் தொடருவதற்கு அனுமதிக்கக் கூடாது என ஆணையம் முடிவெடுத்துள்ளது:-

(அ) அவர்கள் சொந்த மாவட்டத்தில் பணியமர்த்தப்பட்டிருப்பின்.
(ஆ) கடந்த நான்கு ஆண்டுகளில் மூன்று ஆண்டுகளை அந்த மாவட்டத்தில் நிறைவு செய்யும் அல்லது 31.03.2018 அன்று அல்லது அதற்கு முன்பாக மூன்று ஆண்டுகளை நிறைவு செய்யும் அதிகாரிகள்.

4. மாநில அரசிற்கு சம்பந்தப்பட்ட துறைகளானது மேற்சொன்ன விதிமுறைகளை/பணிமாறுதல்களை நடைமுறைப்படுத்தும் போது, அதிகாரிகள் அவர்களது சொந்த மாவட்டங்களில் பணியமர்த்தப்படாமல் இருப்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும்,கடைசியாக நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்/அதனையடுத்து நடந்த யாதொரு இடைத்தேர்தல் ஆகியவற்றில் பணியாற்றிய மாவட்டத் தேர்தல் அலுவலர் / தேர்தல் நடத்தும் அலுவலர்/உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்/ காவல் ஆய்வாளர்கள் / சார்பு ஆய்வாளர் அல்லது அதற்குமேற்பட்ட அதிகாரிகள் அதே சட்டமன்றத்தொகுதி /மாவட்டத்தில் பணியமர்த்தப்படவில்லை அல்லது அங்கேயே தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்கப்படவில்லை என்பதையும் உறுதிசெய்துகொள்ள வேண்டும்.

5. மேற்சொன்ன விதிகளுக்கு இணக்கமாக செயல்படுவதில் குறைந்த அளவு மாவட்டங்களைக் கொண்டுள்ள சிறிய மாநிலங்கள்/மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளில் யாதொரு சிரமங்களை எதிர்கொள்ளும்போது அதிலிருந்து விலக்கு பெறுவதற்கான உரிய காரணங்களைக் குறிப்பிட்டு தலைமைத் தேர்தல் அலுவலர் மூலமாக ஆணையத்திற்கு தெரிவிக்கலாம். இது குறித்து கருதிப்பார்க்க வேண்டியது அவசியமெனில் ஆணையம் உரிய நெறிமுறைகளை வழங்கும்.

**6.**பயன்பாட்டுத் தகுதி**-**

6.1 மாவட்டத் தேர்தல் அதிகாரிகள், துணை தேர்தல் அதிகாரிகள், தேர்தல் நடத்தும் அலுவலர்/உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், வாக்காளர் பதிவு அலுவலர்கள்/உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள், குறிப்பிட்ட தேர்தல் பணிகளுக்காக ஒருங்கிணைப்பு அலுவலர்களாக தேர்தல் பணிகளுக்கு நியமிக்கப்படும் அலுவலர்களுக்கு மட்டுமல்லாது தேர்தல் பணிகளில் நேரடியாக நியமனம் செய்யப்படும் மாவட்ட அதிகாரிகளான கூடுதல் மாவட்ட மாஜிஸ்திரேட், உட்கோட்ட மாவட்ட மாஜிஸ்திரேட்,துணை ஆட்சியர்கள்/இணை ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அல்லது அதே பதவித்தரத்திலுள்ள யாதொரு அலுவலர்களுக்கும் பொருந்தும்.

6.2. இந்த உத்தரவுகளானது, மாவட்டங்களில் தேர்தல் நடைபெறும் நேரங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் அல்லது காவல்துறையினரை பணியில் ஈடுபடுத்துதல் ஆகிய பொறுப்புகளை உடைய காவல்துறை அதிகாரிகளான காவல்துறைத் தலைவர்கள், காவல் துறை துணைத்தலைவர்கள், மாநில ஆயுதக்காவல் படைத்தலைவர்கள், சிறப்பு மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள், கூடுதல் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள், உட்கோட்ட காவல் தலைவர்கள், காவல் நிலைய அலுவலர்கள், ஆய்வாளர்கள், சார் ஆய்வாளர்கள், வருவாய் ஆய்வாளர்கள்/தலைமைக் காவலர்கள் அல்லது அதற்கு இணையான தரத்திலான அதிகாரிகள் போன்றவர்களுக்கும் பொருந்தும்.

7. சம்பந்தப்பட்ட அனைவரின் தகவல்களுக்காக/வழிகாட்டுதல்களுக்காக ஆணையத்தால் அவ்வப்போது வெளியிடப்பட்ட விளக்கங்கள்/சலுகைகள் பின்வருமாறு :-

i. கணினிமயமாக்கம், சிறப்பு தொகுதிகள், பயிற்சி போன்ற ஏனைய செயல்பாட்டுத் துறைகளில் பணியமர்த்தப்பட்டுள்ள காவல்துறை அலுவலர்கள் இந்த உத்தரவுகளின் கீழ் சேர்க்கப்படவில்லை.

ii. காவல் சார் ஆய்வாளர்கள் மற்றும் அதற்குமேற்பட்ட பதவிகளில் உள்ளோர் அவர்களது சொந்த மாவட்டத்தில் பணியமர்த்தப்படக்கூடாது.

iii. நான்கு ஆண்டுகள் பதவிக்காலத்தில், மூன்று ஆண்டுகள் பதவிக்காலத்தை ஒரு காவல் உட்கோட்டத்தில் நிறைவு செய்திருக்கும் அல்லது நிறைவு செய்யவிருக்கும் காவல் சார்பு ஆய்வாளரை அதே சட்டமன்றத்தொகுதிக்குள் உட்படாத பகுதியில் உள்ள காவல் உட்கோட்டத்தில் பணிமாறுதல் செய்ய வேண்டும். மாவட்டம் மிகச்சிறியதாக இருந்து அவ்வாறு செய்ய இயலாத நேர்வில், அந்த அலுவலரை மாவட்டத்திற்கு வெளியில் பணிமாறுதல் செய்ய வேண்டும்.

iv. தேர்தலின்போது அதிக அளவு எண்ணிக்கையிலான பணியாளர்கள் பல்வேறு தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருப்பர்.அதிக அளவு பணிமாறுதல்களைச் செய்து அதன் மூலமாக மாநில அளவிலான

செயல்பாடுகளை மாற்றியமைப்பது ஆணையத்தின் நோக்கம் அல்ல. எனவே, மேற்சொன்ன பணிமாறுதல் கொள்கையானது மருத்துவர்கள், பொறியாளர்கள், ஆசிரியர்கள் / பேராசிரியர்கள் போன்ற தேர்தல் பணிகளில் நேரடியாக ஈடுபடாத அலுவலர்களுக்கு/அலுவல்சார் நபர்களுக்குப் பொருந்தாது. இருப்பினும், ஒருபக்க சார்பாளர்களாக செயல்படுதல் அல்லது தவறாக செயல்படுதல் போன்ற ஏதேனும் குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் யாதொரு அரசு அலுவலர்களுக்கு எதிராக அரசியல் கட்சியினரால் எழுப்பப்பட்டு அதுகுறித்த விசாரணை நடத்தப்பட்டு அவை மெய்ப்பிக்கப்படும் போது தலைமைத் தேர்தல் அதிகாரி/இந்தியத் தேர்தல் ஆணையமானது அந்த அலுவலரை பணியிடமாற்றம் செய்வதற்கு உத்தரவிடுவது மட்டுமல்லாமல் அவர் மீது துறைரீதியாக உரிய விசாரணை நடத்தவும் உத்தரவிடலாம்.

v. பகுதி அலுவலராக / மண்டல நீதித்துறை நடுவராக நியமனம் செய்யப்பட்டு தேர்தல் பணிகளில் ஈடுபடும் அலுவலர்களுக்கு அந்த உத்தரவுகளின் கீழ் உட்படமாட்டார்கள். எனினும்,தேர்தல் கண்காணிப்பாளர்கள், தலைமைத் தேர்தல் அலுவலர்/ மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் அவர்களை உன்னிப்பாக கவனித்து அவர்கள் தமது கடமையில் எந்தவொரு வகையிலும் ஒருபக்கச் சார்பும் இல்லாமல் உண்மையாகச் செயல்படுவதை உறுதிசெய்தல் வேண்டும்.

vi. மூன்றாண்டுகள் கால அளவைக் கணக்கிடும்போது, ஒரே மாவட்டத்தில் அவர்கள் பதவி உயர்வு பெற்றிருப்பினும் அதையும் கணக்கில் கொள்ள வேண்டும்.

vii. சம்பந்தப்பட்ட துறைகளின் மாநிலத் தலைமையிடங்களில் பணியில் உள்ள அலுவலர்களுக்கு இந்த விதிகள் பொருந்தாது.

viii. கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் அல்லது தேர்தல் தொடர்பான பணிகளில் யாதொரு தவறு செய்ததாக அலுவலர்களுக்கு எதிராக ஆணையம் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்து அவை நிலுவையில் அல்லது தண்டத்தொகை விதிக்கப்பட்டு முடிக்கப்பட்டிருப்பின் அல்லது தண்டனை வழங்கப்பட்டிருப்பின் அவர்களுக்கு தேர்தல் தொடர்பான எவ்வித பணிகளையும் அவர்களுக்கு ஒப்படைக்க கூடாது.

எனினும், கடந்த தேர்தல்களின்போது அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற எவ்வித பரிந்துரைகளும் இல்லாதபோதும் ஆணையத்தால் பணியிட மாற்றம் செய்யப்பட்ட அலுவலர்களை ஆணையத்தால் குறிப்பிட்டு தெரிவித்தாலொழிய சாதாரண காரணங்களுக்காக பணியிடமாற்றம் செய்யக்கருதுதல் கூடாது. குற்றச்சாட்டுக்கு உள்ளான அதிகாரிகள் பெயர்களைக் கண்டறிதல் தொடர்புடைய ஆணையத்தின் 23.12.2008 ஆம் நாளிட்ட,464/INST/2008-EPS ஆம் எண்ணிட்ட உத்தரவு நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அதற்கிணக்கமாக செயல்படுவதை தலைமைத் தேர்தல் அதிகாரிகள் உறுதிசெய்தல் வேண்டும்.

ix. மேலும், தேர்தல் தொடர்புடைய பணிகளில் ஈடுபடுத்தப்படும் அலுவலர்கள்/அதிகாரிகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் குற்ற வழக்குகள் ஏதேனும் நிலுவையில் இருப்பின் அவர்களை தேர்தல் தொடர்புடைய பணிகளில் ஈடுபடுத்த / பணியமர்த்தக்கூடாது என ஆணையம் விரும்புகிறது.

x. மேலும், ஆணையத்தின் மேற்சொன்ன கொள்கையின்படி பணியிடமாறுதல் செய்யப்பட்ட அலுவலர்களை, தற்போது பணியில் உள்ள அலுவலர்களின் பணியிடத்தில் நியமிக்கும் போது மாநில/மத்திய நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமைத் தேர்தல் ஆணையர்களிடம் கலந்தாலோசிக்க வேண்டும்.இந்த அறிவுறுத்தல்களின்படி வழங்கப்பட்ட ஒவ்வொரு பணிமாறுதல் ஆணைகளின் நகல்களையும் தவறாமல் தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு வழங்க வேண்டும்.

xi. தேர்தல் நடைபெறும் ஆண்டில், வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் பணிகள் ஏதேனுமிருப்பின் அதில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள்/அதிகாரிகளுக்குரிய பணிமாறுதல் ஆணைகளை, வாக்காளர் பட்டியல் இறுதியாக வெளியிடப்பட்ட பின்னர், சம்பந்தப்பட்ட தலைமைத் தேர்தல் அதிகாரியுடன் கலந்தாலோசித்த பின்னர் மட்டுமே நடைமுறைப்படுத்த வேண்டும்.யாதொரு சிறப்புக் காரணங்களால்

பணிமாறுதல் செய்யப்பட வேண்டிய நேர்வுகளில் ஆணையத்தின் முன்அனுமதியைப்  பெற வேண்டும்.

xii. யாதொரு அலுவலர்கள்,எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள்ளாக பணிஓய்வு பெறும் நேர்வில் அவர்களுக்கு, ஆணையத்தின் மேற்சொன்ன உத்தரவுகளின் வரம்பெல்லைகளிலிருந்து இருந்து விலக்களிக்கப்படும்.மேலும், (6 மாதங்களுக்குள்ளாக பணி ஓய்வு பெறுவார்களாயின் உள்/3+அளவுகோல்கள்) என்ற தகுதிநிலையில் வரும் அதிகாரிகள் ஆணையத்தின் அனுமதியின்றி  தேர்தல் தொடர்பான பணிகளில் ஈடுபடக்கூடாது.

xiii. மேலும், மாநிலத்தில் பல்வேறு தரநிலைகளில் பணி நீட்டிப்பு அல்லது மறு பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ள உள்ள அனைத்து அலுவலர்களும் (தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் பணியமர்த்தப்பட்டுள்ள அலுவலர்கள் தவிர்த்து) யாதொரு தேர்தல் தொடர்பான பணிகளில் ஈடுபடுத்தப்படக்கூடாது எனவும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

xiv. தேர்தல் தொடர்பான பணிகளில் உள்ள அனைத்து அலுவலர்களும், சம்பந்தப்பட்ட மாவட்டத் தேர்தல் அலுவலர், தகவல் தெரிவிப்பதற்கு ஏதுவாக, பின்வரும் படிவத்தில் உறுதிமொழியை  அளிக்க வேண்டும். அதற்கிணங்க தலைமைத்தேர்தல் அதிகாரிக்கு அவர் தெரிவிக்க வேண்டும்.

# உறுதிமொழி

**(மனுத்தாக்கல் செய்யவேண்டிய கடைசி நாளிலிருந்து இரண்டு நாட்களுக்குள் அளிக்க வேண்டும்)**

…….. ஆம் நாளிலிருந்து ……… பதவியில் இருக்கும்………. ஆகிய நான், தற்போது பொதுத்/இடைத் தேர்தல் நடைபெறும் ………… மக்களவைத் தொகுதி/ (…………. சட்டமன்றத் தொகுதி தொடர்பாக அளிக்கும் உறுதிமொழி

(அ) மேற்சொன்ன மாநிலம்/மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் தேர்தலில் யாதொரு அரசியல் கட்சிகளின் செயல்பாட்டாளர்களுக்கு / தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு நான் நெருங்கிய உறவினர் இல்லை.

(ஆ) யாதொரு நீதிமன்றத்திலும் எனக்கு எதிராக எவ்வித குற்ற வழக்குகளும் நிலுவையில் இல்லை.

குறிப்பு- (அ) மற்றும் (ஆ) பகுதிக்கு 'ஆம்' என்ற பதில் வழங்கப்பட்டிருப்பின், அதுகுறித்த முழு விவரங்கள் தனியான படிவங்களில் அளிக்க வேண்டும்.

நாள்…………… (பெயர்)

பதவி

நாள்……………. (பெயர்)

பதவி

குறிப்பு:யாதொரு அலுவலர் தவறான தகவல் அளித்திருப்பின் அவர்மீது ஒழுங்குநடவடிக்கை எடுக்கப்படும்.

8. ஆணையத்தின் மேற்சொன்ன உத்தரவுகளை முறையாகப் பின்பற்றுவதற்காக அதுகுறித்த விவரங்களை சம்பந்தப்பட்ட மாநில அரசுத் துறைகளின்/அலுவலகங்களின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். பணியிடமாற்றம் செய்யப்பட்ட அலுவலர்கள்/அதிகாரிகள் தற்போதுள்ள பதவிக்கு மற்றொரு அதிகாரி வரும்வரையில் காத்திருக்காமல் உடனடியாக அதிகாரங்களை ஒப்படைப்பதை மாவட்டத் தேர்தல் அலுவலர் அல்லது தொடர்புடைய மாவட்ட அலுவலர் உறுதிசெய்ய வேண்டும்.

9.அனைத்து இனங்களின் மீதும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது குறித்த விவரங்களை ஆணையத்தின் தகவல்களுக்காக உடனடியாக அளிக்க வேண்டும்.

10.இந்த கடிதத்தைப் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகையை வழங்கவும்.

# **இணைப்பு**

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையத்தால் அனுப்பப்பட்ட 23.12.2008 ஆம் நாளிட்ட 464/6/INST/2008/EPS ஆம் எண் கடிதம்.

பொருள்:- கடமை தவறியதன் காரணமாக தேர்தல் ஆணையத்தால் உத்தரவிடப்பட்டு பணியிடமாற்றம் செய்யப்பட்ட அலுவலர்களின் பெயர்களைக் கண்டறிதல்.

**பார்வை:** அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையத்தால் அனுப்பப்பட்ட 28.03.1994 ஆம் நாளிட்ட 437/6/2006-PLN.111 ஆம் எண் கடிதம் & இந்தியத் தேர்தல் ஆணையத்தின் எண்:100/1994.PLN.1

மேலே குறிப்பிடப்பட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் உத்தரவுகளைக் காண்க. அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறும் ஒவ்வொரு தேர்தல்களுக்கும் முன்பாக விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் ஒரு மாவட்டத்தில் நான்காண்டு பதவிக்காலத்தில் மூன்றாண்டு பதவிக்காலத்தை முடித்துள்ள அனைத்து அலுவலர்களும் அவர்களது சொந்த மாவட்டத்திற்கு வெளியில் பணியமர்த்தப்பட வேண்டும் என்றும் இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.மேலும், ஆணையத்தின் உத்தரவின்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கப்பட்டவர்கள் அல்லது தேர்தல் மற்றும் தேர்தல் தொடர்பான பணிகளில் கடமை தவறிழைத்து தண்டனை வழங்கப்பட்டவர்கள் அல்லது இந்த விவகாரத்தில் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் ஆணிகளின் கீழ் பணியிடமாற்றம்

செய்யப்பட்டவர்கள் ஆகியோரை தேர்தல் தொடர்பான பணிகளில் ஈடுபடுத்தக்கூடாது என இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

எனினும், ஆணையத்தின் மேற்கண்ட அறிவுறுத்தல்களுக்கு இணக்கமாக செயல்பட தலைமைத் தேர்தல் அலுவலர்கள் மற்றும் மாவட்டத் தேர்தல் அலுவலர்கள் முயற்சிகள் எடுத்தபோதும்கூட, அதிகாரிகள் மேற்கண்ட அளவுகோல்களுக்குள் வருவதும்,தேர்தல் அல்லாத பணிகளில் ஈடுபட மாவட்டத்திற்கு வெளியில் பணிமாறுதல் செய்யப்பட வேண்டியதுமான நிலையில் உள்ளனர், ஆனால் அவர்கள் தேர்தல் தொடர்பான பணிகளில் தற்போதும் ஈடுபடுத்தப்பட்டு வரும் ஒருசில நிகழ்வுகள் மட்டுமே பிற்காலங்களில் பொதுமக்கள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சியினர் புகார்களை எழுப்ப ஏதுவாக உள்ளது என்பதை அண்மையில் நடந்த தேர்தல்களின் வாயிலாக ஆணையம் கண்டறிந்துள்ளது. இத்தகைய நிகழ்வுகள் குறைந்த எண்ணிக்கையில் இருப்பினும், அவை தேர்தல் களங்களில் தவறான சமிக்ஞைகளை ஏற்படுத்தும். மேற்கண்ட வரையறைகளின்படி பணிமாறுதல் செய்ய வேண்டிய அலுவலர்கள் குறித்த முறையான தகவல்களை பராமரிக்காமல் இருப்பதே சில இடங்களில் ஏற்படும் இத்தகைய தவறுகளுக்கான காரணங்கள் ஆகும்.இத்தகைய குற்ற நிகழ்வுகள் இனி வருங்காலங்களில் ஏற்படுவதை தவிர்ப்பதற்காகவும்,தற்போதுள்ள விதிமுறைகளை மேலும் வலுவாகச் செயல்படுத்துவதற்காகவும் ஆணையமானது பின்வரும் வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது :-

I. தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி பணியிட மாற்றம் செய்யப்பட்ட இந்திய ஆட்சிப்பணி /இந்திய காவல் பணி அதிகாரிகள்,மாவட்டத் தேர்தல் அதிகாரிகள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் வாக்காளர் பட்டியல் அதிகாரிகள் குறித்த விவரங்கள் மற்றும் ஆணையம் ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரை செய்யப்பட்ட அலுவலர்கள் அல்லது தேர்தலில் அல்லது தேர்தல் தொடர்பான பணிகளில் செய்த தவறுகளின் காரணமாக

தண்டனை வழங்கப்பட்டுள்ள அலுவலர்கள் குறித்த விவரங்களைக் கொண்ட பதிவேடு ஒன்றை மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி பராமரித்து வர வேண்டும்.

II. அதேபோன்று, மாவட்டத் தேர்தல் அலுவலர், தன் கட்டுப்பாட்டில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் குறித்த விவரங்களைக் கொண்ட பதிவேடு ஒன்றை பராமரித்து வர வேண்டும்.

III. இந்திய தேர்தல் ஆணையத்தால் தேர்தல் அறிவிப்பு வெளியிடப்படும் நாளுக்கு 7 நாட்கள் முன்னதாகவே,மேற்கண்ட வரையறைகளுக்குள் வரும் அனைத்து அலுவலர்களும் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை உறுதி செய்து ஆணையத்தின் மண்டல செயலாளருக்கு கடிதம் ஒன்றை மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி அனுப்ப வேண்டும்.இதேபோல், மேற்கண்ட வரையறைகளுக்குள் வரும் அனைத்து அலுவலர்கள்/அதிகாரிகளும் தேர்தல் அல்லாத பணிகள் ஒதுக்கப்பட்டு மாவட்டங்களுக்கு வெளியில் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை மாவட்டத் தேர்தல் அதிகாரிகள் அனைவரும் உறுதிசெய்யும் வகையில் அவர்களிடமிருந்து இணக்க சான்றிதழ் பெற வேண்டும்.

IV. தேர்தல் நடத்தும் அலுவலர்கள், தேர்தல் பதிவு அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவித் தேதல் பதிவு அலுவலர்கள் மற்றும் பிற தேர்தல் தொடர்புடைய அலுவலர்களைப் பொறுத்த நேர்வில் “4 ஆண்டு பதவிக்காலத்தில் 3 ஆண்டுகளை நிறைவு செய்யும் அளவுகோல்” மற்றும் சொந்த மாவட்டம் என்ற அளவுகோல், போன்றவைகளால் பணியிட மாற்றம் செய்ய வேண்டிய அலுவலர்கள் குறித்து மாவட்டத் தேர்தல் அலுவலர் உறுதிசெய்து, உரிய நேரத்தில் கடிதம் ஒன்றை தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு அனுப்ப வேண்டும்.தேர்தல் ஆணையம் அல்லது தலைமைத் தேர்தல் அதிகாரியால், இதற்காக யாதொரு கால அளவு நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும் அல்லது நிர்ணயிக்கப்பட்டாலும் அது தேர்தல்கள் குறித்த பத்திரிக்கை அறிவிப்பு வெளியிடப்படும்

நாளிலிருந்து 7 நட்களுக்குள்ளாக அனுப்ப வேண்டும். அதேபோல், தேர்தல் தொடர்புடைய பணிகளில் ஈடுபடும் மாவட்டத் தேர்தல் அலுவலர்,சிறப்பு காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர்கள் மற்றும் பிற காவல்துறை உயர் அதிகாரிகள் தொடர்புடைய விவரங்களை மாநில அரசின் இசைவுடன் தலைமைத் தேர்தல் அதிகாரி பராமரித்துவர வேண்டும்.மாவட்ட தேர்தல் அலுவலரிடமிருந்து பெறப்பட்ட இத்தகைய பணிமாறுதல் செய்யப்பட்ட தொடர்புடைய தகவல்களை உறுதிசெய்வதுடன், தலைமைத் தேர்தல் அதிகாரி தொகுக்கப்பட்ட இணக்கக் கடிதம் ஒன்றை தேர்தல் குறித்து அறிவிப்பதற்கு 7 நாட்களுக்கு முன்பாக மண்டல செயலாளருக்கு அனுப்ப வேண்டும்.

V. தேர்தல் அறிவிப்பிற்கு 7 நாட்களுக்குள் இணக்கக் கடிதத்தை அளிப்பதற்கு வகைசெய்யும் வகையில், விவரங்களை சேகரித்தல் மற்றும் மேற்சொன்ன பதிவேடுகளை காலவிரயம் ஏற்படாதவாறு முன்கூட்டியே தயார் செய்வதையும் தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும் மாவட்டத் தேர்தல் அதிகாரிகள் உறுதி செய்தல் வேண்டும்.

VI. அலுவலர்களை பணியிடமாற்றம் செய்வது மற்றும் ஆணையத்தின் மேற்கண்ட உத்தரவுகளுக்கு இணக்கமாக செயல்படுவது ஆகியவற்றிற்கு பொறுப்பாக மாநில அரசின் பல்வேறு துறைகள் உள்ளன.தேர்தல் நேரங்களில் அலுவலர்களை பணிமாறுதல் செய்வதை, தொடர்புடைய துறைகளின் செயலாளர்களின் கவனத்திற்கு கொண்டு செல்வதுடன் அதன் நகல் ஒன்று தலைமைச் செயலாளருக்கும் அனுப்புதல் வேண்டும்.அனைத்து துறைகளும் ஆணையத்தின் உத்தரவுகளுக்கு இணங்க குறித்த நேரத்தில் செயல்படுவதை உறுதிசெய்யுமாறு தொடர்புடைய துறையின் செயலாளர்களிடம், தலைமைத் தேர்தல் அதிகாரி கேட்டுக்கொள்ளலாம்.

VII. இடைத்தேர்தல்களின்போது, அலுவலர்கள் பத்தி (I) இன் படி உள்ள வகையில் பணியிடமாற்றம் செய்ய வேண்டியிருப்பின் அவர்களை, இடைத் தேர்தல் அறிவிக்கப்படும் நாளிலிருந்து மூன்று

நாட்களுக்குள்ளாகவோ,மனுதாக்கல் செய்யப்படும் நாளுக்கு முன்னதாகவோ இவற்றில் எது முன்னதாக வருகிறதோ அதன்படி மாவட்டத்திற்கு வெளியில் பணியிட மாறுதல் செய்ய வேண்டும்.

VIII. மேற்கண்ட உத்தரவுகள் எவ்வித மாற்றங்களும் இல்லாமல் பின்பற்றப்பட வேண்டும்.

# K.பல்வகை

## உத்தரவு தொடர் எண்.121

இந்திய அரசின் செயலாளர் விமான போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்றை அமைச்சகம், சர்தார் படேல் பவன், புது தில்லி 2) செயலாளர், ரயில்வே வாரியம், ரயில் பவன், புதுதில்லிக்கு அனுப்பப்பட்ட 31.12.1993ஆம் நாளிட்ட தேர்தல் ஆணையத்தின் கடித எண்.437/6/93/J.S.11/

**பொருள்:** பொதுத்தேர்தல்கள் மற்றும் இடைத்தேர்தல்கள் நேர்மையாகவும், சுதந்திரமாகவும் நடத்துவதற்காக இலவச வாகன அனுமதிச்சீட்டுகளை தவறாகப் பயன்படுத்துவதை தடைசெய்வது தொடர்பான சிறப்பு நெறிமுறைக்கட்டளைகள்.

இமாசலப் பிரதேசம், மத்திய பிரதேசம், மிஜோராம், ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம் மற்றும் தேசிய தலைநகர ஆட்சி எல்லை (தில்லி) ஆகிய மாநிலங்களில் அண்மையில் நடந்துமுடிந்த சட்டப்பேரவைக்கான பொதுத்தேர்தல்களின் போது மாநிலங்கள்/தொகுதிகளுக்கு/பகுதிகளுக்கு ரயில்வே மற்றும் அரசு விமான போக்குவரத்து நிறுவனங்களால் வழங்கப்பட்ட அனுமதி சீட்டுகளை தவறாகப் பயன்படுத்தப்பட்டன. இந்த இலவசப் பயணச்சீட்டை வைத்திருப்போர் சுதந்திரமான, நியாயமான தேர்தல் முறையை மீறும் வகையில் இலவமாக பயணம் செய்துள்ளனர். இது தொடர்பாக ஆணையத்திற்கு வந்த கோரிக்கைகளின் அடிப்படையில் சில உத்தரவுகள் பிறப்பிக்க பணிக்கப்படுகிறோம்.

(2 இவ்விதமான நிகழ்வுகளை தடுக்கவேண்டும் என ஆணையம் முடிவு செய்தது. பொதுத்தேர்தல்கள் / இடைத்தேர்தல்களின் போது மாநிலங்கள் / தொகுதிகள் / பகுதிகளில் சுற்றி வருவதற்கு வழங்கப்படும் அனுமதிச்சீட்டுகளை, சலுகைச்சீட்டுகளை, உள்ளிட்ட அனுமதிச்சீட்டுகள், தொகுதிகளிலோ, மாநிலங்களிலோ, பகுதிகளிலோ பயணம் செய்ய பயன்படுத்த வரும் காலத்தில் வழங்கப்படமாட்டாது என ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இந்த தடையானது பொதுத்தேர்தல்/இடைத்தேர்தல் அறிவிப்பு வந்ததிலிருந்து செயல்பாட்டுக்கு வரும் மற்றும் தேர்தல் முடிவுகள் வரும் வரை செயல்பாட்டில் இருக்கும்.

3)இவ்விதமான தடைஆணையிலிருந்து யாருக்கும் விதிவிலக்கு கிடையாது. சுற்றுலா இயக்குபவர்கள் மற்றும் வாகன முகவர்களுக்கு மட்டும் இந்த தடையிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

4) இந்த பொருண்மை தொடர்பாக வருங்காலத்தில் நடக்கும் பொதுத்தேர்தல்கள்/இடைத்தேர்களின் போது இந்த வழிமுறைகள் கண்டிப்பாக பின்பற்றப்படவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட வழிமுறைகளின் நகலில் ஆணையம் ஒப்புகை கையொப்பமிட்டுள்ளது.

தயவுசெய்து ரசீதுக்கான ஒப்புகைச் சீட்டினை வழங்கவும்.

## உத்தரவு தொடர் எண்.122

அனைத்து மாநில மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளுக்கான தலைமைச் செயலாளர்கள் மற்றும் அனைத்து மாநில மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளுக்கான தலைமை தேர்தல் அலுவலர்களுக்கு அனுப்பப்பட்ட **22.03.1996** ஆம் நாளிட்டதேர்தல் ஆணைத்தின் கடித எண். **434/96**/PLN-III.

**<u>பொருள்</u>:** பெரிய அளவிலான ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் ஏலங்கள் – தொடர்பாக.

மதுபானம், டெண்டு இலைகள் உள்ளிட்டவற்றுக்கான பல்வேறு பெரிய ஒப்பந்தப்புள்ளிகள், ஏலங்கள் தொடர்பாக ஆணையத்தின் பார்வைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இத்தகைய சில ஏலங்கள் அதிகாரத்தில் உள்ள ஏனையோருக்கு சாதகமாகவே, பாதகமாகவே அமைவதற்கான சாத்தியம் உண்டு என்பதைப் புறக்கணிக்க இயலாது.

1) எனவே, பெரிய அளவிலான அத்தகைய ஏலங்கள் முதலியன நடத்தப்பட இருக்கின்ற அனைத்து நேர்வுகளிலும், அந்தந்தப் பகுதிகளில் தேர்தல் முடிவடையும் கடைசி நாள் வரையில் அவற்றை ஒத்தி போட வேண்டும் என்றும் தவிர்க்க இயலாத நிலையில் மாநில அரசு இடைக்கால ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று ஆணையம் உத்தரவிடுகிறது.
2) இதிலிருந்து மீறுவது தேர்தல் நடத்தை விதி மீறல்ககளாக கடுமையாக கருதி பார்க்கப்படும்.

## உத்தரவு தொடர் எண்.123

அனைத்து மாநில மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சி பகுதிகளின் தலைமை தேர்தல் அலுவலகர்களுக்கு அனுப்பப்பட்ட **23.1.1998**ஆம் நாளிட்ட தேர்தல் ஆணையத்தின் கடித எண்.**437/6/98–**PLN-III

**பொருள்:** அரசியலில் தீவிரமாக ஈடுபடுவோரின் மனைவி/கணவர் ஆகிய அலுவலர்களை விடுப்பு அளிப்பது.

இந்திய ஆட்சிப்பணி, இந்திய காவல் பணி மற்றும் ஏனைய மாநில அரசின் மூத்த அதிகாரிகளின் வாழ்க்கை துணைகள் அரசியல் களத்தில் தேர்தல் வேட்பாளர்களாக அல்லது அரசியல் கட்சி உறுப்பினராக மும்முரமாக இருப்பின் இது தொடர்பாக பல்வேறு பொருண்மைகள் ஆணையத்திற்கு வந்துகொண்டிருக்கிறது.

தேர்தல் சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடத்திடும் நலன் கருதி தொடர்புற்ற அதிகாரிகள் தலைநகரத்தினை விட்டு வெளியே செல்லக்கூடாது. அது விடுப்பு ஆனாலும் சுற்றுலா ஆனாலும் தேர்தல்கள் முடியும் வரை வெளியே செல்லகூடாது என அனைவருக்கும் ஆணையம் ஆணையிடுகிறது.

## உத்தரவு தொடர் எண்.124

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமைத் தேர்தல் அதிகாரிகள்/தலைமை செயலாளர்களுக்கு அனுப்பப்பட்ட 25.1.2002ஆம் நாளிட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் எண்.437/6/2002–PLN-III தாங்கிய கடிதம்.

**பொருள்:** மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் – மாநில நிதி நிறுவனங்களள் மூலம் வசூல் செய்யப்பட வேண்டிய கடன்கள் மற்றும் வாராக் கடன்கள் தேர்தல் காலத்தில் தள்ளுபடி செய்யப்படுதல் குறித்து.

2. தற்போது மாநில அரசின் பல்வேறு வகையான நிறுவனங்கள் வணிக மற்றும் வங்கி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன. கிர்பால் சிங்–எதிர்–உத்தம்சிங் (AIR1986 SC300) என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கிய ஆணையில் “இன்றைய காலகட்டத்தில் மாநில அரசின் வழிகாட்டு கோட்பாடுகளின் அடிப்படையில் சிறந்த மேலாண்மை நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு பல்வேறு நிறுவனங்களை (கழகங்களை) ஏற்படுத்தும் அளவுக்கு மாநிலங்களின் செயல்பாடுகள் பெருகிவிட்டதால் அந்நிறுவனங்கள் மாநில அரசின் உறுப்பு அமைப்புகளாகவே உள்ளன” என்று தெரிவித்துள்ளது. மேலும் சத்ருசார்லா சந்திரசேகர்–எதிர்–வைரிசேர்லா பிரதீப்குமார் (AR 1992 SC1959) என்ற வழக்கில் தம் கருத்தை தெரிவிக்கையில், அரசாங்கத்தால் நிறுவப்படும் நிறுவனமானது அரசைச் சாராதது போல் தோன்றினாலும், தோற்றத்தில் அரசு சாராத சுதந்திரமான அமைப்பாக இருந்தாலும், ஆழமாகப் பார்த்தால் உள்ளார்ந்த நிலையில் அது அரசின் மறு உருவாகவே கொள்ள வேண்டியுள்ளது. எனவே, அரசு சார்ந்த நிதி அமைப்புகள் கடன் வழங்குதல், கடன்களை திரும்பச் செலுத்தும் அமைப்பை மாற்றி அமைத்தல், அநேக நேர்வுகளில் வாராக் கடன்களை தள்ளுபடி செய்தல் போன்ற வணிகம் மற்றும் வங்கி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இவ்வாறான அரசுசார் அமைப்புகளின் நடைமுறைகள் இயல்பாக மேற்கொள்ளப்பட்டு வந்தாலும், தேர்தல் நடைமுறைகள் மேற்கொள்ளப்படும் காலத்தில், சில வேளைகளில் அவை தவறாகக் கருதப்பட்டு அரசியல் கட்சிகள் வேட்பாளர்கள், பொதுமக்கள் ஆகியோரால் ஐயக்கண்ணோடு பார்க்கப்படுகிறது. ஆட்சியில் இருக்கும் கட்சியானது அரசின் மீது தனது பேரளவு செல்வாக்கை செலுத்த முடியும் என்பதும் அதனால் மீண்டும் தேர்தலில் போட்டியிட்டு அதிகாரத்திற்கு மீண்டும் வரமுடியும் என்பதும், வாராக்கடன்களை தள்ளுடி செய்யக்கூடிய நிலை இருப்பதாலும், இவ்வாறு கடன் தள்ளுபடி செய்யப்பட்ட தனிநபர் அல்லது வணிக நிறுவனம் கட்சி நிதிக்கு நன்கொடை கொடுத்து, அவர்களுடைய தேர்தல் வாக்கு சேகரிப்பிற்கு உதவி செய்கிறது என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாவதும் தவிர்க்க இயலாதது. மக்களிடம் செல்வாக்கு பெறவேண்டும் என்ற நோக்கத்திற்காக ஏராளமான கடன் வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வாக்குகளை கைப்பற்றுவது என்ற குற்றச்சாட்டும் உண்டு. இதனால் கடன் வழங்கும் நிறுவனத்தின் பெயருக்கு, காலப்போக்கில் ஊறு விளைவிப்பதற்கான வாய்ப்பும் உண்டு.

**3)** மேற்சொன்ன நிலையையும் சூழ்நிலையின் உண்மைகளையும் கருதிப்பார்க்கையில் மாநில அரசுகளால் முழுவதுமாக அல்லது ஒரு பகுதியாக நிதியுதவி அளிக்க பெற்ற அனைத்து நிதி நிறுவனங்களும், தேர்தல் ஆணையத்தின் முன் ஒப்புதல் இன்றி தேர்தல் நடத்தை விதி செயலில் இருக்கின்றபோது யாதொரு தனி நபர், நிறுவனம் முதலியவற்றுக்கு அளிக்கப்பட்ட கடன்களை தள்ளுபடி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது என்று தேர்தல் ஆணையம் கருதுகிறது. அதேப்போன்று, இந்த நிறுவனங்களின் கடன் வழங்குவதற்கான நிதி வரம்புகள், மாதிரி தேர்தல் நடத்தை விதி செயலில் இருக்கும்போது பயனாளிகளுக்கு கண்மூடித்தனமான கடன்கள் வழங்குவதன் வாயிலாக உயர்த்தப்படக்கூடாது.

**4)** தேர்தல் ஆணையத்தின் மேற்சொன்ன உத்தரவானது, மேற்சொன்ன அனைத்து நிதி நிறுவனங்களும் ஏனைய நிறுவனங்களும் கண்டிப்பாக பின்பற்றுவதற்காக உடனடியாக அவற்றின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட வேண்டும். இது தொடர்பாக அவர்களுக்கு வழங்கப்பட்ட உத்தரவின் நகல் ஒன்று ஆணையத்தின் தகவலுக்காகவும், பதிவுருக்காகவும் அனுப்பப்பட வேண்டும்.

இக்கடிதம் பெற்றுக்கொண்டதற்கு உடனடியாக ஒப்புகை அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## உத்தரவு தொடர் எண்.125

தேர்தல் ஆணையம், இந்திய அரசின் அமைச்சரவைக்குழுச் செயலாளர், உள்துறை அமைச்சரக அரசுச் செயலாளர், கிராமப்புற மேம்பாடு (ம) வறுமை ஒழிப்பு அமைச்சக அரசுச் செயலாளர், அவர்களுக்கும், அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த தலைமைச் செயலாளர்கள் /தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு எழுதிய, 19.02.2004 ஆம் நாளிட்ட, 437/6/3/2004/PLN-II என்ற எண்ணிட்ட கடிதம்.

**பொருள்: அனுமதி பெறாத கட்டட அமைப்புகளை அகற்றுதல் / இடித்தல் நடவடிக்கைகள் மீதான கட்டுப்பாடுகள் – தொடர்பாக**

13 ஆவது மக்களவை கலைக்கப்பட்டதும், சில மாநிலங்களின் சட்டமன்ற பேரவைத் தேர்தல்களோடு மக்களவைப் பொதுத் தேர்தலும் விரைவில் நடைபெறவுள்ளதும் தாங்கள் அறிந்ததே.

2. கிராம நலம் மற்றும் பிற மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தும் அரசின் பல்வேறு முகமைகள், அங்கீகாரம் பெறாத கட்டட அமைப்புகளையும் ஆக்கிரமிப்புகளையும் அகற்றும் பணியிலும், மக்களை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மாற்றிக் குடியமர்த்தல் போன்ற பணியிலும் ஈடுபட்டு வருவது தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. தொடர்புடைய முகமையின் சட்ட விதிகளின்படியும், சில சமயங்களில் நீதிமன்ற ஆணையின்படியும் அத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதில் சிறிதும் ஐயமில்லை. இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டு சிறப்பாகப் பணியாற்றும் அரசு முகமைகளின் நோக்கங்களைத் தேர்தல் ஆணையம் உளமார வரவேற்கும் அதே நேரத்தில், சில மாநிலங்களின் சட்டப்பேரவைத் தேர்தல்களோடு கூடவே, மக்களவைக்கும் பொதுத்தேர்தல் நடைபெறவிருக்கும் இத்தருணத்தில், இத்தகைய இடமாற்றங்கள், தேர்தலுக்கான வாக்காளர் பட்டியலின் நம்பகத்தன்மையைப் பாதிக்கும் எனத் தேர்தல் ஆணையம் கருதுகிறது.

3. எந்தவொரு தேர்தலையும் நடத்துவதற்கு அடிப்படை ஆவணமாக அமைவது வாக்காளர் பட்டியலே. அனைத்துத் தேர்தல் நடவடிக்கைகளும் அதைச் சார்ந்தே அமைகின்றன.

மக்களவைத் தொகுதிக்கோ அல்லது மாநில சட்டப்பேரவைத் தொகுதிக்கோ ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல் என்பது, வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள உறுப்பினர்கள் மக்களவைக்கோ அல்லது சட்டப்பேரவைக்கோ ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது பொருளாகும். அரசியல் சட்டத்தின் 326ஆவது பிரிவின்படி குறிப்பிட்ட தேதியில் 18 வயது பூர்த்தியடைந்த அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய ஒவ்வொரு இந்தியக் குடிமகனும், (தகுதியின்மை இல்லாதவராய் இருப்பின்), தான் வசிக்கும் மக்களவைத் தொகுதியிலோ அல்லது சட்டப்பேரவைத் தொகுதியிலோ தன்னை ஒரு வாக்காளராகப் பதிவு செய்து கொள்ளலாம். ஆனால், 1951 ஆம் ஆண்டு, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 62 வது பிரிவின்படி, தற்போது ஒரு தொகுதியின் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்டுள்ள வாக்காளர்கள் மட்டுமே அத்தொகுதிகளில் வாக்களிக்கும் உரிமை பெற்றவர்கள் ஆவர். ஆகவே, தேர்தலைச் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடத்துவதற்கு ஏதுவாக, தொகுதிக்கான வாக்காளர் பட்டியல் துல்லியமாகவும், தற்போதைய நிலவரப்படியும் இருக்கவேண்டும். தேர்தல் நடைபெறவிருக்கும் மாநிலங்களின் வாக்காளர் பட்டியலுக்கான தகுதியான நாள் 01.01.2004 என முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே வாக்காளர்கள் தாங்கள் வசிக்கும் பகுதியைச் சார்ந்த சட்டப்பேரவைத் தொகுதியின் வாக்காளர் பட்டியலின் சரியான பாகத்தில் தங்கள் பெயரைச் சேர்த்துக் கொள்ளலாம். அரசு அமைப்புகள் மேற்கொள்ளும் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதன் மூலமாக வாக்காளர்கள் தங்கள் வசிப்பிடங்களிலிருந்து இடம்பெயர நேர்ந்தால், குறிப்பிட்ட சட்டப்பேரவைத் தொகுதிக்கான வாக்காளர் பட்டியல் பாதிக்கப்படும்; எத்தனை வாக்காளர்கள் இடம்பெயர்ந்தார்களோ அத்தனை வாக்காளர்களும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதியில் வாக்களிக்கும் உரிமையை இழக்கும் வண்ணம் பட்டியல் அமைந்துவிடும். பெரும்பாலான நிகழ்வுகளில், ஆக்கிரமிப்புகளை அகற்றும்போது தங்கள் சட்டபேரவைத் தொகுதிக்கு வெளியே வேறு இடங்களில் குடியமர்த்தப்படும் வாக்காளர்கள், தாங்கள் வசிக்கும் புதிய சட்டபேரவைத் தொகுதியில் குறித்த காலத்திற்குள், வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயரைச் சேர்க்க இயலாமல் போய்விடுகின்றனர். இதுபோன்ற தவறான வாக்காளர் பட்டியல்களின் அடிப்படையில் தேர்தல் நடைபெறும்போது தனக்கு வாக்குரிமை இருக்கும் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மாற்றப்படும் பெரும்பாலான மக்களுக்கான வாய்ப்பு மறுக்கப்படுகிறது. மேலும், தவறான வாக்காளர் பட்டியல், வாக்குப்பதிவு நடைபெறும் தொகுதியில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுவதால் இடமாற்றம் செய்யப்பட்ட மக்களுக்குப்

பதிலாக, வேண்டடத் தகாத சக்திகள் கள்ள வாக்குகள் போடுவதற்கும் வழிவகுக்கும். இவையனைத்தும் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடைபெறும் தேர்தலைச் சீரழிப்பதோடு, தொடர்புடைய தொகுதியில் தேர்தல் முடிவையும் பாதிக்கும்.

4. தேர்தல்களைச் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடத்துவதற்காகவும், வாக்காளர் பட்டியலின் நம்பகத்தன்மையை நிலைநாட்டவும், இப்போது முதல் தேர்தல் முடிவடையும் வரையில், யாதொரு அரசு / உள்ளாட்சி அமைப்புகள் எவ்வித ஆக்கிரமிப்புகளையும் அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் என தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது. தேர்தல் ஆணையத்தின் மேற்சொன்ன முடிவினை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக நீதிமன்றம் ஏதாவது ஆணை பிறப்பித்திருந்தால், அதைச் செயல்படுத்தும் வகையில் ஆணைகளைப் பிறப்பிக்க தேர்தல் ஆணையத்தின் கவனத்துக்கு மத்திய, மாநில அரசுகள் கொண்டுவரவேண்டும். இட மாற்றம் தவிர்க்க முடியாததாயின், தக்க மறுவாழ்வுத் திட்டங்கள் உள்ளிட்ட அனைத்து விளக்கங்களை / காரணிகளை தேர்தல் ஆணையத்திடம் அரசு வழங்க வேண்டும். அதன் மூலம் தொடர்புடைய தேர்தல் அதிகாரிகளுக்கு வாக்காளர் பட்டியலைத் திருத்தம் செய்வது தொடர்பாக தேர்தல் ஆணையம், உரிய ஆணைகளைப் பிறப்பித்து, இடமாற்றம் செய்யப்பட்ட வாக்காளர்கள் உரிய வசதிகளைப் பெற்றபிறகு தங்கள் வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்த இயலாத நிலையைத் தடுக்க இயலும்.

## உத்தரவு தொடர் எண்.126

**ஆந்திரப் பிரதேசம்ர்நாடக ,கம்மகாராஷ்டி ,ரம்தமிழ்நாடு மற்றும் ஜார் ,க்கண்ட் மாநில தலைமைச் செயலர்களுக்குத் தேர்தல் ஆணையர் எழுதிய 11.03. ம்2004நாளிட்ட 437/6/23/ 2004**PLN.III **என்ற எண்ணிட்ட கடிதம்.**

பொருள் : பொதுத் தேர்தல்கள் 2004 - வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்வது - தொடர்பாக .

தங்களது மாநிலங்களில் வறட்சி பகுதியாக அறிவிக்கப்பட்ட பகுதிகளில் வறட்சி நிவாரணப் பணிகளை நிறைவேற்றுவதில் மேற்கொள்ள வேண்டிய நடைமுறை குறித்து மாநில அரசுகளிடமிருந்து பல்வேறு கடிதங்கள் தேர்தல் ஆணையத்திற்கு வந்துள்ளன. இது தொடர்பான பொருண்மைகளைக் கருத்தில் கொண்டு தேர்தல் ஆணையம் கீழ்க்கண்ட அறிவுறுத்தல்களை வழங்குகிறது.

i. மத்திய அரசின் பேரிடர் மேலாண்மை நிதி வழங்க உகந்ததாக வழிகாட்டு நெறிமுறையில் கூறியவாறு வறட்சிப் பகுதியாக அறிவிக்கப்பட்ட இடத்தில் மாநில அரசால் நிவாரணப் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். 29 பிப்ரவரி 2004 அன்று தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பின்னர் எந்த ஒரு புதிய பகுதியையும் ஏற்கனவே உள்ள வறட்சி பாதித்த பகுதிகளின் பட்டியலில் சேர்க்கக் கூடாது. ஏதேனும் புதிய பகுதி அல்லது கிராமத்தைச் சேர்க்க வேண்டுமானால், தேர்தல் ஆணையத்தின் இசைவைப் பெறுவதோடு தேசிய பேரிடர் நிதியைப் பயன்படுத்த மத்திய அரசால் பிறப்பிக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின் கீழ் உதவியைப் பெற வேண்டும்.

ii. உடனடியாக நிவாரணம் தேவைப்படும் வறட்சி பாதித்த இடங்களில் கீழ்க்கண்ட நிவாரணப் பணிகளை மேற்கொள்ள தேர்தல் ஆணையம் தற்காலிகமாக அனுமதி அளிக்கிறது.

அ. குடிநீர் வழங்கும் வாகனங்கள் மூலம் குடிநீர் வழங்குதல்.

ஆ. வறட்சி பாதித்த பகுதியில் நீர் வற்றிப் போன ஆழ்துளைக் கிணறுகளுக்கு மாற்றாக புதிதாக ஆழ்துளைக் கிணறுகளை அமைத்தல்.

இ. பேரிடர் நிவாரண நிதியின் வழிகாட்டுதலின்படி பணிக்குச் செல்ல முடியாதவர்களுக்கும், கைவிடப்பட்டவர்களுக்கும் இயற்கைப்பேரிடர் நிவாரண நிதித் திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட விலையில் அரிசி மற்றும்

கோதுமை வழங்குதல்.

ஈ. கால்நடைகளுக்குத் தீவனம் அளித்தல்

உ. கூலி வேலை (வேலைக்கு உணவு) போன்ற புதிய பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டும்.

iii. தேர்தல் நடத்தை விதிகள் செயல்பாட்டில் உள்ளபோது வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்கையில் எவ்வித அரசியல் நிகழ்ச்சிகளிலும் எந்த ஒரு அமைச்சரும் அரசியல் பிரமுகரும் மேற்பார்வை செய்தல் அல்லது வேறு எந்த காரணத்திற்காகவும் கலந்து கொள்ளக் கூடாது.

iv. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் அலுவல் சாராத நபர்களைத் தவிர்த்துவிட்டு, ஒட்டு மொத்த வறட்சி நிவாரணப் பணிகளும் மண்டல, மாவட்ட, வட்ட, துணை மற்றும் நிர்வாகத்தினால் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும்.

தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலுக்குக் கீழ்ப்படிவதற்கான ஒப்புகையை அனுப்பவும்.

## உத்தரவு தொடர் எண்.127

**மத்திய அமைச்சரவை செயலாளர் அனைத்து மாநில மற்றும் யூனியன் , பிரதேசங்களின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமைத் தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையத்தின் 24.10.2007 ஆம் நாளிட்ட437 /6/ 2007**PLN.III **என்ற எண்ணிட்ட கடிதம்.**

பொருள் : குஜராத் சட்டமன்றப் பேரவைக்கான 2007 ம் ஆண்டு பொதுத் தேர்தல் - அமைச்சர்கள் மற்றும் வேட்பாளர்களின் பாதுகாப்பு - தொடர்பாக .

தேர்தல் ஆணையத்தின் 437/6/96-**PLN.III** என்ற எண்ணிட்ட, 09.04.1996ம் நாளிட்ட வழிகாட்டு நெறிமுறை குறித்த கடிதத்தின் பத்தி 2.5ன் மீது தங்கள் கவனத்தை ஈர்க்க விழைகிறேன். பாதுகாப்பு முகமைகள் மற்றும் உளவுத்துறை அதிகாரிகளால் கண்டறியப்பட்ட பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உள்ள நபருக்குப் பாதுகாப்பளிக்க மாநில அரசுக்குச் சொந்தமான குண்டு துளைக்காத ஒரு வாகனத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். பாதுகாப்பு அதிகாரிகளால் பரிந்துரைக்கப்படாத வரையில் ஒன்றுக்கு மேற்பட்ட வாகனங்களைப் பயன்படுத்தக்கூடாது. அவர்கள் பதவியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர் வேட்பாளராக இருந்தாலோ அல்லது இல்லையென்றாலோ இந்த வாகனங்களைப் பயன்படுத்துவதற்கான செலவை ஏற்கவேண்டும்.

2. தேர்தல் ஆணையம் மேற்கண்ட பொருண்மையயின் மீது ஆய்வு மேற்கொண்ட பின்னர், மேற்கண்ட கடிதத்தின் பத்தி 2.5ல் செய்துள்ள மாற்றம் பின்வருமாறு: உள்துறை அமைச்சகத்தால் "இசட் பிளஸ்" பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள நபர் அரசின் குண்டு துளைக்காத வாகனத்தைப் பயன்படுத்தலாம். தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் இருக்கும்போது மேற்குறிப்பிட்ட "இசட் பிளஸ்" பாதுகாப்பு வழங்கப்பட்ட பதவியில் இருந்தாலும் இல்லையென்றாலும், அவர் வேட்பாளராக இருந்தாலும் இல்லையென்றாலும் குண்டு துளைக்காத ஒரு வாகனத்தை மட்டுமே தேர்தல்

பிரசாரத்திற்குப் பயன்படுத்தலாம். பாதுகாப்பு அதிகாரிகளால் பரிந்துரைக்கப்படாத வரையில் ஒன்றுக்கு மேற்பட்ட வாகனங்களைப் பயன்படுத்தக்கூடாது. அந்த வாகனத்தைப் பயன்படுத்துவதற்கான செலவை அரசே ஏற்கலாம்.

3. அனைத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் இத்தகவல் சென்றடைந்தமைக்கான இக்கடிதத்தின் ஒப்புகையை வழங்குமாறு தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான ஒரு நகல் தேர்தல் ஆணையத்தின் கோப்புக்கு வைக்கப்படுகிறது.

## உத்தரவு தொடர் எண்.128

இந்திய தேர்தல் ஆணையம், அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ள 9.3.2009 ஆம் நாளிட்ட 437/6/INST/2009–CC& BE ஆம் எண் கடிதம்.

**பொருள் :** மக்களவைக்கான பொதுத் தேர்தல்–2009– நிதி நிலை அறிக்கை தாக்கல் மாதிரி தேர்தல் நடத்தை விதி–தொடர்பாக

2009 ஆம் ஆண்டு மக்களவைக்கான பொதுத்தேர்தல், ஆணையத்தால் அறிவிக்கப்பட்டது மற்றும் 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22ஆம் நாள் முதல், மாதிரி தேர்தல் நடத்தை விதி நடைமுறைக்கு வந்தது என்பதை நீங்கள்அறிவீர்கள். 2009–10 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்வது குறித்து, பல குறிப்புகளை பல்வேறு மாநிலங்களிடமிருந்து ஆணையம் பெற்றது.

2. நடைபெறவிருக்கிற பொதுத் தேர்தல்கள் நெருங்கும் நிலையில் அல்லது பொதுத்தேர்தலுக்கான நடைமுறை அறிவிக்கப்பட்டு, மாதிரி தேர்தல் நடத்தை விதி செயலிலுள்ள போது முழுமையான அறிக்கைக்குப் பதிலாக, 3–4 மாதங்களுக்கு உரிய செலவுகளுக்காக, சட்டப்பேரவையில் நிதிநிலை அறிக்கைக்கு ஒப்புதல் பெறுவது பெரும்பாலன மாநிலங்களில் உள்ள நடைமுறை என்று குழு சுட்டிக்காட்ட விரும்புகிறது. இது நல்லதொரு மக்களாட்சி நடைமுறைக்கு உதவுகிறது.

3. மாநில சட்டப்பேரவைகளுக்கு மாறாகவும், அத்தகைய மரபு மற்றும் உரிமை ஆகியவை தொடர்பாகவும், தேர்தலுக்கு ஏற்பாடு செய்து நடத்துவதற்காக எழுத்து மூலம் வகை செய்வதற்கோ, தொடர்ச்சியான நடவடிக்கை வரையறுப்பதற்கோ விரும்பவில்லை. இருப்பினும், சட்டப்பேரவை வாக்குப்பதிவு நடைபெறவிருக்கிற மாநிலங்களை பொறுத்தவரையில், இடைக்கால நிதி நிலை அறிக்கை நிறைவேறலாம் என அறிவுறுத்துகிறது.

4. மேற்சொன்ன உத்தரவுகள், சம்பந்தப்பட்ட அனைவரின் கவனத்திற்கும் கொண்டு வரப்படலாம் மற்றும் இக்கடிதம் பெற்றமைக்கு தயவுகூர்ந்து ஒப்புகை அளிக்கவும்.

## உத்தரவு தொடர் எண்.129

இந்திய தேர்தல் ஆணையம், அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதியின் தலைமை தேர்தல் அலுவலர்களுக்கு அனுப்பியுள்ள 24.03.2009 ஆம் நாளிட்ட 437/6/2009/CC& BE ஆம் எண் கடிதம்.

பொருள்: மதுபானம் விற்பனை செய்வதற்கான, ஒதுக்கீடு /மாதிரி தேர்தல் நடத்தை விதி செயல்முறையில் இருக்கும் காலத்தில் மதுபானம் மொத்த விற்பனைக்கான முடிவு செய்தல் குறித்து அனுமதி–தொடர்பாக

தற்போது மாதிரி தேர்தல் நடத்தை விதி நடைமுறையில் இருப்பதைக் கருத்தில்கொண்டு, மாநிலத்தில் மதுபானம் விற்பனை செய்வதற்கு ஒதுக்கீடு செய்யுமாறு அனுமதி கோரி, பல்வேறு மாநிலங்களிலிருந்து குறிப்புகளை ஆணையம் பெற்று வருகிறது. சில நேர்வில், ஒப்பந்தங்களுக்கான விண்ணப்பங்களை வெளியிடுவதற்கு கோரப்பட்டது மற்றும் சில நேர்வில், செயல்களைத் தொடங்குவதற்கு மற்றும் குலுக்கல் முறை உட்பட பல்வேறு முறைகளின் வழியாக ஒதுக்கீடு செய்வதற்கு அனுமதி கோரப்பட்டது.

ஒவ்வொரு மாநிலமும் மதுவிற்பனை ஒதுக்கீட்டினை நிர்வகிப்பதற்கு தனிப்பட்ட மாநில ஆயத்தீர்வைச் சட்டத்தை இயற்றியுள்ளது. ஆணையத்தால் பெறப்பட்ட குறிப்புகளின்படி, வெவ்வேறு மாநிலங்களில், விற்பனையாளர்கள் மூலமாக, மதுபான விற்பனைக்காக மாறுபட்ட மாதிரிகள் உள்ளன என்பது கவனிக்கப்பட்டது. சில மாநிலங்களில்/ மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதியில், மாநில அரசே மாநிலத்தால் நடத்தப்படுகின்ற கழகங்களின்/ பொதுத்துறைகளின் கடைகள் வாயிலாக மதுபான விற்பனை செய்கிறது. மேலும் சில மாநிலங்களில், ஆயத்துறையால் அளிக்கப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில், தேர்ந்தெடுக்கப்பட்ட சில்லறை விற்பனையாளர்களுக்கு, மாநில அரசு, மதுபானம் வழங்குகிறது. அரசு நிர்ணயித்த விலையில், குலுக்கல் முறையில் அல்லது ஒப்பந்த முறை ஏற்பாட்டு வாயிலாக நேரடியாக மாநில அளவில் அல்லது மாவட்ட அளவில் மதுபான ஒப்பந்தங்களை அளிக்கும் முறையாக சில மாநிலங்களில் உள்ளது.

நிதியாண்டிற்கான ஒப்பந்தம் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. நிதியாண்டு முடிந்த பின்னரும், சிறிது கால அளவிற்கு, அரசால், ஒப்பந்தத்தை நீட்டிக்கும் வகைசெய்கிற விதிமுறைகள், சில மாநில ஆயத்தீர்வைகளில் அடங்கியுள்ளன. வேறு சில மாநிலங்களில், அத்தகைய வகைசெய்கிற விதிகள், தற்போதிருக்கும் சட்டத்தில் இடம்பெறவில்லை.

மேலே உள்ள நிலையை பார்க்கும்போது, மாதிரி தேர்தல் நடத்தை விதி நடைமுறையிலிருக்கும்போது, மதுபான விற்பனை ஒதுக்கீடு விவகாரத்தில், பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றலாம் எனத் தேர்தல் ஆணையம் உத்திரவிட்டுள்ளது.

(i) நடப்பு நிதியாண்டிற்குப் பிறகும், இடைக்கால ஏற்பாட்டை மேற்கொள்ள மாநில அரசுக்கோ, அதிகாரிகளுக்கோ ஆயத்தீர்வை சட்டங்கள் வகை செய்கின்றன. அத்தகைய இடைக்கால ஏற்பாடு தற்போதைய வரையறைகள், நிபந்தனைகளின் கீழ் உரிய ஒப்பந்ததாரர்/விற்பனையாளருடன் மேற்கொள்ளப்படும்.

(ii) தற்போது நடைமுறையிலிருக்கும் ஆயத்தீர்வைகளில், அத்தகைய வகைசெய்கிற விதிகள் இல்லாத நிலையில், வரும் நிதியாண்டில் வழங்கப்படவேண்டிய புதிய உரிமங்கள்/ஒப்பந்தங்களுக்காக, மாநில அரசு, கடந்த ஆண்டுகளில் பின்பற்றப்பட்ட வழக்கமான நடைமுறைகளைத் தற்போதிருக்கும் சட்டங்களின்படி/ சட்டத்திற்கிணங்க மேற்கொள்ளலாம்.

## உத்தரவு தொடர் எண்.130

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் அலுவலர்களுக்கு அனுப்பியுள்ள **26.04.2009** ஆம் நாளிட்ட தேர்தல் ஆணையத்தின் **437/6/**உத்தரவு **–**2009-CC & BE ஆம் எண்ணிட்ட கடிதம்

**பொருள்:** பொதுத் தேர்தல், மாதிரி நடத்தை விதிகள் **–2009** – தலைமைச் செயலாளர் / உள்துறை செயலாளருக்கு காவல்துறை அதிகாரிகளால் சுருக்கக் குறிப்பு வழங்குதல் **–** தொடர்பாக.

அவசியமென கருதப்படும் நேரத்தில், முதலமைச்சர் அல்லது உள்துறை அமைச்சர்களுக்கான பாதுகாப்பு குறித்து குறிப்புகளை பணியிலிருக்கும் காவல்துறையினர், உள்துறை செயலாளர் அல்லது தலைமைச் செயலாளர் ஆகியோருக்குத் தெரிவிப்பது தொடர்பாக ஆணையம் குறிப்பிட்டுள்ளது குறித்து அறிவிக்க நான் பணிக்கப்பட்டுள்ளேன். மேலும், அவசியம் என்றால், காவல்துறையினர், அதிகாரிகள் ஆகியோர் இது குறித்து குறிப்புகள் வழங்கும்போது உடனிருக்க வேண்டும் எனவும் கருத்து தெரிவிக்கப்படுகிறது.

**2.** ஆணையத்தின் இக்கருத்திற்கான நோக்கம் என்னவெனில், சுதந்திரமான, நேர்மையான மற்றும் வெளிப்படையான தேர்தலை உறுதி செய்தல்; மற்றும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் சரிசமமான நிலையை வழங்குதல்; மேலும் மக்கள் புகாப் கூறும் வகையில் அரசியல் காரணத்திற்காக அதிகார அமைப்பை அரசு தவறாகப் பயன்படுத்துவதற்குச் சிறிதும் இடமளிக்காத வகையில் செயல்படுத்தல்; சட்டம் ஒழுங்கை பாதுகாக்கும் காவல்துறையினரின் பாதுகாப்பு தொடர்பான பணிகளுக்கு இவை முட்டுக்கட்டையாக இருந்துவிடக்கூடாது என்பது மீண்டும் வலியுறுத்தப்படுகிறது. எனவே, தேவைப்படும் Å்ழ்நிலைகளில் சட்டம் ஒழுங்கு நடைமுறைப்படுத்தும் காவல்துறையினர் செயல்படாத வகையிலோ, நடவடிக்கை தாமதிக்கும் வகையிலோ தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலுக் காத்திருக்கத் தேவையில்லை. தேவை ஏற்படும் சூழ்நிலையில், மாநில காவல்துறை இயக்குநர் அரசியல் கட்சியினருக்குத் தெரிவிப்பது அவர்களது வழிகாட்டுதல்களைப் பெற்றுச் செயல்படுவது உள்ளிட்ட நிலை எதுவாகினும் தங்களது கடமை அல்லது அதிகாரத்தைப் பயன்படுத்திச் செயல்பட வேண்டும்.

தொடர்புடைய அனைவருக்கும் இது அவர்களது கவனத்திற்கு கொண்டுவரலாம்.

## உத்தரவு தொடர் எண்.131

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைச்சரவை செயலாளர், அரசியல் கட்சிகள், தலைமை செயலாளர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் அலுவலர்களுக்கு அனுப்பியுள்ள **21.02.2012** ஆம் நாளிட்ட **437/6/**உத்தரவு **–**2012/CC & BE ஆம் எண்ணிட்ட தேர்தல் ஆணையத்தின் கடிதம்.

**பொருள்:** மாதிரித் தேர்தல் நடத்தை விதிகளை செயற்படுத்துவதைத் தெளிவுபடுத்துதல் மற்றும் செலவீனத்தைக் கண்காணிப்பதற்கான வழிகாட்டும் நெறிமுறைகள் – தொடர்பாக.

வேட்புமனு தாக்கல் செய்வதற்கு முன் வேட்பாளர்களுக்கு மாதிரி நடத்தை விதிமுறைகள் பொருந்துமா என்ற கேள்வி எழுந்துள்ளதைத் தெரிவிக்க நான் பணிக்கப்பட்டுள்ளேன். மாதிரி நடத்தை விதிமுறைகளின் சில விதிமுறைகள் வேட்பாளர்களுக்குப் பொருந்தும், ஆனால் மாதிரி நடத்தை விதிமுறைகளின் சில விதிகள் வேட்பாளர்களுக்கும் பல விதிமுறைகள் அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் மற்றும் தேர்தல் பரப்புரைகளில் ஈடுபடும் இன்ன பிற நபர்களுக்கும் பொருந்தும். தேர்தல் ஆணையத்தால் தேர்தலுக்கான நாள் அறிவித்தபின் தேர்தலில் வேட்பாளராகவிருக்கும் அனைத்து நபர்களுக்கும் மாதிரி நடத்தை விதிமுறைகளின் பொது விதிமுறைகள் பொருந்தும் என்பது தெளிவுபடுத்தப்படுகிறது. மக்களவை/ மாநில சட்டப்பேரவைகளுக்கான பொதுத் தேர்தல்கள் / இடைத் தேர்தல்கள் நேர்வில் தேர்தல் ஆணையத்தால் தேர்தல் அட்டவணை ஆணையத்தால் செய்திக் குறிப்பு வழங்கப்பட்ட நாளிலிருந்தும் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்தும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வருகின்றன என்ற ஆணையத்தின் கடித எண் **437/6/**2011CC & BE **11.10.2011** ஆம் நாளிட்ட கடிதத்தின் மீதான தங்கள் கவனத்தை ஈர்க்கிறேன். வேட்பாளர் வேட்புமனு தாக்கல் செய்த நாளிலிருந்து அவரின் தேர்தல் செலவுகள் கணக்கில் கொள்ளப்படும். எனினும், வேட்புமனு தாக்கல் செய்த நாளுக்கு முன் பயன்படுத்தப்பட்ட பொருள்களின் மீதான செலவுகள் வேட்புமனுத் தாக்கலுக்குப் பிறகும் செய்யப்பட்டால், அது தேர்தல் செலவுகளில் சேர்க்கப்படும்.

## உத்தரவு தொடர் எண். 132

மத்திய மின்சார ஒழுங்கு முறை ஆணையம் மற்றும் அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமைத் தேர்தல் அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் **29.03.2014** ஆம் நாளிட்ட **437 / 6 / 2014** / CC BE. ஆம் எண் கடிதம்

**பொருள்:- மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் – மின்சாரக் கட்டப்பட்டியல் மற்றும் தொடாபான ஆணைகள் வெளியிடுதல் தொடர்பாக.**

திருத்தப்பட்ட / புதிய மின் கட்டணங்கள் மற்றும் அது தொடர்பான ஆணைகளை பிறப்பிப்பதற்காக மாதிரி நடத்தை விதி கோணத்திலிருந்து இந்த ஆணையத்தின் ஒப்புதல் கோரி பல்வேறு மாநிலங்களின் மாநில மின்சார ஒழுங்கு முறை ஆணையஙகளிடமிருந்து இந்த ஆணையத்திற்கு குறிப்புரைகள் வரப்பெறுகின்றன என்பதை தெரிவிப்பதற்கு நான் பணிக்கப்பட்டுள்ளேன். இது குறித்து ஆணையத்தால் கருதிப்பார்க்கப்பட்டுள்ளது. இந்த விவகாரத்தில் ஆணையத்தின் கொள்கை மற்றும் நிலைப்பாடு பற்றி பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

**“மின் கட்டணம் பற்றி முடிவெடுப்பதற்கான செயல்முறையை தொடருவதற்கு ஆணையம் எவ்வித மறுப்பும் இல்லை. எனினும், தொடர்புடைய மாநிலத்தில் வாக்குப்பதிவு முடிந்த பின்னரே. அதாவது அந்த மாநிலத்தில் வாக்குப்பதிவு நாள் / நாட்கள் முடிந்த பின்னா் மின் கட்டண ஆணை வெளியிடப்படலாம்”. உங்கள் மாநிலத்திலுள்ள மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் கவனத்திறகு உடனடியாக இதனை கொண்டு செல்லுமாறு நீங்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.**

**உத்தரவு தொடர் எண். 133**

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் மற்றும் தலைமைச் செயலாளர்களுக்கு இந்தியத் தேர்தல் ஆணையத்தால் அனுப்பப்பட்ட 25.02.2017 ஆம் நாளிட்ட 437/LA/2017/ (கொள்கை) ஆம் எண் கடிதம்.

பொருள்: மக்களவை/சட்டமன்ற பொதுத்தேர்தல் – மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் விண்ணப்பம் –தொடர்பாக.

வாக்குப்பதிவு முடிந்த பின்னர் மாதிரி தேர்தல் நடத்தை விதிகளில் ஆணையம் வழங்கியுள்ள சில உத்தரவுகளைத் தளர்த்துவது குறித்து தங்களுக்கு தெரிவிக்க நான் பணிக்கப்பட்டுள்ளேன்.இது தொடர்பாக முன்னரே அனுப்பப்பட்ட பின்வரும் கடிதத்தைக் காண்க:-

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமைச் செயலாளர்கள் /தலைமைத் தேர்தல் அலுவலர்களுக்கு தேர்தல் ஆணையத்தால் அனுப்பப்பட்ட 26.04.2009 ஆம் நாளிட்ட 437/6/INST/2009/CC&BE ஆம் எண் கடிதம், பஞ்சாப், மணிப்பூர்,உத்தரகாண்ட் மாநில தலைமைச் செயலாளர்கள் /தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையத்தால் அனுப்பப்பட்ட 3.02.2012 ஆம் நாளிட்ட 437/6/INST/2012-CC&BE ஆம் எண் கடிதம் மற்றும் சத்தீஸ்கர், மிசோரம் மற்றும் மத்தியப் பிரதேச மாநில தலைமை செயலாளர்கள் /தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையத்தால் அனுப்பப்பட்ட 28.11.2013 ஆம் நாளிட்ட 437/6/INST/2013-CC&BE ஆம் எண் கடிதம்.

ஆணையம் இதுகுறித்து பரிசீலித்தது. தேர்தலுக்கு பின்னரான மாதிரி தேர்தல் நடத்தை விதிகளில் உள்ள பகுதியளவு தளர்த்தி அனைத்து முந்தைய உத்தரவுகளையும் இரத்து செய்யவும்,மாதிரி தேர்தல் நடத்தை விதிகளின் அனைத்து விதித்துறைகளும் யாதொரு தளர்வுகளும் இன்றி,தேர்தல் நடைமுறைகள் முடியும் வரையில் தொடர்ந்து செயல்பாட்டில் இருக்கும் என்றும் முடிவு செய்துள்ளது.

**இணைப்பு – 1**

அனைத்து மாநிலங்களின் அனைத்து மாநிலங்களின் / மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட 26.04.2009 ஆம் நாளிட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் 437/6/1INST/2009/CC&BE ஆம் எண் கடிதம்.

**பொருள் : பொதுத் தேர்தல்கள், 2009 – மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் – தொடர்பாக.**

மறு தேர்தல் நிலுவையிலுள்ள மாவட்டங்கள் தவிர வாக்குப்பதிவு நிறைவடைந்த அனைத்து மாநிலங்களிலும் பின்வரும் செயற்பாடுகளுக்கு அனுமதியளிக்க தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது என்பதை தெரிவிக்குமாறு நான் பணிக்கப்பட்டுள்ளேன் :-

1. மாவட்டங்களுக்கு அமைச்சர்களின் சுற்றுப்பயணம் மற்றும் அத்தகைய சுற்றுப்பயணத்தில் அலுவலர்களை உடனழைத்துச் செல்லுதல்.

2. களத்தில் மற்றும் செயற்பாட்டிலுள்ள திட்டங்களை ஆய்வு செய்து நடைமுறைப்படுத்துதல்.

3. தேர்தல் பணியிலுள்ள அலுவலர்கள் நீங்கலாக மற்ற கள அலுவலர்களுடனான ஆய்வுப் பணிகள்.

4. தேர்தல் பணியிலுள்ள அலுவலர்கள் நீங்கலாக மற்ற அலுவலர்களின் ஆய்வுக் கூட்டத்தை தலைமையிடத்தில் கூட்டுதல்.

5. ஒப்பந்தப்புள்ளிகள் கோருதல், ஒப்பந்தப்புள்ளிகளை பரிசீலனை செய்தல், ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்தல் மற்றும் ஒப்பந்தப் பணிகளை வழங்குதல் (மாநில சட்டமன்றப் பொதுத்தேர்தல் நடைபெறும் மாநிலங்கள் நீங்கலாக).

சம்பந்தப்பட்ட அனைவரின் கவனத்திற்கும் இது கொண்டுவரப்படலாம்.

**இணைப்பு-II**

பஞ்சாப், மணிப்பூர், உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட 02.02.2012 ஆம் நாளிட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் 437/6/INST/2012/CC&BE ஆம் எண் கடிதம்.

**பொருள் : மாதிரி தேர்தல் நடத்தை விதிமுறைகள் பொருந்துதல் – தொடர்பாக.**

வாக்குப்பதிவு முடிவடைந்த மணிப்பூர், பஞ்சாப் மற்றும் உத்தரகாண்ட் மாநிலங்களில் மறு தேர்தல் ஏதேனும் நிலுவையிலுள்ள மாவட்டங்கள் தவிர ஏனைய மாவட்டங்களில் கீழ்க்காணும் செயல்பாடுகளுக்கு அனுமதி வழங்கிட தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது என்பதை தெரிவிக்க நான் பணிக்கப்பட்டுள்ளேன் :-

1. மாவட்டங்களுக்கு அமைச்சர்களின் சுற்றுப்பயணம் மற்றும் அத்தகைய சுற்றுப்பயணத்தில் அலுவலர்களை உடனழைத்துச் செல்லுதல்.

2. களத்தில் மற்றும் செயற்பாட்டிலுள்ள திட்டங்களை ஆய்வு செய்து நடைமுறைப்படுத்துதல்.

3. தேர்தல் பணியிலுள்ள அலுவலர்கள் நீங்கலாக மற்ற கள அலுவலர்களுடனான ஆய்வுப் பணிகள்.

4. தேர்தல் பணியிலுள்ள அலுவலர்கள் நீங்கலாக மற்ற அலுவலர்களின் ஆய்வுக் கூட்டத்தை தலைமையிடத்தில் கூட்டுதல்.

5. ஒப்பந்தப்புள்ளிகள் கோருதல், ஒப்பந்தப்புள்ளிகளை பரிசீலனை செய்தல், ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்தல், ஒப்பந்தப் பணிகளை வழங்குதல்.

சம்பந்தப்பட்ட அனைவரின் கவனத்திற்கும் இது கொண்டுவரப்படலாம்.

**இணைப்பு-3**

சட்டிஸ்கர், மிசோரம் மற்றும் மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட 28.11.2013ஆம் நாளிட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் 437/6/INST/2013-CC&BE ஆம் எண் கடிதம்.

**பொருள்: மாதிரி தேர்தல் நடத்தை விதிமுறைகள் பொருந்துதல் – தொடர்பாக.**

சட்டிஸ்கர், மிசோரம் மற்றும் மத்திய பிரதேசம் போன்ற வாக்குப்பதிவு முடிவடைந்த மாநிலங்களில் ஏதேனும் நிலுவையிலுள்ள மறு தேர்தலுக்கு உத்தரவிடப்பட்ட மாவட்டங்கள் தவிர ஏனைய மாவட்டங்களில் கீழ்க்காணும் நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கிட தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது என்பதை தெரிவிக்க நான் பணிக்கப்பட்டுள்ளேன் :-

1. மாவட்டங்களுக்கு அமைச்சர்களின் சுற்றுப்பயணம் மற்றும் அத்தகைய சுற்றுப்பயணத்தில் அலுவலர்களை உடனழைத்துச் செல்லுதல்.

2. களத்தில் மற்றும் செயற்பாட்டிலுள்ள திட்டங்களை ஆய்வு செய்து நடைமுறைப்படுத்துதல்.

3. தேர்தல் பணியிலுள்ள அலுவலர்கள் நீங்கலாக மற்ற கள அலுவலர்களுடனான ஆய்வுப் பணிகள்.

4. தேர்தல் பணியிலுள்ள அலுவலர்கள் நீங்கலாக மற்ற அலுவலர்களின் ஆய்வுக் கூட்டத்தை தலைமையிடத்தில் கூட்டுதல்.

## உத்தரவு தொடர் எண்.134

குஜராத் மற்றும் இமாச்சல பிரதேரச மாநில தலைமைத் தேர்தல் அதிகாரிகள் மற்றும் தலைமைச் செயலாளர்களுக்கு அனுப்பப்பட்ட 31.10.2017 ஆம் நாளிட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் 437/6/POL/LET/FUNC/2017-CCSஆம் எண் கடிதம்.

**பொருள் : குஜராத் மற்றும் இமாச்சல பிரதேச சட்டமன்றப் பொது/இடைத் தேர்தல்கள்-மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் – சீராய்வுக் குழு – தொடர்பாக**

தேர்தல் காலத்தின்போது மாதிரித் தேர்தல் நடத்தை விதிகளின் நெறிமுறைகள் மற்றும் அவற்றின் பல்வேறு அம்சங்களை நடைமுறைப்படுத்துவது குறித்த விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் மற்றும் கட்டளைகளை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது என்பதைத் தெரிவிக்க நான் பணிக்கப்பட்டுள்ளேன். மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் தொடர்புடைய எண்ணற்ற செயற்குறிப்புகள் தலைமைத் தேர்தல் அதிகாரிகளிடமிருந்தும் சில சமயங்களில் தொடர்புடைய துறைகளிடமிருந்தும் கூட நேரடியாக தேர்தல் ஆணையத்திற்கு வரப்பெறுகின்றன. தேர்தல் ஆணையம் பின்வரும் அமைப்பில் மாநில தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு சீராய்வுக் குழுவினை அமைக்க முடிவு செய்துள்ளது :-

| | | |
|---|---|---|
| அ) | தலைமைச் செயலாளர் | தலைவர் |
| ஆ) | செயற்குறிப்புகள் தொடர்புடைய அரசுத் துறைகளின் செயலாளர்/ முதன்மைச் செயலாளர் | உறுப்பினர் |
| இ) | மாநிலத்தின் ஒருங்கிணைப்பு அரசின் துறையின் செயலாளர் / முதன்மைச் செயலாளர் | உறுப்பினர் |

2. சீராய்வுக்குழுவானது சம்பந்தப்பட்ட தலைமைத் தேர்தல் அதிகாரியின் வாயிலாக ஒவ்வொரு செயற்குறிப்பினையும் இந்திய தேர்தல் ஆணையத்திற்கு அனுப்புவதற்கு முன்னர், தேர்தல் ஆணையத்தின் வலைதளத்தில் சுருக்கக்குறிப்பு/கட்டைளைகள் வடிவில் கொடுக்கப்பட்டுள்ள கட்டளைகள்/தெளிவுரைகள் அடிப்படையில் அவற்றை

கவனமாக ஆய்வு செய்து அனுப்பவேண்டும். சீராய்புக் குழுவால் இசைவளிக்கப்பட்ட செயற்குறிப்புகள், அவசரக் குறிப்புடன் கூடிய அதாவது, வாக்குப்பதிவு/தேர்தல் நிறைவடையும் வரையில் ஏன் காத்திருக்கக்கூடாது என்ற குறிப்புடன் கூடிய முழு விவரங்களும் தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் அளிக்கப்பட வேண்டும். தலைமைத் தேர்தல் அதிகாரி மேற்சொன்ன சீராய்வுக் குழுவால் அனுப்பப்பட்ட செயற்குறிப்புகளை மட்டும் தமது குறிப்புடன் இந்திய தேர்தல் ஆணையத்திற்கு உடனடியாக அனுப்பவேண்டும். எனவே, மாநில அரசின் அனைத்துத் துறைகளும் தங்களது யாதொரு குறிப்புரைகளையும் நேரடியாக தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பக்கூடாது என்று அறிவுறுத்தப்படலாம். மேலும், தொடர்புடைய அரசுத் துறைகள் உண்மைக் கோப்புகளை தலைமைத் தேர்தல் அதிகாரியின் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். ஆனால் தன்னிறைவடைந்த குறிப்புரைகள் சீராய்வுக்குழு வாயிலாக மட்டுமே அனுப்பப்பட வேண்டும்.

3. அதன்படி, மேற்கூறிய சீராய்வுக் குழுக்கள் குஜராத் மற்றும் இமாச்சல பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உடனடியாக அமைக்கப்பட்டு செயற்படுத்துமாறு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. மேற்படி சீராய்வுக்குழு அமைப்பதற்கான ஆணையின் ஒரு நகல் 2.11.2017 அன்று மாலை 3 மணிக்குள்ளாக அனுப்பப்படவேண்டும். மாதிரி தேர்தல் நடத்தை விதிமுறைகளின் வழிகாட்டு நெறிமுறைகளின் நகலை சீராய்வு குழுவிற்கு தலைமைத் தேர்தல் அதிகாரி வழங்க வேண்டும்.

4. மேலும், ஒரு குறிப்புரைக்கு தீர்வு காண்பதற்கு நியாயமான நேரத்தை தேர்தல் ஆணையம் எடுத்துக்கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவே கடைசிநேர குறிப்புகள் தவிர்க்கப்பட வேண்டும்.

## உத்தரவு தொடர் எண்.135

இமாச்சலப் பிரதேசம் மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களின் அமைச்சரவை செயலாளர்கள், தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் ஆகியோருக்கு அனுப்பப்பட்ட 22.12.2017 நாளிட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் இந்திய தேர்தல் ஆணையத்தின் 437/6/INST/ECI/FUNCT/MCC/2017 ஆம் எண் கடிதம்.

**பொருள் : இமாச்சலப் பிரதேசம் மற்றும் குஜராத் ஆகைய மாநிலங்களின் சட்டமன்றப் பொதுத்தேர்தல்கள் – மாதிரி தேர்தல் நடத்தை விதிமுறைகள் நீக்கிக்கொள்ளப்படுதல் – தொடர்பாக.**

தேர்தல் ஆணையத்தால் தேர்தல் அட்டவணை அறிவிக்கப்பட்ட நாள் முதல் தேர்தல் நடைமுறைகள் நாள் வரை மாதிரி தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறையில் இருக்கும் என்று தெரிவிக்க நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

தற்பொழுது, இமாச்சலப் பிரதேசம் மற்றும் குஜராத் மாநிலத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டன மற்றும் அதனைத் தொடர்ந்து முறையான அரசியலமைப்பு அறிவிக்கைகள் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து இமாச்சலப் பிரதேசம் மற்றும் குஜராத் மாநிலங்களில் மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் செயல்பாட்டிலிருந்து அற்றுப்போய்விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## L. அமைச்சரவை செயலாளருக்கான கடிதங்கள்

**உத்தரவு தொடர் எண்.136**

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 10.01.2017 ஆம் நாளிட்ட 437/6/ECI/INST/FUNCT/MCC/2017-MCC&BE ஆம் எண் கடிதம்.

**பொருள் : கோவா, மணிப்பூர், பஞ்சாப், உத்திரப்பிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களின் சட்டமன்றப் பொதுத் தேர்தல்கள் – மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் – தொடர்பாக.**

மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறைப்படுத்துதல் தொடர்பான அனுமதி வழங்கக்கோரி பல்வேறு குறிப்புரைகள் அமைச்சகங்கள்/துறைகள்/பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து குறைந்த கால அவகாசத்தில் ஆணையத்திற்கு வந்துகொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவிக்க நான் பணிக்கப்பட்டுள்ளேன். 23.4.2014ஆம் நாளிட்ட ஆணையத்தின் 437/6/INST/2014-CC&BE ஆம் எண் கடிதத்தின் மீதும் "மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் தொடர்பான பரிந்துரைகள் தொடர்பான முடிவுகள் எடுப்பதற்கு தேர்தல் ஆணையத்திற்கு குறைந்தபட்சம் 48 மணிநேர அவகாசம் அளிக்கப்படவேண்டும்" என்பது மீண்டும் வலியுறுத்தப்பட வேண்டும் என்பது குறித்தும் தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

எனவே, ஆணையத்தின் அனுமதிக்காக மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் குறித்த குறிப்புரைகள் உடனடியாக அனுப்பப்படும் என்று அனைத்து அமைச்சகங்கள்/துறைகளுக்கு உத்தரவிடவும், கண்டிப்பாக பின்பற்றவும் மேற்சொன்ன இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பை சம்பந்தப்பட்ட அனைவரின் கவனத்திற்குக் கொண்டுவர கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

**இணைப்பு**

அமைச்சரவைச் செயலாளருக்கு அனுப்பப்பட்ட 23.04.2014 நாளிட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் 437/6/INST/2014-CC&BE ஆம் எண் கடிதம்.

**பொருள் : பொதுத் தேர்தல்கள் – மாதிரி தேர்தல் நடத்தை விதிமுறைகளை நடைமுறைப் படுத்துதல் – தொடர்பாக.**

20.03.2014ஆம் நாளிட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் இரட்டைப்படை கட்டளைகளை பார்வையிட நான் பணிக்கப்பட்டுள்ளேன். அதன்படி, தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தல்கள் பின்வருமாறு :-

(i) அமைச்சரவை அல்லது யாதொரு அமைச்சரவைக் குழுவின் முன் ஒப்புதலுக்காக அனுப்ப கருதப்படும் குறிப்புரைகள் அனைத்தும் அமைச்சரவை செயலகம் வாயிலாக மட்டுமே அனுப்பப்பெற வேண்டும் அதாவது அத்தகைய குறிப்புரைகளை அமைச்சகங்கள் இந்திய தேர்தல் ஆணையத்திற்கு நேரடியாக அனுப்பக்கூடாது.

(ii) துறைகள், சார்நிலை அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், அமைச்சகங்கள் / துறைகளின் தன்னாட்சி அமைப்புகள் குறிப்புரைகளை சம்பந்தப்பட்ட துறை வாயிலாக இந்திய தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பவேண்டும்.

மேற்சொன்ன நிபந்தனைகள் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், அத்தகைய நிபந்தனைகளை பின்பற்றாமல் பல குறிப்புரைகள் தேர்தல் ஆணையத்திற்கு வரப்பெற்றுள்ளன. இதுகுறித்து தேர்தல் ஆணையம் மீண்டும் பின்வருமாறு வலியுறுத்துகிறது.

(i) தேர்தல் ஆணையத்திற்கு குறிப்புரைகளை அனுப்பும்போது மேற்சொன்ன நிபந்தனைகளை கண்டிப்பாக பின்பற்றவேண்டும்.

(ii) தேர்தல் ஆணையம் அமைச்சரவை செயலகத்தில் மேற்காண் குறிப்புரைகள் தொடர்பான விளக்கங்களை கோரி பெறுவதற்கேற்ப ஒருங்கிணைப்பு அலுவலர் ஒருவர் நியமிக்கப்படலாம்.

(iii) மாதிரி தேர்தல் நடத்தை விதிமுறைகள் தொடர்பான குறிப்புரைகள் மீது நடவடிக்கை எடுக்க தேர்தர் ஆணையத்திற்கு குறைந்தபட்சம் 48 மணி நேர அவகாசம் கொடுக்கப்பட வேண்டும்.

தேர்தல் ஆணையத்தால் கொடுக்கப்பட்டுள்ள மேற்சொன்ன நிபந்தனைகளை கண்டிப்பாக பின்பற்றும் பொருட்டு தொடர்புடைய அனைவரின் கவனத்திற்கும் கொண்டுசெல்லப்படலாம்.

**உத்தரவு தொடர் எண்.137**

12.01.2017 நாளிட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் 437/6/CG/COMP/ ECI/LET/FUNCT/MCC/2017 எண்ணிட்ட கடிதம்.

**பொருள் : மாதிரி தேர்தல் நடத்தை விதிமுறைகள் மீறியதற்கெதிரான புகார்.**

கோவாவில் பெட்ரோல் நிரப்பும் நிலையங்களில் மாண்புமிகு பாரதப் பிரதமரின் படத்துடன் கூடிய விளம்பரப் பதாகைகள் உள்ளதாக தேர்தல் ஆணையத்திற்கு புகார் வரப்பெற்றுள்ளது. அது தொடர்பாக தேர்தல் ஆணையம் 08.01.2017 ஆம் நாளிட்ட 437/6/INST/FUNCT/MCC-2017 எண் கடிதம் வாயிலாக தேவையான உத்தரவுகளை வெளியிட்டுள்ளது. எண்ணெய் நிறுவனங்கள் அவர்களின் எல்.பி.ஜி. எரிவாயு மாணியத்தை விட்டுக்கொடுத்த உபயோகிப்பாளர்களுக்கு வழங்கும் சான்றிதழ் பாரதப் பிரதமரின் படத்துடன் வழங்குவதாக உத்தரகாண்ட் மாநிலத்திலுள்ள டேராடூனிலிருந்து வெளிவரும் ‘டெய்னிக்ஜாகரன்’ என்ற 08.01.2017 நாளிட்ட நாளிதழின் செய்தித் துண்டு ஒன்றும் தேர்தல் ஆணையத்திற்கு வரப்பெற்றுள்ளது. இது இந்திய தேர்தல் ஆணையத்தின் மேற்குறிப்பிட்ட மாதிரி தேர்தல் நடத்தை விதிமுறைகளின் கீழ் அனுமதிக்கப்படமாட்டாது.

மேற்சொன்ன கடிதம் மற்றும் விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் கண்டிப்புடன் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்யும்படி தொடர்புடைய அனைவருக்கும் தெரிவிக்கும்படி தாங்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

## உத்தரவு தொடர் எண். 138

23.01.2017ஆம் நாளிட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 437/6/CG/ECI/LET/FUNCT/MCC/2016(COMP) எண்ணிட்ட கடிதம்

**பொருள்: மாதிரி தேர்தல் நடத்தை விதிமுறைகள்- 2017-18 ஆம் நிதி ஆண்டிற்கான தேசிய வரவு-செலவுத் திட்டத்தை முன் வைத்தல்**

குறிப்பிடப்பட்ட பொருண்மையின் மீதான 10.01.2017 மற்றும் 19.01.2017 ஆம் நாளிட்ட 1/41/2017-Cab ஆம் எண்ணிட்ட தங்களுடைய கடிதங்கள் மற்றும் நாடாளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சகத்தின் 23.01.2017 ஆம் நாளிட்ட F4(5)/2016-Leg-I எண் கடிதம் ஆகியவற்றில் குறிப்பிடவற்றை பரிந்துரைப்பதற்கும் உத்தரப்பிரதேசம், கோவா, பஞ்சாப், மணிப்பூர் மற்றும் உத்தரகாண்ட் ஆகிய ஐந்து மாநிலங்களின் சட்டமன்றங்களுக்கான தற்போதைய பொதுத்தேர்தல்களை கவனமாக முன்னெடுத்துச் செல்வதற்கு ஆணையம் கருதியுள்ளது என்பதை குறிப்பிடுவதற்கும் நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

சுதந்தரமான மற்றும் நியாயமான தேர்தல்களை நடத்துவதற்கு தேர்தல்களின்போது சமவாய்ப்பளிக்கும் நிலையைப் பேணக்கூடிய வகையிலும் தேர்தல் நடைபெறப்போகும் ஐந்து மாநிலங்களில், ஆளும் கட்சி(களு)க்குச் சாதகமாக வாக்காளர்களை ஈர்க்கும் வகையிலான மாநிலத் திட்டங்கள் எதவும் தேசிய வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்படக் கூடாது என ஆணையம் இதனால் சுட்டிக்காட்டுகிறது. மேற்சொன்ன ஐந்து மாநிலங்களைப் பொறுத்தவரையில் ஆண்டு வரவு- செலவுத் திட்ட உரையில் அரசின் சாதனைகள் எந்தவகையிலும் முன்னிலைப்படுத்திக் காட்டக்கூடாது. என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

இத்தருவாயில், 2009 ஆம் ஆண்டு மக்களவைப் பொதுத்தேர்தல் நேரத்தில் அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய ஆட்சிப் பகுதிகளின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் ஆணையர்களுக்கு அனுப்பப்பட்ட 09.03.2009 ஆம் நாளிட்ட, இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 437/6/INST/2009-

CE&BE ஆம் எண் கடிதத்தில், தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்ட ஆலோசனையின் ஒரு நகலும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தில் ஆணையத்தால் வழங்கப்பட்ட ஆலோசனையை அடுத்த நிதியாண்டான 2017-18 க்கான வரவு செலவுத் திட்டத்தை அளிக்கையில் அரசால் கருத்தில் கொள்ளும்படியும் ஆணையம் எதிர்பார்க்கிறது.

இதனை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகையை அளிக்கவும்

**உத்தரவு தொடர் எண்.139**

27.01.2017 ஆம் நாளிட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 437/6/ECI/INST/FUNCT/MCC/2017-MCC&BE எண்ணிட்ட கடிதம்

**பொருள்: கோவா, மணிப்பூர், பஞ்சாப்,உத்தரப் பிரதேசம் & உத்தரகாண்ட் மாநிலங்களின் சட்டமன்றப் பேரவைகளுக்கான பொதுத் தேர்தல்- மாதிரித் தேர்தல் நடத்தை விதிகள்-தொடர்பாக**

மேற்சொன்ன ஐந்து மாநிலங்களுக்கான தேர்தல்களுக்காக 04.01.2017 அன்று வெளியிடப்பட்ட கால அட்டவணை அறிவிப்புகளுடன் மாதிரித் தேர்தல் நடத்தை விதிகளின் விதிமுறைகள் நடைமுறைக்கு வந்துள்ளன என்பதை தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள ஐந்து மாநிலங்களுக்கு தெரிவிக்கும்படி நான் பணிக்கப்பட்டுள்ளேன். இது குறித்து தங்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளன. (காண்க: 04.01.2017 ஆம் நாளிட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் கடிதம்.) மத்திய அரசில் அல்லது சம்பந்தப்பட்ட மாநிலத்தில் ஆட்சியில் உள்ள கட்சி எந்த தேர்தலிலும் தன்னுடைய திட்ட அறிக்கைகளை செயல்படுத்துவதற்கு தன்னுடைய ஆட்சிப் பொறுப்பை பயன்படுத்துகிறது என்று புகார் எழுவதற்கு எந்த முகாந்திரமுமில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டுமென மாதிரித் தேர்தல் நடத்தை விதிகள் மற்றும் ஆணையத்தினால் வெளியிடப்பட்ட பல்வேறு உத்தரவுகளில் ஏனையவற்றுக்கிடையே வெளியிடப்பட்டுள்ளன..

மேலும், அமைச்சரவை / அமைச்சரவைக் குழுக்களின் அனைத்து பரிந்துரைகள் மற்றும் அமைச்சகங்கள்/துறைகளின் பொருண்மைகள் சம்பந்தப்பட்ட அமைச்சகத்தால் அனுப்பப்பட்ட வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளதை இந்திய தேர்தல் ஆணையத்தின் 23-04-2017 ஆம் நாளிட்ட கடித எண்.4376/INST/2014-CC&BE இல்(நகல் இணைக்கப்பட்டுள்ளது) தங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. சில நேர்வுகளில்,அமைச்சகங்கள்/ துறைகள் எடுக்கும் முடிவுகள் ஆணையத்திற்கு பரிந்துரைக்கப்படாதபோது, குறிப்பாக நிதி ஆயோக்,பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் நிதி அமைச்சகம் ஆகியவற்றால் பரிந்துரைக்கப்படாதபோது அவை தேர்தல் நடைபெறும் மாநிலங்களில் சம நிலை

சூழல்களில் இடையூறு ஏற்படுத்தக்கூடிய ஒரு விளைவைத் தருகிறது என்பதை ஆணையம் அறிந்துள்ளது.

ஆணையம் இவ்விவகாரத்தில் தன்னுடைய கவலையைத் தெரிவிப்பதுடன் 23.04.2014 ஆம் நாளிட்ட இந்திய தேர்தல் ஆணையம் கடிதத்தின் வாயிலாக தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டி நெறிமுறைகள் கண்டிப்பாக பின்பற்ற வேண்டுமென உறுதியாக இணங்குவதற்கு மத்திய அரசின் அனைத்து அமைச்சகங்கள்/துறைகளுக்கு தேவையான உத்தரவுகளை வழங்க வேண்டுமென கேட்டுக் கொள்ளுமாறும் தேவைப்படுமிடங்களில் இந்திய தேர்தல் ஆணையத்தின் இசைவு பெறப்பட்டுள்ளதை உறுதிப்படுத்திக் கொள்ளும்படியும் கீழே கையொப்பமிட்டவருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது/ உத்தரவிடப்பட்டுள்ளது.

மத்திய அரசின் அனைத்து அமைச்சகங்களுக்கும் / துறைகளுக்கும் வழங்கப்பட்ட உத்தரவுகளின் நகலை, தகவலுக்காகவும் பதிவு செய்யும் நோக்கத்திற்காகவும் இந்திய தேர்தல் ஆணையத்திற்கு மேலொப்பமிட்டு / ஏற்பிசைவளித்து அனுப்பலாம்.

**உத்தரவு தொடர் எண்.140**

02.02.2017ஆம் நாளிட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 437/6/ECI/INST/FUNC/CCS/MCC/2017 ஆம் எண் கொண்ட கடிதம்

**பொருள்:- பொதுத்தேர்தல் - மாதிரி தேர்தல் நடத்தை விதிகளை நடைமுறைப்படுத்துதல் - தொட ர்பாக**

மேற்குறிப்பிடப்பட்ட பொருளில், 20.03.2014,23.04.2014 மற்றும் 27.01.2017 ஆகிய நாட்களிட்ட ஆணையத்தின் நிலை ஆணைகளை பரிந்துரைக்கும்படியும், அதனால், அமைச்சரவை அல்லது ஏதேனும் அமைச்சரவைக் குழுவின் பார்வைக்கு வைப்பதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள மத்திய அரசின் அனைத்து பரிந்துரைகளும் ஆணையத்திற்கு அனுப்பப்படும்போது , சம்பந்தப்பட்ட அமைச்சகங்களால் நேரடியாக அனுப்பப்படுவதற்குப் பதிலாக அமைச்சரவையின் செயலாளர் வழியாகவே அனுப்பப்படவேண்டும் என்பதையும் வலியுறுத்தும்படியும் நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

நீண்ட காலத்திற்கு முன்னரே வெளியிடப்பட்டு, சமீபத்தில் வலியுறுத்தப்பட்டவுமிருக்கிற, ஆணையத்தின் மேற்சொன்ன தெளிவான நிலை ஆணைகள் இருந்தபோதிலும், அவை சம்பந்தப்பட்டவர்களால் கண்காணிக்கப்பட்டு பின்பற்றப்படுவதற்குப் பதிலாக ஆணையத்தின் மேற்சொன்ன உத்தரவுகள் புறக்கணிக்கப்படுகின்ற ஒரு நிலையைக் காணமுடிகிறது. அமைச்சரவை சம்பந்தப்பட்ட பொருண்மைகள் ஆணையத்திற்கு நேரடியாக அனுப்பப்பட்டு வருகின்றன அதிலும், அவ்விவகாரத்தை உரிய முறையில் கருதுவதற்கு ஆணையத்திற்கு நேரமில்லாத சூழலில், கடைசி நேரத்தில்தான் அனுப்பப்படுகின்றன. ஆணையத்தின் அவசரமான கால-வரம்புரைக்குட்பட்ட பணிகளை மீறி அத்தகைய பரிந்துரைக்கு முன்னுரிமை கொடுக்கக்கூடிய வகையில் ஒரு முறையற்ற அழுத்தத்தை உருவாக்குவதற்கு அது காரணமாகிறது.

இவ்விவகாரத்தில், தன்னுடைய வருத்தத்தைத் தெரிவிக்கிற ஆணையம், மேலே குறிப்பிடப்பட்ட, ஆணையத்தின் வழிகாட்டி குறிப்புகளை உறுதியாக

கடைபிடிக்குமாறு அனைத்து அமைச்சகங்கள்/துறைகளுக்கும் அழுத்தம் கொடுக்கும்படி தங்களிடம் கேட்டுக்கொள்ளுமாறு கீழே கையொப்பமிட்டவருக்கு உத்தரவிட்டுள்ளது. ஆணையத்திற்கு ஒரு பரிந்துரையை அனுப்புகையில்,உரிய நேரத்தில் ஆணையத்தின் முடிவை தெரிவிப்பதற்கு வகைசெய்யும் வண்ணம் அத்தகைய பரிந்துரையை பரிசீலினை செய்வதற்காக ஆணையத்திற்கு குறைந்தளவு 48 மணி நேரம் இருப்பதை குறிப்பாக உறுதி செய்ய வேண்டும். இல்லையெனில், அத்தகைய பரிந்துரையை நிறைவேற்றுவது ஆணையத்திற்கு மிக கடினமானதாக இருக்கும்.

**உத்தரவு தொடர் எண்.141**

11.02.2017 ஆம் நாளிட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 437/6/CG/COMP/ECI/LET/FUNT/MCC/2017-MCC&BE ஆம் எண் கடிதம்

**பொருள்:- pmaymis.gov.in என்ற வலைப்பக்கத்தில் மாண்புமிகு பிரதம அமைச்சர் மற்றும் மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வறுமை ஒழிப்பு அமைச்சரின் புகைப்படங்கள் காணப்படுவதற்கு எதிரான புகார்-தொடர்பாக.**

கோவா, மணிப்பூர், பஞ்சாப், உத்தரப்பிரதேசம், மற்றும் உத்தரகாண்ட் ஆகிய ஐந்து மாநிலங்களின் சட்டமன்றங்களுக்கான பொதுத் தேர்தல்கள் நடைபெறுவதற்கான கால அட்டவணையை 04.01.2017 அன்று ஆணையம் அறிவித்துள்ளது என்பதை குறிப்பிடுவதற்கு நான் பணிக்கப்பட்டுள்ளேன். அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளரை வழிநடத்துவதற்கான மாதிரித் தேர்தல் நடத்தை விதிகளின் விதித்துறைகள் தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளன.

மத்தியில் அல்லது சம்பந்தப்பட்ட மாநில(ங்களில்)த்தில் ஆட்சியில் இருக்கிற கட்சி தன்னுடைய அதிகாரத்தை பயன்படுத்துவது அல்லது அதற்கு ஏதேனும் வாய்ப்பளிப்பதுபோன்ற புகாருக்கு இடமளிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என **வழிகாட்டு விதிமுறைகளி** விதித்துறைகள் மற்றும் ஆணையத்தால் வெளியிடப்படுகிற பல்வேறு உத்தரவுகள் எடுத்தியம்புகின்றன. மேலும், மத்திய அரசு / மாநில அரசுகளின் அதிகாரபூர்வ வலைப்பக்கத்தில் காணப்படுகிற அமைச்சர்கள், அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் கட்சிகளின் அனத்து மேற்கோள்களையும் நீக்க வேண்டுமென 04.01.2017 ஆம் நாளிட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் உத்தரவு (நகல் இணைக்கப்பட்டுள்ளது) திட்டவட்டமாக வகைசெய்கிறது.

உத்தரப்பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்படுகிற “பிரதம அமைச்சர் குடியிருப்பு திட்ட”த்தில் பயன்பெறுவதற்காக pmaymis.gov.in வலைப்பக்கத்தில் பதிவு நடைபெற்று வருவதாகவும், அப்பக்கத்தில் மாண்புமிகு பிரதம அமைச்சர் மற்றும் மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வறுமை ஒழிப்பு அமைச்சரின் புகைப்படங்களை காட்சிப்படுத்தப்படுவதனால் பாரதீய ஜனதா கட்சியை

முன்னிலைப்படுத்துவதாக குற்றஞ்சாட்டக்கூடிய ஒரு புகார் மின்னஞ்சல் மூலமாக ஆணையத்திற்கு வரப்பெற்றுள்ளது.

இவ்விவகாரத்தை கருத்தில் கொண்ட ஆணையம், மேற்சொன்னவாறு மாண்புமிகு பிரதம அமைச்சர் மற்றும் அமைச்சர்களின் புகைப்படங்களை காட்சிப்படுத்துவதென்பது மாதிரித் தேர்தல் நடத்தை விதிகளை மீறும் செயலாகும். எனவே, pmaymis.gov.in அதிகாரபூர்வ வலைப்பக்கத்திலிருந்து அந்த புகைப்படங்கள் உடனடியாக நீக்கப்பட வேண்டும். எனவே அதனை உறுதிப்படுத்துமாறு தாங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

மாதிரித் தேர்தல் நடத்தை விதிகள் 04.01.2017லிருந்து நடைமுறையிலிருக்கும்போது, முன்னரே இதனை ஏன் செய்யவில்லை என்பதற்கான காரணத்தை தெரிந்து கொள்வதற்கு ஆணையம் விழைகிறது என்பதை தெரிவிக்குமாறு நான் பணிக்கப்பட்டுள்ளேன். மேலும், ஏனைய அமைச்சர்கள்/துறைகளின் வலைப்பக்கங்களும் இத்தகைய புகைப்படங்களை கொண்டிருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துமாறும் தாங்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

# M. தேர்தல் அறிக்கைகள்

## உத்தரவு தொடர் எண். 142

அனைத்து அங்கீகரிக்கப்பட்ட தேசீய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் தலைவருக்கு/ பொதுச்செயலாளருக்கு அனுப்பப்பட்ட தேர்தல் ஆணையத்தின் 19.02.2014 ஆம் நாளிட்ட 437 / 6/ தேர்தல் அறிக்கை / 2013 ஆம் எண் கடிதம்.

**பொருள்:** S. சுப்பிரமணிம் பாலாஜி எதிர் தமிழ்நாடு அரசு மற்றும் ஏனையோர் / சிறப்பு அனுமதி மனு (C) எண். 21455 / 2008 மற்றும் TC எண் 112 / 2011 இல் மாண்பமை உச்ச நீதி மன்றம் அளித்த 05.07.2013 ஆம் நாளிட்ட தீர்ப்பு – தேர்தல் அறிக்கைகளுக்கான வழிகாட்டி குறிப்புகளை தயாரித்தல் – இறுதி வழிகாட்டிக் குறிப்புகள் தொடர்பாக.

31.01.2014 ஆம் நாளிட்ட அதே எண்ணுள்ள இந்த அலுவலக கடிதத்தை குறிப்பிடுமாறு நான் பணிக்கப்பட்டுள்ளேன். அதில் மாதிரி நடத்தை விதிகளில் சேர்ப்பதற்கான தேர்தல் அறிக்கைகள் குறித்த வரைவு வழிகாட்டிக் குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. அதில், அங்கீகரிக்கப்பட்ட அனைத்து தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகள் மேற்சொன்ன வரைவு வழிகாட்டி குறிப்புகள் குறித்த அவர்களுடைய கருத்துரைகளை / கருத்துக்களை 07.02.2014 ஆம் நாளுக்குள் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அரசியல் கட்சிகளிடம் இருந்து வரப்பெற்ற கருத்துரைகளை / கருத்துக்களை கருத்திற்கொண்டும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள உச்ச நீதி மன்றத்தின் உத்தரவுகளை கருத்திற் கொண்டும், தேர்தல் ஆணையம், தேர்தல் அறிக்கைகள் குறித்த வழிகாட்டிக் குறிப்புகளை இறுதி செய்துள்ளது. அது தற்போது அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் வழிகாட்டுதலுக்காக மாதிரி நடத்தை விதியின் பாகம் VIII ஆக சேர்க்கப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டிக் குறிப்புகள் வருங்கால தேர்தல்கள் அனைத்திற்கும் உடனடியாக பொருந்தும் வருங்காலத்தில் அனைத்து தேர்தல்களுக்கான மாதிரி நடத்தை விதியின் ஒரு பகுதியாகவும் செயல்படுத்தப்படும்.

தேர்தல் அறிக்கைகள் குறித்த பாகம் VIII உட்பட அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் வழிகாட்டுதலுக்காக மாதிரி நடத்தை விதியின் முழுமையான உரைகளின் நகல் ஒன்று உங்களுடைய தகவலுக்காக இத்துடன் அளிக்கப்பட்டுள்ளது.

தொடர்புடைய அனைவரின் தகவலுக்காகவும், இணங்கி நடப்பதற்காகவும் இதனை தொடர்புடைய அனைவரின் கவனத்திற்கு கொண்டுவருமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

## உத்தரவு தொடர் எண்.143

தேசிய மற்றும் மாநிலத்தின் பதிவுபெற்ற அனைத்து அரசியல் கட்சிகள் கட்சித் தலைவர் / பொது செயலாளர் / தலைவர் / ஒருங்கிணைப்பாளர் ஆகியோருக்கு அனுப்பப்பட்ட **24.04.2015** ஆம் நாளிட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் **437/6/**தேர்தல் அறிக்கை (கொள்கை விளக்க அறிவிப்பு) **/2015** /CC ஆம் கடிதம் .

**பொருள்: மாதிரித் தேர்தல் நடத்தை விதிகள் – தேர்தல் அறிக்கைகள் (கொள்கை விளக்க) அறிவிப்பிற்கான வழிக்காட்டி குறிப்புகள் – உத்தரவுகள் – தொடர்பாக.**

மாண்பமை உச்ச நீதிமன்ற உத்தரவின் படி உங்களுடன் ஆணையம் கலந்தாலோசனை செய்த பிறகு தேர்தலுக்கான அறிக்கை வழிக்காட்டி குறிப்புகள் உருவாக்கப்பட்டு அவை அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளருக்கான மாதிரித் தேர்தல் நடத்தை விதிகளுடன் இணைக்கப்பட்டன என்பதை நீங்கள் அறிவீர்கள் மேற்கூறிய வழிகாட்டி குறிப்புகளின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டு உங்கள் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**2.** ஆணையத்தால் தேர்தல் நடத்தப்படும் போது, அரசியல் கட்சிகளால் வெளியிடப்படும் தேர்தல் அறிக்கை மென்படியுடன் சேர்த்து உண்மைப்படியையும் பதிவிற்காக ஆணையத்திற்கு அனுப்பப்பட வேண்டும் என ஆணையம் விழைகிறது. இனி உங்களின் கட்சி செயலாளர்களுக்கு உரிய தேர்தல்களுக்கான உத்தரவுகளைக் கொடுக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

## உத்தரவு தொடர் எண்.144

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 24.04.2015 ஆம் நாளிட்ட 437/6/ தேர்தல் அறிக்கை /20150CC ஆம் கடிதம்,

**பொருள்: மாதிரித் தேர்தல் நடத்தை விதிகள் – தேர்தல் அறிக்கை வழிக்காட்டி குறிப்புகள்– உத்தரவுகள் – தொடர்பாக.**

மேற்சொன்ன பொருண்மை சுட்டி இணைக்கப்பட்ட நகலில், 24.04.2015 ஆம் நாளிட்ட ஆணையத்தின் அதே கடித எண்ணில் விவரத்தை அளிக்கவும், அதில் ஆணையம் கோரியுள்ளவாறு மாநில மற்றும் தேசிய அளவில் பதிவு பெற்ற அரசியல் கட்சிகளின் தேர்தல் அறிக்கை நகலை அனுப்பி அதில் வெளியிடுமாறு கூறவும், நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

2. ஆணையத்தின் உத்தரவின்படி தலைமைத் தேர்தல் அதிகாரிகள் அரசியல் கட்சிகளிடமிருந்து தேர்தல் அறிக்கை ஒரு நகலைப் பெற்று, அதனை ஆணையத்தின் கொள்கை விளக்க அறிவிப்புடன் நேருக்கு நேராக வைத்து பகுப்பாய்வு செய்து, அதன் குறிப்புரையை விரைவில் ஆணையத்திடம் அளித்திட வேண்டும்.

3. இது முதற்கொண்டு, தேர்தல்கள் நடத்தப்படும் போது இந்த உத்தரவுகள் பொருந்தும்.

## உத்தரவு தொடர் எண்.145

அனைத்து அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் தலைவர்கள்/பொதுச்செயலாளர்களுக்கு அனுப்பப்பட்ட 23.08.2016ஆம் நாளிட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 437/6/INST/2016/CCS- ஆம் எண் கடிதம்

**பொருள்: தேர்தல் அறிக்கை குறித்து அரசியல் கட்சிகளுக்கான பொது அறிவுரை தொடர்பாக.**

அசாம்,கேரளா,தமிழ்நாடு, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களின் சட்டமன்றப் பேரவைகளுக்கும் புதுச்சேரி மத்திய ஆட்சிப்பகுதிக்கும் சமீபத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களின்போது மாதிரித் தேர்தல் நடத்தை விதிகளின் "**பகுதி-VIII- தேர்தல் அறிக்கையின் மீதான வழிகாட்டு விதிமுறைகளி"**ல் கூறப்பட்டுள்ள அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களை வழிநடத்துவதற்கான வழிகாட்டு விதிமுறைகளை அரசியல் கட்சிகள் பின்பற்றவில்லை என பல்வேறு தலைமை அலுவலகங்களிலிருந்து புகார்கள் வரப்பெற்றுள்ளன.

நாடாளுமன்றம் அல்லது மாநில சட்டமன்றத்திற்கான எந்த தேர்தலுக்காகவும் தங்களுடைய தேர்தல் அறிக்கையை வெளியிடுகையில் அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் மேற்சொன்ன வழிகாட்டு விதிமுறைகளுக்கு இணங்க, குறிப்பாக பின் வரும் 8(iii) ஆம் பத்திக்கு இணக்கமாக நடந்து கொள்ள வேண்டும் என ஆணையம் கருதுகிறது:

"(iii) ஒளிவு மறைவற்ற தன்மை, சமநிலையைப் பேணுதல், வாக்குறுதிகள் மீதான நம்பகத்தன்மை ஆகியவற்றின் மீதான பற்றினை தேர்தல் அறிக்கையிலுள்ள வாக்குறுதிகள் பிரதிபளிப்பதாகவும் அதற்கான நிதித் தேவைகளை எதிர்கொள்வதற்கான வழிவகைகளை தெளிவாக சுட்டிக் காட்டுவதாகவும் இருக்க வேண்டும். நிறைவேற்றுவதற்கு சாத்தியக்கூறுள்ள வாக்குறுதிகள் மீது மட்டுமே வாக்காளர்களின் நம்பிக்கையை பெற விரும்பும் வகையில் இருக்க வேண்டும்.

எனவே, தாங்கள் தொடர்புடைய அவைவருக்கும் தேவையான அறிவுரைகளை வழங்கி அதற்கிணங்க செயல்படுவதை உறுதி செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

**உத்தரவு தொடர் எண்.146**

அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய ஆட்சிப்பகுதியின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் ஆணையர்களுக்கு அனுப்பப்பட்ட 27.12.2016ஆம் நாளிட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 437/6/INST/2016/CCS ஆம் எண் கடிதம்

**பொருள்: தேர்தல் அறிக்கைகள் சம்பந்தமான உத்தரவுகள்- தொடர்பாக**

பார்வை. இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 24.04.2015 ஆம் நாளிட்ட 437/6/தேர்தல் அறிக்கை/2015/CCS ஆம் எண் கடிதம்

மேற்குறிப்பிட்ட பொருள் குறித்து பரிந்துரை செய்யும்படியும், 27.12.2016 ஆம் நாளிட்ட ஆணையத்தின் கடித நகலை அனுப்பும்படியும், மேற்குறிப்பிட்ட பொருளின் அடிப்படையில் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட/பதிவுசெய்த தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளின் நகல்கள் மூன்றினை அவற்றின் இந்தி/ஆங்கில மொழியாக்கத்துடன் (தேர்தல் அறிக்கையின் அசல் வட்டார மொழியில் இருந்தால்) அவற்றினை வெளியிட்ட மூன்று நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுமாறும் நான் பணிக்கப்பட்டுள்ளேன். மேலும், மாதிரித் தேர்தல் நடத்தை விதிகளின் பகுதி-VIII-க்கு இணங்க தேர்தல் அறிக்கையிலுள்ள திட்டங்கள்/கொள்கைகள் மற்றும் வாக்குறுதிகள் உள்ளன என்ற உறுதிமொழியையும் தங்களுடைய தேர்தல் அறிக்கையுடன் அளிக்குமாறு அனைத்து அரசியல் கட்சிகளும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

2. தேர்தல் அறிக்கைகள் வெளியிடப்பட்ட மூன்று நாட்களுக்குள், அரசியல் கட்சிகளிடத்திலிருந்தும் வேட்பாளர்களிடத்திலிருந்தும் (அவர்கள் ஏதேனும் தேர்தல் அறிக்கையினை வெளியிட்டிருந்தால்) தேர்தல் அறிக்கையின் நகல்கள் மூன்றினையும் உறுதிமொழியையும் பெற்றுக் கொள்ளும்படி தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

3. இதுமுதற்கொண்டு நடைபெறப்போகும் தேர்தல்களுக்கு இந்த உத்தரவுகள் பொருந்தும்.

**உத்தரவு தொடர் எண்.147**

அனைத்து அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் தலைவர்கள்/பொதுச்செயலாளர்களுக்கு அனுப்பப்பட்ட 27.12.2016ஆம் நாளிட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 437/6/INST/2016/CCS ஆம் எண் கடிதம்

**பொருள்: தேர்தல் அறிக்கைகள் சம்பந்தமான உத்தரவுகள்- தொடர்பாக**

தாங்கள் அறிந்தவாறு, மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடன் ஆலோசித்த பின்னர், தேர்தல் அறிக்கைகளுக்கான வழிகாட்டு விதிமுறைகளை வகுத்து, அவற்றை "அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்கு வழிகாட்டுவதற்கான மாதிரித் தேர்தல் நடத்தை விதிகளி"ல் சேர்க்கப்பட்டுள்ளன அனைத்து அரசியல் கட்சிகளும் தங்களுடைய தேர்தல் அறிக்கைகளை வெளியிட்ட பின்னர் அவற்றினை ஆணையத்திடம் அளிக்கும்படி ஆணையம் கேட்டுக் கொள்கிறது. (காண்க: பரிந்துரைக் கடிதம்.)

2. மேலும், ஒரு அரசியல் கட்சி தன்னுடைய தேர்தல் அறிக்கையை வெளியிடும்போதெல்லாம் நகல்கள் மூன்றினை அவற்றின் இந்தி/ஆங்கில மொழியாக்கத்துடன் (தேர்தல் அறிக்கையின் அசலானது வட்டார மொழியில் இருந்தால்) அவற்றினை வெளியிட்ட மூன்று நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். மேலும், அதனுடன் மாதிரித் தேர்தல் நடத்தை விதிகளின் பகுதி-VIII-க்கிசைவாக தேர்தல் அறிக்கையிலுள்ள திட்டங்கள்/கொள்கைகள் மற்றும் வாக்குறுதிகள் உள்ளன என்றுள்ளவாறு ஒரு உறுதிமொழியையும் சமர்ப்பிக்க வேண்டும். இதுமுதற்கொண்டு நடைபெறப்போகும் தேர்தல்களுக்கு இது செயற்படுத்தப்படலாம்.

3. இது குறித்து, தங்களுடைய கட்சி செயற்பாட்டாளர்களிடம் உரிய உத்தரவுகளை வழங்க வேண்டுமென தங்களைக் கேட்டுக்கொள்ளுமாறு நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

# தேர்தல் நடத்தை விதிமுறைகள் குறித்த வழிகாட்டி குறிப்புகளின் ஆங்கில வடிவமே இறுதியானதாகும்